பல்கலைக்கழக
மானியங்கள்
ஆணைக்குழு
இலங்கை

இலங்கையிலுள்ள பல்கலைக்கழகங்களின் பட்டப்பயில் நெறிகளுக்கான அனுமதி

கல்வியாண்டு 2018/2019

[2018 க.பொ.த. (உ/த) பரீட்சையை அடிப்படையாகக் கொண்டது]

பல்கலைக்கழக அனுமதிக்கு இணையத்தளம் மூலம் விண்ணப்பிக்கும் போதும் தெரிவு செய்யப்பட்ட கற்கை நெறி மற்றும் பல்கலைக்கழகத்திற்கு இணையத்தளம் மூலம் பதிவினை மேற்கொள்ளும் போதும் இக் கைந்நூலினை கவனமாக வாசித்து விளங்கி சம்பந்தப்பட்ட விதிமுறைகளையும் நிபந்தனைகளையும் பின்பற்ற வேண்டியது உமது பொறுப்பாகும்.

பொருளடக்கம்

பக்கம்

தலைப்பு

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் செய்தி 1

சொற் சுருக்கம் 3

இக்கைந்நூலைப் பயன்படுத்துதற்கான அறிவுறுத்தல்கள் 5

பகுதி 1 பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் கீழ் வருகின்ற அரச பல்கலைக்கழகங்களில் மற்றும் உயர்கல்வி நிறுவனங்களில் பட்டப்பயில் நெறிகளுக்கு மாணவர்களின் அனுமதியினை நிர்வகிக்கும் கொள்கைகளும் கோட்பாடுகளும் 9

1.1 அரச பல்கலைக்கழகங்கள் மற்றும் உயர் கல்வி நிறுவனங்களுக்கான அனுமதிக் கொள்கைகள் 10

1.2 பல்கலைக்கழக அனுமதிக்கான ஆகக் குறைந்த தேவைப்பாடுகள் 11

1.3 க.பொ.த. (உ/த) பரீட்சையில் மாணவர்கள் பெற்றுக்கொண்ட Z புள்ளி 12

1.4 பல்வேறு பல்கலைக்கழகங்களில் பல்வேறு கற்கைநெறிகளின் அனுமதிக்குத் தேவையான வெட்டுப்புள்ளிகள் 12

1.5 பல்கலைக்கழக அனுமதிக்காக அபேட்சகர் ஒருவரின் மாவட்டத்தை தீர்மானிப்பதற்கான விதிமுறைகள் 12

1.6 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க திருத்தப்பட்ட பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் கீழ் ஸ்தாபிக்கப்பட்ட அரச பல்கலைக்கழகங்கள் மற்றும் உயர் கல்வி நிறுவனங்களுக்கு அனுமதிப்பதற்கான பிரமாணங்கள் 14

1.7 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க திருத்தப்பட்ட பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் கீழ் உருவாக்கப்பட்ட அரச பல்கலைக்கழகங்கள் மற்றும் உயர் கல்வி நிறுவனங்களில் பல்கலைக்கழக அனுமதிக்கான தகுதியின்மை 16

1.8 பல்கலைக்கழகங்களுக்கு மாணவர்களை அனுமதிப்பதில் ஏற்படுகின்ற தாமதங்களை குறைப்பதற்கான நடவடிக்கைகள் 18

பகுதி 2 பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் கீழ் வருகின்ற அரச பல்கலைக்கழகங்களில் மற்றும் உயர்கல்வி நிறுவனங்களில் பட்ட நிகழ்ச்சித்திட்டங்களுக்கான அனுமதியை பெறுவதற்கான முன்னேற்பாடுகள் தொடர்பான தகவல்கள் 19

2.1 வெவ்வேறு பாடப்பிரிவுகளின் கீழ்வருகின்ற கற்கைநெறிகள் 22

2.2 பட்ட நெறிகளை தெரிவுசெய்வதற்கான உயர்தர பாட தேவைப்பாடுகள் மற்றும் பாட இணைப்புகள் தொடர்பான வழிகாட்டி 32

பகுதி 3 யுனி கோட்(Uni-Code)முறைமைக்கான அறிமுகம், விருப்பொழுங்கினை குறிப்பிடுவதற்கு 'யுனி கோட்' (Uni-Code) இனை பயன்படுத்துவது தொடர்பான அறிவுறுத்தல்கள் 97

3.1 யுனி கோட்(Uni-Code)முறைமைக்கான அறிமுகம், விருப்பொழுங்கினை குறிப்பிடுவதற்கு யுனி கோட் இனை பயன்படுத்துவது தொடர்பான அறிவுறுத்தல்கள் 98

3.2 பல்கலைக்கழகங்களின் கற்கைநெறிகளுக்கு மாணவர்களை ஒதுக்குவதற்கான பிரமானங்கள் 99

3.3 கற்கைநெறி மற்றும் பல்கலைக்கழக விருப்பொழுங்கினை மாற்றுதல் 102

பகுதி 4 விண்ணப்ப நடைமுறை மற்றும் ஏனைய முக்கிய அறிவுறுத்தல்கள் 103

4.1 விண்ணப்ப நடைமுறை 104

4.2 வெற்றிடங்களை நிரப்பும் முறை/ வெற்றிடங்களை நிரப்புகையில் உயர் தெரிவு வழங்கப்பட்ட சில பல்கலைக்கழகங்களின் கற்கைநெறிகளுக்கு தெரிவாகாமல் அல்லது ஏனைய எவ் உயர் விருப்புரிமையிற்கும் உயர்த்தப்படாது தற்போது தெரிவு செய்யப்பட்டுள்ள கற்கைநெறி மற்றும் பல்கலைக்கழகத்தில் தொடர்ந்தும் இருக்க மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள். 105

4.3 ஒரு பல்கலைக்கழகத்திலிருந்து இன்னொரு பல்கலைக்கழகத்திற்கு அதே பட்டப்பயில் நெறிக்கு மாணவர்களின் இடமாற்றம் 107

4.4 மேன்முறையீடு செய்யும் முறை 108

4.5 புகார் தெரிவிக்கும் முறை/ குறித்த மாணவர் ஒருவர் கற்கை நெறியொன்றுக்கு தெரிவு செய்யப்பட்டமைக்கு ஆட்சேபனை தெரிவித்தல் 109

4.6 அனுமதியைப் பிற்போடல் 109

4.7 கடிதத் தொடர்புக்கான முகவரி 110

பகுதி 5 பல்கலைக்கழக அனுமதிக்கான இலத்திரனியல் விண்ணப்பப்படிவத்தை நிரப்பும் முறை 111

கற்கைநெறி மற்றும் பல்கலைக்கழகங்களுக்கான “Uni-Codes” 127

க.பொ.த (சா/த) தேவைப்பாடுகள் 132

செயன்முறை /உளச்சார்புப் பரீட்சை 133

பகுதி 6 விசேட ஏற்பாடுகளின் கீழ் மாணவர்களை பல்கலைக்கழக அனுமதிக்கு தெரிவுசெய்தல் 145

பகுதி 7 பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் கீழ் வருகின்ற அரச பல்கலைக்கழகங்கங்கள் மற்றும் ஏனைய உயர்கல்வி நிறுவனங்களினால் நடாத்தப்படும் கற்கைநெறிகள் தொடர்பான விபரங்கள் 151

பகுதி 8 அடிக்கடி கேட்கப்படும் கேள்விகள் (FAQs) 211

பகுதி 9 கற்கை நெறிகளுக்கான கிராக்கியின் தன்மையினை விளங்கிக் கொள்வதற்காக சென்ற வருடத்திற்கான வெட்டுப்புள்ளியினை ஒரு வழிகாட்டியாக மாணவர்கள் பயன்படுத்துதல் 221

பகுதி 10 மாதிரி விண்ணப்பப் படிவங்கள் 231

இணைப்பு - **I** : மேன்முறையீட்டு விண்ணப்பத்தின் மாதிரி

இணைப்பு - **II** : இணைப் பாடவிதான செயற்பாடுகளில் திறமைகாட்டிய பரீட்சாத்திகளுக்கான அனுமதிக்கான விண்ணப்பப்படிவம்

இணைப்பு - **III** : பார்வையற்ற/அங்கவீன பரீட்சார்த்திகளுக்கான அனுமதிக்கான விண்ணப்பப்படிவம்

இணைப்புகள்

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் செய்தி

பல இளைஞர்களின் மனங்களில் உயர்கல்வியினைப் பெறுவதே இறுதிக்கனவாகக் காணப்படுகின்றது. நவீன அறிவு, திறமைகள் நல்ல மனோநிலை போன்றவற்றை மட்டுமல்லாமல் அவர்கள் தெரிவுசெய்த தொழிலில் முன்னேறுவதற்கான புத்திக்கூர்மையை கொண்ட பட்டதாரிகளை உருவாக்குவதற்குத் தேவையான தகுந்த சூழலை உருவாக்குவது பல்கலைக்கழகங்களின் பொறுப்பாகும். 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க திருத்தப்பட்ட பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் கீழ் உருவாக்கப்பட்ட பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவானது பல்கலைக்கழகங்களுக்கும் உயர்கல்வி நிறுவனங்களுக்கும் மாணவர்களைத் தெரிவு செய்வதற்கும் பகிர்ந்தளிப்பதற்கும் பொறுப்பான உச்ச சபையாக இருக்கின்றது.

இந்த வெளியீடு உங்களது விருப்பத்திற்கேற்ப பட்டப்படிப்பிற்கான கற்கைநெறிகளை தெரிவுசெய்வதற்கு உதவுகின்றது. அத்துடன் பல்கலைக்கழக அனுமதிக்குத் தேவையான குறைந்த தகைமைகள், விதிகள், பிரமாணங்கள், கொள்கைகள் என்பன பற்றிய விபரமான தகவல்களையும் வழங்குகின்றது. அத்துடன் அடிக்கடி கேட்கப்படும் கேள்விகளுக்கான ஒரு பிரிவும் இக்கைந்நூலில் உள்ளடக்கப்பட்டுள்ளது.

அரச பல்கலைக்கழக முறைமை 219 கற்கைநெறிகளை (Uni-Codes) மாணவர்களுக்கு வழங்குகின்றது. உயர்கல்வியில் அரச கொள்கைக்கு இணங்க அனைத்து கற்கைநெறிகளும் இலவசமாக வழங்கப்படுகின்றன. மேலதிகமாக மாணவர்களுக்கு மகாப்பொல, அரச பேசரி மேலும் அரச சார்பற்ற மற்றும் நன்கொடை நிறுவனங்கள் மூலம் மேலும் பல நிதிசார் உதவிகள் வழங்கப்படுகின்றன. 70% 80% மாணவர்களுக்கு அவ்வாறான நிதியுதவிகள் தேவைப்படுவதாக தரவுகள் தெரிவிக்கின்றன. மிகவும் குறைந்த வீதத்தில் விடுதி வசதிகளும், நகரை விடுத்து அமையப்பெற்ற பல்கலைக்கழகங்களில் பல்கலைக்கழக காலம் முழுவதும் விடுதி வசதிகள் வழங்கப்படுகின்றது.

கலை பட்டக் கற்கை நெறிகளுக்கான தெரிவு முறைமையில் தீவளாவிய திறமை அடிப்படையிலான தெரிவு மட்டுமே காணப்படுவதால் இது மிக அதிகமான போட்டிக்குரியதாக கருதப்படுகிறது. 60% ஏனைய கற்கை நெறிகளுக்கான தெரிவு முறைமை மாவட்ட அடிப்படையில் மேற்கொள்ளப்படுவதால் அரச பல்கலைக்கழகங்களிற்கான அனுமதி மிகவும் போட்டிக்குரியதாகும்.உதாரணமாக 2017 ன் க.பொ.த (உ/த) பரீட்சையின் அடிப்படையில் பல்கலைக்கழக அனுமதிக்கு விண்ணப்பித்த 78,883 மாணவர்களில் கல்வியாண்டு 2017/2018 க்கு 30,513 மாணவர்கள் மட்டுமே தெரிவுசெய்யப்பட்டார்கள். மாணவர்களுக்கு கிடைக்கக்கூடிய உயர்கல்வி வாய்ப்புகளை அதிகரிப்பதற்காக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு அரச பல்கலைக்கழகங்களுடன் இணைந்து தொடர்ந்தும் அதிக வசதிகளை உருவாக்குகிறது. அரச பல்கலைக்கழகங்களுடன் இணைந்து மேலதிகமாக மாணவர்களை கற்கைநெறிகளில் இணைத்துக்கொண்டு இலங்கையின் உயர்கல்வி அனுமதியினை அதிகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கின்றது.

இளநிலைப் பட்டதாரிகளின் ஆளுமை வளர்ச்சிக்கு வாழ்க்கை திறன்கள் ஒரு முக்கிய அங்கமாக உள்ளது. பல்கலைக்கழக மாணவர்களின் வாழ்க்கைத் திறன்களையும் ஏனைய கல்விசாரா நடவடிக்கைகளையும் விருத்தி செய்வதற்கு பல்கலைக்கழகங்களில் போதிய வசதிவாய்ப்புகள் காணப்படுகின்றன. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு இளநிலைப் பட்டதாரிகளின் ஆங்கில மற்றும் தகவல் தொழில்நுட்ப அறிவுகளை விருத்தி செய்வதற்கு விஷேட அக்கறை கொண்டுள்ளது. 2018ஆம் ஆண்டில் புதிய, ஆங்கில மொழி கற்பித்தல் துறைகள் (ELTD) பல்கலைக்கழகங்களில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. UTEL என அழைக்கப்படும் குறித்த வித்தியாசமான மட்டங்களிலான (Band levels) சீரான பரீட்சை எல்லா பல்கலைக்கழகங்க மாணவர்களுக்கும் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. UTEL சானிறிதழ்கள் தொழில்வாய்ப்பின் போது ஆங்கில தகைமையை பறைசாற்ற சான்றாக அமையும்.

தற்போது பல்கலைக்கழக மாணவர்கள் சர்வதேச விளையாட்டுப் போட்டிகளில் பங்குபெறல் உட்பட பல்வேறு விளையாட்டு செயற்பாடுகளுக்கான வசதிகளைக் கொண்டுள்ளனர். மாணவர்களின் பல்கலைக்கழக அனுபவங்கள், பாடங்கள் தொடர்பான (உ-ம்: உடலியல் அல்லது புவியியல் கழகங்கள்) கலை, கலாச்சாரம் (உ-ம்: கலை வட்டம்) சமயம் (உ-ம்: சகோதரத்துவ புத்தமதம் அல்லது முஸ்லிம் மஜ்லிஸ்) மற்றும் மாணவர் சங்கங்கள் போன்ற பல்வேறு மாணவர் அமைப்புகளுடன் இணைந்து செயற்படுவதன் மூலம் செழிப்பாகும். அவ்வாறான ஒன்று செயற்பாடுகளில் ஈடுபடுதலை நாம் ஊக்குவிக்கின்றோம். இவை எல்லாவற்றின் மூலமும் தங்களின் திறமைகளை வளர்த்து உச்ச பயனை பெற முடியும்.

1978 இன் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் கீழ், அரச பல்கலைக்கழகங்கள் மற்றும் உயர்கல்வி நிறுவகங்களிற்கு மாணவர்களைப் பதிவு செய்ய சட்டப்பூர்வமாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவே அதிகாரமளிக்கப்பட்டுள்ளது. ஆகையால், பல்கலைக்கழக அனுமதிக்கு இணைய வழி விண்ணப்பத்தினை சமர்ப்பித்தல், தெரிவுசெய்யப்பட்ட பல்கலைக்கழக கற்கைநெறியிற்கு பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவுடன் இணையவழிப் பதிவுசெய்து கொள்வது கட்டாயத்தேவைப்பாடாகவுள்ளது. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு பதிவு செய்த மாணவர்களது உறுதிப்படுத்தப்பட்ட பட்டியல் பின்னரே பல்கலைக்கழகங்கள் மற்றும் உயர்கல்வி நிறுவகங்களிற்கு அனுப்பப்படுகிறது. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அனுப்பப்படும் உறுதிப்படுத்தப்பட்ட பட்டியலில் இருந்தே பல்கலைக்கழகங்கள் மாணவர்களிற்கு அனுமதி அளிக்கின்றது. இணையதள முறைமையினுடைய பாதுகாப்பிற்கான பொறுப்பினை ஆணைக்குழு ஏற்றுக்கொள்கின்றது.

அரச பல்கலைக்கழக அனுமதிக்கு விண்ணப்பிக்க விரும்பும் அனைத்து மாணவர்களும் இலத்திரனியல் விண்ணப்பத்தினை பூரணப்படுத்தும் முன்னர் இப் புத்தகத்தினை கவனமாக வாசிக்க வேண்டியது கடமையாகும். வெவ்வேறு பாடச்சேர்க்கைகள் தொடர்பான சரியான புரிதல் நீங்கள் அக்கறையாகவுள்ள கற்கைநெறியினை தெரிவு செய்வதற்கு உங்களுக்கு உதவும். அவ்வாறு செய்யாது பல சந்தர்ப்பங்களில் மாணவர்கள் தமக்கு மிகவும் விருப்பத்திற்குரிய கற்கைநெறிகளை தவறவிட்டு அல்லது அனுமதிக்கான தகைமையை முற்றிலும் இழந்து விடும் வாய்ப்புகளையும் நாம் கண்ணுற்றுள்ளோம்.

உங்களது சகல வருங்கால முயற்சிகளும் வெற்றிபெற நாம் வாழ்த்துகின்றோம்.

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு, இலங்கை

சொற் சுருக்கம்

ப.மா.ஆ.	-	பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு
கொ	-	கொழும்புப் பல்கலைக்கழகம்
பே	-	பேராதனைப் பல்கலைக்கழகம்
ஸ்ரீஜ	-	ஸ்ரீ ஜயவர்த்தனபுர பல்கலைக்கழகம்
கள	-	களனிப் பல்கலைக்கழகம்
மொற	-	மொறட்டுவைப் பல்கலைக்கழகம்
யாப	-	யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
உறு	-	உறுகுணைப் பல்கலைக்கழகம்
கிப	-	கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை
தெகி	-	இலங்கைத் தென் கிழக்குப் பல்கலைக்கழகம்
ரஜ	-	இலங்கை ரஜரட்ட பல்கலைக்கழகம்
சப	-	இலங்கை சபரகமுவப் பல்கலைக்கழகம்
வய	-	இலங்கை வயம்பப் பல்கலைக்கழகம்
ஊவெப	-	இலங்கை ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழகம்
கஅப	-	கட்புல அரங்கேற்றக்கலைப் பல்கலைக்கழகம்
இதிப	-	இலங்கை திறந்த பல்கலைக்கழகம்
சுமநி	-	சுதேச மருத்துவ நிறுவகம்
கவிஆநி	-	கம்பஹா விக்ரமாராச்சி ஆயுர்வேத நிறுவகம்
கொபகக	-	கொழும்புப் பல்கலைக்கழக கணனிக் கல்லூரி
சுவிஅகநி	-	சுவாமி விபுலானந்தா அழகியற் கற்கைகள் நிறுவகம்
இநு	-	இராமநாதன் நுண்கலைக்கழகம்

இராமநாதன்
நுண்கலைக்கழகம்
யாப
வவுனியா
வளாகம்
திருகோணமலை வளாகம்
ரஜ
சுவிஅகநி
கிப
வய
பே
ஊவெப
தெகி
கவிஆநி
கள
கொ
மொற
ஸ்ரீஜ
கஅப
சுமநி
கொபகக
இதிப
ஸ்ரீபாளி
வளாகம்
சப
உரு

இக்கைநூலைப் பயன்படுத்துதற்கான அறிவுறுத்தல்கள்

இப்புத்தகத்தின் உச்சப் பயனை பெறுவது எப்படி?

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் கீழ் வருகின்ற அரச பல்கலைக்கழகங்கள் மற்றும் உயர்கல்வி நிறுவனங்களில் பட்டப்பயில் நெறிகளுக்கான அனுமதியை எதிர்பார்க்கின்ற 2018 ஆம் ஆண்டு க.பொ.த. (உ/த) பரீட்சையில் ஆகக்குறைந்த தகைமைகளைப் பெற்று சித்தியடைந்த மாணவர்களுக்கு அவசியமான 10 தலைப்புக்களுடன் 10 பகுதிகளை உள்ளடக்கியதாக இப்புத்தகம் அமைந்துள்ளது.

பகுதி 1

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் கீழ் வருகின்ற அரச பல்கலைக்கழகங்கள் மற்றும் உயர் கல்வி நிறுவனங்களில் பட்டப்பயில் நெறிகளுக்கு மாணவர்களின் அனுமதியினை நிர்வகிக்கும் கொள்கைகள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் என்பவற்றை விளங்கிக்கொள்வதற்கு பகுதி 1 உதவுகின்றது. தீவளாவிய திறமை அடிப்படை, மாவட்ட அடிப்படையிலான திறமை, Z-புள்ளி குறிப்பிட்ட வருடத்தில் வெட்டுப்புள்ளியை தீர்மானிக்கின்ற முறை, பல்கலைக்கழகத்திற்கு அனுமதிப்பதற்காக ஒரு மாணவரின் மாவட்டத்தினை தீர்மானிப்பதற்கான பிரமாணங்கள் போன்றவை இப்பகுதியில் விபரமாக கூறப்பட்டுள்ளன. அத்துடன் பட்டப்பயில் நெறிகளுக்கு அனுமதியினைப் பெறுவதற்கு ஒரு மாணவன் ஏன் தகுதிபெறவில்லை என்பதையும் விபரிக்கின்றது.

பகுதி 2

மானுடவியல் மற்றும் சமூக விஞ்ஞான பிரிவில் பட்டப்பயில் நெறிகளுக்கு அனுமதியை எதிர்பார்ப்பின் உங்கள் எதிர்காலத்தை திட்டமிடுவதற்கு இப்பகுதி மிகவும் முக்கியமானது. பல்கலைக்கழகங்களில் வழங்கப்படுகின்ற பட்டப்படிப்பு நிகழ்ச்சித்திட்டங்களுக்கு அனுமதியைப் பெறுவதற்காக வேறுபட்ட பாட இணைப்புகள் எதிர்ப்பார்க்கப்படுகின்றமையால் பல்கலைக்கழக அனுமதிக்கு விண்ணப்பிப்பதற்கு முன்னர் நீங்கள் இப்பிரிவிவை அறிந்து விளங்கிக்கொள்ளுதல் வேண்டும். அத்துடன் பாட இணைப்புகளை பல்வேறுபட்ட பிரிவுகளிலிருந்து தெரிவுசெய்வதற்கான விதிகளும் இதில் உள்ளடங்கியுள்ளது. இது சற்று சிக்கலானது. ஆதலால் நீங்கள் இப்பகுதியை கவனமாக வாசித்து விளங்கிக்கொள்ள வேண்டும். நீங்கள் உயர்தர வகுப்புகளுக்கு நுழைகின்ற பொழுது பாட இணைப்பினை தெரிவு செய்வது மிகவும் சிறந்தது.

பகுதி 3

பகுதி 3 ஆனது மாணவர்கள் விரும்புகின்ற பல்கலைக்கழகங்களின் கற்கைநெறிகளுக்கான விருப்பொழுங்கை யுனிகோட் மூலம் குறிப்பிடுகின்ற முறை மற்றும் யுனிகோட்டை பயன்படுத்தி விருப்பொழுங்கை மாற்றுதல் தொடர்பாக தெளிவான அறிவுறுத்தல்களை விபரிக்கின்றது. ஆதலால் நீங்கள் இணையத்தளம் மூலம் விருப்பொழுங்கை குறிப்பிட முன்னர் இப்பகுதியை கவனமாக வாசித்து விளங்கிக்கொள்ளல் வேண்டும்.

பகுதி 4

பகுதி 4 ஆனது விண்ணப்ப நடைமுறை, வெற்றிடங்களை நிரப்பும் நடைமுறை, வெற்றிடங்களை நிரப்புகையில் உயர் தெரிவுக்குச் செல்லாமல் ஏற்கனவே தெரிவுசெய்யப்பட்டுள்ள பல்கலைக்கழகத்தின் கற்கைநெறியிலேயே தொடர்ந்தும் இருப்பதற்கு மேற்கொள்ள வேண்டிய

வழிமுறை, இடமாற்றம் பெறுவதற்கான வழிமுறை, மேன்முறையீடு செய்யும் வழிமுறை ஆகிய முக்கிய தலைப்புகளை விபரிக்கின்றது. இதுவும் ஓர் முக்கியமான பகுதியே, ஆதலால் பல்கலைக்கழக அனுமதிக்காக இணையதளத்தினுடாக விண்ணப்பப்படிவத்தை பூரணப்படுத்த முன்னர் இப் பகுதியை வாசிக்குமாறு நீர் அறிவுறுத்தப்படுகின்றீர்.

பகுதி 5

பகுதி 5 இல் மாணவர்கள் விரும்புகின்ற பல்கலைக்கழகங்களின் கற்கைநெறிகளுக்கு இணையதளத்தினூடாக விண்ணப்பிக்கின்ற முறையினை விபரிக்கின்றது. எவ்வாறு இணையதளத்தினூடாக விண்ணப்பப்படிவத்தினை பூர்த்திசெய்தல், இணையதள வசதியோ சம்மந்தப்பட்ட அறிவோ இல்லாதபொழுது எவ்வாறு இணையதள வசதியைப் பெற்றுக்கொள்வது போன்றவை தொடர்பான தெளிவான அறிவுறுத்தல்கள் இப்பகுதியில் தரப்பட்டுள்ளன. இணையதள விண்ணப்ப முறையின் பாதுகாப்பினதும் நேர்த்தியினதும் பொறுப்பினை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினர் ஏற்றுக்கொள்வர்.

பகுதி 6

பகுதி 6 இல் விசேட ஏற்பாடுகளின் கீழ் மாணவர்களை பல்கலைக்கழகங்களுக்கு அனுமதித்தல் மற்றும் அவ்வனுமதிக்கான பிரமாணங்கள் என்பன விபரிக்கப்பட்டுள்ளன.

பகுதி 7

இப் பகுதி அரச பல்கலைக்கழகங்கள் மற்றும் உயர்கல்வி நிறுவனங்களில் காணப்படும் வசதிகள் தொடர்பான அறிமுகத்தை தருவதுடன் அவற்றில் காணப்படும் கற்கைநெறிகள் தொடர்பான விபரங்களையும் தருகின்றது.

பகுதி 8

இப்பகுதி மிகவும் முக்கியமானதாகும். இப்பகுதியில் மாணவர்களினால் அடிக்கடி கேட்கப்படும் கேள்விகளுக்கான பதில்கள் உள்ளடங்கியுள்ளன. உதாரணமாக, பல்கலைக்கழக அனுமதிக்காக மாணவனின் மாவட்டத்தை தீர்மானிக்கும் முறை, உள்நிலை மாணவராக ஒரு பல்கலைக்கழகத்தில் பதிவு செய்த பின்னர் அதற்குப்பின் வரும் வருடத்தில் க.பொ.த. (உ.த) பரீட்சைக்குத் தோற்றி பல்கலைக்கழக அனுமதிக்கு விண்ணப்பிக்க முடியுமா போன்ற கேள்விகளும், பல அடிக்கடி கேட்கப்படும் வினாக்களும் இப்பகுதியில் விபரிக்கப்பட்டுள்ளது. இப்பகுதியை நீங்கள் கட்டாயம் வாசித்தல் வேண்டும். உங்களுடைய கேள்விகளுக்கு இப்பகுதியில் பதில் கிடைக்காவிட்டால் நீங்கள் எங்களை எழுத்து மூலமாகவோ மின்னஞ்சல் மூலமாகவோ தொடர்புகொள்ளலாம். நாங்கள் அதற்கு பதிலளிப்போம். வருங்கால வெளியீடுகளில் அவ்வாறான கேள்விகளுக்குரிய பதில்களை உள்ளடக்குவோம்.

பகுதி 9

பல்கலைக்கழக கற்கைநெறிக்கான கிராக்கியின் தன்மையினை விளங்கிக்கொள்வதற்கான ஒரு வழிகாட்டியாக மாத்திரம் சென்ற வருட பல்கலைக்கழக அனுமதிக்கான வெட்டுப்புள்ளிகள் இப்பகுதியில் தரப்பட்டுள்ளது. தீர்மானங்களை மேற்கொள்ளும்போது தயவுசெய்து இதில் மட்டும் தங்கியிருக்க வேண்டாம். வெட்டுப்புள்ளிகள் வருடந்தோறும் வேறுபடலாம். அது பகுதி 8 இல் விபரிக்கப்பட்டுள்ளது.

பகுதி 10

பகுதி 10 இல் மேன்முறையீட்டிற்கான, இணைப் பாடவிதான செயற்பாடுகளில் திறமைகாட்டிய பரீட்சார்த்திகளின் அனுமதிக்கான மற்றும் பார்வையற்ற/அங்கவீன பரீட்சார்த்திகளுக்களின் அனுமதிக்கான மாதிரி விண்ணப்பப் படிவங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன. அத்துடன் மேன்முறையீட்டு விண்ணப்பத்தை இணையதளத்திலும் பூர்த்திசெய்து சமர்ப்பிக்க முடியும் என்பதை தயவுசெய்து நினைவில் கொள்ளவும்.

இக்கைந்நூலில் தரப்பட்டுள்ள விதிகளினதும், கூற்றுக்களினதும் பொருள் விளக்கம் தொடர்பான ஏதாவது தெளிவாக்கல் ப.மா.ஆ.இன் பொறுப்பாகும் என்பதுடன், அத்தகைய பொருள் விளக்கம் தொடர்பான ப.மா.ஆ.இன் தீர்மானம் இறுதியானதுமாகும்.

பகுதி 01

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் கீழ் வருகின்ற அரச பல்கலைக்கழகங்கள் மற்றும் உயர் கல்வி நிறுவகங்களில் பட்டப்பயில் நெறிகளுக்கு மாணவர்களின் அனுமதியினை நிர்வகிக்கும் கொள்கைகளும் கோட்பாடுகளும்

.

1.1 அரச பல்கலைக்கழகங்கள் மற்றும் உயர் கல்வி நிறுவனங்களுக்கான அனுமதிக் கொள்கைகள்

1.2 பல்கலைக்கழக அனுமதிக்கான ஆகக் குறைந்த தேவைப்பாடுகள்

1.3 க.பொ.த. (உ/த) பரீட்சையில் மாணவர்கள் பெற்ற Z புள்ளி

1.4 பல்வேறு பல்கலைக்கழகங்களில் பல்வேறு கற்கைநெறிகளின் அனுமதிக்குத் தேவையான வெட்டுப்புள்ளிகள்

1.5 பல்கலைக்கழக அனுமதிக்காக அபேட்சகர் ஒருவரின் மாவட்டத்தை தீர்மானிப்பதற்கான விதிமுறைகள்

1.6 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க திருத்தப்பட்ட பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் கீழ் ஸ்தாபிக்கப்பட்ட அரச பல்கலைக்கழகங்களிலும் மற்றும் உயர் கல்வி நிறுவனங்களிலும் அனுமதிக்கான பிரமாணங்கள்.

1.7 1978 ஆம் ஆண்டின் இன் 16 ஆம் இலக்க திருத்தப்பட்ட பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் கீழ் உருவாக்கப்பட்ட அரச பல்கலைக்கழகங்கள் மற்றும் உயர் கல்வி நிறுவனங்களில் பல்கலைக்கழக அனுமதிக்கான தகுதியின்மை.

1.8 பல்கலைக்கழகங்களுக்கு மாணவர்களை அனுமதிப்பதில் ஏற்படுகின்ற கால தாமதங்களை குறைப்பதற்கான நடவடிக்கைகள்.

பகுதி 01

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் கீழ் வருகின்ற அரச பல்கலைக்கழகங்கள் மற்றும் உயர் கல்வி நிறுவகங்களில் பட்டப்பயில் நெறிகளுக்கு மாணவர்களின் அனுமதியினை நிர்வகிக்கும் கொள்கைகளும் கோட்பாடுகளும்

1.1 அரச பல்கலைக்கழகங்கள் மற்றும் உயர் கல்வி நிறுவனங்களுக்கான அனுமதிக் கொள்கைகள்

பாடப் பிரிவுகளுக்கிடையில் அனுமதிக் கொள்கை வேறுபடுகிறது.

இக்கைநூலின் பகுதி 2.1 (1) இல் குறிப்பிடப்பட்டுள்ள 01 முதல் 09 வரையான கலைப்பீட கற்கைநெறிகளுக்கு மாணவர்களைத் தெரிவு செய்கையில் தீவளாவிய திறமை பிரதானமான பிரமாணமாக கொள்ளப்படும். இக்கற்கைநெறிகளுக்கு மாணவர்களைத் தெரிவு செய்கையில் மாவட்ட திறமை அடிப்படை கவனத்திற்கொள்ளப்படமாட்டாது. அதனால் அவ்வாறான கற்கைநெறிகளுக்கு தெரிவுசெய்யப்படுவதற்கு மாணவர்கள் ஒரு சமமான அடிப்படையில் போட்டியிடுகின்றனர்.

தேசிய கொள்கையின் அடிப்படையில் கற்கைநெறியொன்றிற்கு தெரிவு செய்யப்படவேண்டிய மாணவர்களின் மொத்தத் தொகை தீர்மானிக்கப்படுகிறது. இருப்பினும் மாணவர் தெரிவு இடம்பெறும்போது குறித்த கற்கைநெறியொன்றிற்கு ஒரு குறிப்பிட்ட மாவட்டத்திலிருந்து அனுமதிக்கப்படும் மொத்த எண்ணிக்கையானது அக் கற்கைநெறிக்கு அடிப்படைக் கல்வியாண்டான 1993/1994 அல்லது 2002/2003 ஆகிய இரண்டில் கூடியதை விட குறைவானதாக இருக்கமாட்டாது என்ற நிபந்தனைக்கு உட்பட்டு அனுமதி வழங்கப்படும்.

இருப்பினும் தீவளாவிய திறமை அடிப்படையில் கலை கற்கைநெறிகளுக்கு தெரிவுசெய்யப்படும் மாணவர்களுக்கு விதிவிலக்கும் உண்டு.

பின்வரும் கலைப்பிரிவு கற்கைநெறிகளுக்கு மாணவர்களைத் தெரிவு செய்வதற்கு விதிவிலக்கு காணப்படுகின்றது.

1. சங்கீதம்
2. நடனம்
3. நாடகமும் அரங்கியலும்
4. கட்புலக் கலை
5. கட்புல மற்றும் தொழிநுட்ப கலை
6. சித்திரமும் வடிவமைப்பும்

இக்கற்கைநெறிகளுக்கான தெரிவு கீழ் குறிப்பிட்டவாறு மாவட்ட திறமை மூலப்பிரமாண அடிப்படையில் மேற்கொள்ளப்படும்.

வணிகப் பிரிவு, உயிரியல் விஞ்ஞானப் பிரிவு, பௌதிக விஞ்ஞானப் பிரிவு, பொறியியல் தொழிநுட்ப பிரிவு, உயிரியல் முறைமை தொழிநுட்ப பிரிவு மற்றும் இப்புத்தகத்தின் பகுதி 2.2.8 இல் பட்டியலிடப்பட்டுள்ள வெவ்வேறு பாடப்பிரிவுகளிலிருந்து மாணவர்கள் விண்ணப்பிக்க தகைமை பெறுகின்ற கற்கைநெறிகளுக்கான அனுமதிகள் பின்வரும் மூலப்பிரமாண அடிப்படையில் மேற்கொள்ளப்படும்.

1. தீவளாவிய திறமை அடிப்படையில் Z புள்ளி நிரலின் வரிசை ஒழுங்கில் கிட்டுகின்ற இடங்களில் 40% வரை நிரப்பப்படும்.

2. மீதமுள்ள 60% களில் 55% ஆன இடங்கள் மாவட்ட திறமை மூலப்பிரமாணங்களின் அடிப்படையில் தெரிவுசெய்யப்படும். மாவட்ட திறமை மூலப்பிரமாண அடிப்படை என்பது தீவளாவிய திறமை (40% வரை) அடிப்படையில் ஒரு மாவட்டத்திற்கு தெரிவுசெய்யப்பட்ட மாணவர்களுக்கு மேலதிகமாக தெரிவுசெய்யப்படுகின்ற மீதமாகவுள்ள 55% ஆகும். அதன் அடிப்படையில் ஒவ்வொரு கற்கை நெறிக்கும் உள்ள 55% வரையிலான இடங்கள், மொத்த சனத்தொகை விகிதாசாரப்படி, அதாவது நாட்டின் மொத்த சனத்தொகையில்

சம்பந்தப்பட்ட மாவட்டமானது கொண்டுள்ள சனத்தொகையின் விகிதாசாரப்படி, 25 நிர்வாக மாவட்டங்களுக்கும் ஒதுக்கப்படும்.

3. அத்துடன் ஒவ்வொரு கற்கை நெறிக்கும் உள்ள இடங்களில் 5% வரை விசேட ஒதுக்கீடாக, கீழே குறிப்பிடப்படும் கல்வியில் பின்தங்கிய 16 மாவட்டங்களுக்கு, சனத்தொகை விகிதாசாரப்படி, அதாவது அந்த 16 மாவட்டங்களின் மொத்த சனத்தொகைக்கு அத்தகைய ஒவ்வொரு மாவட்ட சனத்தொகை என்ற விகிதாசாரப்படி ஒதுக்கப்படும்: இந்த 5% மொத்தமாக 16 மாவட்டங்களுக்குமாகும். தனி ஒரு மாவட்டத்துக்குரியதல்ல.

கல்வியில் பின்தங்கியதாக அடையாளம் காணப்பட்ட 16 மாவட்டங்களும் பின்வருமாறு.

1. நுவரெலியா
2. ஹம்பாந்தோட்டை
3. யாழ்ப்பாணம்
4. கிளிநொச்சி
5. மன்னார்
6. முல்லைத்தீவு
7. வவுனியா
8. திருகோணமலை
9. மட்டக்களப்பு
10. அம்பாறை
11. புத்தளம்
12. அனுராதபுரம்
13. பொலனறுவை
14. பதுளை
15. மொனராகலை
16. இரத்தினபுரி

இருப்பினும் ஒரு குறிப்பிட்ட கற்கை நெறிக்கு மாணவர்களைத் தெரிவு செய்யும் போது, ஏதாவது ஒரு மாவட்டத்திற்கு ஒதுக்கப்படும் இடங்கள் (அதாவது மொத்த தொகையில் 55% & 5%) அடிப்படைக் கல்வி ஆண்டான அதாவது 1993/1994 அல்லது 2002/2003 ஆகிய இரண்டில் கூடியதை விட ஒதுக்கப்பட்ட இடங்கள் குறையாதவாறு உறுதி செய்யப்படும்.

பல்கலைக்கழகங்களுக்கு மாணவர்களை ஒதுக்கிடுவதில் எதிர்நோக்கப்படும் நடைமுறைப் பிரச்சினைகளின் காரணமாகவும், வேறு தவிர்க்க முடியாத காரணிகளினாலும் முன்மொழியப்பட்ட எண்ணிக்கைகளிலிருந்து தெரிவு செய்யப்படும் உண்மையான எண்ணிக்கைகள் ஒவ்வொரு வருடமும் வேறுபடக்கூடும் என்பதைக் கவனத்திற்கொள்ளவும். பல்வேறு பல்கலைக்கழகங்களுக்கிடையில் மாணவர்களின் எண்ணிக்கைகளின் அண்ணளவான பகிர்வு இணைப்பு B இல் தரப்பட்டுள்ளது.

இக்கைநூலின் பிரிவு 6 இல் குறிப்பிடப்பட்டவாறு, விசேட காரணங்களின் அடிப்படையில் மட்டுப்படுத்தப்பட்ட எண்ணிக்கையான மாணவர்கள் அங்கு குறிப்பிட்டுள்ள நிபந்தனைகளுக்கமைய அனுமதிக்கப்படுவார்கள்.

1.2 பல்கலைக்கழக அனுமதிக்கான ஆகக் குறைந்த தேவைப்பாடுகள்

2018 ஆம் ஆண்டு நடைபெற்ற க.பொ.த. (உ/த) பரீட்சையின் அடிப்படையில் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் அபேட்சகர்களுக்கு வழங்கப்பட்ட சராசரி **Z** புள்ளி நிரலின் தர வரிசை அடிப்படையில் கல்வியாண்டு 2018/2019 இற்கான மாணவர்களின் பல்கலைக்கழக அனுமதி தீர்மானிக்கப்படும்.

பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் பல்கலைக்கழக அனுமதிக்குத் தகுதியானோர் என்று தெரிவிக்கப்படும் பரீட்சார்த்திகள் பெற்றிருக்க வேண்டியவை:

(அ) ஆகக் கூடுதலாக 3 அமர்வுகளுக்குள் அங்கீகரிக்கப்பட்ட சகல மூன்று பாடங்களிலும் ஒரே தடவையில் குறைந்தது சாதாரண சித்தி (S).

(ஆ) பொது சாதாரண வினாத்தாளில் ஆகக் குறைந்தது 30% புள்ளிகள்.

- பொது சாதாரண வினாத்தாளில் ஆகக் குறைந்தது 30% புள்ளிகளைப் பெற்றுக்கொள்ளாத விண்ணப்பதாரிகள் Z புள்ளி அடிப்படையில் பல்கலைக்கழக அனுமதிக்குத் தெரிவாயினும் நடப்பு வருட கல்வியாண்டில் பல்கலைக்கழக கற்கைநெறிக்கு பதிவுசெய்வதற்கு தகுதியற்றவர்களாவர்.

- அவ்வாறான ஒரு விண்ணப்பதாரி மேற்குறிப்பிட்ட தேவையை முந்திய தடவையில் அதாவது க.பொ.த. (உ/த) பரீட்சையின் அனுமதிக்கப்பட்ட மூன்று அமர்வுகளுக்குள் 30% புள்ளிகளைப் பெற்று பூர்த்தி செய்திருப்பின் பல்கலைக்கழக அனுமதிக்கு கருத்திற்கொள்ளப்படுவார்.

- ஏற்கனவே அனுமதிக்கு தெரிவாகி பொது சாதாரண வினாத்தாளில் 30% புள்ளிகளைப் பெற்றுக்கொள்ளாத மாணவரொருவர் அடுத்துவரும் வருடத்தில் பல்கலைக்கழக அனுமதிக்காக அனுமதிக்கப்பட்ட மூன்று அமர்வுகளுக்குள் உயர்தரப் பரீட்சையில் பொது சாதாரண வினாத்தாள் பரீட்சையில் தோற்றி குறிப்பிட்ட தேவையை பூர்த்தி செய்தால் மட்டுமே அடுத்துவரும் கல்வியாண்டில் Z புள்ளிகளின் அடிப்படையில் தெரிவு செய்யப்பட்ட கற்கைநெறிக்கு பதிவுசெய்வதற்கு அனுமதிக்கப்படுவர்.

1.3 க.பொ.த.(உ/த) பரீட்சையில் மாணவர்கள் பெற்ற Z புள்ளி

Z புள்ளி கல்வி அமைச்சின் பரீட்சை திணைக்களத்தினால் கணிக்கப்பட்டு பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவிற்கு வழங்கப்படுகிறது. இது ஒரு புள்ளிவிபரவியல் கணிப்பீடாகும். இக்கணிப்பீடு பின்வரும் மூன்று காரணிகளை அடிப்படையாகக் கொண்டது

1. குறிப்பிட்ட வருடத்தில் குறிப்பிட்ட பாடநெறியில் மாணவர்கள் பெற்றுக்கொண்ட மூல மதிப்பெண்கள்.
2. குறிப்பிட்ட வருடத்தில் குறிப்பிட்ட பாடநெறியில் மாணவர்கள் காட்டிய திறமையின் இடைநிலை
3. குறிப்பிட்ட வருடத்தில் குறிப்பிட்ட பாடநெறியின் நியம விலகல்

ஆகையினால் குறிப்பிட்ட வருடத்தில் குறிப்பிட்ட பாடத்தில் மாணவர்களின் கல்விசார் அடைவுகள் மற்றும் அப்பாடத்திற்கு தோற்றிய மாணவர்களின் எண்ணிக்கை போன்றவற்றின் அடிப்படையில் Z புள்ளி வேறுபடுகின்றது.

1.4 பல்வேறு பல்கலைக்கழகங்களில் பல்வேறு கற்றைநெறிகளின் அனுமதிக்கு தேவையான வெட்டுப்புள்ளிகள்

வெட்டுப்புள்ளிகள் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் கணிக்கப்படுகின்றது. இது மாணவர்கள் க.பொ.த. (உ/த) பரீட்சையில் ஒரு குறிப்பிட்ட ஆண்டில் காட்டிய திறமை, குறிப்பிட்ட கற்கைநெறி மற்றும் பல்கலைக்கழகத்திற்க்கான கிராக்கி மற்றும் கற்கைநெறிக்கு மாணவர்களுக்கு கிடைக்கக்கூடிய இடங்களின் எண்ணிக்கை ஆகிய காரணிகளில் தங்கியுள்ளது.

குறிப்பிட்ட கற்கைநெறிக்கு விண்ணப்பித்துள்ள மாணவர்கள் பரீட்சையில் காட்டிய திறமை, குறிப்பிட்ட கற்கைநெறிக்கு பல்கலைக்கழகங்களில் ஒதுக்கப்பட்டுள்ள இடங்களின் எண்ணிக்கை மற்றும் ஒவ்வொரு மாவட்டத்தினதும் சனத்தொகை போன்ற காரணிகளினால் வெட்டுப்புள்ளி வருடத்துக்கு வருடம் மாறுபடுகின்றது.

சில வேளைகளில் சில மாணவர்கள் மீண்டுமொருமுறை உயர்தர பரீட்சைக்குத் தோற்றும் எதிர்பார்ப்புடன் பல்கலைக்கழக அனுமதிக்கு விண்ணப்பிக்காது விடலாம். சில மாணவர்கள் பல்கலைக்கழக அனுமதிக்கு விண்ணப்பித்த போதிலும் தாங்கள் தெரிவுசெய்யப்பட்ட கற்கைநெறிக்கு மனமாற்றத்தின் காரணமாக பதிவுசெய்து கொள்ளாதுவிடலாம்.

அதனால் மாணவர்கள் தமது Z புள்ளி மற்றும் கடந்த வருடத்திற்கான வெட்டுப்புள்ளிகளைக் கவனத்திற் கொள்ளாது தாம் விண்ணப்பிக்கத் தகுதி பெறுகின்ற ஆகக் கூடுதலான கற்கைநெறிகளுக்கு விண்ணப்பிக்குமாறு அறிவுறுத்தப்படுகின்றீர்கள்.

1.5 பல்கலைக்கழக அனுமதிக்காக அபேட்சகர் ஒருவரின் மாவட்டத்தை தீர்மானிப்பதற்கான விதிமுறைகள்

மாணவ/மாணவியரின் பல்கலைக்கழக அனுமதிக்கான விண்ணப்பத்தின் போது அனுமதிக்கு அபேட்சகரின் மாவட்டத்தினை தீர்மானிப்பதற்கு கடந்த மூன்று வருட காலப்பகுதியில் கல்வி கற்ற பாடசாலைகள் தொடர்பான ஆதாரங்கள் கட்டாயமாக சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

இந்நோக்கத்திற்காக பாடசாலை பரீட்சாத்திகளினால் வழங்கப்படுகின்ற தகவல்கள் பாடசாலைப் பதிவேடுகளின் அடிப்படையில் சரியானவை என்பதை மாணவ/மாணவியினது விண்ணப்பப்படிவத்தில் அவர்களது தற்போதைய பாடசாலை அதிபர் உறுதிப்படுத்தல் வேண்டும் மேலும் வெளிவாரி மாணவ/மாணவியரினால் வழங்கப்படும் தகவல்கள் பாடசாலை விடுகைப் பத்திரத்தின் அடிப்படையில் சரியானவை என சமாதான நீதவான் /சத்திய பிரமான ஆணையாளர் ஒருவர் உறுதிப்படுத்தல் வேண்டும்.

அதனடிப்படையில் பல்கலைக்கழக அனுமதிக்கு தகுதி பெறுவதற்காக க.பொ.த. (உ/த) பரீட்சை நடைபெற்ற மாதத்திற்கு உடனடியான முந்திய மாதத்தின் கடைசி நாளன்று முடிவடையும் மூன்று வருட காலம் பின்னோக்கி கணக்கிடப்படும். உதாரணமாக உயர்தரப் பரீட்சை நடந்தது ஆகஸ்ட் மாதம் எனில் முன்னைய மூன்று வருடங்களைக் கணிப்பது அவ்வருட ஜூலை 31 இலிருந்து பின்னோக்கியாகும்.

அவ்வாறு கருத்திற்கொள்ளப்படும் மூன்று வருட காலப்பகுதியினுள், ஒரு வருடத்திற்கும் மேற்பட்ட காலத்திற்கு பரீட்சாத்தி கல்வி கற்ற பாடசாலை அமைந்துள்ள மாவட்டமே அவரது பல்கலைக்கழக அனுமதிக்கான மாவட்டமாக கருதப்படும்.

மேற்குறிப்பிட்ட 3 வருட காலப்பகுதிக்குள் ஒரு மாணவன் ஒன்றுக்கு மேற்பட்ட பாடசாலைகளில் கல்வி கற்றிருப்பின் குறிப்பிட்ட மாணவன் அதிக நாட்கள் கல்விகற்ற பாடசாலை அமைந்துள்ள மாவட்டம் அவரது பல்கலைக்கழக அனுமதிக்கான மாவட்டமாக கருதப்படும். எவ்வாறாயினும் இக் காலப்பகுதி கட்டாயமாக ஒரு வருடத்துக்கு மேற்பட்டிருத்தல் வேண்டும். உதாரணமாக ஒரு மாணவன் ஒரு மாவட்டத்தில் அமைந்துள்ள பாடசாலையில் ஒரு வருடமும் மூன்று மாதங்களும், வேறு மாவட்டத்தில் அமைந்துள்ள பாடசாலையில் எஞ்சிய ஒரு வருடமும் ஒன்பது மாதமும் கற்றிருந்தால் அவரது பல்கலைக்கழக அனுமதிக்காக ஒரு வருடமும் ஒன்பது மாதமும் கல்வி கற்ற பாடசாலை அமைந்துள்ள மாவட்டமே கருத்திற்கொள்ளப்படும்.

எவ்வாறாயினும், எந்த ஒரு மாணவரும் ஒரு மாவட்டத்தில் அமைந்துள்ள பாடசாலையில் பதினொரு மாதங்களும், வேறு மாவட்டத்தில் அமைந்துள்ள இரு வேறு பாடசாலைகளில் முறையே ஒன்பது, பத்து மாதங்களும் கற்றிருப்பார் என கருதின், இரண்டாவது மாவட்டமே பல்கலைக்கழக அனுமதிக்கான பரீட்சாத்தியின் மாவட்டமாகக் கருதப்படும். ஏனெனில் இரண்டாவது மாவட்டத்தில் கற்ற மொத்த காலம் (ஒரு வருடம் ஏழு மாதம்) முதலாவது மாவட்டத்தில் கற்ற காலத்தினை (பதினொரு மாதங்கள்) விட அதிகமாகவும், மொத்தமாக கல்விகற்ற காலப்பகுதி ஒரு வருடத்தினை விட அதிகமாகவும் இருப்பதனாலாகும்.

குறித்த மூன்று வருட காலப்பகுதியில் பரீட்சார்த்தி எந்தவொரு மாவட்டத்திலிருந்தும் ஒரு வருடத்திற்கும் குறைவான காலமே பாடசாலையில் கல்வி கற்றிருந்தால் அல்லது அக்காலப்பகுதியில் பரீட்சார்த்தி எந்தவொரு பாடசாலையிலும் உயர்தர வகுப்பில் பதிவுசெய்து கல்வி கற்கவில்லையாயின் பரீட்சார்த்தியின் நிரந்தர வதிவிடம் அமைந்துள்ள மாவட்டம் பல்கலைக்கழக அனுமதிக்கான மாவட்டமாக கருதப்படும். விண்ணப்பதாரியின் நிரந்தர வதிவிடத்தை உறுதிசெய்வதற்காக பின்வரும் இரண்டு ஆவணங்கள் விண்ணப்பத்துடன் கட்டாயம் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

i.. பாடசாலை விடுகைப் பத்திரத்தின் **(Original of the School Leaving Certificate)** அல்லது மாணவர் பதிவு அறிக்கையின் **(Original of the Pupil's Record Sheet)** மூலப் பிரதி

ii. பிரதேச செயலாளரினால் மேலொப்பமிடப்பட்டு முத்திரையிடப்பட்ட கிராம சேவகரின் சான்றிதழின் மூலப்பிரதி **(Original)**

குறிப்பு:

தனிப்பட்ட பரீட்சாத்தியாயின் பல்கலைக்கழக அனுமதிக்கான விண்ணப்பபடிவத்துடன் அவர்களது பாடசாலை விடுகைப்பத்திரத்தின் மூலப்பிரதியினை **(Original)** சமர்ப்பிப்பது அத்தியவசியமாகும்.

1.6 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க திருத்தப்பட்ட பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் கீழ் ஸ்தாபிக்கப்பட்ட அரச பல்கலைக்கழகங்கள் மற்றும் உயர் கல்வி நிறுவனங்களுக்கு அனுமதிக்கான பிரமாணங்கள்.

1. அரச உயர்கல்வியைப் பெறுவதற்கு சகல மாணவர்களுக்கும் சம சந்தர்ப்பம் வழங்கப்படுகின்றது.

2. அனைவருக்கும் நியாயமான முறையில், அரசாங்கத்தினால் நிதியளிக்கப்படுகின்ற இலவசக் கற்கைநெறிக்கு நுழைவதற்கான சந்தர்ப்பம் ஒரு தடவை மாத்திரமே வழங்கப்படுகின்றது.

3. ஏனென்றால், தெரிவுசெய்யப்பட்ட கற்கைநெறியின் பதிவினை வாபஸ் பெறல் அல்லது பட்டப்பயில் நெறிக்கு பதிவுசெய்தும் அதனை பின்தொடராமல் விடுதல் என்பன குறித்த கல்வியாண்டில் இன்னொரு மாணவனுக்கான பல்கலைக்கழக வாய்ப்பினை இழக்கச் செய்கின்றது. அத்துடன் பதிவை வாபஸ் பெற்று அடுத்துவரும் ஆண்டின் பெறுபேறுகளின் அடிப்படையில் மற்றுமொரு கற்கைநெறிக்கு பதிவுசெய்துகொள்ள கோருவதன் மூலம் அவ்வாண்டில் பரீட்சைக்குத் தோற்றிய மாணவனுக்கான ஒரு வாய்ப்பை தவிர்ப்பதற்கு முயற்சி செய்கின்றீர்.

4. பல்கலைக்கழக அனுமதிக்காக அனுமதிக்கப்பட்ட மூன்று அமர்வுகளில் ஏதேனும் ஒரு க.பொ.த. (உ/த) பரீட்சையில் பெற்றுக்கொண்ட பெறுபேறுகளின் அடிப்படையில் பல்கலைக்கழக அனுமதிக்கான சந்தர்ப்பம் வழங்கப்படும். அதற்கிணங்க பல்கலைக்கழக அனுமதிக்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்ற அவ்வாண்டு பரீட்சையில் பெற்றுக்கொண்ட பெறுபேறுகளின் அடிப்படையில் பல்கலைக்கழக அனுமதிக்கு மாணவர் பதிவு செய்ய அனுமதிக்கப்படுவர்.

5. **பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவிடமிருந்து பல்கலைக்கழக தெரிவுக்கான கடிதம் விண்ணப்பதாரிக்கு கிடைத்தவுடன் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் கணக்கிற்கு பதிவுக்கட்டணமான ரூபா 50/- இனை வங்கி மூலமாகவோ அல்லது இணையதளத்தினூடாகவோ வரவு வைத்து பதிவு செய்வதற்கான இறுதித்திகதியன்று அல்லது அதற்கு முன்பாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் உத்தியோகபூர்வ இணையதளத்தில் தெரிவுசெய்யப்பட்ட பல்கலைக்கழக/உயர்கல்வி நிறுவன கற்கைநெறிக்கு பதிவுசெய்வதன் மூலம் அவர் 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க திருத்தப்பட்ட பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் கீழ் உருவாக்கப்பட்ட, கீழே பிரிவு 1.6. (8) இல் காணப்படும் பல்கலைக்கழகம்/உயர்கல்வி நிறுவனமொன்றில் பதிவு செய்த மாணவராக கருதப்படுவார்.**

6. **கொடுப்பனவை மேற்கொண்ட பிறகு தெரிவுசெய்யப்பட்ட கற்கைநெறி மற்றும் பல்கலைக்கழகத்திற்கு இணைதளயத்தினூடாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் உத்தியோகபூர்வ வலைத்தளத்தில் பதிவினை பூர்த்தி செய்த திகதியே பதிவு செய்த திகதியாக கருதப்படும்.**

   இதற்கமைய, ஒரு விண்ணப்பதாரி வங்கி மூலமாக அல்லது இணையத்தினூடாகவே பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் பேரில் பதிவு செய்வதற்கு பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் வழங்கப்பட்ட இறுதி திகதியோ அதற்கு முன்னரோ கொடுப்பனவை மேற்கொண்ட போதிலும் தெரிவுசெய்யப்பட்ட பல்கலைக்கழகத்தின் பாடநெறிக்கு இணையதளம் மூலம் மேலே பகுதி 1.6 (5) இல் குறிப்பிட்டுள்ளவாறு பதிவுசெய்யத் தவறின் அது செல்லுபடியான பதிவாக கருதப்படமாட்டாது.

7. **மேலும் இணையத்தினூடாக பதிவு செய்யும் போது வங்கி மூலமாக கட்டணம் செலுத்தப்படின் ஸ்கேன் செய்யப்பட்ட கட்டணப் பற்றுச்சீட்டு (UGC copy) பதிவேற்றப்பட்டு உறுதி செய்துகொள்வதன் பொருட்டு இணையத்தினூடாக ப.மா.ஆ. இற்கு அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.**

8. 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க திருத்தப்பட்ட பல்கலைக்கழக சட்டத்திற்கு அமைவாக பின்வரும் அரச பல்கலைக்கழகங்கள் மற்றும் உயர்கல்வி நிறுவனங்களுக்கு மாணவர்களின் தெரிவினை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு மேற்கொள்கின்றது.

i. கொழும்புப் பல்கலைக்கழகம்
ii. பேராதனைப் பல்கலைக்கழகம்
iii. ஸ்ரீ ஜயவர்த்தனபுரப் பல்கலைக்கழகம்
iv. களனிப் பல்கலைக்கழகம்
v. மொறட்டுவைப் பல்கலைக்கழகம்
vi. யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
vii. உறுகுணைப் பல்கலைக்கழகம்
viii. கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை
ix. இலங்கைத் தென் கிழக்குப் பல்கலைக்கழகம்
x. இலங்கை ரஜரட்ட பல்கலைக்கழகம்
xi. இலங்கை சபரகமுவப் பல்கலைக்கழகம்
xii. இலங்கை வயம்பப் பல்கலைக்கழகம்
xiii. இலங்கை ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழகம்
xiv. கட்புல அரங்கேற்றக்கலைப் பல்கலைக்கழகம்
xv. கொழும்பு பல்கலைக்கழக ஸ்ரீபாளி வளாகம்
xvi. கிழக்குப் பல்கலைக்கழக திருகோணமலை வளாகம்
xvii. யாழ் பல்கலைக்கழக வவுனியா வளாகம்
xviii. கொழும்பு பல்கலைக்கழக சுதேச மருத்துவ நிறுவகம்
xix. களனிப் பல்கலைக்கழக கம்பஹா விக்ரமாராச்சி ஆயுர்வேத நிறுவகம்
xx. கொழும்புப் பல்கலைக்கழக கணனிக் கல்லூரி
xxi. சுவாமி விபுலானந்தர் அழகியற் கற்கைகள் நிறுவகம், கிழக்குப் பல்கலைக்கழகம்
xxii. இராமநாதன் நுண்கலைக்கழகம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

9. மேற்குறித்த பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்ட இலங்கை திறந்த பல்கலைக்கழகம் (இ.தி.ப) தொலைக் கற்கை முறைகளைப் பாவித்து கற்கைநெறிகளை வழங்குகின்றது. இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தினால் வழங்கப்படும் கற்கை நெறிகளின் அனுமதித் தேவைகள் தொடர்பான தகவல்கள் நுகேகொட, நாவலயில் உள்ள இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தின் பதிவாளரிடமிருந்து பெறப்படல் வேண்டும்.

10. பின்வரும் நிறுவகங்களினால் வழங்கப்படும் கற்கை நெறிகளுக்கு ப.மா.ஆ.வின் வழிகாட்டலின் கீழ் சம்பந்தப்பட்ட நிறுவகங்களினாலேயே மாணவர்கள் அனுமதிக்கப்படுவார்கள். அவற்றினால் வழங்கப்படும் கற்கை நெறிகளுக்கு அனுமதி கோருவோர், விண்ணப்பங்கள் கோரப்படும் போது சம்பந்தப்பட்ட நிறுவகத்திற்கு விண்ணப்பிக்க வேண்டும்.

(i) மனித வள மேம்பாட்டு நிறுவகம் (ம.வ.மே.நி.), கொழும்புப் பல்கலைக்கழகம்
(ii) தொழில்நுட்ப நிறுவகம், மொறட்டுவைப் பல்கலைக்கழகம்

11. பந்தி 1.6(8) இல் குறிப்பிடப்பட்டுள்ள பதினான்கு பல்கலைக்கழகங்கள், மூன்று வளாகங்கள் மற்றும் ஐந்து நிறுவனங்கள் ஆகியவற்றில் உள்ள பட்டப்பயில் நெறிகளுக்கு மாணவர்களை தெரிவுசெய்யும் நடைமுறையை இக்கைநூல் விபரிக்கின்றது. இதில் விபரிக்கப்பட்டுள்ள விதிகள் மற்றும் பிரமாணங்கள் அரசாங்கத்தினாலோ பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினாலோ எடுக்கப்படும் தீர்மானங்களுக்கமைய மாறுபடலாம்.

1.7 1978 ஆம் ஆண்டின் இன் 16 ஆம் இலக்க திருத்தப்பட்ட பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் கீழ் உருவாக்கப்பட்ட அரச பல்கலைக்கழகங்கள் மற்றும் உயர் கல்வி நிறுவனங்களில் பல்கலைக்கழக அனுமதிக்கான தகுதியின்மை.

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் கீழ் வருகின்ற அரச பல்கலைக்கழகங்கள் மற்றும் உயர்கல்வி நிறுவனங்களில் உள்வாரி மாணவர்களாக அனுமதி கோருவதற்கு பின்வரும் பிரிவுகளைச் சேர்ந்த மாணவர்கள் தகுதியற்றோராவார்.

1. க.பொ.த. (உ/த) பரீட்சைக்கு மூன்றுக்கு (3) மேற்பட்ட அமர்வுகளில் தோற்றிய மாணவர்கள்.

   மாணவர்கள் இடையில் பரீட்சைக்கு தோற்றாது விடலாம் எனினும் மூன்று தடவைகளுக்கு மேற்பட்டு பரீட்சைக்கு தோற்றி பெற்றுக்கொண்ட பரீட்சைப் பெறுபேறுகளின் அடிப்படையில் அல்லது முன்னைய ஆண்டுகளில் பெற்றுக்கொண்ட பரீட்சைப் பெறுபேறுகளின் அடிப்படையில் விண்ணப்பிப்பதற்கு மாணவரொருவர் தகுதியற்றவராவர்.

2. 1978 இன் 16 ஆம் இலக்க திருத்தப்பட்ட பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் கீழ் ஸ்தாபிக்கப்பட்ட ஒரு பல்கலைக்கழகத்தில் / உயர் கல்வி நிறுவனத்தில் கற்கை நெறிக்காக பதிவுசெய்கின்ற/ பதிவுசெய்த உள்வாரி மாணவர்கள் பல்கலைக்கழக அனுமதிக்குத் தகுதியற்றவர்கள். [இப் பந்தியின் கீழ் வரும் பல்கலைக்கழகங்களினதும் உயர் கல்வி நிறுவனங்களினதும் பெயர்கள் மேலே பிரிவு 1.6 (8) மற்றும் 1.6 (10) இல் குறிப்பிடப்பட்டுள்ளது]

3. 1978 இன் 16 ஆம் இலக்க திருத்தப்பட்ட பல்கலைக்கழகங்கள் சட்டம் அல்லாத ஏனைய பாராளுமன்ற சட்டத்தின் கீழ் ஸ்தாபிக்கப்பட்ட அரச பல்கலைக்கழகம் மற்றும் ஏனைய உயர்கல்வி நிறுவனங்களில் பட்டப்பயில் நெறிகளுக்காக இலவச கல்வி முறையின் கீழ் உள்வாரி மாணவர்களாக பதிவுசெய்கின்ற / பதிவுசெய்த மாணவர்கள்.
   1. இலங்கை பிக்கு பல்கலைக்கழகம்
   2. பௌத்த மற்றும் பாளி பல்கலைக்கழகம்
   3. ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகம் (As Enlisted Officer Cadets)
   4. வாழ்க்கை தொழில்சார் தொழில்நுட்ப பல்கலைக்கழகம்
   5. இலங்கை சமுத்திர பல்கலைக்கழகம் (2017 ஆண்டிலும் அதன் பின்னரும் பதிவு செய்த மாணவர்கள்)

4. உள்வாரி மாணவர்களாக ஒரு கற்கைநெறியினை கல்விக் கல்லூரியில் (College of Education) பதிவு செய்துள்ள/ செய்கின்ற மாணவர்கள்.

5. உள்வாரி மாணவர்களாக வாழ்க்கை தொழில்சார் தொழில்நுட்ப பல்கலைக்கழகத்தின்கீழ் வருகின்ற பல்கலைக்கழக கல்லூரிகளில் (University College) மூன்று (03) வருடடிப்ளோமா கற்கைநெறிகளுக்கு இலவச கல்வி முறைமையின் கீழ் உள்வாரி மாணவர்களாக பதிவு செய்கின்ற பதிவுசெய்த மாணவர்கள்.

6. கீழே பந்திகள் **"முக்கியம்"** இல் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கமைவாக பின்வரும் நிறுவனங்களில் 03 வருடங்கள் அல்லது அதற்கு கூடிய கால கற்கை நெறியை பயில்வதற்கு முழுநேர உள்வாரி மாணவர்களாக பதிவுசெய்கின்ற/பதிவுசெய்த மாணவர்கள்

   (அ) இலங்கை உயர் தொழில்நுட்பக் கல்வி நிறுவனத்தின் (SLIATE) கீழ் வரும் ஒரு நிறுவகத்தில் உயர் தேசிய டிப்ளோமா (உ.தே.டி.-HND)

   (ஆ) தேசிய பயிலுனர், கைத்தொழில் பயிற்சி அதிகார சபையின் (NAITA), எந்திரவியல் தொழில்நுட்ப நிறுவகத்தில் (IET), இயந்திரவியல் விஞ்ஞானத்தில் தேசிய டிப்ளோமா (இ.வி.தே.டி NDES)

முக்கியம் :

ஆயினும் இலங்கை உயர் தொழில்நுட்பக் கல்வி நிறுவனத்தின் (SLIATE) கீழ் வரும் நிறுவனத்தில் உயர் தேசிய டிப்ளோமாவுக்கு (உ.தே.டி.-HND), தேசிய பயிலுனர், கைத்தொழில் பயிற்சி அதிகார

சபையின் (NAITA) கீழ் வருகின்ற பொறியியல் தொழில்நுட்ப நிறுவனத்தில் (IET) பொறியியல் விஞ்ஞானத்தில் தேசிய டிப்ளோமா (பொ.வி.தே.டி-NDES) போன்ற மூன்று வருட கால அல்லது அதற்கு மேற்பட்ட காலத்தினைக் கொண்ட முழுநேர கற்கைநெறிகளுக்கு பதிவுசெய்த மாணவர்கள், குறிப்பிட்ட நிறுவனங்களில் பதிவுசெய்வதற்கு கொடுக்கப்பட்ட இறுதித்தினத்திலிருந்து 60 நாட்களுக்குள் தங்களது பதிவுகளை மீளப்பெற்றால் மட்டுமே பின்னைய ஆண்டொன்றில் நடைபெற்ற க.பொ.த. (உ/த) பெறுபேறுகளின் அடிப்படையில் 1978 ஆம் ஆண்டின் 16ம் இலக்க திருத்தப்பட்ட பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் கீழ் உருவாக்கப்பட்ட அரச பல்கலைக்கழகம் மற்றும் உயர்கல்வி நிறுவனங்களில் கற்கை நெறியொன்றைப் பின்பற்றுவதற்கான அனுமதிக்கு விண்ணப்பிக்க முடியும்.

மேற்குறிப்பிடப்பட்ட நிறுவனங்களில் பதிவுசெய்த மாணவர்கள் 1.7 (6) இல் குறிப்பிட்ட ஓர் கற்கை நெறிக்கு பதிவுசெய்வதற்காக கொடுக்கப்பட்ட இறுதித்திகதியிலிருந்து 60 நாட்களுக்குள் பதிவை மீளப்பெறாவிட்டால் அவர்கள் மேலே 1.7 (6) இல் குறிப்பிட்ட பிரிவில் வருவதுடன் பின்னைய ஆண்டொன்றில் நடைபெற்ற க.பொ.த. (உ/த) பெறுபேறுகளின் அடிப்படையில் 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க திருத்தப்பட்ட சட்டத்தின் கீழ் அரச பல்கலைக்கழகங்கள் மற்றும் உயர்கல்வி நிறுவனங்களில் கற்கை நெறியொன்றைப் பின்பற்றுவதற்கான அனுமதிக்கு விண்ணப்பிப்பதற்கு தகுதியற்றவர்களாவர்.

ஆயினும், இலங்கை உயர் தொழில்நுட்பக் கல்வி நிறுவனத்தின் (SLIATE) கீழ் வரும் நிறுவனத்தில் உயர் தேசிய டிப்ளோமாவுக்கு (உ.தே.டி.-HND), தேசிய பயிலுனர், கைத்தொழில் பயிற்சி அதிகார சபையின் (NAITA) கீழ் வருகின்ற பொறியியல் தொழில்நுட்ப நிறுவனத்தில் (IET) பொறியியல் விஞ்ஞானத்தில் தேசிய டிப்ளோமா (பொ.வி.தே.டி-NDES) போன்ற கற்கைநெறிகளுக்கு **வெற்றிடங்களை நிரப்புவதற்காக** மேலே பிரிவு 1.7 (6) இல் குறிப்பிட்டவாறு அனுமதிக்கப்பட்ட மாணவர்களுக்கு குறித்த 60 நாட்களுக்குள் பதிவினை மீளப்பெற்று பல்கலைக்கழக அனுமதிக்கு விண்ணப்பிப்பதற்கான சலுகை வழங்கப்பட மாட்டாது.

7. முதலாவது பட்டமட்டத்தில் கற்கை நெறிகளுக்கு உயர் கல்வி அமைச்சு மூலம் வெளிநாட்டுப் புலமைப் பரிசில்களுக்காக தெரிவு செய்யப்பட்டு புலமைப்பரிசிலை ஏற்றுக்கொண்ட மாணவர்கள்.

8. மேலே 1.7 இல் 2,3,4,5,6,7 இல் முதல் பட்டமொன்றை அல்லது அதற்கு தொடர்பான இதர பொருத்தமான தகைமைகளை பெற்றுக்கொண்ட மாணவர்கள்.

9. பல்கலைக்கழக அனுமதிக்கு விண்ணப்பிக்கும் போது அல்லது பதிவினை மேற்கொள்ளும் போது தவறான பிரகடனங்களைச் செய்து, போலியான ஆவணங்களைச் சமர்ப்பிக்கும் மாணவர்கள்.

குறிப்பு:

(i) பல்கலைக்கழகம் அல்லது உயர் கல்வி நிறுவனத்திற்கு அனுமதிக்கப்பட முன்னர் பல்கலைக்கழக அனுமதிக்காக விண்ணப்பிக்கும் போது அல்லது பதிவினை மேற்கொள்ளும் போது பரீட்சாத்தியினால் வழங்கப்பட்ட தகவல்கள் பொய் / தவறானவை எனக் கண்டறியப்பட்டால் அக் கல்வி ஆண்டிற்கான அவரின் தேர்வு மற்றும் அவரினால் சமர்ப்பிக்கப்பட்ட விண்ணப்பப்படிவம் இரத்துச் செய்யப்படுவதுடன் ஏனைய எவ் எதிர்கால கல்வியாண்டிலும் மீண்டும் பல்கலைக்கழக அனுமதிக்காக விண்ணப்பிக்க அனுமதி வழங்கப்பட மாட்டாது.

(ii) மேலும், பல்கலைக்கழகம் அல்லது உயர் கல்வி நிறுவனத்திற்கு அனுமதிக்கப்பட்டதன் பிற்பாடு பல்கலைக்கழக அனுமதிக்காக விண்ணப்பிக்கும் போது அல்லது பதிவினை மேற்கொள்ளும் போது பரீட்சாத்தியினால் விண்ணப்பத்தில் வழங்கப்பட்ட தகவல்கள் பொய் / தவறானவையாக எவ்விதத்திலாவது கண்டுபிடிக்கப்பட்டால் அம்மாணவரை பல்கலைக்கழகத்தில்/ உயர் கல்வி நிறுவனத்திலிருந்து நீக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை கருத்திற்கொள்ளவும்.

1.8 பல்கலைக்கழகங்களுக்கு மாணவர்களை அனுமதிப்பதில் ஏற்படுகின்ற காலதாமதங்களை குறைப்பதற்கான நடவடிக்கைகள்.

1. எமது கட்டுப்பாட்டிற்கு அப்பாற்பட்ட காரணங்களை (உ-ம் :- நீதிமன்ற வழக்குகள்) தவிர பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு எதிர்வரும் காலங்களில் மிக விரைவாக விண்ணப்பங்களைக் கோரும்.

2. **எனவே, பல்கலைக்கழக அனுமதிக்கு இணையதளத்தினூடாக விண்ணப்பித்தல் கட்டாயமாக்கப்பட்டுள்ளது.** அது, காகித விண்ணப்பங்களை செயல்முறைப்படுத்துவதில் இழக்கப்படுகின்ற நேரங்களை குறைப்பதுடன் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு வெட்டுப்புள்ளிகளை விரைவாக வெளியிடுவதற்கு உதவுகின்றது.

3. இணையத்தளத்தினூடாக விண்ணப்பங்களைச் சமர்ப்பிப்பதற்கான தெளிவான அறிவுறுத்தல்கள் இக்கைநூலின் பகுதி 05 இல் தரப்பட்டுள்ளது.

4. நீர் இணையதளத்தினூடாக பல்கலைக்கழக அனுமதிக்கு விண்ணப்பிப்பதற்குரிய வசதியற்ற அல்லது இணையத்தள முறைமையுடன் பரீட்சியம் இல்லாத மாணவராக இருந்தால் நாடு பூராகவும் அமைந்துள்ள இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தின் பிராந்திய நிலையங்கள் (NAC Centers), கல்வியமைச்சின் மாகாண மற்றும் வலய கணனி வள நிலையங்கள் (ICT Centers) மற்றும் தகவல் தொடர்பாடல் மற்றும் தொழில்நுட்ப நிறுவனத்தின் (ICTA) அறிவகம் (Nenasala) நிலையங்கள் போன்றவை உமக்கு இணையதளத்தினூடாக **இலவசமாக** பல்கலைக்கழக அனுமதிக்கு விண்ணப்பிப்பதற்கு துணைபுரியும். உமது வதிவிடத்திற்கு அண்மையில் அமைந்துள்ள அவ்வாறான நிலையங்கள் தொடர்பான தகவல்கள் பகுதி 05 இன் இறுதியில் தரப்பட்டுள்ளன.

5. வெட்டுப்புள்ளிகள் வெளியிடப்பட்ட பின்னர், பல்கலைக்கழகத்தில்/ உயர் கல்வி நிறுவனத்தில் கற்கைநெறிக்குத் தெரிவு செய்யப்பட்ட மாணவர்கள் இணையதளத்தினூடாகவே தமது பதிவினை மேற்கொள்ள வேண்டும். **இதுவும் ஓர் கட்டாயமான தேவை என்பதை தயவுசெய்து கருத்திற்கொள்ளவும்.** இணையத்தள விண்ணப்ப முறைமையினதும் இணையதள பதிவு முறைமையினதும் பாதுகாப்பு உத்தரவாதமளிக்கப்படுகின்றது.

6. தெரிவுசெய்யப்பட்ட பல்கலைக்கழகத்தின் கற்கைநெறிக்கு இணையதளத்தினூடாக மாணவர்கள்,மேலே பிரிவு 1.6 (5) இன் படி பதிவினை மேற்கொள்ளல் பல்கலைக்கழக அனுமதிக்கான காலவிரயத்தை குறைப்பதற்கான ஓர் வழிமுறையாகும்.

7. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் இணையதளத்தில் மாணவர்களின் கற்கைநெறி மற்றும் பல்கலைக்கழகங்களிற்கான பதிவினை மேற்கொள்ளும் ஏற்பாட்டின் கீழ் ஒவ்வொரு பல்கலைக்கழகங்களிலும் பதிவு செய்யும்பொழுது தமது கட்டுப்பாட்டினை மீறி ஏற்படும் பல்வேறுபட்ட கால தாமதங்கள் குறைக்கப்படுகின்றது.

பகுதி 2

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் கீழ் வருகின்ற அரச பல்கலைக்கழகங்களில் மற்றும் உயர்கல்வி நிறுவனங்களில் பட்ட நிகழ்ச்சித்திட்டங்களுக்கான அனுமதியை பெறுவதற்கான முன்னேற்பாடுகள் தொடர்பான தகவல்கள்

2.1 வெவ்வேறு பாடப்பிரிவுகளின் கீழ்வருகின்ற கற்கைநெறிகள் 22

2.2 பட்டநெறிகளை தெரிவுசெய்வதற்கான உயர்தர பாட தேவைப்பாடுகள் மற்றும் பாட இணைப்புகள் தொடர்பான வழிகாட்டி 32

2.2.1 கலைப் பிரிவு

2.2.1.1 கலை 32
1. கலை (SP) 35
2. கலை (SAB) 36
3. தொடர்பாடல் கற்கைகள் 37
4. சமாதானமும் முரண்பாடு தீர்த்தலும் 37
5. இஸ்லாமியக் கற்கைகள் 37
6. அரபு மொழி 38
7. ஆங்கிலத்தை இரண்டாம் மொழியாக கற்பித்தல் **(TESL)** 38
8. கட்புல அரங்கேற்றக்கலைகள் பல்கலைக்கழகத்தினால் வழங்கப்படும் சங்கீதம், நடனம், நாடகமும் அரங்கமும், கட்புலக் கலை 38
9. யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் இராமநாதன் நுண்கலைக் கல்லூரியால் வழங்கப்படும் சங்கீதம், நடனம், சித்திரமும் வடிவமைப்பும் 39
10. கிழக்குப் பல்கலைக்கழகத்தின் சுவாமி விபுலானந்தர் அழகியற் கற்கைகள் நிறுவகத்தினால் வழங்கப்படும் சங்கீதம், நடனம், நாடகமும் அரங்கமும், கட்புலமும் தொழில்நுட்பவியல் கலையும் கற்கைநெறிகள் 40

2.2.1.2 சமூகப்பணி 40

2.2.2 வணிகவியற் பிரிவு

2.2.2.1 முகாமைத்துவம் 42
2.2.2.2 பொது முகாமைத்துவம் (சிறப்பு) 42
2.2.2.3 சொத்து முகாமைத்துவமும் மதிப்பீடும் 42
2.2.2.4 வணிகவியல் 42
2.2.2.5 முகாமைத்துவக் கற்கைகள் (TV) 44
2.2.2.6 வியாபாரத் தகவல் முறைமைகள் (சிறப்பு) 45

2.2.3 உயிரியல் விஞ்ஞானப் பிரிவு

2.2.3.1 மருத்துவம்/பல் அறுவைச் சிகிச்சை/விலங்கு மருத்துவ விஞ்ஞானம் 47
2.2.3.2 விவசாய தொழில்நுட்பமும் முகாமைத்துவமும் 48
2.2.3.3 விவசாயம் 48
2.2.3.4 உணவு விஞ்ஞானமும் போசாக்கும் 48
2.2.3.5 உணவு விஞ்ஞானமும் தொழில்நுட்பமும் 49
2.2.3.6 ஆயுர்வேத மருத்துவமும் அறுவை சிகிச்சையும் 49
2.2.3.7 யுனானி மருத்துவமும் அறுவை சிகிச்சையும் 49
2.2.3.8 சித்த மருத்துவமும் அறுவை சிகிச்சையும் 49
2.2.3.9 உயிரியல் விஞ்ஞானம் 50
2.2.3.10 பிரயோக விஞ்ஞானங்கள் (உயிரியல் விஞ்ஞானம்) 50
2.2.3.11 சுகாதார விருத்தி 51
2.2.3.12 தாதியியல் 52
2.2.3.13 மருந்தகவியல் 52
2.2.3.14 மருத்துவ ஆய்வுகூட விஞ்ஞானங்கள் 53
2.2.3.15 ஊடுகதிர்ப்படமெடுப்பு 53
2.2.3.16 இயன் மருத்துவம் 53
2.2.3.17 மூலக்கூற்று உயிரியலும் உயிரிரசாயனவியலும் 54
2.2.3.18 கடற்றொழில் மற்றும் கடல்சார் விஞ்ஞானம் 54
2.2.3.19 சூழல் பேணலும் முகாமைத்துவமும் 55
2.2.3.20 விலங்கு விஞ்ஞானமும் மீன்பிடித்தலும் 55
2.2.3.21 உணவு உற்பத்தியும் தொழில்நுட். முகாமைத்துவமும் 55
2.2.3.22 விவசாய வள முகாமைத்துவமும் தொழில்நுட்பமும் 56
2.2.3.23 விவசாய வியாபார முகாமைத்துவம் 56
2.2.3.24 பசுமைத் தொழில்நுட்பம் 56
2.2.3.25 விலங்கு விஞ்ஞானம் 57
2.2.3.26 ஏற்றுமதி விவசாயம் 57
2.2.3.27 நீர்வாழ் வளங்கள் தொழில்நுட்பம் 58

2.2.4 பௌதிக விஞ்ஞானப் பிரிவு

2.2.4.1 பொறியியல் 60
2.2.4.2 பொறியியல் (EM) நில வளங்கள் பொறியியல் 61
2.2.4.3 பொறியியல் (TM) புடவை மற்றும் துணி தொழில்நுட்பம் 61
2.2.4.4 பௌதிக விஞ்ஞானம் 61
2.2.4.5 கணனி விஞ்ஞானம் 62
2.2.4.6 பிரயோக விஞ்ஞானங்கள் (பௌதிக விஞ்ஞானம்) 62
2.2.4.7 போக்குவரத்தும் தேவைகள் விநியோக ஒழுங்கமைப்பு முகாமை. 64
2.2.4.8 கைத்தொழில் புள்ளிவிபரவியலும் கணிதவியல் நிதியும் 64
2.2.4.9 புள்ளிவிபரவியலும் செயற்பாட்டு ஆராய்ச்சியும் 64
2.2.4.10 கணக்கிடலும் தகவல் முறைமைகளும் 65
2.2.4.11 பௌதிக விஞ்ஞானம் - தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நு.65

2.2.5 பொறியியல் தொழில்நுட்ப பிரிவு

2.2.5.1 பொறியியல் தொழில்நுட்பம் 67

2.2.6 உயிர் முறைமைகள் தொழில்நுட்ப பிரிவு (BST)

2.2.6.1 உயிர் முறைமைகள் தொழில்நுட்பம் 69

2.2.7 தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம் 71

2.2.8 வெவ்வேறு பாடப்பிரிவுகளிலிருந்து மாணவர்கள் விண்ணப்பிக்கத் தகைமை பெறுகின்ற கற்கைநெறிகள்

2.2.8.1 தகவல் தொழில்நுட்பம் IT 73
2.2.8.2 முகாமைத்துவமும் தகவல் தொழில்நுட்பமும் MIT 73
2.2.8.3 கணிய அளவையியல் 74
2.2.8.4 அளவையியல் விஞ்ஞானம் 74
2.2.8.5 பட்டினமும் நாடும் திட்டமிடல் 74
2.2.8.6 கட்டடக்கலை 75
2.2.8.7 நவநாகரிக வடிவமைப்பும் உற்பத்தி அபிவிருத்தியும் 76
2.2.8.8 நிலத்தோற்றக் கட்டடக்கலை 77
2.2.8.9 வடிவமைப்பு 78
2.2.8.10 சட்டம் 79
2.2.8.11 வசதிகள் முகாமைத்துவம் 80
2.2.8.12 கணக்கிடலும் முகாமைத்துவமும் 81
2.2.8.13 முகாமைத்துவமும் தகவல் தொழில்நுட்பமும் (SEUSL) 81
2.2.8.14 விஞ்ஞானமும் தொழில்நுட்பமும் 82
2.2.8.15 கணனி விஞ்ஞானமும் தொழில்நுட்பமும் 82
2.2.8.16 தொழில்முயற்சியும் முகாமைத்துவமும் 83
2.2.8.17 தேயிலை தொழில்நுட்பமும் பெறுமதி சேர்ப்பும் 84
2.2.8.18 கைத்தொழில் தகவல் தொழில்நுட்பம் 84
2.2.8.19 கனிப்பொருள் வளங்களும் தொழில்நுட்பமும் 85
2.2.8.20 பனை இனத்தாவரம் மற்றும் இறப்பர் பால் தொழில்நுட்பமும் பெறுமதி சேர்ப்பும் 85
2.2.8.21 விருந்தோம்பல், சுற்றுலா மற்றும் நிகழ்ச்சிகள் முகாமை. 86
2.2.8.22 உடற்றொழில் கல்வி 86
2.2.8.23 விளையாட்டு விஞ்ஞானமும் முகாமைத்துவமும் 87
2.2.8.24 பேச்சும் செவிமடுத்தல் விஞ்ஞானமும் 87
2.2.8.25 தகவல் தொழில்நுட்பமும் முகாமைத்துவமும் 88
2.2.8.26 சுற்றுலாவும் விருந்தோம்பல் முகாமைத்துவமும் 89
2.2.8.27 தகவல் முறைமைகள் 89
2.2.8.28 மொழி பெயர்ப்பு கற்கைகள் 90
2.2.8.29 திரைப்படமும் தொலைக்காட்சி கற்கைகள் 90
2.2.8.30 செயற்திட்ட முகாமைத்துவம் 91
2.2.8.31 தகவலும் தொடர்பாடல் தொழில்நுட்பமும் ICT 91
2.2.8.32 மென்பொருள் பொறியியல் 92
2.2.8.33 உணவு வணிக முகாமைத்துவம் 93
2.2.8.34 கடல்சார் மற்றும் நன்னீர் விஞ்ஞானம் 94
2.2.8.35 வியாபார விஞ்ஞானம் 94
2.2.8.36 நிதி பொறியியல் 95
2.2.8.37 புவியியல் தகவல் விஞ்ஞானம் 95

பகுதி 2

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் கீழ் வருகின்ற அரச பல்கலைக்கழகங்களில் மற்றும் உயர்கல்வி நிறுவனங்களில் பட்ட நிகழ்ச்சித்திட்டங்களுக்கான அனுமதியை பெறுவதற்கான முன்னேற்பாடுகள் தொடர்பான தகவல்கள்

2.1 வெவ்வேறு பாடப்பிரிவுகளின் கீழ்வருகின்ற கற்கைநெறிகள்

பல்கலைக்கழகங்கள் மற்றும் உயர் கல்வி நிறுவகங்களில் பல்வேறு கற்கைநெறிகள் காணப்படுகின்றன. பல்வேறு பல்கலைக்கழகங்களினால் நடாத்தப்படுகின்ற கற்கைநெறிகளின் தலைப்புக்களில் சிறிய வித்தியாசங்கள் இருப்பதை நீங்கள் அவதானிக்க முடியும். தாங்கள் நிபுணத்துவமான மற்றும் வசதிகளைக் கொண்டுள்ள பல்கலைக்கழகங்கள், பல்வேறு கற்கைநெறிகளை வழங்குவதற்கான தன்னாட்சி அதிகாரத்தை கொண்டுள்ளது.

க.பொ.த. (உ.த.) பரீட்சையில் உள்ள பாடங்கள், பின்வருமாறு ஆறு (06) முக்கிய பிரிவுகளாக வகுக்கப்பட்டுள்ளன:

(1) கலைப் பிரிவு
(2) வணிகவியல் பிரிவு
(3) உயிரியல் விஞ்ஞானப் பிரிவு
(4) பௌதிக விஞ்ஞானப் பிரிவு
(5) பொறியியல் தொழில்நுட்ப பிரிவு
(6) உயிர் முறைமைகள் தொழில்நுட்ப பிரிவு

பக்கம் 22 - 95 உங்களுக்கு விருப்பமான பல்கலைக்கழகம் மற்றும் கற்கைநெறிகளைப் பற்றி தெளிவான விபரங்களை அறிந்துகொள்ள உதவுகின்றது.

(1) கலைப் பிரிவு

1. கலை (Arts)
- கொழும்புப் பல்கலைக்கழகம்
- களனிப் பல்கலைக்கழகம்
- ஸ்ரீ ஜயவர்த்தனபுரப் பல்கலைக்கழகம்
- உறுகுணைப் பல்கலைக்கழகம்
- பேராதனைப் பல்கலைக்கழகம்
- யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
- கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை
- இலங்கைத் தென் கிழக்குப் பல்கலைக்கழகம்
- இலங்கை ரஜரட்ட பல்கலைக்கழகம்

2. கலை (SP) - Arts (SP)
- ஸ்ரீபாளி வளாகம்

3. கலை (SAB) - Arts (SAB)
- இலங்கை சபரகமுவப் பல்கலைக்கழகம்

4. தொடர்பாடல் கற்கைள் (Communication Studies)
- கிழக்குப் பல்கலைக்கழக திருகோணமலை வளாகம்

5. சமாதானமும் முரண்பாடு தீர்த்தலும் (Peace and Conflict Resolution)
- களனிப் பல்கலைக்கழகம்

6. இஸ்லாமிய கற்கைநெறி (Islamic Studies)
- இலங்கைத் தென் கிழக்குப் பல்கலைக்கழகம்

7. **அரபு மொழி (Arabic Language)**
   - இலங்கைத் தென் கிழக்குப் பல்கலைக்கழகம்

8. **ஆங்கிலத்தை இரண்டாம் மொழியாக கற்பித்தல் (TESL)**
   - களனிப் பல்கலைக்கழகம்

9. **சமூகப்பணி (Social Work)**
   - பேராதனைப் பல்கலைக்கழகம்

1 முதல் 9 வரையான கற்கைநெறிகளுக்கான அனுமதி தீவளாவிய திறமை அடிப்படையில் வழங்கப்படும்.

10. **சங்கீதம் (Music)**
    - கட்புல அரங்கேற்றக்கலைப் பல்கலைக்கழகம்
    - சுவாமி விபுலானந்தா அழகியற் கற்கைகள் நிறுவகம்
    - இராமநாதன் நுண்கலைக்கழகம்

11. **நடனம் (Dance)**
    - கட்புல அரங்கேற்றக்கலைப் பல்கலைக்கழகம்
    - சுவாமி விபுலானந்தா அழகியற் கற்கைகள் நிறுவகம்
    - இராமநாதன் நுண்கலைக்கழகம்

12. **நாடகமும் அரங்கியலும் (Drama & Theatre)**
    - கட்புல அரங்கேற்றக்கலைப் பல்கலைக்கழகம்
    - சுவாமி விபுலானந்தா அழகியற் கற்கைகள் நிறுவகம்

13. **கட்புலக்கலை (Visual Arts)**
    - கட்புல அரங்கேற்றக்கலைப் பல்கலைக்கழகம்

14. **கட்புலமும் தொழிநுட்பவியல் கலையும் (Visual & Technological Arts)**
    - சுவாமி விபுலானந்தர் அழகியற் கற்கைகள் நிறுவகம்

15. **சித்திரமும் வடிவமைப்பும் (Art & Design)**
    - இராமநாதன் நுண்கலைக்கழகம்

(2) வணிகப் பிரிவு

1. **முகாமைத்துவம் (Management)**
   - கொழும்புப் பல்கலைக்கழகம்
   - பேராதனைப் பல்கலைக்கழகம்
   - ஸ்ரீ ஜயவர்த்தனபுரப் பல்கலைக்கழகம்
   - களனிப் பல்கலைக்கழகம்
   - யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
   - உறுகுணைப் பல்கலைக்கழகம்
   - கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை
   - இலங்கைத் தென் கிழக்குப் பல்கலைக்கழகம்
   - இலங்கை ரஜரட்ட பல்கலைக்கழகம்
   - இலங்கை சபரகமுவப் பல்கலைக்கழகம்
   - இலங்கை வயம்பப் பல்கலைக்கழகம்

2. **முகாமைத்துவம் (பொது) சிறப்பு (Management (Public) Special**
   - ஸ்ரீ ஜயவர்த்தனபுரப் பல்கலைக்கழகம்

3. சொத்து முகாமைத்துவமும் மதிப்பீடும் (Estate Management & Valuation)

- ஸ்ரீ ஜயவர்த்தனபுரப் பல்கலைக்கழகம்

4. வணிகவியல் (Commerce)

- ஸ்ரீ ஜயவர்த்தனபுரப் பல்கலைக்கழகம்
- களனிப் பல்கலைக்கழகம்
- யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
- கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை
- தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பவியல்

அல்லது

(ii) மேலுள்ள நிரலிலிருந்து ஒன்று அல்லது இரண்டு பாடங்களில் சித்தியடைந்திருப்பதுடன், மற்றைய பாடத்தை / பாடங்களை பின்வரும் நிரலிலிருந்து எடுத்திருக்க வேண்டும்:

- பௌத்தம் / பௌத்த நாகரீகம்
- கிறீஸ்தவம் / கிறிஸ்தவ நாகரீகம்
- கிரேக்க உரோம நாகரீகம்
- ஜப்பானிய மொழி
- பாளி
- சமஸ்கிருதம்
- சிங்களம்
- தமிழ்
- இந்து சமயம் / இந்து நாகரீகம்
- இஸ்லாம் / இஸ்லாமிய நாகரீகம்
- சீன மொழி
- ஆங்கிலம்
- பிரெஞ்சு
- ஜேர்மன்
- அரபு

மேலதிகமாக, க.பொ.த. (சா.த.) பரீட்சையில் ஆங்கிலத்தில் குறைந்தது திறமைச் சித்தி **(C)** அல்லது க.பொ.த. (உ/த.) பரீட்சையில் ஆங்கிலத்தில் குறைந்தது **(S)** சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.

- பட்ட நிகழ்ச்சித்திட்டம் : சட்ட இளமாணி
- பல்கலைக்கழகங்கள் : கொழும்புப் பல்கலைக்கழகம்
  பேராதனைப் பல்கலைக்கழகம்
  யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
- காலம் : 4 வருடங்கள்

பல்கலைக்கழக அனுமதிக்கான விண்ணப்பத்துடன் க.பொ.த. (சா.த.) மூலச்சான்றிதழின் தகுந்த உறுதி செய்யப்பட்ட பிரதியினை (Certified Copy) பரீட்சார்த்திகள் சமர்ப்பிக்க வேண்டும். அதனைச் சமர்ப்பிக்கத் தவறின் குறித்த கற்கைநெறிக்கான விண்ணப்பம் நிராகரிக்கப்படும்.

2.2.8.11 வசதிகள் முகாமைத்துவம் (Facilities Management)

(உத்தேச அனுமதி - 50)

அனுமதிக்கான ஆகக் குறைந்த தகைமைகள்

க.பொ.த. (உ/த) பரீட்சையில் குறைந்தது 'S' தரத்தை இணைந்த கணிதத்தில் அல்லது கணக்கீட்டில், அத்துடன் ஆகக்குறைந்தது 'S' தரத்தை கீழ்வரும் ஏதாவது இரண்டு பாடங்களிலும் பெற்றிருக்க வேண்டும்.

- வியாபாரப் புள்ளிவிபரவியல்
- உயர் கணிதம்
- தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பம்
- பௌதிகவியல்
- இரசாயனவியல்
- வணிகக் கற்கைகள்
- பொருளியல்

மேலதிகமாக பரீட்சார்த்திகள் பின்வருவனவற்றைப் பெற்றிருத்தல் வேண்டும்:

(அ) க.பொ.த. (சா/த) பரீட்சையில் ஆங்கிலத்தில் குறைந்தது திறமைச் சித்தி **(C)**
(ஆ) க.பொ.த. (சா/த) பரீட்சையில் கணிதத்தில் குறைந்தது திறமைச் சித்தி **(C)**
(இ) க.பொ.த. (சா/த) பரீட்சையில் விஞ்ஞானத்தில் குறைந்தது சித்தி **(S)**

- பட்ட நிகழ்ச்சித்திட்டம் : பி.எஸ்.சி.வசதிகள் முகாமைத்துவம் (கௌரவ) [BScHons (FM)]
- பல்கலைக்கழகம் : மொறட்டுவைப் பல்கலைக்கழகம்
- காலம் : 4 வருடங்கள்

பல்கலைக்கழக அனுமதிக்கான விண்ணப்பத்துடன் பரீட்சார்த்திகள் க.பொ.த. (சா.த.) மூலச்சான்றிதழின் உரியவாறு உறுதி செய்யப்பட்ட பிரதியினை (Certified Copy) சமர்ப்பிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றார்கள். இதைச் சமர்ப்பிக்கத் தவறின் வசதிகள் முகாமைத்துவத்திற்கான விண்ணப்பம் நிராகரிக்கப்படும்.

குறிப்பு:

2020/2021 ஆம் கல்வியாண்டிலிருந்து வசதிகள் முகாமைத்துவம் கற்கை நெறிக்கு தகுதிபெறுவதற்கு விண்ணப்பதாரி கீழே தரப்பட்டுள்ள இரு வகைகளில் ஏதேனும் ஒரு வகையில் குறைந்தபட்ச தகைமையினைப் பெற்று க.பொ.த. (உ.த.)பரீட்சையில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.

வகை (அ)
க.பொ.த. (உ.த.)பரீட்சையில் இரசாயனவியல், இணைந்த கணிதம் மற்றும் பௌதிகவியல் பாடங்களில் ஆகக் குறைந்தது S சித்தி.

வகை (ஆ)
க.பொ.த. (உ.த.)பரீட்சையில் வணிகக் கல்வி, பொருளியல் மற்றும் கணக்கீடு ஆகியவற்றிற்கு குறைந்தது S சித்தி பெற்றிருத்தல் வேண்டும்;

அல்லது

மேலே வகை (ஆ)வின் பாடங்களிலிருந்து கணக்கீடு உட்பட இரு பாடங்களில் குறைந்தது S சித்தியும் ஏனைய பாடம் பின்வரும் நிரலில் இருந்தும் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.

- **விவசாய விஞ்ஞானம்**
- **புவியியல்**
- **ஜேர்மன்**
- **இணைந்த கணிதம்**
- **அரசியல் விஞ்ஞானம்**
- **ஆங்கிலம்**
- **அளவையியலும் விஞ்ஞான முறையும்**
- **பிரெஞ்சு**

- வரலாறு
- பௌதிகவியல்
- தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பம்

மேலே குறிப்பிட்ட இரு வகைகளில் ஏதேனும் ஓர் வகையின் தேவைப்பாட்டிற்கு மேலதிகமாக பரீட்சார்த்திகள் க.பொ.த. (சா/த.) பரீட்சையில் குறைந்தது ஆங்கிலத்தில் திறமைச் சித்தியும் (C) கணிதத்தில் திறமைச் சித்தியையும் (C) விஞ்ஞானத்தில் திறமைச் சித்தியையும் (C) கல்வியாண்டு 2020/2021 இலிருந்து பெற்றிருத்தல் வேண்டும்.

2.2.8.12 கணக்கிடலும் முகாமைத்துவமும் (Computation & Management)

(உத்தேச அனுமதி - 50)

அனுமதிக்கான ஆகக் குறைந்த தகைமைகள்

க.பொ.த. (உ/த) பரீட்சையில் ஆகக் குறைந்தது 'S' தரத்தை பொருளியலிலும் அல்லது இணைந்த கணிதத்திலும், ஆகக்குறைந்தது 'S' தரத்தை ஏதாவது வேறு இரு பாடங்களிலும் பெற்றிருக்கவேண்டும்.

மேலதிகமாக, க.பொ.த. (சா/த.) பரீட்சையில் கணிதத்தில் **'C'** தரத்தைப் பரீட்சார்த்திகள் பெற்றிருக்க வேண்டும்.

- பட்ட நிகழ்ச்சித்திட்டம் : பீ.எஸ்.சி கணக்கிடலும் முகாமைத்துவமும்
- பல்கலைக்கழகம் : பேராதனைப் பல்கலைக்கழகம்
- காலம் : 4 வருடங்கள்

பல்கலைக்கழக அனுமதிக்கான விண்ணப்பத்துடன் பரீட்சார்த்திகள் க.பொ.த. (சா.த.) மூலச்சான்றிதழின் உரியவாறு உறுதி செய்யப்பட்ட பிரதியினை (Certified Copy) சமர்ப்பிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றார்கள். இதைச் சமர்ப்பிக்கத் தவறின் கணக்கிடலும் முகாமைத்துவத்துக்கான விண்ணப்பம் நிராகரிக்கப்படும்.

குறிப்பு: பேராதனைப் பல்கலைக்கழகம் இக் கற்கைநெறியினை கல்வியாண்டு 2020/2021 இலிருந்து முடிவுறுத்துவதால் கல்வியாண்டு 2020/2021 இலிருந்து மாணவர்கள் இப் பட்டநிகழ்ச்சித்திட்டத்திற்கு தெரிவு செய்யப்படமாட்டார்கள்.

2.2.8.13 முகாமைத்துவமும் தகவல் தொழில்நுட்பமும் (SEUSL) (Management & Information Technology (SEUSL))

(உத்தேச அனுமதி - 120)

அனுமதிக்கான ஆகக் குறைந்த தகைமைகள்

க.பொ.த. (உ/த) பரீட்சையில் ஏதேனும் 3 பாடங்களில் குறைந்தது 'S' தரத்தை பெற்றிருக்க வேண்டும்.

முகாமைத்துவத்தினதும் தகவல் தொழில்நுட்பத்தினதும் கற்கைநெறி அலகுகளை இப்பட்ட நிகழ்ச்சித் திட்டம் கொண்டுள்ளது.

- பட்ட நிகழ்ச்சித்திட்டம் : பீ.எஸ்சி. முகாமைத்துவமும் தகவல் தொழில்நுட்பமும்
- பல்கலைக்கழகம் : இலங்கைத் தென் கிழக்குப் பல்கலைக்கழகம்
- காலம் : 03 வருடங்கள்

2.2.8.14 விஞ்ஞானமும் தொழில்நுட்பமும் (Science and Technology)

(உத்தேச அனுமதி - 60)

அனுமதிக்கான ஆகக் குறைந்த தகைமைகள்

க.பொ.த. (உ/த) பரீட்சையில் குறைந்தது 'S' சித்திகளை உயிரியல் மற்றும் இரசாயனவியல் ஆகிய பாடங்களிலும் மூன்றாவது பாடமாக பின்வரும் பாடங்களிலிருந்து ஒன்றிலும் பெற்றிருத்தல் வேண்டும்.

- விவசாய விஞ்ஞானம்
- உயர் கணிதம்
- கணிதம்
- இணைந்த கணிதம்
- பௌதிகவியல்

அல்லது

க.பொ.த. (உ/த) பரீட்சையில் பின்வரும் மூன்று பாடங்களில் ஆகக் குறைந்ததது 'S' சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.

1. இணைந்த கணிதம் அல்லது உயர் கணிதம்

   அத்துடன்
2. இரசாயனவியல் அல்லது பௌதிகவியல்

   மற்றும் மூன்றாவது பாடத்தை பின்வரும் நிரலிலிருந்து தெரிவுசெய்தல் வேண்டும்

- விவசாய விஞ்ஞானம்
- இணைந்த கணிதம்
- உயிரியல்
- உயர் கணிதம்
- இரசாயனவியல்
- பௌதிகவியல்

- பட்ட நிகழ்ச்சித்திட்டம் : விஞ்ஞானமும் தொழிநுட்பமும் இளமாணி பட்டம்
- பல்கலைக்கழகம் : இலங்கை ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழகம்
- காலம் : 04 வருடங்கள்
- மொழிமூலம் : ஆங்கிலம்

மூன்றாவது கல்வி ஆண்டின் ஆரம்பத்தில் மாணவர்கள் கீழ் தரப்பட்டுள்ள சிறப்பு பாடப்பரப்பிற்கு அமைய ஒரு கற்கை நெறிக்கு தெரிவு செய்யப்படுவர்.

1. உணவு இயந்திரவியல் மற்றும் உயிரியல் செயற்பாட்டுத் தொழில்நுட்பம் (Food Engineering & BioProcess Technology)
2. மூலப்பொருள் விஞ்ஞானமும் தொழில்நுட்பமும் (Material Science & Technology)
3. இயந்திர மின்னணுவியல் (Macatronics)

இறுதி வருடத்தில் எல்லா மாணவர்களும் கட்டாயமாக தமது விருப்பத்திற்குரிய பொருத்தமான துறைகளில் கைத்தொழிற் பயிற்சியையும், ஆராய்ச்சிக் கருத்திட்டத்தையும் மேற்கொள்ள வேண்டும்.

2.2.8.15 கணனி விஞ்ஞானமும் தொழில்நுட்பமும் (Computer Science & Technology)

(உத்தேச அனுமதி - 60)

அனுமதிக்கான ஆகக் குறைந்த தகைமைகள்

க.பொ.த. (உ/த) பரீட்சையில் குறைந்தது 'S' சித்திகளை உயிரியல் மற்றும் இரசாயனவியல் ஆகிய பாடங்களிலும் மூன்றாவது பாடம் பின்வரும் பாடங்களிலிருந்து ஒன்றிலும் பெற்றிருத்தல் வேண்டும்.

- விவசாய விஞ்ஞானம்
- உயர் கணிதம்

- கணிதம்
- இணைந்த கணிதம்
- பௌதிகவியல்

அல்லது

க.பொ.த. (உ/த) பரீட்சையில் பின்வரும் மூன்று பாடங்களில் ஆகக் குறைந்ததது 'S' சித்திகளை பெற்றிருத்தல் வேண்டும்.
அத்துடன்

1. இணைந்த கணிதம் அல்லது உயர் கணிதம்

மற்றும்

2. இரசாயனவியல் அல்லது பௌதிகவியல்

மற்றும் மூன்றாவது பாடத்தை பின்வரும் நிரலிலிருந்து தெரிவுசெய்தல் வேண்டும்

- விவசாய விஞ்ஞானம்
- இணைந்த கணிதம்
- உயிரியல்
- உயர் கணிதம்
- இரசாயனவியல்
- பௌதிகவியல்
- தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பம்

மேலதிகமாக விண்ணப்பதாரி பல்கலைக்கழகத்தினால் நடாத்தப்படும் உளச்சார்புப் பரீட்சையில் சித்தியடைய வேண்டும்.

- பட்ட நிகழ்ச்சித்திட்டம் : கணனி விஞ்ஞானமும் தொழிநுட்பமும் விஞ்ஞான இளமாணி பட்டம்
- பல்கலைக்கழகம் : இலங்கை ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழகம்
- காலம் : 04 வருடங்கள்
- மொழிமூலம் : ஆங்கிலம்

இறுதி வருடத்தில் எல்லா மாணவர்களும் கட்டாயமாக தமது விருப்பத்திற்குரிய பொருத்தமான துறைகளில் கைத்தொழிற் பயிற்சியையும், தனிப்பட்ட கருத்திட்டத்தையும் மேற்கொள்ள வேண்டும்.

உளச்சார்புப் பரீட்சைக்கு தோற்றுவதற்கான விண்ணப்பங்களைக் கோரி இலங்கை ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழகம் பத்திரிகை அறிவித்தல் ஒன்றை பிரசுரிக்கும். பரீட்சார்த்திகள் மேலதிக விபரங்களுக்கு குறித்த பல்கலைக்கழக பதிவாளருடன் தொடர்புகொள்ளலாம்.

2.2.8.16 தொழில்முயற்சியும் முகாமைத்துவமும் (Entrepreneurship & Management)

(உத்தேச அனுமதி - 65)

அனுமதிக்கான ஆகக் குறைந்த தகைமைகள்

க.பொ.த. (உ/த) பரீட்சையில் ஏதேனும் 3 பாடங்களில் குறைந்தது 'S' தரத்தை பெற்றிருக்க வேண்டும்.

மேலதிகமாக விண்ணப்பதாரி பல்கலைக்கழகத்தினால் நடாத்தப்படும் உளச்சார்புப் பரீட்சையில் சித்தியடைய வேண்டும்.

- பட்ட நிகழ்ச்சிதிட்டம் : பீ.பீ.எம். தொழில்முயற்சியும் முகாமைத்துவமும்
- பல்கலைக்கழகம் : இலங்கை ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழகம்
- காலம் : 04 வருடங்கள்
- மொழிமூலம் : ஆங்கிலம்

மாணவர்கள் மூன்றாவது கல்வி ஆண்டில் ஆரம்பத்தில் கீழ் தரப்பட்டுள்ள சிறப்பு பாடப்பரப்புகளில் ஒன்றிற்கு தெரிவு செய்யப்படுவர்.

1 காப்புறுதி மற்றும் இடர்கணிப்பு (Insurence and Actuary)
2. தொழில் முயற்சியும் முகாமைத்துவ தொழிநுட்பமும் (Entrepreneurship & Management Technology)

இறுதி வருடத்தில் எல்லா மாணவர்களும் கட்டாயமாக தமது விருப்பத்திற்குரிய பொருத்தமான துறைகளில் கைத்தொழில் பயிற்சியையும், ஆராய்ச்சி கருத்திட்டத்தையும் மேற்கொள்ள வேண்டும்.

உளச்சார்புப் பரீட்சைக்கு தோற்றுவதற்கான விண்ணப்பங்களைக் கோரி பத்திரிகை அறிவித்தல் ஒன்றை இலங்கை ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழகம் பிரசுரிக்கும். பரீட்சார்த்திகள் மேலதிக விபரங்களுக்கு இலங்கை ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழக பதிவாளருடன் தொடர்புகொள்ளலாம்.

2.2.8.17 தேயிலை தொழில்நுட்பமும் பெறுமதி சேர்ப்பும் (Tea Technology & Value Addition)

(உத்தேச அனுமதி - 65)

அனுமதிக்கான ஆகக் குறைந்த தகைமைகள்

க.பொ.த. (உ/த) பரீட்சையில் கீழ்வரும் பாடச்சேர்க்கைகளின் ஒன்றிலிருந்து குறைந்தபட்சம் மூன்று சாதாரண சித்திகளை 'S' கொண்டிருத்தல் வேண்டும்.

1. உயிரியல், இரசாயனவியல், பௌதிகவியல் அல்லது விவசாய விஞ்ஞானம்
2. இணைந்த கணிதம், இரசாயனவியல், பௌதிகவியல்

- பட்ட நிகழ்ச்சிதிட்டம் : தேயிலை தொழில்நுட்பமும் பெறுமதி சேர்ப்பும் விஞ்ஞான இளமாணி பட்டம்
- பல்கலைக்கழகம் : இலங்கை ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழகம்
- காலம் : 04 வருடங்கள்
- மொழிமூலம் : ஆங்கிலம்

இறுதி வருடத்தில் எல்லா மாணவர்களும் கட்டாயமாக தமது விருப்பத்திற்குரிய பொருத்தமான துறைகளில் கைத்தொழில் பயிற்சியையும், ஆராய்ச்சி கருத்திட்டத்தையும் மேற்கொள்ள வேண்டும்.

2.2.8.18 கைத்தொழில் தகவல் தொழில்நுட்பம் (Industrial Information Technology)

(உத்தேச அனுமதி - 60)

அனுமதிக்கான ஆகக் குறைந்த தகைமைகள்

க.பொ.த. (உ/த) பரீட்சையில் ஏதேனும் 3 பாடங்களில் குறைந்தது 'S' தரத்தை பெற்றிருக்க வேண்டும்.

மேலதிகமாக விண்ணப்பதாரி பல்கலைக்கழகத்தினால் நடாத்தப்படும் உளச்சார்புப் பரீட்சையில் சித்தியடைய வேண்டும்.

- பட்ட நிகழ்ச்சிதிட்டம் : கைத்தொழில் தகவல் தொழில்நுட்ப இளமாணி பட்டம் **(BIIT)**
- பல்கலைக்கழகம் : இலங்கை ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழகம்
- காலம் : 04 வருடங்கள்
- மொழிமூலம் : ஆங்கிலம்

இறுதி வருடத்தில் எல்லா மாணவர்களும் கட்டாயமாக தமது விருப்பத்திற்குரிய பொருத்தமான துறைகளில் கைத்தொழில் பயிற்சியையும் ஆராய்ச்சி கருத்திட்டத்தையும் மேற்கொள்ள வேண்டும்.
உளச்சார்புப் பரீட்சைக்கு தோற்றுவதற்கான விண்ணப்பங்களைக் கோரி பத்திரிகை அறிவித்தல் ஒன்றை இலங்கை ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழகம் பிரசுரிக்கும். பரீட்சார்த்திகள் மேலதிக விபரங்களுக்கு இலங்கை ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழகம் பதிவாளருடன் தொடர்பு கொள்ளலாம்.

2.2.8.19 கனிப்பொருள் வளங்களும் தொழில்நுட்பமும் (Mineral Resources and Technology)

(உத்தேச அனுமதி - 60)

அனுமதிக்கான ஆகக் குறைந்த தகைமைகள்

க.பொ.த உயர்தர பரீட்சையில் கீழ்வரும் பாடச்சேர்க்கைகளின் ஒன்றிலிருந்து குறைந்தபட்சம் மூன்று சாதாரண சித்திகளை 'S' கொண்டிருத்தல் வேண்டும்.

1. உயிரியல், இரசாயனவியல், பௌதிகவியல்
2. இணைந்த கணிதம், இரசாயனவியல், பௌதிகவியல்

- பட்ட நிகழ்ச்சிதிட்டம் : பீஎஸ்சி கனிப்பொருள் வளங்களும் தொழில்நுட்பமும் (சிறப்பு)
- பல்கலைக்கழகம் : இலங்கை ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழகம்
- காலம் : 04 வருடங்கள்
- மொழிமூலம் : ஆங்கிலம்

மாணவர்கள் மூன்றாவது கற்கையாண்டின் ஆரம்பத்தில் கீழ்தரப்பட்ட சிறப்பு பாடப்புகளில் ஒன்றிற்கு தெரிவு செய்யப்படுவர்.

1. கனிப்பொருள் செயற்பாட்டுத் தொழிநுட்பம்
2. நீர் விஞ்ஞானமும் தொழிநுட்பமும்

இறுதி வருடத்தில் எல்லா மாணவர்களும் கட்டாயமாக தமது விருப்பத்திற்குரிய பொருத்தமான துறைகளில் கைத்தொழில் பயிற்சியையும், ஆராய்ச்சி கருத்திட்டத்தையும் மேற்கொள்ள வேண்டும்.

2.2.8.20 பனை இனத்தாவரம் மற்றும் இறப்பர் பால் தொழில்நுட்பமும் பெறுமதி சேர்ப்பும் (Palm & Latex Technology and Value Addition)

(உத்தேச அனுமதி - 60)

அனுமதிக்கான ஆகக் குறைந்த தகைமைகள்

க.பொ.த உயர்தர பரீட்சையில் கீழ்வரும் பாடச்சேர்க்கைகளில் ஒன்றிலிருந்து குறைந்தபட்சம் மூன்று சாதாரண சித்திகளை 'S' கொண்டிருத்தல் வேண்டும்.

1. உயிரியல், இரசாயனவியல், பௌதிகவியல் அல்லது விவசாய விஞ்ஞானம்
2. இணைந்த கணிதம், இரசாயனவியல், பௌதிகவியல்

- பட்ட நிகழ்ச்சிதிட்டம் : பீஎஸ்சி (சிறப்பு) பனை இனத்தாவரம் மற்றும் இறப்பர் பால் தொழில்நுட்பமும் பெறுமதி சேர்ப்பும்
- பல்கலைக்கழகம் : இலங்கை ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழகம்
- காலம் : 04 வருடங்கள்
- மொழிமூலம் : ஆங்கிலம்

இறுதி வருடத்தில் எல்லா மாணவர்களும் கட்டாயமாக தமது விருப்பத்திற்குரிய பொருத்தமான துறைகளில் கைத்தொழில் பயிற்சியையும், ஆராய்ச்சி கருத்திட்டத்தையும் மேற்கொள்ள வேண்டும்.

2.2.8.21 விருந்தோம்பல், சுற்றுலா மற்றும் நிகழ்ச்சிகள் முகாமைத்துவம் (Hospitality, Tourism and Events Management)

(உத்தேச அனுமதி - 65)

அனுமதிக்கான ஆகக் குறைந்த தகைமைகள்

க.பொ.த. (உ/த) பரீட்சையில் ஏதேனும் 3 பாடங்களில் குறைந்தது 'S' தரத்தை பெற்றிருக்க வேண்டும்.

மேலதிகமாக விண்ணப்பதாரி பல்கலைக்கழகத்தினால் நடாத்தப்படும் உளச்சார்புப் பரீட்சையில் சித்தியடைய வேண்டும்.

- பட்ட நிகழ்ச்சிதிட்டம் : பீபீஎம் விருந்தோம்பல், சுற்றுலா மற்றும் நிகழ்ச்சிகள் முகாமைத்துவம்
- பல்கலைக்கழகம் : இலங்கை ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழகம்
- காலம் : 04 வருடங்கள்
- மொழிமூலம் : ஆங்கிலம்

இறுதி வருடத்தில் எல்லா மாணவர்களும் கட்டாயமாக தமது விருப்பத்திற்குரிய பொருத்தமான துறைகளில் கைத்தொழில் பயிற்சியையும், ஆராய்ச்சி கருத்திட்டத்தையும் மேற்கொள்ள வேண்டும்.

இலங்கை ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழகம் உளச்சார்புப் பரீட்சைக்குத் தோற்ற பரீட்சார்த்திகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரி பத்திரிகை அறிவித்தலொன்றைப் பிரசுரிக்கும். பரீட்சார்த்திகள் மேலதிக விபரங்களுக்கு ஊவா வெல்லச பல்கலைக்கழகப் பதிவாளரோடு தொடர்பு கொள்ள முடியும்.

2.2.8.22 உடற்றொழில் கல்வி (Physical Education)

(உத்தேச அனுமதி 50)

அனுமதிக்கான ஆகக் குறைந்த தகைமைகள்

க.பொ.த. (உ/த) பரீட்சையில் ஏதேனும் 3 பாடங்களில் குறைந்தது 'S' தரத்தை பெற்றிருக்க வேண்டும்.

மேலதிகமாக பரீட்சார்த்திகள் உரிய பல்கலைக்கழகத்தால் நடாத்தப்படும் உளச்சார்புப் பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

- பட்ட நிகழ்ச்சித்திட்டம் : பீ.எஸ்சி. உடற்றொழில் கல்வி (சிறப்பு)
- பல்கலைக்கழகம் : இலங்கை சபரகமுவப் பல்கலைக்கழகம்
- காலம் : 04 வருடங்கள்

இலங்கை சப்ரகமுவ பல்கலைக்கழகம் உளச்சார்புப் பரீட்சைக்கு தோற்றுவதற்கு விண்ணப்பங்களைக் கோரி பத்திரிகை அறிவித்தலொன்றைப் பிரசுரிக்கும். பரீட்சார்த்திகள் மேலதிக விபரங்களுக்கு தொடர்புடைய பல்கலைக்கழகத்தின் பதிவாளருடன் தொடர்பு கொள்ளலாம்.

2.2.8.23 விளையாட்டு விஞ்ஞானமும் முகாமைத்துவமும் (Sports Sciences & Management)

(உத்தேச அனுமதி - 105)

அனுமதிக்கான ஆகக் குறைந்த தகைமைகள்

க.பொ.த. (உ/த) பரீட்சையில் ஆகக் குறைந்தது 'S' தரத்தை ஏதாவது 03 பாடங்களில் பெற்றிருக்க வேண்டும்.

மேலதிகமாக பரீட்சார்த்திகள் இலங்கை சபரகமுவ பல்கலைக்கழகத்தினாலும் ஸ்ரீ ஜயவர்தனபுரப் பல்கலைக்கழகத்தினாலும் இணைந்து நடாத்தப்படும் உளச்சார்புப் பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

- பட்ட நிகழ்ச்சித்திட்டம் : பீ.எஸ்சி. விளையாட்டு விஞ்ஞானமும் முகாமைத்துவமும் (சிறப்பு)
  இலங்கை சப்ரகமுவ பல்கலைக்கழகம்
  பீ.எஸ்சி. விளையாட்டு விஞ்ஞானமும் முகாமைத்துவமும் (கௌரவ)
  ஸ்ரீ ஜயவர்தனபுரப் பல்கலைக்கழகம்
- காலம் : 04 வருடங்கள்
- மொழிமூலம் : ஆங்கிலம்

உளச்சார்பு பரீட்சையில் 30% புள்ளிகள் மாணவர் பாடசாலை, மாகாண மற்றும் தேசிய ரீதியில் விளையாட்டுத் துறை சார்ந்த செயற்பாடுகளில் காட்டிய திறமைகளுக்கு வழங்கப்படும். அடுத்த 30% புள்ளிகள் செய்முறைப் பரீட்சைகள் (Fitness Test) ஊடாகவும் இறுதியான 40% புள்ளிகள் எழுத்துப் பரீட்சைக்கும் (Theory Paper) வழங்கப்படும்.

இலங்கை சபரகமுவ பல்கலைக்கழகம் மற்றும் ஸ்ரீ ஜயவர்த்தனபுரப் பல்கலைக்கழகம் உளச்சார்புப் பரீட்சைக்கு தோற்றுவதற்கு விண்ணப்பங்களைக் கோரி பத்திரிகை அறிவித்தலொன்றைப் பிரசுரிக்கும். பரீட்சார்த்திகள் மேலதிக விபரங்களுக்கு தொடர்புடைய பல்கலைக்கழகத்தின் பதிவாளருடன் தொடர்பு கொள்ளலாம்.

2.2.8.24 பேச்சும் செவிமடுத்தல் விஞ்ஞானமும் (Speech and Hearing Sciences)

(உத்தேச அனுமதி - 50)

அனுமதிக்கான ஆகக் குறைந்த தகைமைகள்

க.பொ.த. (உ.த.) பரீட்சையில் உயிரியல் விஞ்ஞான பிரிவில், பௌதிக விஞ்ஞானப் பிரிவில் அல்லது இக் கைநூலின் பிரிவு 2.2.1.1 இல் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகளுக்குட்பட்டு தெரிவுசெய்யப்படும் கலைப்பிரிவின் எந்தவொரு அனுமதிக்கப்பட்ட மூன்று பாடங்களிலும் ஆகக் குறைந்தது 'S' தரச்சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.

மேலதிகமாக பரீட்சார்த்திகள் உரிய பல்கலைக்கழகத்தால் நடாத்தப்படும் உளச்சார்புப் பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

- பட்ட நிகழ்ச்சித்திட்டங்கள் : பீஎஸ்சி கௌரவ பேச்சும் செவிமடுத்தல் விஞ்ஞானமும்
- பல்கலைக்கழகம் : களனிப் பல்கலைக்கழகம்
- காலம் : 04 வருடங்கள்
- மொழிமூலம் : ஆங்கிலம்

களனி பல்கலைக்கழகத்தின் மருத்துவ பீடத்தினால் வழங்கப்படுகின்ற பேச்சும் செவிமடுத்தல் விஞ்ஞானத்தில் மாணவர்கள் பேச்சும் செவிமடுத்தல் விஞ்ஞானமும் அல்லது ஒலியியல் போன்ற துறைகளில் சிறப்பு கற்கைநெறிகளை மேற்கொள்ள முடியும். க.பொ.த. (உ/த) பரீட்சையில் பௌதிகவியலில் சித்தியடைந்த மாணவர்களுக்கு மட்டும் ஒலியியல் துறையில் சிறப்புக்கற்கைகளை மேற்கொள்ள அனுமதிக்கப்படுவர்.

களனி பல்கலைக்கழகம் உளச்சார்புப் பரீட்சைக்கு தோற்றுவதற்கு விண்ணப்பங்களைக் கோரி பத்திரிகை அறிவித்தலொன்றைப் பிரசுரிக்கும். பரீட்சார்த்திகள் மேலதிக விபரங்களுக்கு தொடர்புடைய பல்கலைக்கழகத்தின் பதிவாளருடன் தொடர்பு கொள்ளலாம்.

2.2.8.25 தகவல் தொழில்நுட்பமும் முகாமைத்துவமும் (Information Technology & Management)

(உத்தேச அனுமதி - 100)

அனுமதிக்கான ஆகக் குறைந்த தகைமைகள்

க.பொ.த. (உ/த) பரீட்சையில் மூன்று பாடங்களில் சித்தியடைந்திருப்பதுடன் ஆகக் குறைந்தது 'C' தரத்தை கீழ்வரும் ஒரு பாடத்திலாவது பெற்றிருக்க வேண்டும்.

- உயர் கணிதம்
- பொருளியல்
- கணிதவியல்
- இணைந்த கணிதம்
- புவியியல்
- பௌதிகவியல்
- கணக்கீடு
- அளவியலும் விஞ்ஞான முறையும்
- வணிகப் புள்ளிவிபரவியல்

மேலதிகமாக, பரீட்சார்த்திகள் பின்வரும் தேவைகளையும் பூர்த்தி செய்ய வேண்டும்

(அ) க.பொ.த. (சா.த.) பரீட்சையில் ஆங்கிலத்தில் குறைந்தது **'C'** தரம்

(ஆ) க.பொ.த. (சா.த.) பரீட்சையில் கணிதத்தில் குறைந்தது **'C'** தரம்

- பட்ட நிகழ்ச்சிதிட்டம் : பீ.எஸ்சி. தகவல் தொழில்நுட்பமும் முகாமைத்துவமும் (கௌரவ)
- பல்கலைக்கழகம் : மொறட்டுவைப் பல்கலைக்கழகம்
- காலம் : 04 வருடங்கள்
- மொழிமூலம் : ஆங்கிலம்

பல்கலைக்கழக அனுமதிக்கான விண்ணப்பத்துடன் பரீட்சார்த்திகள் க.பொ.த. (சா.த.) மூலச்சான்றிதழின் உரியவாறு உறுதி செய்யப்பட்ட பிரதியினை (Certified Copy) சமர்ப்பிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றார்கள். இதைச் சமர்ப்பிக்கத் தவறின் தகவல் தொழில்நுட்பமும் முகாமைத்துவத்திற்கான விண்ணப்பம் நிராகரிக்கப்படும்.

குறிப்பு:

2020/2021 ஆம் கல்வியாண்டிலிருந்து தகவல் தொழில்நுட்பமும் முகாமைத்துவம் கற்கை நெறிக்கு தகுதிபெறுவதற்கு விண்ணப்பதாரி க.பொ.த. (உ.த.) இல் மூன்று பாடங்களில் சித்தி பெற்று இருப்பதுடன் பின்வரும் நிரலில் இருந்து இரு பாடங்களில் குறைந்தது திறமைச் சித்தி (C) பெற்றிருத்தல் வேண்டும்.

- **உயர் கணிதம்**
- **இணைந்த கணிதம்**
- **கணக்கீடு**
- **பொருளியல்**
- **புவியியல்**
- **அளவையியலும் விஞ்ஞான முறையும்**
- **கணிதம்**
- **பௌதிகவியல்**
- **வணிகப் புள்ளிவிபரவியல்**
- **தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பம்**
- **இரசாயனவியல்**

இதற்கு மேலதிகமாக, கல்வியாண்டு 2020/2021 இலிருந்து விண்ணப்பதாரி மொரட்டுவப் பல்கலைக்கழகத்தினால் நடாத்தப்படும் உளச்சார்புப் பரீட்சையில் சித்தியடைய வேண்டும்.

இதற்கு மேலதிகமாக, விண்ணப்பதாரி க.பொ.த. (சா/த.) பரீட்சையில் குறைந்தது ஆங்கிலத்தில் திறமைச் சித்தியையும் (C), கணிதத்தில் திறமைச் சித்தியையும் (C) பெற்றிருத்தல் வேண்டும்.

2.2.8.26 சுற்றுலாவும் விருந்தோம்பல் முகாமைத்துவமும் (Tourism & Hospitality Management)

(உத்தேச அனுமதி - 120)

அனுமதிக்கான ஆகக் குறைந்த தகைமைகள்

க.பொ.த. (உ/த) பரீட்சையில் கீழ்வரும் பாடச்சேர்க்கைகளின் ஒன்றிலிருந்து குறைந்தபட்சம் மூன்று சாதாரண சித்திகளை 'S' கொண்டிருத்தல் வேண்டும்.

(i) வர்த்தகம், உயிரியல் விஞ்ஞானம் மற்றும் பௌதீக விஞ்ஞானம் போன்ற பிரிவுகளில் ஏதாவது மூன்று பாடங்கள்.

(ii) பொருளியல், புவியியல், வியாபாரப் புள்ளிவிபரவியல் பாடங்களிலிருந்து ஆகக்குறைந்தது ஒரு பாடமும் மற்றும் இக்கைநூலின் பிரிவு 2.2.1.1 இன் நிபந்தனைகளிற்குட்பட்டு தெரிவு செய்யப்படும் கலைப் பிரிவின் ஏனைய இரு பாடங்கள்.

- பட்ட நிகழ்ச்சிதிட்டம் சுற்றுலா முகாமைத்துவத்தில் விஞ்ஞான இளமாணி (சிறப்பு)
  மற்றும் விருந்தோம்பல் முகாமைத்துவத்தில் விஞ்ஞான இளமாணி (சிறப்பு)
  பல்கலைக்கழகம் : இலங்கை சபரகமுவப் பல்கலைக்கழகம்

  சுற்றுலா முகாமைத்துவத்தில் விஞ்ஞான இளமாணி (சிறப்பு)
  சுற்றுலாவும் விருந்தோம்பல் முகாமைத்துவத்திலும் விஞ்ஞான இளமாணி (சிறப்பு)
  இலங்கை ரஜரட்ட பல்கலைக்கழகம்
- காலம் : 04 வருடங்கள்
- மொழிமூலம் : ஆங்கிலம்

2.2.8.27 தகவல் முறைமைகள் (Information Systems)

(உத்தேச அனுமதி - 100)

அனுமதிக்கான ஆகக் குறைந்த தகைமைகள்

க.பொ.த. (உ/த) பரீட்சையில் மூன்று பாடங்களில் சித்தியடைந்திருப்பதுடன் ஆகக் குறைந்தது **'C'** தரத்தை கீழ்வரும் இரு பாடங்களிலாவது பெற்றிருக்க வேண்டும்.

- உயர் கணிதம்
- கணிதம் / இணைந்த கணிதம்
- பௌதிகவியல்
- இரசாயனவியல்
- கணக்கீடு
- வியாபாரப் புள்ளிவிபரவியல்
- பொருளியல்
- வியாபாரக் கற்கைகள்
- உயிரியல்
- அரசியல் விஞ்ஞானம்
- அளவையியலும் விஞ்ஞான முறையும்
- புவியியல்
- குடிசார் தொழில்நுட்பம்
- பொறிமுறை தொழில்நுட்பம்
- மின், இலத்திரனியல், தகவல் தொழில்நுட்பம்
- தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பம்

மேலதிகமாக, பரீட்சார்த்திகள் பின்வரும் தேவைகளையும் பூரணப்படுத்தியிருக்க வேண்டும்:

(i) க.பொ.த. (சா.த.) பரீட்சையில் ஆங்கிலத்தில் ஆகக் குறைந்தது திறமைச் சித்தியை **(C)**கொண்டிருத்தல்.
(ii)க.பொ.த. (சா.த.)பரீட்சையில் கணிதத்தில் ஆகக் குறைந்தது திறமைச் சித்தியை **(C)** கொண்டிருத்தல்.
(iii)**UCSC** இனால் நடாத்தப்படும் உளச்சார்புப் பரீட்சையில் சித்தி.

- பட்ட நிகழ்ச்சிதிட்டம் : தகவல் முறைமைகள் விஞ்ஞான இளமாணி பட்டம்
- பல்கலைக்கழகம் : கொழும்புப் பல்கலைக்கழக கணனிக் கல்லூரி (UCSC)
- காலம் : 03 வருடங்கள்
- மொழிமூலம் : ஆங்கிலம்

இக்கற்கைநெறிக்கு அனுமதிக்கப்படும் மாணவர்களின் செயற்றிறனினதும் விருப்புரிமையினதும் அடிப்படையில் தகவல் முறைமைகளில் இளமானி கௌரவ பட்டத்திற்கு (Bachelor of Science Honours in Information Systems) இட்டுச் செல்லும் நான்கு வருட கற்கைநெறியினை மேற்கொள்ள தெரிவுசெய்யப்பட்ட எண்ணிக்கையான மாணவர்கள் அனுமதிக்கப்படுவர்.

உளச்சார்ப்புப் பரீட்சைக்கு தோற்றுவதற்கான விண்ணப்பங்களைக் கோரி பத்திரிகை அறிவித்தல் ஒன்றை **UCSC** பிரசுரிக்கும். மற்றும் அவ்வறிவித்தல் **UCSC** யின் இணையதளமான **(www.ucsc.cmb.ac.lk)** இலும் வெளியிடப்படும். பரீட்சார்த்திகள் மேலதிக விபரங்களுக்கு **UCSC** இன் பதிவாளரை தொடர்பு கொள்ளலாம்.

பல்கலைக்கழக அனுமதிப்பத்திர விண்ணப்பத்துடன் பரீட்சார்த்திகள் க.பொ.த. (சா/த.) மூலச்சான்றிதழின் உரியவாறு உறுதி செய்யப்பட்ட பிரதியினை (Certified Copy) சமர்ப்பிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றார்கள். இதைச் சமர்ப்பிக்கத்தவறின் தகவல் முறைமைகளுக்குரிய விண்ணப்பப் படிவம் நிராகரிக்கப்படும்.

2.2.8.28 மொழி பெயர்ப்பு கற்கைகள் (Translation Studies)

(உத்தேச அனுமதி - 85)

அனுமதிக்கான ஆகக் குறைந்த தகைமைகள்

க.பொ.த. (உ/த) பரீட்சையில் ஏதேனும் 3 பாடங்களில் குறைந்தது 'S' தரத்தை பெற்றிருக்க வேண்டும்.

அத்துடன் குறிப்பிட்ட பல்கலைக்கழகங்களால் நடாத்தப்படும் மொழித் திறமை அடிப்படையிலான உளச்சார்புப் பரீட்சையில் சித்தியடைதல் வேண்டும்.

- பட்ட நிகழ்ச்சிதிட்டம் மற்றும் பல்கலைக்கழகம் :
  - பீ.ஏ. மொழி பெயர்ப்பு (ஆங்கிலம் / சிங்களம்) (கௌரவ) களனிப் பல்கலைக்கழகம்
  - பீ.ஏ. மொழி பெயர்ப்பு (ஆங்கிலம் / சிங்களம்) (கௌரவ) சபரகமுவ பல்கலைக்கழகம்
  - பீ.ஏ. மொழி பெயர்ப்பு (ஆங்கிலம் / தமிழ்) (சிறப்பு) யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
- காலம் : 04 வருடங்கள்

மேற்குறித்த பரீட்சைக்கு தோற்றுவதற்கு விண்ணப்பங்கள் கோரி களனி, சபரகமுவ மற்றும் யாழ்ப்பாண பல்கலைக்கழகங்கள் பத்திரிகை அறிவித்தலொன்றைப் பிரசுரிக்கும். பரீட்சார்த்திகள் மேலதிக விபரங்களுக்கு உரிய பல்கலைக்கழகப் பதிவாளரோடு தொடர்பு கொள்ள முடியும்.

2.2.8.29 திரைப்படம், தொலைக்காட்சி கற்கைகள் (Film & Television Studies)

(உத்தேச அனுமதி - 50)

அனுமதிக்கான ஆகக் குறைந்த தகைமைகள்

க.பொ.த. (உ/த) பரீட்சையில் ஏதேனும் 3 பாடங்களில் குறைந்தது 'S' தரத்தை பெற்றிருக்க வேண்டும்.

அத்துடன் இக்கற்கைநெறியை தொடர்வதற்கு களனி பல்கலைக்கழகத்தினால் நடாத்தப்படும் திரைப்படம், தொலைக்காட்சி திறன் தொடர்பான உளச்சார்பு பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

- பட்ட நிகழ்ச்சிதிட்டம் : பீஏ. (சிறப்பு) திரைப்படமும் தொலைக்காட்சி கற்கைகள்
- பல்கலைக்கழகம் : களனிப் பல்கலைக்கழகம்
- காலம் : 04 வருடங்கள்

உளச்சார்பு பரீட்சை நேர்முகத்தேர்வு, செயல்முறை பரீட்சை மற்றும் எழுத்து மூல பரீட்சையினைக் கொண்டிருக்கும்.

மேற்குறித்த பரீட்சைக்கு தோற்றுவதற்கு விண்ணப்பங்கள் கோரி பல்கலைக்கழகம் பத்திரிகை அறிவித்தலொன்றைப் பிரசுரிக்கும். பரீட்சார்த்திகள் மேலதிக விபரங்களுக்கு உரிய பல்கலைக்கழகப் பதிவாளரோடு தொடர்பு கொள்ளமுடியும்.

2.2.8.30 செயற்திட்ட முகாமைத்துவம் (Project Management)

(உத்தேச அனுமதி - 75)

அனுமதிக்கான ஆகக் குறைந்த தகைமைகள்

க.பொ.த. (உ/த) பரீட்சையில் ஏதேனும் 3 பாடங்களில் சித்தியடைந்து அனுமதிக்குத் தேவையான ஆகக் குறைந்த தேவைகளைத் திருப்தி செய்தல் வேண்டும்.

- பட்ட நிகழ்ச்சிதிட்டம் : பீ.பீ.எம். செயற்திட்ட முகாமைத்துவம் (பொது)
- வளாகம் : யாழ் பல்கலைக்கழக வவுனியா வளாகம்
- காலம் : 03 வருடங்கள்
- மொழிமூலம் : ஆங்கிலம்

2.2.8.31 தகவலும் தொடர்பாடல் தொழில்நுட்பமும் [(Information and Communication Technology (ICT)]

(உத்தேச அனுமதி - 175)

அனுமதிக்கான ஆகக் குறைந்த தகைமைகள்

க.பொ.த. (உ/த) பரீட்சையில் ஆகக் குறைந்தது 'C' தரத்தை கீழ்வரும் ஒரு பாடத்திலாவது பெற்றிருக்க வேண்டும்.

1. உயர் கணிதம்
2. கணிதம் / இணைந்த கணிதம்
3. பௌதிகவியல்
4. இரசாயனவியல்
5. கணக்கியல்
6. வியாபாரப் புள்ளிவிபரவியல்
7. பொருளியல்
8. வியாபாரக் கற்கைகள்
9. உயிரியல்
10. புவியியல்
11. அளவையியலும் விஞ்ஞான முறையும்
12. சமஸ்கிருதம்
13. சங்கீதம் (கீழைத்தேய / கர்நாடக / மேலைத்தேய)
14. குடிசார் தொழில்நுட்பம்
15. பொறிமுறை தொழில்நுட்பம்
16. மின், இலத்திரனியல் தகவல் தொழில்நுட்பம்
17. தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பம்

மேலதிகமாக, பரீட்சார்த்திகள் பின்வரும் தேவைகளையும் பூரணப்படுத்தியிருக்க வேண்டும்:

(i) க.பொ.த. (சா.த.) பரீட்சையில் ஆங்கிலத்தில் ஆகக் குறைந்தது திறமைச் சித்தியை **(C)**கொண்டிருத்தல்.

(ii) க.பொ.த. (சா.த.) பரீட்சையில் கணிதத்தில் ஆகக் குறைந்தது திறமைச் சித்தியை **(C)** கொண்டிருத்தல்.

(iii) யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் வவுனியா வளாகத்தினாலும், இலங்கை ரஜரட்டை பல்கலைக்கழகத்தினாலும் இணைந்து நடாத்தப்படுகின்ற உளச்சார்புப் பரீட்சையில் சித்தியடைந்திருத்தல்.

பட்ட நிகழ்ச்சிதிட்டகள்:

- தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பம் இளமாணிப் பட்டம்
  காலம் : 3 வருடங்கள்

அவர்களது செயற்றிறனினதும், விருப்புரிமையினதும் அடிப்படையில், பின்வரும் பட்டத்திற்கு இட்டுச் செல்லும் மேலதிக ஒரு வருட(நான்கு) கற்கையை தெரிவு செய்யப்பட்ட எண்ணிக்கையான மாணவர்கள் தொடர முடியும்.

- தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப விஞ்ஞானமாணிப் பட்டம்

- பல்கலைக்கழகங்கள் : இலங்கை ரஜரட்ட பல்கலைக்கழகம்
  யாழ் பல்கலைக்கழக வவுனியா வளாகம்

- காலம் : 4 வருடங்கள்

கற்கை நெறிக்கான போதனை கட்டாயமாக ஆங்கிலத்தில் நடாத்தப்படும்.

பல்கலைக்கழக அனுமதிக்கான விண்ணப்பத்துடன் பரீட்சார்த்திகள் க.பொ.த. (சா/த.) மூலச்சான்றிதழின் உரியவாறு உறுதி செய்யப்பட்ட பிரதியினை (Certified Copy) சமர்ப்பிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றார்கள். இதைச் சமர்ப்பிக்கத்தவறின் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பத்திற்குரிய விண்ணப்பப் படிவம் நிராகரிக்கப்படும்.

உளச்சார்புப் பரீட்சை

உளச்சார்புப் பரீட்சைக்கு தோற்றுவதற்கான விண்ணப்பங்களைக் கோரி பத்திரிகை அறிவித்தல் ஒன்றை வவுனியா வளாகம் மற்றும் இலங்கை ரஜரட்டை பல்கலைக்கழகம் பிரசுரிக்கும். பரீட்சார்த்திகள் மேலதிக விபரங்களுக்கு வவுனியா வளாகத் தலைவருடன் அல்லது இலங்கை ரஜரட்டை பல்கலைக்கழகப் பதிவாளருடன் தொடர்பு கொள்ளலாம்.

2.2.8.32 மென்பொருள் பொறியியல் (Software Engineering)

(உத்தேச அனுமதி - 50)

அனுமதிக்கான ஆகக் குறைந்த தகைமைகள்

மேற்படி கற்கை நெறிக்கான அனுமதிக்கு தகுதி பெறுவதற்கு விண்ணப்பதாரி ஆகக் குறைந்தது இணைந்த கணிதம், பௌதீகவியல் மற்றும் கீழேயுள்ள ஏதாவது ஒரு பாடத்தில் சாதாரண சித்தியினைப் **'S'** பெற்றிருத்தல் வேண்டும்.

- இரசாயனவியல்
- உயர் கணிதம்
- தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பவியல்

- பட்ட நிகழ்ச்சிதிட்டம் : பிஎஸ்சி. சிறப்பு மென்பொருள் பொறியியல் பட்டப்படிப்பு
- பல்கலைக்கழகம் : களனிப் பல்கலைக்கழகம்
- காலம் : 04 வருடங்கள்
- மொழிமூலம் : ஆங்கிலம்

2.2.8.33 உணவு வணிக முகாமைத்துவம் (Food Business Management)

(உத்தேச அனுமதி - 80)

அனுமதிக்கான ஆகக் குறைந்த தகைமைகள்

க.பொ.த. (உ/த) பரீட்சையில் குறைந்தது **'S'** தரத்தை பின்வரும் பாடங்களில் ஏதேனும் மூன்று பாடங்களில் பெற்றிருத்தல் வேண்டும்.

- இரசாயனவியல்
- உயிரியல்
- பௌதிகவியல்
- இணைந்த கணிதம்
- விவசாய விஞ்ஞானம்
- வணிகக் கல்வி
- பொருளியல்
- கணக்கீடு

அத்துடன் க.பொ.த. (சா.த.) பரீட்சையில் குறைந்தது 'C' தரத்தை ஆங்கிலம், விஞ்ஞானம் மற்றும் கணித பாடங்களில் பெற்றிருத்தல் வேண்டும்.

- பட்ட நிகழ்ச்சிதிட்டம் : பீ.எஸ்.சி. உணவு வணிக முகாமைத்துவம் (சிறப்பு)
- பல்கலைக்கழகம் : இலங்கை சபரகமுவப் பல்கலைக்கழகம்
- காலம் : 04 வருடங்கள்

பல்கலைக்கழக அனுமதிக்கான விண்ணப்பத்துடன் பரீட்சார்த்திகள் க.பொ.த. (சா/த.) மூலச்சான்றிதழின் உரியவாறு உறுதி செய்யப்பட்ட பிரதியினை (Certified Copy) சமர்ப்பிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றார்கள். இதைச் சமர்ப்பிக்கத்தவறின் உணவு வணிக முகாமைத்துவத்திற்குரிய விண்ணப்பப் படிவம் நிராகரிக்கப்படும்.

குறிப்பு:

2021/2022 ஆம் கல்வியாண்டிலிருந்து உணவு வணிக முகாமைத்துவம் கற்கை நெறிக்கு தகுதிபெறுவதற்கு விண்ணப்பதாரி கீழே தரப்பட்டுள்ள இரு வகைகளில் ஏதேனும் ஓரு வகையில் குறைந்தபட்ச தகைமையினைப் பெற்று க.பொ.த. (உ.த.)பரீட்சையில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்;

வகை (அ)
க.பொ.த. (உ.த.)பரீட்சையில் உயிரியல் விஞ்ஞான அல்லது பௌதீக விஞ்ஞான பிரிவில் தோற்றி இரசாயனவியல், உயிரியல், பௌதிகவியல், இணைந்த கணிதம் அல்லது விவசாயம் ஆகியவற்றில் ஏதேனும் 3 பாடங்களில் ஆகக் குறைந்தது S சித்தி.

வகை (ஆ)
க.பொ.த. (உ.த.)பரீட்சையில் வணிகப் பிரிவில் தோற்றி வணிகக் கல்வி, பொருளியல் மற்றும் கணக்கீடு ஆகியவற்றிற்கு குறைந்தது S சித்தி பெற்றிருத்தல் வேண்டும்;

2021/2022 ஆம் கல்வியாண்டிலிருந்து இக் கற்கை நெறிக்கு தெரிவாகும் 50% மாணவர்கள் வகை (அ) இலிருந்தும் வகை (ஆ)இலிருந்து ஏனைய 50% மாணவர்களும் தெரிவு செய்யப்படுவர்.

மேலே குறிப்பிட்ட இரு வகைகளில் ஏதேனும் ஓர் வகையின் தேவைப்பாட்டினை நிறைவுசெய்வதற்கு மேலதிகமாக பரீட்சார்த்திகள் க.பொ.த. (சா/த.) பரீட்சையில் குறைந்தது ஆங்கிலத்தில் திறமைச் சித்தியும் (C) கணிதத்தில் திறமைச் சித்தியையும் (C) விஞ்ஞானத்தில் திறமைச் சித்தியையும் (C) பெற்றிருத்தல் வேண்டும்.

2.2.8.34 கடல்சார் மற்றும் நன்னீரியல் விஞ்ஞானம் (Marine and Fresh Water Sciences)

(உத்தேச அனுமதி - 50)

அனுமதிக்கான ஆகக் குறைந்த தகைமைகள்

க.பொ.த. (உ/த) பரீட்சை பாடங்களில் குறைந்தது **'S'** தரங்களை பின்வரும் பாட இணைப்புகளில் ஒன்றில் பெற்றிருத்தல் வேண்டும்.

(i) இரசாயனவியல்; பௌதிகவியல்; மற்றும் உயிரியல்
அல்லது

(ii) இரசாயனவியல்; பௌதிகவியல் மற்றும் இணைந்த கணிதம்;

- பட்ட நிகழ்ச்சிதிட்டம் : பீஎஸ்சி. கடல்சார் மற்றும் நன்னீரியல் விஞ்ஞான (கௌரவ)பட்டம்
- பல்கலைக்கழகம் : உறுகுணைப் பல்கலைக்கழகம்
- காலம் : 4 வருடங்கள்
- சிறப்புப் பயிற்சித் துறைகள் : சமுத்திரவியல் மற்றும் கடற்சரிதவியல் (Oceanography & Marine Geology)
  நீரியல் விஞ்ஞானம் மற்றும் கடற்சரிதவியல் (Water Science & Technology)
- மொழிமூலம் : ஆங்கிலம்

2.2.8.35 வியாபார விஞ்ஞானம் (Business Science)

(உத்தேச அனுமதி - 100)

அனுமதிக்கான ஆகக் குறைந்த தகைமைகள்

க.பொ.த. (உ/த) பரீட்சையில் பௌதீக விஞ்ஞானப் பிரிவில் அல்லது வர்த்தகப் பிரிவில் குறைந்தது **'S'** தரங்களை ஏதாவது மூன்று பாடங்களில் பெற்றிருத்தல் வேண்டும்.
மேலதிகமாக, க.பொ.த. (சா/த.) பரீட்சையில் கணிதத்தில் **'C'** தரத்தைப் பரீட்சார்த்திகள் பெற்றிருக்க வேண்டும்.

- பட்ட நிகழ்ச்சிதிட்டம் : வியாபார விஞ்ஞானம் இளமானி (கௌரவ) பட்டம்
- பல்கலைக்கழகம் : மொறட்டுவைப் பல்கலைக்கழகம்
- காலம் : 4 வருடங்கள்
- சிறப்புப் பயிற்சித் துறைகள் : வியாபார பகுப்பாய்வு (Business Analytics)
  வியாபார செயற்பாட்டு முகாமைத்துவம் (Business Process Management)
  நிதி பகுப்பாய்வு (Financial Analytics)
- மொழிமூலம் : ஆங்கிலம்

பல்கலைக்கழக அனுமதிக்கான விண்ணப்பத்துடன் பரீட்சாத்திகள் க.பொ.த (சா/த.) மூலச்சான்றிதழின் உரியவாறு உறுதி செய்யப்பட்ட பிரதியினை (Certified Copy) சமர்ப்பிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றார்கள். இதைச் சமர்ப்பிக்கத்தவரின் வியாபார விஞ்ஞானத்திற்குரிய விண்ணப்பபடிவம் நிராகரிக்கப்படும். மேலதிக தகவல்களுக்கு business.mrt.ac.lk எனும் முகவரியை பார்வையிடுக.

2.2.8.36 நிதி பொறியியல் (Financial Engineering)

(உத்தேச அனுமதி - 50)

அனுமதிக்கான ஆகக் குறைந்த தகைமைகள்

க.பொ.த. (உ/த) பரீட்சையில் பொருளியல், கணக்கீடு மற்றும் கீழ் காணும் பாடங்களில் ஒன்றில் குறைந்தது "S" தரங்களைப் பெற்றிருத்தல் வேண்டும்.

- வணிகக் கல்வி
- தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பம்
- வணிக புள்ளிவிபரவியல்
- விவசாய விஞ்ஞானம்
- புவியியல்
- இணைந்த கணிதம்
- வரலாறு
- அரசியல் விஞ்ஞானம்
- பௌதீகவியல்
- அளவியலும் விஞ்ஞான முறையும்

அத்துடன் இக்கற்கைநெறியை தொடர்வதற்கு களனிப் பல்கலைக்கழகத்தினால் நடாத்தப்படும் நிதி பொறியியல் தொடர்பான உளச்சார்பு பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

- பட்ட நிகழ்ச்சிதிட்டம் : நிதி பொறியியலில் வணிகமாணி (கௌரவ) பட்டம்
- பல்கலைக்கழகம் : களனிப் பல்கலைக்கழகம்
- காலம் : 4 வருடங்கள்
- மொழிமூலம் : ஆங்கிலம்

உளச்சார்புப் பரீட்சைக்கு தோற்றுவதற்கான விண்ணப்பங்களைக் கோரி பத்திரிகை அறிவித்தல் ஒன்றை களனிப் பல்கலைக்கழகம் பிரசுரிக்கும். பரீட்சார்த்திகள் மேலதிக விபரங்களுக்கு களனிப் பல்கலைக்கழகத்தின் பதிவாளருடன் தொடர்புகொள்ளலாம்.

2.2.8.37 புவியியல் தகவல் விஞ்ஞானம் (Geographical Information Science)

புதிய கற்கைநெறி

(உத்தேச அனுமதி - 50)

அனுமதிக்கான ஆகக் குறைந்த தகைமைகள்

க.பொ.த. (உ.த.) பரீட்சையில் உயிரியல் விஞ்ஞான பிரிவில், பௌதிக விஞ்ஞானப் பிரிவில் அல்லது இக் கைநூலின் பிரிவு 2.2.1.1 இல் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகளுக்குட்பட்டு தெரிவுசெய்யப்படும் கலைப்பிரிவின் எந்தவொரு அனுமதிக்கப்பட்ட மூன்று பாடங்களிலும் ஆகக் குறைந்தது 'S' தரச்சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.

- பட்ட நிகழ்ச்சிதிட்டம் : புவியியல் தகவல் விஞ்ஞானத்திற்கான விஞ்ஞானமாணி கௌரவப்பட்டம்
- பல்கலைக்கழகம் : பேராதனைப் பல்கலைக்கழகம்
- காலம் : 4 வருடங்கள்
- மொழிமூலம் : ஆங்கிலம்

பகுதி 03

'யுனி கோட்' (Uni-Code) முறைமைக்கான அறிமுகம், விருப்பொழுங்கினை குறிப்பிடுவதற்கு 'யுனி கோட்' இனை பயன்படுத்துவது தொடர்பான அறிவுறுத்தல்கள்

3.1 யுனி கோட் (Uni-Code) முறைமைக்கான அறிமுகம், விருப்பொழுங்கினை குறிப்பிடுவதற்கு யுனி கோட் இனை பயன்படுத்துவது தொடர்பான அறிவுறுத்தல்கள்

3.2 பல்கலைக்கழகங்களின் கற்கைநெறிகளுக்கு மாணவர்களை ஒதுக்குவதற்கான பிரமாணங்கள்.

3.3 கற்கைநெறி மற்றும் பல்கலைக்கழக விருப்பொழுங்கினை மாற்றுதல்

பகுதி 03

‘யுனி கோட்’ (Uni-Code) முறைமைக்கான அறிமுகம், விருப்பொழுங்கினை குறிப்பிடுவதற்கு ‘யுனி கோட்’ இனை பயன்படுத்துவது தொடர்பான அறிவுறுத்தல்கள்

இப் பகுதியானது மாணவர்கள் விரும்புகின்ற பல்கலைக்கழகங்களின் கற்கைநெறிகளுக்கான விருப்பொழுங்கை யுனிகோட் மூலம் குறிப்பிடுகின்ற முறை மற்றும் யுனிகோட்டை பயன்படுத்தி விருப்பொழுங்கை மாற்றுதல் தொடர்பான வழிமுறை போன்றவற்றின் தெளிவான அறிவுறுத்தல்களை விபரிக்கின்றது. ஆதலால் நீங்கள் இணையதளம் மூலம் விருப்பொழுங்கை குறிப்பிட முன்னர் இப்பகுதியை கவனமாக வாசித்து விளங்கிக்கொள்ளல் வேண்டும்.

3.1 யுனி கோட் (Uni-Code) முறைமைக்கான அறிமுகம், விருப்பொழுங்கினை குறிப்பிடுவதற்கு யுனி கோட் இனை பயன்படுத்துவது தொடர்பான அறிவுறுத்தல்கள்

1. 2018/2019 ஆம் கல்வியாண்டில் 102 பட்ட கற்கைநெறிகள் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் கீழ் வருகின்ற 14 தேசிய பல்கலைக்கழகங்களிலும், 3 வளாகங்களிலும் 5 உயர் கல்வி நிறுவனங்களினாலும் வழங்கப்படும்.

2. குறிப்பிட்ட பல்கலைக்கழகத்தில் / வளாகத்தில் / நிறுவனத்தில் உள்ள ஒவ்வொரு கற்கைநெறிக்கும் ஒரு தனியான குறியீடு வழங்கப்படும்.

3. **இந்தக் குறியீடுகள் “யுனி கோட்” (“Uni-Code”) என அழைக்கப்படும்.**

4. “யுனி கோட்” (Uni-Code) களின் குறியீடுகளின் மொத்த எண்ணிக்கை 219 ஆகும்.

5. யுனி கோட்களின் பட்டியல் இக்கையேட்டின் 127-131 ம் பக்கங்களில் தரப்பட்டுள்ளது.

6. மாணவர்கள் தாம் தகுதிபெறுகின்ற எவ் எண்ணிக்கையான யுனி கோட்களுக்கும் விண்ணப்பிக்க முடியும். (எவ் எண்ணிக்கையான பல்கலைக்கழகம் மற்றும் கற்கைநெறிகளுக்கும்)

7. அவர்கள் யுனி கோட்(Uni-Code) களை **உச்ச விருப்பொழுங்கு யுனி கோட்**(Uni-Code) இலிருந்து **குறைந்த விருப்பொழுங்கு யுனி கோட்** (Uni-Code) வரை ஒழுங்குபடுத்தல் வேண்டும்.

8. ஒழுங்குபடுத்தலானது யுனி கோட்டிற்கான ஆர்வம் குறைந்து செல்லும் வரிசையில் அமைதல் வேண்டும்.

9. **எவ்வாறாயினும் மாணவர்கள் தங்களது விண்ணப்பங்களை நிரப்பும் போது தாம் விண்ணப்பிப்பதற்கு தகுதியான ஆகக் கூடிய எண்ணிக்கையான யுனி கோட்களுக்கு விண்ணப்பிக்குமாறு அறிவுறுத்தப்படுகிறார்கள்.**

10. இப் புத்தகத்தில் தரப்பட்டுள்ள முன்னைய வருட வெட்டுப்புள்ளி அமைப்பில் பரீட்சாத்திகள் தங்கியிருக்க வேண்டாம். ஏனெனில் குறித்த (“Uni-Code”) ன் கிராக்கியின் தன்மையினை விளக்கவே அத் தகவல் வழங்கப்பட்டுள்ளது.

11. உயர்ந்த பட்ச எண்ணிக்கையான “Uni-Code” ஐ குறிப்பிடுவது முக்கியமானது. ஏனெனில் ஒரு விண்ணப்பதாரி கோராத பட்சத்தில், குறித்த பல்கலைக்கழகத்தின் கற்கைநெறியிற்கு போதுமான z-புள்ளி இருப்பினும் அவ் “Uni-Code” (பல்கலைக்கழகத்தின் கற்கைநெறி) இனை கோராத விண்ணப்பதாரியிற்கு வழங்கப்பட மாட்டாது.

உதாரணமாக, ஒரு பரீட்சாத்தி பெற்றுக்கொண்ட z-புள்ளியினடிப்படையில் குறித்த ஓர் மருத்துவ பீடத்திற்கு தகுதியான போதிலும் விருப்பொழுங்கில் குறித்த அவ் "Uni-Code" ஐ குறிப்பிடாது பல் அறுவை சிகிச்சையினை அடுத்து கோரி இருப்பின், அவ் பரீட்சாத்தி குறித்த ஓர் மருத்துவ பீடத் திற்கு தகுதியான போதிலும் அவ் மருத்துவ பீடத்திற்கு தெரிவு செய்யப்படாது பல் அறுவைச் சிகிச்சையிற்கே தெரிவு செய்யப்படுவார்.

12. மாணவர்கள் விண்ணப்பிக்காத பட்சத்தில் குறித்த "Uni-Code" அவ் மாணவர்களுக்கு வழங்கப்பட மாட்டாது.

13. மாணவர்கள் விருப்பொழுங்கில் குறித்த "Uni-Code" ஐ ஒரு தடவைக்கு மேல் பதியக்கூடாது.

14. குறித்த பரீட்சாத்தியினது மிகவும் விருப்பத்திற்குரிய "Uni-Code" ற்கே ப.மா.ஆ அவர்களை தேர்வு செய்யும். எனினும் அவ் "Uni-Code" ற்கு வெற்றிடம் நிலவாதவிடத்து பரீட்சாத்தியின் அடுத்த விருப்பத்தெரிவு கருத்தில் கொள்ளப்படும்.

15. மாணவர்கள் சகல 219 "Uni-Codes" களுக்கும் விண்ணப்பிப்பதற்கு தகுதியற்றவர்களாவர். க.பொ.த. (உ/த) பரீட்சையில் தோற்றிய பாடங்களின் அடிப்படையில் ஒரு மாணவருக்கான தெரிவு அமையும்.

உ+ம் : உயிரியல் விஞ்ஞானப் பிரிவில் தோற்றிய மாணவர்கள் பொறியியலுக்கு விண்ணப்பிக்க முடியாது. ஆகவே ஒரு மாணவருக்கு கிடைக்கக்கூடிய தெரிவுகளின் எண்ணிக்கை 219ஐ விட குறைவானதேயாகும். ஆயினும் ஒவ்வொரு விண்ணப்பதாரியும் விண்ணப்பத்தில் ஆகக்கூடுதலாக 125 தெரிவுகள் வரை குறிப்பிடலாம்.

விண்ணப்பங்களை அனுப்பும் போது மாணவர்கள் உயர்ந்த பட்ச எண்ணிக்கையான "UniCode" ஐ குறிப்பிடுமாறு அறிவுறுத்தப்படுகின்றீர்.

3.2 பல்கலைக்கழகங்களின் கற்கைநெறிகளுக்கு மாணவர்களை ஒதுக்குவதற்கான பிரமாணங்கள்.

குறிப்பிட்ட பல்கலைக்கழகத்தில் கற்கைநெறியொன்றை பயில்வதற்கு தகுதியானோரின் தெரிவு 2018/2019 ஆம் கல்வியாண்டில் பின்வரும் பிரமாணங்களின் அடிப்படையில் மேற்கொள்ளப்படும். (இதற்கு மேலதிகமாக கற்கைநெறியின் ஏனைய தகைமைத் தேவைப்பாடுகளைப் பூர்த்தி செய்தல் வேண்டும்.)

- மாணவர்கள் பெற்றுக்கொண்ட 'Z' புள்ளி
- மாணவர்களால் குறிப்பிடப்பட்ட கற்கைநெறி மற்றும் பல்கலைக்கழக விருப்பொழுங்கு ("Uni-Codes" ஒழுங்கு)

ஒரு விண்ணப்பதாரி ஒரு பல்கலைக்கழகத்தின் ஒன்றுக்கு மேற்பட்ட கற்கைநெறிகளுக்கு விண்ணப்பித்திருப்பின் தனது விருப்பொழுங்கில் முதலில் தெரிவுசெய்துள்ள கற்கைநெறிக்கு முதலில் கருத்திற்கொள்ளப்படுவர். அக்கற்கை நெறிக்கும் பல்கலைக்கழகத்திற்கும் விண்ணப்பதாரி தெரிவுசெய்யப்படவில்லையாயின் அவரது விருப்பொழுங்களில் இரண்டாவதாக குறிப்பிட்டுள்ள கற்கைநெறிக்கும் பல்கலைக்கழகத்திற்கும் கருத்திற்கொள்ளப்படுவார். இச்செயல்முறை பின்வரும் உதாரணம் மூலம் விளக்கப்படுத்தப்பட்டுள்ளது.

ஒரு விண்ணப்பதாரி பின்வரும் விருப்பொழுங்கில் 10 கற்கைநெறிகளையும் பல்கலைக்கழகங்களையும் தனது விருப்பொழுங்கில் குறிப்பிடப்பட்டுள்ளார் என கருதவும்.

உ+ம் :- “Uni-Code”

1.	0	1	6	C	முகாமைத்துவம் - ஸ்ரீ ஜயவர்த்தனபுரப் பல்கலைக்கழகம்
2.	0	2	8	C	முகாமைத்துவம் (பொது) சிறப்பு -ஸ்ரீ ஜயவர்த்தனபுரப் பல்கலைக்கழகம்
3.	0	1	6	A	முகாமைத்துவம் - கொழும்புப் பல்கலைக்கழகம்
4.	0	1	8	C	வணிகவியல் - ஸ்ரீ ஜயவர்த்தனபுரப் பல்கலைக்கழகம்
5.	0	1	7	C	சொத்து முகாமைத்துவமும் மதிப்பீடும்-ஸ்ரீ ஜயவர்த்தனபுரப் பல்கலைக்கழம்
6.	0	1	6	D	முகாமைத்துவம் - களனிப் பல்கலைக்கழகம்
7.	0	7	7	C	வியாபாரத் தகவல் முறைமைகள் (சிறப்பு) ஸ்ரீ ஜயவர்த்தனபுர பல்கலைக்கழகம்
8.	0	2	5	A	சட்டம் - கொழும்புப் பல்கலைக்கழகம்
9.	0	9	1	G	தகவல் தொழில்நுட்பமும் முகாமைத்துவமும் - மொறட்டுவைப் பல்கலைக்கழகம்
10.	0	9	6	T	தகவல் முறைமைகள் - கொழும்புப் பல்கலைக்கழக கணனிக் கல்லூரி

இந்த விண்ணப்பதாரி முதலில் ஸ்ரீ ஜயவர்த்தனபுரப் பல்கலைக்கழக்கழகத்தில் முகாமைத்துவ கற்கைநெறிக்கு கருத்திற்கொள்ளப்படுவார். பின் ஸ்ரீ ஜயவர்த்தனபுரப் பல்கலைக்கழகத்தில் முகாமைத்துவம் (பொது) சிறப்பு கற்கைநெறிக்கு கருத்திற்கொள்ளப்படுவார். அடுத்து கொழும்புப் பல்கலைக்கழகத்தில் முகாமைத்துவ கற்கைநெறிக்கு கருத்திற்கொள்ளப்படுவார். இவ்வாறே மற்றையவற்றிற்கும் விருப்புரிமை ஒழுங்கின்படி அவர் தெரிவாகும் வரை அல்லது இப்பத்து கற்கை நெறிகளில் எதற்கும் தகுதியற்றவர் எனக் கண்டுகொள்ளும் வரை கருத்திற் கொள்ளப்படுவார். அவருடைய ‘Z’ புள்ளிகள் ஸ்ரீ ஜயவர்த்தனபுரப் பல்கலைக்கழக்கழகத்தில் முகாமைத்துவ கற்கைநெறி, மற்றும் ஸ்ரீ ஜயவர்த்தனபுரப் பல்கலைக்கழகத்தில் முகாமைத்துவம் (பொது) சிறப்பு கற்கைநெறி ஆகிய இரண்டிற்கும் போதுமானதாக இல்லாமலும் கொழும்புப் பல்கலைக்கழகத்தில் முகாமைத்துவ கற்கைநெறிக்கு போதுமானதாகவும் இருக்கின்றது எனக் கருதினால் அவர் கொழும்புப் பல்கலைக்கழகத்தில் முகாமைத்துவ கற்கைநெறிக்கு தெரிவு செய்யப்படுவார். அத்துடன் நான்கு முதல் பத்து வரையான தெரிவுகளுக்கு அவர் கருத்தில் கொள்ளப்படமாட்டார்.

ஒரு குறிப்பிட்ட பல்கலைக்கழகத்தில் ஒரு குறிப்பிட்ட கற்கைநெறிக்கு ஒரு மாணவர் தனது விருப்பொழுங்கில் குறிப்பிடாதிருப்பின் அத்தெரிவுக்கு தேவையான வெட்டுப்புள்ளிகளைக் கொண்டிருந்தபோதும் கூட அவர் அப்பல்கலைக்கழகத்தில் அக்கற்கைநெறிக்கு கருத்திற்கெடுக்கப்படமாட்டார். அதற்குப் பதிலாக அவர் அடுத்த தெரிவாக குறிப்பிட்டுள்ள கற்கைநெறிக்கும் பல்கலைக்கழகத்திற்கும் கருத்திற்கொள்ளப்படுவார்.

கற்கைநெறிகள் மற்றும் பல்கலைக்கழகங்கள் ஆகிய இரண்டினதும் தெரிவு ஒன்றாகவே மேற்கொள்ளப்படும்.

மாணவர்கள் விருப்பொழுங்கில் தெரிவுசெய்த கற்கைநெறிகளுக்கம் பல்கலைக்கழகங்களுக்கும் மட்டுமே தெரிவின் போது கருத்திற்கொள்ளப்படுவர்.

விருப்பொழுங்கில் குறிப்பிடப்படாத கற்கை நெறிக்கும் பல்கலைக்கழகத்திற்கும் விண்ணப்பதாரி கருத்திற்கெடுக்கப்படமாட்டார்.

முக்கியம்:
கல்வியாண்டு 2017/2018 இலிருந்து தெரிவுசெய்யப்பட்ட ஓர் கற்கைநெறிக்கு (Uni-Code) மாணவர் ஒருவர் பதிவு செய்யாது விடின், எதிர்கால வெற்றிட நிரப்பலின் கீழ் அதே கற்கைநெறியை வேறு பல்கலைக்கழகங்களில் தொடர்வதற்கு மாணவரது விண்ணப்படிவத்தில் அவற்றிற்கு உயர் தெரிவு வழங்கப்பட்டிருப்பினும் அனுமதிக்கு கருத்தில் கொள்ளப்பட மாட்டார். பதிலாக, அவர்களது விண்ணப்பத்தில் அடுத்த விருப்பொழுங்கிலுள்ள கற்கைநெறியிற்கு அவர்கள் கருத்தில் கொள்ளப்படுவர்.

பின்வரும் உதாரணம் மூலம் நீர் மேலும் இதனை விளங்கிக் கொள்வீர்.

உ+ம் 1:
பின்வருமாறு மாணவர் ஒருவர் பல்கலைக்கழக்க விண்ணப்பபடிவத்தில் கற்கைநெறிக்கான வருப்பொழுங்கை குறிப்பிட்டுள்ளார் என கருதவும்.

	"Uni-Code"	
1.	0 8 3 D	பேச்சுத் மற்றும் செவிமடுத்தல் விஞ்ஞானம்-களனிப் பல்கலைக்கழகம்
2.	0 0 4 L	விவசாயம் -சபரகமுவப் பல்கலைக்கழகம்
3.	0 0 5 M	உணவு விஞ்ஞானமும் போசாக்கும்- வயம்ப பல்கலைக்கழகம்
4.	0 0 4 M	விவசாயம் - வயம்ப பல்கலைக்கழகம்
5.	0 0 6 A	உயிரியல் விஞ்ஞானம் - கொழும்புப் பல்கலைக்கழம்
6.	0 0 6 C	உயிரியல் விஞ்ஞானம் - ஸ்ரீ ஜயவர்த்தனபுர பல்கலைக்கழகம்
7.	0 0 6 D	உயிரியல் விஞ்ஞானம் களனிப் பல்கலைக்கழகம்
8.	0 0 6 F	உயிரியல் விஞ்ஞானம்- உறுகுனைப் பல்கலைக்கழகம்
9.	0 0 7 L	பிரயோக விஞ்ஞானம் (உயிரியல்) - சபரகமுவப் பல்கலைக்கழகம்
10.	0 0 7 K	பிரயோக விஞ்ஞானம் (உயிரியல்) - ரஜரட்ட பல்கலைக்கழகம்

இந்த விண்ணப்பதாரி தனது பல்கலைக்கழக்க அனுமதிக்கான விண்ணப்பப் படிவத்தில் 8வது விருப்பொழுங்கான உறுகுனை பல்கலைக்கழக்கழகத்தில் உயிரியல் விஞ்ஞான கற்கைநெறிக்கு சாதாரன அனுமதியின் கீழ் தெரிகியுள்ளார் என கொள்க. எனினும் தெரிவுசெய்யப்பட்ட மாணவர் உறுகுனைப் பல்கலைக்கழக்கழகத்தில் உயிரியல் விஞ்ஞான கற்கைநெறிக்கு பதிவு செய்யாது விடின் அவர் வெற்றிட நிரப்பலின் கீழ் அவரது 7வது, 6வது, மற்றும் 5வது விருப்பொழுங்குகளான முறையே களனிப் பல்கலைக்கழகம், ஸ்ரீ ஜயவர்த்தனபுர பல்கலைக்கழகம் மற்றும் கொழும்புப் பல்கலைக்கழகங்களில் உயிரியல் விஞ்ஞான கற்கைநெறியை தொடர கருத்தில் கொள்ளப்பட மாட்டார். மாறாக, விண்ணப்பதாரி 4வது விருப்பொழுங்கிலிருந்து மேல் நோக்கி 1வது விருப்பொழுங்கு வரை கருத்தில் கொள்ளப்படுவார்.

உ+ம் 2:

மேல் குறிப்பிட்ட உதாரணத்தில் விண்ணப்பதாரி விண்ணப்பத்தில் தனது 8வது விருப்பொழுங்கான உறுகுனைப் பல்கலைக்கழக உயிரியல் விஞ்ஞான கற்கைநெறிக்கு பதிவு செய்துள்ளார் என கொள்க. எனினும் 7வது விருப்பொழுங்கான களனிப் பல்கலைக்கழக உயிரியல் விஞ்ஞானத்திற்கு வெற்றிட நிரப்பலின் கீழ் தெரிவாகி பதிவு செய்யாது விட்டால் விண்ணப்பதாரி ஏற்கனவே உறுகுனைப் பல்கலைக்கழக உயிரியல் விஞ்ஞானத்திற்கு பதிவு செய்துள்ள போதிலும் விண்ணப்பதாரி அவரது 6வது மற்றும் 5வது விருப்பொழுங்கான ஸ்ரீ ஜயவர்த்தனபுர மற்றும் கொழும்புப் பல்கலைக்கழகத்திற்கு வெற்றிட நிரப்பலின் கீழ் கருத்தில் கொள்ளப்பட மாட்டார். மாறாக, விண்ணப்பதாரி 4வது விருப்பொழுங்கிலிருந்து மேல் நோக்கி 1வது விருப்பொழுங்கு வரை கருத்தில் கொள்ளப்படுவார்.

எனவே மாணவர் ஒருவர் தாம் தெரிவுசெய்யப்பட்ட ஓர் கற்கைநெறிக்கு குறித்த பல்கலைக்கழகத்தில் (Uni-Code) பதிவு செய்யாது விட தீர்மானிப்பதானது, மாணவர் தமது விருப்பொழுங்கில் உயர் தெரிவாக குறிப்பிட்டுள்ள ஏனைய பல்கலைக்கழகங்களிலும் அக் கற்கைநெறியினைத் தொடர்வதற்கு கருத்தில் கொள்ளப்பட விரும்பாமையை குறிக்கும்.

எவ்வாறாயினும், மாணவர் ஒருவர் வெற்றிட நிரப்பலின் கீழ் தற்போது தெரிவு செய்யப்பட்ட பல்கலைக்கழகத்தினை விட அவர்களது விண்ணப்பத்தில் உயர் தெரிவாக குறிப்பிட்ட ஏனைய பல்கலைக்கழகத்திற்கு அதே கற்கைநெறியினை தொடர தெரிவு செய்யப்பட விரும்பின் முதலில் அவர் தற்போது தெரிவு செய்யப்பட்டுள்ள அக் கற்கைநெறிக்கு மற்றும் பல்கலைக்கழகத்திற்கு ப.மா.ஆ வில் பதிவுசெய்தல் வேண்டும். இதற்கு அமைய உதாரணம் 1 இல் குறிப்பிட்ட மாணவர் எதிர்கால வெற்றிட நிரப்பலின் கீழ் உயிரியல் விஞ்ஞானம் கொழும்புப் பல்கலைக்கழகத்திற்கு அவரது விண்ணப்பத்தினை கருத்தில் கொள்ள வேண்டும் என கருதினால் முதலில் உறுகுனைப் பல்கலைக்கழகத்தின் உயிரியல் விஞ்ஞான கற்கைநெறிக்கு பதிவு செய்தல் கட்டாயமானதாகும்.

அவ்வாறு பதிவுசெய்யாது விடின் மாணவர் விண்ணப்பத்தில் உயர் தெரிவாக குறிப்பிட்டுள்ள ஏனைய பல்கலைக்கழகங்களில் உயிரியல் விஞ்ஞானத்திற்கு அதாவது 7வது 6வது மற்றும் 5வது உயர் தெரிவுகளுக்கு அனுமதிக்கு கருத்தில் கொள்ளப்பட மாட்டார்.

3.3 கற்கைநெறி மற்றும் பல்கலைக்கழக விருப்பொழுங்கினை மாற்றுதல்

இக்கைநூலின் பகுதி 05 **(C)** இல் தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கமைய ஒரு விண்ணப்பதாரி விண்ணப்ப முடிவுத் திகதியிலிருந்து ஒரு மாத காலத்திற்குள் தனது "Uni-Codes" களின் விருப்பொழுங்கை **இணையதளத்தினூடாக** மாற்ற அனுமதிக்கப்படுவர்.

விருப்பொழுங்கை மாற்றிய பின் பெறப்பட்ட அச்சுப்பிரதியை உரிய முறையில் ஒப்பமிடப்பட்டு பதிவுத் தபால் மூலம், மேலதிக செயலாளர், பல்கலைக்கழக அனுமதி, பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு, இலக்கம் 20, வோட் பிரதேசம், கொழும்பு - 7 என்ற விலாசத்திற்கு விண்ணப்ப முடிவுத் திகதியிலிருந்து ஒரு மாதத்திற்குள் சமர்ப்பிக்க வேண்டும். **(உங்கள் பல்கலைக்கழக விண்ணப்பப் படிவத்தில் காணப்படும் உங்கள் கையொப்பமும் விருப்பொழுங்கை மாற்றுவதற்காக விண்ணப்பப்படிவத்தில் காணப்படும் உங்கள் கையொப்பமும் ஒரே மாதிரியானதாக இருத்தல் வேண்டும்).**

இதன்போது உமது முன்னைய கற்கைநெறி மற்றும் பல்கலைக்கழக விருப்பொழுங்கு இரத்துச் செய்யப்பட்டு புதிய கற்கைநெறி மற்றும் பல்கலைக்கழக விருப்பொழுங்கு கருத்திற்கொள்ளப்படும்.

கடிதங்கள் (Letters), தொலைநகல் (Fax) அல்லது மின்னஞ்சல் (E-mail) ஊடாக கற்கைநெறி விருப்புரிமை மாற்றம் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் திகதியிலிருந்து ஒரு மாத காலத்திற்குப் பின்னர் கற்கைநெறி விருப்புரிமையின் ஒழுங்கை மாற்றுவதற்கு எந்தவொரு பரீட்சார்த்தியும் அனுமதிக்கப்படமாட்டார்.

பகுதி 04

விண்ணப்ப நடைமுறை மற்றும் ஏனைய முக்கிய அறிவுறுத்தல்கள்

4.1	விண்ணப்ப நடைமுறை.
4.2	வெற்றிடங்களை நிரப்பும் முறை/ வெற்றிடங்களை நிரப்புகையில் உயர் தெரிவு வழங்கப்பட்ட சில பல்கலைக்கழகங்களின் கற்கைநெறிகளுக்கு தெரிவாகாமல் அல்லது ஏனைய எவ் உயர் விருப்புரிமையிற்கும் உயர்த்தப்படாது தற்போது தெரிவு செய்யப்பட்டுள்ள கற்கைநெறி மற்றும் பல்கலைக்கழகத்தில் தொடர்ந்தும் இருக்க மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள்.
4.3	ஒரு பல்கலைக்கழகத்திலிருந்து இன்னொரு பல்கலைக்கழகத்திற்கு அதே பட்டப்பயில் நெறிக்கு மாணவர்களின் இடமாற்றம்.
4.4	மேன்முறையீடு செய்யும் முறை.
4.5	புகார் தெரிவிக்கும் முறை / குறித்த மாணவர் ஒருவர் கற்கை நெறியொன்றுக்கு தெரிவு செய்தமைக்கு ஆட்சேபனை தெரிவித்தல்.
4.6	அனுமதியைப் பின்போடல்.
4.7	கடிதத் தொடர்புக்கான முகவரிகள்.

பகுதி 04

விண்ணப்ப நடைமுறை மற்றும் ஏனைய முக்கிய அறிவுறுத்தல்கள்

4.1 விண்ணப்ப நடைமுறை

i. அனுமதிக்கான விண்ணப்பங்கள் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் வெளியிடப்படும் பத்திரிகை அறிவித்தல்கள் மூலம் கோரப்படும். விண்ணப்பதாரிகள் இக்கையேட்டின் பிரிவு 05 இல் காணப்படும் அறிவுறுத்தல்களுக்கமைய இணையதளத்தினூடாக விண்ணப்பத்தைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

முக்கியம் :
இணையதளத்தினூடாக பல்கலைக்கழக அனுமதிக்கு விண்ணப்பித்தல் கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

இக்கைநூலை ப.மா.ஆ.வின் யாரேனும் உத்தியோகபூர்வ அதிகாரம் பெற்ற முகவரிடமிருந்து ரூபா 500/- செலுத்திப் பெற்றுக்கொள்ளலாம்.

ii. இணையதள விண்ணப்பத்தின் அச்சுப்பிரதியை உரிய ஆவணங்களுடன் உரிய திகதிக்கு முன்னர் ப.மா.ஆ. விற்கு கிடைக்கக்கூடியதாக பதிவுத் தபாலில் அனுப்பி வைக்க வேண்டியது ஒவ்வொரு விண்ணப்பதாரியினதும் பொறுப்பாகும். அனுமதிக்கான விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்வதற்கான இறுதித் திகதி மேற்கூறப்பட்ட பத்திரிகை அறிவித்தலில் குறிப்பிடப்படும். உரிய ஆவணங்களையும், சான்றிதழ்களையும் விண்ணப்பத்துடன் சேர்த்து சமர்ப்பிக்கத் தவறினால் பல்கலைக்கழக அனுமதிக்கான விண்ணப்பம் நிராகரிக்கப்படும்.

iii. ஒரு பாடசாலைப் பரீட்சார்த்தியாக க.பொ.த. (உ/த.) பரீட்சைக்குத் தோற்றிய ஒவ்வொரு பரீட்சார்த்தியும், க.பொ.த. (உ/த.) பரீட்சைக்கு தான் தோற்றிய பாடசாலையின் அதிபரால் தனது அனுமதிக்கான இணையதள விண்ணப்பத்தின் அச்சுப்பிரதியை உறுதிப்படுத்திக்கொள்ள வேண்டும். தனிப்பட்ட பரீட்சார்த்தியாக க.பொ.த. (உ/த.) பரீட்சைக்குத் தோற்றிய ஒவ்வொரு பரீட்சார்த்தியும் தனது இணையதள விண்ணப்பத்தின் அச்சுப்பிரதியை சமாதான நீதவான் ஒருவரினால் அல்லது சத்தியப்பிரமாண ஆணையாளர் ஒருவரினால் உறுதிப்படுத்திக்கொள்ளல் வேண்டும்.

iv. தெரிவுசெய்யப்பட்ட பரீட்சார்த்திகளுக்கு அவர்களது கற்கைநெறி மற்றும் அவர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ள பல்கலைக்கழகம் ஆகியவை பற்றி பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அறிவிக்கப்படும். இத்தெரிவை விண்ணப்பதாரி ஏற்றுக்கொண்டால் பதிவுக்கட்டணமாக ரூபா. 50/- இனை வங்கியில் அல்லது இணையதளத்தினூடாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் கணக்கிற்கு வரவுவைத்து பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் தரப்படும் பதிவுசெய்வதற்கான இறுதித்திகதியன்றோ அல்லது அதற்கு முன்பாகவோ பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் உத்தியோகபூர்வ இணையதளத்தில் தெரிவு செய்யப்பட்ட கற்கைநெறிக்கும் பல்கலைக்கழகத்திற்கும் பதிவுசெய்து கொள்ளல் வேண்டும்.

v. இணையதளத்தில் பதிவு செய்த பின்னர், அச்சுப்பிரதி செய்யப்பட்டு சரியான முறையில் ஒப்பமிடப்பட்ட இணையதள பதிவுப் படிவத்துடன் (Online Payment Receipt) வங்கியில் செலுத்தியிருப்பின் தேவையான கொடுப்பனவை செலுத்தியமைக்கான அத்தாட்சி பத்திரத்தின் [Paying-in-Voucher (UGC Copy)] இனையும் இணைத்து பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவிற்கு கிடைக்கக்கூடியதாக பதிவுத்தபாலில் அனுப்பிவைத்தல் வேண்டும்.

மிகமுக்கியம்

சத்திய கடதாசி

பல்கலைக்கழக வளாகத்தினுள்ளும் வெளியிலும் பகிடிவதை உட்பட எல்லா வகையான வன்முறைகளில் இருந்தும் தவிர்ந்து கொள்வதாக சத்திய கடதாசி (Affidavit) ஒன்றினை தெரிவு செய்யப்பட்ட கற்கைநெறிக்கு பல்கலைக்கழகத்தில் பதிவினை மேற்கொள்ளும் போது மாணவர்கள் அனைவரும் ஒப்பமிடுதல் வேண்டும். அவ் சத்திய கடதாசி மாணவரினாலும், அவர்களது பெற்றோரினாலும் ஒப்பமிடப்படல் கட்டாயமாகும். பெற்றோர் இல்லாத பட்சத்தில் மாணவர் மற்றும் மாணவரது சட்ட ரீதியான பாதுகாவலரினால் ஒப்பமிடப்பட வேண்டும்.

4.2 வெற்றிடங்களை நிரப்பும் முறை / வெற்றிடங்களை நிரப்புகையில் உயர் தெரிவு வழங்கப்பட்ட சில பல்கலைக்கழகங்களின் கற்கைநெறிகளுக்கு தெரிவாகாமல் அல்லது ஏனைய எவ் உயர் விருப்புரிமையிற்கும் உயர்த்தப்படாது தற்போது தெரிவு செய்யப்பட்டுள்ள கற்கைநெறி மற்றும் பல்கலைக்கழகத்தில் தொடர்ந்தும் இருக்க மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள்.

4.2.1 வெற்றிடங்களை நிரப்புவதற்கான பிரமாணங்கள்

வழமையான அனுமதியின் கீழ் தெரிவு செய்யப்படுகின்ற மாணவர்கள் கற்கைநெறிகளுக்கு பதிவுசெய்யாததன் காரணமாக இந்த வெற்றிடங்கள் ஏற்படுகின்றது. இத்தகைய வெற்றிடங்கள் பின்வரும் அடிப்படையில் மேலே பகுதி 3.2 தரப்பட்டுள்ள பிரமானங்களுக்கமைய நிரப்பப்படுகின்றன.

i. தீவளாவிய திறமை அடிப்படையில் தெரிவுசெய்யப்பட்ட மாணவர்கள் குறித்த பல்கலைக்கழகத்தில் குறித்த கற்கைநெறிகளுக்கு பதிவுசெய்யாத வேளைகளில் ஏற்படும் வெற்றிடங்கள் தீவளாவிய திறமை அடிப்படையில் அடுத்ததாக வரிசையில் காணப்படும் மாணவர்களினால் நிரப்பப்படும்.

ii. மாவட்ட திறமை அடிப்படையில் கீழ் தெரிவு செய்யப்பட்ட மாணவர்கள் குறித்த பல்கலைக்கழகத்தில் குறித்த கற்கைநெறிகளுக்கு பதிவு செய்யாமையினால் ஏற்படும் வெற்றிடங்கள் மாவட்ட திறமை அடிப்படையில் நிரப்பப்படும். ஒரு குறிப்பிட்ட மாவட்ட வெற்றிடங்கள் அதே மாவட்டத்தைச் சேர்ந்த வரிசையில் அடுத்ததாக இருக்கும் மாணவர்களால் நிரப்பப்படும்.

iii. சம புள்ளியைப் பல மாணவர்கள் பெற்றதன் காரணமாக அல்லது வேறு ஏதாவது நடைமுறை காரணங்களின் விளைவாக, ஒதுக்கப்பட்ட இடங்களுக்கு மேலதிகமாக மாணவர்கள் தெரிவு செய்யப்படுமிடத்து, இம்மேலதிக எண்ணிக்கை வெற்றிடங்களின் எண்ணிக்கையிலிருந்து கழிக்கப்பட்டு மிகுதி வெற்றிடங்கள் மட்டுமே நிரப்பப்படும்.

iv. அத்துடன் வெற்றிடங்களை நிரப்பும் போது மாணவர்களின் கற்கைநெறி மற்றும் பல்கலைக்கழக விருப்பொழுங்கு ஒன்றாகவே கருத்திற்கொள்ளப்படும்.

ஒரு குறிப்பிட்ட பல்கலைக்கழகத்தில் ஒரு குறிப்பிட்ட கற்கைநெறியை (யுனி-கோட்) ஒரு மாணவர் தனது விருப்பொழுங்கில் குறிப்பிடாதிருப்பின் அத்தெரிவுக்குத் தேவையான வெட்டுப்புள்ளிகளை கொண்டிருந்த போதும் கூட வெற்றிடங்களை நிரப்பும்போது அவர் அப்பல்கலைக்கழகத்தில் அக்கற்கை நெறிக்கு கருத்திற்கொள்ளப்படமாட்டார். அதற்குப் பதிலாக அவர் அடுத்த தெரிவாக குறிப்பிட்டுள்ள கற்கைநெறிக்கும் பல்கலைக்கழகத்திற்கும் (யுனி-கோட்) கருத்திற்கொள்ளப்படுவார்.

v. சம்பந்தப்பட்ட பல்கலைக்கழகப் பீடாதிபதியின் சம்மதமின்றி சம்பந்தப்பட்ட பல்கலைக்கழகத்தில் கல்விச்செயற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்டதன் பின்னர் எந்தவொரு கற்கை நெறியிலும் உள்ள வெற்றிடங்கள் நிரப்பப்படமாட்டாது. மேலே குறிப்பிடப்பட்டுள்ள “கல்விச் செயற்பாடுகளின் ஆரம்பம்” மானது ஆங்கிலக் கற்கைநெறியை உள்ளடக்கிய தொடர்புகளைப் புரிந்து கொள்ளல் நிகழ்ச்சி (Orientation Programme) இன் ஆரம்பத்தைக் குறிக்கவில்லை.

மிக முக்கியம்:

4.2.2 வெற்றிடங்களை நிரப்புகையில் உயர் தெரிவிலுள்ள சில கற்கைநெறிகளுக்கு உயர்த்தப்படாமல் அல்லது எந்த ஒரு உயர் தெரிவிற்கும் உயர்த்தப்படாது தற்போது தெரிவுசெய்யப்பட்டுள்ள கற்கைநெறி மற்றும் பல்கலைக்கழகத்தில் (“Uni-Code”) தொடர்ந்தும் இருக்க விரும்பும் மாணவர்களுக்கு

i. 2018 இல் நடைபெற்ற க.பொ.த. (உ.த) பரீட்சை பெறுபேறுகளின் அடிப்படையில் சாதாரண அனுமதியின் கீழ் அல்லது வெற்றிட நிரப்புகையின் கீழ் பல்கலைக்கழகங்களின் கற்கைநெறிகளுக்காக (யுனி-கோட்கள்) தெரிவுசெய்யப்பட்டு பதிவுசெய்கிற பரீட்சார்த்திகள், தான் எற்கனவே தேர்வு செய்யப்பட்டுள்ள கற்கைநெறி மற்றும் பல்கலைக்கழகத்தினை (யுனி-கோட்) விட உயர் விருப்புரிமையாக தமது விண்ணப்பத்தில் வழங்கப்பட்டிருக்கும் அத்தகைய **சில** கற்கைநெறிகள் மற்றும் பல்கலைக்கழகங்களில் (யுனி-கோட்கள்) எதிர்காலத்தில் ஏற்பட இருக்கும் வெற்றிட நிரப்பலின் கீழ் தம்மைக் கருத்தில் கொள்ள தேவையில்லை எனில் அல்லது தற்போது தேர்வு செய்யப்பட்டுள்ள கற்கைநெறி மற்றும் பல்கலைக்கழகத்தினை (யுனி-கோட்) விட

உயர் விருப்புரிமையாக தமது விண்ணப்பத்தில் வழங்கப்பட்டிருக்கும் எந்தவொரு கற்கைநெறி மற்றும் பல்கலைக்கழகத்திற்கும் எதிர்கால வெற்றிட நிரப்பலின் கீழ் தெரிவாகாமல் எற்கனவே தேர்வு செய்யப்பட்டுள்ள அக் கற்கைநெறி மற்றும் பல்கலைக்கழகத்திலே (யுனி-கோட்)எதிர்காலத்தில் தொடர்ந்தும் இருக்க விரும்பின், தான் எற்கனவே தெரிவான அக் கற்கைநெறி மற்றும் பல்கலைக்கழகத்திற்காக (யுனி-கோட்) இணையவழி பதிவினை மேற்கொள்ளும் போது பின்வரும் அறிவுறுத்தல்களைப் பின்பற்ற வேண்டும்.

1. இணையதளம் மூலம் பதிவினை மேற்கொள்ளும் போது இணையதள பதிவு முறைமையின் பிரதான பக்கத்தில் (Online Screen) அவ் நோக்கத்திற்காக வழங்கப்பட்டுள்ள **Promotion Decleration** எனும் தெரிவினை அழுத்துக.

2. இப்போது உம் விருப்பத் தேர்வுக்கமைய ஒழுங்குபடுத்தப்பட்ட யுனி-கோட்கள் காட்சிப்படுத்தப்படும்

3. யுனி-கோடகளின் பட்டியலிலிருந்து நீர் தற்போது தெரிவு செய்யப்பட்டுள்ள யுனி-கோட் இனை அடையாளம் காண்க.

4. **தற்போது தெரிவுசெய்யப்பட்டுள்ள யுனி-கோட் இனை விட நீர் முன்னுரிமை வழங்கியுள்ள எனினும் எதிர்காலத்தில் வெற்றிட நிரப்பலின் கீழ் உம்மை கருத்தில் கொள்ள வேண்டாம் என கருதும் யுனி-கோட்களை கவனமாக தெரிவு செய்க (சம்மந்தப்பட்ட பெட்டிகளில் "✓" அடையாளமிடுக). எவ்வாறாயினும் நீர் தற்போது தெரிவான பல்கலைக்கழகத்தின் கற்கைநெறி (யுனி-கோட்) இலேயே தொடர்ந்தும் இருப்பதற்கும் ஏனைய உமது உயர் விருப்பொழுங்கிற்குரிய பல்கலைக்கழகம் மற்றும் கற்கைநெறி (யுனி-கோட்கள்) எவற்றிற்கும் உம்மை கருத்தில் கொள்ள வேண்டாம் என கருதின் தற்போது தெரிவான யுனி-கோட் தவிர்ந்த ஏனைய உயர்விருப்பொழுங்கிற்குரிய சகல யுனி-கோட்களையும் நீர் தெரிவு செய்தல் வேண்டும்.**

5. பின்னர் **Submit Button** னை அழுத்துவதன் மூலம் யுனி-கோட் பட்டியலிலிருந்து தேவையற்ற யுனி-கோட்களை அகற்றல் வேண்டும். (இணையதள பதிவு முறைமையின் இறுதியில்தோற்றுவி க்கப்படும் இணையதள கொடுப்பனவுப் பத்திரத்தில் (Online Payment Recipt) வெற்றிட நிரப்பலின் கீழ் உம்மை கருத்தில் கொள்ளத் தேவையில்லை என நீர் தெரிவு செய்த யுனி-கோட்களும் தோன்றும்).

6. அகற்றுவதற்கு தெரிவு செய்த யுனி-கோட் பட்டியலை நீர் மீளமைக்க வேண்டுமாயின் மேலே படி 1-5 இனை பின்பற்றுக.

7. **எதிர்காலத்தில் வெற்றிட நிரப்பலின் கீழ் உம்மை கருத்தில் கொள்ள வேண்டாம் என கருதும் பல்கலைக்கழகங்களின் கற்கைநெறி (யுனி-கோட்கள்) களினை நீர் அகற்றவில்லை எனின், அனுமதிக்கான விண்ணப்பத்தில் நீர் குறிப்பிட்டுள்ள உயர் தெரிவிற்கமைய பல்கலைக்கழகத்தின் கற்கைநெறியொன்றிற்கு உயர்த்தப்படும் போது நீர் அதனை ஏற்றல் வேண்டும்.**

ii. குறித்த பல்கலைக்கழகத்தில் குறித்த கற்கைநெறிக்கான உத்தேசிக்கப்பட்ட மாணவர்களின் எண்ணிக்கை நிரப்பப்படும் வரையில் வெற்றிடங்களை நிரப்புகின்ற செயற்பாடு மேற்கொள்ளப்படும்.

iii. பின்வரும் உதாரணத்தின்படி குறித்த ஒரு மாணவர் பல்கலைக்கழக அனுமதிக்கான வெட்டுப்புள்ளியின் அடிப்படையில் கொழும்பு பல்கலைக்கழகத்தில் உயிரியல் விஞ்ஞான பாடநெறிக்கு தெரிவுசெய்யப்படுவதாக நினைத்துக்கொள்ளவும் (அவரது 8 வது தெரிவு)

வெற்றிடங்களை நிரப்பும்போது, விண்ணப்பதாரிகள் ஊடுகதிர்ப்படமெடுப்பு – பேராதனைப் பல்கலைக்கழகத்திற்கு (6ம் விருப்பத்தெரிவு) அல்லது இயன் மருத்துவம் – கொழும்புப் பல்கலைக்கழகத்திற்கு (5ம் தெரிவு) தெரிவுசெய்யப்படலாம்.

அடுத்து வெற்றிடங்களை நிரப்புகின்ற பொழுது விண்ணப்பதாரி 4 வது விருப்பத்தெரிவான உயிரியல் விஞ்ஞானம் பேராதனைப் பல்கலைக்கழகதிற்கு தெரிவு செய்யப்படலாம்.

உ+ம் :-

"Uni Codes"

1.	0	0	2	B	பல் அறுவைச் சிகிச்சை - பேராதனைப் பல்கலைக்கழகம்
2.	0	3	5	C	உணவு விஞ்ஞானமும் தொழில்நுட்பமும் - ஸ்ரீ ஜயவர்த்தனபுரப் பல்கலைக்கழகம்
3.	0	5	1	C	மருந்தகவியல் - ஸ்ரீ ஜயவர்த்தனபுரப் பல்கலைக்கழகம்
4.	0	0	6	B	உயிரியல் விஞ்ஞானம் - பேராதனைப் பல்கலைக்கழகம்
5.	0	5	4	A	இயன் மருத்துவம் - கொழும்புப் பல்கலைக்கழகம்
6.	0	5	3	B	ஊடுகதிர்ப்படமெடுப்பு - பேராதனைப் பல்கலைக்கழகம்
7.	0	0	4	E	விவசாயம் - யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
8.	0	0	6	A	உயிரியல் விஞ்ஞானம் - கொழும்புப் பல்கலைக்கழகம்
9.	0	5	8	A	மூலக்கூற்று உயிரியலும் உயிரிரசாயனவியலும் - கொழும்புப் பல்கலைக்கழகம்
10.	0	3	2	N	ஆயுர்வேதம் - சுதேச மருத்துவ நிறுவகம்

வெற்றிடங்களை நிரப்புகையில் அனுமதிக்கான விண்ணப்பப்படிவத்தில் அவரால் குறிப்பிடப்பட்ட உயர் விருப்புரிமையின் பிரகாரம் கற்கைநெறிகளுக்கு உயர்த்தப்படுவதை விரும்பாமல் கொழும்பு பல்கலைக்கழகத்தில் உயிரியல் விஞ்ஞானத்தில் தொடர்ந்தும் கல்வி கற்க விரும்பின் தெரிவு செய்யப்பட்ட கற்கைநெறி மற்றும் பல்கலைக்கழகத்திற்கு இணையதளத்தினுடாக பதிவினை மேற்கொள்ளும் போது சம்மந்தப்பட்ட பகுதியில் மேலே பகுதி 4.2.2(i) இல் குறிப்பிட்டதற்கு அமைவாக தெளிவாகக் குறிப்பிட வேண்டும். அல்லாவிடின் அனுமதிக்கான விண்ணப்பத்தில் அவரால் குறிப்பிடப்பட்ட உயர் விருப்புரிமையின் பிரகாரம் கற்கைநெறியொன்றிற்கு உயர்த்தப்படும் போது அதனை கட்டாயமாக ஏற்க வேண்டும்.

எவ்வாறாயினும், பரீட்சாத்தி தெரிவுசெய்யப்பட்ட அவர்களது 8வது விருப்புரிமை கற்கைநெறியான உயிரியல் விஞ்ஞானம் கொழும்புப் பல்கலைக்கழகத்தில் பதிவுசெய்யவில்லையாயின், அவர்களது 4வது விருப்புரிமை தெரிவான பேராதனைப் பல்கலைக்கழகத்தில் உயிரியல் விஞ்ஞானத்திற்கு வெற்றிடநிரப்பலின் கீழ் பகுதி 3.2 இல் முக்கியம் என பெயரிடப்பட்ட பந்தியில் குறிப்பிட்டுள்ளவாறு கருத்தில் கொள்ளப்பட மாட்டர்.

4.3 ஒரு பல்கலைக்கழகத்திலிருந்து இன்னொரு பல்கலைக்கழகத்திற்கு அதே பட்டப்பயில் நெறிக்கு மாணவர்களின் இடமாற்றம்.

வெற்றிடங்களை நிரப்பிய பின் மாணவர்கள் தங்கள் உயர் விருப்பத் தெரிவிற்கு அமைய கற்கைநெறி மற்றும் பல்கலைக்கழகத்திற்கு தெரிவாவார்கள்.

அதனால் விண்ணப்பதாரிகள் தமது விருப்பெழுங்கில் உயர் தெரிவாக குறித்த கற்கைநெறி மற்றும் பல்கலைக்கழகத்தை கோரி பல்கலைக்கழக இடமாற்றத்திற்காக தனியாக ஒரு விண்ணப்பத்தைச் சமர்ப்பித்தல் அவசியமற்றது.

எக்காரணங்களுக்காகவும் பரஸ்பர இடமாற்றங்களுக்கான (Mutual Transfers) வேண்டுகோள்கள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

பகுதி 4.2 இல் குறிப்பிடப்பட்டுள்ளவாறு Z புள்ளி அடிப்படையில் மாணவர்களின் உயர் விருப்புரிமைத் தெரிவான கற்கைநெறி மற்றும் பல்கலைக்கழகங்கள் வெற்றிடங்களின் அடிப்படையில் வழங்கப்படுகிறது.

தமது கற்கை நெறியை விண்ணப்பத்தில் குறைந்த விருப்புரிமையாக குறிப்பிட்ட இன்னொரு கற்கை நெறிக்கு மாற்றுவதற்கு கோரிக்கை விடுக்கும் விண்ணப்பதாரிகள் பிரிவு 4.4 இல் குறிப்பிடப்பட்டுள்ளவாறு மேன்முறைபீடு செய்யலாம்.

4.4 மேன்முறையீடு செய்யும் முறை

2018/2019 ஆம் கல்வி ஆண்டின் சாதாரண அனுமதியின் கீழ் பரீட்சார்த்திகளின் தெரிவு பூரணப்படுத்தப்பட்டதன் பின்னர் சாதாரண அனுமதி சம்பந்தமாக பரீட்சார்த்திகளால் செய்யப்படும் மேன்முறையீடுகளை ஆராய்ந்து அறிக்கையிட ஒரு மேன்முறையீட்டுக் குழுவை ப.மா.ஆ. நியமிக்கும். மேன்முறையீடுகள் பின்வருவோரிடமிருந்து ஏற்றுக்கொள்ளப்படும்.

(அ) இக் கைநூலின் 03 ஆம் பகுதியின் ஏற்பாடுகளுக்கு உட்பட்டு ஒரு குறிப்பிட்ட பல்கலைக்கழகத்தின் கற்கை நெறிக்கு தெரிவுக்கென பல்கலைக்கழக அனுமதிக்கான தேவைப்பாடுகள் பூர்த்தி செய்யப்பட்டு அறிவிக்கப்பட்ட ஆகக்குறைந்த 'Z' புள்ளிகளைக் கொண்டிருந்தும் தெரிவு செய்யப்படாத விண்ணப்பதாரிகள்.

(ஆ) இக் கைநூலின் பகுதி 03 இன் ஏற்பாடுகளுக்கு உட்பட்டு பல்கலைக்கழக அனுமதிக்கான தேவைப்பாடுகளை பூர்த்தி செய்து ஒரு குறித்த கற்கை நெறிக்கு தெரிவு செய்யப்பட்டு, ஆனால் தாம் குறிப்பிட்ட வேறொரு கற்கை நெறிக்குத் தகுதியுடையவர்களெனக் கருதும் விண்ணப்பதாரிகள்.

(இ) அனுமதிக்கான தேவைப்பாடுகள் நிறைவேற்றியிருந்தால் தமது கற்கை நெறியை விண்ணப்பத்தில் குறைந்த விருப்புரிமையாக குறிப்பிட்ட இன்னொரு கற்கை நெறிக்கு மாற்றுவதற்கு கோரிக்கை விடுக்கும் விண்ணப்பதாரிகள். (கற்கை நெறியின் மாற்றமொன்றுக்கான மேன்முறையீடுகளை கரிசனைக்கு எடுக்க வேண்டுமாயின், குறிப்பிட்ட கற்கை நெறியில் வெற்றிடங்கள் இருக்க வேண்டும். வெற்றிடங்களை விட அதிகளவு விண்ணப்பதாரிகள் இருந்தால் மாணவர்களின் Z-புள்ளி ஒழுங்கு கரிசனைக்கு எடுக்கப்படும்.)

(ஈ) குறித்த கற்கைநெறிக்கு விண்ணப்பிக்காத, அந்த கற்கைநெறிக்கான அனுமதிக்கான தேவைப்பாடுகளை பூர்த்தி செய்த விண்ணப்பதாரர்கள். (இந்தப் பிரிவில் மேன்முறையீடுகளை கரிசனைக்கு எடுக்கவேண்டுமாயின் சம்பந்தப்பட்ட கற்கை நெறியில் வெற்றிடம் இருக்க வேண்டும். வெற்றிடங்களை விட அதிகளவு விண்ணப்பதாரிகள் இருந்தால் மாணவர்களின் Zபுள்ளி ஒழுங்கு கரிசனைக்கு எடுக்கப்படும்.)

மேன்முறையீட்டுக் குழு பின்வருவன தொடர்பாக செய்யப்படும் மேன்முறையீடுகளைக் கருத்திலெடுத்துக் கொள்ளாது என்பதுடன், அத்தகைய மேன்முறையீட்டாளர்களுக்கு மேன்முறையீடு கிடைத்தமை பற்றி அறிவிக்கப்படமாட்டாது எனவும், கொடுப்பனவுகள் மீளளிக்கப்படமாட்டாது எனவும் இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

i. விசேட ஏற்பாடுகளின் கீழ் அனுமதி.
ii. மேலதிக அனுமதியின் கீழ் விசேட பாடங்களுக்கான அனுமதி.
iii. வெற்றிடங்களை நிரப்புவதற்கான அனுமதி.

மேன்முறையீடு செய்ய விரும்புவோர் இக்கைநூலின் பகுதி 10 இல் இணைப்பு **I** வழங்கப்பட்டுள்ள மேன்முறையீட்டிற்கான மாதிரி விண்ணப்பப்படிவத்தை நிரப்பி, **வெட்டுப்புள்ளி (வெ.பு) பிரசுரிக்கப்பட்ட நாளிலிருந்து நான்கு (4) வாரங்களுக்குள்** எழுத்தில், Secretary - Appeals Committee on University Admissions, C/o University Grants Commission, No. 20, Ward Place, Colombo 07 என்ற முகவரியை அடையத்தக்கதாகப் பதிவுத் தபால் மூலம் அனுப்ப வேண்டும். கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "Appeals - University Admissions" என்ற சொற்கள் குறிப்பிடப்பட்டிருக்க வேண்டும்.

ஒவ்வொரு மேன்முறையீட்டிற்கும் ரூபா 500/- கொடுப்பனவு செய்யப்பட வேண்டும். ப.மா.ஆ.விற்கு பணம் செலுத்துவதற்கான கொடுப்பனவுப் பட்டோலையை நிரப்பி, இலங்கை வங்கியின் அல்லது மக்கள் வங்கியின் ஏதாவது ஒரு கிளையில் இலங்கை வங்கியின் சுதந்திரச் சதுக்க கிளையிலுள்ள ப.மா.ஆ. திரட்டுக் கணக்கு இலக்கம் 0002323287இன் அல்லது மக்கள் வங்கியின் நகர மண்டபக் கிளையிலுள்ள திரட்டுக் கணக்கு இலக்கம் 167-1-001-4-3169407இன் வரவிற்கு இக்கொடுப்பனவு செய்யப்பட வேண்டும். ஒவ்வொரு மேன்முறையீட்டுடனும் மேற்கூறிய வங்கிகளில் ஒன்றின் இலச்சினை பொறிக்கப்பட்டு அதிகாரமுடைய அலுவலர் ஒருவரினால் ஒப்பமிடப்பட்ட கொடுப்பனவு பட்டோலையின் அடிக்கட்டை இணைக்கப்பட வேண்டும். இப்பணம் செலுத்தப்படாத எந்த மேன்முறையீடும் ஏற்றுக்கொள்ளப் படவோ பதிலழிக்கப்படவோ மாட்டாது. மேலும், பூரணப்படுத்தப்படாத தெளிவற்ற மேன்முறையீடுகள் நிராகரிக்கப்படும்.

தொலைநகல் (Fax), மின்னஞ்சல் (E-mail) மூலமாக செய்யப்படும் மேன்முறையீடுகள் கருத்தில் கொள்ளப்பட்கொள்ளப்படமாட்டாது.

மேன்முறையீட்டு படிவங்கள் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் இணையத்தளத்திலும் (www.ugc.ac.lk) கிடைக்கப்பெறும்.

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் இணையதளத்தில் காணப்படும் மேன்முறையீட்டு விண்ணப்பத்தினை இணையதளத்தில் நிரப்பி அச்சுப்பிரதியை பதிவுத்தபாலில் வெட்டுப்புள்ளி வெளியிடப்பட்டு நான்கு வார காலத்தினுள் அனுப்புவதன் மூலம் மேன்முறையீட்டினை சமர்ப்பிக்கலாம்.

நீங்கள் ஒன்றுக்கு மேற்பட்ட மேன்முறையீட்டை அனுப்ப விரும்பினால், நீங்கள் மேன்முறையீட்டிற்கான படிவத்தின் பிரதியைப் (Photocopy) பயன்படுத்தலாம்.

4.5 புகார் தெரிவிக்கும் முறை / குறித்த மாணவர் ஒருவர் கற்கை நெறியொன்றுக்கு தெரிவு செய்யப்பட்டமைக்கு ஆட்சேபனை தெரிவித்தல்

குறிப்பிட்ட மாணவரொருவர் கொடுக்கப்பட்ட கற்கை நெறியொன்றிற்குத் தெரிவு செய்யப்படுவதற்குத் தகுதியற்றவர் என்ற காரணத்தின் அடிப்படையில் அவரின் தெரிவை ஆட்சேபிக்க விரும்புவோர் எழுத்து மூலம் Additional Secretary - University Admissions, University Grants Commission, No 20, Ward Place, Colombo 07 என்ற முகவரிக்கு அவ்வாறு செய்யலாம்.

ஒரு முறைப்பாட்டினைச் செய்யும்போது அம்முறைப்பாட்டுக்காரர் மாணவரைப் பற்றி முடிந்தளவு தகவல்களைத் தந்து ஆட்சேபணையின் தன்மையைக் குறிப்பிட்டு, ஆட்சேபனைக்கு ஆதாரமான ஆவணச் சான்றுகளை அவரால் முடிந்தளவுக்கு சமர்ப்பிக்க வேண்டும்.

4.6 அனுமதியைப் பின்போடல்

(i) கற்கைநெறி மற்றும் பல்கலைக்கழகத்திற்கு தெரிவு செய்யப்பட்ட பரீட்சார்த்தி ஒருவர், தனது அனுமதியைப் பின்போட விரும்பினால் அவரால் நிரூபிக்கப்படும் காரணங்களில் சம்பந்தப்பட்ட பல்கலைக்கழகம் திருப்தியடைந்தாலே பின்போட அனுமதிக்கப்படலாம்.

(ii) இத்தகைய ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் முதலில் தான் தெரிவு செய்யப்பட்ட கற்கைநெறி மற்றும் பல்கலைக்கழகத்தில் முதற்கண் பதிவு செய்து கொண்டு, கல்வி ஆண்டு ஆரம்பிப்பதற்கு முன், பின்போடலை நாடும் விசேட காரணங்களைத் தெளிவாகக் குறிப்பிட்டு உரிய பல்கலைக்கழகப் பதிவாளருக்கு விண்ணப்பிக்கும்படியும் மாணவர் அறிவுறுத்தப்படுகின்றனர்.

(iii) இவ்வாறான பின்போடல் வழங்கப்படும் ஆகக்கூடிய காலம் ஒரு கல்வி ஆண்டாகும்.

(iv) பின்போடல் ஒன்று வழங்கப்படுமிடத்து, பரீட்சார்த்தி முன்பு தெரிவு செய்யப்பட்ட குறித்த பல்கலைக்கழகத்தில்/ உயர் கல்வி நிறுவனத்தில் அதே கற்கை நெறிக்கே மீண்டும் அனுமதிக்கப்படுவார். அனுமதியைப் பின்போட்டுக் கொள்ளும் எந்தவொரு பரீட்சார்த்தியும் பின்வருகின்ற அதாவது 2018 இன் பின்னரான க.பொ.த. (உ/த.) பரீட்சைப் பெறுபேறுகளின் அடிப்படையில் வேறு எந்தவொரு கற்கை நெறிக்கும் அனுமதி கோரத் தகுதியற்றவராவார்.

4.7 கடிதத் தொடர்புக்கான முகவரி

பட்டப்பயில் கற்கை நெறிகளுக்கு அனுமதிக்கான சகல கடிதங்களும் பின்வருமாறு முகவரியிடப்பட வேண்டும்.

Additional Secretary (University Admissions)
University Grants Commission
20, Ward Place,
Colombo 07.

தொலைபேசி : **011-2695301/011-2695302/011-2685758/011-2678731/011-2692357**
தொலைநகல்: **011-2691678**
இணையத் தளம்: **www.ugc.ac.lk**

ஒரு பல்கலைக்கழகத்தில் குறிப்பிட்ட ஒரு கற்கைநெறி பற்றிய தகவல் சம்பந்தமான கடிதங்கள்சம்பந்தப்பட்ட பல்கலைக்கழகத்தின் பதிவாளருக்கு முகவரியிடப்படல் வேண்டும். பல்கலைக்கழகங்களின் முகவரிகள் இணைப்பு **D** இல் கொடுக்கப்பட்டுள்ளன.

பகுதி 05

பல்கலைக்கழக அனுமதிக்காக இலத்திரனியல் விண்ணப்பப் படிவத்தை நிரப்பும் முறை

பகுதி 5 ஆனது மாணவர்கள் விரும்புகின்ற கற்கைநெறிகளுக்கும் பல்கலைக்கழகங்களிற்கும் இணையதளம் மூலம் விண்ணப்பிக்கின்ற முறையினை விபரிக்கின்றது. எவ்வாறு இணையதளத்தினூடாக விண்ணப்பப்படிவத்தினை பூர்த்திசெய்தல், இணையதள வசதியில்லாதபொழுது எவ்வாறு இணையதள வசதியைப் பெற்றுக்கொள்வது போன்றவை தொடர்பான தெளிவான அறிவுறுத்தல்கள் இப்பகுதியில் தரப்பட்டுள்ளன.

பல்கலைக்கழக அனுமதிக்கு விண்ணப்பித்தல் மற்றும் கற்கைநெறிகளுக்கு பதிவுசெய்தல் இணையதளத்தினூடாக மேற்கொள்ளல் கட்டாயமாக்கப்பட்டுள்ளது என்பதை கருத்தில் கொள்க. ஆதலால், மாணவர்கள் கட்டாயமாக பல்கலைக்கழக அனுமதிக்கு விண்ணப்பித்தல் மற்றும் தெரிவு செய்யப்பட்டுள்ள பல்கலைக்கழகத்தின் கற்கைநெறிக்கு பதிவு செய்தல் போன்றவற்றை இணையதளத்தினுடாகவே மேற்கொள்ளல் வேண்டும்.

இணையதள முறையின் பாதுகாப்பினதும் நேர்த்தியினதும் பொறுப்பினை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினர் ஏற்றுக்கொள்வர்.

பகுதி 05

பல்கலைக்கழக அனுமதிக்கு இணையதளத்தினூடாக விண்ணப்பித்தல் கட்டாயமாக்கப்பட்டுள்ளது என்பதை கருத்தில் கொள்க.
பல்கலைக்கழக அனுமதிக்கான இலத்திரனியல் விண்ணப்பத்தை நிரப்பும்போது நீங்கள் ஏதாவது பிரச்சினைகளை எதிர்கொண்டால் அரச தகவல் நிலையத்துடன் (1919) தொடர்பு கொள்ளவும்.

பல்கலைக்கழக அனுமதிக்காக இலத்திரனியல் விண்ணப்பத்தை நிரப்பும் முறை www.ugc.ac.lk

முக்கியம்

- **பல்கலைக்கழக அனுமதிக்கான விண்ணப்ப படிவ முடிவுத்திகதியிற்கு பத்திரிகை விளம்பரத்தினைப் பார்வையிடுக.**
- **பல்கலைக்கழக அனுமதிக்கான விண்ணப்ப படிவங்களை நிரப்புவதற்கு முன், இக்கைநூலின் முற்பகுதிகளில் கொடுக்கப்பட்டுள்ள பல்கலைக்கழக அனுமதிகள் தொடர்பான விதிகளை வாசிக்குமாறு பரீட்சார்த்திகளுக்கு அறிவுரை வழங்கப்படுகின்றது.**
- இந்த அறிவுறுத்தல்களை கவனமாக வாசிக்கவும்.
- தாங்கள் விண்ணப்பத்தில் வழங்க வேண்டிய தகவல்கள் அனைத்தும் இப்பகுதியில் தரப்பட்டுள்ளது.
- பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் உத்தியோகபூர்வ இணையதளத்தில் விண்ணப்பப்படிவத்தை நிரப்புவதற்கான அறிவுறுத்தல்கள் படிவத்தினை நிரப்பும் செயற்பாட்டின் ஒவ்வொரு படிமுறையிலும் நீங்கள் விரும்பிய மொழியில் (தமிழ்/சிங்களம்/ஆங்கிலம்) பெற்றுக்கொள்ளலாம்.
- பல்கலைக்கழக அனுமதிக்கு விண்ணப்பிப்பதற்கு இணையதள வசதியற்ற விண்ணப்பதாரிகள் இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தின் பிராந்திய நிலையங்கள் (NAC Centers) , கல்வியமைச்சின் மாகாண மற்றும் வலய கணனி வள நிலையங்கள்(ICT Centres), தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப நிறுவகம் (ICTA) அறிவகம் (Nenasala) நிலையங்களுக்கு அலுவலக நேரங்களில் சென்று **இலவசமாக** பல்கலைக்கழக அனுமதிக்கு விண்ணப்பிக்குமாறு ஆலோசனை வழங்கப்படுகின்றனர். அவ்வாறான சகல நிலையங்களினதும் விபரம் பகுதி 5ன் முடிவில் குறிப்பிடப்பட்டுள்ளது.

(A) பயனராகப் (User) பதிவுசெய்வதற்கு

1. பல்கலைக்கழக அனுமதிக்கான இலத்திரனியல் விண்ணப்பபடிவத்தை இணையத்தில் நிரப்புவதற்கு முன் நீங்கள் ஒரு பயனராக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் இணையதளத்தில் **(www.ugc.ac.lk)** பதிவுசெய்துகொள்ள வேண்டும்.
2. இலத்திரனியல் விண்ணப்பப்படிவத்தை நிரப்பும் விண்ணப்பதாரிகளுக்கு கட்டாயமாக **தேசிய அடையாள அட்டையும் செல்லுபடியான மின்னஞ்சல் முகவரியும்** இருத்தல் வேண்டும்.
3. இலத்திரனியல் விண்ணப்பப்படிவத்தை நிரப்பும் விண்ணப்பதாரிகள் தேசிய அடையாள அட்டையின் **இரு பக்கங்களும் ஸ்கேன் செய்யப்பட்ட பிரதியை** வைத்திருத்தல் வேண்டும்.

உ+ம் : தேசிய அடையாள அட்டையின் இரு பக்கங்களும் ஸ்கேன் செய்யப்பட்ட பிரதி

எச்சரிக்கை :

தாங்கள் ஸ்கேன் செய்து பதிவேற்றிய தேசிய அடையாள அட்டையின் பிரதிகள் மிகவும் தெளிவாகவும் உண்மையானதாகவும் இருத்தல் வேண்டும். அவ்வாறு இல்லாவிடின் தங்களது விண்ணப்பம் நிராகரிக்கப்படும் அல்லது அநாவசியமாக தாமதப்படுத்தப்படலாம். எனவே ஸ்கேன் செய்யப்பட்ட உமது தேசிய அடையாள அட்டையின் உண்மையானதும் தெளிவானதுமான பிரதியொன்றை பதிவேற்றம் செய்வது தங்களின் கடமையாகும்.

4. நீங்கள் ஒரு பயனராக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் இணையதளத்தில் பதிவு செய்வதற்கு கீழ்வரும் தகவல்களை வழங்குதல் வேண்டும்.

- முதலில் நீங்கள் விரும்பும் மொழியை (தமிழ்/சிங்களம்/ஆங்கிலம்) தெரிவுசெய்யவும்.
- பின் விண்ணப்பப்படிவத்தின் சகல தகவல்களும் நீங்கள் விரும்பிய மொழியில் (தமிழ்/சிங்களம்/ஆங்கிலம்)காட்சிப்படுத்தப்படும்.
- இருப்பினும் விண்ணப்பத்தை நிரப்பும் போது **ஆங்கில மொழியில் மட்டுமே நிரப்பப்படல் வேண்டும்.**
- உங்கள் மவுஸ் கர்சரை (!) ஐகனுக்கு நகர்த்துவதன் மூலம் குறிப்பிட்ட பகுதியை நிரப்புவதற்கான அறிவுறுத்தல்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

குறிப்பு:
க.பொ.த.(உ/த) பரீட்சையில் பயன்படுத்திய அதே தேசிய அடையாள அட்டை இலக்கத்தையே இத் தேவைக்காக பயன்படுத்தல் வேண்டும்.

பின்வரும் படிமுறைகள் பின்பற்றப்பட வேண்டும்.

1. முதல் பெட்டியில் தேசிய அடையாள அட்டை இலக்கத்தை பதிவு செய்க. தேசிய அடையாள அட்டை இலக்கம் இல்லை எனில் பெட்டியை வெறுமையாக விடுவதுடன் படிமுறை 4ற்கு செல்க.
2. அடுத்த பெட்டியில் மேலே பதிவு செய்த தேசிய அடையாள அட்டை இலக்கத்தை மீள பதிவு செய்க
3. அடுத்து, தேசிய அடையாள அட்டை வழங்கப்பட்ட திகதியை தெரிவு செய்க.
4. க.பொ.த.(உ/த) பரீட்சை 2018 தொடர்பான தகவல்கள் பதிவு செய்யும் பகுதியில் க.பொ.த.(உ/த) பரீட்சைக்கு பயன்படுத்திய சுட்டெண்னை பதிக.
5. தேசிய அடையாள அட்டையினை க.பொ.த.(உ/த) பரீட்சையில் பயன்படுத்திய அடையாள வகை(ID type) யாக தெரிவு செய்க. எனினும் நீர் தேசிய அடையாள அட்டையினை பயன்படுத்தாது, பின்வருவனவற்றுள் ஓர் அடையாள அட்டையினைப் பயன்படுத்தி க.பொ.த.(உ/த) பரீட்சையில் உமது அடையாளத்தை உறுதிப்படுத்திய பரீட்சாத்தி எனின், பின்வரும் பட்டியலிலிருந்து நீர் க.பொ.த.(உ/த) பரீட்சைக்கு பயன்படுத்திய அடையாள அட்டையினை தெரிவு செய்க.

   I. தபால்மூல அடையாள அட்டை (PIC)
   II. சாரதி அனுமதிப்பத்திரம் (DL)
   III. இலங்கை கடவுச்சீட்டு (SLPP)
   IV. வெளிநாட்டு கடவுச்சீட்டு (FPP)
   V. உறுதிப்படுத்தப்பட்ட புகைப்படம் (CP)

6. அடுத்த பெட்டியில் அவ் அடையாள அட்டையின் அடையாள இலக்கத்தை பதிவு செய்க.
7. பின்னர், அவ் அடையாள அட்டை வழங்கப்பட்ட திகதியை தெரிவு செய்க.

முக்கியம் : மேலே கேட்கப்பட்ட ஏதேனும் தகவல்கள் உமக்கு பொருத்தமற்றவையாயின், அத்துடன் தொடர்பான பெட்டியினை வெறுமையாகவிடவும்.

உதாரணம் :

5. இந்தப் பகுதியை நிரப்பியதன் பின்னர் “அடுத்து” எனும் தெரிவை அழுத்தி அடுத்த பக்கத்திற்கு செல்க.
இந்தப் பகுதியை நிரப்பும் பொழுது, நீங்கள்:

(i) **இரு பக்கங்களும் ஸ்கேன் செய்யப்பட்ட உங்கள் தேசிய அடையாள அட்டையின் பிரதியை பதிவேற்றம் செய்யவும்.**
இந்த விண்ணப்பப்படிவத்தை நிரப்புவதற்கு முன்னர் தேசிய அடையாள அட்டையின் இரு பக்கங்களையும் ஸ்கேன் செய்துகொள்ளவும்.

க.பொ.த.(உ/த) பரீட்சையில் தேசிய அடையாள அட்டை தவிர்ந்த மேலே குறிப்பு (5) இல் குறிப்பிட்டுள்ள வேறு ஏதேனும் அடையாள அட்டை வகையினை பயன்படுத்தியோர், தேசிய அடையாள அட்டைக்குப் பதிலாக அவ் அடையாள அட்டையின் (இரு பக்கங்களும்) ஸ்கேன் செய்யப்பட்ட பிரதியை பதிவேற்றல் வேண்டும். உமது அடையாளத்தை உறுதிப்படுத்த உறுதிப்படுத்தப்பட்ட புகைப்படம் ஒன்றினை நீர் பயன்படுத்தி இருப்பின் க.பொ.த.(உ/த) பரீட்சையில் பயன்படுத்திய உறுதிப்படுத்தப்பட்ட புகைப்படத்திற்கு (CP) பதிலாக உமது அடையாளத்தை உறுதிப்படுத்தும் சத்தியவோலை ஒன்றினை நீர் பதிவேற்றல் வேண்டும்.

(ii) **செல்லுபடியான மின்னஞ்சல் முகவரியை வழங்கவும்**
உங்களுக்கு ஒரு மின்னஞ்சல் முகவரி இல்லை எனின் இப்பகுதியை நிரப்பு முன் மின்னஞ்சல் முகவரி ஒன்றை உருவாக்குக. வேறொருவரின் மின்னஞ்சல் முகவரியை இதற்காக பயன்படுத்த வேண்டாம்.

(iii) **கையடக்க தொலைபேசி இலக்கம் ஒன்றை வழங்கவும்**
கையடக்க தொலைபேசி இலக்கம் உங்களுடையதாகவோ அல்லது உங்கள் பெற்றோர் அல்லது உமக்கு நெருக்கமானவரின் இலக்கமாகவோ இருக்கலாம். இந்த இலக்கம் இன்னொருவரால் இதே வருடத்தில் இலத்திரனியல் சேவையினூடாக பல்கலைக்கழக அனுமதிக்கு விண்ணப்பிப்பதற்கு பயன்படுத்தப்படலாகாது.

உமது பயனர் அடையாளத்துடன் சரிபார்த்தல் இணைப்பும் (Verification link) உமது மின்னஞ்சல் முகவரிக்கும் செயற்படுத்தல் குறியீடு (Activation Code) உங்களால் வழங்கப்பட்டுள்ள கையடக்க தொலைபேசி இலக்கத்திற்கும் அனுப்பி வைக்கப்படும்.

உங்கள் UGC கணக்கில் உள்நுழைய நீங்கள் ஒரு சொந்த கடவுச்சொல்லை உருவாக்க வேண்டும்.

வலுவான கடவுச்சொல் (Password) ஒன்றை உருவாக்குவது எவ்வாறு?

- கடவுச்சொல் ஆகக்குறைந்தது எட்டு எழுத்துக்களைக் கொண்டிருத்தல் வேண்டும்
- உங்கள் தேசிய அடையாள அட்டை இலக்கத்தையோ அல்லது உங்கள் பெயரையோ கடவுச்சொல்லில் உள்ளடக்கக் கூடாது.
- முன்னைய கடவுச்சொற்களிலிருந்து முற்றிலும் வேறுபட்ட ஒரு கடவுச்சொல்லாக இருத்தல் வேண்டும்.
- பின்வருவனவற்றுள் குறைந்தது ஏதேனும் மூன்றை உள்ளடக்கியிருத்தல் நன்று
  - ஆங்கில பெரிய எழுத்துக்கள்
  - ஆங்கில சிறிய எழுத்துக்கள்
  - இலக்கங்கள்
  - நிறுத்தற்குறிகள்

எழுத்து வகைகள்	உதாரணங்கள்
ஆங்கில பெரிய எழுத்துக்கள்	A,B,C
ஆங்கில சிறிய எழுத்துக்கள்	a,b,c
இலக்கங்கள்	0,1,2,3,4,5,6,7,8,9
எழுத்துக்கள் மற்றும் இலக்கங்கள் தவிர்ந்த விசைப்பலகையில் காணப்படும் ஏனைய குறியீகள்	` ~ ! @ # $ % ^ & * ( ) _ - + = | \ { } [ ] ’ ” ; : < > , . ? /

குறிப்பு : பெயர் மற்றும் முகவரியை பதிவு செய்வதற்கு மாத்திரமே ஆங்கில பெரிய (CAPITAL) எழுத்துக்கள் பயன்படுத்தப்பட வேண்டும்.

உதாரணம்:

“பதிவு செய்க” எனும் தெரிவை அழுத்துவதற்கு முன் இந்த இலத்திரனியல் சேவையின் பயனர்களுக்கான விதிமுறைகளையும் நிபந்தனைகளையும் நன்கு வாசித்து தெரிந்துகொள்ளவும்.

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் இணையதள சேவையினை பயன்படுத்துவது தொடர்பான விதிமுறைகளும் நிபந்தனைகளும்

1. நான் 2018 ஆம் ஆண்டு இடம்பெற்ற க.பொ.த.(உ/த) பரீட்சையை அடிப்படையாகக் கொண்டு பல்கலைக்கழக அனுமதிக்கு விண்ணப்பிப்பதற்கு மாத்திரம் இந்த இணையதள சேவையினைப் பயன்படுத்துவதற்கும், மற்றும் வேறு எந்தவொரு நோக்கத்திற்காகவும் பயன்படுத்தாமலிருக்கவும் இணங்குகின்றேன்.

2. நான் 2018 ஆம் ஆண்டு க.பொ.த. (உ/த) பரீட்சைக்கு தோற்றிய பரீட்சார்த்தியாவேன். என்னால் வழங்கப்பட்டுள்ள சுட்டிலக்கம், தேசிய அடையாள அட்டை இலக்கம், மின்னஞ்சல் முகவரி ஆகியவை எனக்கு சொந்தமானவை என்றும் அவை வேறு எவருக்கும் சொந்தமானவையல்ல என்பதை உறுதிப்படுத்துகின்றேன்.

3. இந்த இணையதள சேவையினூடாக பல்கலைக்கழக அனுமதிக்கு விண்ணப்பிக்கும் பொழுது, பதிவுசெய்கையில் அல்லது விண்ணப்ப்படிவத்தின் சகல படிமுறைகளிலும் என்னால் நிரப்பப்பட்ட அல்லது நிரப்பப்படவுள்ள சகல தகவல்களும் உண்மையானவையும் சரியானவையும் என உறுதிப்படுத்துகின்றேன்.

4. எந்த சந்தர்ப்பத்திலும் பொய்யான, தவறாக வழிநடத்தும், தவறான மற்றும் மோசடியான தகவல்கள் விபரங்கள் மற்றும் கூற்றுக்களை வழங்குதல் அல்லது இந்த வலைதளத்தின் உள்ளடக்கத்தை மாற்றுவதற்கான முயற்சி, மற்றைய பயனர் கணக்குகளினுள் மோசடியாக உள்நுழைதல் மற்றும் மற்றையவர்களினால் வழங்கப்பட்டுள்ள தகவல்களை மோசடியாக முறையில் மாற்றுதல் போன்றவற்றில் ஈடுபடுமிடத்து எனது பல்கலைக்கழக அனுமதி எந்த நேரத்திலும் செல்லுபடியற்றதாகிவிடும் என்றும் நான் சட்டரீதியான நடவடிக்கைகளுக்கு உட்படுத்தப்படுவேன் என்றும் புரிந்துகொண்டு உடன்படுகின்றேன்.

5. இவ் இணையதள சேவையினுடாக விண்ணப்பத்தை சமர்ப்பித்ததன் பின்னர் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் அனுமதியின்றி என்னால் வழங்கப்பட்ட எந்தவொரு தகவலையும் மாற்றம் செய்தற்கு இடமளிக்கப்பட மாட்டாது என்பதை அறிவேன்.

6. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு என்னை மின்னஞ்சல், கையடக்க தொலைபேசி, தபால் கடிதங்கள் மற்றும் ஏனைய இலத்திரனியல் மற்றும் இலத்திரனியல் அல்லாத ஊடகங்களினூடாகவும் என்னை தொடர்புகொள்வதற்கு அதிகாரமளிக்கிறேன்.

7. ஊடகங்களில் அறிவிக்கப்படும் விண்ணப்பங்களை சமர்ப்பிக்கும் இறுதி தினத்தன்றோ அல்லது அதற்கு முன்பதாகவோ மிகச் சரியாக பூரணப்படுத்தி அச்சுப்பிரதி செய்து ஒப்பமிடப்பட்ட விண்ணப்பத்துடன் அனைத்து தேவையான ஆதார ஆவணங்களையும் இணைத்து பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவிற்கு சமர்ப்பிக்கும் வரை எனது தகவல்களை சான்றுப்படுத்தும் நோக்கத்திற்காக மட்டுமே இணையதளத்தினூடாக சமர்ப்பிக்கப்பட்ட எனது இலத்திரனியல் விண்ணப்பம் பல்கலைக்கழக அனுமதிக்கு கருத்திலெடுக்கப்படமாட்டாது என்பதை நான் தெளிவாக அறிந்துகொண்டுள்ளேன்.

நீர் இந்த விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளுக்கு உடன்படுகின்றீரா இல்லையா என்பதை முதலில் தெரிவு செய்து பின் பதிவு செய்வதற்கான தெரிவை அழுத்தவும்.

6. பதிவு செய்க எனும் தெரிவை அழுத்தியதும் பின்வரும் பகுதி திரையில் காண்பிக்கப்படும்.

உதாரணம்:

7. உங்களால் வழங்கப்பட்ட மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பப்பட்டுள்ள இணைப்பை **(Verification Link)** யும் கையடக்க தொலைபேசி இலக்கத்திற்கு அனுப்பப்பட்டுள்ள செயற்படுத்தல் குறியீட்டையும் **(Activation Code)** பயன்படுத்தி உமது **UGC** கணக்கை செயற்படுத்தவும்.

உதாரணம்:

UG/2018/000012 – Initial Registration Inbox x

UGC Administrator
to me

Dear Miss.Bandara DPS,

Thank you for registering at University Grants Commission, Sri Lanka.

Your User ID – XXXXXXXXXXXX

Please Click here to verify your account

Please feel free to contact us for further information.

Yours sincerely,

University Admissions Department
University Grants Commission

உங்கள் மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பப்பட்டுள்ள சரிபார்த்தல் இணைப்பினை **(Verification Link)** கிளிக் செய்தவுடன், பின்வரும் திரை காண்பிக்கப்படும். உங்கள் செயற்படுத்தல் இணைப்புடன் உமது மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பப்பட்டுள்ள பயனர் அடையாளம் **(User ID)** மற்றும் உமது கையடக்க தொலைபேசி இலக்கத்திற்கு அனுப்பப்பட்டுள்ள செயற்படுத்தல் குறியீட்டையும் **(Activation Code)** வழங்கி உமது **UGC** கணக்கினைச் செயற்படுத்துக.

8. உங்கள் **UGC** கணக்கை சரியாக செயற்படுத்தியதன் பின்னர் பின்வரும் தகவல் திரையில் காண்பிக்கப்படும்.

உதாரணம்:

9. உங்கள் **UGC** கணக்கை சரியாக செயற்படுத்தியதன் பின், வெற்றிகரமாக செயற்படுத்தப்பட்டமைக்கான தகவல் உங்கள் மின்னஞ்சல் முகவரிக்கும் நீர் வழங்கிய கையடக்க தொலைபேசி இலக்கத்திற்கும் அனுப்பி வைக்கப்படும்.

உதாரணம்:

10. உமது **UGC** கணக்கினை வெற்றிகரமாக பதிவுசெய்தவுடன் உங்கள் பயனர் அடையாளம் மற்றும் கடவுச்சொல்லைப் பயன்படுத்தி பல்கலைக்கழக அனுமதிக்கான விண்ணப்பப் படிவத்தை நிரப்பலாம்.

(B) உங்கள் பல்கலைக்கழக அனுமதிக்கான இலத்திரனியல் விண்ணப்பத்தை நிரப்புதல்

1. முதலில் உங்கள் **UGC** கணக்கினுள் உள்நுழையவும்.
   உங்கள் **UGC** கணக்கினுள் உள்நுழைவதற்கு "உள்நுழைய இங்கே அழுத்தவும்" எனும் தெரிவை அழுத்தவும்.

2. இலத்திரனியல் விண்ணப்பப்படிவத்தில் வினவுவவற்றை நீர் விரும்பிய மொழியில் பார்வையிடலாம். மேலும் நிரப்பும் படிமுறையில் நீர் விரும்பும் (தமிழ்/சிங்களம்/ஆங்கிலம்) மொழியினை உமது கணக்கினுள் நுளையும் போதோ ஏனைய படிமுறையின் போதோ மாற்ற முடியும். இருப்பினும் விண்ணப்பப்படிவம் **ஆங்கிலத்தில் மட்டுமே** நிரப்பப்படல் வேண்டும்.

உதாரணம்:

3. உங்கள் **UGC** கணக்கினுள் உள்நுழைய உங்கள்பயனர் அடையாளம்(User ID) மற்றும் கடவுச்சொல்லை (Password) பதிவு செய்ய வேண்டும்.

உதாரணம்:

குறிப்பு : நீர் கடவுச்சொல்லை மறந்துவிட்டீர் எனின் "கடவுச்சொல்லை மறந்துவிட்டீரா" எனும் தெரிவை அழுத்தி கடவுச்சொல்லை மாற்றியமைத்துக்கொள்ளவும்.

4. விண்ணப்பப் படிவத்தை நிரப்புதல்

- பல்கலைக்கழக அனுமதிக்கான இலத்திரனியல் விண்ணப்பப்படிவம் நான்கு படிமுறைகளில் நிரப்பப்படுகின்றது.
- குறித்த படிமுறையில் சகல அத்தியவசிய தகவல்களையும் வழங்கிய பின்னர் அடுத்த படிமுறைக்கு செல்லுவதற்காக "அடுத்து" எனும் தெரிவை அழுத்தும் பொழுது குறித்த படிமுறையில் வழங்கப்பட்டுள்ள சகல தகவல்களும் தன்னியக்கமாக சேமிக்கப்படும். குறித்த படிமுறையில் சகல அத்தியவசிய தகவல்களையும் நிரப்பாது நீங்கள் அடுத்த படிமுறைக்கு செல்ல முடியாது.
- குறித்த படிமுறையில் சகல அத்தியவசியமான தகவல்களையும் நிரப்பாது நீங்கள் அடுத்த படிமுறைக்கு செல்ல முயற்சிக்கும் பொழுது கணனி திரையில் அறிவிக்கப்படுவீர்கள்.
- இப்படிமுறைகளில் எவையேனும் ஒரு படிமுறையில் நீர் வெளியேறினீர் எனின் அப்படிமுறையின் தகவல்கள் தன்னியக்கமாக சேமிக்கப்படுவதுடன் உங்களால் பின்னர் விண்ணப்பத்தை தொடரக்கூடியதாகவிருக்கும்.
- நீங்கள் மவுஸ் கர்சரை (!) ஐகனுக்கு நகர்த்துவதன் மூலம் ஒவ்வொரு படிமுறையையும் நிரப்புவதற்கான அறிவுறுத்தல்களைப் பார்வையிடலாம்.

படிமுறை 1: விண்ணப்பதாரியின் தனிப்பட்ட தகவல்கள்

குறிப்பு : முகவரியை பதிவுசெய்யும் போது உதாரணத்தில் காட்டப்பட்டுள்ளவாறு உமது முகவரியின் ஒவ்வொரு பகுதியினையும் வேறுபடுத்துவதற்கு ',' வினை பயன்படுத்தவும். (உ+ம்:- இல, வீதி, நகரம்) முகவரியை பதிவுசெய்வதற்கு ஆங்கில பெரிய எழுத்துகளை மாத்திரமே பயன்படுத்தவும்.

நீங்கள் விண்ணப்பத்தை சமர்ப்பித்த பின்னர் அல்லது வெட்டுப்புள்ளி வெளியிடப்பட்ட பின்னர் உமது விலாசத்தில் மாற்றங்களிருப்பின் தயவு செய்து பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவிற்கு அறிவிக்கவும்.

படிமுறை 1 ஐ நிரப்புவதற்கான உதாரணம் கீழே காட்டப்பட்டுள்ளது.

உதாரணம் :

படிமுறை 1 ஐ நீங்கள் நிரப்பியதன் பின்னர் "சேமி மற்றும் அடுத்து" எனும் தெரிவை அழுத்தி தரவுகளை சேமித்து படிமுறை 2 இற்கு செல்லவும். ☞

படிமுறை 2 : க.பொ.த. (சா/த) மற்றும் க.பொ.த. (உ/த) பெறுபேறுகள்

- படிமுறை 2 ஐ நீங்கள் அடைந்த பின் உங்கள் க.பொ.த. (சா/த.) மற்றும் (உ/த) பெறுபேறுகள் தன்னியக்கமாக நிரப்பப்பட்டுள்ளதைக் காணலாம்.
- இப்பெறுபேறுகள் சரியானவை எனின் "சரியானவை" எனும் தெரிவை கிளிக் செய்க.
- அவ்வாறில்லை எனின் பெறுபேறுகளை மீளப்பதிவு செய்க.

குறிப்பு : நீங்கள் பதிவுசெய்த பெறுபேறுகள் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் பரீட்சைகள் திணைக்களத்தின் பெறுபேறுகளோடு ஒப்பிட்டுப் சரிபார்க்கப்படும்.

படிமுறை 2 இல் தரப்பட்டுள்ள க.பொ.த. (சா/த.) மற்றும் (உ/த) பரீட்சைக்கு மேலதிகமாக நீங்கள் தோற்றியிருப்பின் அவ்அமர்வின் விபரங்களை "சேர்க்க" எனும் தெரிவை அழுத்தி பெறுபேறுகளை பதிவுசெய்யவும்.

கீழ்வரும் மாதிரி படிமுறை 2 ஐ நிரப்புவதற்கான உதாரணமாகும்

படிமுறை 2 ஐ நிரப்புவதற்கான உதாரணம் கீழே காட்டப்பட்டுள்ளது.

உதாரணம் :

படிமுறை 2 ஐ நீங்கள் நிரப்பியதன் பின்னர் "சேமி மற்றும் அடுத்து" எனும் தெரிவை அழுத்தி தரவுகளை சேமித்து படிமுறை 3 இற்கு செல்லவும். ☞

படிமுறை 3 : விண்ணப்பதாரியின் பாடசாலை பற்றிய விபரங்கள்

பாடசாலைப் பரீட்சார்த்திகளுக்கு

- க.பொ.த.(உ/த) பரீட்சைக்கு நீர் பாடசாலைப் பரீட்சார்த்தியாக தோற்றியிருப்பின் முதலில் "பாடசாலைப் பரீட்சார்த்தி" என்பதைத் தெரிவு செய்க.
- மாவட்ட ரீதியாக பாடசாலைகளின் பெயர்கள் பட்டியல்படுத்தப்பட்டுள்ளன. நீங்கள் சரியான நிருவாக மாவட்டத்தை தெரிவு செய்யின் அந்நிருவாக மாவட்டத்திலுள்ள பாடசாலைகள் பட்டியல்படுத்தப்படும், அவற்றில் நீங்கள் கல்விகற்ற பாடசாலையை தெரிவு செய்யலாம்.
- பின் பாடசாலை சம்பந்தமான தகவல்களை வழங்குக.

இப்பட்டியலில் உங்கள் பாடசாலையின் பெயர் காணப்படாவிடின் அரச தகவல் நிலையத்துடன் (1919) தொடர்புகொள்ளவும்.

உதாரணம் :

படிமுறை 3 ஐ ஒரு பாடசாலை பரீட்சார்த்தி நிரப்புவதற்கான உதாரணம் கீழே காட்டப்பட்டுள்ளது.

தனிப்பட்ட பரீட்சார்த்திகளுக்கு -

- நீங்கள் க.பொ.த. (உ/த) பரீட்சைக்கு தனிப்பட்ட பரீட்சார்த்தியாக தோற்றியிருப்பின் “தனிப்பட்ட பரீட்சார்த்தி” என்பதை தெரிவு செய்க. மாவட்ட ரீதியாக பாடசாலைகளின் பெயர்கள் பட்டியல்படுத்தப்பட்டுள்ளன. நீங்கள் சரியான மாவட்டத்தை தெரிவு செய்யின் அம்மாவட்டத்திலுள்ள பாடசாலைகள் பட்டியல்படுத்தப்படும், அவற்றில் நீங்கள் கல்விகற்ற பாடசாலையை தெரிவு செய்யலாம்.

கீழ்வரும் மாதிரி தனிப்பட்ட பரீட்சார்த்தி படிமுறை 3 ஐ நிரப்புவதற்கான உதாரணமாகும்.

உதாரணம் :

படிமுறை 3 ஐ நீங்கள் நிரப்பியதன் பின்னர் “சேமி மற்றும் அடுத்து” எனும் தெரிவை அழுத்தி தகவல்களை சேமித்து **படிமுறை 4** ஐ நிரப்பவும் ☞

படிமுறை 4 - கற்கைநெறிகளினதும் பல்கலைக்கழகங்களினதும் உமது விருப்பொழுங்கு

- இப்படிமுறையை நிரப்புவதற்கு முன் பல்கலைக்கழக அனுமதிக் கையேட்டின் 3.1 ஆம் பகுதியை கவனமாக வாசிக்கவும்.

- **மாணவர் தெரிவுசெய்த குறித்த கற்கைநெறியும் பல்கலைக்கழக்கழகமும் தெரவின்போது ஒன்றாக கருத்திற்கொள்ளப்படும் என்பதை விண்ணப்பதாரிகள் மிகவும் தெளிவாக விளங்கிக்கொள்ளுதல் வேண்டும். குறிப்பிட்ட கற்கைநெறிக்குத் தேவையான Z புள்ளிகளைப் பெற்றிருப்பினும் அவர்கள் விருப்பொழுங்கில் தெரிவு செய்யாத எந்தவொரு கற்கைநெறிக்கும் பல்கலைக்கழக அனுமதிக்கு கருத்திலெடுக்கப்படமாட்டார்.**

  - **படிமுறை 4** ஐ நிரப்புவதற்கான உதாரணம் கீழே காட்டப்பட்டுள்ளது.

    - “Courses” எனும் பட்டியலில் இருந்து, கற்கைநெறியினை தெரிவு செய்க.
    - அருகில் அக் கற்கைநெறி நடாத்தப்படும் பல்கலைக்கழகங்களின் தெரிவுப்பட்டியல் “Universitity” இல் தோன்றும்.
    - உமது விருப்பிற்கு அமைய பட்டியலில் இருந்து பல்கலைக்கழகத்தினைத் தெரிவு செய்து, “சேர்க்க” எனும் தெரிவினை அழுத்துக.
    - ஒரே கற்கைநெறியினை அதே பல்கலைக்கழகத்துடன் உமது விருப்பொழுங்கில் ஒன்றுக்கு மேற்பட்ட தடவை சேர்க்கக்கூடாது.
    - தாங்கள் விரும்பிய கற்கைநெறிகள் மற்றும் பல்கலைக்கழகங்களை தெரிவுசெய்ததன் பின்னர் “மொத்தமாக தெரிவுசெய்த பாடநெறிகள்” என்பதை அழுத்தி தாங்கள் தெரிவுசெய்த கற்கைநெறிகள் மற்றும் பல்கலைக்கழகங்களை விருப்பொழுங்கில் பார்க்கலாம்.
    - “<” மற்றும் “>” தெரிவுகளை அழுத்துவதன் மூலம் கற்கைநெறி மற்றும் பல்கலைக்கழக விருப்பொழுங்கில் மாற்றங்களை மேற்கொள்ளலாம்.
    - குறிப்பிட்ட ஒரு கற்கைநெறி மற்றும் பல்கலைக்கழகத்தை நீக்க விரும்பின் “X” எனும் தெரிவை அழுத்தி விருப்பொழுங்கிலிருந்து நீக்கலாம்.

கற்கைநெறிகள் மற்றும் பல்கலைக்கழகங்களை தெரிவுசெய்வதற்கான வழிகாட்டல் கீழே தரப்பட்டுள்ளது.

முக்கியம்

இக்கைநூலின் பகுதி 2.2 இல் தரப்பட்டுள்ள முன் நிபந்தனைகளைப் பூர்த்திசெய்துள்ள விண்ணப்பதாரிகள் மட்டும் இக் கற்கைநெறிகள் மற்றும் பல்கலைக்கழகத்திற்கு கருத்திலெடுக்கப்படுவர்.

- கற்கைநெறிகளுக்கான குறியீடுகளின் (Uni Codes) பட்டியல் பக்கம் 127-131 இல் தரப்பட்டுள்ளது.
- க.பொ.த. (சா/த.) பரீட்சையில் தேவைகளைப் பூர்த்திசெய்ய வேண்டிய கற்கைநெறிகளின் பட்டியல் பக்கம் 132 இல் தரப்பட்டுள்ளது.
- உளச்சார்பு / செயன்முறை பரீட்சையில் சித்தியடையவேண்டிய கற்கைநெறிகளின் பட்டியல் பக்கம் 133 இல் தரப்பட்டுள்ளது.

பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பத்தினை அச்சுப்பிரதி செய்யும்பொழுது கற்கைநெறிகளுக்கும் பல்கலைக்கழகங்களுக்குமான விருப்பொழுங்கு (“Uni Codes”) அச்சுப்பிரதியில் கீழ்வருமாறு தோன்றும்

			UNI-CODE						UNI-CODE						UNI-CODE						UNI-CODE						UNI-CODE			
O		1	0	0	1	B		26	0	0	7	L		51						76						101				
r		2	0	0	1	F		27	0	0	7	R		52						77						102				
d		3	0	0	1	C		28	0	0	4	H		53						78						103				
e		4	0	0	2	B		29	0	0	4	K		54						79						104				
r		5	0	5	8	A		30	0	0	4	M		55						80						105				
		6	0	0	1	D		31	0	0	7	K		56						81						106				
of		7	0	0	3	B	@	32	0	2	5	E		57						82						107				
		8	0	0	1	H		33	0	2	6	G		58						83						108				
P		9	0	0	1	K	#	34	0	2	7	D		59						84						109				
r		10	0	0	4	K		35	0	7	6	U		60						85						110				
e		11	0	0	5	M		36	0	7	9	J		61						86						111				
f		12	0	0	6	B		37	0	8	7	M		62						87						112				
e		13	0	3	2	N		38	0	0	6	E		63						88						113				
r	@	14	0	3	7	B		39	0	0	4	E		64						89						114				
e	@	15	0	5	1	B		40						65						90						115				
n	@	16	0	5	2	C		41						66						91						116				
c	@	17	0	5	4	B		42						67						92						117				
e	@	18	0	5	4	A		43						68						93						118				
		19	0	6	4	U		44						69						94						119				
		20	0	0	6	C		45						70						95						120				
	# @	21	0	3	4	G		46						71						96						121				
		22	0	3	5	C		47						72						97						122				
		23	0	6	2	F		48						73						98						123				
		24	0	0	6	J		49						74						99						124				
		25	0	0	6	H		50						75						100						125				

 # இந்த கற்கைநெறிக்கான உளச்சார்பு பரீட்சை /செயன்முறைப் பரீட்சையில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்

@ இந்த கற்கை நெறிகளுக்காக க.பொ.த.(சா/த) பரீட்சையில் குறித்த பாடங்களில் சித்திபெற்று முன் நிபந்தனைகளை பூர்த்தி செய்தல் வேண்டும்.

கற்கை நெறி மற்றும் பல்கலைக்கழகங்களுக்கான "Uni Codes"

	கற்கைநெறி	பல்கலைக்கழகம்	UNI - CODE
✪	மருத்துவம்	கொழும்புப் பல்கலைக்கழகம்	001A
✪	மருத்துவம்	பேராதனைப் பல்கலைக்கழகம்	001B
✪	மருத்துவம்	ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம்	001C
✪	மருத்துவம்	களனிப் பல்கலைக்கழகம்	001D
✪	மருத்துவம்	யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்	001E
✪	மருத்துவம்	உறுகுணைப் பல்கலைக்கழகம்	001F
✪	மருத்துவம்	கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை	001H
✪	மருத்துவம்	இலங்கை ரஜரட்ட பல்கலைக்கழகம்	001K
✪	மருத்துவம்	இலங்கை சபரகமுவப் பல்கலைக்கழகம்	001L
✪	மருத்துவம்	இலங்கை வயம்பப் பல்கலைக்கழகம்	001M
✪	பல் அறுவைச் சிகிச்சை	பேராதனைப் பல்கலைக்கழகம்	002B
✪	விலங்கு மருத்துவ விஞ்ஞானம்	பேராதனைப் பல்கலைக்கழகம்	003B
✪	விவசாயம்	யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்	004E
✪	விவசாயம்	கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை	004H
✪	விவசாயம்	இலங்கை ரஜரட்ட பல்கலைக்கழகம்	004K
✪	விவசாயம்	இலங்கை சபரகமுவப் பல்கலைக்கழகம்	004L
✪	விவசாயம்	இலங்கை வயம்பப் பல்கலைக்கழகம்	004M
✪	உணவு விஞ்ஞானமும் போசாக்கும்	இலங்கை வயம்பப் பல்கலைக்கழகம்	005M
✪	உயிரியல் விஞ்ஞானம்	கொழும்புப் பல்கலைக்கழகம்	006A
✪	உயிரியல் விஞ்ஞானம்	பேராதனைப் பல்கலைக்கழகம்	006B
✪	உயிரியல் விஞ்ஞானம்	ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம்	006C
✪	உயிரியல் விஞ்ஞானம்	களனிப் பல்கலைக்கழகம்	006D
✪	உயிரியல் விஞ்ஞானம்	யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்	006E
✪	உயிரியல் விஞ்ஞானம்	உறுகுணைப் பல்கலைக்கழகம்	006F
✪	உயிரியல் விஞ்ஞானம்	கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை	006H
✪	உயிரியல் விஞ்ஞானம்	இலங்கைத் தென்கிழக்கு பல்கலைக்கழகம்	006J
✪	பிரயோக விஞ்ஞானங்கள் (உயிர். விஞ்.)	இலங்கை ரஜரட்ட பல்கலைக்கழகம்	007K
✪	பிரயோக விஞ்ஞானங்கள் (உயிர். விஞ்.)	இலங்கை சபரகமுவப் பல்கலைக்கழகம்	007L
✪	பிரயோக விஞ்ஞானங்கள் (உயிர். விஞ்.)	வவுனியா வளாகம்	007R
✪	பொறியியல்	பேராதனைப் பல்கலைக்கழகம்	008B
✪	பொறியியல்	ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம்	008C
✪	பொறியியல்	யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்	008E
✪	பொறியியல்	உறுகுணைப் பல்கலைக்கழகம்	008F
✪	பொறியியல்	மொறட்டுவைப் பல்கலைக்கழகம்	008G
✪	பொறியியல்	இலங்கைத் தென்கிழக்கு பல்கலைக்கழகம்	008J
✪	பொறியியல் (EM)	மொறட்டுவைப் பல்கலைக்கழகம்	009G
✪	பொறியியல் (TM)	மொறட்டுவைப் பல்கலைக்கழகம்	010G
✪	கணிய அளவையியல்	மொறட்டுவைப் பல்கலைக்கழகம்	011G
✪	கணனி விஞ்ஞானம்	களனி பல்கலைக்கழகம்	012D
✪	கணனி விஞ்ஞானம்	யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்	012E
✪	கணனி விஞ்ஞானம்	உறுகுணைப் பல்கலைக்கழகம்	012F
✪	கணனி விஞ்ஞானம்	கொழும்புப் பல்கலைக்கழக கணனிக் கல்லூரி	012T
✪	கணனி விஞ்ஞானம்	திருகோணமலை வளாகம்	012W
✪	பௌதிக விஞ்ஞானம்	கொழும்புப் பல்கலைக்கழகம்	013A
✪	பௌதிக விஞ்ஞானம்	பேராதனைப் பல்கலைக்கழகம்	013B
✪	பௌதிக விஞ்ஞானம்	ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம்	013C

	கற்கைநெறி	பல்கலைக்கழகம்	UNI - CODE
✪	பௌதிக விஞ்ஞானம்	களனிப் பல்கலைக்கழகம்	013D
✪	பௌதிக விஞ்ஞானம்	யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்	013E
✪	பௌதிக விஞ்ஞானம்	உறுகுணைப் பல்கலைக்கழகம்	013F
✪	பௌதிக விஞ்ஞானம்	கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை	013H
✪	பௌதிக விஞ்ஞானம்	இலங்கைத் தென்கிழக்கு பல்கலைக்கழகம்	013J
✪	அளவையியல் விஞ்ஞானம்	இலங்கை சபரகமுவப் பல்கலைக்கழகம்	014L
✪	பிரயோக விஞ்ஞானங்கள் (பௌ. விஞ்.)	இலங்கை ரஜரட்ட பல்கலைக்கழகம்	015K
✪	பிரயோக விஞ்ஞானங்கள் (பௌ. விஞ்.)	இலங்கை சபரகமுவப் பல்கலைக்கழகம்	015L
✪	பிரயோக விஞ்ஞானங்கள் (பௌ. விஞ்.)	இலங்கை வயம்பப் பல்கலைக்கழகம்	015M
✪	பிரயோக விஞ்ஞானங்கள் (பௌ. விஞ்.)	வவுனியா வளாகம்	015R
✪	பிரயோக விஞ்ஞானங்கள் (பௌ. விஞ்.)	திருகோணமலை வளாகம்	015W
✪	முகாமைத்துவம்	கொழும்புப் பல்கலைக்கழகம்	016A
✪	முகாமைத்துவம்	பேராதனைப் பல்கலைக்கழகம்	016B
✪	முகாமைத்துவம்	ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம்	016C
✪	முகாமைத்துவம்	களனிப் பல்கலைக்கழகம்	016D
✪	முகாமைத்துவம்	யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்	016E
✪	முகாமைத்துவம்	உறுகுணைப் பல்கலைக்கழகம்	016F
✪	முகாமைத்துவம்	கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை	016H
✪	முகாமைத்துவம்	இலங்கைத் தென்கிழக்கு பல்கலைக்கழகம்	016J
✪	முகாமைத்துவம்	இலங்கை ரஜரட்ட பல்கலைக்கழகம்	016K
✪	முகாமைத்துவம்	இலங்கை சபரகமுவப் பல்கலைக்கழகம்	016L
✪	முகாமைத்துவம்	இலங்கை வயம்பப் பல்கலைக்கழகம்	016M
✪	சொத்து முகாமைத்துவமும் மதிப்பீடும்	ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம்	017C
✪	வணிகவியல்	ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம்	018C
✪	வணிகவியல்	களனிப் பல்கலைக்கழகம்	018D
✪	வணிகவியல்	யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்	018E
✪	வணிகவியல்	கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை	018H
✪	வணிகவியல்	இலங்கைத் தென்கிழக்கு பல்கலைக்கழகம்	018J
✪	கலை	கொழும்புப் பல்கலைக்கழகம்	019A
✪	கலை	பேராதனைப் பல்கலைக்கழகம்	019B
✪	கலை	ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம்	019C
✪	கலை	களனிப் பல்கலைக்கழகம்	019D
✪	கலை	யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்	019E
✪	கலை	உறுகுணைப் பல்கலைக்கழகம்	019F
✪	கலை	கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை	019H
✪	கலை	இலங்கைத் தென்கிழக்கு பல்கலைக்கழகம்	019J
✪	கலை	இலங்கை ரஜரட்ட பல்கலைக்கழகம்	019K
✪	கலை (SP) - வெகுசன ஊடகம்	ஸ்ரீபாளி வளாகம்	020S
✪	கலை (SP) - அரங்கேற்றல் கலை	ஸ்ரீபாளி வளாகம்	041S
✪	கலை - SAB	இலங்கை சபரகமுவப் பல்கலைக்கழகம்	021L
✪	முகாமைத்துவக் கற்கைகள் - TV	திருகோணமலை வளாகம்	022W
✪	முகாமைத்துவக் கற்கைகள் - TV	வவுனியா வளாகம்	022R
✪	கட்டடக்கலை	மொறட்டுவைப் பல்கலைக்கழகம்	023G
✪	வடிவமைப்பு	மொறட்டுவைப் பல்கலைக்கழகம்	024G
✪	சட்டம்	கொழும்புப் பல்கலைக்கழகம்	025A
✪	சட்டம்	பேராதனைப் பல்கலைக்கழகம்	025B
✪	சட்டம்	யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்	025E
✪	தகவல் தொழில்நுட்பம்	மொறட்டுவைப் பல்கலைக்கழகம்	026G

	கற்கைநெறி	பல்கலைக்கழகம்	UNI - CODE
✪	முகாமைத்துவமும் தகவல் தொழில்நுட்பமும்	களனிப் பல்கலைக்கழகம்	027D
✪	முகாமைத்துவம் (பொது) சிறப்பு	ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம்	028C
✪	தொடர்பாடல் கற்கைகள்	திருகோணமலை வளாகம்	029W
✪	பட்டினமும் நாடும் திட்டமிடல்	மொறட்டுவைப் பல்கலைக்கழகம்	030G
✪	சமாதானமும் முரண்பாடு தீர்த்தலும்	களனிப் பல்கலைக்கழகம்	031D
✪	ஆயுர்வேத மருத்துவமும் அறுவை சிகிச்சையும்	சுதேச மருத்துவ நிறுவகம்	032N
✪	ஆயுர்வேத மருத்துவமும் அறுவை சிகிச்சையும்	கம்பஹா விக்கிரமாராச்சி ஆயுர்வேத நிறுவகம்	032P
✪	யுனானி மருத்துவமும் அறுவை சிகிச்சையும்	சுதேச மருத்துவ நிறுவகம்	033N
✪	நவநாகரிக வடிவமைப்பும் உற்பத்தி அபிவிருத்தியும்	மொறட்டுவைப் பல்கலைக்கழகம்	034G
✪	உணவு விஞ்ஞானமும் தொழில்நுட்பமும்	பேராதனைப் பல்கலைக்கழகம்	035B
✪	உணவு விஞ்ஞானமும் தொழில்நுட்பமும்	ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம்	035C
✪	உணவு விஞ்ஞானமும் தொழில்நுட்பமும்	இலங்கை சபரகமுவப் பல்கலைக்கழகம்	035L
✪	சித்த மருத்துவமும் அறுவை சிகிச்சையும்	யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்	036E
✪	சித்த மருத்துவமும் அறுவை சிகிச்சையும்	திருகோணமலை வளாகம்	036W
✪	தாதியியல்	கொழும்பு பல்கலைக்கழகம்	037A
✪	தாதியியல்	பேராதனைப் பல்கலைக்கழகம்	037B
✪	தாதியியல்	ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம்	037C
✪	தாதியியல்	யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்	037E
✪	தாதியியல்	உறுகுணைப் பல்கலைக்கழகம்	037F
✪	தாதியியல்	கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை	037H
✪	தகவலும் தொடர்பாடல் தொழில்நுட்பமும்	இலங்கை ரஜரட்ட பல்கலைக்கழகம்	038K
✪	தகவலும் தொடர்பாடல் தொழில்நுட்பமும்	வவுனியா வளாகம்	038R
✪	விவசாயத் தொழில்நுட்பமும் முகாமைத்துவமும்	பேராதனைப் பல்கலைக்கழகம்	039B
✪	சுகாதார விருத்தி	இலங்கை ரஜரட்ட பல்கலைக்கழகம்	050K
✪	மருந்தகவியல்	பேராதனைப் பல்கலைக்கழகம்	051B
✪	மருந்தகவியல்	ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம்	051C
✪	மருந்தகவியல்	யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்	051E
✪	மருந்தகவியல்	உறுகுணைப் பல்கலைக்கழகம்	051F
✪	மருத்துவ ஆய்வுகூட விஞ்ஞானங்கள்	பேராதனைப் பல்கலைக்கழகம்	052B
✪	மருத்துவ ஆய்வுகூட விஞ்ஞானங்கள்	ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம்	052C
✪	மருத்துவ ஆய்வுகூட விஞ்ஞானங்கள்	யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்	052E
✪	மருத்துவ ஆய்வுகூட விஞ்ஞானங்கள்	உறுகுணைப் பல்கலைக்கழகம்	052F
✪	ஊடுகதிர்ப்படமெடுப்பு	பேராதனைப் பல்கலைக்கழகம்	053B
✪	இயன் மருத்துவம்	கொழும்புப் பல்கலைக்கழகம்	054A
✪	இயன் மருத்துவம்	பேராதனைப் பல்கலைக்கழகம்	054B
✪	சூழல் பேணலும் முகாமைத்துவமும்	களனிப் பல்கலைக்கழகம்	055D
✪	வசதிகள் முகாமைத்துவம்	மொறட்டுவைப் பல்கலைக்கழகம்	056G
✪	போக்குவரத்தும் தேவைகள் விநியோக ஒழுங்கமைப்பு முகாமைத்துவமும்	மொறட்டுவைப் பல்கலைக்கழகம்	057G
✪	மூலக்கூற்று உயிரியலும் உயிரிரசாயனவியலும்	கொழும்புப் பல்கலைக்கழகம்	058A
✪	கைத்தொழில் புள்ளிவிபரவியலும் கணிதவியல் நிதியும்	கொழும்புப் பல்கலைக்கழகம்	059A
✪	புள்ளிவிபரவியலும் செயற்பாட்டு ஆராய்ச்சியும்	பேராதனைப் பல்கலைக்கழகம்	060B

	கற்கைநெறி	பல்கலைக்கழகம்	UNI - CODE
✪	கணக்கிடலும் முகாமைத்துவமும்	பேராதனைப் பல்கலைக்கழகம்	061B
✪	மீன்பிடித்தலும் கடல்சார் விஞ்ஞானங்களும்	உறுகுணைப் பல்கலைக்கழகம்	062F
✪	இஸ்லாமிய கற்கைகள்	இலங்கைத் தென்கிழக்கு பல்கலைக்கழகம்	063J
✪	விஞ்ஞானமும் தொழில்நுட்பமும்	ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழகம்	064U
✪	கணனி விஞ்ஞானமும் தொழில்நுட்பமும்	ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழகம்	065U
✪	தொழில் முயற்சியும் முகாமைத்துவமும்	ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழகம்	066U
✪	விலங்கு விஞ்ஞானம்	ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழகம்	067U
✪	சங்கீதம்	இராமநாதன் நுண்கலைக்கழகம்	068X
✪	சங்கீதம்	சுவாமி விபுலானந்தர் அழ. கற். நிறுவகம்	068Y
✪	சங்கீதம்	கட்புல,அரங்கேற்றக்கலைகள் பல்கலைக்கழகம்	068Z
✪	நடனம்	இராமநாதன் நுண்கலைக்கழகம்	069X
✪	நடனம்	சுவாமி விபுலானந்தர் அழ. கற். நிறுவகம்	069Y
✪	நடனம்	கட்புல,அரங்கேற்றக்கலைகள் பல்கலைக்கழகம்	069Z
✪	சித்திரமும் வடிவமைப்பும்	இராமநாதன் நுண்கலைக்கழகம்	070X
✪	நாடகமும் அரங்கமும்	சுவாமி விபுலானந்தர் அழ. கற். நிறுவகம்	071Y
✪	நாடகமும் அரங்கமும்	கட்புல, அரங்கேற்றக்கலைகள் பல்கலைக்கழகம்	071Z
✪	கட்புலமும் தொழில்நுட்பவியல் கலையும்	சுவாமி விபுலானந்தர் அழ. கற். நிறுவகம்	072Y
✪	ஏற்றுமதி விவசாயம்	ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழகம்	073U
✪	தேயிலை தொழில்நுட்பமும் பெறுமதி சேர்ப்பும்	ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழகம்	074U
✪	கைத்தொழில் தகவல் தொழில்நுட்பம்	ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழகம்	075U
✪	கனிப்பொருள் வளங்களும் தொழில்நுட்பமும்	ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழகம்	076U
✪	வியாபாரத் தகவல் முறைமைகள் (சிறப்பு)	ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம்	077C
✪	முகாமைத்துவமும் தகவல் தொழில்நுட்பமும் (SEUSL)	இலங்கைத் தென்கிழக்கு பல்கலைக்கழகம்	079J
✪	கணக்கிடலும் தகவல் முறைமைகளும்	இலங்கை சபரகமுவப் பல்கலைக்கழகம்	080L
✪	உடற்றொழில் கல்வி	இலங்கை சபரகமுவப் பல்கலைக்கழகம்	081L
✪	விளையாட்டு விஞ்ஞானமும் முகாமைத்துவமும்	ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம்	082C
✪	விளையாட்டு விஞ்ஞானமும் முகாமைத்துவமும்	இலங்கை சபரகமுவப் பல்கலைக்கழகம்	082L
✪	பேச்சும் செவிமடுத்தல் விஞ்ஞானமும்	களனிப் பல்கலைக்கழகம்	083D
✪	அரபு மொழி	இலங்கைத் தென்கிழக்கு பல்கலைக்கழகம்	084J
✪	கட்புலக் கலை	கட்புல, அரங்கேற்றக்கலைகள் பல்கலைக்கழகம்	085Z
✪	விலங்கு விஞ்ஞானமும் மீன் பிடித்தலும்	பேராதனைப் பல்கலைக்கழகம்	086B
✪	உணவு உற்பத்தியும் தொழில்நுட்ப முகாமைத்துவமும்	இலங்கை வயம்பப் பல்கலைக்கழகம்	087M
✪	நீர்வாழ் வளங்கள் தொழில்நுட்பம்	ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழகம்	088U
✪	பனை இனத்தாவரம் மற்றும் இறப்பர் பால் தொழில்நுட்பமும் பெறுமதி சேர்ப்பும்	ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழகம்	089U
✪	விருந்தோம்பல், சுற்றுலா மற்றும் நிகழ்ச்சிகள் முகாமைத்துவம்	ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழகம்	090U
✪	தகவல் தொழில்நுட்பமும் முகாமைத்துவமும்	மொறட்டுவைப் பல்கலைக்கழகம்	091G
✪	சுற்றுலாவும் விருந்தோம்பல் முகாமைத்துவமும்	இலங்கை ரஜரட்ட பல்கலைக்கழகம்	092K
✪	சுற்றுலாவும் விருந்தோம்பல் முகாமைத்துவமும்	இலங்கை சபரகமுவப் பல்கலைக்கழகம்	092L
✪	விவசாயவள முகாமைத்துவமும் தொழில்நுட்பமும்	உறுகுணைப் பல்கலைக்கழகம்	093F
✪	விவசாய வியாபார முகாமைத்துவம்	உறுகுணைப் பல்கலைக்கழகம்	094F

	கற்கைநெறி	பல்கலைக்கழகம்	UNI - CODE
✪	பசுமைத் தொழில்நுட்பம்	உறுகுணைப் பல்கலைக்கழகம்	095F
✪	தகவல் முறைமைகள்	கொழும்புப் பல்கலைக்கழக கணனிக் கல்லூரி	096T
✪	நிலத்தோற்றக் கட்டடக்கலை	மொறட்டுவைப் பல்கலைக்கழகம்	097G
✪	மொழி பெயர்ப்பு கற்கைகள்	களனிப் பல்கலைக்கழகம்	098D
✪	மொழி பெயர்ப்பு கற்கைகள்	யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்	098E
✪	மொழி பெயர்ப்பு கற்கைகள்	இலங்கை சபரகமுவப் பல்கலைக்கழகம்	098L
✪	மென்பொருள் பொறியியல்	களனிப் பல்கலைக்கழகம்	099D
✪	சினிமா, தொலைக்காட்சி பற்றிய கற்கைகள்	களனிப் பல்கலைக்கழகம்	100D
✪	செயற்திட்ட முகாமைத்துவம்	வவுனியா வளாகம்	101R
✪	பொறியியல் தொழில்நுட்பம்	கொழும்புப் பல்கலைக்கழகம்	102A
✪	பொறியியல் தொழில்நுட்பம்	ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம்	102C
✪	பொறியியல் தொழில்நுட்பம்	களனிப் பல்கலைக்கழகம்	102D
✪	பொறியியல் தொழில்நுட்பம்	யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்	102E
✪	பொறியியல் தொழில்நுட்பம்	உறுகுணைப் பல்கலைக்கழகம்	102F
✪	பொறியியல் தொழில்நுட்பம்	இலங்கை ரஜரட்ட பல்கலைக்கழகம்	102K
✪	பொறியியல் தொழில்நுட்பம்	இலங்கை சபரகமுவப் பல்கலைக்கழகம்	102L
✪	பொறியியல் தொழில்நுட்பம்	இலங்கை வயம்பப் பல்கலைக்கழகம்	102M
✪	பொறியியல் தொழில்நுட்பம்	ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழகம்	102U
✪	உயிர் முறைமைகள் தொழில்நுட்பம்	கொழும்புப் பல்கலைக்கழகம்	103A
✪	உயிர் முறைமைகள் தொழில்நுட்பம்	ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம்	103C
✪	உயிர் முறைமைகள் தொழில்நுட்பம்	யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்	103E
✪	உயிர் முறைமைகள் தொழில்நுட்பம்	உறுகுணைப் பல்கலைக்கழகம்	103F
✪	உயிர் முறைமைகள் தொழில்நுட்பம்	கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை	103H
✪	உயிர் முறைமைகள் தொழில்நுட்பம்	இலங்கைத் தென்கிழக்கு பல்கலைக்கழகம்	103J
✪	உயிர் முறைமைகள் தொழில்நுட்பம்	இலங்கை ரஜரட்ட பல்கலைக்கழகம்	103K
✪	உயிர் முறைமைகள் தொழில்நுட்பம்	இலங்கை சபரகமுவப் பல்கலைக்கழகம்	103L
✪	உயிர் முறைமைகள் தொழில்நுட்பம்	இலங்கை வயம்பப் பல்கலைக்கழகம்	103M
✪	உயிர் முறைமைகள் தொழில்நுட்பம்	ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழகம்	103U
✪	தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம்	கொழும்புப் பல்கலைக்கழகம்	104A
✪	தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம்	ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம்	104C
✪	தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம்	களனிப் பல்கலைக்கழகம்	104D
✪	தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம்	உறுகுணைப் பல்கலைக்கழகம்	104F
✪	தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம்	இலங்கைத் தென்கிழக்கு பல்கலைக்கழகம்	104J
✪	தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம்	இலங்கை ரஜரட்ட பல்கலைக்கழகம்	104K
✪	தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம்	வவுனியா வளாகம்	104R
✪	ஆங்கிலத்தை இரண்டாம் மொழியாக கற்பித்தல்	களனிப் பல்கலைக்கழகம்	105D
✪	கடல்சார் மற்றும் நன்னீர் விஞ்ஞானங்கள்	உறுகுணைப் பல்கலைக்கழகம்	106F
✪	உணவு வணிக முகாமைத்துவம்	இலங்கை சபரகமுவப் பல்கலைக்கழகம்	107L
✪	பௌதீக விஞ்ஞானம் - ICT	ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம்	108C
✪	பௌதீக விஞ்ஞானம் - ICT	களனிப் பல்கலைக்கழகம்	108D
✪	வியாபார விஞ்ஞானம்	மொறட்டுவைப் பல்கலைக்கழகம்	109G
✪	நிதி பொறியியல்	களனிப் பல்கலைக்கழகம்	110D
✪	புவியியல் தகவல் விஞ்ஞானம்	பேராதனைப் பல்கலைக்கழகம்	111B
✪	சமூகப்பணி	பேராதனைப் பல்கலைக்கழகம்	112B

க.பொ.த (சா/த) தேவைப்பாடுகள்

தனது விருப்பப் பாடத்தெரிவில் கீழே குறிப்பிடப்பட்டுள்ள பாடநெறிகளை தெரிவுசெய்துள்ள ஒவ்வொரு பரீட்சார்த்தியும் க.பொ.த. (சா/த.)இல் தேவையான சித்தியைப் தான் பெற்றுள்ளதை எடுத்துக் காட்ட க.பொ.த. (சா/த.) சான்றுப்பத்திரத்தின் **உறுதி செய்யப்பட்ட பிரதியினை (Certified Copy)** விண்ணப்பத்துடன் அனுப்ப வேண்டும். தேவைப்படும் சான்றிதழ்களை விண்ணப்பத்துடன் அனுப்பி வைக்காவிட்டால், விண்ணப்பதாரி அக்கற்கை நெறிகளுக்கு விண்ணப்பிக்கத் தகுதியில்லை என்று அனுமானிக்கப்படும். **விண்ணப்பதாரிகள் க.பொ.த. (சா.த.) தேவைப்பாடுகளை பல்கலைக்கழக அனுமதிக்கான விண்ணப்பத்தின் முடிவுத் திகதிக்கு முன்னர் பூர்த்தி செய்திருக்க வேண்டும்.**

Uni-Codes	கற்கைநெறி	க.பொ.த (சா/த)		
		ஆங்.	கணி.	விஞ்.
011G	கணிய அளவையியல்	C	C	S
020S	கலை (SP) - வெகுசன ஊடகம்	S		
041S	கலை (SP) - அரங்கேற்றல் கலை	S		
023G	கட்டடக்கலை	S	C	
024G	வடிவமைப்பு	S	C	C
025A/025B/025E	சட்டம்	C		
029W	தொடர்பாடல் கற்கைகள்	C		
030G	பட்டினமும் நாடும் திட்டமிடல்	B	C	
034G	நவநாகரீக வடிவமைப்பும் உற்பத்தி அபிவிருத்தியும்	C	C	C
037A/037B/037C/037E/ 037F/037H	தாதியியல் *(குறிப்பு 1ஐப் பார்க்க)*	S		
038K/038R	தகவலும் தொடர்பாடல் தொழில்நுட்பமும்	C	C	
051B/051C/051E/051F	மருந்தகவியல்	S		
052B/052C/052E/052F	மருத்துவ ஆய்வுகூட விஞ்ஞானங்கள்	S		
053B	ஊடுகதிர்ப்படமெடுப்பு	S		
054A/054B	இயன் மருத்துவம்	S		
056G	வசதிகள் முகாமைத்துவம் *(குறிப்பு 2ஐப் பார்க்க)*	C	C	S
061B	கணக்கிடலும் முகாமைத்துவமும்		C	
080L	கணக்கிடலும் தகவல் முறைமைகளும்	C		
091G	தகவல் தொழில்நுட்பமும் முகாமைத்துவமும்	C	C	
095F	பசுமைத் தொழில்நுட்பம்	C		
096T	தகவல் முறைமைகள்	C	C	
097G	நிலத்தோற்றக் கட்டிடக்கலை	S	C	
107L	உணவு வியாபார முகாமைத்துவம்	C	C	C
109G	வியாபார விஞ்ஞானம்		C	

ஆங். - ஆங்கிலம் கணி. - கணிதம் விஞ். - விஞ்ஞானம்

குறிப்பு 1 :
தாதியியலுக்கு விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரிகள் **4'10" க்கு குறையாத உயரத்தை** உடையவராக இருப்பதுடன், **எந்தவிதமான அங்கவீன குறைபாடுகளும் இல்லாதவராக இருத்தல் வேண்டும்.**

குறிப்பு 2 :
இதற்கு மேலதிகமாக, பரீட்சார்த்திகள் க.பொ.த. (சா/த.) பரீட்சையில் ஆங்கிலத்தில் திறமைச் சித்தியும் (C), கணிதத்தில் திறமைச் சித்தியையும் (C), விஞ்ஞானத்தில் குறைந்தது திறமைச் சித்தியையும் (C) கல்வியாண்டு 2020/2021 இலிருந்து வசதிகள் முகாமைத்துவ கற்கை நெறிக்கு தகுதிபெறுவதற்கு பெற்றிருத்தல் வேண்டும்.

செயன்முறை/உளச்சார்புப் பரீட்சை சித்தி பெறுவதற்கான தேவைப்பாடுகள்

பின்வரும் கற்கை நெறிகளை தமது விருப்பு ஒழுங்கில் குறிப்பிட்ட பரீட்சார்த்திகள் சம்பந்தப்பட்ட பல்கலைக்கழகத்தினால் நடாத்தப்படும் செயன்முறை/உளச்சார்புப் பரீட்சையில் கட்டாயமாகச் சித்தியடைந்திருத்தல் வேண்டும். சம்பந்தப்பட்ட பல்கலைக்கழகம் உளச்சார்புப் பரீட்சைக்குத் தோற்ற விண்ணப்பதாரிகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரி பத்திரிகை அறிவித்தலொன்றைப் பிரசுரிக்கும். மாணவர்கள் செயன்முறை/உளச்சார்புப் பரீட்சையில் தோற்றுவதற்கு சம்பந்தப்பட்ட பல்கலைக்கழகங்களுக்கு நேரடியாக கட்டாயமாக விண்ணப்பிக்க வேண்டும். பரீட்சார்த்திகள் மேலதிக விபரங்களுக்கு சம்பந்தப்பட்ட பல்கலைக்கழகத்தின் பதிவாளரோடு தொடர்பு கொள்ள முடியும். [சம்மந்தப்பட்ட பல்களைக்கழகங்களின் முகவரி மற்றும் தொடர்பு இலக்கங்கள் இப்புத்தகத்தின் இணைப்பு (D) இல் தரப்பட்டுள்ளன.] குறித்த கற்கை நெறிக்கு கருத்திற்கொள்ளப்படுவதற்கு செயன்முறை/உளச்சார்புப் பரீட்சையில் சித்தியடைவதற்கு மேலதிகமாக உரிய கற்கை நெறியின் வெட்டுப்புள்ளித் தேவைப்பாட்டினைப் பூர்த்தி செய்திருப்பதும் கட்டாயமாகும்.

கற்கைநெறி	பல்கலைக்கழகம் / வளாகம் / நிறுவகம்	Uni-Code
கலை (SP) - வெகுசன ஊடகம்	ஸ்ரீபாளி வளாகம்	020S
கலை (SP) - அரங்கேற்றல் கலை	ஸ்ரீபாளி வளாகம்	041S
கட்டடக்கலை	மொறட்டுவைப் பல்கலைக்கழகம்	023G
வடிவமைப்பு	மொறட்டுவைப் பல்கலைக்கழகம்	024G
முகாமைத்துவமும் தகவல் தொழில்நுட்பமும்	களனிப் பல்கலைக்கழகம்	027D
நவநாகரிக வடிவமைப்பும் உற்பத்தி அபிவிருத்தியும்	மொறட்டுவைப் பல்கலைக்கழகம்	034G
தகவலும் தொடர்பாடல் தொழில்நுட்பமும்	இலங்கை ரஜரட்ட பல்கலைக்கழகம்	038K
தகவலும் தொடர்பாடல் தொழில்நுட்பமும்	வவுனியா வளாகம்	038R
கணனி விஞ்ஞானமும் தொழில்நுட்பமும்	ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழகம்	065U
தொழில் முயற்சியும் முகாமைத்துவமும்	ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழகம்	066U
இசை	இராமநாதன் நுண்கலைக்கழகம்	068X
இசை	சுவாமி விபுலானந்தர் அ. க. நிறுவகம்	068Y
இசை	கட்புல,அரங்கேற்றக்கலைகள் பல்கலைக்கழகம்	068Z
நடனம்	இராமநாதன் நுண்கலைக்கழகம்	069X
நடனம்	சுவாமி விபுலானந்தர் அ. க. நிறுவகம்	069Y
நடனம்	கட்புல,அரங்கேற்றக்கலைகள் பல்கலைக்கழகம்	069Z
சித்திரமும் வடிவமைப்பும்	இராமநாதன் நுண்கலைக்கழகம்	070X
நாடகமும் அரங்கமும்	சுவாமி விபுலானந்தர் அ. க. நிறுவகம்	071Y
நாடகமும் அரங்கமும்	கட்புல,அரங்கேற்றக்கலைகள் பல்கலைக்கழகம்	071Z
கட்புலமும் தொழில்நுட்பவியல் கலையும்	சுவாமி விபுலானந்தர் அ. க. நிறுவகம்	072Y
கைத்தொழில் தகவல் தொழில்நுட்பம்	ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழகம்	075U
உடற்றொழில் கல்வி	இலங்கை சபரகமுவப் பல்கலைக்கழகம்	081L
விளையாட்டு விஞ்ஞானமும் முகாமைத்துவமும்	ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம்	082C
விளையாட்டு விஞ்ஞானமும் முகாமைத்துவமும்	இலங்கை சபரகமுவப் பல்கலைக்கழகம்	082L
பேச்சும் செவிமடுத்தல் விஞ்ஞானமும்	களனிப் பல்கலைக்கழகம்	083D
கட்புலக் கலை	கட்புல,அரங்கேற்றக்கலைகள் பல்கலைக்கழகம்	085Z
விருந்தோம்பல், சுற்றுலா மற்றும் நிகழ்ச்சிகள் முகாமைத்துவம்	ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழகம்	090U
தகவல் முறைமைகள்	கொழும்புப் பல்கலைக்கழக கணனிக் கல்லூரி	096T
நிலத்தோற்றக் கட்டிடக்கலை	மொறட்டுவைப் பல்கலைக்கழகம்	097G
மொழி பெயர்ப்பு கற்கைகள்	களனிப் பல்கலைக்கழகம்	098D
மொழி பெயர்ப்பு கற்கைகள்	யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்	098E
மொழி பெயர்ப்பு கற்கைகள்	இலங்கை சபரகமுவப் பல்கலைக்கழகம்	098L
சினிமா தொலைக்காட்சி பற்றிய கற்கைகள்	களனிப் பல்கலைக்கழகம்	100D
நிதி பொறியியல்	களனிப் பல்கலைக்கழகம்	110D

உங்கள் விண்ணப்பதை அச்சுப்பிரதி செய்யுமுன்

- நீங்கள் படிமுறை 4 ஐ நிரப்பிய பின் “பார்க்க” எனும் தெரிவை கிளிக் செய்து படிமுறை 1, படிமுறை 2, படிமுறை 3 மற்றும் படிமுறை 4 இல் நீங்கள் நிரப்பியுள்ள தகவல்களை பார்வையிடலாம்.
- சகல தகவல்களும் சரியாக நிரப்பப்பட்டுள்ளனவா என்பதை கவனமாக பார்க்கவும்.
- விண்ணப்பத்தை அச்சுப்பிரதி செய்யுமுன் எந்தவொரு தகவலையும் மாற்றம் செய்யலாம்.
- விண்ணப்பத்தை அச்சுப்பிரதி செய்யுமுன் உங்களால் வழங்கப்பட்ட தகவல்கள் உண்மையானவையும் சரியானவையும் என்பதை உறுதிப்படுத்துக.

5. விண்ணப்பத்தை அச்சுப்பிரதி செய்தல்

- விண்ணப்பப் படிவத்தை பரீட்சித்ததன் பின்னர் “ Print” எனும் தெரிவை அழுத்தி உங்கள் விண்ணப்பத்தை **PDF** இல் பதிவிறக்கம் செய்யவும். பின் விண்ணப்பத்தை கறுப்பு வெள்ளை அச்சுப்பிரதியாக லேசர் பிரின்டரில் அச்சுப்பிரதி செய்யுமாறு கேட்கப்படுகின்றீர்கள்.

  உங்கள் விண்ணப்பதை லேசர் பிரின்டரில் அச்சுப்பிரதி செய்யுமாறு கேட்கப்படுகின்றீர்கள்.

- விண்ணப்பத்தின் **PDF** பிரதி உங்கள் மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பப்பட்டுள்ளதா என்பதை உறுதிப்படுத்திக்கொள்க.

  உங்கள் மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பிவைக்கப்பட்ட PDF பிரதியின் மாற்றப்பட்ட அல்லது திருத்தப்பட்ட அச்சுப்பிரதியினை சமர்ப்பிப்பின் உமது விண்ணப்பம் நிராகரிக்கப்பட்டு உமக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

6. விண்ணப்பத்தை சமர்ப்பித்தல்

1. அச்சிடப்பட்ட விண்ணப்பப் படிவத்தின் ஒவ்வொரு பக்கத்தினதும் அடிப்பகுதியில் பார்கோட்கள் அச்சிடப்படும். அத்துடன் **அச்சிடப்பட்ட விண்ணப்பத்துடன் பார்கோட்கள் (readable bar codes) அடங்கிய ஒரு தாள் அச்சிடப்பட்டுள்ளதா** என்பதை உறுதிப்படுத்திக்கொள்ளுங்கள்.
2. அச்சிடப்பட்ட பார்கோடுகளை வெட்டி பல்கலைக்கழக அனுமதிக்காக சமர்ப்பிக்கப்படும் உமது அச்சிடப்பட்ட விண்ணப்பத்தோடு சமர்ப்பிக்கப்படும் சகல ஆவணங்களினதும் (இருபக்கங்களும்) வலதுபக்க மேல் மூலையில் கீழ்காட்டப்பட்டுள்ளவாறு ஒட்டப்படல் வேண்டும். (உ-ம்) பாடசாலை விலகற் சான்றிதழின் மூலப்பிரதி / மாணவர் பதிவு அறிக்கையின் மூலப்பிரதி / கிராம சேவகரின் சான்றிதழ் / க.பொ.த. (சா/த) பரீட்சை பெறுபேற்று மூலச்சான்றிதழின் உறுதி செய்யப்பட்ட பிரதி / பெயரில் வித்தியாசமிருப்பின் பெயரை உறுதிசெய்யும் வகையிலான சத்தியக்கடதாசி) ஆகிய பார்கோட் ஒட்டப்பட்ட ஆவணங்கள் (கீழே படத்தில் காட்டப்பட்டுள்ளவாறு) உங்கள் அச்சிடப்பட்ட விண்ணப்பப்படிவத்துடன் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

உதாரணம் :

Bar Code

3. தனிப்பட்ட குறியீடுகள் அடங்கிய இந்த பார்கோடானது உங்கள் உ.த. பரீட்சை சுட்டிலக்கம், தேசிய அடையாள அட்டை இலக்கம் மற்றும் உங்களால் சமர்ப்பிக்கப்பட்ட இலத்திரனியல் விண்ணப்பப் படிவம் ஆகியவற்றை அடையாளம் கண்டுகொள்ள பயன்படுத்தப்படும். ஆகையால் **வேறொரு விண்ணப்பதாரியின் பார்கோட்களை உங்கள் விண்ணப்பத்தோடு சமர்ப்பிக்கப்படும் ஆவணங்களில் ஒட்டுவதை தவிர்க்குக்கொள்ளுமாறு கேட்கப்படுகின்றீர்கள். மற்றும் உங்கள் பார்கோட்களையும் வேறோரு விண்ணப்பதாரி பயன்படுத்த முடியாது.**

4. பல்கலைக்கழக அனுமதி கைநூலின் பகுதி 2.2 க்கு அமைவாக க.பொ.த.(சா/த.) பரீட்சையில் குறிப்பிட்ட பாடங்களில் குறிப்பிட்ட சித்திகளைப் பெற்றிருக்க வேண்டுமென்று கோரப்பட்ட ஏதாவது கற்கைநெறிக்கு நீங்கள் விண்ணப்பித்திருந்தால் **உங்களுடைய விண்ணப்பத்துடன் க.பொ.த. (சா/த.) பரீட்சையின் உரிய முறையில் உறுதிபடுத்தப்பட்ட மூலச்சான்றிதழின் பிரதி** விண்ணப்பத்தோடு சமர்ப்பிக்கப்படல் வேண்டும். அவ்வாறு சமர்ப்பிக்கப்படாத பட்சத்தில் குறித்த கற்கைநெறிக்கான உமது தெரிவு கருத்திலெடுக்கப்படமாட்டாது.

5. **பாடசாலை விண்ணப்பதாரிகளுக்கு**
விண்ணப்பத்தின் 7ம் பிரிவானது விண்ணப்பதாரி படித்த பாடசாலை / பாடசாலைகள் பற்றிய விபரங்கள் **பாடசாலை அதிபரினால் பரீட்சிக்கப்பட்டு அதிபரின் கையொப்பம், திகதி மற்றும் உத்தியோகபூர்வ முத்திரையுடன்** உறுதிப்படுத்தப்பட்டு சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

6. **தனிப்பட்ட விண்ணப்பதாரிகளுக்கு**
தனிப்பட்ட பரீட்சார்த்தியாக க.பொ.த.(உ/த) பரீட்சைக்குத் தோற்றிய சகல விண்ணப்பதாரிகளும் பின்வரும் ஆவணங்களைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

   1. **பாடசாலை விலகற் சான்றிதழின் மூலப்பிரதி (Original of the School Leaving Certificate) அல்லது மாணவர் பதிவு அறிக்கையின் மூலப்பிரதி (Original)**

   2. **பிரதேச செயலாளரினால் மேலொப்பமிடப்பட்டு உத்தியோகபூர்வ முத்திரையிடப்பட்ட கிராம சேவகரின் சான்றிதழின் மூலப்பிரதி (Original)**

   மேற்குறிப்பிட்ட எந்தவொரு ஆவணத்தினதும் பிரதிகள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது. சம்பந்தப்பட்ட சான்றிதழ்களின் / ஆவணங்களின் மூலப் பிரதிகளை (Original), விண்ணப்பத்தோடு சமர்ப்பிக்கத் தவறின் விண்ணப்பம் நிராகரிக்கப்படும்.

   தனிப்பட்ட பரீட்சார்த்தியாக பரீட்சைக்குத் தோற்றிய விண்ணப்பதாரிகளினால் விண்ணப்பங்கள் சமாதான நீதவானால் அல்லது சத்தியப்பிரமாண ஆணையாளரால் கையொப்பமிடப்பட்டு உத்தியோகபூர்வ முத்திரை மற்றும் திகதியுடன் உறுதிப்படுத்தப்பட்டு சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

7. க.பொ.த (உ/த) பரீட்சையில் நீங்கள் பயன்படுத்திய பெயரிலிருந்து உங்களால் விண்ணப்பப்படிவத்தில் வழங்கப்பட்டுள்ள பெயர் வித்தியாசமாக இருந்தால் உங்களின் பெயர் மாற்றத்திற்கான சத்தியவோலை ஒன்றை சமர்ப்பிக்கவும். (நீங்கள் ரூபா. 50 பெறுமதியான முத்திரையின் மீது சத்தியவோலையில் கையொப்பமிட வேண்டும் என்பதை கவனத்திற் கொள்ளவும்)

   நீர் தனிப்பட்ட பரீட்சார்த்தியாயின் பாடசாலை விடுகைப் பத்திரத்தில் நீங்கள் பயன்படுத்திய பெயரிலிருந்து உங்களால் விண்ணப்பப் படிவத்தில் வழங்கப்பட்டுள்ள பெயர் வித்தியாசமாக இருந்தால் உங்களின் பெயர் மாற்றத்திற்கான சத்தியவோலை ஒன்றை சமர்ப்பிக்கவும். (நீங்கள் ரூபா. 50 பெறுமதியான முத்திரையின் மீது சத்தியக்கடதாசியில் கையொப்பமிட வேண்டும் என்பதை கவனத்திற்கொள்ளவும்)

8. ஒவ்வொரு **விண்ணப்பதாரியும் பிரிவு 06 இல் விண்ணப்பதாரியின் உறுதியுரையை நன்கு வாசித்து** திகதியைக் குறிப்பிட்டு கையொப்பமிடல் வேண்டும்.

முக்கியம்

9. 2018/2019 கல்வியாண்டுக்கான பல்கலைக்கழக அனுமதிக்காக உங்களால் இணையதளத்தினூடாக சமர்ப்பிக்கப்பட்ட இலத்திரனியல் விண்ணப்பப் படிவம் தரவுகளை உறுதிப்படுத்திக்கொள்வதற்காகவே ஆகும். நீங்கள் அதன் அச்சுப்பிரதியை **உரிய முறையில் கையொப்பமிட்டு** மேலே குறிப்பிடப்பட்டுள்ளவாறு மூலப்பிரதிகள் மற்றும் ஏனைய ஆவணங்களுடன் **பதிவுத் தபாலில்** விண்ணப்ப முடிவுத் திகதிக்கு முன்னர் அனுப்பிவைத்தல் **கட்டாயமானதாகும்.**

விண்ணப்பத்தின் கையொப்பமிடப்பட்ட அச்சுப் பிரதியினை பத்திரிகை அறிவித்தல்கள் மூலம் குறிப்பிட்ட முடிவுத்திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்காவிடின் நீர் கல்வியாண்டு 2018/2019 இல் பல்கலைக்கழக அனுமதிக்கு விண்ணப்பிக்க விரும்பவில்லை என கருதி உமது இணையதள விண்ணப்பம் கருத்தில் கொள்ளப்படாது.

10. அச்சுப்பிரதி செய்து நீங்கள் கையொப்பமிட்ட விண்ணப்பப்படிவத்துடன் வலதுபக்க மேல்மூலையில் பார்கோட்களை ஒட்டிய சகல ஆவணங்களையும் இணைத்து **A4 தபால் உறையிலிட்டு** உரிய முறையில் **பதிவுத் தபாலில்** பத்திரிகை அறிவித்தல்களில் குறிப்பிடப்பட்ட விண்ணப்ப முடிவுத் திகதிக்கு முன்னர் அனுப்பிவைத்தல் வேண்டும். முடிவுத்திகதிக்கு பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

விண்ணப்பங்கள் அனுப்பிவைக்கப்பட வேண்டிய முகவரி-

மேலதிகச் செயலாளர் - பல்கலைக்கழக அனுமதி
பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு
இல. 20, வோட் பிளேஸ்,
கொழும்பு - 07.

நீர் இணைதளத்தினூடாக விண்ணப்பத்தைச் சமர்ப்பிக்கும் போது பிரச்சினைகள் ஏற்படின், அரச தகவல் நிலையத்துடன் (1919) தொடர்பு கொள்ளவும்.

(C) கற்கைநெறி மற்றும் பல்கலைக்கழக விருப்பொழுங்கை "Uni Code" மாற்றல்

இக்கைநூலின் பிரிவு 3.3 இற்கமைய விண்ணப்ப முடிவுத் திகதியிலிருந்து **ஒரு மாத காலத்திற்குள்** தனது கற்கைநெறி மற்றும் பல்கலைக்கழகம் தொடர்பான விருப்பொழுங்கை **(Uni Code)** மாற்றுவதற்கு UGC கணக்கில் உள்நுழைய விண்ணப்பதாரிகள் அனுமதிக்கப்படுவர்.

அத்துடன் உமது புதிய கற்கைநெறி மற்றும் பல்கலைக்கழக விருப்பொழுங்கினை**(Uni Code)** அச்சுப்பிரதி செய்து திகதியைக் குறிப்பிட்டு, கையொப்பமிட்டு விண்ணப்ப முடிவுத் திகதியிருந்து **ஒரு மாத காலத்திற்குள்** பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவிற்கு, மேலதிகச் செயலாளர் / பல்கலைக்கழக அனுமதி, பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு, இல. 20, வோட் பிளேஸ், கொழும்பு 07 என்ற முகவரிக்கு பதிவுத் தபால் மூலம் சமர்ப்பித்தல் வேண்டும். இவ்வாறு நீர் அனுப்பத்தவறுமிடத்து உமது புதிய விருப்பெழுங்கு கருத்தில் கொள்ளப்பட மாட்டாது.

உங்களால் ஏற்கனவே அனுப்பிவைக்கப்பட்டுள்ள விண்ணப்பத்தில் காணப்படும் உங்கள் கையெழுத்தும் தற்போது நீங்கள் சமர்ப்பித்துள்ள கற்கைநெறி மற்றும் பல்கலைக்கழக விருப்பொழுங்கை (Uni Code) மாற்றும் விண்ணப்பத்தில் காணப்படும் கையெழுத்தும் ஒன்றாக இருத்தல் வேண்டும். ஏதேனும் கையெழுத்து வேறுபாடு காணப்படின், தற்போது நீங்கள் சமர்ப்பித்துள்ள கற்கைநெறி மற்றும் பல்கலைக்கழக விருப்பொழுங்கை மாற்றும் விண்ணப்பம் நிராகரிக்கப்படும்.

முக்கியம் :
கற்கைநெறி மற்றும் பல்கலைக்கழக விருப்பொழுங்கை (Uni Code) இச்சந்தர்ப்பத்தில் மாற்றம் செய்கின்றபோது, முன்பு சமர்ப்பித்த கற்கைநெறி மற்றும் பல்கலைக்கழக விருப்பொழுங்கு முற்றாக நிராகரிக்கப்படுவதுடன் நீங்கள் தற்பொழுது சமர்ப்பித்துள்ள கற்கைநெறி மற்றும் பல்கலைக்கழக விருப்பொழுங்கின் அடிப்படையில் பல்கலைக்கழக அனுமதிக்கு கருத்தில் கொள்ளப்படுவீர்கள்.

பின்வரும் நிலையங்கள் இணையதள வசதியற்ற விண்ணப்பதாரிகளுக்கு இலவசமாக பல்கலைக்கழக அனுமதிக்கு இணையதளத்தினூடாக விண்ணப்பிப்பதற்கு உதவும்.

திறந்த பல்கலைக்கழகத்தின் பிராந்திய / கற்கை நிலையங்கள் (NAC)

அம்பலங்கொட
இலங்கை திறந்த பல்கலைக்கழக கற்கை நிலையம்,
80/1, பொல்வத்த வீதி, ஹல்வத்துர - அம்பலங்கொட.
☎ : 091 - 2258585

அம்பாறை
இலங்கை திறந்த பல்கலைக்கழக கற்கை நிலையம்,
இங்கினியகல வீதி, சாமபுர, அம்பாறை.
☎ : 063 - 2222052

அனுராதபுரம்
இலங்கை திறந்த பல்கலைக்கழக பிராந்திய கற்கை நிலையம்,
ஜயந்தி மாவத்தை, அனுராதபுரம்.
☎ : 025 - 2222871

பதுளை
இலங்கை திறந்த பல்கலைக்கழக பிராந்திய கற்கை நிலையம்,
இல. 18/1, பண்டாரணாயக்க மாவத்த, பதுளை.
☎ : 055-2228842 / 3012151

மட்டக்களப்பு
இலங்கை திறந்த பல்கலைக்கழக பிராந்திய நிலையம்
இல. 23, புதிய வீதி, மட்டக்களப்பு
☎ : 065 - 2222264

காலி
இலங்கை திறந்த பல்கலைக்கழக கற்கை நிலையம்,
லபுதூவ, காலி.
☎ : 091 - 2223784

கம்பஹா
இலங்கை திறந்த பல்கலைக்கழக கற்கை நிலையம்,
கம்பஹா வீதி, மிரிஸ்வத்த, முதுன்கொட.
☎ : 033 - 2234571

களுத்தரை
களுத்தரை பிராந்திய கற்கை நிலையம்,
இலங்கை திறந்த பல்கலைக்கழகம்,
66/2, நாகொட வீதி, களுத்துரை.
☎ : 034 - 2223399

கண்டி
இலங்கை திறந்த பல்கலைக்கழக பிராந்திய கற்கை நிலையம்,
பொல்கொல்ல, கண்டி.
☎ : 081 - 2494083

குருநாகலை
இலங்கை திறந்த பல்கலைக்கழக பிராந்திய கற்கை நிலையம்,
நிஸ்ஸங்க மாவத்தை,மல்கடுவாவ, குருநாகலை.
☎ : 037 - 2223473

மாத்தறை
இலங்கை திறந்த பல்கலைக்கழக கற்கை நிலையம்,
நூபே, மாத்தறை.
☎ : 041 - 2222943

மொனராகலை
இலங்கை திறந்த பல்கலைக்கழக கற்கை நிலையம்,
தொழில்நுட்ப கல்லூரி சந்தி, சிறிகல, பொத்துவில் வீதி, மொனராகலை.
☎ : 055 - 2277395

நாவல
இலங்கை திறந்த பல்கலைக்கழகம்
கொழும்பு பிராந்திய நிலையம், நாவல, நுகேகொட.
☎ : 011 - 2853930

பொலன்னறுவை
இலங்கை திறந்த பல்கலைக்கழக கற்கை நிலையம்,
24ம் கட்டை, பெந்திவெவ, ஜயந்திபுர, பொலன்னறுவை.
☎ : 027 - 2225776

யாழ்ப்பாணம்
இலங்கை திறந்த பல்கலைக்கழக பிராந்திய நிலையம்,
பிரவுன்ஸ் வீதி, கொக்குவில், யாழ்ப்பாணம்
☎ : 021 - 2222871

இரத்தினபுர
இலங்கை திறந்த பல்கலைக்கழக பிராந்திய நிலையம்,
ஹிடெல்லன்ன, இரத்தினபுர
☎ : 045 - 2228660

அம்பலாந்தோட்ட
இலங்கை திறந்த பல்கலைக்கழக கற்கை நிலையம்,
ராஜசரணகம வீதி, லுணாமா தெற்கு, அம்பலாந்தோட்ட
☎ : 047 - 2225533

கேகாலை
இலங்கை திறந்த பல்கலைக்கழக கற்கை நிலையம்,
குமாரதுங்க முமிதாஸ மாவத்த, கேகாலை
☎ : 035 - 2222501

புத்தளம்
இலங்கை திறந்த பல்கலைக்கழக கற்கை நிலையம்,
இல. 1/137, கொழும்பு வீதி, புத்தளம்.
☎ : 032 - 2266822

வவுனியா
இலங்கை திறந்த பல்கலைக்கழக கற்கை நிலையம்,
இல. 366, கண்டி வீதி, தெக்கவத்தை, வவுனியா
☎ : 024 - 2222995

கல்வியமைச்சின் கீழான மாகாண மற்றும் வலய கணினி வள நிலையங்கள் (ICT)

வலய கணனி வள நிலையம்
நுகவெல மத்திய கல்லூரி - நுகவெல.
☎ : 081-2491230

வலய கணனி வள நிலையம்
வலய கணிணி வள மையம்
மமா/க/கலேவெல மத்திய கல்லூரி - கலேவெல
☎ : 066-2289073 / 071-7367369

வலய கணனி வள நிலையம்
ம/சாந்த தோமஸ் கல்லூரி - மாத்தளை.
☎ : 066-2222523 / 075-2776941

வலய கணனி வள நிலையம்
தியதிலக்க மத்திய கல்லூரி - ஹங்குரங்கெத்த.
☎ : 081-2369491

வலய கணனி வள நிலையம்
ம/மதீனா தேசிய கல்லூரி - மடவளை பசார்
☎ : 081-2470023

வலய கணனி வள நிலையம்
தீரானந்த ம.வி. - பிலிமதலாவ.
☎ : 081-2579800

வலய கணனி வள நிலையம்
மா/ந/நாளந்த மகா வித்தியாலயம், நாளந்த, மாத்தளை.
☎ : 066-2246785

கண்டி
மாகாண தகவல் மற்றும் தொடர்பாடல் தொழினுட்ப கல்வி நிலையம் - குருதெனிய.
☎ : 081-2406051/ 071-8158910

வலய கணனி வள நிலையம்
மமா/ஹ/ஹய்லன்ட்ஸ் கல்லூரி - ஹட்டன்.
☎ : 051-2224999

வலய கணனி வள நிலையம்
வலய கணிணி வள மையம்
மமா/ஹ/கினிகத்தேன ம.ம.வி. - கினினத்தேன.
☎ : 051-2242500

வலய கணனி வள நிலையம்
வில்கமுவ வலய கணிணி வள மையம்
வில்கமுவ, ஹேட்டிபொல.
☎ : 066-2250182

வலய வள நிலையம் - நுவரெலியா
நு/காமினி ம.ம.வி. - நுவரெலியா.
☎ : 071-8028877

வலய கணனி வள நிலையம்
மட்/கிரான் ம.வி. - கிரான்
☎ : 065-2257978

வலய கணனி வள நிலையம்
தி/மூ/மூதூர் ம.க. - நொக்ஸ் வீதி, மூதூர்.
☎ : 026-2238150

வலய கணனி வள நிலையம்
தி/கிண்/அல்-ஹாஜ் இக்தார் வி. பெரியதூமுனை, கிண்ணியா.
☎ : 026-2236574

வலய கணனி வள நிலையம்
இல. 35, பார் வீதி, அரசடி - மட்டக்களப்பு.
☎ : 065-2227707

வலய கணனி வள நிலையம்
மட/பட்/தேத்தாதீவு ம.வி., தேத்தாதீவு, களுவாஞ்சிக்குடி.
☎ : 065-2251397

வலய கணனி வள நிலையம்
அம்/காவந்திஸ்ஸ ம.வி. - அம்பாறை.
☎ : 063-2222139

வலய கணனி வள நிலையம்
தி/விபுலானந்த கல்லூரி, கிண்ணியா வீதி,திருகோணமலை.
☎ : 071-8448070

மாகாண தகவல் மற்றும் தொடர்பாடல் தொழினுட்ப கல்வி நிலையம் - கிழக்கு
மாகாண கல்வித் திணைக்களம், துளசிபுரம், திருகோணமலை.
☎ : 026-2222997

வலய கணனி வள நிலையம்,
கமு/கமு/மஹ்மூத் மகளிர் கல்லூரி, கல்முனை.
☎ : 067-2225095/077-2258030

வலய கணனி வள நிலையம்
வலய கல்வி பணிமனை - அக்கரைப்பற்று
☎ : 067-2277324

வலய கணனி வள மையம் - கந்தளாய்
தி/மகாவெலிகம நவோதய பாடசாலை, சேருநுவர.
☎ : 026-3269560

வலய கணனி வள நிலையம்
திரு/குமாரா வித்தியாலயம், திருக்கோவில்.
☎ : 067-2265053

வலய கணனி வள நிலையம்
ZCRC, மல்கம்பிட்டி வீதி, சம்மாந்துறை.
☎ : 067-2261448

வலய கணனி வள நிலையம் - தெஹிஅத்தகண்டிய
அம்/தெஹி/தெஹிஅத்தகண்டிய தேசிய பாடசாலை தெஹிஅத்தகண்டிய
☎ : 027-2250391

வலய கணனி வள நிலையம்
யா/புலோலி ம.ம.த.க.பா.
புலோலி.
☎ : 021-2263087 / 0773580755

வலய கணனி வள நிலையம்
வலய கல்விப் பணிமனை, ஐலண்ட்ஸ், வேலனை.
☎ : 021-2211518 / 0776015640

வலய தெற்கு கணனி வள நிலையம்
வலய கல்விப் பணிமனை, கண்டி வீதி, வவுனியா.
☎ : 024-2222373 / 0777394022

வலய வடக்கு கணனி வள நிலையம்
வ/புதுக்குளம் ம.வி.,சாஸ்திரிகூலாங்குளம்,வவுனியா.
☎ : 024-2051921, 0774920136

வலய கணனி வள நிலையம்
கிளி/கிளிநொச்சி ம.க. கிளிநொச்சி.
☎ : 021-2283866

மாகாண தகவல் மற்றும் தொடர்பாடல் தொழினுட்ப கல்வி நிலையம் - வட மாகாணம்
முருக்கராம்பிள்ளை, வவுனியா.
☎ : 077-7589797

வட மத்திய மாகாண தகவல் மற்றும் தொடர்பாடல் தொழினுட்ப கல்வி நிலையம்
ஜயந்தி மாவத்தை,
(வலய கல்வி பணிமனைக்குப் பின்னால்)அநுராதபுரம்.
☎ : 025-2237505/ 2237504

வலய கணனி வள நிலையம்
அநுராதபுர ம.ம.வி. அநுராதபுரம்.
☎ : 071-3532724 / 077-6561737

கெக்கிராவ கணனி வள நிலையம்
வலய கணினி வள மையம், கெக்கிராவ ம.ம.வி.
கெக்கிராவ.
☎ : 071-4923327

வலய கணனி வள நிலையம்
தம்புத்தேகம ம.ம.வி., தம்புத்தேகம.
☎ : 025-2275573

வலய கணனி வள நிலையம்
வவுனியா வீதி, கெபித்திகொல்லேவ.
☎ : 077-3961166

வலய கணனி வள நிலையம்
பொல/ஆனந்த பாலிகா தேசிய பாடசாலை,ஹிங்குரக்கொட.

வலய கணனி வள நிலையம்
பொல/தொப்பாவெவ ம.வி., பொலன்னறுவை.

வலய கணனி வள நிலையம்
கஹடகஸ்திகிலிய.
☎ : 0718165613

மாகாண தகவல் மற்றும் தொடர்பாடல் தொழினுட்ப கல்வி நிலையம் - NWP - வாரியாபொல.
நாவின்ன வீதி, வாரியாபொல.
☎ : 037-2267685

வலய கணனி வள நிலையம்
மலியதேவ ஆண்கள் பாடசாலை, குருநாகலை.
☎ : 037-2230333

வலய கணனி வள நிலையம்
குளி/ஸ்ரீ சரனங்கர ம.ம.வி., பிங்கிரிய.
☎ : 032-2246680

வலய கணனி வள நிலையம்
விஜயபா தேசிய பாடசாலை - மாஹோ.
☎ : 037-2275889

வலய கணனி வள நிலையம்
விக்ரமஷீலா ம.ம.வி., கிரிஉள்ள.
☎ : 072-5312653

வலய கணனி வள நிலையம்
பிரதேச கல்வி காரியாலயம், ஆனமடுவ.
☎ : 032-2263202

வலய கணனி வள நிலையம்
சிலா/மெதகம அபய ம.வி. மெதகம, பனிரேந்தாவ.
☎ : 032-2240180

வலய தகவல் மற்றும் தொடர்பாடல் தொழினுட்ப கல்வி நிலையம்
மயு'ரபாத தேசிய பாடசாலை, மாவனெல்ல.
☎ : 035-2246110

வலய கணனி வள நிலையம்
டட்லி சேனாநாயக்க ம.ம.வி., தோலன்கமுவ.
☎ : 035-2268472

வலய கணனி வள நிலையம்
ர/பலங்கொட ஆனந்த மைத்ரி ம.ம.வி., பலங்கொட.
☎ : 045-2288343

வலய கணனி வள நிலையம்
ராகுல தேசிய பாடசாலை, கொடகாவெல.
☎ : 045-3462534 / 071-6537411

வலய கணனி வள நிலையம்
குருவிட்ட ம.ம.வி., குருவிட்ட.
☎ : 045-2263438

வலய கணனி வள நிலையம்
ர/கன்கந்த ம.ம.வி., பெல்மடுல்ல.
☎ : 071-658173

மாகாண தகவல் மற்றும் தொடர்பாடல் தொழினுட்ப கல்வி நிலையம் - சபரகமுவ
அத்துலுகம, தெஹியோவிட்ட.
☎ : 036-2268143

வலய கணனி வள நிலையம்
வீரகெட்டிய தேசிய பாடசாலை, வீரகெட்டிய.
☎ : 071-6359735

வலய கணனி வள நிலையம்
மா/கொடபிட்டிய தேசிய பாடசாலை, அக்குரஸ்ஸ.
☎ : 041-2283663 / 041-2283033

வலய கணனி வள நிலையம்
க/ஆனந்த ம.வி., கிதுலம்பிட்டிய, காலி.
☎ : 071-6394576

வலய கணனி வள நிலையம்
ஹ/ தங்கல்ல பாலிகா வித்தியாலயம், தங்கல்ல.
☎ : 071-4408368

வலய கணனி வள நிலையம்
கரந்தெனிய ம.ம.வி., கரந்தெனிய.
☎ : 071-8235123

வலய பிரதேச கணனி வள நிலையம்
தெனியாய தேசிய பாடசாலை, தெனியாய.
☎ : 041-2273786 / 077-3779310

வலய கணனி வள நிலையம்
தெளிஜ்ஜவல மத்திய கல்லூரி, தெளிஜ்ஜவல.
☎ : 071-4438838

வலய கணனி வள நிலையம் - பத்தலயாய
ப/பத்தலயாய ம.வி. பத்தலயாய - அலுத்தாராம.
☎ : 071-8045675, 071-2698729,055-2258110,071-8236506

வலய கணனி வள நிலையம்
மொ/மல்வத்தவல ம.ம.வி. வெல்லவாய.
☎ : 055-3561111 / 071-9816662

வலய கணனி வள நிலையம்
பெ/பெல்கஹதென்ன ம.வி. பெல்கஹதென்ன.
☎ : 055-2288645 /071-9573880

வலய கணனி வள நிலையம்
மொ/மஹநாம ம.ம.வி. மொனராகலை.
☎ : 055-2277097 / 071-6093208 / 071-8127300

வலய கணனி வள நிலையம்
ப/ஹாலிஎல ம.ம.வி., ஹாலிஎல.
☎ : 071-8304866 / 077-5748664

வலய கணனி வள நிலையம்
ப/கஹகொல்ல தேசிய பாடசாலை, கஹகொல்ல - தியதலாவ.
☎ : 057-2232460 / 072-6107170

வலய கணினி வள நிலையம்
பதுளை மத்திய கல்லூரி, பதுளை.
☎ : 055-2223852 / 071-9110039

வலய கணனி வள நிலையம்
மொ/பி/தொடம்கொல்ல வித்யாலய, தொடம்கொல்ல, பிபில.
☎ : 071-1700918

வலய கணனி வள நிலையம்
ப/டி.எஸ்.சேனாநாயக்க தேசிய பாடசாலை, கந்தேகெட்டிய.
☎ : 077-4987240

வலய கணனி வள நிலையம்
ப/வல்ஹபுதென்ன ம.ம.வி., ஹல்துமுள்ள.
☎ : 057-3581164 / 071-4463306

வலய கணனி வள நிலையம்
மே.மா/கம/அனுர மத்திய கல்லூரி, யக்கல.
☎ : 033-2231313

வலய கணனி வள நிலையம்
கம்/ கலஹிட்டியாவ தேசிய பாடசாலை, கணேமுல்ல.
☎ : 033-2263677

வலய கணனி வள நிலையம்
மே.மா/பி/ பிரின்சஸ் ஒப் வேல்ஸ் கல்லூரி, மொரட்டுவ.
☎ : 011-2646496

வலய கணனி வள நிலையம்
மே.மா/கள/சபுகஸ்கந்த ம.க. மாகொல.
☎ : 011-2962165

வலய கணனி வள நிலையம்
செனரத் பரனவிதாரன தேசிய பாடசாலை, உடுகம்பொல.
☎ : 033-2231261

வலய கணனி வள நிலையம்
நீர்/தலுபொத்த ம.வி., தலுபொத்த, நீர்கொழும்பு
☎ : 031-2223411

வலய கணனி வள நிலையம்
ஹோமாகம ம.ம.வி. கோர்ட் வீதி, ஹோமாகம.
☎ : 011-2748096

வலய கணனி வள நிலையம்
பண்டாரகம தேசிய பாடசாலை, பண்டாரகம.
☎ : 038-2290369

வலய கணனி வள நிலையம்
தக்ஷிலா ம.ம.வி. ஹொரண.
☎ : 034 2262905

வலய கணனி வள நிலையம்
ஸ்ரீ விஜயராம ம.வி. உடஹமுல்ல, நுகேகொட.
☎ : 011-2802975

வலய கணனி வள நிலையம்
மெரில் காரியவசம் ம.ம.வி., மீகஹதென்ன.
☎ : 034-2284541

வலய கணனி வள நிலையம்
மே.மா/கம/ஸ்ரீ சங்கபோதி ம.ம.வி., நிட்டம்புவ.
☎ : 033-2292346

வலய கணனி வள நிலையம்
திஸ்ஸ ம.ம.வி., களுத்தர - வடக்கு
☎ : 034-2237178

வலய கணனி வள நிலையம்
லும்பினி வித்யாலயம், கொழும்பு - 5.
☎ : 011-2552094

வலய கணனி வள நிலையம்
ஜனாதிபதி கல்லூரி - மஹரகம
☎ : 011-2897225

வலய கணனி வள நிலையம்
போமிரய தேசிய பாடசாலை, கடுவலை.
☎ : 011-2539444

வலய கணனி வள நிலையம்
கம்/ஊரபொல மத்திய கல்லூரி, ஊரபொல.
☎ : 033-2282712

வலய கணனி வள நிலையம்
மினு/C.W.W. கன்னங்கர மத்திய கல்லூரி, ஹனுமுல்ல.
☎ : 031-2247280

மாலபே கணனி வள நிலையம்
வலய ICT மையம், ராகுல மகளிர் வித்தியாலயம், மாலபே.
☎ : 011-2744527

வலய கணனி வள நிலையம்
மஹமதியா வி., கொடகம வீதி, அத்துருகிரிய.
☎ : 011-2561250

வலய கணனி வள நிலையம்
தெபரவெவ தேசிய பாடசாலை, தெபரவெவ, ஹம்பந்தோட்டை.
☎ : 071-4467092

தகவல் மற்றும் தொடர்பாடர் தொழில்நுட்ப நிலைங்களின் கீழான நெனசல நிலையங்கள் (ICTA)

அம்பாறை மாவட்டம்

இலங்கை இளைஞர் பேரவை
இல. 86, கடற்கரை வீதி, அட்டாளைச்சேனை 11.
☎ 077-3170448/ 067-2279295

KDMC அறிவக பயிற்சி நிலையம் - கல்முனை
இல. 9, பிரதான வீதி, கல்முனைகுடி - 14.
☎ : 067-2224290, 077-5392412

மக்பூலியா இளைஞர் கழகம் அறிவகம்
355;1, மக்பூலியன் வீதி, மருதமுனை-06
☎ :077-6767015

மஹாஓய அறிவகம்
கல்வி மற்றும் சமூக அபிவிருத்தி சங்கம்
விஜேதுங்க கட்டிடம், பிரதான வீதி, மஹாஓய
☎ : 070-2016995 /063-5771772

பதியதலாவ அறிவகம்
கல்வி மற்றும் சமூக அபிவிருத்தி அறக்கட்டளை
விஜயசூரிய கட்டிடம், பிரதான வீதி, பதியதலாவ.
☎ : 070-3269296, 063-5771772

அனுராதபுரம் மாவட்டம்

ரஜரட்ட நெனசல அறிவகம்
கெத் எலா ரோட், கன்னிமடுவ ரோடு, கலென்பிந்துனுவெவ
☎ : 071-8196019

ஹொரவபொத்தன அறிவகம், வவுனியா வீதி,
ஹொரவபொத்தன
☎ : 077-5646446, 025-2278567

இப்பலோகம பிரதேச சபை அறிவகம்,
இப்பலோகம
☎ : 025-2264276, 071-0189708

ரன மயூர கிராம அபிவிருத்தி சங்கம்
பதவிய வீதி, கேபதிகொல்லாவ
☎ : 077 - 3961166

மீஹாவான விகாரை அறிவகம், இல.561/87/F, 3வது குறுக்கு வீதி, புதிய நகரம், அனுராதபுர
☎ : 025 - 2234064, 077 - 6737877, 077 - 7180886

அறிவக நிலையம் பராக்கிரமபுர,
பதவிய பராக்கிரமபுர,
☎ : 025 - 2254051, 077 - 7180886

விஷன் டெக் கம்ப்யூட்டர் நெட்வேர்க் அறிவகம்,
புதிய நகரம், பதவிய
☎ : 077-0116597,071-8665527

உதார சமூக மேம்பாட்டு அறக்கட்டளை
64, மிகஸ்ஹேகம, என்டகல, எப்பாவல
☎ : 025-2249483

பதுளை மாவட்டம்

சமூக உதவிகள் அறக்கட்டளை அறிவகம்,
(செலான் வங்கிக்கு அடுத்து), 14/ 1, கொக்கவெட்ட வீதி,பதுளை.
☎ : 077-5858528, 077-7270525, 055-2223335, 055-2223121

செனாரத் அறிவகம்,
செனாரத் பரனவித்தான பொது நூலகம், பதுளை.
☎ : 055-2222279

எதம்பிட்டிய அறிவகம், சமூர்த்தி வங்கி சங்கம்,
பதுளை வீதி, எதம்பிட்டிய
☎ : 076-6053281, 055-2295085

கிளன்னோர் அறிவகம், கிளன்னோர் தோட்டம் - ஹப்புத்தலே
☎ : 057-7429150, 072-7533680

அறிவகம் பண்டாரவளை இல 4, தத்திரிய, பதுளை வீதி, பண்டாரவளை
☎ : 077-6772055, 071-6414353

நெனசல ICT பயிற்சி நிலையம், பது/கெப்பட்டிபொல மகா வித்யாலயத்திற்கு முன்னால், கெப்பட்டிபொல
☎ : 057-5799771, 071-8283780,075-6121065 , 071-7467678

கொழும்பு மாவட்டம்

நலன்புரி சங்கம் அறிவகம்,
சீதவாக்கபுர நகரசபை, 32/ 1, யட்டியந்தோடை வீதி, அவிசாவல்லை.
☎ : 036-2222275, 036-2222146, 077-3488734

காலி மாவட்டம்

பெருந்தோட்ட கலாச்சார அபிவிருத்தி நிலையம் அறிவகம்,அத்துருவெல, இன்டுரூவ.
☎ : 034-2275087

அம்பலங்கொட அறிவகம், 71/7,
காலி வீதி, அம்பலங்கொட.
☎ : 071-2244441, 072-9623623, 091-5716732

கம்பஹா மாவட்டம்

அறிவகம்-பொது நூலகம், அத்தனகல்ல பிரதேச சபை, நீர்கொழும்பு வீதி, நிட்டம்புவ.
☎ : 033-2287277, 033-2246816, 077-6070592, 072-4087214

மருதுகமுல்லை அறிவக நிலையம், சனச கட்டிடம், ஹென்பீடியகெதர வீதி, மருதுகமுல்லை.
☎ : 031-2247147, 011-3818283, 078-8545388

நெனசல ICT பயிற்சி நிலையம்
ஸ்ரீ சுனந்தா தர்ம தரமேத பிரிவென விகாரய, மெடகம, கம்பஹா.
☎ : 033-2248882, 071-4598163, 077-6093124

மிரிஸ்வத்த அறிவக நிலையம், இல.152/சீ, மிரிஸ்வத்த, முதுங்கொட, கம்பஹா.
☎ : 033-2248263, 077-8848440

கம்பஹா இண்டிகொலா அறிவகம் ICT நிலையம், வித்யாவாச மகா பிரிவென, அண்டாரவத்த, கம்பஹா.
☎ : 033-2239497, 077-4460566, 071-6287264

விஜய மங்கலா பிரிவன அறிவகம், யட்டியனா, மினுவாங்கொட.
☎ : 071-8334991, 011-2295027

ஹம்பந்தொட்ட மாவட்டம்

எலேக்ட்ரோ அறிவகம், 42, பிரதான வீதி, அம்பலந்தொட்ட.
☎ : 047-2225560, 071-8220115

ஆசிரி ICT நிலையம், திஸ்ஸமகாராம, எண்:117/ஏ, பல்லியவத்த சந்தி, திஸ்ஸமகாராம
☎ : 047-2239989, 077-3795335

யாழ்ப்பாணம் மாவட்டம்

மூர் வீதி, மகளிர் மேம்பாடு மற்றும் சமூக நிலையம் அறிவகம், இல 143, ஒஸ்மானிய கல்லூரி வீதி (முஸ்லிம் கல்லூரி வீதி), யாழ்ப்பாணம்
☎ : 077-4739889, 077-4087514

இளவாலை யங் ஹேன்றிகன் ஸ்போட்ஸ் கழகம் மற்றும் அறிவகம், இளவாலை
☎ : 077-4087514, 077-2487673

இணுவில் பொது நூலகம் அறிவகம் நிலையம், ஸ்ரீ பரராஜ சேகர பிள்ளையார் கோவிலடி, இணுவில் மானிப்பாய் வீதி, இணுவில் தெற்கு, இணுவில்.
☎ : 021-2054435 , 077-9775650, 077-4431851

களுத்தறை மாவட்டம்

ரய்கம கொத்தலாவல காரியசாதக சங்க அறிவகம், ரய்கம கொத்தலாவல ரஜமஹாவிகாரய, ரய்கம, பண்டாரகம.
☎ : 038-2290935, 077-4410089

கண்டி மாவட்டம்

கெடம்பே அறிவகம் ராஜோபவனாராமய -கெடம்பே பேராதனை
☎ : 081-5683005 , 081-2388113

ஸ்ரீ நாத தேவால விகாரய அறிவகம், ஸ்ரீ நாத தேவல விஹாரய.
☎ : 081-2205221, 071-8471479

அறிவக கல்வி நிலையம், இல.46, புதிய நகரம், தெல்தெனிய.
☎ : 077-2099999, 081-2374532,

DG - ARTS அறிவகம், வித்யா தர்ஷன பிரிவென, பன்வில வீதி, வததேகம நகரம்.
☎ : 081-2470146, 071-2949292, 072-7949292, 077-7857557

உடுதும்புர அறிவகம், இல 01, புதிய நகரம், உடுதும்புர
☎ : 081-2054527, 071-4490101

ஸ்ரீ சுமங்கல தர்ம பாடசாலை, பொலபே பன்சல, பொலபே
☎ : 081-2404283, 071-8339764

கேகாலை மாவட்டம்

சுணான்டா அறிவகம், ஸ்ரீ விஜயசுந்தராராமய, வெலிமன்ன, அரநாயக.
☎ : 035-5632482, 071-8001454, 071-3707509, 035-2258017

புலத்கொகுபிட்டிய பிரதேச சபை, புலத்கொகுபிட்டிய.
☎ : 076-7883232, 071-8784260

ஸ்ரீ விசுருதா ராழய மஹா விஹாரய, வெண்டல்ல, கரவனெல்ல, ருவன்வெல்ல
☎ : 036-2267087, 071-8442020, 071-2535472

குருநாகலை மாவட்டம்

ரோயல் அறிவகம், சிலாபம் வீதி, பொவத்தை.
☎ : 071-6151431, 032-2245726

வயம்ப அறிவகம், IT அகாடமி, இல.29/4, நீர்கொழும்பு வீதி, குருநாகல்.
☎ : 037-4937095, 037-7927579

வித்யாலங்கார அறிவகம், வித்யாலங்கார பிரிவென, தம்பெலசா, நாரம்மள.
☎ : 076-6564505

அறிவகம் ICT பாடசாலை, 57/1, நீர்கொழும்பு வீதி, நாரம்மள.
☎ : 071-6318410

கிரியுள்ள அறிவகம் IT அகாடமி , இல. 22/23, வட்டம்சாலை, கிரியுள்ள
☎ : 037-4937093, 037-5879394

மகந்தூர அறிவகம், பொது நூலக கட்டிடம், மகந்தூர கோனாவில.
☎ : 037-4937098, 031-2299688

அறிவகம் கல்வி நிறுவனம், பொல்பிட்டிகம.
☎ : 071-6030132, 071-1578799, 037-2273444,

உடுபத்தாவ நிசல அறிவகம், உடுபத்தாவ.
☎ : 071-6414854, 037-4992344

மாத்தளை மாவட்டம்

இசிபதான ராமய பௌத நிலைய அறிவகம், இசிபதான ராமய, இனாமலுவ, தம்புல்லை.
☎ : 071-3427046, 066-4935150, 066-4935151

மாத்தறை மாவட்டம்

சுபோதைய அறிவகம், ஸ்ரீ சுப்பொதா ராமய, கோஸ்மோதரா
☎ : 071-9886463

மாத்தறை கித்துல்வெல பிரிவென, ஹக்மன வீதி, மாத்தறை
☎ : 041-5001100, 071-7627626

பாஸ்கொட அறிவகம், பாஸ்கொட.
☎ : 077-3243054, 077-2485252, 041-2291023

வெலிகம அறிவகம், 2வது மாடி, புதிய சூப்பர் மார்க்கட் கட்டிடம், வெலிகம.
☎ : 077-3543836, 041-7901142

ஜெயா சுமணாராமய அறிவகம்,கோட்டுவ கோட,மாத்தறை.
☎ : 071-7627626

மொனராகலை மாவட்டம்

ஹிங்குருகடுவ அறிவகம், கிராம ஹார்ட்பீட் எம்பவர் சென்டர், ஹிங்குருகடுவ, பசர
☎ : 055 - 2271190, 071 - 8217869

சமாதி நிகேதன பௌத்த நிலைய அறிவகம், சமாதி நிகேதன பௌத்த நிலையம், டியகோபல, பிபிலை
☎ : 055 - 2265005

வெல்லஸ்ஸ அபிவிருத்தி மன்றம் அறிவகம், இல. 15, பேருந்து நிலையம், பொது சந்தை வளாகம், முதலாம் மாடி, புத்தள.
☎ : 055 - 2273399, 071 - 3160130

மஹாகம அறிவகம், மஹாகம ஜனபதய, செவனகல.
☎ : 047 - 2288288, 071 - 9273856

அறிவகம் செவனகல, இல. 14, செவனகல நகரம்.
☎ : 071 - 8572019, 077 - 3403053, 047 - 2280060

தனமல்வில சங்கம், பஸ் டிப்போ முன், தனமல்வில
☎ : 072 - 2508608, 071 - 2508608, 047 - 2285285, 047 - 2285295

கரவில ICT நிலையம் - கதிர்காமம். இல. 36, செல்ல வீதி, மலியாகம, கதிர்காமம்
☎ : 077 - 3801576, 075 - 5862613, 047 - 2236301, 075 - 3020888

நுவரெலியா மாவட்டம்

நோர்டன் அறிவகம், 34/1, பிரதான வீதி, நோர்டன் பாலம்
☎ : 051 - 3122062, 075 - 4000267

ஹட்டன் அறிவகம், ஸ்ரீ மாணிக்க பிள்ளையார் தேவஸ்தானம், புதிய கட்டிடம், திம்புள்ள வீதி, ஹட்டன் திம்புள்ள வீதி, ஹட்டன்
☎ :051 - 2224559, 075 - 4000267, 071 - 1455544

மாதங்வெல அறிவகம், மாதங்வெல ராஜ மகா விகாரய, ஹங்குரான்கெத்த
☎ : 081 - 2369401, 071 - 0404231

பொது நூலகம், மஸ்கெலிய
☎ : 071 - 8166888, 052 - 2277275

பொலன்னறுவ மாவட்டம்

அறிவகம் கலுகேலே 70, ஜய சக்தி கர்ந்தபுர, கலுகேலே
☎ : 027 - 5671848, 077 - 6789181

புத்தளம் மாவட்டம்

அறிவகம் - நூரைச்சோலை (கிராம அபிவிருத்தி சங்கம்) இளந்தாடிய வீதி, நூரைச்சோலை
☎ : 077 - 5668646, 032 - 2268523

இரத்தினபுரி மாவட்டம்

பலாங்கொட அறிவகம், 232, கல்கோட்ட வீதி, மிரிஸ்வத்த, பலாங்கொட.
☎ :045 - 2289889, 045 - 7201206, 077 - 7775358

சர்வோதய சங்க அறிவகம், தனமல்வில வீதி, உடவனவல
☎ : 047 - 2233483, 076 - 7724370

எம்பிலிபிடிய அறிவகம், 2ம் மாடி, அமீலா கட்டிடம், பல்லேகம, எம்பிலிபிட்டிய.
☎ : 047 - 2261510, 077 - 4430256

அறிவகம் பதலாங்கல, வெலங்கஹவெல சந்தி, பதலாங்கல.
☎ : 072 - 8350350, 071 - 2856144, 075 - 2680984

யோதகம அறிவகம், மருத்துவமனை வீதி, புதிய நகரம் - எம்பிலிபிட்டிய
☎ : 047 - 2261890, 077 - 8172407

அறிவகம் பம்பாஹின்ன - பெலியுள்ஓய மருத்துவமனை சந்தி, பம்பாஹின்ன, பெலியுல்ஓய
☎ : 045 - 2280379, 075 - 8068340

அறிவகம் கலவான கணினி மற்றும் தொழிற் பயிற்சி நிலையம், வேடகல வீதி, கலவான.
☎ : 045 - 2255786, 045 - 2256786

அறிவகம் நியு லக் டெக், இல. 26, வட்டபொல வீதி, நிவித்திகல
☎ : 045 - 2279978, 071 - 2320642, 070 - 3682099

பஹல கரவிட்ட சனச சங்கம், கரவிட்ட, உட கரவிட்ட.
☎ : 045 - 2279526

அறிவகம் கணினி பயிற்சி நிறுவனம், (ஸ்ரீ ஞான்னசீஹ தோப்புவ விஹாரய) இல.155, குட் செட் வீதி, இரத்தினபுரி
☎ : 071 - 4431426, 077 - 7828887

திருக்கோணமலை மாவட்டம்

கிண்ணியா குட்டிகராச்சி அறிவகம், இல.155/பி, பிரதான வீதி, குட்டிகராச்சி கிண்ணியா 04.
☎ : 026-2236953, 077-9692883, 0770209555

அறிவகம் - நொக்ஸ் வீதி, நொக்ஸ் வீதி, மூதூர் - 06.
☎ : 077-2004744, 075-2948481

மூதூர் கிழக்கு அறிவகம்,அரபுக் கல்லூரி வீதி, ஜெயா நகர், மூதூர் - 05
☎ : 077-9440923, 075-6061223

பகுதி 6

விசேட ஏற்பாடுகளின் கீழ் மாணவர்களின் அனுமதி

6.1	கண்பார்வையற்ற, அங்கவீனரான பரீட்சார்த்திகள்	146
6.2	இணைப்பாடவிதான செயற்பாடுகளில் திறமை காட்டிய மாணவர்கள்	146
6.3	விளையாட்டுக்களில் தனிச் சிறப்பு வாய்ந்த திறமைகளை/ திறன்களைக் கொண்ட விண்ணப்பதாரிகள்	147
6.4	ஆயுதப்படைகள், பொலிஸ் சேவை, விசேட அதிரடிப்படை ஆகியவற்றில் சேர்ந்துள்ள ஆளணியினர்	148
6.5	வெளிநாடுகளில் பயின்ற இலங்கையரும், வெளிநாட்டு மாணவர்களும்	148
6.6	ஆசிரியர்களின் அனுமதி	149
6.7	மேலதிக அனுமதி	150

பகுதி 6

விசேட ஏற்பாடுகளின் கீழ் மாணவர்களின் அனுமதி

பல்கலைக்கழகங்களுக்கு மாணவர்களை அனுமதிக்கும் போது விளையாட்டுக்கள், கலை, கலாசாரம் ஆகியவற்றில் திறமை காண்பித்தோர், கண் பார்வையற்றோர், அங்கவீனர், ஆயுதப் படைகளைச் சார்ந்த ஆளணியினர், ஆசிரியர்கள் மற்றும் வெளிநாட்டு மாணவர்கள் போன்ற விசேட வகுப்புகளைச் சார்ந்த மாணவர்களுக்கு ஒரு சில இடங்களை ஒதுக்குவது பல நாடுகளில் பொதுவான வழக்கமாகும். ஒரு சிறு எண்ணிக்கையினரே மேற்கூறியவாறு விசேட காரணங்களுக்காக அனுமதிக்கப்படுகின்றனர். இலங்கையில் விசேட அனுமதிக்காகத் தகுதி பெறும் மாணவர்களின் விசேட பிரிவுகள் கீழே விபரிக்கப்பட்டுள்ளன.

6.1 கண்பார்வையற்ற, அங்கவீனரான பரீட்சார்த்திகள் (Blind and Differently Able Candidates)

சம்பந்தப்பட்ட பல்கலைக்கழகங்களின் வேண்டுகோளின் பேரில் ப.மா.ஆ. ஒரு மட்டுப்படுத்தப்பட்ட எண்ணிக்கையான கண்பார்வையற்ற மாணவர்களை (பிறெய்லி முறையைப் பாவித்து 2018 இல் க.பொ.த. (உ.த.) பரீட்சைக்கு தோற்றியோர்) கலை கற்கை நெறிக்கும், அங்கவீனரான மாணவர்களை (அங்கவீனராக வைத்திய ரீதியில் உறுதி செய்யப்பட்டோர்) கலை, வணிகவியல், உயிரியல் விஞ்ஞானம், பௌதிக விஞ்ஞானம் ஆகிய கற்கை நெறிகளுக்கும் அனுமதிப்பதற்கு தீர்மானிக்கலாம்.

பல்கலைக்கழக அனுமதிக்கான ஆகக் குறைந்த தேவைகளையும் (இக்கைநூலின் பிரிவு 1.2 இல் குறிப்பிட்டவாறு), சம்பந்தப்பட்ட கற்கை நெறிக்கான பாட முன் நிபந்தனைகளையும் (இக்கைநூலின் பிரிவு 2.2 இல் குறிப்பிட்டவாறு) பூர்த்தி செய்யும் மாணவர்கள் மட்டுமே இவ்விசேட ஏற்பாட்டின் கீழ் கருத்திற் கொள்ளப்படுவர் என்பதைக் குறித்துக்கொள்வது முக்கியமாகும்.

விண்ணப்பதாரிகள் சரீரக் குறைபாடுகளை நிரூபிப்பதற்கு ப.மா.ஆ.இனால் ஏற்றுக்கொள்ளக்கூடிய வைத்திய சான்றிதழ்களைச் சமர்ப்பிக்க வேண்டும். இப்பிரிவின் நோக்கத்திற்காக சரீரக் குறைபாடு என்பது சாதாரண வாழ்க்கையைப் பாதிக்கக்கூடிய நிரந்தர உடல் ஊனத்தைத் குறிக்கும்.

மேலே குறிப்பிடப்பட்ட கண்பார்வையற்ற மாணவர்கள் மற்றும் அங்கவீனரான மாணவர்களின் பிரிவின் கீழ் அனுமதிக்கான விண்ணப்பங்கள் இக்கைநூலின் இணைப்பு III ன் இறுதியில் காணப்படும் விதந்துரைக்கப்பட்ட படிவத்தில் செய்யப்பட வேண்டும். முறையாக நிரப்பப்பட்ட விண்ணப்பப்படிவம் அச்சுப்பிரதி செய்யப்பட்ட பல்கலைக்கழக அனுமதிக்கான விண்ணப்பத்துடன் சேர்த்து பதிவுத் தபால் மூலம் பத்திரிகை அறிவித்தலில் விதந்துரைக்கப்படும் முடிவு திகதியன்றோ அல்லது அதற்கு முன்னரோ கிடைக்கக்கூடியதாக Additional Secretary - University Admissions, University Grants Commission, 20, Ward Place, Colombo 07 **என்ற முகவரிக்கு அனுப்பப்பட வேண்டும். பூரணமற்றதும், உரிய காலத்துக்குப் பின் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்களும் நிராகரிக்கப்படும். இந்த ஏற்பாடுகளின் கீழ் விண்ணப்பங்கள் கோரி தனியான பத்திரிகை அறிவித்தல்கள் எதுவும் பிரசுரிக்கப்படமாட்டாது.**

6.2 இணைப்பாடவிதான செயற்பாடுகளில் திறமை காட்டிய மாணவர்கள் (Students Who Have Extra Curricular Activities)

விளையாட்டுகள், கலாசாரச் செயற்பாடுகள் (உதாரணம்: நாட்டியம், சித்திரம், சங்கீதம், இலக்கியம்), சாரணர் சேவை, மாணவர் பயிற்சிப்படை, சமூக சேவை ஆகியவற்றிலும் வேறு படிப்பு தவிர்ந்த செயற்பாடுகளிலும் 1ம், 2ம் மற்றும் 3ம் இடங்களை தேசிய மட்டத்திலோ அல்லது சர்வதேச மட்டத்திலோ **01.08.2015 க்கும் 31.07.2018க்கும்** இடையில் பெற்று சாதனை புரிந்து, சில புள்ளிகள் குறைந்தமையால்

வழமையான அனுமதியின் கீழ் அனுமதி பெற முடியாத மாணவர்களுக்காக கட்புல, அரங்கேற்றல் கலை பல்கலைக்கழகத்தினால் வழங்கப்படும் கற்கை நெறிகள் தவிர்ந்த ஒவ்வொரு கற்கை நெறியிலும் தீர்மானிக்கப்பட்ட அனுமதியின் 0.5% வரையிலான இடங்கள் ஒதுக்கப்பட்டுள்ளன. பரீட்சார்த்திகள் இவ்வேற்பாட்டின் கீழ் அனுமதிக்கு தகுதி பெறுவதற்கு இக்கைநூலின் பிரிவு 1.2 இல் குறிப்பிடப்பட்ட ஆகக் குறைந்த தேவைகளையும், ஒரு குறிப்பிட்ட கல்வி நெறிக்கான 2.2 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள பாட முன் நிபந்தனைகளையும் திருப்தி செய்திருக்க வேண்டும். சம்பந்தப்பட்ட கற்கைநெறிக்கு பரீட்சார்த்தியின் 'Z' புள்ளி மாவட்டத்திற்கான அனுமதிக்குரிய வெட்டுப்புள்ளியின் 0.2000க்கு உட்பட்டதாக இருந்தால் மட்டுமே அனுமதிக்கு பரீட்சார்த்தி பரிசீலிக்கப்படுவார் என்பதுடன், நேர்முகப்பரீட்சைக்கும் அழைக்கப்படுவார்.

கட்புல, அரங்கேற்றல் கலை பல்கலைக்கழகத்தைப் பொறுத்தளவில் ஒவ்வொரு கற்கை நெறியிலும் உத்தேசமான உள்ளெடுப்பிலிருந்து 4% வரையிலான இடங்கள் இவ்வகுதியின் கீழ் மாணவர்களின் அனுமதிக்கு ஒதுக்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின் கீழ் தகுதியுடைய பரீட்சார்த்திகள் ப.மா.ஆ. செயலகத்திற்கு நேர்முகப் பரீட்சைக்கு வருமாறு அழைக்கப்படும் போது தேசிய / சர்வதேச மட்டத்தில் தாம் செய்த சாதனைகளுக்கான ஆவணச் சான்றுகளைச் சமர்ப்பிக்க வேண்டும். ப.மா.ஆ. வினால் அங்கீகரிக்கப்பட்ட புள்ளித்திட்டத்தின்படி நேர்முகப் பரீட்சையின் போது அவர்களின் சாதனைகளுக்கு புள்ளிகள் வழங்கப்படும். இச்சிறப்பு ஏற்பாட்டின் கீழுள்ள இடங்களின் எண்ணிக்கையைப் பொறுத்து இம்மதிப்பீட்டின்போது விண்ணப்பதாரிகள் பெறும் புள்ளிகளின் ஒழுங்கில் இறுதித் தெரிவு செய்யப்படும். இம்மதிப்பீட்டின்போது பெறும் புள்ளிகள் தெரிவிற்காக க.பொ.த. (உ;த.) பரீட்சையில் விண்ணப்பதாரி பெற்ற புள்ளிகளுடன் கூட்டப்படமாட்டாது.

மேலே குறிப்பிடப்பட்ட இணைப்பாடவிதான செயற்பாடுகளில் திறமை காட்டிய மாணவர்கள் பிரிவின் கீழான அனுமதிக்கான விண்ணப்பங்கள் இக்கைநூலின் இணைப்பு II ன் இறுதியில் காணப்படும் விதந்துரைக்கப்பட்ட படிவத்தில் செய்யப்படல் வேண்டும். உம்மை கருத்தில் கொள்ள வேண்டிய கற்கைநெறிகளை உமது விருப்பெழுங்கிற்கமைய குறிப்பிடவும். இப் பிரிவின் கீழ் கிடைக்கக் கூடிய கற்கைநெறிகளின் விபரம் இணைப்பு A இல் தரப்பட்டுள்ளது. இணைப்பு A இல் தரப்பட்டுள்ளடுள்ளவாறு course code குறிப்பிடப்படாத விண்ணப்பங்கள் எவ் அறிவித்தலும் இன்றி நிராகரிக்கப்படும்.

இணைப்பு II இல் தரப்பட்டுள்ள விண்ணப்பப்படிவம் முறையாக நிரப்பப்பட்டு பாடசாலை அதிபரின் கையொப்பம், உத்தியோகப்பூர்வ முத்தரையுடன் 01.08.2015 இலிருந்து 31.07.2018 வரையிலான உமது சாதனைகள் தொடர்பான உறுதிப்படுத்தப்பட்ட சான்றிதழ்களின் பிரதி பல்கலைக்கழக அனுமதிக்கான விண்ணப்பத்துடன் சேர்த்து பதிவுத் தபால் மூலம் பத்திரிகை அறிவித்தலில் விதந்துரைக்கப்படும் முடிவு திகதியன்றோ அல்லது அதற்கு முன்னரோ கிடைக்கக்கூடியதாக Additional Secretary - University Admissions, University Grants Commission, 20, Ward Place, Colombo 07 என்ற முகவரிக்கு அனுப்பப்பட வேண்டும்.

ஆணைக்குழுவினால் ஏற்றுக்கொள்ளப்படக் கூடிய ஓர் காரணத்திற்காக மேற்படி ஏற்பாட்டின் நேர்முகப்பரிட்சைக்கு தோற்ற முடியாத மாணவரிடமிருந்து பெறப்பட்ட கடிதத்துடன், அவ் மாணவரது பெற்றோர் அல்லது பாதுகாவலர் குறித்த திகதியில் அவ் மாணவருக்கு பதிலாக நேர்முகப்பரிட்சையிற்கு சமூகமளிக்கமுடியும். எவ்வாறாயினும், மேற்குறிப்பிட்ட விடயம் தொடர்பாக முன்கூட்டிய அனுமதியை ப.மா.ஆ. விடமிருந்து பெற்றுக்கொள்ள வேண்டும்.

பூரணமற்றதும், உரிய காலத்துக்குப் பின் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்களும் நிராகரிக்கப்படும். இந்த ஏற்பாடுகளின் கீழ் விண்ணப்பங்கள் கோரி தனியான பத்திரிகை அறிவித்தல்கள் எதுவும் பிரசுரிக்கப்படமாட்டாது.

6.3 விளையாட்டுக்களில் தனிச் சிறப்பு வாய்ந்த திறமைகளை/ திறன்களைக் கொண்ட விண்ணப்பதாரிகள்

விளையாட்டுத் துறையில் தனிச் சிறப்பு வாய்ந்த விண்ணப்பதாரிகளுக்கு, இலங்கை சப்பிரகமுவ பல்கலைக்கழகத்தினாலும், ஸ்ரீ ஜயவர்த்தனபுரப் பல்கலைக்கழகத்தினாலும் நடாத்தப்படும் விளையாட்டு விஞ்ஞானமும் முகாமைத்துவமும் கற்கை நெறிக்கும் இலங்கை சப்பிரகமுவ பல்கலைக்கழகத்தினால் நடாத்தப்படும் உடற்றொழில் கல்வி கற்கைநெறிக்கும் உத்தேசிக்கப்பட்ட உள்ளெடுப்பை விட மேலதிகமாக ஒரு சிறிய எண்ணிக்கையிலான இடங்கள் ஒதுக்கப்பட்டுள்ளது.

இந்த விசேட அனுமதிக்காக பூரணப்படுத்தப்பட வேண்டிய தேவைப்பாடுகள் பின்வருமாறு.

- ஒலிம்பிக் விளையாட்டுப் போட்டிகளில் பதக்கம் வென்றிருத்தல் அல்லது பங்கு பற்றி இருத்தல்.

- பொதுநலவாய விளையாட்டுக்கள், ஆசிய விளையாட்டுப் போட்டிகளில் அல்லது 'சார்க்' விளையாட்டுப் போட்டிகளில் குறைந்தது தங்கம், வெள்ளி அல்லது வெண்கலப் பதக்கங்களைப் வென்றிருத்தல்.

- பொதுநலவாய விளையாட்டுக்கள், ஆசிய விளையாட்டுக்கள், சார்க் விளையாட்டுக்கள் ஆகியவற்றிலோ அல்லது அங்கீகரிக்கப்பட்ட உலகக் கிண்ணத்திற்கான கிரிக்கெட், காற்பந்தாட்டம், றகர் மற்றும் கரப்பந்தாட்டம் அல்லது வேறு ஏதாவது பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் முடிவு செய்யப்பட்ட விளையாட்டில் இலங்கையைப் பிரதிநிதிப்படுத்தும் தேசிய அணிகளில் அங்கத்தவராக இருத்தல்.

குறித்த கற்கை நெறிக்கு தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரிகள், உரிய கற்கை நெறியை ஆரம்பிப்பதற்கு முன்பு, கட்டாயமாக இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தினால் ஒழுங்கு செய்யப்படும் ஒரு வருட காலத்துக்கான அடிப்படைக் கற்கைநெறியைத் தொடர்வதற்கு எதிர்பார்க்கப்படுகிறார்கள்.

இவ் விசேட ஏற்பாட்டின் கீழ் விண்ணப்பங்களைக் கோரி பத்திரிகை அறிவித்தலொன்று விடுக்கப்படும்.

6.4 ஆயுதப்படைகள், பொலிஸ் சேவை, விசேட அதிரடிப்படை ஆகியவற்றில் சேர்ந்துள்ள ஆளணியினர்: (Enlisted Personnel of Armed Forces, Police Service & Special Task Force)

மருத்துவம், பல் அறுவைச் சிகிச்சை, இயந்திரவியல் ஆகியவற்றுக்குள்ள மொத்த இடங்களின் எண்ணிக்கையில் தீர்மானிக்கப்பட்ட உள்ளெடுப்பின் 0.5% வரையிலான வீதம் ஆயுதப்படைகள், பொலிஸ் சேவை, விசேட அதிரடிப் படை ஆகியவற்றில் சேர்ந்து நடவடிக்கை பகுதிகளில் பணிபுரியும் ஆளணியினருக்காக ஒதுக்கப்பட்டுள்ளது. இவ்வேற்பாட்டின் கீழ் விண்ணப்பிக்க விரும்பும் பரீட்சார்த்திகள் இந்த கைநூலின் பிரிவு 1.2 மற்றும் பிரிவு 2.2 இல் குறிப்பிடப்பட்டுள்ள கற்கைநெறிகளுக்கான முன்நிபந்தனைகள் ஆகியவற்றில் குறிப்பிடப்பட்டுள்ள அனுமதிக்கான ஆகக் குறைந்த தகைமைகளைத் திருப்தி செய்திருப்பதுடன், விண்ணப்பத்தை அனுப்பும் காலத்தில் கட்டாயமாக பட்டியலில் சேர்க்கப்பட்டு, உரிய படைத்தளபதி ஊடாக பாதுகாப்பு அமைச்சின் செயலாளருக்கு அனுப்பி வைத்தல் வேண்டும். விண்ணப்பதாரிகளின் ண-புள்ளிகளினடிப்படையில் ப.மா.ஆ. தெரிவினை மேற்கொள்ளும். பரீட்சார்த்திகள் விண்ணப்பங்களை ப.மா.ஆ.இற்கு நேரடியாக அனுப்பக்கூடாது.

6.5 வெளிநாடுகளில் பயின்ற இலங்கையரும், வெளிநாட்டு மாணவர்களும்: (Sri Lankans who have Studied Abroad and Foreign Students)

(1) ஒவ்வொரு கற்கை நெறியிலும் உத்தேசிக்கப்பட்டுள்ள உள்ளெடுப்பின் 0.5% வரையிலான இடங்கள் வெளிநாடுகளில் தகைமைகளைப் பெற்ற இலங்கை மாணவர்களுக்கும், வெளிநாட்டு மாணவர்களுக்கும் ஒதுக்கப்பட்டுள்ளன. அதன்படி இலங்கை க.பொ.த.(உ/த) பரீட்சைக்குச் சமமான இலங்கைக்கு வெளியே நடாத்தப்பட்ட வெளிநாட்டு பரீட்சைகளில் பல்கலைக்கழக அனுமதிக்கு தேவையான தகைமைகளைக் கொண்ட பரீட்சார்த்திகள் விண்ணப்பிக்கத் தகுதியுடையோராவர். பின்வரும் முன்னுரிமை அடிப்படையில் தெரிவுகள் அமையும்.

(அ) ஏனைய நாடுகளில் இருக்கும் / இருந்த இலங்கைத் தூதரக ஆளணியினரின் பிள்ளைகள். ஆயினும் தகைமை பெறுவதற்கு உடன் முன்னுள்ள ஆறு ஆண்டு காலப் பகுதியில் குறைந்தது மூன்று கல்வி ஆண்டுகள் வெளிநாட்டில் கற்றிருக்க வேண்டும்.

(ஆ) இலங்கையில் பணியாற்றும் வெளிநாட்டுத் தூதரக ஆளணியினரின் பிள்ளைகள்.

(இ) சார்க் நாடுகளைச் சார்ந்த மாணவர்கள்

(ஈ) மேலே பிரிவு (அ) க்குள் வராத தகுதிபெறும் பரீட்சைக்கு உடன் முன்னுள்ள மூன்று வருடங்களுக்குக் குறையாது வெளிநாடுகளில் கல்வி பயின்றதன் பின் பல்கலைக்கழக அனுமதிக்கான தகைமைகளைப் பெற்ற இலங்கை மாணவர்கள்.

(உ) பிரிவு (ஆ), (இ) இல் அடங்காத வேறு வெளிநாட்டு மாணவர்கள்

இவ் ஏற்பாட்டின் கீழுள்ள அனுமதிக்குத் தகுதிபெற வகை (ஆ), (ஈ)இல் அடங்கும் இலங்கை மாணவர்களின் பெற்றோரும் கருத்தில்கொள்ளப்படும் பரீட்சைக்கு முன்னுள்ள மூன்று வருடங்களுக்கு அதே நாட்டிலேயே பணிபுரிந்திருத்தல் வேண்டும்.

மேலே பிரிவு (அ) வில் உள்ளடங்கும் மாணவர்கள் தவிர்ந்த ஏனைய தெரிவுசெய்யப்பட்ட விண்ணப்பதாரிகள் கட்டணம் அறவிடும் அடிப்படையில் உள்ளவாங்கப்படுவர்.

(2) ஒவ்வொரு கற்கை நெறியிலும் உத்தேசிக்கப்பட்ட உள்ளெடுப்பிற்கு மேலதிகமாக 4.5% வரையான இடங்கள் வெளிநாடுகளில் தகுதி பெற்ற இலங்கை மாணவர்களுக்கும் மற்றும் வெளிநாட்டு மாணவர்களுக்கும் கட்டணம் அறவிடும் அடிப்படையில் ஒதுக்கப்பட்டும்.

இவ் ஏற்பாட்டின் கீழுள்ள அனுமதிக்குத் தகுதிபெற இலங்கை மாணவர்களின் பெற்றோரும் கருத்தில்கொள்ளப்படும் பரீட்சைக்கு முன்னுள்ள மூன்று வருடங்களுக்கு அதே நாட்டிலேயே பணிபுரிந்திருத்தல் வேண்டும்.

தகுதிபெற்ற விண்ணப்பதாரிகள் ப.மா.ஆ.இலிருந்து அல்லது ப.மா.ஆ. இன் உத்தியோகபூர்வ இணையத் தளமான **www.ugc.ac.lk** இல் பெறக்கூடிய விசேட படிவத்தில் விண்ணப்பிக்க வேண்டும்.

6.6 ஆசிரியர்களின் அனுமதி (Admission of Teachers)

கலை, உயிரியல் விஞ்ஞானம், பௌதிக விஞ்ஞானம் மற்றும் பிரயோக விஞ்ஞானங்கள் ஆகிய கற்கை நெறிகளுக்கு ஒவ்வொரு வருடமும் பின்வரும் பிரிவினரைச் சார்ந்த ஆசிரியர்களை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு மட்டுப்படுத்தப்பட்ட எண்ணிக்கையில் அனுமதிக்கலாம்.

(அ) ஆங்கிலத்தை ஒரு பாடமாகக் கொண்டு பொதுக் கலைத் தகுதிகாண் (வெளிவாரி) பரீட்சையில் (GAQ) 2014 இலும், அதன் பின்னரும் சித்தியடைந்த ஆசிரியர்கள் கலையின் கற்கைநெறியொன்றிற்கு விண்ணப்பிப்பதற்கு தகுதியுடையவர்களாவார்கள்.

(ஆ) விஞ்ஞானமாணி (வெளிவாரி) பட்டத் திட்டத்தின் முதல் பரீட்சையில் 2014 இலும், அதன் பின்னரும் சித்தியடைந்த ஆசிரியர்கள் உயிரியல் விஞ்ஞானம், பௌதிக விஞ்ஞானம் மற்றும் பிரயோக விஞ்ஞானங்கள் ஆகிய கற்கைநெறியொன்றிற்கு விண்ணப்பிப்பதற்கு தகுதியுடையவர்களாவார்கள்.

அனுமதிக்கு தகுதி பெறுவதற்கு, மேலே உள்ள பிரிவுகளில் ஒன்றைச் சார்ந்த ஆசிரியர் ஒருவர்:

(1) ஆசிரியராக முதல் நியமனத் திகதியிலிருந்து குறைந்தது ஐந்து வருடகால சேவையை முதல் நியமனத் திகதியிலிருந்து பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

(2) தெரிவின் போது ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியில் /கல்விக் கல்லூரியில் மாணவராக சேர்ந்திருக்கக் கூடாது.

(3) உயிரியல் விஞ்ஞானம், பௌதிக விஞ்ஞானம் மற்றும் பிரயோக விஞ்ஞானங்கள் ஆகியவற்றைப் பொறுத்த வரையில், பல்கலைக்கழகத்தில் உள்ள கற்கை நெறியொன்றிற்குத் தெரிவு செய்யப்படுவதற்கான முன்நிபந்தனையாக க.பொ.த. (உ.த.) பரீட்சையில் அல்லது விஞ்ஞானமாணி (வெளிவாரி) பட்டத் திட்டத்தின் முதல் பரீட்சையில் அதற்கான பாடங்களை அபேட்சகர் எடுத்திருக்க வேண்டும்.

முதலில் கல்விப் பணிப்பாளர் நாயகம் அரச வர்த்தமானி அறிவித்தல் மூலம் ஆசிரியர்களின் அனுமதிக்கான விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்வார். பொ.க.த/பொ.வி.த பரீட்சையில் பரீட்சார்த்தியின் பெறுபேறுகளின் (உரிய பாடத்திற்குப் பெற்ற திரட்டுப் புள்ளி /புள்ளிகள்) அடிப்படையிலும் ப.மா.ஆ.வினால் நடாத்தப்படும் நேர்முகத் தேர்வில் வழங்கப்படும் புள்ளிகளின் அடிப்படையிலும், தெரிவுகள் மேற்கொள்ளப்படும். ப.மா.ஆ.விற்கு நேரடியாக விண்ணப்பங்களை விண்ணப்பதாரர் அனுப்பக்கூடாது.

இவ் விசேட ஏற்பாட்டின் கீழ் தெரிவு செய்யப்பட்ட ஆசிரியர்கள் அவர்களுக்கு வழங்கப்படும் கற்கை நெறியினையே தொடர ஆயத்தமாக இருத்தல் வேண்டும்.

தெரிவு செய்யப்பட்ட சகல விண்ணப்பதாரிகளும் கற்கை நெறியின் முதலாம் வருடத்தில் அனுமதிக்கப்படுவர்.

6.7 மேலதிக அனுமதி (Additional Intake)

கலைக் கற்கைநெறியில் சில பாடங்களுக்கு போதுமான மாணவர் எண்ணிக்கையினர் மேலே பிரிவு 1.1 இல் விதந்துரைத்த அனுமதி மூலப்பிரமாணத்தின் அடிப்படையில் தெரிவு செய்யப்படமல் இருக்கலாம். அதன் விளைவாக சில பீடங்களும் துறைகளும் வழமையான அனுமதிப் பிரமாணத்தின் கீழ் அனுமதிக்கப்படும் எண்ணிக்கையிலும் பார்க்க கூடிய எண்ணிக்கையை அனுமதிக்கக்கூடிய நிலையில் இருக்கும்.

அச்சந்தர்ப்பங்களில் சம்பந்தப்பட்ட பல்கலைக்கழகங்களின் வேண்டுகோள்களின் பேரில் சில தெரிந்தெடுக்கப்பட்ட பாடப் பரப்புகளுக்கு மட்டுப்படுத்தப்பட்ட எண்ணிக்கையான மேலதிக மாணவர்களை அனுமதிக்க ப.மா.ஆ. தீர்மானிக்கலாம். இது 'ஒரு மேலதிக அனுமதியாகும்'. இது பல்கலைக்கழகங்களிலுள்ள மனித, பௌதிக வளங்களின் உச்ச பயன்பாட்டைப் பெறவும், சமுகத்தின் திறனுள்ள மனித வளத்துக்கான தேவைகளை பூர்த்தி செய்யும் நோக்கத்தை கொண்டதாகும்.

சாதாரண அனுமதிக்கு ஏற்கனவே விண்ணப்பித்தோரிலிருந்தே பரீட்சார்த்திகள் தெரிவு செய்யப்படுவதால், மேலதிக அனுமதியின் கீழ் அனுமதிக்கு புறம்பாக விண்ணப்பிக்க வேண்டிய அவசியமில்லை.

எவ்வாற்யினும், இவ் ஏற்பாட்டின் கீழ் மாணவர்கள் அகில இலங்கை ரீதியிலான திறமை அடிப்படையில் தெரிவுசெய்யப்படுவர். மொழி சார்ந்த பாடங்களுக்கு ஒவ்வொரு மாணவரும் தாம் அனுமதிக்கு கருதப்படும் பாடத்தில் குறைந்தது திறமைச் சித்தி (C) (ஆங்கில பாடமெனின் குறைந்தது சாதாரண சித்தி (S) பெற்றிருத்தல் வேண்டும்).

தெரிவு செய்யப்படும் மாணவர் தெரிவு செய்யப்பட்ட பாடப் பரப்பை அவசியம் அவரது பல்கலைக்கழகக் கல்விக் காலம் பூராகவும் கற்க வேண்டும். பரீட்சார்த்தி இந்த சிறப்பு நிபந்தனையில் தெரிவு செய்யப்பட்டு சிறப்பு பட்டத்தை அடைவதற்கு திட்டமிட்டால், அவர் அதே சிறப்பு பாடத்தை கட்டாயமாக தெரிவு செய்ய வேண்டும்.

பகுதி 7

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் கீழ் வருகின்ற அரச பல்கலைக்கழகங்கங்கள் மற்றும் ஏனைய உயர்கல்வி நிறுவனங்களினால் நடாத்தப்படும் கற்கைநெறிகள் தொடர்பான விபரங்கள்

இப் பகுதி அரச பல்கலைக்கழகங்கள் மற்றும் உயர்கல்வி நிறுவனங்களில் காணப்படும் வசதிகள் தொடர்பான அறிமுகத்தை தருவதுடன் அவற்றில் காணப்படும் கற்கைநெறிகள் தொடர்பான விபரங்களையும் தருகின்றது.

கொழும்புப் பல்கலைக்கழகம்	152
பேராதனைப் பல்கலைக்கழகம்	157
ஸ்ரீ ஜயவர்தனபுரப் பல்கலைக்கழகம்	163
களனிப் பல்கலைக்கழகம்	171
மொறட்டுவைப் பல்கலைக்கழகம்	180
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்	182
உறுகுணைப் பல்கலைக்கழகம்	184
கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை (மட்டக்களப்பு)	191
தென் கிழக்குப் பல்கலைக்கழகம் (ஒலுவில்)	192
இலங்கை ரஜரட்டை பல்கலைக்கழகம் (மிகிந்தலை)	193
சபரகமுவ பல்கலைக்கழகம் இலங்கை (பெலிகுல் ஓய)	196
வயம்பப் பல்கலைக்கழகம் (குளியாப்பிட்டி)	201
ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழகம்	206
கட்புல, அரங்கேற்றக்கலைகள் பல்கலைக்கழகம்	207
ஸ்ரீபாளி வளாகம்	207
வவுனியா வளாகம்	208
திருகோணமலை வளாகம்	208
கொழும்புப் பல்கலைக்கழகத்தின் கணனிக் கல்லூரி	208
உள்நாட்டு மருத்துவ நிறுவகம், கொழும்பு பல்கலைக்கழகம்	209
கம்பஹா விக்கிரமாராச்சி ஆயுர்வேத நிறுவகம், களனிப் பல்கலைக்கழகம்	209
சுவாமி விபுலானந்தர் அழகியற் கற்கைகள் நிறுவகம்	209
இராமநாதன் நுண்கலைக்கழகம்	209

பகுதி 07

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் கீழ் வருகின்ற அரச பல்கலைக்கழகங்கங்கள் மற்றும் ஏனைய உயர்கல்வி நிறுவனங்களினால் நடாத்தப்படும் கற்கைநெறிகள் தொடர்பான விபரங்கள்

சுருக்கம்

பிர. கணிதம்	- பிரயோக கணிதம்	ஆ.ந. த.தொ	- ஆய்வு நடவடிக்கையும், தகவல் தொழில்நுட்பமும்
அடி. இல.	- அடிப்படை இலத்திரனியல்		
பௌ. விஞ்.	- பௌதிக விஞ்ஞானம்	உயி. விஞ்.	- உயிரியல் விஞ்ஞானம்
தூய கணி.	- தூய கணிதம்	கண. விஞ்.	- கணனி விஞ்ஞானம்
புள்ளி.	- புள்ளிவிபரவியல்	கைத். முகா.	- கைத்தொழில் முகாமைத்துவம்
கணி.	- கணிதம்	புள்ளி. கண. விஞ்.	- புள்ளிவிபரவியலும் கணனி விஞ்ஞானமும்
மி.வை. விஞ்.	- மிருக வைத்திய விஞ்ஞானம்	முகா. விஞ்.	- முகாமைத்துவ விஞ்ஞானம்
ந.வ.உ.அ.	- நவநாகரிக வடிவமைப்பும் உற்பத்தி அபிவிருத்தியும்		

க./மொ : கற்பிக்கும் மொழி

S - சிங்களம் T - தமிழ் E - ஆங்கிலம் A - அரபு

கொழும்புப் பல்கலைக்கழகம்

கற்கைநெறி	பாடச்சேர்க்கை (விதித்துரைக்கப்பட்டவிடத்து)	க./மொ
கலை	-	S/T/E
முகாமைத்துவம் +	-	E
சட்டம்	-	S/T/E
மருத்துவம்	-	E
இயன் மருத்துவம்	-	E
கைத்தொழில் புள்ளிவிபரவியலும் கணி. நிதி. *	-	E
மூலக்கூற்று உயிரியலும் உயிர்ரசாயனவியலும் *	இரசாயனவியல், தாவரவியல், விலங்கியல்	E
உயி. விஞ்ஞானம் *	இரசாயனவியல், தாவரவியல், விலங்கியல்	E
பௌ. விஞ்ஞானம் *	பிரயோக கணி., பௌதிகவியல், இரசாயனவியலுடன் கணனி விஞ்ஞானம்	E
பௌ. விஞ்ஞானம் *	பிரயோக கணி., தூய கணிதம், இரசாயனவியலுடன் கணனி விஞ்ஞானம்	E
பௌ. விஞ்ஞானம் *	பிரயோக கணி., புள்ளிவிபரவியல், இரசாயனவியலுடன் கணனி விஞ்ஞானம்	E
பௌ. விஞ்ஞானம் *	பிரயோக கணி., புள்ளி விபர., பௌதிகவியலுடன் கணனி விஞ்ஞானம்	E
பௌ. விஞ்ஞானம் *	பிரயோக கணி., தூய கணிதம், புள்ளிவிபரவியலுடன் கணனி விஞ்ஞானம்	E
பௌ. விஞ்ஞானம் *	பிரயோக கணி., தூய கணிதம், பௌதிகவியலுடன் கணனி விஞ்ஞானம்	E
தாதியியல்	-	E
பொறியியல் தொழில்நுட்பம்	-	E
உயிர் முறைமைகள் தொழில்நுட்பம்	-	E
தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம்	-	E

\+ **முகாமைத்துவ நிதி பீடம்**

மேற்பார்வை :

உலகளாவிய மற்றும் தேசிய ரீதியாக உயர்கல்வித் துறையில் ஏற்பட்டு வருகின்ற மாற்றங்களைக் கருத்திற்கொண்டு இப்பீடமானது 2009 வருடத்தில் புதிய வியாபார நிர்வாகமாணிக் கற்கை நெறிக் கலைத்திட்டத்தினை வடிவமைத்தது. தொழிற் துறைக்கும் கல்வியியல் அடிப்படையைக் கொண்ட உயர் கல்வித்துறைக்கும் இடையிலான இடைவெளியை நிரப்பும் இலக்கை நோக்காகக் கொண்டு அமையக்கூடிய செயன்முறை அறிவாற்றலுடன் கூடிய கல்வியியல் திறன்களை உருவாக்கக்கூடியதாக இக்கலைத்திட்டம் வடிவமைக்கப்பட்டுள்ளது. இக்கலைத்திட்ட மறுசீரமைப்பானது பின்வரும் நோக்கங்களைப் பிரத்தியேகமாகக் கொண்டிருந்தது.

- வெவ்வேறு துறைகளில் சிறப்புத் தேர்ச்சியுடன் கூடிய பரந்தளவிலான இளமாணிப் பட்டங்களை வழங்கக்கூடிய தனிப் பீடத்தை உருவாக்குதல்
- பட்டங்களின் தன்மைக்கேற்ப பட்டம் வழங்கும் திணைக்களங்களை கல்விசார் சிறப்புத் தேர்ச்சி அளிக்கும் திணைக்களங்களாக மாற்றுதல்.
- பாட அலகு முறைமையை உருவாக்குதல்
- பரந்ததும் நெகிழ்சுத்தன்மை உடையதுமான கற்கை நெறியை உருவாக்குவதற்காக கூடிய விருப்பத் தெரிவுப் பாடங்களை வழங்குதல்.
- தொழிற்துறைக்குத் தேவையான செயன்முறைகளை மாணவர்களுக்கு வழங்குதல்

வியாபார நிர்வாக மாணிக் கற்கைநெறி:

வியாபார நிர்வாமாணிக் கற்றைநெறியானது நான்கு வருட முழு நேரப் பாடத்திட்டமாகும். மேலும் இப்பீடம் வியாபார நிர்வாக மாணியில் பின்வரும் துறைகளில் சிறப்புத் தேர்ச்சிப் பட்டத்தையும் அளிக்கின்றது. கணக்கியல், வணிகப் பொருளியல், நிதியியல், விருந்துபசாரமும் ஓய்வுநேர முகாமைத்துவமும், மனித வள முகாமைத்துவம், சந்தைப்படுத்தல், சர்வதேச வியாபாரம், வியாபார நிர்வாகம். இவ்விளமாணிக் கற்கைநெறியின் கலைத்திட்டமானது இரு நிலைகளாக வகுக்கப்பட்டுள்ளது. அதாவது வியாபார நிர்வாக மாணி நிலை I, வியாபார நிர்வாக மாணி நிலை II. என்பதோடு ஒவ்வொரு நிலையும் நாக்கு பருவங்களைக் கொண்டமைவதோடு முழுக் கற்கைநெறியும் எட்டுப் பருவங்களைக் கொண்டதாகும். நிலை ஒன்றி பருவங்களான I, II, ,III, IV ம் அனைத்து மாணவர்களுக்கும் பொதுவானதாகும். நிலை இரண்டு அவரவர் தெரிவு செய்யும் சிறப்புத் தெரிவுகளைக் கொண்டதாகும்.

இதற்கமைவாக மாணவர்கள் பின்வரும் கற்கைநெறிகளை மேற்கொள்ள முடியும் :

வியாபார நிர்வாகமாணி
வியாபார நிர்வாகமாணி (கணக்கியல் / கணக்கீடு)
வியாபார நிர்வாகமாணி (வணிகப் பொருளியல்)
வியாபார நிர்வாகமாணி (நிதியியல்)
வியாபார நிர்வாகமாணி (விருந்துபசாரமும் ஓய்வுநேர முகாமைத்துவமும்)
வியாபார நிர்வாகமாணி (மனித வள முகாமைத்துவம்)
வியாபார நிர்வாகமாணி (சர்வதேச வியாபாரம்)
வியாபார நிர்வாகமாணி (சந்தைப்படுத்தல்)

வியாபர நிர்வாகமாணி

இவ்விளமாணிக் கற்கைநெறியானது முகாமைத்துவத்திலும் நிறுவனங்களினதும் வெவ்வேறு வகையான துறைகளில் மாணவர்களிற்கு தேவையான அறிவு, தேர்ச்சி, செயன்முறைப் பயிற்சி ஆகியவற்றை வழங்கும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது. முகாமைத்துவ நிறுவனக் கற்கையில் மாணவர்களுக்குத் தேவையான கொள்கைமுறை விளக்கங்களை வழங்கும் அதே நேரத்தில் முகாமைத்துவ நிறுவன நடவடிக்கைகளில் மாணவர்கள் எதிர்கொள்ளும் நிகழ்காலப் பிரச்சினைகள் பற்றிய ஆராய்ச்சியைச் சாதகமாக்குவதே இக்கற்கை நெறியின் நோக்கமாகும்.

வியாபார நிர்வாகமாணி (கணக்கியல்)

வியாபார நிர்வாகமாணி (கணக்கியல்) கற்பதற்குத் தகுதி உடையவர்களும் ஆர்வமுள்ளவர்களும் தொழில் நிறுவன நடவடிக்கைகளை ஆராய்வதற்காக கணக்கியல் நோக்கில் பயிற்றுவிக்கப்படுவார்கள். தேவையாக ஆர்வமுள்ளோருக்கு வணிக/பொருளாதார விவகாரங்களை அறிக்கையிடல் நிறுவனங்களில் முகாமைத்துவக் கட்டுப்பாட்டு முறைகளை உருவாக்குதல், அமுல்படுத்தல், செயற்படுத்தல் போன்றவற்றில் கவனம் செலுத்துகின்றது.

வியாபார நிர்வாகமாணி (வணிகப் பொருளியல்)

இக்கற்கைநெறியில் சிறப்புத் தேர்ச்சி பெறும் மாணவர்கள் வணிகக் கோட்பாடுகளை ஆராய்வதற்காக பொருளியல் நோக்கில் பயிற்றுவிக்கப்படுவார்கள். பொருளியலில் வழமையான பட்டப் படிப்பு போல் அல்லது இம் மாணவர்கள் அடிப்படை முகாமைத்துவக் கற்கைநெறிகளைக் கற்பதற்கான சந்தர்ப்பங்களைப் பெறுவார்கள். பல்வேறு வகையான பொருளாதாரப் பாட அலகுகளை மாணவர்களிற்கு வெளிப்படுத்தப்படுவதன் மூலம் அவர்கள் பொருளாதார அறிவையும் வணிக முகாமைத்துவ நிலைப்பாடுகளை அறியும் திறனையும் கூட்ட முடியும்.

வியாபார நிர்வாகமாணி (நிதியியல்)

நிதியியலில் ஆர்வமுள்ளவர்களும் இக்கற்கை நெறியைக் கற்கத் தகுதி உடையவர்களும் வியாபார நிறுவன அமைப்பு நடவடிக்கைகளை ஆராய்வதற்காக நிதியியல் நோக்கில் பயிற்றுவிக்கப்படுவார்கள். இக்கற்கை நெறியானது தற்போது நடைமுறையிலிருக்கும் நிதி சார்ந்த செய்முறைகளில் இருந்துத் சகல விதமான முகாமைத்துவ ஒருங்கிணைப்பிலிருந்தும் உருவாகும் பரவலான முடிவுகளையும் விளங்கிக்கொள்வதற்கு வழி அமைக்கின்றது.

வியாபார நிர்வாகமாணி (விருந்துபசாரமும் ஓய்வுநேர முகாமைத்துவமும்)

விருந்துபசாரமும் ஓய்வுநேர முகாமைத்துவமும் உலகில் மிகத்தொலை நோக்குடைய ஒரு துறை ஆகும். இலங்கையின் பொருளாதாரம் இத் துறையிலிருந்து ஒரு முக்கிய பங்களிப்பினை எதிர்ப்பார்க்கின்றது. விடுதிகளின் அபிவிருத்தியிலும் சுற்றுலா, ஓய்வுநேர முகாமைத்துத்திலும் புதிய திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. எனவே இத் துறையில் புதிய தொழில் வாய்ப்பிற்கான சந்தர்ப்பங்கள் பெருமளவில் உள்ளன. இக்கற்கை நெறியானது சாத்தியமான தொழில் வாய்ப்பினை

உருவாக்கும் தொழில் நிறுவனங்களை இயக்கக்கூடியதும் வெளிநாட்டு செலாவணி வருமானங்களையும் உள்ளக வளர்ச்சியையும் உருவாக்கக் கூடியதுமான கல்விசார் தகைமை வாய்ந்த முகாமையாளர்களை உருவாக்குவதிலும் கவனம் செலுத்துகின்றது.

வியாபார நிர்வாகமாணி (மனிதவள முகாமைத்துவம்)

இக்கற்கைநெறியானது பங்குபற்றுவோருக்கு ஒரு நிறுவனத்தின் ஒரு நிறுவனத்தின் முழுமையான வியாபாரத்தையும் உள்ளடக்கியதான மனிதவள முகாமைத்துவத்தை விளங்கிக்கொள்ள சந்தர்ப்பம் அளிக்கின்றது. மேலும் பங்குபற்றுவோருக்கு மனிதவள முகாமைத்துவத்தினை ஏனைய முகாமைத்துவத் தொழிற்பாடுசார் பிரிவுகளுடன் தொடர்படுத்தக்கூடிய திறன்களை பெற்றுக்கொள்ள வழியமைக்கின்றது.

வியாபார நிர்வாகமாணி (சர்வதேச வியாபாரம்)

இவ்விளமாளிக் கற்கைநெறியானது மாணவர்களுக்கு சர்வதேச வியாபாரத்துடன் தொடர்புடைய வாய்ப்புக்களை பூகோள ரீதியில் அறிந்துகொள்ளும் வாய்ப்பினை வழங்குகின்றது. உலகளாவிய சந்தைப்படுத்தல், கணக்கியல், நிதியியல், மனித வள முகாமைத்துவம், பொருளாதாரமும், சட்டமும் போன்ற துறைகளில் சர்வதேச வியாபார நடைமுறைகளைப் பெற்றறிந்துகொள்ளும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளதுடன் வியாபார நிர்வாகமாணியில் சிறப்புத் தேர்ச்சிபெறும் விதத்திலும் உருவாக்கப்பட்டுள்ளது.

வியாபார நிர்வாகமாணி (சந்தைப்படுத்தல்)

இக் கற்கைநெறியானது மாணவர்களுக்குச் சந்தைப்படுத்தல் சந்தர்ப்பங்களை இனம் கண்டுகொள்வதற்கு தேவையான அறிவு, திறன், எண்ணப்போக்கு, செயன்முறைப் பயிற்சி ஆகியவற்றை அளிப்பதன் மூலம் அவற்றை நிறுவனத்தில் நன்மைக்காக முதலிட்டு வாடிக்கையாளர்கள், சமுதாயம் என்பவற்றுடன் நிறுவனத்தில் உள்ளேயும் வெளியேயும் உள்ள குழுக்களையும் ஒன்றிணைத்து வழிநடத்துவதற்கமைவாக உருவாக்கப்பட்டுள்ளது.

விஞ்ஞான பீடம்

விஞ்ஞான பீடம் ஒரு தேறுதற் கூறுஅடிப்படையிலான கற்கைநெறி அலகு முறைமையைக் கொண்டிருக்கின்றது. மாணவர்கள் அவர்களின் தொழிலைத் தொடரும் குறிக்கோளுடன் அடிப்படை, தெரிவு மற்றும் மேம்பாட்டுக் கற்கைநெறிகளின் ஒரு பொருத்தமான பாடச் சேர்க்கையினைத் தொடருவர். அனைத்து நான்கு விடயப்பிரிவுகளிலும் பீடம் பல்வேறு வகையான விஞ்ஞான மாணிப்பட்ட கற்கை நிகழ்ச்சிகளை வழங்குகின்றது, **அதாவது, உயிரியல் விஞ்ஞானம், பௌதிக விஞ்ஞானம், கைத்தொழில் புள்ளிவிபரவியலும் கணிதவியல் நிதியும், மற்றும் மூலக்கூற்று உயிரியல் மற்றும் உயிர் இரசாயனவியல்.**

- விஞ்ஞான மாணிப்பட்டத்திற்கு இட்டுச் செல்லும் மூன்று வருட பொதுப் பட்டம் (கூறாநிலை)
- விஞ்ஞான மாணிப்பட்டத்திற்கு இட்டுச்செல்லும் நான்கு வருடப் பொது பட்டம் (தெரிவு முதல் இரண்டு வருட பெறுபேறுகளின் அடிப்படையிலானது)
- விஞ்ஞான மாணிப் (“சிறப்புப் பாடப்பரப்பு”) சிறப்புப் பட்டத்திற்கு இட்டுச்செல்லும் நான்கு வருட சிறப்புப் பட்டம் (தெரிவு முதல் இரண்டு வருட பெறுபேறுகளின் அடிப்படையிலானது)

விஞ்ஞான பீடத்திற்கு அனுமதி பெறும் அனைத்து மாணவர்களும் அவர்களது விஞ்ஞான அறிவினை மேம்படுத்தும் பொருட்டு வடிவமைக்கப்பட்ட கணனி விஞ்ஞான கற்கைநெறியைக் கற்கும் சந்தர்ப்பத்தை பெறுகின்றனர். இந்த கற்கைநெறிகள் கொழும்பு பல்கலைக்கழக கணனிக் கல்விக் கூடத்தினால் (UCSC) வழங்கப்படுகின்றன. மேலே பட்டியலிடப்பட்ட பௌதிக விஞ்ஞான பாடச் சேர்மானத்திற்கான தெரிவு பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் தற்போது பயன்படுத்தப்படுகின்ற அனுமதிக் கட்டளைவிதியின் அடிப்படையில் இருக்கும். உயிர் இரசாயனவியல் முதல் இரண்டு வருடங்களில் ஒரு தனியான பாடப் பிரிவாக இனிமேல் வழங்கப்படாமையினால்,உயிரியல் விஞ்ஞானங்களிலும் உயிர் இரசாயனவியல் மற்றும் மூலக்கூற்று உயிரியல் பிரிபுகளிலுள்ள மாணவர்களுக்கும் ஒரு பாடச் சேர்மானம் மட்டுமே கிடைக்கக்கூடியதாக உள்ளது.

பீடத்திற்கு நுழையும் அனைத்து மாணவர்களும் முதல் இரண்டு வருடங்களில் அவர்களது தெரிவுசெய்யப்பட்ட பாடச் சேர்மானங்களில் அடிப்படைக் கற்கைநெறிகளைத் தொடர வேண்டப்படுகின்றனர். மேலும், தெரிவுக் கற்கைநெறிகளை ஒரு பரந்த பாடத் தொகுதியிலிருந்து தெரிவு செய்யலாம். மூன்றாம் மற்றும் நான்காம் வருடங்களில், பொதுப் பட்ட நிகழ்ச்சிகளிற்கு பதிவுசெய்யப்பட்ட மாணவர்களுக்கு, தொழில்துறை உள்ளகப்பயிற்சி உட்பட, ஒரு பொருத்தமான பாடங்களின் தெரிவுத் தொகுதி கிடைக்கச்செய்யப்படும்.

முதல் இரண்டு வருடங்களில் சிறப்புறும் மாணவர்களுக்கு பீடத்தினால் வழங்கப்படுகின்ற அடிப்படை, பல்துறை, பிரயோக மற்றும் தொழில்துறை சார்ந்த துறைகளில் சிறப்பு பட்டக் கற்கை நிகழ்ச்சிகளுக்கு விண்ணப்பிக்க சந்தர்ப்பம் தரப்படும். இடங்கள் வரையறுக்கப்பட்டுள்ளமையினால், இக் கற்கை நிகழ்ச்சிகளிற்கான அனுமதி போட்டி அடிப்படையில் அமையும்.

ஒவ்வொரு பிரிவிலும் உள்ள மாணவர்களுக்குக் கிடைக்கக்கூடியதாக உள்ள சிறப்புப் பட்டங்களின் பட்டியல் கீழே காட்டப்பட்டிருக்கின்றது.

பௌதீக விஞ்ஞானம் : இரசாயனவியல், கணனித்துவ இரசாயனவியல், பௌதிகவியல், கணனித்துவ பௌதிகவியல், பொறியியல் பௌதிகவியல், கணிதவியல், நிதி வியாபார மற்றும் கணனித்துவ கணிதவியல், புள்ளிவிபரவியல், கணனி விஞ்ஞானத்துடன் கணிதவியலும் புள்ளிவிபரவியலும், கணனி விஞ்ஞானத்துடன் புள்ளிவிபரவியல், அணுக்கரு மருத்துவ விஞ்ஞானம்.

உயிரியல் விஞ்ஞானம் : இரசாயனவியல், கணனித்துவ இரசாயனவியல், உயிர் இரசாயனவியலும் மூலக்கூற்று உயிரியலும், மருந்தியல், சுற்றாடல் விஞ்ஞானம், விலங்கியல், நோய்த்தடுப்பியலும் ஒருங்கிணைந்த மூலக்கூற்று உயிரியலும், தாவர விஞ்ஞானம், உயிர்த்தகவலியல், தாவர உயிர்த்தொழில்நுட்பவியல், அணுக்கரு மருத்துவ விஞ்ஞானம்.

[கணனித்துவ இரசாயனவியல், கணனித்துவ பௌதிகவியல், உயிர்த்தகவலியல்,கணனி விஞ்ஞானத்துடன் கணிதவியல் மற்றும் புள்ளிவிபரவியல், மற்றும் கணனி விஞ்ஞானத்துடன் புள்ளிவிபரவியல் கற்கை நிகழ்ச்சிகள் கொழும்பு பல்கலைக்கழக கணனிக் கல்விகூடத்துடன் இணைந்து வழங்கப்படுகின்ற அதேவேளை, மருந்தாக்கவியல் மருத்துவ பீட மருந்தாக்கவியல் துறையுடன் கூட்டாக வழங்கப்படும் என்பதனைக் கவனிக்குக.]

கைத்தொழில் புள்ளிவிபரவியலும் கணிதவியல் நிதியும் : கைத்தொழில் புள்ளிவிபரவியல், கணிதவியல் நிதி

மூலக்கூற்று உயிரியலும் உயிர் இரசாயனவியலும் : மூலக்கூற்று உயிரியல் மற்றும் உயிர் இரசாயனவியல் , இரசாயனவியல். மேலும், இடம் இருப்பதன் அடிப்படையில், இந்த மாணவர்கள் உயிரியல் விஞ்ஞான பிரிவில் உள்ள மாணவர்களுக்குக் கிடைக்கக்கூடியதாயிருக்கும் யாதாயினும் சிறப்புப் பட்டத்தில் சேர்ந்துகொள்ள அனுமதிக்கப்படலாம்.

தாதியியல் பீடம்

தாதியியல் பீடம் தாதியியல் துறையில் தாதியியல் விஞ்ஞானப் பட்டத்தை வழங்குகின்றது. சகல வயதுத் தொகுதியைச் சேர்ந்த நோயாளர்களைப் பராமரித்தல், நோய்களைத் தடுத்தல், சுகாதாரத்தை மேம்படுத்தி அதனை மீள்நிலைநாட்டுதல் மற்றும் புனர்வாழ்வு விடயங்களில் உதவுதல் முதலிய அம்சங்களில் அறிவு, திறன்கள் மற்றும் மகோபாவம் ஆகிய அனைத்தையும் முற்றிலும் பயன்படுத்தக்கூடிய தாதிப் பட்டதாரிகளை உருவாக்குவது இந்த நிகழ்ச்சித்திட்டத்தின் குறிக்கோளாகும். பட்டப்படிப்பு நிகழ்ச்சித்திட்டம் நான்கு வருட காலங்களுக்கு மொத்தம் 127 Credit மணித்தியாலங்கள் அடங்கிய ஒரு Credit அடிப்படையிலான முறைமையில் கையாளப்படுகின்றது. இந்தப் பட்டடப்படிப்பு நிகழ்ச்சித்திட்டத்தின் மொழிமூலம் ஆங்கிலமாகும். தாதியியல் பட்டப்படிப்பு நிகழ்ச்சித்திட்டத்தின் பாடவிதானம் சர்வதேச ரீதியில் கிடைக்கக்கூடிய அதையொத்த மட்டத்திலான பட்டப்படிப்பு நிகழ்ச்சித்திட்டமாக விளங்கும் வகையில் தயாரிக்கப்பட்டுள்ளது. பாடவிதானங்கள், தாதியியல் தொழிலில் நுழைவதற்கு தேவையான முக்கிய தொழில்வாய்ப்பு அளிக்கக்கூடிய தாதியியல் பாடநெறிகளினால் பின்பற்றப்படும் அடிப்படை விஞ்ஞானம் மற்றும் சமூக விஞ்ஞானம் ஆகியவற்றின் கோட்பாடுகளின் அடிப்படையிலான ஒரு திடமான அத்திவாரம் மாணவர்களுக்கு இடப்படுகின்றதா என்பதை உறுதிசெய்கின்ற அதே வேளையில் நவீன தொழில்நுட்பங்களைப் பிரதிபலிக்கும் வகையில் தயாரிக்கப்பட்டுள்ளன. குறித்த பாடநெறி தாதியியல் பராமரிப்பின் தரத்தை மேம்படுத்துவதற்கும், தாதியியல் கல்வியைப் போஷித்து, சுகாதார ஆராய்ச்சி விடயங்களை மேம்படுத்துவதற்கும் அதிக திறன்களையுடைய தாதியியல் தொழிலாளர்களை உருவாக்கும் நிமித்தம் வடிவமைக்கப்பட்டுள்ளது. இந்தப் பாடநெறி தமது நிஜ வாழ்க்கையில் தமது அறிவுப் பிரயோகத்தில் திறன்களைப் பெற்றுக்கொள்ள வேண்டும் என எதிர்ப்பார்க்கப்படுகின்ற மாணவர்களின் செயல்திறன் மீது அதிக அழுத்தத்தைக் கொண்டுள்ளது. பகுப்பாய்வு மற்றும் விமர்சன ரீதியான சிந்தனையையும், பிரச்சினைகளைத் தீர்க்கக்கூடிய திறன்களையும் வளர்ப்பதில் விஷேட அழுத்தமுடைய செயன்முறை அடிப்படையிலான தாதியியல் ஆராய்ச்சி மற்றும் நிரூபனம் ஆகிய எண்ணக்கருக்களும் இந்தப் பட்டப்படிப்பு நிகழ்ச்சித்திட்டத்தில் உள்ளடங்கியிருக்கின்றன. சமுதாய அமைப்புகளிலும், கொழும்பை அண்மித்த பகுதிகளிலும் அதே நேரம் பல வைத்தியசாலைகளிலும் செயல்முறை அடிப்படையிலான கற்றல் செயற்பாடுகள் இடம்பெறுகின்றன.

தொழில்நுட்பப் பீடம்

தொழில்நுட்ப பீடம் மூன்று துறைகளில் நான்கு வருட தொழில்நுட்பக் கௌரவ பட்டநெறிகளை வழங்குகிறது. ஒவ்வொரு பட்டநெறியும் 120 திறமைப் பெறுமான மதிப்பு கொண்ட அலகுமுறையானது. இம்மூன்று பட்டநெறிகளுக்கும் மாணவர்கள் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் தகுதி அடிப்படையில் தெரிவு செய்யப்படுவர். இந்த மூன்று பட்டப்படிப்பு நிகழ்ச்சித்திட்டங்களும் பின்வருமாறு :

(1) **கருவிமயமும் தானியக்கமும்** பற்றிய பொறியியல் தொழில்நுட்ப கௌரவ பட்டம்
(2) **சுற்றாடல் தொழில்நுட்பம்** பற்றிய உயிரியல் முறைமைத் தொழில்நுட்ப கௌரவ பட்டம்
(3) **விவசாயம்** பற்றிய உயிரியல் முறைமைத் தொழில்நுட்ப கௌரவ பட்டம்

மூன்று பட்டப்படிப்பு நிகழ்ச்சித்திட்டங்களினதும் பாடவிதானங்கள் மாணவர்களை தமது பணித்துறைகளில் நவீன தொழில்நுட்பங்களைப் பயன்படுத்துவதற்கு இயலச்செய்யக்கூடிய வகையிலும் மற்றும் சரியான குறித்த அறிவையும் திறன்களையும் பெற்று அவர்கள் தமது தொழில்களில் தனிப்பட்ட ரீதியில் தகுதியுடையவர்களாக மாற்றக்கூடிய வகையிலும் வடிவமைக்கப்பட்டுள்ளன. இந்த மூன்று பட்டப்படிப்பு நிகழ்ச்சித்திட்டங்களும் பல விடயப்பரப்புகளை உள்ளடக்கிக் காணப்படும். இந்த நிகழ்ச்சித்திட்டங்கள் மாணவர்களை தொழில்நுட்பத் துறைகளிலுள்ள உயர்தொழில்களுக்கு தகுதியுடையவர்களாக மாறச்செய்யும். மாணவர்கள் தொழில்நுட்பத்தில் தேர்ச்சி பெற்ற முழுமையான பட்டதாரிகளை மட்டுமன்றி மக்களின் நலன், பொருளாதாரம், சுற்றாடல் ஆகியன தொடர்பான முக்கிய விடயங்களில் விழிப்புணர்வு உடையவர்களாக மாறக்கூடிய வகையில் பாடவிதானங்கள் தயாரிக்கப்பட்டுள்ளன.
ஒவ்வொரு பட்டப்படிப்பு நிகழ்ச்சித்திட்டங்களில் பின்வருவன உள்ளடங்கியிருக்கும் :

- அடிப்படை விஞ்ஞானம், கணிதம், அடிப்படைத் தொழில்நுட்பம், மானிட சமூக விஞ்ஞானம், முகாமைத்துவம் மற்றும் கணக்கியல், சுகாதாரம் ஆகிய பொதுவான முக்கிய பாடங்கள்
- சம்பந்தப்பட்ட தொழில்நுட்ப நிகழ்ச்சித்திட்டத்தில் மாணவர்களுக்கு அறிவையும் திறன்களையும் கற்பிக்கின்ற முக்கியமான தொழில்நுட்பப் பாடங்கள்

இது தவிர, மாணவர் ஒருவர்

- குறிப்பிட்டவொரு காலத்திற்கு ஒரு கைத்தொழில் பயிற்சிக்கு உள்ளாகி ஒரு அறிக்கையை அல்லது
- பட்டப்படிப்பு நிகழ்ச்சித்திட்டம் தொடர்பான ஒரு ஆராய்ச்சியை மேற்கொண்டு, முழுமையான ஒரு அறிக்கையை சமர்ப்பிக்க வேண்டும்.

இந்தப் பீடத்திற்கு அனுமதியைப் பெறும் அனைத்து மாணவர்களும் அவர்களின் தொழில்நுட்பத் திறன்களை மேம்படத்தும் வகையில் நேரடி அனுபவத்தைப் பெறச் செய்வதற்கு கணனிக் கணிப்பீடு, இலத்திரனியல் மற்றும் எந்திரப் பொறியியல் முதலிய விடயங்களில் ஆய்வுகூடங்களிலும், வேலையரங்குகளிலும் பயிற்சி வழங்கப்படும்.

கலைப்பீடம்

கலைமாணி பட்டப்படிப்பு

கலைப்பீடமானது மாணவர்களுக்கு ஒரு பரந்தளவிலான கல்வியினை வழங்குகின்றது. கலைப்பீடத்தினால் பின்வரும் பட்டங்கள் வழங்கப்படுகின்றன.

1. **பொதுக்கலைமாணிப் பட்டம் (கற்கைப் பிரிவுகள்- மூன்று வருட கற்கைநெறி) :** பிரயோக குடியியல், வங்கியியலும் நிதியியலும், வணிகம் மற்றும் முகாமைத்துவ பொருளியல், ஆங்கில கற்கைகள், கோட்பாடும் நடைமுறையும், புவியியல் மற்றும் சூழலியல் முகாமைத்துவம், கலாசாரம் மற்றும் பாரம்பரியம், முரண்பாட்டு தீர்வும் சமாதானமும், ஜனநாயகமும் ஆட்சிச் செயன்முறையும், சிங்களக் கற்கைகள், பிரயோக சமூகவியல் கற்கைகள், நகர மற்றும் சமுதாயக் கற்கைகள், பௌத்த கற்கைகள், இரண்டாம் மொழியாக ஆங்கில கற்கைகள், தொடர்பாடல் மற்றும் ஆக்க கலைகள், பிரயோக இஸ்லாமிய கற்கைகள், அபிவிருத்திக்கான தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம், விளையாட்டுக் கற்கைகள்.

2. **சிறப்புக்கலைமாணிப் பட்டம் (நான்கு வருட கற்கைநெறி):** பௌத்த கற்கைகள், குடியியல், பொருளியல், ஆங்கிலம், புவியியல், வரலாறு, சர்வதேச உறவுகள், அரசியல் விஞ்ஞானம் மற்றும் அரச கொள்கைகள், சிங்களம், சமூகவியல்.

இப் பட்டப்படிப்புக்களைப் பொறுத்தவரையில் கற்பித்தல் அரையாண்டுப் பருவத்தினையும் மாணவர்களை தொடர்ச்சியாக மதிப்பிடுதலையும் அடிப்படையாகக் கொண்டது. ஒவ்வொரு கற்கைநெறியும் ஒரு அரையாண்டு பருவத்தில் 15 வாரங்களையும் 150 கற்பித்தல் மணித்தியாலங்களையும் கொண்டு பரீட்சிக்கப்படுகின்றது.

பொதுக் கலைமாணிப் பட்டமானது மூன்று வருட (6 அரையாண்டு பருவங்கள்) காலப்பகுதியினைக் கொண்டதாகவும், சிறப்புக்கலைமாணிப்பட்டமானது நான்கு வருட (8 அரையாண்டு பருவங்கள்) காலப்பகுதியினைக் கொண்டதாகவும் காணப்படுகின்றது.

பேராதனைப் பல்கலைக்கழகம்		
கற்கைநெறி	**பாடச்சேர்க்கை (விதித்துரைக்கப்பட்டவிடத்து)**	**க./மொ**
கலை	-	S/T/E
சட்டம்	-	E
முகாமைத்துவம்	-	S/T/E
மருத்துவம்	-	E
பல் அறுவைச் சிகிச்சை	-	E
விலங்கு மருத்துவ விஞ்ஞானம்	-	E
விவசாய தொழில்நுட்பமும் முகாமைத்துவமும் +	-	E
உணவு விஞ்ஞானமும் தொழில்நுட்பமும் ¶	-	E
விலங்கு விஞ்ஞானமும் மீன்பிடித்தலும்	-	E
பொறியியல் #	-	E
உயிரியல் விஞ்ஞானம் *	-	E
பௌதிக விஞ்ஞானம் *	-	E
புள்ளிவிபரவியலும் செயற்பாட்டு ஆராய்ச்சியும்	-	E
கணக்கிடலும் முகாமைத்துவமும்	-	E
தாதியியல்	-	E
மருந்தகவியல்	-	E
மருத்துவ ஆய்வுகூட விஞ்ஞானங்கள்	-	E
ஊடுகதிர்ப்படமெடுப்பு	-	E
இயன் மருத்துவம்	-	E
புவியியல் தகவல் விஞ்ஞானம்	-	E
சமூகப்பணி	-	E

விவசாயப் பீடம்

1948ம் வருடம் ஆரம்பிக்கப்பட்டு 70 வருடங்களுக்கும் மேலாக கல்விசார் நடவடிக்கைகளில் சிறப்பான வளர்ச்சி கண்ட இலங்கையின் முதன்மையான விவசாய பீடம் எமதாகும். இப்பீடம் திறமையானவர்களுக்கும், சிறந்த பண்பாளர்களுக்குமான கல்விசார் ஊழியர்களைக் கொண்டது. 137 நிரந்தர கல்விசார் ஊழியர்களைக் கொண்டுள்ள எமது பீடத்தில் அண்ணளவாக 75% கல்விசார் ஊழியர்கள் தமது முதுமாணி பட்டத்தினை உலகின் தலைசிறந்த பல்கலைக்கழகங்களில் பூர்த்திசெய்ததோடு அவர்களுள் அண்ணளவாக 50% பேராசிரியர்கள் ஆவர். இது இலங்கையின் சில பல்கலைக்கழகங்களிலேயே காணப்படும் சிறந்ததொரு பண்பாகும். பீடத்தினால் எட்டு வெவ்வேறு பிரிவுகளினூடாக இளமாணிப் பட்டப்படிப்புகள் வழங்கப்படுகின்றன. மாணவர்களுக்கென பரந்த சௌகரியமான நவீன வகுப்பறைகள் மற்றும் பரிசோதனை கூடங்கள் அமைக்கப்பட்டு கற்றல் செயற்பாடுகள் ஊக்குவிக்கப்படுகின்றன. பீடத்தினால் கால்நடை மற்றும் தாவரவியல் கல்வி தொடர்பான செயல்முறை கல்வியை மேற்கொள்ளவென விசேட உட்கட்டமைப்பு வசதிகள் அமைக்கப்பட்டுள்ளதோடு மகா இலுப்பல்லமவில் அமைந்துள்ள உப வளாகம் அதற்கு மேலும் உதவி வழங்குகிறது. விவசாய கல்விப்பிரிவு என்பன கல்விசார் நடவடிக்கைகளுக்கு மேலும் ஆதரவு வழங்குகின்றது.

பேராதனைப் பல்கலைக்கழகத்தின் விவசாய பீடமானது இலங்கையின் ஏனைய பல்கலைக்கழக கல்வி நடவடிக்கைகளுக்கு சிறந்த முன் மாதிரியாக விளங்குகின்றது. அவை:

- விவசாயம் தொடர்பான அறிமுறை, செயல்முறை, இணைந்த விஞ்ஞானம், சமூக மற்றும் பொருளியல் தொடர்பான புரிதல் அத்துடன் தலைமைத்துவத்தை கட்டியெழுப்புதல் போன்ற பல்வேறு திறமைகளை விருத்தி செய்தல்.

- மாணவர்களுக்கும் கல்விசார் ஊழியர்களுக்கும் இடையிலான ஆரோக்கியமான உறவு, ஆசிரியரை அறிமுகப்படுத்தல் தொடக்கம் அவர்களை மாணவர்கள் மூலமாக மதிப்பீடு செய்தல், மாணவர்களை சுய கற்றலுக்காக தயார் செய்து சிறந்த பெறுபேற்றை பெற்றுக்கொள்ளல்.

- மாணவர்களை பல்வேறு துறைகளில் ஆக்கபூர்வமாக ஒருங்கிணைப்பதற்கான சந்தர்ப்பங்களில் உறுதியான முடிவுகளை எடுக்கவும், குழுவாக வேலை செய்யவும், செயல்முறை சார்ந்தவர்களாக விளங்கவும் அவர்களின் தனிப்பட்ட திறமைகளை விருத்தி செய்தல்.

- உலகின் தலைசிறந்த பல்கலைக்கழகங்களுக்கிடையில் மாணவர்களை பரிமாற்றம் செய்தல்.

- சர்வதேச மாணவர்களுக்கும் எமது மாணவர்களுக்கும் இடையில் கல்விசார் தொடர்புகளை விருத்தி செய்ய சந்தர்ப்பங்களை ஏற்படுத்தி கொடுத்தல்.

- ஒவ்வொரு வருடமும் நூற்றுக்கம் மேற்பட்ட புலமைபரிசில்கள் மற்றும் நிதியுதவிகளை அத்தியவசிய நிதியுதவி தேவைப்படும் மாணவர்களுக்கு வழங்குதல்.

- பட்டப்படிப்பின் பின்னர் 100% பட்டதாரிகள் இலங்கை மற்றும் வெளிநாடுகளில் உயர் பதவிகளிலும், விவசாய ஆராய்ச்சிகளிலும், உயர் கல்வியிலும், நிர்வாகத்துறையிலும், முகாமைத்துவத்திலும் பரந்திருத்தல்.

- நிலையானவர்களையும் சமூகத்தை மாற்றி அமைக்கக்கூடிய தலைவர்களையும் உருவாக்குதல்.

- பட்டப்படிப்பை பூர்த்தி செய்த பின்னர் மாணவர்களுக்கு சர்வதேச பல்கலைக்கழகங்களில் (ஐக்கிய அமேரிக்கா, ஐக்கிய இராச்சியம்,கனடா, அவுஸ்திரேலியா, மற்றும் ஐரோப்பிய நாடுகள்) புலமைபரிசில்களை பெற்றுக்கொள்ள உதவிசெய்தல்.

மேலதிக விபரங்களுக்கு - www.agri.pdn.ac.lk

எமது பீடமானது பாடத்திட்டத்தில் தொடர் மாற்றங்களை செய்வதன் மூலமாக உயர் கல்வியில் மாற்றத்தையும், அபிவிருத்தியையும் ஏற்படுத்துகின்ற இப் பாடநெறியானது முற்றுமுழுதாக ஆங்கில மொழி மூலமாக பயிற்றுவிக்கப்படுவதுடன், மாணவர்களின் ஆங்கில மொழி தேர்ச்சியினை விருத்தி செய்வதற்கான பயிற்சி பீடத்தின் ஆங்கில மொழி கற்கை பிரிவு வழங்குகின்றது. அவையாவன:

a. விவசாய தொழில்நுட்ப முகாமைத்துவத்தில் விஞ்ஞான இளமாணி
b. உணவுவிஞ்ஞான தொழில்நுட்பத்தில் விஞ்ஞான இளமாணி
c. விலங்குவிஞ்ஞான மீன்பிடியியல் விஞ்ஞான இளமாணி

a. விவசாய தொழில்நுட்ப முகாமைத்துவத்தில் விஞ்ஞான இளமாணிப்பட்டம்

விவசாய தொழில்நுட்ப முகாமைத்துவ இளமாணி பட்டப்படிப்பு விவசாய பீடத்தினால் வழங்கப்படும் பிரதான கற்கைநெறியாகும். இப் பட்டப்படிப்பு தனித்தவமானதும் எட்டு பருவங்களையும் ஆகக்குறைந்தது 126 தகுதிமதிப்பு அலகுகளையும் கொண்டது. இக் கற்கைநெறியானது எதிர்கால சவால்களை எதிர்கொள்வதற்குரிய சிறந்த பட்டதாரிகளை உருவாக்குவதற்கு 5 கருப்பிரிவுகளைக் கொண்டு வடிவமைக்கப்பட்டதாகும். அவையாவன. 1.தாவர விலங்கு உற்பத்தி 2. விவசாய உற்பத்திப் பொருள் பதனிடல் தொழில்நுட்பம் 3.இயற்கை வளங்களின் நிலைபேறான முகாமைத்துவம் 4. சமூக பொருளியல் அபிவிருத்தியும் வணிக முகாமைத்துவமும் 5. தொழில்சார் மனப்பாங்கும் தன்னம்பிக்கை விருத்தியும். மும்மொழி தேர்ச்சியானது எங்கள் பட்டதாரிகளுக்கு சிறந்த வேலை வாய்ப்பினை பெற்றுக்கொள்வதற்கு வழிவகுக்கின்றது என நாங்கள் நம்புகின்றோம். அத்துடன் சிங்கள மாணவர்களுக்கு தமிழ் மொழியினை கற்கும் வாய்ப்பினையும் தமிழ் மாணவர்களுக்கு சிங்கள மொழியினை கற்கும் வாய்ப்பினையும் வழங்குவதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளது. இப்பட்ட படிப்பின் பாடத்திட்டமானது விஞ்ஞான தொழில்நுட்ப உலகத்தினையும் முகாமைத்துவ உலகத்தினையும் பற்றி இளங்கலை மாணவர்கள் கண்டறிய வாய்ப்பளிக்கும் வகையில் அறிமுறைக்கும் செயல்முறைக்கும் சமநிலையை சிறந்த முறையில் வழங்குகின்றது.

இப்பட்ட படிப்பின் பாடத்திட்டமானது 2 பிரதான தொகுதிகளை உள்ளடக்கியது. அவையாவன கட்டாய கற்கை தொகுதி, மேலதிக கற்கை தொகுதி. கட்டாய கற்கை தொகுதியில் மாணவர்கள் 8 பிரதான பிரிவுகளினால் வழங்கப்படும் பாடநெறிகள் பல்திறமைகளிலும் தடம் பதித்த சகல துறை ஆளுமை கொண்ட தனியாளாக திகழ வழிவகுக்கின்றது. மேலதிக கற்கை தொகுதியில் மாணவர்கள் 8 பிரிவுகளினால் வழங்கப்படும் 12 பாட பிரிவுகளில் தங்களுக்கு விரும்பிய ஒரு பட பிரிவினை தெரிவு செய்து கொள்ளலாம். இத் தெரிவானது க. பொ.த. (உ/த) உயிரியல் விஞ்ஞான பிரிவினை தெரிவு செய்த மாணவர்களுக்கு பல்வேறு துறைகளில் தேர்ச்சி பெற ஒரு அறிய வாய்ப்பாகும். இவ்வாறான பன்முக தன்மை கொண்ட உயர் கல்வி பீடத்தினால் உயர் தர தொழில் வல்லுனர்களை உருவாக்குவதற்கு உறுதுணையாய் இருந்ததென்பதற்கு உள்நாட்டிலும் சர்வதேசரீதியிலும் உள்ள பழைய மாணவர்கள் சான்று பகர்கின்றனர். விவசாய தொழில்நுட்ப முகாமைத்துவ விஞ்ஞான இளங்கலை பட்டதாரியின் எதிர்காலமானது ஒளிமயமானதும் உத்தரவாதமானதும், உறுதியானதுமாகும்.

b. உணவு விஞ்ஞான தொழில்நுட்பத்தில் விஞ்ஞான இளமாணி சிறப்புப்பட்டம்

ஆங்கில மொழி மூலம் வழங்கப்படும் உணவு விஞ்ஞான தொழில் நுட்ப சிறப்புப்பட்டபடிப்பானது 8 பருவங்களை கொண்டது. இதன் மூலமாக விவசாய உணவு உற்பத்திகளை பதனிடல் மற்றும் செயற்படுத்தல், பௌதிக இரசாயன மற்றும் உணர்வு ரீதியான உள்ளடக்கங்களை ஆராய்தல், தரநிர்ணயம், உணவு பாதுகாப்பு, உணவின் உயிர் இரசாயன மற்றும் தொழில் முறை தோற்றத்தை விசாரணை செய்தல், மனித ஊட்டச்சத்து தொடர்பான அறிவினை வளர்த்தல், தொழில் ரீதியான தகைமைகளை கட்டியெழுப்புதல் மற்றும் தன்னம்பிக்கையை விருத்தி செய்தல் போன்ற தகைமைகள் விருத்தி செய்யப்படும். மேற்குறிப்பிட தகைமைகள் செயல் முறை மற்றும் அறிமுறைகளை கொண்ட 126 மதிப்பு அலகுகளையும் கொண்ட பாட நெறிகள் தரமான கல்வி சார் ஊழியர்களினால் வழங்கப்படும். செயல்முறை பாடநெறியானது மாணவர் சார்பான கற்கை முறை மூலம் வழங்கப்படும் உணவுத் தொழில் துறைகளில் வெளிக்காட்டப்பட்டு பல்வேறு கற்கும் உத்திகளை கையாள்வதன் மூலம் தன்னம்பிக்கை மற்றும் அனுபவம் வளர்க்கப்படும். இறுதி பருவத்தில் மாணவர்கள் 4 மாத ஆராய்ச்சிக்காகவும் ஆராய்ச்சி கற்கையை பூர்த்தி செய்யவுமென கல்விசார் ஊழியர்கள் மேற்பார்வைக்காக ஒழுங்கு செய்யப்படுவர். கற்கை நெறியை சிறப்பாக பூர்த்தி செய்யும் மாணவர்கள் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு உணவு துறையில் தங்களது சிறந்த பங்களிப்பை வழங்குவர்.

c. விலங்கு விஞ்ஞான மீன்பிடியியல் விஞ்ஞான இளமாணிப்பட்டம்

இப் பட்டப்படிப்பு விலங்கு விஞ்ஞான மீன்பிடியியல் விஞ்ஞான இளமாணி பட்டப்படிப்பு விவசாய பீடத்தினால் வழங்கப்படும் மற்றொரு கற்கை நெறியாகும். இப் பட்டப்படிப்பு எட்டு பருவங்களையும் ஆக குறைந்தது 126 தகுதி மதிப்பு அலகுகளையும் கொண்டது. இக் கற்கை நெறியானது பிரதானமான விலங்கு உற்பத்தி முகாமைத்துவம், அடிப்படை விவசாயம், உட்பத்தி பொருள், பொருளியல் மற்றும் விரிவலாக்கம் என பல்வேறு பாட விதானங்களின் சேர்க்கையை 2 பருவங்களில் பிரித்து வழங்கப்படுகிறது. முதல் இரு பருவங்களும் அனைத்து மாணவர்களுக்கும் கட்டாயமாகவும் தொடர்ந்து வரும் 6 பருவங்களில் கட்டாயமானதும், விருப்பத்தேர்வுக்குரியதுமான கூறுகளையும் கொண்டது. இறுதி பருவமானது முற்று முழுதாக விலங்கு தொழில் துறை சார்ந்த ஆராய்ச்சி திட்டதிற்கென ஒதுக்கப்பட்டுள்ளது. தொழில் சுற்றாடலில் சிறந்த ஒரு பரீட்சியத்தை உண்டாக்கவென இரு தடவைகள், இரு பருவங்களின் இடையில் தொழில் துறைகளில் தொழில் துறை பயிற்சிக்காக மாணவர்கள் அனுப்பப்படுவர்.

இணைந்த சுகாதார விஞ்ஞானங்கள் பீடம்

தற்போது இங்கு பட்டதாரி பயிலுனர்களுக்காக ஐந்து விஞ்ஞானங்களில் பாடநெறிகள் கற்பிக்கப்படுகின்றன.

(அ) மருத்துவ ஆய்வுகூட விஞ்ஞானங்களில் இளமாணிப் பட்டம்

120 திறமைப் பெறுமானங்களை வழங்கும் மருத்துவ ஆய்வுகூட விஞ்ஞான இளமாணிப்பட்டத்திற்கான பாடநெறியானது, மருத்துவ ஆய்வுகூட பட்டதாரிகளை உருவாக்கும் வகையில் முன்பதிவு பாடநெறியாக வடிவமைக்கப்பட்டுள்ளது. இப்பட்டப்பின் படிப்பின் நோக்கம் பொதுமக்களுக்கு நவீன ஆய்வுகூட சேவையினை வழங்கும் வகையில் மாணவர்களுக்கு மருத்துவ ஆய்வுகூட விஞ்ஞானம் தொடர்பான சிறந்த அறிவினை வழங்குவதாக அமைகின்றது. மேலும் இப்பாடநெறியானது மாணவர்களுக்கு உயிரியல் மருத்துவ துறை தொடர்பான அறிவினை வழங்குவதுடன் ஆய்வுகூட முடிவுகளுக்கு விளக்கம் அளித்தல், தவறுகளின்

மூலங்களை விளங்கிக் கொள்ளல் மற்றும் பிரச்சினைகளை தீர்த்தல் என்பவற்றுக்கான ஆற்றலினையும் விருத்தி செய்வதாகவும் அமைகின்றது.

(ஆ) தாதி சேவைக்கான விஞ்ஞான இளமாணிப் பட்டம்

120 திறமைப் பெறுமானங்களை வழங்கும் தாதி சேவைக்கான விஞ்ஞான இளமாணிப் பட்டமானது முன்பதிவு பாடநெறியாக வடிவமைக்கப்பட்டுள்ளது. மேலும் இப்பாடநெறியானது பொதுநிலை தாதி, குடும்பநல தாதி, சிறுவர் பராமரிப்பு தாதி, சமூக சுகாதார தாதி போன்ற பல்வேறுபட்ட பிரிவுகளுக்கு உயர் தரத்தில் திறன்வாய்ந்ததும் பாதுகாப்பானதுமான தாதிச் சேவையினை வழங்கும் தாதிமார்களை உருவாக்கும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது. இப்பாடத்திட்டமானது தாதி பயிலுனர்களுக்கு விஞ்ஞானம் மற்றும் மனிதாபிமான அடிப்படை அறிவினை வழங்குவதாகவும், தாதி சேவைக்கு அவசியமான பாதுகாப்பு, பராமரிப்பு, குணப்படுத்தல், புனர்வாழ்வு அளித்தல் மற்றும் சுகாதார மேம்பாடு என்பனவற்றுக்கு மாணவர்களின் திறனை தொடர்புபடுத்துகின்றது. அத்தோடு இப்பாடநெறியானது தாய்மை பருவ பெண்கள் உள்ளடங்கலாக வாழ்நாள் முழுதும் தீராத நோயினாலும் தீவிரமான நோயினாலும் பாதிக்கப்பட்டுள்ள நோயாளர்களுக்கு தேவையான சேவையினை வழங்கல் என்பனவற்றுக்கு மாணவர்களை பயிற்றுவிப்பதாகவும் அமைகின்றது. அத்தோடு தனிப்பட்டரீதியில் தமது தொழில்நிலை தொடர்பாக தனது திறனை விருத்தி செய்தல் மற்றும் சுகாதார நலனுடன் தொடர்புடைய ஏனைய ஒழுக்க நெறிகளுக்கு பங்களிப்பினை வழங்குவதற்காக மாணவர்களை தயார்படுத்துவதாகவும் இப்பாடநெறி அமைகின்றது. மேலும் இப்பாடத்திட்டமானது தாதிச்சேவை ஆய்வுகளுக்கான எண்ணக்கருவினை அறிமுகப்படுத்தல் மற்றும் ஆரம்பநிலைகளில் சான்றுகளை அடிப்படையாகக் கொண்ட பயிற்சிகளையும் வழங்கும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது. விமர்சன ரீதியானதும் பிரதிபலிப்பு மிக்கதுமான சிந்தனை, பிரச்சினைகளை தீர்த்தல், பட்டதாரி பயிலுனர்களின் சமூகதிறன், தொழில்நிலை திறன் மேம்பாடு, விழுமியங்கள் மற்றும் ஒழுக்க நியதிகள் தொடர்பான பிரச்சினைகள் என்பனவற்றினை முக்கியப்படுத்தல் என்பனவும் இப்பாடத்திட்டத்தில் முக்கியப்படுத்தப்பட்டுள்ளன. மேலும் இப்பாடத்திட்டத்தின் கீழ் பல்வேறுபட்ட வைத்தியசாலைகள் மற்றும் சமூக அமைப்புக்கள் போன்ற சிகிச்சை நிலையங்களில் பயிற்சியுடனான கற்கை வழங்கப்படும். இப்பாடத்திட்டத்தின் பிரதான நோக்கம் கோட்பாடுகள் மற்றும் பயிற்சிநெறி ஆகிய இரண்டும் கலந்த பாடத்திட்டங்களினூடாக மாணவர்களை தொடர்புபடுத்தி கருணை குணம், பராமரிப்பு திறன் மற்றும் தீவிர விழிப்புணர்வுமிக்க தாதி பயிற்சியாளர்களை உருவாக்குவதாகும்.

(இ) இயன்மருத்துவத்தில் இளமாணிப் பட்டம்

120 திறமைப் பெறுமானங்களை வழங்கும் இயன்மருத்துவ இளமாணிப் பட்டமானது முற்பதிவு பாடநெறியாக அமைகின்றது. இப்பாடத்திட்டமானது இலங்கையிலும் வெளிநாடுகளிலும் உள்ள பல்வகைப்பட்ட அமைப்புக்களில் உயர் தரம் மிக்க இயன்மருத்துவம் மற்றும் புனர்வாழ்வு என்பவற்றினை வழங்கும் தகுதிவாய்ந்த இயன்மருத்துவவியலாளர்களை உருவாக்கும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது. மேலும் இப்பாடத்திட்டமானது மாணவர்களை தற்போதைய எண்ணக்கருக்கள் மற்றும் இணைந்த சுகாதார கற்கை துறையில் துரிதமாக வளர்ச்சியடையும் உயர்நிலை பிரிவுகள் என்பனவற்றில் தகுதிவாய்ந்தவர்களாக உருவாக்கும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது. இத்துறையில் பயிற்சியினை பெறும் பட்டதாரிகள் இயன்மருத்துவத்தினை திட்டமிடல், மதிப்பிடல், விருத்தி செய்தல் என்பனவற்றுக்கும் அவசியமானவர்களுக்கு புனர்வாழ்வு அளித்தல் மற்றும் வெளியீடுகளை மதிப்பிடல் என்பனவற்றுக்கு தகுதியுடையவர்களாக காணப்படுவர். இப்பட்டப்படிப்பானது பட்டதாரிகளின் பாதுகாப்பான சிகிச்சை பயிற்சிகளை உறுதி செய்வதாகவும் பட்டதாரிகளுக்கு உடற்பயிற்சியியல் தொடர்பான பட்ட பின்படிப்பு பயிற்சிகளை பெறுவதற்கான வாய்ப்பினை வழங்குவதாகவும் அமைகின்றது.

(ஈ) மருந்தகவியலில் விஞ்ஞான இளமாணிப்பட்டம்

இப்பல்கலைக்கழகத்தினால் வழங்கப்படும் 120 திறமைப் பெறுமானங்களைக் கொண்ட மருந்தகவியலில் விஞ்ஞான இளமாணிப்பட்டத்திற்கு இட்டுச்செல்லும், முன் பதிவு பட்டப்படிப்பு பாடநெறியாகும். மருந்தகவியல், சுகாதார கல்வியின் ஒரு பிரிவாகும். இது மருந்துப் பொருட்களின் தயாரிப்புக்கு தேவையான மூலப்பொருட்கள் தொடக்கம் மருந்துகளை உபயோகித்ததன் பின்னர் நோயாளர்களின் உடல் நலத்தில் ஏற்படும் முன்னேற்றம் என்பனவற்றை கண்காணித்தல் வரை கிடையாக விரிவடைந்து செல்கின்றது. இப்பாடநெறி மருந்தகவியலுடன் தொடர்புடைய பின்வரும் விடயப் பகுதிகளையும் உள்ளடக்கியுள்ளது: தயாரிப்பு, தரம், காப்புறுதி, ஆய்வு மற்றும் அபிவிருத்தி, ஒழுங்குமுறை விவகாரம், ஆரோக்கியம் மற்றும் சிகிச்சை, மருந்தகம், சட்ட அமுலாக்கம் மற்றும் சட்ட நடைமுறை, கல்வி, பரம்பல், சந்தைப்படுத்தல், முன்னேற்றல், ஆவணப்படுத்தல், களஞ்சியப்படுத்தல், சமூகசேவை தொடர்பான தகவல்களையும் பராமரிப்பு அறிவினையும் வழங்கல். இந்நான்கு வருட பாடத்திட்டமானது மருந்தக பயிற்சி தொடர்பான விஞ்ஞான மற்றும் சேவை நோக்கு அடிப்படையிலான ஆதாரத்தினை வழங்குகின்றன. மேலும் இப்பாடநெறியானது பட்டதாரிகளை தொழில் ரீதியாக தகுதிவாய்ந்த சுயாதீனமான மருந்தகவியலாளராக தம்மை விருத்தி செய்துகொள்வதற்கு துணை புரிகின்றது. மேலும் இப்பாடத்திட்டமானது மாணவர்களை மருந்தகவியலார்களாக தம்மை விருத்தி செய்வதற்கான தன்னம்பிக்கையினை வளர்த்துக் கொள்ளும் திசையில் தயார்படுத்துவதுடன், ஏனைய சுகாதார நலப்பிரிவுகளுடன் இணைந்து செயற்படும் ஆற்றலையும் வளர்க்கும் வகையில் உள்ளது. மேலும் இப்பாடத்திட்டம் மாணவர்களை சுய கற்கை மூலம் தமது அறிவினை விருத்தி செய்வதற்கு தயார்படுத்துவதுடன் புதிய அணுகுமுறைகளை பெறுவதற்கான நுண்ணறிவை பெறுவதையும் ஊக்குவிக்கின்றது. மேலும் இப்பாடத்திட்டம் பகுப்பாய்வு திறனை உயர்ந்த மட்டத்தில் விருத்தி செய்த பட்டதாரிகளை உருவாக்குவதையும், மருத்துவ துறையில் தேவையான தலைமைத்துவத்தினை விருத்தி செய்வதனையும் நோக்காக கொண்டுள்ளது. இப்பாடத்திட்டத்தின் முக்கியத்துவம் பட்டதாரி பயிலுனர்களுக்கு தர்க்கரீதியானதும், பிரதிபலிப்புமிக்கதுமான சிந்தனை, பிரச்சினைகளை தீர்த்தல், சமூகத்திறன் என்பவற்றுடன் தொழில்திறன், விழுமியங்கள் மற்றும் ஒழுக்கவியல் பிரச்சினைகளை தீர்க்கும் திறன் என்பவற்றினை விருத்தி செய்வதாக அமைகின்றது.

(உ) ஊடுகதிர்படமெடுப்பில் / ஊடுகதிர் மருத்துவத்தில் இளமாணிப்பட்டம்

இப்பல்கலைக்கழகத்தினால் வழங்கப்படும் ஊடுகதிர்படமெடுப்பில் / ஊடுகதிர் மருத்துவ பாடநெறியானது 120 திறமைப் பெறுமானங்களைக் கொண்ட முற்பதிவு பட்டப்படிப்பாகும். ஊடுகதிர்படமெடுப்பாளர்கள் மருத்துவ சூழலில் ஊடுகதிரியக்கத்தினை எண்ணக்கரு மற்றும் சிகிச்சை அடிப்படையில் உபயோகிப்பவர்களா உள்ளனர். இத்துறையானது சிறந்த தரத்துடன் கூடிய தொழில்நுட்ப மற்றும் விஞ்ஞான ஒழுக்க நெறிகளுக்கான கேள்வியினை எழுப்புவதுடன் இதன் பிரதிபலிப்புத்தன்மையுடைய உயர் மட்டத்திலான தொழில் திருப்தியினை வழங்கும் தொழில் நிலையினை வழங்குவதாகவும் அமைகின்றது. ஊடுகதிர்படமெடுப்பாளர் தொழிலானது மருத்துவ சூழலில் விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப பிரயோகங்களை பயன்படுத்துவதில் ஆர்வமுடையவர்களுக்கு பொருத்தமானதாக உள்ளது.

கலைப் பீடம்

கலைப் பீடத்தினால் வழங்கப்படும் பட்டதாரி மாணவர்களுக்கான பாடநெறிகள்

கலைப்பீடமானது மாணவர்களுக்கு பரந்த அடிப்படையிலான பட்டதாரி பயிலுனர் கற்கை நெறிகளை வழங்கி வருகின்றது. பீடத்தினால் வழங்கப்பட்டு வரும் பட்டப்படிப்புகள் பின்வருமாறு:

1. கலை இளமாணி (பொது) பட்டம்
2. கலை இளமாணி (சிறப்பு) பட்டம்
3. சட்ட இளமாணி பட்டம்

இப்பட்டப்படிப்புகளானவை பருவ அடிப்படையில் கற்பிக்கப்படுவதுடன், மாணவர்களை தொடர்ச்சியான மதிப்பீடுகளுக்கும் உட்படுத்துகின்றது. பருவம் ஒன்றில் ஒவ்வொரு பாடநெறியும் 15 கிழமைகளில் ஒவ்வொரு பாடத்திற்கும் 45 மணித்தியாலங்கள் என்ற அடிப்படையில் கற்பிக்கப்படும். பருவ இறுதியில் மாணவர்களின் திறன் பரீட்சை மூலமாக மதிப்பிடப்படும். பொதுக் கலை இளமாணி பட்டப்படிப்பு மூன்று வருட (ஆறு பருவ காலம்) கல்வி ஆண்டுகளுக்குரியதாகவும், சிறப்புக் கலை இளமாணி மற்றும் வணிகக்கல்வி இளமாணிப்பட்டம் என்பன நான்கு வருட (எட்டு பருவ காலம்) கல்வி ஆண்டுகளுக்குரியதாகவும் வடிவமைக்கப்பட்டுள்ளது.

சட்ட இளமாணிப்பட்டம்

தெரிவு செய்யப்படும் முறை: இக்கைநூலின் பகுதி 2.2.8.10 குறிப்பிடப்பட்டுள்ளவற்றிற்கு இணங்க.

பட்டப்படிப்பு நிகழ்ச்சித்திட்டத்தினுடைய சுருக்க விளக்கம்: இது பேராதனை பல்கலைக்கழக, கலைப்பீடத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ள பாடநெறி அலகு முறைமையின் பிரகாரம் விருத்திசெய்யப்பட்ட சட்டத்தில் நான்கு வருட விசேட பட்டத் திட்டமாகும். கற்கைத் திட்டத்தின் முதலாவது ஆண்டில், சட்டத்தின் ஆதாரங்களிலும், தெரிவுசெய்யப்பட்ட சமூக விஞ்ஞான பாடநெறிகளில் மாணவர்கள் அடிப்படைத் தத்துவங்களைப் பற்றிய பூரண அறிவைப் பெறுவர். இரண்டாவது, மூன்றாவது மற்றும் நான்காவது வருடங்களில், அரசியலமைப்புச் சட்டம், குடும்பச் சட்டமுறை, குற்றவியல் சட்ட, ஒப்பந்தச் சட்டம், ஆதனச் சட்டம் ஆகியன உட்பட சட்டத்தின் சகல பிரத்தியேகமான துறைகள் உள்ளடக்கப்படும். மூன்றாவது ஆண்டில் இருந்து, கூட்டுச் சட்டம், மனித உரிமைகள், மற்றும் சூழல் சட்டம், சர்வதேசச் சட்டம், குற்றவியல் சட்டம் அல்லது மாற்றுப் பிணக்கு இணக்கம் ஆகியவற்றில் சிறப்பினைப் பெற முடியும்.

புவியியல் தகவல் விஞ்ஞானத்திற்கான விஞ்ஞானமாணி கௌரவப்பட்டம்

தெரிவு செய்யப்படும் முறை: இக்கைநூலின் பகுதி 2.2.8.37 குறிப்பிடப்பட்டுள்ளவற்றிற்கு இணங்க.

பட்டப்படிப்பு நிகழ்ச்சித்திட்டத்தினுடைய சுருக்க விளக்கம்: இக் நெறியானது நான்கு வருட கௌரவப்பட்ட படிப்பாக ஒழுங்கமைக்கப்பட்டுள்ளது. அத்தோடு பருவ முறைமையின் அடிப்படையாக கொண்டு பேராதனை பல்கலைக்கழக புவியியல் துறையினால் பாடங்கள் நடத்தப்படும். கொள்கையை வகுப்பாளர்கள் மற்றும் திட்டமிடலாளரிகளுக்கு வெளி ரீதியான பகுப்பாய்வு சார்ந்த உதவிகளை வழங்கும் வகையில் திறமை கொண்ட பட்டதாரிகளை உருவாக்க உதவுவதே இப்பட்ட படிப்பின் நோக்கமாகும். இப்பட்ட படிப்பின் உள்ளடக்கமானது தற்போது நடைமுறையில் உள்ள புவியியல் சிறப்பு பட்டத்திலிருந்து தெரிவு செய்யப்பட்ட பாட விடயங்கள் மற்றும் கலைப் பீட அடிப்படை பாட விடயங்கள் ஆகியவற்றுடன் புவியியல் தகவல் விஞ்ஞானத்தின் புதிய பாட விடயங்களின் தொகுதியையும் கொண்டமைக்கபட்டுள்ளது. வகுப்பறை ஆய்வுகூட மற்றும் வெளிக்கள கற்பித்தல் முறைகளை கொண்டதாக மாணவர்களின் திறன்களை மேன்படுத்தும் நோக்குடன் அனேக பாடங்கள் ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளன. இறுதி வருடத்தில் மாணவர்கள் ஆய்வு கட்டுரை மற்றும் துறை சார் பயிற்சிகள் மூலம் ஆய்வு சார் மற்றும் தொழில் சார் திறன்களை வளர்த்துக்கொள்ள வேண்டும் என எதிர்பார்க்கப்படுகின்றனர்.

முகாமைத்துவ பீடம்

முகாமைத்துவ பீடமானது ஐந்து துறைகளுடன் இளமாணிப் பட்டப் படிப்பில் சிறப்புப் பட்டங்களை வழங்குவதற்காகப் பின்வரும் கல்விசார் பாடநெறிகளுக்கான பாடத்திட்டங்களைக் கொண்டுள்ளது. இந்த எல்லாப் பட்டப் படிப்புப் பாடநெறிகளும் பருவங்களை அடிப்படையாகக் கொண்ட கற்கை அலகு முறைமை மற்றும் ஒவ்வொரு பருவமும் 15 கல்விசார் வாரங்களையும் கொண்டுள்ளது. ஒவ்வொரு பட்டப் படிப்புக்குமான பாட நிறையானது 120 நிறை கொண்ட சித்திகளைக் கொண்டிருப்பதுடன் எட்டுப் பருவ காலங்களை அல்லது நாக்கு வருடங்களைக் கொண்டதாகும்.

1. வியாபார நிர்வாக இளமாணி (சிறப்பு) பட்டப் படிப்பிற்கான (BBA) பாடநெறி

க.பொ.த. உயர்தரப் பரீட்சையின் வணிகப் பிரிவில் பல்கலைக்கழக அனுமதிக்கு தகுதி பெற்ற மாணவர்கள் ஆங்கில மொழி மூலமான இந்த நான்காண்டுச் சிறப்பு பட்டப் படிப்பிற்கு அனுமதிக்கப்படுவர். இந்த BBA பட்டப் படிப்பில் கலந்துகொள்ளும் மாணவர்கள் முதல் இரண்டு ஆண்டுகளில் பொதுவான கல்விசார் பாடநெறிகளிலும் அடுத்து வரும் இரண்டு வருடகாலப் பகுதியில் பின்வரும் குறிப்பிடப்பட்ட துறைகளில் சிறப்பு துறையினையும் தெரிவுசெய்ய முடியும்.

- கணக்கீடும் நிதியும்
- மனிதவள முகாமைத்துவம்
- சந்தைப்படுத்தல் முகாமைத்துவம்
- செயற்பாட்டு முகாமைத்துவம்
- நிறுவன முகாமைத்துவம்

2. வணிக இளமாணி (சிறப்பு) பட்டப் படிப்பிற்கான (B.Com) பாடநெறி

இந்தக் கூட்டுப் பட்டப் படிப்பிற்கான பாடநெறியானது கலைப் பீடத்துடன் இணைந்து வழங்கப்படுகின்றது. முதலாம் ஆண்டில் வழங்கப்பட்ட முகாமைத்துவக் கற்கை நெறிகளின் செயல்திறனை அடிப்படையாகக் கொண்டு கலைப் பீடத்தில் அனுமதி பெற்ற மாணவர்கள் **B.Com** பட்டப் படிப்பிற்கான பாடநெறிக்கு விண்ணப்பிக்க முடியும். **B.Com** பட்டப் படிப்பினைத் தெரிவுசெய்யும்

மாணவர்கள் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழி மூலமாக இதனைத் தெரிவுசெய்து பின்பற்றலாம். (**B.Com** பட்டப் படிப்பினைத் தொடர விரும்புபவர்கள் கட்டாயமாகக் கலைப் பீடத்திற்கு அனுமதி பெற்றுக்கொள்ளுதல் வேண்டும்)

3. கணித்தலும் முகாமைத்துவ இளமாணி (சிறப்பு) பட்டப் படிப்பிற்கான (B.Sc) பாடநெறி

இந்தக் கூட்டுப் பட்டப் படிப்புக்கான பாடநெறியானது விஞ்ஞான பீடத்துடன் இணைந்து வழங்கப்படுகின்றது. விஞ்ஞான பீடத்தில் (B.Sc) (கணித்தலும் முகாமைத்துவமும்) பட்டப் படிப்பிற்கான பாடநெறிக்குப் பதிவுசெய்யப்பட்ட மாணவர்களுக்கு முகாமைத்துவ பீடத்தினால் ஆங்கில மொழி மூலம் முகாமைத்துவக் கற்கை நெறிகள் தொடர்பான பாடங்கள் வழங்கப்படும். (**B.Sc** பட்டப் படிப்பினைத் தொடர விரும்புபவர்கள் கட்டாயமாகக் விஞ்ஞான பீடத்திற்கு அனுமதி பெற்றுக்கொள்ளுதல் வேண்டும்)

பல் மருத்துவ விஞ்ஞான பீடம்

பல்மருத்துவ விஞ்ஞான பீடம், பட்டதாரி பயிலுனர்களுக்கு பல் மருத்துவ சத்திரசிகிச்சை இளமாணி பட்டத்திற்கான பாடநெறிகளை வழங்குகின்றது. இப்பாடத்திட்டத்திற்கான கால வரையறை ஐந்து கல்வி ஆண்டுகளாகும். இப்பாடநெறிக்கான போதனைகள் ஆங்கில மொழி மூலமே வழங்கப்படும். பல் மருத்துவ விஞ்ஞான பீடத்திற்கு ஒவ்வொரு வருடமும் 80 பட்டதாரி பயிலுனர்கள் பல் மருத்துவ சத்திர சிகிச்சை இளமாணி பட்டப்படிப்பிற்காக இணைத்துக் கொள்ளப்படுவர்.

பொறியியல் பீடம்

பொறியியல் பீடமானது பொறியியல் விஞ்ஞானமாணி (BSc Eng) பட்டத்திற்கான ஒரு முழு நேர பட்டதாரி மாணவப் பாடத்திட்டத்தினை வழங்குகிறது. இப் பட்டதாரி மாணவப் பாடத்திட்டம் நான்கு ஆண்டுகளைக் கொண்டது. முதலாம் வருடம் எல்லா மாணவர்களிற்கும் பொதுவாகவும் இறுதி மூன்று ஆண்டுகளும் பொறியியலிலுள்ள கிளைகளில் ஒன்றில் சிறப்பு பெறுவதற்காகவும் ஒதுக்கப்பட்டுள்ளது. இப்பீடமானது 15 வார காலப்பகுதியை ஒரு தவணையாகக் கொண்ட பாடநெறி அலகு முறையைக் கொண்டுள்ளது. பாடநெறி வேலையும் (ஆய்வுகூடவேலை, வடிவமைப்பு, வெளிவேலை) கைத்தொழிற் பயிற்சியும் கூட பட்டதாரி மாணவர் பயிற்சி நெறியின் பிரதான பகுதிகளாக அமைந்துள்ளன. பட்டதாரி மாணவப் பாடநெறிகள் ஐந்து பிரிவு மட்டங்களில் வழங்கப்படுகின்றன. முதல் நான்கு பிரிவு மட்டங்களும் நான்கு ஆண்டு அலகுகளையும் ஐந்தாவது பிரிவுமட்டம் தெரிவுப் பாடநெறிகளிலிருந்து குறிப்பிட்ட பாடங்களையும் வழங்குகிறது. இப்பட்டமானது இலங்கைப் பொறியியலாளர்கள் நிறுவகம் (IESL), குடிசார் பொறியியலாளர்கள் நிறுவகம் - இங்கிலாந்து (ICE, U. K.), கட்டமைப்புப் பொறியியலாளர்கள் நிறுவகம் - இங்கிலாந்து (IStructE, U. K.) மற்றும் நெடுஞ்சாலைகள் போக்குவரத்து நிறுவகம் - இங்கிலாந்து உட்பட பல தொழில்சார் நிறுவகங்களால் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. பொறியியல் விஞ்ஞானமாணி பட்ட நிகழ்ச்சித் திட்டத்திற்குள் பிரவேசிக்கின்ற எல்லா மாணவர்களும் முதலாம் வருட காலத்தில் பொது சாதாரண பொறியியற் பாடத்திட்டத்தினைப் (General Program in Engineering - GPE) பயில வேண்டும். பொது சாதாரண பொறியியற் பாடத்திட்டத்தைத் திருப்திகரமாகப் ப'ர்த்தி செய்பவர்கள் சிறப்புப் பொறியியற் பாடத்திட்டத்திற்குள் (Specialized Program in Engineering - SPE) அனுமதிக்கப்படுவார்கள். சிறப்பு பொறியியற் பாடத்திட்டத்தின் போது மாணவர்கள் ஒவ்வொருவரும் சிறப்புப் பட்டத்திற்கான ஆறு துறைகளில் ஏதாவது ஒன்றிற்கு அனுமதி பெறுவர். இவ் அனுமதியானது மாணவர்களின் தெரிவு மற்றும் பொது சாதாரண பொறியியற் பாடத்திட்டத்தில் அவர்களின் செயல்திறன் என்பவற்றை அடிப்படையாகக் கொண்டது. பின்வரும் சிறப்பு பெறுவதற்கான துறைகள் பொறியியலில் உள்ளன.

i. இரசாயன மற்றும் பொறிமுறைப் பொறியியல்
ii. கணனிப் பொறியியல்
iii. பொறிமுறைப் பொறியியல்
iv. குடிசார் பொறியியல்
v. மின் மற்றும் இலத்திரன் பொறியியல்
vi. உற்பத்தி மற்றும் தொழிற்துறைப் பொறியியல்

பொது சாதாரண பொறியியற் பாடத்திட்டம் அனைத்து மாணவர்களுக்கும் பொதுவான 12 கட்டாய பாடநெறிகளை உள்ளடக்கியுள்ளது. சிறப்பு பொறியியற் பாடத்திட்டம் மூலாதாரப் பாடநெறிகள், தொழில்நுட்பத் தெரிவுப் பாடநெறிகள் மற்றும் பொதுத் தெரிவுப் பாடநெறிகள் என மூன்று பிரிவுகளாக வகைப்படுத்தப்பட்டுள்ளன.

மூலாதாரப் பாடநெறிகள் சிறப்பு பெறுவதற்கான துறைகளில் உள்ள மாணவர்களுக்குக் கட்டாயமானதாகும். தொழில்நுட்பத் தெரிவுப் பாடநெறிகள், மூலாதாரப் பாடநெறியுடன் தொடர்புபட்ட அல்லது மூலாதாரப் பாடநெறிகளின் அறிவை வளப்படுத்தி தெரிவு செய்யப்பட்ட பாடநெறி தொடர்பான ஆழமான அறிவினைத் தரும். பொதுத் தெரிவு பாடநெறிகள் ஆனவை தொழில்நுட்பமல்லாத பாடநெறிகளாகும். இப்பாடநெறியலகுகள் ஒரு மாணவனை முழுமையான தொழில் வல்லுனராகவும் சிறந்த ஒரு குடிமகனாகவும் அவரது பங்கினை ஆற்றுவதற்கும் பரந்த முன்னோக்கு அறிவினைத் தருகின்றன.

மருத்துவ பீடம்

பட்டப் பயிலுனர் திட்டம்

மருத்துவ இளமாணி மற்றும் சத்திரசிகிச்சை இளமாணிப் பட்டத்திற்கு (MBBS) இட்டுச் செல்லும் மருத்துவ நெறியொன்றை பீடம் வழங்குகின்றது.

இப்பட்டப்படிப்பு பாடநெறிக்கான கால எல்லை 14 பருவங்களைக் கொண்ட 5 கல்வி ஆண்டுகளாகும். 2004ஆம் ஆண்டுக்கு முந்திய பாடத்திட்டமானது திருத்தத்திற்குட்பட்டு 2005ஆம் ஆண்டு ஒவ்வொரு பருவத்திற்கும் மாதிரி அடிப்படையிலான 5 பாடநெறிகள் வழங்கப்படும். பல்கலைக்கழகத்தின் பாடநெறிகளானவை 2003ஆம் ஆண்டு, நவீன உலகின் தேவைகள் மற்றும் கேள்விக்கமைய, மருத்துவ கல்விக்கான உலக தாபனத்தின் (WFME) பரிந்துரைகளுக்கு இணைவாக பாட திட்டத்தினை மாற்றியமைத்தது. இப்புதிய பாடத்திட்டமானது முதன் முதலில் 2004/2005ஆம் கல்வி ஆண்டுகளுக்காக சேர்த்துக் கொள்ளப்பட்ட மாணவர்களுக்கு 2005ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்டது. பாரம்பரிய பாடத்திட்டத்திற்கு மாறாக இப்புதிய பாடத்திட்டமானது, பிரதானமாக முன் மருத்துவ பயிற்சிகள், சுய கற்றல், தொழில்சார் அபிவிருத்தி மற்றும் சமூகத்தை மையப்படுத்திய கற்றல் என்பனவற்றை நோக்காக கொண்டு வடிவமைக்கப்பட்டுள்ளது.

மருத்துவ பாடத்திட்டமானது பின்வரும் 5 துறைகளுக்கு (முதல் 8 பருவங்களின் போது) அமைய வடிவமைக்கப்பட்டுள்ளது.

- **SBM** - மருத்துவத்திற்கான அடிப்படை விஞ்ஞானம் - மருத்துவ ஆய்வுகூட முகாமைத்துவ திறனை அடிப்படையாகக் கொண்ட அறிவு வழங்கப்படும்.
- **CLM** - மருத்துவ ஆய்வுகூட முகாமைத்துவம் - மருத்துவம், ஆய்வுகூடம் மற்றும் நோயாளர் பராமரிப்புத்திறன்
- **CLR** - தகவல் தொடர்பாடல், கற்றல் மற்றும் ஆய்வு - தகவல் தொடர்பாடல் திறனை விருத்தி செய்தல், ஆங்கில மொழித்திறன், இணையத்தளம் மூலமான கற்றல் மற்றும் ஆய்வுத்திறன்
- **DIS** - சமூகத்தில் வைத்தியர் - சமூகத்தில் குடிசன பிரச்சினைகள், சட்டரீதியான மருத்துவப் பரிசோதனைகள் என்பனவற்றில் வைத்தியர்களின் பங்களிப்பை வலுவ'ட்டல்
- **HCT** - ஆஸ்பத்திரி சனசமூக அடிப்படையிலான பயிற்சி

விஞ்ஞான பீடம்

தாவரவியல், இரசாயனவியல், புவிசரிதவியல், கணிதவியல், மூலக்கூறு உயிரியல் மற்றும் உயிரகத் தொழில்நுட்பம், பௌதீகவியல், புள்ளிவிபரங்கள் மற்றும் கணனி விஞ்ஞானம் மற்றும் விலங்கியல் ஆகிய எட்டு நூற்கல்வி பிரிவுகளையும், விஞ்ஞான கல்வி அலகு மற்றும் ஆங்கில மொழி கல்வி கற்பித்தல் அலகு ஆகிய இரு அலகுகளையும் பீடம் கொண்டுள்ளது. பீடத்தினால் வழங்கப்படும் பட்ட நிகழ்ச்சித் திட்டங்கள் பின்வரும் அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ளது.

நவீன ஆய்வுகூட, கணனி மற்றும் நூலக வசதிகளுடன் பட்டப் பயிலுனர்களுக்கு சிறந்ததொரு கற்கைச் சூழலை பீடம் வழங்குகின்றது.

பட்ட நிகழ்ச்சித் திட்டம்	காலம்	விவரணம்
விஞ்ஞானத்தில் பீ.எஸ்சி. பொதுப் பட்டம்	3 வருடங்கள்	உயிரியல் மற்றும் பௌதீகவியல் விஞ்ஞான பிரிவுகளில் நிகழ்ச்சித் திட்டங்கள் வழங்கப்படும்.
உயிரியலில் பீ.எஸ்சி. சிறப்புப் பட்டம் தாவரவியலில் பீ.எஸ்சி. சிறப்புப் பட்டம் இரசாயனவியலில் பீ.எஸ்சி. சிறப்புப் பட்டம் புவிசரிதவியலில் பீ.எஸ்சி. சிறப்புப் பட்டம் கணிதவியலில் பீ.எஸ்சி. சிறப்புப் பட்டம் மூலக்கூறு உயிரியல் மற்றும் உயிரக தொழில்நுட்பவியலில் பீ.எஸ்சி. சிறப்புப் பட்டம் பௌதிகவியலில் பீ.எஸ்சி. சிறப்புப் பட்டம் புள்ளிவிபரவியலில் பீ.எஸ்சி. சிறப்புப் பட்டம் கணனி விஞ்ஞானத்தில் பீ.எஸ்சி. சிறப்புப் பட்டம் விலங்கியலில் பீ.எஸ்சி. சிறப்புப் பட்டம்	4 வருடங்கள்	ஒரு மட்டுப்படுத்தப்பட்ட எண்ணிக்கையிலான மாணவர்கள் மூன்றாம் வருடத்தின் ஆரம்பத்தில் 100 மற்றும் 200 மட்டங்களில் அவர்களது பெறுபேற்றினை கரிசனைக்கு எடுத்து போட்டிக்குரிய அடிப்படையொன்றில் அனுமதிக்கப்படுகின்றார்கள். சிறப்புப் பெறுகின்ற பாடத்தில் நெறி அலகுகளையும் மற்றும் சம்பந்தப்பட்ட பிரிவினால் சிபார்சு செய்யப்படும் ஏனைய நெறி அலகுகளையும் மாணவர்கள் எடுக்க முடியும் என்பதுடன், இறுதியாண்டில் ஆராய்ச்சிக் கருத்திட்டமொன்றையும் நடத்த வேண்டும்.
பிரயோக விஞ்ஞானங்களில் பீ.எஸ்சி.	4 வருடங்கள்	பொது விஞ்ஞான இளமாணி பட்டத்தினை சிறப்பாக பூர்த்தி செய்த மாணவர்களுக்கு நான்காம் வருடத்தினை தெரிவு செய்வதற்கான வாய்ப்பு காணப்படுகின்றது. இப்பாடநெறி பொது விஞ்ஞான இளமாணி பட்டத்திற்கான தேவைகளை முழுமையாகப் பூர்த்தி செய்த மாணவர்களுக்கு மட்டுமே. இப்பாடநெறி 16 கிழமைகளுக்கு கைத்தொழில் இணைப்புடன் கைத்தொழில் தொடர்புடைய பாடநெறிகளை வழங்குவதாக அமைகின்றது.
புள்ளிவிபரவியல், தொழிற்படுத்தல் ஆராய்ச்சியில் பீ.எஸ்சி	4 வருடங்கள்	
கணக்கிடுதலிலும் முகாமைத்துவத்திலும் பீ.எஸ்சி	4 வருடங்கள்	கலைப் பீடத்தினாலும், விஞ்ஞான பீடத்தினாலும் நிகழ்ச்சித் திட்டம் இணைந்து வழங்கப்படுகின்றது.

பீடத்தின் கற்கை நெறிகள், பாடப்பிரிவுக்கமைய ஒவ்வொரு கல்வி ஆண்டுக்கும் 2 பருவங்கள் என்ற அடிப்படையில் 100, 200, 300, 400 ஆகிய மட்டங்களில் பாடங்களை வழங்குகின்றது. பாடங்கள் ஆங்கில மொழி மூலமே கற்பிக்கப்படும். உயர் நெகிழ்வுத்தன்மையினை வழங்கும் வகையில் பல்வேறுபட்ட பாடங்கள் மாணவர்களின் தெரிவுக்காக வழங்கப்பட்டுள்ளது. எவ்வாறெனினும் குறிப்பிட்ட சில பாடங்களுக்கான அனுமதி மிகவும் போட்டித்தன்மையினைக் கொண்டிருக்கும்.

மிருக வைத்திய விலங்கு விஞ்ஞான பீடம்

விலங்கு மருத்துவ விஞ்ஞானத்திற்கான விஞ்ஞான இளமாணி கௌரவ [BVSc(Hons)]பட்டப் பாடநெறிகளை மிருக வைத்திய விலங்கு விஞ்ஞான பீடம் வழங்குகின்றது. இப்பாடநெறியானது ஐந்து கல்வி ஆண்டுகளுக்குரிய முழு நேர பாடநெறியாகும். ஒவ்வொரு கல்வி ஆண்டும் இரண்டு பருவங்களை கொண்டிருக்கும். பட்டபடிப்பிற்கான போதனா மொழி ஆங்கிலமாகும். இக்கற்கை நெறியானது அடிப்படை விலங்கு விஞ்ஞானம், விலங்கு நோய் உயிரியல் துறை, விலங்கு மருத்துவ விஞ்ஞானம் மற்றும் பண்ணை விலங்கு உற்பத்தி மற்றும் சுகாதார துறை ஆகிய நான்கு கல்வித் துறைகளினூடாக வழங்கப்படுகின்றது. மேலும் பட்டதாரி பயிலுனர்களுக்கான பயிற்சி விலங்கு போதனா வைத்தியசாலை, விலங்கு போதனா பண்ணைகள் என்பவற்றினூடாக வழங்கப்படுகின்றது. பட்டதாரிகளுக்கான அறிவ'ட்டல் விரிவுரைகள், பாடபயிற்சிகள் (tutorials) ஆய்வுகூட பயிற்சிகள், மருத்துவ பயிற்சிகள், கள பிரயாணங்கள் மற்றும் கைத்தொழில் பயிற்சிகள் என்பவற்றின் மூலம் வழங்கப்படும். அதிகளவான பாடங்கள் இரண்டு பருவங்களுக்கு மேல் கற்பிக்கப்படும் (வருட இறுதி பாடநெறிகள்). ஏனையவை ஒரு பருவத்திற்கு மட்டுப்படுத்தப்பட்டவையாக காணப்படுகின்றன. ஒன்றுக்கு மேற்பட்ட பருவங்களுக்கு விரிவாக்கப்பட்டுள்ள பாடங்களுக்கான பரீட்சைகள் வருட இறுதியிலும், ஒரு பருவத்திற்கு மட்டுப்படுத்தப்பட்ட பாடங்களுக்கான பரீட்சைகள் பருவ இறுதியிலும் இடம்பெறும்.

ஸ்ரீ ஜயவர்தனபுரப் பல்கலைக்கழகம்

கற்கைநெறி	பாடச்சேர்க்கை (விதித்துரைக்கப்பட்டவிடத்து)	க./மொ
கலை	-	S
முகாமைத்துவம் ¶	-	S/E
முகாமைத்துவம் (பொது) சிறப்பு	-	E
சொத்து முகாமைத்துவமும் மதிப்பீடும்	-	E
வணிகவியல்	-	S/E
வியாபார தகவல் முறைமைகள் (சிறப்பு)	-	E
மருத்துவம்	-	E
தாதியியல்	-	E
மருந்தகவியல்	-	E
மருத்துவ ஆய்வுகூட விஞ்ஞானங்கள்	-	E
உணவு விஞ். தொழில்நுட்பமும்	-	E
விளையாட்டு விஞ்ஞானமும் முகாமைத்துவமும்	-	E
உயிரியல் விஞ்ஞானம்	தயவு செய்து கீழே பார்க்கவும்	E *
பௌதிக விஞ்ஞானம்	தயவு செய்து கீழே பார்க்கவும்	E *
பொறியியல்	-	E
பொறியியல் தொழில்நுட்பம்	-	E
உயிர் முறைமைகள் தொழில்நுட்பம்	-	E
தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம்	-	E
பௌதிக விஞ்ஞானம் (ICT)	-	E

பிரயோக விஞ்ஞான பீடம்
(Faculty of Applied Sciences)

பிரயோக விஞ்ஞான பீடத்தில் வழங்கப்படும் பட்டப் படிப்பிற்கான கற்பித்தல்கள் அனைத்தும் ஆங்கில மொழியிலேயே* வழங்கப்படுகின்றன. அடிப்படை விஞ்ஞான பாடங்களான இரசாயனவியல், பௌதீகவியல் மற்றும் கணிதம் ஆகியவை முதல் வருடத்தில் ஆங்கில மொழியில் வழங்கப்படுவதோடு தேவை ஏற்படின் சிங்கள மொழியில் விளக்கங்கள் கொடுக்கப்படுகின்றது. ஆனால் இரண்டாம் வருடம் தொடக்கம் ஆங்கிலத்தில் மட்டுமே கற்பிக்கப்படுகின்றது.

அனைத்து மாணவர்களும் (Non Credit) ஆங்கில பாடத்தில் சித்தி பெற்றிருக்க வேண்டியது கட்டாயமாகும்.

உணவு விஞ்ஞானமும் தொழில்நுட்பமும் மற்றும் விளையாட்டு விஞ்ஞானமும் முகாமைத்துவமும் ஆகிய பாடங்களுக்கு மாணவர்கள் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் நேரடியாக தெரிவுசெய்யப்படுகின்றார்கள்.

எனினும் மேற்குறிப்பிட்ட ஏனைய பட்டப்படிப்புக்களை தெரிவுசெய்யும் மாணவர்கள் கட்டாயமாக மூன்று பாடங்களை உள்ளடக்கிய ஒரு பட்டப்படிப்பை தெரிவுசெய்யவேண்டியது கட்டாயமாகும்.

மாணவர்கள் பாடச்சேர்க்கையை தெரிவுசெய்யக்கூடிய வாய்ப்புக்கள் வழங்கப்படுகின்றன. இப் பாடச்சேர்க்கை பற்றிய தொகுப்பு பௌதிக விஞ்ஞானம் அல்லது உயிரியல் விஞ்ஞானம் ஆகிய தலைப்புகளின் கீழ் உள்ளடக்கப்பட்டுள்ளது.

பாடச்சேர்க்கைகள்
உயிரியல் விஞ்ஞானப் பிரிவு

குறியீட்டு	விடயம்	மொழிமூலம்
இலக்கம்		
உ 01	இரசாயனவியல், விலங்கியல், பௌதிகவியல்	E
உ 02	இரசாயனவியல், விலங்கியல், தாவர உயிர் தொழில்நுட்பம் /தாவர உயிரியல்/ நுண் உயிரியல்	E
உ 03	இரசாயனவியல், விலங்கியல், சுற்றாடல் முகாமைத்துவம் மற்றும் வனவியல்	E
உ 04	இரசாயனவியல், சுற்றாடல் முகாமைத்துவம் மற்றும் வனவியல், தாவர உயிர் தொழில்நுட்பம்/தாவர உயிரியல் /நுண் உயிரியல்	E
உ 05	இரசாயனவியல், விலங்கியல், நீர் வாழ் வளங்கள் முகாமைத்துவம்	E
உ 07	இரசாயனவியல், முகாமைத்துவ விஞ்ஞானம், தாவர உயிர் தொழில்நுட்பம் /தாவர உயிரியல் /நுண் உயிரியல்	E
உ 08	இரசாயனவியல், விலங்கியல், முகாமைத்துவ விஞ்ஞானம்	E
உ 09	இரசாயனவியல், உணவியல், உயிரியல்	E
உ 12	இரசாயனவியல், நீரியல் வள முகாமைத்துவம், முகாமைத்துவ விஞ்ஞானம்	E
உ 13	இரசாயனவியல், முகாமைத்துவ விஞ்ஞானம், உயிரியல்	E
உ 14	இரசாயனவியல், உயிரியல், மரபியல் மற்றும் நுண்உயிரியல்	E

பௌதிக விஞ்ஞானப் பிரிவு

குறியீட்டு இலக்கம்	விடயம்	மொழிமூலம்
பௌ 01	கணிதம், இரசாயனவியல், பௌதிகவியல்	E
பௌ 02	கணிதம், இரசாயனவியல், புள்ளிவிபரவியல்	E
பௌ 03	கணிதம், பௌதிகவியல், புள்ளிவிபரவியல்	E
பௌ 04	கணிதம், இரசாயனவியல், முகாமைத்துவ விஞ்ஞானம்	E
பௌ 05	கணிதம், பௌதிகவியல், முகாமைத்துவ விஞ்ஞானம்	E
பௌ 06	கணிதம், கணனி விஞ்ஞானம், புள்ளிவிபரவியல்	E
பௌ 07	கணிதம், கணனி விஞ்ஞானம், பௌதிகவியல்	E
பௌ 08	கணிதம், புள்ளிவிபரவியல், பொருளியல்	E
பௌ 12	கணிதம், பிரயோக கணிதம், கணனி விஞ்ஞானம்	E
பௌ 13	கணிதம், பௌதிகவியல், இலத்திரனியல்	E
பௌ 14	கணிதம், பிரயோக கணிதம், முகாமைத்துவ விஞ்ஞானம்	E
பௌ 15	கணிதம், பௌதிகவியல், பொருளியல்	E

பொதுப்பாடச்சேர்க்கைகள்

உயிரியல் விஞ்ஞானம் மற்றும் பௌதீக விஞ்ஞானப் பிரிவுகள்

கோட்	பாடபரப்பு	மொழிமூலம்
பொ 01	இரசாயனவியல், சுற்றாடல் முகாமைத்துவம் மற்றும் வனவியல், முகாமைத்துவ விஞ்ஞானம்	E
பொ 02	இரசாயனவியல், பௌதிகவியல், பொலிமர் விஞ்ஞானமும் தொழில்நுட்பமும்	E

பீ.எஸ்.சீ பொது பட்டப் படிப்பு நிகழ்ச்சித்திட்டம் (90 Credits - SLQF Level 5)
BSc

மூன்று வருடங்களைக் கொண்ட இப் பட்டப்படிப்பானது சிறந்த முடிவுகளை எடுக்கும் திறன் தலைமைத்துவ ஆற்றல் ஆகியவற்றைக் கொண்ட பட்டதாரிகளை உருவாக்க வடிவமைக்கப்பட்டதாகும். இப் பாடநெறியின் அனைத்து மாணவர்களும் முதல் இரு வருடங்களில் அவர்கள் தேர்ந்தெடுக்கும் விடயங்களுடன் தொடர்புபட்ட அடிப்படை அலகுகளை (Course Unit)கற்பது அத்தியவசியமாகும். தேசிய விஞ்ஞான தொழில்நுட்ப மற்றும் தொழில் தேவைகள் தொடர்பாக தகுந்த பலதரப்பட்ட விடயங்கள் மூன்றாவது வருடத்தின் போது அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன.

பீ.எஸ்.சீ கௌரவ பட்டப் படிப்பு நிகழ்ச்சித்திட்டங்கள் (120 Credits - SLQF Level 6)
BSc Honours in Specializing Field, BSc Honours in Chemistry

தேர்ந்தெடுக்கப்படும் விடயமொன்றிற்கு உரியதாக பேராசிரியர்கள், ஆய்வாளர்கள், மற்றும் துறையியளாளர்கள் ஆகுவதற்கு எதிர்பார்க்கின்ற மாணவர்கள் தொடர்பாக நான்கு வருட கௌரவப் பட்டப் பாடநெறிகள் வழங்கப்படுகின்றன. இதன் போது முதலாவது இரு வருடங்களுள் உயர்மட்டத்திறமைகள் தோற்றுகின்ற மாணவர்கள் கீழே குறிப்பிட்டுள்ள விடயங்களுக்குரிய கௌரவப் பட்டப்பாடநெறிகள் தொடர்பாக தேர்ந்தெடுக்கப்படுவர்.

அவ் விடயங்களானது, இரசாயனவியல், பல்லுருப்பு இரசாயன விஞ்ஞானம், கைத்தொழில் இரசாயனவியல், உயிரியல், நீர் வாழ் வளங்கள் முகாமைத்துவம், கணனியியல், சுற்றாடல் முகாமைத்துவம் மற்றும் வனவியல், கணிதம், பிரயோக கணிதம், தாவர உயிர் தொழில்நுட்பம், நுண் உயிரியல், புள்ளிவிபரவியல், பௌதிகவியல் மற்றும் விலங்கியலாகும்.

இதற்கு மேலதிகமாக உணவு விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பம்,விளையாட்டியல் மற்றும் முகாமைத்துவ பாடநெறியும் இதன் கீழ் எடுக்கப்படும்.

விஸ்திரப்படுத்தப்பட்ட பட்டப் படிப்பு நிகழ்ச்சித்திட்டம் (120 Credit - SLQF Level 6)
BSc Honours in Applied Sciences

இந்நான்கு வருட கௌரவ பட்டப்பாடநெறி, தொழில்சார்ந்த துறையில் (Industry) நுழைய விரும்பும் மாணவர்களுக்கென பிரத்தியமாக உருவாக்கப்பட்டதாகும்.

பொது பட்டப்படிப்பில் சிறந்த பெறுபேறுகளை வெளிக்காட்டிய மாணவர்கள் நான்காம் வருடத்தில் இக் கௌரவ பட்டப்படிப்பில் நுழையலாம். நான்காம் வருட இரண்டவது இடை வருடம் இறுதியடைகின்ற போது கீழே குற்ப்பிட்டுள்ள விடயங்களுடன் தொடர்புபட்டதாக மற்றும் கட்டாயமான Inplant Trainning/Internship அல்லது ஆய்வுக் கருத்திட்டமென்றை புரணப்படுத்தல் வேண்டும்.

அவ்விடயங்கள்,

தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பம்(ICT), பல்லுருப்பியல் மற்றும் தொழில்நுட்பம்(PST), முகாமைத்துவயியல், பொருளியல், உயிரியல், தாவர உயிரியல்(PBT), கணிதம், புள்ளியியல், இரசாயனவியல், பௌதிகவியல், கணனியியல்,சுற்றாடல் முகாமைத்துவம் மற்றும் வனவியல், நீர் வாழ் வளங்கள் முகாமைத்துவம் மற்றும் விலங்கியலாகும்.

மேலதிக தகவல்களுக்கு இவ் இணையதளத்தினை பார்வையிடலாம்.
http://science.sjp.ac.lk/

பீ.எஸ்.சீ பௌதீகவியல் மற்றும் தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பம்
(90 Credits - SLQF Level 5)

பௌதீக விஞ்ஞானம் - தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பம் வகைப்படுத்தலின் கீழ் க.பொ.த. (உ.த) கூட்டுக் கணிதம் மற்றும் பௌதீகவியல் மற்றும் தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பம் (ICT), கற்ற மாணவர்களுக்கு ஸ்ரீ ஜயவர்தனபுரப் பல்கலைக்கழக பிரயோக விஞ்ஞான பீடத்தின் மூன்றுவருட விஞ்ஞானமானி, பௌதீகவியல் மற்றும் தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பம் பட்டத்திற்கு உட்படுத்தப்படும். இம் மாணவர்களுக்கு கீழே குறிப்பிடப்பட்டுள்ள விடய தேர்மானமொன்றை கற்றிட சந்தர்ப்பமளிக்கப்படும்.

இம் மாணவர்கள் பொது விடயப்பரப்பின் கீழ் கணிதம் மற்றும் பௌதிகவியல் கற்கின்றதால் திறன் அடிப்படையில் கணிதம் மற்றும் பௌதிகவியல் விசேட பட்டம் கற்பதற்கு சந்தர்ப்பம் ஏற்படும்.

குறியீட்டு இலக்கம்	விடயம்	மொழிமூலம்
I01	கணிதம், பௌதிகவியல், தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பம்	E
I02	கணிதம், பௌதிகவியல், இலத்திரனியல்	E

Faculty of Management Studies and Commerce

முகாமைத்துவ கற்கைகள், வணிகவியல் பீடம்

உயர் கல்வித் துறையில் முகாமைத்துவப் பாடவிதானம் அறிமுகப்படுத்துவதில் முன்னோடியாக 1959 ஆம் ஆண்டில் இரு பட்டப்பாடநெறிகளை முன் வைக்கப்பட்டு உருவான முகாமைத்துவ கற்கைகள் மற்றும் வர்த்தக விஞ்ஞான பீடம் 1972ம் ஆண்டு முதல் சுதேசிய மற்றும் உலகளாவிய ரீதியில் முகாமைத்துவ அறிஞர்களை உருவாக்கும் முன்னோடி உயர் கல்வி நிறுவனமாகும். நிகழ் காலத்தில் முகாமைத்துவ துறையுடன் தொடர்புபட்ட நான்கு வருட 12 பட்ட பாட நெறிகளை முன்வைக்கின்ற முகாமைத்துவ கற்கைகள் மற்றும் வர்த்தக விஞ்ஞான பீடம் வர்த்தக உலகத்தின் தொழில் தேவைக்கேற்றபடியாக நவீன தொழில்நுட்ப திறமைகளுடன் கூடிய அறிவால், திறமையால், ஆற்றலால் மற்றும் ஒழுக்கத்துடன் கூடிய உள்நாட்டு மற்றும் உலகமட்ட தொழில் சந்தையிடம் வழங்கப்படுகிறது.

முகாமைத்துவ கற்கைகள் மற்றும் வர்த்தக விஞ்ஞான பீடத்தால் முன்வைக்கப்படும் பட்டப்பாடநெறிகள் தொடர்பான குறுகிய விபரங்கள் கீழே வழங்கப்பட்டுள்ளது.

கணக்கியலில் விஞ்ஞானமானி (விசேட) பட்டப்பாட நெறி

1991 இல் அறிமுகப்படுத்தப்பட்ட கணக்கியலில் விஞ்ஞானமானி (விசேட) பட்டப்பாட நெறி இலங்கையில் போன்றே வெளிநாடுகளில் அரச மற்றும் தனியார் நிறுவனங்களில் கணக்கியல், நிதி முகாமைத்துவம் மற்றும் ஏனைய அதனுடன் தொடர்பான துறைகளில் முகாமைத்துவ பதவிகள் ஏற்பதற்கு தேர்ச்சியுடனான, வகைமுறை வாய்ப்புடைய பட்டதாரிகள் (Resourceful Graduates) உருவாக்கல் முக்கிய பேரெண்ணமாகும். இப் பாட நெறியை கற்கின்ற இளமானி பட்டதாரிகளுக்கு கணக்கியல் தொடர்பாக கணனிப் பாவனை, சர்வதேச கணக்கியல் தேர்ச்சிகள் மற்றும் கணக்கியல் ஆய்வுத்திறன்கள் உட்பட கணக்கியலுடன் தொடர்புபட்ட பிரதான மற்றும் துணைத் துறைகள் தொடர்பாக பரந்த விழிப்புணர்வை வழங்கவும் மேலும் இப் பாட நெறி ஊடாக தலைமைத்துவ மற்றும் ஆளுமைத்தேர்ச்சி (Personal Capacity Skills) தொடர்பாடல் திறன் உட்பட அடிப்படையான (பொதுவான) திறமைகள் (Generic Skills) மேல் முன்னேற்றல் தொடர்பாகவும் விசேட கவனம் செலுத்தப்படும். பட்ட பாட நெறியின் ஒரு கட்டாயாமான பகுதியான கணக்கு வைப்பு மற்றும் நிதி தொடர்பான இரண்டு வருட கால செயல்முறை பயிற்சித்திட்டம் மூலம் அகலமான தேர்ச்சியை பெற்றிட இளமானிப் பட்டதாரிகளுக்கு முடிவதோடு அதன் மூலம் கணக்கு வைப்பு பட்டதாரிகளின் தொழில் வாய்ப்புகளும் அதிகரித்திடும். மேலும், இலங்கையினுள் செயற்படுகின்ற தேசிய மற்றும் சர்வதேச தொழில் ரீதியான கணக்கு வைப்பு நிறுவனங்களால் நடாத்தப்படுகின்ற பரீட்சைகளில் கணக்கியலில் விஞ்ஞானமானி (விசேட) பட்டம் தொடர்பாக கருதத்தக்க அளவிலான விடுவிப்புகள் (Exemptions) வழங்கப்பட்டுள்ளன. உள்நாட்டு மற்றும் உலகமட்டத்தில் காணப்படுகின்ற கணக்கியல் மற்றும் நிதித்துறையின் தொழில்வாய்ப்புகள் இப் பாடநெறியை கற்கின்ற பட்டதாரிகளுக்கு இருக்கின்றன.

வியாபார நிர்வாகத்தில் விஞ்ஞானமானி (விசேட) பட்டப்பாட நெறி

1959ம் ஆண்டு முதல் 50 வருடங்களுக்கும் மேற்பட்ட வரலாற்றைக் கொண்டிருக்கும் இலங்கையில் வியாபார முகாமைத்துவ துறையினுள் முன்னோடி கற்கை பாடநெறி என்ற வகையில் வர்த்தக நிர்வாக (விசேட) பட்டப்பாட நெறி இலங்கை மாணவ மாணவிகளிடையில் பெரும் வரவேற்பை கொண்ட பாட நெறியாக கருதப்படுகிறது. வர்த்தக முகாமைத்துவ கோட்பாடுகள் மற்றும் தேர்ச்சி தொடர்பாக தலைசிறந்த முகாமைத்துவம் இளமானிப் பட்டதாரிகளுக்கு வழங்கப்பட்டு வர்த்தக உலகில் தலைமைத்துவ பாத்திரங்களை நன்றாக நிறைவேற்றிடவும் அவர்களின் பண்புசார் மற்றும் சமூக பிரச்சனைகள் தொடர்பாக இருதய துடிப்பை ஏற்படுத்திடவும் இயக்காற்றலுடனான வர்த்தக சூழலுடன் வெற்றிகரமான முறையில் இணைந்திடவும் வியாபார நிர்வாக (விசேட) பட்டப்பாட நெறியால் முக்கிய கவனம் செலுத்தப்படும். வியாபார முகாமைத்துவத்தில் அடிப்படையான மற்றும் தேர்வுக்குரிய பாடங்கள் போன்றே முகாமைத்துவ திட்ட விறுவிறுப்புடைய பயிற்சி மற்றும் ஆய்வுக் கருத்திட்டமொன்றால் பாட நெறியின் விடயப்பரப்பு அமைந்துள்ளது. இப் பாட நெறியினைக் கற்கின்ற இளமானி பட்டதாரிகளுக்கு வியாபார முகாமைத்துவ கோட்பாடுகள் தொடர்பாக உறுதியான அடித்தளம் போன்றே காலத்திற்குரிய வர்த்தக தேர்ச்சிகள் தொடர்பான பலதரப்பட்ட தொழில்கள் தொடர்பாக முன்னே செல்வதற்காக வேண்டிய வாய்ப்பும் கிடைக்கிறது.

வியாபார நிர்வாகத்தில் விஞ்ஞானமானி (வியாபார பொருளியல்) (விசேட) பட்டப்பாட நெறி

தேசிய மற்றும் உலகப் போக்குகளினுள் முகாமைத்துவ பின்னணியைக் கொண்ட பொருளாதார விஞ்ஞானிகள் தொடர்பான தேவை கருதப்படும் வருடம் 2002 இல் வியாபார நிர்வாகத்தில் விஞ்ஞானமானி வியாபார பொருளியல் (விசேட) பட்ட பாடநெறியை இலங்கையில் முகாமைத்துவம் தொடர்பான உயர் கல்வித் துறைக்கு முதலாவதாக அறிமுகப்படுத்தியது. ஆய்வுகள், பகுப்பாய்வுகள் தொடர்பாடல் குழுக்களாக செயற்படக்கூடிய தன்மை மற்றும் முடிவெடுத்தல் எனும் திறன்கள் வளர்ப்பதன் மூலம் முகாமைத்துவத்தில் பொருளியல் கோட்பாடுகளால் மற்றும் பாவனையால் வலுப்பெற்ற அரச, தனியார் தொழில்சார் சவால்களுக்கு முகங்கொள்ளக்கூடியவாறு பட்டதாரிகளை உருவாக்குவது இப் பாடநெறியின் முக்கிய குறிக்கோளாகும். இப் பாடநெறி வர்த்தக முகாமைத்துவம் மற்றும் பொருளியல் சார் விடயங்களில் பிரதான துறைகளின் இணைப்புகளுடன் கூடியதாக இருப்பதோடு வர்த்தக முகாமைத்துவ விடயங்களுக்கு மேலதிகமாக பொருளியல் விடயங்களான Managerial Economics, Financial Economics, Money & Banking, Development Economics, Econometrics, International Economics மற்றும் Project Management எனும் பாடங்களை கொண்டமைந்துள்ளது. இதற்கு மேலதிகமாக தொழில் வாய்ப்புத் திறமைகள் வளர்த்தக்கொள்ளல் பொருட்டு மென் திறன்கள் (Soft Skills) மற்றும் தொடர்பாடல் திறன் வளர்ச்சி நிகழ்ச்சிகள் செயற்படுத்தப்படும். நிதி மற்றும் வங்கியல் துறையிலும் அதற்கு மேலதிகமாக வர்த்தக மற்றும் பொருளாதார கொள்கைகள் திட்டமிடல் பகுப்பாய்வு மற்றும் ஆய்வுகள் போன்ற துறையிலும் அதி விசேட தொழில் வாய்ப்புகள் இப் பாடநெறியைக் கற்கின்ற இளமானிப் பட்டதாரிகளுக்கு கிடைக்கின்றது.

வர்த்தகத்தில் விஞ்ஞானமானி (விசேட) பட்டப்பாட நெறி

1973ம் ஆண்டு முதல் 4 தசாப்தங்களுக்கும் மேற்பட்ட வரலாற்றுடனான நான்கு வருட கால பட்டப் பாட நெறியாக அறிமுகப்படுத்திக் கொண்ட வர்த்தகத்தில் விஞ்ஞானமானி (விசேட) பட்டப்பாட நெறி மூலம் நிகழ் காலத்தின் போது காணக்கூடிய மற்றும் எதிர் காலத்தின் போது ஏற்படக்கூடிய உலக மட்டப் போக்குகளைக் கவனத்தில் கொண்டு கோட்பாட்டு ரீதியான மற்றும் செயல்முறை அறிவு இளமானி பட்டதாரிகளுக்கு நல்ல முறையில் புரிந்து கொள்ளக்கூடிய விதமாக திட்டமிடப்பட்டுள்ளவொரு பட்டப் பாடநெறியாகும். முகாமைத்துவ துறையில் காணக்கூடிய போட்டிகரமான தொழில்வாய்ப்புகள் தொடர்பாக இளமானிப் பட்டதாரிகளின் அறிவு, ஆற்றல், மற்றும் மனப்பாங்குகள் மேல் முன்னேற்றம் அடையும் பொருட்டு வர்த்தகத்தில் விஞ்ஞானமானி (விசேட) பட்டப்பாட நெறி பலதரப்பட்ட விரயத் துறைகளின் இணைப்புடன் கூடியதாக அபிவிருத்தி செய்யப்பட்டுள்ளதோடு முக்கியமாகவே கணக்கியல், நிதி முகாமைத்துவம், வங்கியியல், பொருளியல், வர்த்தக கணிதம், வர்த்தக புள்ளிவிபரவியல், சர்வதேச நிதி மற்றும் வியாபாரம், வரிவியல் மற்றும் கணக்காய்வு எனும் விடயங்களின் பங்கேற்பு போன்றே இறுதி கற்கையாண்டில இறுதி செய்வதிற்குள் பேராய்வு (Research) மற்றும் உள்ளகப் பயிற்சி (Internship) ஊடாக இப் பாடநெறி ஒரு விசேட பாடநெறியாக அமைந்துள்ளது. உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு தொழில் ரீதியான பரீட்சைகளின் போது கிடைக்ககூடிய விடுவிப்புகள் இப் பாடநெறியை கற்கின்ற இளமானிப் பட்டதாரிகளுக்கு கிடைப்பதோடு ஏனைய முகாமைத்துவ பாடநெறிகள் ஊடாக ஆவரணிக்கப்படுகின்ற அனைத்து பிரதான விடயப் பரப்புகளும் இப் பாடநெறி மூலம் ஆவரணிக்கப்படுவதால் அகலமான இடைவெளியினுள் பரந்திருக்கும் தொழில் வாய்ப்புகள் ஏராளமான உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு ரீதியில் இப் பட்டதாரிமார்களுக்கு திறக்கப்பட்டுள்ளது.

பி.எஸ்சி. சொத்து முகாமைத்துவம் மற்றும் மதிப்பீட்டில் விஞ்ஞானமானி (விசேட) பட்ட நிகழ்ச்சித் திட்டம்:

1986ம் ஆண்டில் அறிமுகப்படுத்திய சொத்து முகாமைத்துவம் மற்றும் மதிப்பீட்டில் விஞ்ஞானமானி (விசேட) பட்ட பாடநெறி நிகழ்காலம் வரையே சொத்து முகாமைத்துவம் மற்றும் மதிப்பீடு தொடர்பாக கோட்பாட்டு ரீதியான மற்றும் செயல்முறை நிபுணத்துவம் வழங்கப்படுகின்ற இப் பட்ட பாடநெறியினுள் மதிப்பீடு, சொத்து அபிவிருத்தி மற்றும் முகாமைத்துவம், நகர மற்றும் பிராந்திய திட்டமிடல், காணிகள் மற்றும் தொடர்புபட்ட நகர பொருளியல், சொத்துகள் விற்பனை, சொத்துகள் நிதி, தற்சார்பு ஆய்வறிக்கைகள் ஏற்பாடு செய்தல் போன்றே தொடர்புபட்ட நிறுவனங்களில் விடயம்சார் பயிற்சி பெற்றுக் கொடுக்கப்படும். மிகவும் முன்னேற்றமான வசதிகள் மற்றும் விதிமுறைகள் உபயோகித்திடப்பட்டு தகவல் தொழில்நுட்பம் மற்றம் ஆங்கில மொழி தொடர்பாக தேர்ச்சியினை கைப்பற்றி கொடுக்கப்பட்டு மேற்படியான குறிக்கோள்களை புரணப்படுத்திக் கொள்வதற்கு இயலுமாகின்ற விதமாக பட்டப் பாட நெறியை திட்டமிடப்பட்டுள்ளது. தொடர்புபட்ட பயிற்சியை இறுதி செய்கின்ற பட்டதாரிகளுக்கு இலங்கை மதிப்பீட்டாளர் நிறுவனத்தில் மற்றும் இலங்கை நகர நிர்மாணிப்பாளர் நிறுவனத்தில் அங்கத்துவம் பெற்றிட முடிவதோடு சொத்து முகாமைத்துவம் மற்றும் மதிப்பீட்டில் விஞ்ஞானமானி (விசேட) பட்ட பாடநெறி இங்கிலாந்தில் அரச மதிப்பீட்டாளர்களின் நிறுவனத்தால் ஏற்கப்பட்டுள்ள பாடநெறியாகும் (Accredited by the Royal Institution of Chartered Survoyers - "RICS UK") உரிய பயிற்சி இறுதி செய்த பட்டதாரிகளுக்கு அவ் "RICS UK" நிறுவனத்தின் அங்கத்துவம் பெற்றிட இயலுமாக இருப்பதோடு அவ் அங்கத்துவம் பெறக்கூடிய தென் ஆசியாவின் ஒரே பட்டப் பாட நெறியாகவும் இருக்கின்றது. வெற்றிகரமான பட்டதாரிகளுக்கு மதிப்பீட்டாளர்கள், சொத்து முகாமையாளர்கள் மற்றும் இத்துறைகளில் ஏனைய பலதரப்பட்ட தொழில் வாய்ப்புகள் தொடர்பாக இலங்கையினுள் போன்றே வெளிநாடுகளிலும் பெரும் கேட்பு இருக்கின்றது.

நிதி விஞ்ஞானமானி (விசேட) பட்டப் பாடநெறி :

2001ம் ஆண்டில் அறிமுகப்படுத்திய நிதியில் விஞ்ஞானமானி (விசேட) பட்ட பாடநெறியின் பிரதான நோக்கமாக இருப்பது நிரந்தரமாகவே இரட்டைப்படுத்தப்படும் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு நிதி சந்தையின் சவால்களுக்கு முகங்கொள்ளக்கூடிய திறன்வாய்ந்த, நிபுணத்துவமுடைய தொழிலொன்றில் இலக்கநிதிப் பட்டதாரிகளை உருவாக்குவதாகும். இப் பாடநெறி கூட்டு நிதி (Corporate Finance), முதலீடு மற்றும் முதலீட்டு கொத்து முகாமைத்துவம் (Investment and Portfolio Management) வியாபார மதிப்பீடுக் கோட்பாடுகள் மற்றும், செயல்முறைப் பாவனை(Business Valuation Theory and Applications), வங்கி முகாமைத்துவம் (Bank Management) சர்வதேச நிதி முகாமைத்துவம் (International Finance Management), ஆபத்து முகாமைத்துவம் மற்றும் காப்புறுதி Risk Management & Insurance), செத்துக்கள் நிதி (Real estate Fiance) மற்றும் நிதித்துறையில் ஆராய்வு கருத்திட்டம்(Research Project in Finance) போன்ற நிதிசார் விடய பிரதான பிரிவுகள் சார்ந்த விடயங்களை கொண்டமைந்ததாகும். இவ்வாறே மாணவர்களுக்கு இறுதி வருடத்தின் போது நிதித் துறையில் நிறுவன பயிற்சியின் ஊடாக வேலை உலகத்திற்கு காலடி எடுத்து வைப்பதற்கு செயல்முறை அனுபவங்கள் பெறுவதற்கு மற்றும் விடயம் சார்ந்த அறிவைப் பெற்றிட இயலுமாவதோடு நிதித் துறையில் ஆய்வுத் திறனை வளர்த்துக் கொள்வதற்கும்

சந்தர்ப்பம் ஏற்படும். நிதித் துறையில் முகாமைத்துவ நிறைவேற்ற தொழில்கள் தொடர்பாக உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் காணக்கூடிய கிராக்கி காரணமாக நிதியில் விஞ்ஞானமானி (விசேட) பட்டதாரிகளுக்கு தொழில் வாய்ப்புகள் ஏராளமாக இருக்கின்றன.

மனித வளங்கள் முகாமைத்துவத்தில் விஞ்ஞானமானி (விசேட) பட்ட பாடநெறி:

1994ம் ஆண்டில் அறிமுகப்படுத்திய மனித வளங்கள் முகாமைத்துவத்தில் விஞ்ஞானமானி (விசேட) பட்ட பாடநெறியின் பிரதான நோக்கமாக இருப்பது மனித வளங்கள் முகாமைத்துவத்தை விசேடமாக்கப்பட்டு வர்த்தக நிர்வாகத்துக்குரிய கோட்பாடு மற்றும் தேர்ச்சிகளால் இளமானிப் பட்டதாரிகளை அபிவிருத்தி செய்வதற்கு வேலை உலகத்தில் சிறந்தவர்களாக பரிவர்த்தனை செய்வதில் தேவையான அறிவு ஆற்றல்கள் மற்றும் மனப்பாங்குகள் வளர்த்தலாகும். ஆங்கில மொழி தொடர்பான நிபுணத்துவம், தகவல் தொழில்நுட்பத்தில் நிபுணத்துவம், நற்பண்புகளின் வளர்ச்சி மற்றும் நல்லவொரு சரிதத்தை அபிவிருத்தி செய்தல் போன்றே நிறுவனங்களில் மனித வள அபிவிருத்தி, நிறுவனம்சார் அபிவிருத்தி மற்றும் சுய அபிவிருத்திக்கு பங்களிப்பு வழங்கக்கூடிய பட்டதாரிகள் இப்பட்டப் பாடநெறி மூலம் எதிர்பார்க்கப்படும்.இறுதியாண்டின் இரு இடை வருடங்களினுள் பட்டப் பாடநெறியின் தேவைப் பாடாக பயிற்சி (internship) வழங்குவதற்கும் மனித வள முகாமைத்துவம் தொடர்பான சுய ஆய்வறிக்கை முன்வைக்கும் தேவை காரணமாக இப் பாடநெறியினை கற்கின்ற இளமானிப் பட்டதாரிகளுக்கு அமைப்புகள் முகாமைத்துவம் மற்றும் மனித வள முகாமைத்துவம் தொடர்பான சரியான நிபுணத்துவத்தை கைப்பற்றிட இயலுமாகும். அரச மற்றும் தனியார் துறை சார் நிறைவேற்று மற்றும் முகாமைத்துவ தொழில்வாய்ப்புகள் அடிப்படையாகக் கொண்டு இப்பட்டப் பாடநெறி நிர்மானிக்கப்பட்டுள்ளதோடு வர்த்தக ஆலோசனை மற்றும் சுய தொழில்வாண்மையின் கீழ் மனிதவள முகாமைத்துவம் தொடர்பான சுய ஆய்வறிக்கை முன்வைக்கும் தேவையும் காரணமாக இப் பாடநெறியினைக் கற்கின்ற இளமானிப் பட்டதாரிகளுக்கு அமைப்புகள் முகாமைத்துவம் மற்றும் மனித வள முகாமைத்துவம் தொடர்பான சரியான நிபுணத்துவத்தை கைப்பற்றிட இயலுமாகும். அரச மற்றும் தனியார் துறைசார் நிறைவேற்று மற்றும் முகாமைத்துவ தொழில் வாய்ப்புகளை அடிப்படையாகக் கொண்டு இப் பாடநெறி நிர்மாணிக்கப்பட்டுள்ளதோடு வர்த்தக ஆலோசனை மற்றும் சுய தொழில் வாண்மையின் கீழ் மனித வள முகாமைத்துவத்திற்குரிய நிறுவனங்கள் உருவாகுவதற்கும் பட்டதாரிகளுக்கு சந்தர்ப்பம் ஏற்படும்.

சந்தைப்படுத்தல் முகாமைத்துவத்தில் விஞ்ஞானமானி (விசேட) பட்ட பாடநெறி:

1994ம் ஆண்டில் அறிமுகப்படுத்திய சந்தைப்படுத்தல் முகாமைத்தவத்தில் விஞ்ஞானமானி (விசேட) பட்டப் பாடநெறி அதி சிறந்த சந்தைப்படுத்தல் முகாமைத்துவ கல்வியினூடாக உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு வர்த்தக தேவைப்பாடுகளை நிறைவேற்றிட தேவையான சந்தைப்படுத்தல் முகாமைத்துவ அறிவு, ஆற்றல்கள் மற்றும் மனப்பாங்குகள் இளமானிப் பட்டதாரிகளிடம் வளர்த்திடும் நோக்குடன் முன்வைக்கப்பட்டுள்ள ஒரு பட்ட பாடநெறியாகும். சந்தைப்படுத்தல் முகாமைத்துவத்துக்குரிய நல்லதோர் கற்றல் சூழலினுள் வர்த்தக நிறுவனங்களுக்கு போன்றே, ஒட்டு மொத்த சமூகத்தையும் பாதிக்கத்தக்க விதமாக சந்தைப்படுத்தல் வினைத்திறனுக்கு மற்றும் உற்பத்தித் திறனுக்கு பெறுமதிகள் சேர்த்திடக் கூடிய ஆக்கபபூர்வமான சவாலான மற்றும் மாற்றியமைத்திடும் பிரதிநிதிகளாக நியமனம் பெறத்தக்க ஆற்றலைக் கொண்ட (Change Agents) சந்தைப்படுத்தல் முகாமைத்துவ பட்டதாரிகள் இப் பாடநெறிக்கூடாக உருவாக்கப்படும். இப் பட்ட பாடநெறி மூலம் சந்தைப்படுத்தல் முகாமைத்துவத்திற்குரிய கோட்பாடு அறிவு போன்றே தொழில் தேர்ச்சியின் அனுபவங்கள் அடையக்கூடிய விதமாக பரிபூரணமான சந்தைப்படுத்தல் அறிவைப் பெற்றுக் கொள்ளல் பொருட்டு ஓராண்டு பயிற்சி (Internship) வழங்கப்படுவதோடு இயக்காற்றலைக் கொண்ட உள் நாட்டைப் போன்றே உலக மட்ட வர்த்தக சந்தர்ப்பங்களால் ஏற்படுகின்ற நிறைவேற்று மற்றும் முகாமைத்துவ தொழில் வாய்ப்புகள் கைப்பற்றுவதற்கான ஆற்றல் பட்டதாரிகளினுள் காணமுடியும்.

முகாமைத்துவத்தில் (அரச) விஞ்ஞானமானி (விசேட) பட்ட பாடநெறி::

1959ம் ஆண்டு முதல் சுமார் 5 தசாப்த காலத்திற்கு மேற்பட்ட காலமாக அரச மற்றும் தனியார் எனும் இரு துறைகளிலும் முகாமைத்துவ அறிவாலும், திறமைகளாளும் நிறம்பிய நிபுண பட்டதாரிகள் உருவாக்கல் பொருட்டு முகாமைத்துவத்தில் (அரச) விஞ்ஞானமானி (விசேட) பட்ட பாடநெறியினை அறிமுகப்படுத்தியதோடு அரச முகாமைத்துவம் தொடர்பாக இலங்கையில் காணப்படும் ஒரேயொரு பட்டப்பாடநெறி இதுவாகும். இப் பாட நெறியின் விடயப் பரப்பிற்காக இணை விடயத் துறை மற்றும் வெகு விடயத்துறை மற்றும் வெகு விடயத்துறை சுபாவத்திலான அமைப்புகள் உள்ளடங்குகின்றன. இவற்றில் உட்படுகின்ற பரிபூரனமான செயல்முறைப்பயிற்சிப்பகுதிகள் ஊடாக அரச மற்றும் தனியார் துறைகளில் வேலை சூழலுக்கு இளமானி பட்டதாரிகளை பயிற்றுவிக்க செய்யப்படும். முதலாவது மற்றும் இரண்டாவது வருடங்களில் இப் பாடநெறியின் விடயங்கள் ஈர் மொழி (சிங்களம்-ஆங்கிலம்) மூலங்களால் வழங்கப்படுவதோடு நான்காவது வருடத்தின் போது ஆங்கில மொழி மூலமாக மாத்திரமே வழங்கப்படும். உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு தொழிட் சந்தையில் அரச தனியார் மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களின் சிறப்பைத் தோற்றுவிக்கக்கூடிய அறிவு, ஆற்றல் மற்றும் மனப்பாங்கு இருப்பதனால் தொழில் சந்தையின் தொழில் வாய்ப்புகளை இலகுவாக கைப்பற்றிடக்கூடிய வாய்ப்பு முகாமைத்துவத்தில் (அரச) விஞ்ஞானமானி (விசேட) பட்டதாரிகளுக்கு இருக்கின்றன.

வர்த்தக தகவல் முறைமையில் விஞ்ஞானமானி (விசேட) பட்ட பாடநெறி::

2011ம் ஆண்டில் அறிமுகப்படுத்திய வர்த்தக தகவல் முறைமையில் விஞ்ஞானமானி (விசேட) பட்ட பாடநெறி மூலம் முகாமைத்துவத்துவ மற்றும் தகவல் தொழில்நுட்ப எண்ணக்கருக்கள் போன்றே வர்த்தக தகவல் தொழில்நுட்ப பயன்பாடுகள் தொடர்பாக பரந்த அறிவு மற்றும் தோர்ச்சியை ஏற்படுத்திக் கொடுப்பதன் மூலம் தகவல் முறைமையில் விசேசத்துவமாக்கலுடனான முகாமைத்துவ துறையில் தொழில்கள் தொடர்பாக விருப்பமுடைய மற்றும் இயல் திறமுடைய இளமானி பட்டதாரிகளை அபிவிருத்தி செய்து வர்த்தக உலகத்தில் காணப்படும் நிகழ் காலத்து மற்றும் உள்ளாற்றலுடனான தொழில் வாய்ப்புகள் பட்டதாரிகள் உருவாக்கல் பிரதான போரெண்ணமாகும். பல்கலைக்கழகத்திற்கு உள்ளாகின்ற இளமானி பட்டதாரிகள் தொடர்பாக நடாத்தப்படுகின்ற பாடநெறிகளிடையில் இப்பாடநெறி விசேடத்துவம் பெறுவது முகாமைத்துவத்துவம் மற்றும் தகவல் தொழில்நுட்பம் எனும் பாடத்துறைகள் இரண்டினதும் இணைப்புடன் கூடிய அறிவை வழங்குகின்ற ஒரேயொரு பட்ட பாடநெறி இப் பாடநெறியாக இருக்கும் காரணமாகவேயாகும். முகாமைத்துவத்துவம்,

தகவல் முறைமை மற்றும் தகவல் தொழில்நுட்பம் எனும் துறைகளின் கோட்பாடுசார் மற்றும் செயல்முறைசார் அறிவு பட்டதாரிகளுக்கு பெற்றுக் கொடுக்க முடியாதாக திட்டமிடப்பட்டுள்ள இப் பட்டப் பாடநெறி இளமானி பட்டதாரிகளை செயன்முறை வேலை சூழலுக்கு பயிலவித்தல் தொடர்பாக உள்ளீடுகள் அபிவிருத்தித் திட்டமொன்று மற்றும் ஆறு மாத கால செயன்முறைப் பயிற்சி உள்ளடங்கும். உள்நாட்டு மற்றும் உலக தொழில் சந்தையினுள் அரச மற்றும் தனியார் துறைகளில் உருவாகின்ற தகவல் தொழில்நுட்ப முகாமைத்துவ தொழில் சந்தர்ப்பங்களை இலகுவாக கைப்பற்றிக் கொள்வதற்கு இப்பட்டப் பாடநெறியை கற்கும் பட்டதாரிகளுக்கு இயலுமாவதோடு மென்பொருள் அபிவிருத்தித் துறையில் தொழில்வாண்மையாளர்களாக புதிய வியாபாரங்கள் ஆரம்பிக்கவும் தேர்ச்சியை இப் பாடநெறி மூலம் ஏற்படுத்திடப்படும்.

தொழிற்பாடு மற்றும் தொழில்நுட்ப முகாமைத்துவத்தில் விஞ்ஞானமானி (விசேட) பட்ட பாடநெறி:

2008ம் ஆண்டில் அறிமுகப்படுத்திய தொழிட்பாடு மற்றும் தொழில்நுட்ப முகாமைத்துவத்தில் விஞ்ஞானமானி (விசேட) பட்டப் பாடநெறியின் முக்கிய குறிக்கோளானது தொழிட்பாடு மற்றும் தொழில்நுட்ப முகாமைத்துவத்துக்குரிய தத்துவங்கள், சிக்கல்கள், கோட்பாடுகள் மற்றும் முகாமைத்துவ கோட்பாடுகளின் உள்ளீடுகள் ஆவரணிக்கப்பட்டு உற்பத்தி, சேவைகள் மற்றம அரச நிறுவனங்களில் தொழிட்பாடு தொழில்நுட்ப முகாமைத்துவ அறிவு மற்றும் ஆற்றலுள்ள பட்டதாரிகளை உருவாக்குவதாகும். வெற்றிகரமான முகாமையாளரொருவராக வேண்டிய கோட்பாடு ரீதியான அறிவு போன்றே செயல்முறைப் பயிற்சி நெறியின் மூலம் இளமானிப்பட்டதாரிகளுக்கு வர்த்தக உலகம் தொடர்பாக அனுபவங்கள் பெற்றுக் கொள்வதற்கு சந்தர்ப்பம் இருப்பதோடு சிக்கல்கள் தீர்த்திடும் நிபுணத்துவம், பகுப்பாய்வான முறையில் சிந்திக்கும் திறன், தொடர்பாடல் நிபுணத்துவம் மற்றும் அதி நவீன தொழில்நுட்பம் மற்றும் முகாமைத்துவத்துவ கோட்பாடுகள் பாவனையை வளர்த்திடப்படும். உள்நாட்டில் போன்றே உலக மட்ட தொழில் சந்தையினுள் உற்பத்தி, சேவைகள், மற்றும் பொது பிரிவுகளில் காணப்படுகின்ற நிறைவேற்று மற்றும் முகாமைத்துவ தொழில் சந்தர்ப்பங்கள் இலகுவான முறைகளில் கைப்பற்றிட இப்பட்டப் பாடநெறியை கற்கும் பட்டதாரிகளுக்கு சந்தர்ப்பமுண்டு.

தொழில் முயற்சியாண்மை விஞ்ஞானமானி (விசேட) பட்டப் பாடநெறி:

2010 ஆம் ஆண்டில் அறிமுகப்படுத்திய அதாழில் முனைவில் விஞ்ஞானமானி (விசேட) பட்டப்பாடநெறி மூலம் தன்னம்பிக்கை, ஆக்கத்திறன், ஆபத்துகளுக்கு முகங்கொள்ளல், விடாமுயற்சி , தாங்கிப்பிடிக்கும் தன்மை, தொலை நோக்குடன் கூடியமை, சந்தர்ப்பங்களைத் திரட்டிப் போக்குதல், சுற்றாடல் தொடர்பான கூர்வுணர்வுடைமை, முன் இயக்க நிலமை போன்ற அடிப்படையான திறன்கள் ஏற்படுத்துவதன் மூலம் இளமானிப் பட்டதாரிகளின் தொழில் முனைச் சிந்தனையை வளர்ப்பதன் மூலம் நாட்டு மக்களின் தொழில்வான்மை சிந்தனை ஊடாக செய்திட முடியும் எனும் நேர்மறையான மனப்பாங்குகளை வளர்த்தல் மூலம் வியாபாரங்களை ஆரம்பித்தல், மற்றும் அதன் மூலம் தொழில் பயன்பாடு ஆற்றல் உயருவதோடு இது தேசிய ஒரு நாட்டின் பொருளாதார மற்றும் சமூக பொது நலனுக்கு நல்லதோர் பக்க பலமாகும். எமது பட்டதாரிகள் ஏனைய முகாமைத்துவ பட்டதாரிகளிடையில் பல விதமாக வேறுபடுவதோடு இவர்கள் தொழில் தேடுபவர்களாக உருவெடுப்பதற்கு பதிலாக தொழில் உருவாக்குவோர்களாக பட்டதாரிகளுக்கு சந்தர்ப்பமளித்தல் இப் பட்டப்பாடநெறியின் முக்கிய பேரென்னமாக இருப்பதுடன் துறையினுள் நிலவுகின்ற தொடர்பு செல்வாக்குகள் மற்றும் இருக்கக்கூடிய வளங்கள் மூலம் புதிய வியாபாரங்கள் ஆரம்பிப்பதற்கு பட்டதாரிகளுக்கு உதவியளித்தல் இப் பட்டப் பாட நெறியின் ஒரு விசேட அம்சமாகும். சமூக மற்றும் பொருளாதார அபிவிருத்தியை துரிதப்படுத்துவதற்கு பங்களிக்கும் தொழில்முயலுனர்கள் மற்றும் தொழிலவாண்மை முகாமையாளர்களை உருவாக்குவதன் மூலம் சந்தையினுள் தொழில் தேடுவதற்கு பதிலாக சந்தையை வெற்றி பெறுவதும், தொழில் சந்தையினுள் தொழில் சந்தர்ப்பங்களை ஏற்படுத்துவதும் இப் பாடநெறியினைக் கற்ற பட்டதாரிகளிடமிருந்து எதிர்பார்க்கப்படுகின்றது.

கலைப்பீடம்

கலைப்பீடம் அதன் மாணவர்களுக்கு பரந்த அடிப்படையிலான பட்டதாரி கல்வி நிகழ்ச்சித் திட்டங்களை வழங்குகிறது. பீடத்தினால் பின்வரும் பட்டதாரி நிகழ்ச்சித் திட்டங்கள் வழங்கப்படுகிறது.

1. கலைமாணி (பொது) பட்டம்
2. கலைமாணி (விசேட) பட்டம்

பொது பட்ட நிகழ்ச்சித்திட்டத்தின் காலம் மூன்று வருடங்களும், மற்றும் விசேட பட்ட நிகழ்ச்சித் திட்டத்திற்கு இது நான்கு வருடங்களுமாகும்.

விசேட பட்ட நிகழ்ச்சித் திட்டம் மானிடவியல், தொல்பொருளியல், குற்றவியல், பௌத்த கலாச்சாரம், பௌத்த தத்துவம், வியாபாரப் புள்ளி விபரவியல், நடனம், பொருளியல், ஆங்கில மொழி, ஆங்கில இலக்கியம், பிரஞ்சு, புவியியல், ஹிந்தி, சரித்திரம், மக்கள் தொடர்பாடல், சங்கீதம், பாளி, தத்துவம் மற்றும் மனோதத்துவம், அரசியல் விஞ்ஞானம், சமஸ்கிருதம், சிங்களம், சமூகவியல் மற்றும் சமூகவியல் புள்ளிவிபரம்.

பொதுபட்ட நிகழ்ச்சித் திட்டம் மானிடவியல், தொல்பொருளியல், குற்றவியல், பௌத்த கலாச்சாரம், பௌத்த தத்துவம், வியாபாரப் புள்ளிவிபரவியல், நடனம், பொருளியல், ஆங்கிலம், புவியியல், ஹிந்தி, சரித்திரம், மக்கள் தொடர்பாடல், சங்கீதம், பாளி, தத்துவம் மற்றும் மனோதத்துவம், அரசியல் விஞ்ஞானம், சமஸ்கிருதம், சிங்களம், சமூகவியல் மற்றும் சமூகப்புள்ளிவிபரம். ஒவ்வொரு பட்டதாரி மாணவனும் ஆங்கிலம், இலங்கை சமூகமும் பௌத்த கலாச்சாரமும், நியம சிங்கள பாவனை ஆகிய பாடங்களை கட்டாயமாக தொடர வேண்டும். இதற்கு மேலதிகமாக ஆங்கில மொழி, தகவல் தொழில் நுட்பம், முகாமைத்துவ அடிப்படைகள் மற்றும் ஜப்பானிய மொழி ஆகியவற்றில் தராதர பத்திர பயிற்சி நெறிகளை தொடர்வதற்கு வசதிகள் வழங்கப்பட்டுள்ளது.

பட்ட நிகழ்ச்சித் திட்டங்கள் ஒரு தவணை அடிப்படை முறைமையில் கற்பித்தல் மற்றும் தொடர் மதிப்பீடு மற்றும் தவணை இறுதிப்பரீட்சைகள் என நடத்தப்படுகிறது. ஒவ்வொரு கற்கையும் 45 மணித்தியாலங்களுக்கு ஒரு கற்கை என்ற வீதத்தில் கல்விசார் வேலை 15 கிழமைகளைக் கொண்ட தவணை முறையில் கற்பிக்கப்பட்டும், பரீட்சையும் நடாத்தப்படுகிறது.

பட்ட நிகழ்ச்சித் திட்டங்களின் சில பயிற்சி நெறி பிரிவுகளின் கற்பிக்கும் மொழி ஆங்கிலம் ஆகும்.

தொழில்நுட்ப பீடம்

இலங்கை பல்கலைக்கழக வரலாற்றிலே முதலாவது முழுமையான தொழில்நுட்பவியல் பீடம் ஜயவர்த்தன பல்கலைக்கழகத்தில் 2016 ஆம் ஆண்டு ஸ்தாபிக்கப்பட்டது.

தொழில்நுட்ப பீடத்தினுடாக முழுநேர கௌரவ பட்டப்படிப்பு பாடநெறிகள் மூன்று க.பொ.த. உயர்தரத்தில் தொழில்நுட்பவியல் பாடத்தினைப் பயின்ற மாணவர்களுக்காக மட்டுமே இடம்பெறுகின்றன.
இதன் மொழி மூலம் ஆங்கிலம் ஆகும். அத்தகைய பாடநெறிகளாவன:

(i) பொறியியல் தொழில்நுட்ப கௌரவ பட்டம் [BET(Hons)]
(ii) உயிர் அமைப்புத் தொழில்நுட்ப கௌரவ பட்டம் [BBST(Hons)]
(iii) தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப கௌரவ பட்டம் [BICT(Hons)]

இந்த பீடத்தின் மூலம் நடாத்தப்படும் பட்டப்படிப்பு பாடநெறிகள் 4 வருட பாடநெறிகளாக இடம்பெறும் அதேவேளை, முதலாவது வருடத்தில் முதலாவது இரண்டாவது அரை வருடங்கள் அடிப்படை பாடநெறிகளாக இடம்பெறும். மிகுதியாகவுள்ள 6 அரை வருடங்களுள் ஒரு அரை வருடம் தொழில்நுட்ப பயிற்சிக்காக வேண்டி ஒதுக்கப்படும்.

பொறியியல் தொழில்நுட்ப கௌரவ [(BET(Hons)] பட்டம் ஏழு (07) பிரதான துறைகளைக் கொண்டமைந்ததாகும். அவை

(i) மின்சக்தி மற்றும் சுற்றாடல் தொழில்நுட்பம்
(ii) இயந்திரவியல் தொழில்நுட்பம்
(iii) கட்டட அமைப்பு செயன்முறை தொழில்நுட்பம்
(iv) தொல் பொருள் தொழில்நுட்பம்
(v) மோட்டார் வாகன தொழில்நுட்பம்
(vi) பொலிமர் செயன்முறை தொழில்நுட்பம்
(vii) பூமி சம்மந்தமாக செயன்முறை தொழில்நுட்பம்

உயிரியல் தொழில்நுட்ப விசேட பட்ட பாடநெறியானது நான்கு விசேட பகுதிகளைக்கொன்டது. அவை

(i) உணவு செயன்முறை தொழில்நுட்பம்
(ii) விவசாய மற்றும் சுற்றாடல் தொழில்நுட்பம்
(iii) கைத்தொழில் உயிர் செயன்முறை தொழில்நுட்பம்

தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப கௌரவப் [BICT(Hons)] பாடநெறி முக்கிய (3) துறைகளை கொண்டமைந்ததாகும். அதாவது

(i) பல்லூடக தொழில்நுட்பம்
(ii) வலைப்பின்னல் தொழில்நுட்பம்
(iii) மென்பொருள் தொழில்நுட்பம்

பொறியியற் பீடம்

பொறியியற் விஞ்ஞானமாணி பட்டப் பாடநெறி

ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் பொறியியல் பீடம் மூலம் வழங்கப்படுகின்ற பொறியியல் விஞ்ஞானமாணிப் பட்டம் நான்கு வருட காலத்தைக் கொண்டதாகும். இப் பட்டப் பாடநெறிக்கான மாணவர்களை சேர்க்கப்படுவது, பொறியியல் விஞ்ஞானம் (MPR) பிரிவின் கீழ் ஆகும். இப்பட்டப் பாடநெறியானது எட்டு (8) அரை கல்வியாண்டுகளை கொண்டமைந்ததாகும். இதில் முதலாவது இரு (2) அரை கல்வியாண்டுகள் அனைத்து மாணவர்களுக்கும் பொதுவான அரை கல்வியாண்டுகளாக செயற்படும். ஒரு கல்வியாண்டு இருபது (20) வார காலத்தினுள் நடைபெறுவதோடு இக் காலத்திற்கு மாணவர்களின் பரீட்சை / மதிப்பீடு காலங்களும் உட்படுகின்றன. இரண்டாவது அரை கல்வியாண்டு இறுதியில் ஒவ்வொரு மாணவர்களின் பற்றுக்கு ஏற்றப்படியாக மற்றும் முதலாம் வருட கல்விசார் திறமைகளின் பிரகாரம் மாணவர்களை நான்கு (4) பாடவிதானங்களுக்கு வெவ்வேறாக தேர்ந்தெடுக்கப்படும். விசேட பாடவிதானங்கள் தொடர்பாக விதந்துரைக்கப்பட்டுள்ள பிரதான பாடத் துறைகளாக இருப்பது -

(i) சிவில் பொறியியல்
(ii) கணினி பொறியியல்
(iii) மின் மற்றும் இலத்திரனியல் பொறியியல் மற்றும்
(iv) இயந்திர பொறியியல் எனும் துறைகளாகும்.

ஐந்தாவது (5) கல்வியாண்டு முதல் மாணவர்கள் பிரதான பாட துறைக்கு உட்படும் மற்றும் பொறியியல் துறையின் புதிய போக்குகளுக்குரிய துணை பாடத் துறைகள் பாடங்கள் கற்பதற்கும் சந்தர்ப்பம் வழங்கப்படும். துணை பாடத் துறைகள் பாடங்கள் கற்பதற்கு இருக்கக்கூடிய குறைவான வரையறையான சந்தர்ப்பங்கள் தொடர்பாக தேர்ந்தெடுத்தல், மாணவர்களின் முதலாம் மற்றும் இரண்டாம் வருடத்தினுள் தோற்றப்படுகின்ற கல்விசார் ஆற்றல் மற்றும் ஒவ்வொரு மாணவரின் விருப்பத்திற்கேற்றபடியாகும். தற்போது மாணவர்களுக்கு தேர்ந்தெடுக்கக்கூடிய துணை பாடத் துறைகள் தொடர்பான பாடங்களாக இருப்பது -

(i) உயிர் மருத்துவப் பொறியியல் (Biomedicl Engineering)
(ii) கட்டடச் சேவை பொறியியல் (Building Service Engineering)
(iii) சுற்றாடல் பொறியியல் (Environmental Engineeering)
(iv) தரவுகள் முகாமைத்துவம் (Data Management)
(v) உயர் செயலாக்கம் கணனிப் பாவனை (High Performance Computing)
(vi) மெகாரொனிக்ஸ் பொறியியல் (Machatronics Engineering)

(vii) உற்பத்திப் பொறியியல் (Manufacturing Engineering)
(viii) தொடர்பாடல் பொறியியல் (Telecommunication Engineering)
(ix) மென்பொருள் பொறியியல் (Software Engineering)
(x) அமைப்பு பொறியியல் (Structural Engineering)
(ix) போக்குவரத்துப் பொறியியல் (Transportation Engineering)

எனும் பாடங்களாகும்.
ஒவ்வொரு பிரதான பாடநெறி தொடர்பாகவும் விடயப் பரப்பினை சரியான முறையில் கற்றதன் பின்னர் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு பொறியியல் கற்றல் சார்ந்த தரத்திற்கேற்ப மற்றும் மாணவர்களுக்கு தனக்கு ஏற்கத்தக்க விதமான கல்விசார் அலுவல்களைக் கொண்டதாக ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

மருத்துவ விஞ்ஞான பீடம்

மருத்துவமாணி மற்றும் அறுவைசிகிச்சைமாணிப் பட்டம்
மருத்துவமானி மற்றும் அறுவைசிகிச்சைமானிப் பட்டப் பாடநெறி 5 ஆண்டு பாடநெறியாக இருப்பதோடு ஒரு கல்வியாண்டு 10 வாரங்களைக் கொண்ட மூன்று பருவங்களைக் கொண்டமைந்துள்ளது. இப் பாடநெறியை மூன்று கட்டங்களுக்கு பிரிக்கப்பட்டுள்ளது. சிகிச்சையகப் பயிற்சி மூன்றாவது ஆண்டில் ஆரம்பமாகுவதோடு இறுதியாண்டினுள் கற்றல் பூரணமாகவே மருத்துவசாலைகள் அடிப்படையாகக் கொண்டு நடைபெறும். மொத்த கற்கை பாடநெறிக்கான மொழிமூலம் ஆங்கிலமாகும்.

விஞ்ஞானமாணி தாதிப்பட்டம்
விஞ்ஞானமானி தாதிப்பட்ட பாடநெறி 120 திறமைப் பெறுமானங்களைக் கொண்டிருப்பதோடு ஒரு கல்வியாண்டு 10 வாரங்களைக் கொண்ட மூன்று பருவங்களைக் கொண்டமைந்துள்ளது. மருத்துவசாலைகள் அடிப்படையாகக் கொண்ட சிகிச்சையாக தாதிப் பயிற்சி முதலாவது வருடத்திலிருந்து ஆரம்பமாகும். மொத்த கற்கை பாடநெறிக்கான மொழிமூலம் ஆங்கிலமாகும்.

மருத்துவ இரசாயன விஞ்ஞானத்தில் விஞ்ஞானமாணிப் பட்டம்
மருத்துவ இரசாயன விஞ்ஞானத்தில் விஞ்ஞானமானிப் பட்டப் பாடநெறி 120 திறமைப் பெறுமானங்களைக் கொண்டிருப்பதோடு ஒரு கல்வியாண்டு 10 வாரங்களைக் கொண்ட மூன்று பருவங்களைக் கொண்டமைந்துள்ளது. மருத்துவசாலைகள் அடிப்படையாகக் கொண்ட சிகிச்சையாக தாதிப் பயிற்சி முதலாவது வருடத்திலிருந்து ஆரம்பமாகும். மொத்த கற்கை பாடநெறிக்கான மொழிமூலம் ஆங்கிலமாகும்.

ஔடதமாணிப் பட்டம்
ஔடதமானிப் பட்டம் பாடநெறி 120 திறமைப் பெறுமானங்களைக் கொண்டிருப்பதோடு ஒரு கல்வியாண்டு 10 வாரங்களைக் கொண்ட மூன்று பருவங்களைக் கொண்டமைந்துள்ளது. பட்டப் பாடநெறிக்கு கற்பித்தல், செயல்முறை வகுப்புக்கள் மற்றும் ஆராய்வுத்திட்டங்கள் போன்றே அரச துறைசார் நிறுவனங்களால் வழங்கப்படுகின்ற செயல்முறை பயிற்சியொன்றும் உட்படுகிறது.

மனித உயிரியலில் விஞ்ஞானமாணிப் பட்டம்
மனித உயிரியலில் விஞ்ஞானமானிப் பட்டம் மூனறை வருட பாடநெறியாகும். விஞ்ஞான பீடத்தில் உயிரியல் விடயப்பரப்பில் முதலாவது வருடத்தைப் பூரணப்படுத்திய மாணவ மாணவிகளுக்கு மாத்திரம் இப்பாட நெறி தொடர்பாக விண்ணப்பிக்க முடியும். மொத்த கற்கை பாடநெறிக்கான மொழிமூலம் ஆங்கிலமாகும்.

களனிப் பல்கலைக்கழகம்		
கற்கைநெறி	**பாடச்சேர்க்கை (விதித்துரைக்கப்பட்டவிடத்து)**	**க./மொ**
மருத்துவம்	-	E
பேச்சும் செவிமடுத்தல் விஞ்ஞானமும்	-	E
கலை	-	S
சமாதானமும் முரண்பாடு தீர்த்தலும்	-	E
முகாமைத்துவம்	-	S/E
வணிகவியல்	-	S/E
முகாமைத்துவமும் தகவல் தொழினுட்பமும் (MIT)	-	E
உயிரியல் விஞ்ஞானம்	-	S/E**
பௌதீக விஞ்ஞானம்	-	S/E**
சூழல் பேணலும் முகாமைத்துவமும்	-	E
மொழி பெயர்ப்பு கற்கைகள்	-	E/S
மென்பொருள் பொறியியல்	-	E
திரைப்படமும் தொலைக்காட்சி கற்கைகள்	-	S
பொறியியல் தொழினுட்பம்	-	E
தகவல் தொடர்பாடல் தொழினுட்பம்	-	E
பௌதீக விஞ்ஞானம் - ICT	-	E
ஆங்கிலத்தை இரண்டாம் மொழியாக கற்பித்தல் (TESL)	-	E
கணணி விஞ்ஞானம்	-	E
நிதி பொறியியல்	-	E

** 1ஆம் ஆண்டில் 1ஆம் பருவத்தின் போது கற்கை நெறிகள் சிங்களத்தில் / ஆங்கிலத்தில் நடாத்தப்படுவதுடன், இரண்டாவது பருவத்திலிருந்து ஆங்கிலத்தில் நடாத்தப்படுகின்றன.

களனி பல்கலைக்கழகத்தின் நூற்கல்வி நிகழ்ச்சித் திட்டங்கள் 'கற்கை நெறி அலகு முறையொன்றில்' இயங்குகிறது. அதாவது கற்கை நெறி முடிவில் பரீட்சைகளுடன், இரண்டு கல்வியாண்டுக்குள் ஒரு "மொடியுலராக்கப்பட்ட" திறமை அடிப்படை முறைமை பாடங்கள் தெரிவினை கூடியளவு இலகுவாக செய்வதற்கு வடிவமைக்கப்பட்ட பலவகையான பாடச் சேர்க்கைகளை இது வழங்குகிறது. ஒரு கற்கை நெறி அலகானது ஒரு பாடத்தின் மொடியு'ல் ஆகும். அது திறமை பெறுமானத்தை கொண்டிருக்கும். ஒரு திறமையானது, தர புள்ளி சராசரியினை கணிப்பதற்கு பாவிக்கப்படும் நேர அடிப்படையிலான பரிமாண அளவையாகும். பாடநெறி மொடிய'லானது 4 மட்டங்களில் ஒழுங்குபடுத்தப்படும். அவையாவன மட்டம் 1, மட்டம் 2, மட்டம் 3 மற்றும் மட்டம் 4.

பொதுபட்ட மாணவர்கள் தரம் 1, 2, 3 இற்குரிய கற்கை நெறி மொடிய'ல்களை கற்க வேண்டும். 3இற்குரிய கற்கை நெறி மொடிய'ல்களை கற்க வேண்டும். 3 பாட சேர்க்கைகள், தொடர்/துணை கற்கை நெறியலகுகளில் இருந்தும் அல்லது இரண்டு பாட சேர்க்கைகள் தொடர்/துணை கற்கை நெறியலகுகளில் இருந்தும் உயிரியல் விஞ்ஞான, பௌதிக விஞ்ஞான துறைகளிற்கு தெரிவு செய்யனும். அனைத்து உயிரியல் விஞ்ஞான மாணவர்களும் கட்டாய கற்கை நெறி அலகுகளையும் கற்க வேண்டும். ஏனைய பீடங்களிலிருந்து அரையாண்டு ஒன்றிற்கு இரண்டு திறமைகளிற்கு ஒரு மாணவன் அதியுயர்வான கற்கை நெறியலகுகளாக பெறுமானங்களை இரண்டு திறமை பெறுமானங்களிற்கு மேற்படாது ஆகக்கூடுதலாக 6 திறமைகள் வரைக்கும் கற்கை நெறி அலகுகளை எடுக்க முடியும். ஒரு வருடத்திற்கு குறைந்தது 30 திறமைப் பெறுமானங்களை தெரிவு செய்யலாம்.

களனிப் பல்கலைக்கழகத்தின் கலை பட்டப்படிப்பு பாடநெறிகள் மானுடவியல் மற்றும் சமுதாய விஞ்ஞான பீடங்கள் மூலம் நடாத்தப்படுகின்றன. கலை பட்டப்படிப்பு பாடநெறிகளுக்காக களனிப் பல்கலைக்கழகத்தில் பதிவுசெய்த பின் க.பொ.த. உயர் தரத்தில் படித்த பாடங்கள் மற்றும் Z-Score அளவின்படி இரு பீடங்களுக்கும் மாணவர்கள் பிரிக்கப்படுவர். பட்டப் படிப்புக்காக மாணவர்கள் தெரிவுசெய்யப்பட்ட பீடத்தில் ஆகக் குறைந்தது இரு பாடங்கள் தெரிவுசெய்தல் வேண்டும்.

மானிடவியல் பீடம்

மானிடவியல் பீடத்தின் கலைமாணி (விசேட) பட்ட கற்கைநெறியில் பின்வரும் பாடநெறிகள் போதிக்கப்படுகின்றன.

ஆங்கிலத்துறை	ஆங்கிலம்
நவீன மொழிகள் துறை	பிரெஞ்சு, ஜேர்மன், ஜப்பான், ரஷியன், சைனிஷ், கொரியன்
பாளி மற்றும் பௌத்த கற்கைகள் துறை	பாளி, பௌத்த தத்துவவியல், பௌத்த கலாசாரம்
மேற்கத்தைய தொன்மைக் கலாசாரம் மற்றும் கிறிஸ்தவ கலாசார துறை	மேற்கத்தைய தொன்மைக் கலாசாரம் (கிரேக்க மற்றும் உரோம்) கிறிஸ்தவ கலாசாரம்
நுண்கலைத் துறை	கட்புலக் கலைகளும் வடிவமைப்பும் (வரைதலும் உருவகப்படுதலும்), அரங்கேற்றக் கலைகள், (நடனமும் இசை), உருவக் கலைகள் (புகைப்படவியல்), திரைப்படவியல் மற்றும் தொலைக்காட்சியியல், நாடகமும் அரங்கியலும்.
மொழியியல் துறை	மொழியியல், இரண்டாவது மொழியாக தமிழ் (TSAL)* மொழிபெயர்ப்பு படிமுறைகள்*
சமஸ்கிருதம் மற்றும் கிழக்குகற்கைகள் துறை	சமஸ்கிருதம், வாஸ்து சாஸ்திரம், இந்து சமயம்
சிங்களத்துறை	சிங்களம், இலக்கியத் திறனாய்வு
ஹிந்தி துறை	ஹிந்தி
ஆங்கில மொழி கற்பித்தல் துறை	இரண்டாவது மொழியாக ஆங்கிலம் கற்பித்தல் (TESL)

* இரண்டாவது மொழியாக தமிழ் மற்றும் மொழிபெயர்ப்பு முறைமைகள் ஆகிய பாடநெறிகள் கலைமாணி (பொது) பட்டநெறியில் மட்டுமே போதிக்கப்படும்.

மானிடவியல் பீடத்தால் நடாத்தப்படும் மேலே குறிப்பிடப்பட்ட கற்கைநெறிகளுக்குரிய பாடங்களைப் பயில்வதற்கு பின்வரும் தேவைப்பாடுகளைப் பூர்த்தி செய்தல் வேண்டும்.

- ✯ அரங்கேற்ற கலைகள் (இசை / நடனம்) கற்கைநெறியினைப் பயில்வதற்கு க.பொ.த. (உயர்தர) பரீட்சையில் குறிப்பிடப்பட்ட பாடத்தில் குறைந்தது சாதாரன (S) சித்தியினைக் கொண்டிருத்தல் வேண்டும்.
- ✯ ஆங்கில கற்றைநெறியினைப் பயில்வதற்கு க.பொ.த.(உயர்தர) பரீட்சையில் ஆங்கில மொழியில் அல்லது ஆங்கில இலக்கியத்தில் குறைந்தது விசேட சித்தியினைக் (C) கொண்டிருத்தல் வேண்டும்.
- ✯ பிரெஞ்சு மற்றும் ஜப்பானிய மொழி கற்கைநெறியினைப் பயில்வதற்கு க.பொ.த.(உயர்தர) பரீட்சையில் பிரெஞ்ச் அல்லது ஜப்பானிய மொழியில் குறைந்தது சாதாரண சித்தியினைக் (S) கொண்டிருத்தல் வேண்டும் அல்லது குறித்த துறையினால் நடாத்தப்படும் தகுதிகாண் பரீட்சையில் சித்தியடைதல் வேண்டும்.
- ✯ மொழிபெயர்ப்பு முறைமைகள் கற்கைகளிற்கு குறித்த துறையால் நடாத்தப்படும் தகுதிகாண் பரீட்சையில் சித்தியடைதல் வேண்டும்.
- ✯ இரண்டாவது மொழியாக ஆங்கிலம் கற்பித்தல் (TESL) கற்கைகளிற்கு க.பொ.த. (உயர்தர) பரீட்சையில் ஆங்கில மொழி மற்றும் ஆங்கில இலக்கியத்தில் குறைந்தது சாதாரண சித்தியினைக் (S) கொண்டிருத்தல்

மானிடவியல் பீடத்தினால் நடாத்தப்படும் ஏனைய கற்கைநெறிகளுக்கு குறித்த தேவைப்பாடுகள் எதுவுமில்லை.

சமூக விஞ்ஞான பீடம்

1. இளங்கலை (பொது) பட்டப் பாடநெறி - இப்பீடத்தின் மூலம் பொருளியல், அரசியல், சர்வதேச கற்றைகள், சமூக புள்ளிவிபரவியல், தொல்பொருளியல், வரலாறு, உளவியல், புவியியல், மெய்யியல், அபிவிருத்திக் கல்வி, மக்கள் தொடர்பாடல், நூலக மற்றும் தகவல் விஞ்ஞானம், உல்லாசத்துறை மற்றும் பண்பாட்டுவள முகாமைத்துவம், மானுடவியல், விளையாட்டு மற்றும் சரீர விஞ்ஞானக் கல்வி, சமுதாய விஞ்ஞானம், மனித உறவு மற்றும் ஊடக முகாமைத்துவம்

2. சமாதானமும் முரண்பாடு தீர்த்தலும் கௌரவ கலைமாணி - நான்கு ஆண்டு காலப் பட்டப்படிப்புப் பாடநெறியாக அமையும் இப்பாடநெறியைப் பின்பற்ற க.பொ.த. (உ.த.) பரீட்சையில் ஏதேனும் மூன்று பாடங்களில் தோற்றி பல்கலைக்கழக அனுமதியைப் பெற பெற்றுக் கொள்ளக் கூடிய ஆகக் குறைந்த தகைமையைப் பூர்த்தி செய்துள்ள விண்ணப்பதாரிகள் விண்ணப்பிக்கலாம். இவ்விளமாணி நிகழ்ச்சித்திட்டம் ஆங்கில மொழிமூலம் மட்டும் நடாத்தப்படும்.

3. இளங்கலை (சிறப்பு) பட்டப் பாடநெறி - மேலே (1) இல் குறிப்பிடப்பட்டுள்ள மானுடவியல் எனும் பாடம் தவிர்ந்த மற்றைய அனைத்துப் பாடங்களும்.

4. சர்வதேசக்கல்வி இளங்கலை (சிறப்பு) பட்டப் பாடநெறி - ஆங்கில மொழி மூலம் மட்டும் நடாத்தப்படும்.

சமூக விஞ்ஞான பீடத்தில் பாடங்களைத் தெரிவு செய்யும்போது ஆரம்ப அறிவுத்தகுதியாகப் பின்வருவன இருக்க வேண்டும்

1. சமூக புள்ளிவிபரவியல் பாடநெறியைப் பின்பற்ற க.பொ.த. (சா.த.) பரீட்சையில் கணிதப் பாடத்தில் குறைந்தது "C" சித்தி ஒன்றினைப் பெற்றிருத்தல்.
2. புவியியல் பாடநெறியினைக் கற்பதற்கு க.பொ.த. (உ.த.) பரீட்சையில் அப்பாடத்தில் "S" சித்தி ஒன்றினைப் பெற்றிருத்தல்.

சமூக விஞ்ஞான பீடத்தால் வழங்கப்படும் மற்றைய பாட நெறிகளைப் பின்பற்ற அடிப்படைத் தகைமைகள் அவசியமில்லை.

மானிட பண்பாட்டியல் மற்றும் சமூக விஞ்ஞான பீடங்களினால் முன்வைக்கப்படும் கலைமானி (பொது) பட்டப் படிப்புப் பாடநெறியானது மூன்று வருட கல்வியாண்டுகளையும் கலைமானி (விசேட) பட்டப் படிப்புப் பாடநெறியானது நான்கு வருட கல்வியாண்டுகளையும் கொண்டது. ஒரு கல்வியாண்டு இரு பருவங்களை (Semester) உள்ளடக்கியது. ஒரு பருவம் 15 கிழமைகளை உள்ளடக்கியது. பொது மற்றும் விசேட பட்டப்படிப்புப் பாடநெறிகள் விடய அலகு முறைக்கமைய அமையும். விடய அலகு என்பது பற்று (Credit) அந்தஸ்துள்ள பாட அலகுகளாகும். பட்டப்படிப்புப் பாடநெறியை முழுமைப் படுத்துவதற்கு பரிந்துரைக்கப்பட்ட பற்றுக்களின் (Credit) அளவு உண்டு. அதற்கேற்ப பாடநெறி அலகுகளைத் தேர்ந்தெடுப்பதற்கு மாணவர்களுக்குச் சந்தர்ப்பமுண்டு. பிரதான விடயப் பரப்பு இரண்டு அல்லது மூன்றினை அடிப்படையாகக் கொண்டு கலைமானி (பொது) பட்டப் படிப்பினைப் பின்பற்றலாம். தமது பாடப்பரப்பின் கட்டாயப் பாடநெறிகளைக் கற்பதற்கு மேலதிகமாக மானிட பண்பாட்டியல், சமூகவியல், வணிகவியல், முகாமைத்துவக் கற்கைகள் மற்றும் விஞ்ஞானம் போன்ற பீடங்களின் ஊடாக முன்வைக்கப்படும் சில பாடங்களையும் தமது விருப்பத்திற்கேற்ப தெரிவு செய்து கற்பதற்கும் சந்தர்ப்பம் அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ளது. கலைமானி விசேட பட்டப்படிப்புப் பாடநெறியினைப் பின்பற்றுவதற்கு முதல் வருட இறுதிப் பரீட்சையில் உயர்ந்த பெறுபேற்றினைப் பெற்றுக் கொள்ளல் அவசியமாகும்.

வர்த்தக முகாமைத்துவ கற்கைகள் பீடம் (வ.மு.க.பீ)
Faculty of Commerce and Management Studies (FCMS)

க.பொ.த.(உயர்தர) பரீட்சையில் வர்த்தகத் துறையில் தோற்றி சித்தியெய்திய மாணவர்களிடையே தெரிவுசெய்யப்பட்ட மாணவர்களுக்கு களனிப் பல்கலைக்கழக வர்த்தக முகாமைத்துவ கற்கைகள் பீடம் நான்கு வருடகாலப் பகுதி கொண்ட சிறப்பு இளமாணிக் கற்கைகளை வழங்குகின்றது. அவையாவன : வர்த்தகமாணி சிறப்பு கற்கைநெறி, வியாபார முகாமைத்துவமாணி மனிதவள முகாமைத்துவ சிறப்பு கற்கைநெறி, வியாபார முகாமைத்துவமாணி கணக்கீடு சிறப்பு கற்கைநெறி, வியாபார முகாமைத்துவமாணி சந்தைப்படுத்தல் சிறப்பு கற்கைநெறி மற்றும் வியாபார முகாமைத்துவமாணி நிதி சிறப்பு கற்கைநெறி என்பனவாகும். வர்த்தகமாணி சிறப்பு கற்கைநெறிக்கு தெரிவுசெய்யப்படுவோர் நேரடியாக வர்த்தக நிதி முகாமைத்துவ துறைக்கு உள்வாங்கப்படுகின்றனர். அதேவேளை முகாமைத்துவ கற்கைநெறிகளுக்கு தெரிவு செய்யப்படுவோர் உயர்தரத்தில் அவர்கள் பெற்ற Z புள்ளி அடிப்படையில் தெரிவுசெய்யப்பட்டு ஏனைய துறைகளுக்கு உள்வாங்கப்படுகின்றனர்.

வர்த்தகமாணி சிறப்பு கற்கைநெறி – Bachelor of Commerce (Special) Degree programme

வர்த்தகமாணி சிறப்பு கற்கைநெறியானது இன்றைய நவீன வியாபார உலகின் சவால்களை எதிர்கொள்ளக்கூடிய புத்திசாதுர்யமான, அறிவுடைய, வளம்மிக்க ஆற்றல் கொண்டோரை உருவாக்குகின்றது. சமகால வணிக உலகின் வெவ்வேரு பகுதிகளில் மாணவர்கள் தம்மை ஈடுபடுத்திக்கொள்வதற்குரிய வகையிலான நான்கு கற்கைநெறிகளை வணிகத் துறையானது அறிமுகப்படுத்தியுள்ளது. அவையாவன –

வர்த்தகமாணி சிறப்பு கற்கைநெறி
வர்த்தகமாணி சிறப்பு தொழில் உரிமைத்துவம்
வர்த்தகமாணி சிறப்பு வியாபாரத் தொழில்நுட்பம்
வர்த்தகமாணி சிறப்பு நிதி முகாமைத்துவம்

முதல் இரண்டு வருடங்களும் மேற்குறிப்பிடப்பட்ட நான்கு கற்கைநெறிகளும் பொதுவானவை. பின்பு மூன்றாம் வருடத்தில் இருந்து தாம் விரும்பிய கற்கைநெறியில் சிறப்படைவதற்கான வாய்ப்பு கிடைக்கின்றது. இரண்டாம் வருட ஆரம்பத்தில் திணைக்களமானது முறையான தெரிவுகளை மேற்கொண்டு தீர்மானித்து பொருத்தமான கற்கைநெறிகளை மாணவர்கள் பின்பற்றுவதற்கான வாய்ப்பை வழங்கும். அனைத்து கற்கைநெறிகளுக்குமான பாடத்திட்டங்களும் நான்கு வருடத்திற்கு ஒருமுறை மீளமைக்கப்படும். மற்றும் அனைத்து கற்கை நெறிகளும் ஆங்கிலமொழி மூலம் நடாத்தப்படும். மாணவர்கள் எந்த பாடப் பரப்பிற்கு தெரிவுசெய்யப்பட்டுள்ளாரோ அதில் திறமையான முறையில் செய்முறை பயிற்சியில் ஈடுபட வேண்டும். அவர்கள் பகல் நேர விரிவுரைகளில் கலந்துகொள்ள அவசியமில்லை.

வர்த்தகமாணி சிறப்பு கற்கைநெறி

வர்த்தகமாணி சிறப்பு கற்கைநெறியானது வணிக துறையின் பொரும்பகுதியை உள்ளடக்க்கூடிய வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது. இக் கற்கைநெறியானது வணிகம் மற்றும் முகாமைத்துவத்துடன் தொடர்புடைய நடைமுறை மற்றும் கோட்பாட்டு ரீதியான அறிவை வழங்குவதுடன் வணிகத் துறையில் தேசிய மற்றும் சர்வதேச ரீதியில் போட்டியிடும் ஆற்றல்களை கொண்டுள்ளோருக்கான தொழில் வாய்ப்புகளை உருவாக்குகின்றது.

வர்த்தகமாணி சிறப்பு தொழில் உரிமைத்துவம்

இக் கற்கைநெறியானது இலங்கையில் புதிய தொழில்களை உருவாக்குவதற்கான ஊக்கமளிப்பின் மூலமாக தனிப்பட்ட மற்றும் குழுவான முறையில் முயற்சியாண்மை தேர்ச்சியை வளர்ப்பதை நோக்கமாகக் கொண்டு உருவாக்கப்பட்டுள்ளது.மேலும் இப்பாடப்பரப்பின் அடிப்படையில் உயர்ந்த தொழில் முயற்சிகளை உருவாக்குவதற்கும் அவற்றை முகாமை செய்வதற்கு கோட்பாட்டு ரீதியான பரந்த அறிவையும் வழங்குகின்றது.

வர்த்தகமாணி சிறப்பு வியாபாரத் தொழில்நுட்பம்

நவீன வணிக உலகம் தொழில்நுட்பத்தில் பெரிதும் தங்கியுள்ளது. இக் கற்கைநெறியானது அனைத்து கலை உள்ளடக்கங்களையும் இணைத்துள்ளது. இப் பட்டப்படிப்பானது எதிர்காலத்திற்கான பட்டப்படிப்பு என்ற வகையில் நவீன வர்த்தக மற்றும் வணிக முகாமைத்துவ கற்கையோடு தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப பாவனையில் திறமையுள்ளவர்களாக உருவாக்குகின்றது.

வர்த்தகமாணி சிறப்பு நிதி முகாமைத்துவம்

வர்த்தகமாணி சிறப்பு நிதி முகாமைத்துவ கற்கைநெறியானது தேசிய மற்றும் சர்வதேச ரீதியில் கணக்கீடு மற்றும் நிதிசார் தொழில்களில் அதிகரித்துவரும் கேள்விகளுக்கு அமைய மாணவர்களை நெறிப்படுத்தும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது. மாணவர்களை இத் துறையில் மேலும் சிறப்புச் செய்வதற்கு அவசியமான அனைத்த பாடநெறிகளையும் உள்ளடக்கியுள்ளது. இக் கற்கைநெறியானது மாணவர்கள் இக் குறித்த துறையில் கோட்பாடு மற்றும் நடைமுறை ரீதியிலான அறிவைப் பெற்றுக் கொள்ளும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது.

வியாபார முகாமைத்துவமாணி மனிதவள முகாமைத்துவத்தில் சிறப்பு கற்கைநெறி

இக் கற்கைநெறியானது தற்கால வியாபார நிறுவனங்களினது தேவைகளை நிறைவு செய்து அவற்றின் இலக்கினை மக்கள் சார்ந்த முகாமைத்துவ பொறிமுறையீடாக எட்டுவதற்கு ஏற்றவகையில் மனித வளங்கள் சிறப்பு பட்டப்படிப்பானது வடிவமைக்கப்பட்டுள்ளது. இதன் நோக்கம் ஆழமான மனிதவள திறன்களையீட்டி ஆற்றல்மிக்க திறமையான பட்டதாரிகளை உருவாக்குதலாகும். இந்த நொக்கத்தை அடைந்து கொள்வதற்கு இக்கற்கை நெறியானது வணிக முகாமைத்துவத்தில் குறிப்பிட்ட உபபகுதிகளை உள்ளடக்கியுள்ளது. அவையாவன கணக்கீடு, நிதியியல், சந்தைப்படுத்தல், பொருளியல் மற்றும் முகாமைத்துவம், (மனிதவள முகாமைத்துவ செயன்முறைகள், மனிதவள முகாமைத்துவத்தின் சமகால போக்கு, ஆலோசனை மற்றும் தொழில் துறை தொடர்புகள், மனிதவள விருத்தி அலகுகள்) என்பனவாகும்.

இக்கற்கைநெறியானது கட்டாய மற்றம் விருப்பத்தெரிவு அலகுகளைக் கொண்டுள்ளது.

i. மனிதவள பராமரிப்பு
ii.மனிதவள விருத்தி - (வணிகத்துறையில் முக்கிய இடத்தை பெற்றுக் கொள்வதற்கான முழுமையான விருத்தியை அடைதல்)

இக்கற்கை நெறியானது சுதந்திரமான ஆராய்ச்சி ஆய்வுக் கற்கையினை உள்ளடக்கியதோடு செயன்முறைப் பயிற்சிக் கூறுகள், மனிதவள முகாமைத்துவம், மற்றும் மனிதவள விருத்தி அல்லது கோட்பாட்டு அறிவின் செயன்முறை அம்சங்களை வழங்கூடிய மனிதவளமல்லாத் துறைகளான கணக்கீடு, நிதியியல் முகாமைத்துவம், வங்கியியல் போன்ற உப அலகுகளையும் உள்ளடக்கியுள்ளது. மேலும் இக்கற்கைநெறியானது தொழில் உரிமைத்தவ உலகினுள் நுளைய ஆர்வமான மாணவர்களுக்கு சந்தர்ப்பங்களை வழங்குகிறது. இக்கற்கைநெறியினைத் தொடரும் மாணவர்கள் மனிதவள முகாமைத்துவம் அல்லது மனிதவள விருத்தி ஆகிய துறைகளில் மட்டுமன்றி உள்நாடு மற்றும் வெளிநாடுகளில் நிலவுகின்ற ஏனைய வணிக தொழிற்துறைகளான கணக்கீடு மற்றும் நிதியியல், சந்தைப்படுத்தல், வங்கியியல், பொதுத்துறை நிலைகள் மற்றும் கற்பித்தல் செயன்முறைகள் ஆகிய துறைகளில் தொழில்வாய்ப்புக்களை பெற்றக்கொள்வதற்கு ஏதுவாக அமைகின்றது.

மேலும் இத்துறையானது 1999ம் ஆண்டில் இருந்து முகாமைத்துவத் துறையுடன் தொடர்புடைய வணிக முகாமைத்துவமாணி (பொது) வெளிவாரி பட்டப்படிப்ப நிகழ்ச்சித்திட்டத்தை வழங்கி வருகிறது. அத்துடன் 2005ம் ஆண்டிலிருந்து மனிதவள முகாமைத்துவ உயர் பட்டப்படிப்புகளை வழங்கி வருவதுடன் 2014ம் ஆண்டில் இருந்து இத் துறையானது மனிதவள முகாமைத்துவ உயர் டிப்ளோமா கற்கைநெறியினையும் அறிமுகப்படுத்தியுள்ளது.

வியாபார முகாமைத்துவமாணி கணக்கீடு சிறப்பு கற்கைநெறி

கணக்கியல் பயன்படுத்தப்படும் துறைகளில் வேலைவாய்ப்பினை பெற்றுக்கொள்ள விரும்பும் மாணவர்களின் தேவைகளைக் கருத்திற்கொண்டு இக் கற்கைநெறி வடிவமைக்கப்பட்டுள்ளது. இலங்கையில் அரச தனியார் நிறுவனங்களில் காணப்படும் கணக்கியல் சம்பந்தப்பட்ட வேலைவாயப்பினை பட்டதாரிகள் பெற்றுக்கொள்ள ஏற்றவகையில் அவர்களுக்கு அறிவினையும், திறனையும், வழங்குவதை நோக்கமாக இக் கற்கைநெறி கொண்டுள்ளது. மேலும் அவர்களை கணக்கியலாளர்களாக அல்லது நிதித்துறையில் தொழில்புரிவோராக ஆக்குவதற்கு ஏற்றவகையில் அவர்களுக்கு பொருத்தமான செய்முறை பயிற்சிவாய்ப்பும் வழங்குகிறது. மேலும் இக் கற்கைநெறியானது வியாபார முகாமைத்துவ துறையில் பல்வேறு தொழில்வாய்ப்புக்களை மாணவர்களுக்கு வழங்குகின்றது.

நிதியியல் துறையில் வணிக முகாமைத்துவமாணி சிறப்பு பட்ட கற்கைநெறி

நிதியியல் துறையில் முகாமைத்துவமாணி சிறப்பு பட்ட நிகழ்ச்சித் திட்டமானது இலங்கை மற்றும் உலகளாவிய ரீதியில் நிதிச் சேவைகள் தொழிற்துறையால் உருவாக்கப்படும் மிகப் பெரிய வளர்ச்சியை எதிர்கொள்ளும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது. இதன் படி இவ் நிகழ்ச்சித் திட்டமானது, நிதியியல் மற்றும் பொறியியல் துறைகளிலுள்ள முக்கிய பாடங்களை உள்ளடக்கியுள்ளது. அவையாவன, அடிப்படை பெரு நிறுவன நிதியியல், சேவை முகாமைத்துவம் மற்றும் வள திட்டமிடல், முகாமைத்துவ் பொருளியல், அளவைப்பொருளியல், பணவியல் பொருளியல் முதலியனவாகும். நிதியியல் துறையில் முகாமைத்துவமாணி (சிறப்பு) பட்ட நிகழ்ச்சித் திட்டத்தை அமேரிக்காவின் பட்டய நிதி ஆய்வாளர்கள் நிறுவனமானது சீ.எப்.ஏ (CFA) அங்கீகாரமுடைய பட்டப்படிப்பாக ஏற்றுக் கொண்டுள்ளது. இருப்பினும் முதலாவது பட்டப்படிப்பு நிகழ்ச்சித்திட்டமானது இலங்கையில் சீ.எப்.ஏ அங்கீகாரத்துடன் நிதித் துறையில் ஆரோக்கியமான பங்காளித்துவத்தை அபிவிருத்தி செய்வதற்கும் பராமரிப்பதற்கும் வழிகோலுவதாய் அமைவதோடு உள்நாட்டு மற்றும் வெளி நாட்டு தொழிட்சந்தையுடன் மாணவர்கள் ஆரோக்கியமான நட்புரவை ஏற்படுத்த நுளைவாயிலாகவும் விளங்குகிறது.

பட்டப்படிப்பில் அனைத்து பாடப்பிரிவுகளிலும் தொழிற் பயிற்சியானது இறுதி ஆண்டு பாடத்திட்டத்தில் ஒரு கட்டாய பாடப்பிரிவு ஆகும். இது, இளங்கலை பட்டதாரி மாணவர்கள் நடைமுறைத் தொழிற் சூழலில் அனுபவத்தை பெற்றுக் கொள்ளவும் நாளாந்தம் துரிதமாக வளர்ந்துவரும் தொழிற் துறை பற்றிய அறிவினையும் வேலை வாய்ப்புகளையும் பெற்றக் கொள்ளவும் உதவுகிறது. மேலும் ஆய்வு முறையில், கருத்துருவாக்கம், கோட்பாடுகளை உள்வாங்கி தமது அறிவினை மாணவர்கள் விருத்தி செய்யம் முகமாக இறுதி வருட மாணவர்கள் யாவரும் கட்டாயமாக ஆய்வு ஒன்றை மேற்கொண்டு ஆய்வுக் கட்டுரையை சமர்ப்பிக்க வேண்டும்.

நிதியியல் துறையால் அறிமுகப்படுத்தப்படும் புதிய பட்டப்படிப்பு திட்டத்தின் பிரகாரம் முதல் இரு வருடங்கள் பின்வரும் மூன்று பட்டப்படிப்பு நிகழ்ச்சித்திட்டங்களுக்கும் ஓரே வகையில் விரிவுரைகள் அமையும். தமது கல்வி அடைவு மட்டங்களிற்கு ஏற்ப மூன்றாம் வருடத்திலிருந்து மாணவர்கள் பின்வரும் துறைகளில் ஓன்றைத் தெரிவு செய்து சிறப்பு பட்டத்தை பூர்த்தி செய்துகொள்ள முடியும்.

நிதியியல் துறையில் வணிக முகாமைத்துவமாணி கௌரவ பட்டம்

காப்புறுதித் துறையில் வணிக முகாமைத்துவமாணி கௌரவ பட்டம்

வங்கியியல் துறையில் வணிக முகாமைத்துவமாணி கௌரவ பட்டம்

காப்புறுதித் துறையில் வணிக முகாமைத்துவமாணி கௌரவ பட்டம்

இந்த பட்டப்படிப்பானது பட்டதாரிகள் விரைவாக மாறும் வியாபார உலகின் தேவைகளை பூர்த்தி செய்வதற்காக, காப்பீட்டில் சிறப்பு அறிவைப் பெறும் முகமாக அறிமுகப்படுத்தப்படுகின்றது. இந்தப் பாடத்திட்டத்தில் காப்புறுதித் துறையின் முக்கிய அம்சங்கள் உள்வாங்கப்பட்டுள்ளன. அவையாவன: எழுத்தாக்க முகாமைத்துவம், காப்பீட்டு கோரிக்கை முகாமைத்துவம், காப்பீட்டு இடர் முகாமைத்துவம், நடைமுறை மதிப்பீடு முதலியனவாகும். இந்த நிகழ்ச்சித்திட்டமானது எதிர்காலத்தில் காப்புறுதித் துறையில் தொழில்சார் அறிவு பெற்றுக்கொள்ளவும், தமது நிறுவனத்திற்கும் சமுதாயத்திற்கும் பெறுமதியான வகையில் செயலாற்றும் வகையிலும் வடிவமைக்கப்பட்டுள்ளது.

வங்கியியல் துறையில் வணிக முகாமைத்துவமாணி கௌரவ பட்டம்

இவ் வங்கியியல் துறைப்பட்டப்படிப்பு நிகழ்ச்சித்திட்டமானது வங்கியல் துறையின் எதிர்பார்ப்புகளுக்கமைவாக வடிவமைக்கப்பட்டுள்ளது. நான்கு ஆண்டுகளுக்கு மேலாக பெற்றுக் கொண்ட அறிவையும், திறமையையும், மனப்பாண்மையும நடைமுறையையும், நுண்ணறிவையும், பயன்படுத்தி வங்கித்துறையில் முக்கிய பங்கை வகிக்கக்கூடிய எதிர்கால வங்கியியல் நிபுணர்களை வழங்குவதே இந்த பட்டப்படிப்பு திட்டத்தின் இலக்காகும். இந்தப் பாடத்திட்டத்தில் வங்கித் துறையின் முக்கிய அம்சங்கள் உள்வாங்கப்பட்டுள்ளன. அவையாவன: கடன் முகாமைத்துவம், கருவவூல முகாமைத்துவம், வங்கியில்லா நிதி வர்த்தகம், முதலீடு மற்றும் அபிவிருத்தி வங்கியியல் முதலியனவாகும்.

நிதி பொறியியல் துறையில் வணிகமுகாமைத்துவமாணி கௌரவ பட்டநிகழ்ச்சித்திட்டம்

நிதி பொறியியல் துறையில் வணிக முகாமைத்துவமாணி பட்டமானது தனித்துவமான முறையில் வழங்கப்படுகின்றது. இந்த நிகழ்ச்சித்திட்டமானது மாறுகின்ற நிதியியல் சேவைத் துறையின் தேவைக்கமைவாக நிதி பொறியியல் துறையில் விசேட அறிவினைக் கொண்ட பட்டதாரிகளை உருவாக்கும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது. இப் பாடத்திட்டமானது எதிர்காலத்தில் இடர் முகாமைத்துவம், உற்பத்தி அபிவிருத்தி ஆகிய துறைகளில் திறன் வாய்ந்த நிபுணர்களை உருவாக்கும் வகையில் ஒழுங்கமைக்கப்பட்டுள்ளது. இந்தப் பாடத்திட்டத்தில் நிதியியல் கணித மாதிரிகள், நிதியியல் நுட்பங்கள், திறன் கணிதம் மற்றும் தேர்வுமுறை முதலிய நிதி பொறியியல் துறையின் முக்கிய அம்சங்கள் உள்வாங்கப்பட்டுள்ளன.

வியாபார முகாமைத்துவமாணி சந்தைப்படுத்தல் சிறப்பு கற்கைநெறி

களனி பல்கலைக்கழகத்தின் இளங்கலை வணிக முகாமைத்துவம் விசேட சந்தைப்படுத்தல் பட்டமானது சந்தைப்படுத்தல் முகாமைத்துவ திணைக்களத்தால் வழங்கப்படுகின்றது. இது களனிப் பல்கலைக்கழகத்தில் ISO 9001:2015 தரச்சான்றிதழ் பெற்ற வணிக முகாமைத்துவ திணைக்களமாகும். இந்த பட்டப்படிப்பானது தனியார் மற்றும் பொதுதுறை நிறுவனங்களினது வணிக சவால்களை வெற்றிகரமாக எதிர்கொள்ள தேவையான திறமையான மற்றும் ஆற்றல், தன்னம்பிக்கை கொண்ட உத்தியியலாளர்களை

உருவாக்குவதற்கு ஏற்ற வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது. இந்த நிலை பட்டப்படிப்பானது எட்டு அறிவுக்கலன்களைக் கொண்டுள்ளது. பிரயோக சந்தைப்படுத்தல், நுகர்வோர் நடத்தை மற்றும் ஆராய்ச்சி, அடையாள சூடு(Branding) மற்றும் தொடர்பாடல், கணக்கீடு மற்றும் நிதியியல், அளவறியும் நோக்குகள்(Quantitative Aspects), இலக்கமுறை சந்தைப்படுத்தல் (Digital Marketing) மற்றும் தகவல் தொழில்நுட்பம், உள்ளூர் மற்றும் உலகளாவிய வணிக சூழல் மற்றும் நவீன மேலாண்மை முறைகள் இந்த எட்டு அறிவுக்கலன்களும் ஒருகட்டமைக்கப்பட்ட ஒழுங்கில் மாணவர் மையப்படுத்தப்பட்ட கற்பித்தல், செயற்திறன் கற்றல் மற்றும் மதிப்பீட்டு முறைகள் மூலம் மாணவர்களை படிப்படியாக முன்னேற்றுவதை நோக்காக கொண்டது. மேலும் இளங்கலை பட்டதாரிகளின் மென் திறன்களை மேன்படுத்தும் ஒரு சிறப்பு அணுகு முறையை இந்த திட்டம் கொண்டுள்ளது. மேலும் ஒரு வருட கட்டாய உள்ளிருப்பு பயிற்சி மூலம் பணித் திறன்களை அபிவிருத்தி செய்வதற்கு வழிவகுக்கப்பட்டுள்ளது. மாணவர்களின் இளநிலை பாடதிட்டத்துக்கு மேலாக இரண்டு டிப்ளோமா பாடநெறிகள் விருப்புரிமை அடிப்படையில் அவர்களுக்கு வழங்கப்படும். அவை மென் திறன் மக்கள் திறன் டிப்ளோமா (Diploma in Peoples) மற்றும் நிறுவன வள திட்டமிடல்(ERP) டிப்ளோமா (Diploma in ERP) என்று அழைக்கப்படும். இந்த இரண்டு டிப்ளோமா பாட நெறிகள், மாணவர்களை தொழில் முறை மேலாளர்களாக மாற்றுவதற்க்கு அவசியமான பல திறன்களை வளர்த்துக் கொள்ள உதவும்.

விஞ்ஞான பீடம்

கற்கை நெறி	**பாடச்சேர்க்கை (விதந்துரைக்கப்படுகின்ற)**	**மொழிமூலம்**
உயிரியல் விஞ்ஞானம்	தாவரவியல் - இரசாயனவியல் - விலங்கியல்	S/E*
உயிரியல் விஞ்ஞானம்	தாவரவியல் - இரசாயனவியல் - கணினிக் கற்கைகள்	S/E*
உயிரியல் விஞ்ஞானம்	விலங்கியல் - இரசாயனவியல் - கணினிக் கற்கைகள்	S/E*
உயிரியல் விஞ்ஞானம்	தாவரவியல் - இரசாயனவியல் - நுண்ணுயிரியல்	S/E*
உயிரியல் விஞ்ஞானம்	விலங்கியல் - இரசாயனவியல் - நுண்ணுயிரியல்	S/E*
உயிரியல் விஞ்ஞானம்	உயிர் இரசாயனவியல் - இரசாயனவியல் - நுண்ணுயிரியல்	S/E*
உயிரியல் விஞ்ஞானம்	மூலக்கூற்று உயிரியல் மற்றும் தாவர உயிரியல் தொழில்நுட்பம் - இரசாயனவியல் -தாவரவியல்	S/E*
உயிரியல் விஞ்ஞானம்	உயிர் இரசாயனவியல் - இரசாயனவியல் - தாவரவியல்	S/E*
உயிரியல் விஞ்ஞானம்	உயிர் இரசாயனவியல் - இரசாயனவியல் - விலங்கியல்	S/E*

கற்கை நெறி	**பாடச்சேர்க்கை (விதந்துரைக்கப்படுகின்ற)**	**மொழிமூலம்**
பௌதீகவியல் விஞ்ஞானம்	பிரயோக கணிதம் - பௌதீகவியல் - தூய கணிதம்	S/E*
பௌதீகவியல் விஞ்ஞானம்	பௌதீகவியல் விஞ்ஞானம் - கணினி விஞ்ஞானம் - பௌதீகவியல் - தூய கணிதம்	S/E*
பௌதீகவியல் விஞ்ஞானம்	இலத்திரனியல் - பௌதீகவியல் - தூய கணிதம்	S/E*
பௌதீகவியல் விஞ்ஞானம்	பிரயோக கணிதம் - கணணி விஞ்ஞானம் - தூய கணிதம்	S/E*
பௌதீகவியல் விஞ்ஞானம்	கணினி விஞ்ஞானம் - தூய கணிதம் - புள்ளிவிபரவியல்	S/E*
பௌதீகவியல் விஞ்ஞானம்	இரசாயனவியல் - கணினி விஞ்ஞானம் - தூய கணிதம்	S/E*
பௌதீகவியல் விஞ்ஞானம்	பிரயோக கணிதம் - இரசாயனவியல் - தூய கணிதம்	S/E*
பௌதீகவியல் விஞ்ஞானம்	கணினி கற்கைகள் - இலத்திரனியல் - பௌதீகவியல்	S/E*
பௌதீகவியல் விஞ்ஞானம்	பிரயோக கணிதம் - தூய கணிதம் - புள்ளிவிபரவியல்	S/E*
பௌதீகவியல் விஞ்ஞானம்	இலத்திரனியல் - கணினி கற்கைகள் - தூய கணிதம்	S/E*

* கற்கைநெறிகள் முதலாம் வருட முதலாம் அரையாண்டில் சிங்கள/ ஆங்கில மொழி மூலமும், முதலாம் வருட இரண்டாம் அரையாண்டிலிருந்து ஏனையவை ஆங்கில மொழி மூலமும் நடாத்தப்படும்.

கற்கை நெறி	**பாடச்சேர்க்கை (விதந்துரைக்கப்படுகின்ற)**	**மொழிமூலம்**
முகாமைத்துவமும் தகவல் தொழில்நுட்பமும்	முகாமைத்துவம், தகவல் தொழில்நுட்பம்	E
சுற்றுச்சூழல் பாதுகாப்பும் முகாமைத்துவமும்	சுற்றுச்சூழல் பாதுகாப்பும் முகாமைத்துவமும்	E

முதலாம் வருட இரண்டாம் அரையாண்டிலிருந்து ஆரம்பமாகும் பௌதீக விஞ்ஞானத்திற்கான மாணவர்களின் விருப்பப் பாடத்தெரிவுகளை மேற்கொள்ளும் மாணவர்களின் எண்ணிக்கை உரிய அளவை விட அதிகரிப்பின் அவர்களின் முதலாம் வருட முதலாம் அரையாண்டிலிருந்தே மாணவர்கள் தெரிவுசெய்யப்படுவர். பௌதீக விஞ்ஞானத்தில் இரசாயனவியல், கணனி விஞ்ஞானம், கணனிக் கற்கைகள், இலத்திரனியல், பௌதீகவியல் மற்றும் புள்ளி விபரவியல் ஆகிய பாடங்கள் வரையறுக்கப்பட்ட அனுமதிகளைக் கொண்டிருக்கும்.

முதலாம் வருட இரண்டாம் அரையாண்டிலிருந்து ஆரம்பமாகும் உயிரியல் விஞ்ஞானத்திற்கான மாணவர்களின் விருப்பப் பாடத்தெரிவுகளை மேற்கொள்ளும் மாணவர்களின் எண்ணிக்கை உரிய அளவை விட அதிகரிப்பின் அவர்களின் முதலாம் வருட முதலாம் அரையாண்டுப் பரீட்சையின் அடைவு மட்டத்தின் அடிப்படையில் தீர்மானிக்கப்படும். உயிரியல் விஞ்ஞானத்தில் உயிர் இரசாயனம், கணணிக் கற்கைகள், நுண்ணுயிரியல் மற்றும் மூலக்கூற்று உயிரியல் மற்றும் தாவர உயிரியல் ஆகிய பாடங்கள் வரையறுக்கப்பட்ட அனுமதிகளைக் கொண்டிருக்கும்.

பட்டநெறி மாணவர்கள் மூன்று ஆண்டுகளிலும் பெற்றுக்கொள்ளும் மதிப்புக்களின் மொத்த எண்ணிக்கை அவர்களுக்கு விஞ்ஞானமாணி மற்றும் சுற்றுச்சூழல் பாதுகாப்பும் முகாமைத்துவத்தில் விஞ்ஞானமாணி பட்டம் வழங்கலில் கவனத்திற்கொள்ளப்படும்.

விஞ்ஞான பீட மாணவர்கள் இரண்டாம் கல்வியாண்டின் இறுதியில் பின்வரும் பாடங்களில் ஏதேனும் ஒன்றை கௌரவ பட்ட

நெறிப் பாடமாக தெரிவு செய்ய முடியும். மாணவர்கள் நான்கு ஆண்டுகளிலும் பெற்றுக் கொள்ளும் மதிப்புக்களின் மொத்த எண்ணிக்கை அவர்களுக்கு கௌரவ விஞ்ஞானமாணி பட்டம் வழங்கலில் கவனத்தில் கொள்ளப்படும்.

பின்வரும் கௌரவ பட்டப் பாடநெறிகள் விஞ்ஞான பீடத்தினால் வழங்கப்படுகின்றன.

1. தாவரவியல் விஞ்ஞானமாணி கௌரவப்பட்டப் படிப்புக் கற்கைநெறி
2. இரசாயனவியல் விஞ்ஞானமாணி கௌரவப்பட்டப் படிப்புக் கற்கைநெறி
3. கணனி விஞ்ஞானம் விஞ்ஞானமாணி கௌரவப்பட்டப் படிப்புக் கற்கைநெறி
4. கணித விஞ்ஞானமாணி கௌரவப்பட்டப் படிப்புக் கற்கைநெறி
5. கணித பௌதீகவியல் விஞ்ஞானமாணி கௌரவப்பட்டப் படிப்புக் கற்கைநெறி
6. நுண்ணுயிரியல் விஞ்ஞானமாணி கௌரவப்பட்டப் படிப்புக் கற்கைநெறி
7. மூலக்கூற்று உயிரியல் மற்றும் தாவர உயிரியல் தொழில்நுட்ப விஞ்ஞானமாணி கௌரவப்பட்டப் படிப்புக் கற்கைநெறி
8. பௌதீகவியல் விஞ்ஞானமாணி கௌரவப்பட்டப் படிப்புக் கற்கைநெறி
9. புள்ளிவிபரவியல் விஞ்ஞானமாணி கௌரவப்பட்டப் படிப்புக் கற்கைநெறி
10. விலங்கியல் விஞ்ஞானமாணி கௌரவப்பட்டப் படிப்புக் கற்கைநெறி

பௌதிகம் மற்றும் இலத்திரனியலில் விஞ்ஞானமாணி பட்டப்படிப்பு கற்கைநெறி - Physics and Electronics

இது பௌதிகவியல் மற்றும் இலத்திரனியல் ஆகிய இரு பிரதான பாடங்களையும் மற்றும் மூன்றாவது பாடப்பரப்பிற்கு சமமாக உள்ளடக்கக்கூடிய கணிதம் மற்றம் முகாமைத்துவம் அல்லது கணிதம் மற்றும் கணனிக் கற்கைகள் ஆகிய பகுதிகளை உள்ளடக்கிய மூன்று வருடகால பட்டக்கற்கை நெறியாகும். இதன் குறிக்கோள், க.பொ.த. உயர்தரத்தில் பௌதிகவியல், இணைந்த கணிதம் மற்றும் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம் ஆகிய பாடங்களைக் கற்ற மற்றும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தேவைகளை பூர்த்திசெய்த விஷேட மாணவர் குழுவாக இணைத்துக் கொள்வதாகும்.

பட்டப்படிப்பை வெற்றிகரமாக நிறைவு செய்கையில் பட்டதாரிகள் பௌதிகவியல் மற்றும் இலத்திரனியல் சம்மந்தமான பட்டக்கற்கையின் தரத்தின் சிறந்த அறிவும், நிபுணத்துவமும் மற்றும் தெளிவும் பெற்றிருப்பதோடு அதற்கு மேலதிகமாக கணிதம் மற்றும் கணனிக் கற்கைகள் சம்மந்தமான சிறந்த அறிவு கொண்ட பட்டதாரிகளாகவும் செயற்பட முடியுமாகின்றது.

களனிப் பல்கலைக்கழகத்தின் நிதி முகாமைத்துவக் கற்கைப்பிரிவு, புள்ளிவிபரவியல் மற்றும் கணனி விஞ்ஞானக் கற்கைகள் மற்றும் கணிதக் கற்கைகள் பிரிவு ஆகியவற்றின் உதவியோடு பௌதீகவியல் கற்கைப்பிரிவினால் இக் கற்கைநெறி நடாத்தப்படுகின்றது.

முகாமைத்துவம் மற்றும் தகவல் தொழில்நுட்பத்தில் விஞ்ஞானமாணி கௌரவப் பட்டப்படிப்பு கற்கைநெறி

முகாமைத்துவம் மற்றும் தகவல் தொழில்நுட்பத்தில் விஞ்ஞானமாணி **(Hons)** பட்டநெறியின் கீழ் மாணவர்கள் பின்வரும் விடயங்களில் சிறப்பு பாடமாக முகாமைத்துவ துறையில்,வர்த்தக அமைப்புப் பொறியியல் (Business Systems Engineering) மற்றும் செயற்பாடுகள் மற்றும் வழங்கல் சங்கிலி முகாமைத்துவம் (Operations and Supply Chain Management) ஆகிய பாடங்களையும் கணணித்துறையில் தகவல் அமைப்புக்கள் (Information Systems) மற்றும் தகவல் தொழில்நுட்பம் (Information Technology) ஆகியவற்றையும் தெரிவு செய்ய முடியும்.

(அ) வர்த்தக அமைப்புப் பொறியியல்

வர்த்தக அமைப்புப் பொறியியல் என்பது வெற்றிகரமான வியாபாரத்திற்கு தேவையான வணிக செயல்முறை, இடுபணிகள், பரிவர்த்தனைகள் ஆகியவற்றை விரிவாக அணுகுதலும், அடையாளம் காணுதலும் அமுல்படுத்தலும் ஆகும். உலக சந்தையில் போட்டியிடுவதற்கும், சந்தைவாய்ப்புக்களைப் பயன்படுத்திக் கொள்வதற்கும் உலகத்தரம் வாய்ந்த முகாமைத்துவத்துடன் கூடிய தகவல் தொழில்நுட்பத்தினை எமது நிறுவனங்களின் பொறியியலாளர்கள் செயற்படுத்த வேண்டியது அத்தியவசியமானதாகும். இதற்குரிய முறையில் தயார்படுத்துவதே இப்பாடநெறி ஆகும்.

(ஆ) செயற்பாடுகள் மற்றும் வழங்கல் சங்கிலி முகாமைத்துவம்

இப்பாடநெறியின் பாடத்திட்டமானது விநியோக சங்கிலி இயக்க முகாமைத்துவத்தின் உலகத் தரம் வாய்ந்த செயன்முறைகளைத் தகவல் தொழில்நுட்பத்தினூடாக நடைமுறைப்படுத்தலைக் கொண்டமைந்துள்ளது. ஆகவே இப்பாடநெறியானது நிபுணத்துவ அறிவினை பரிமாறலும், வியாபார முறைமை முகாமைத்துவத்தின் திறனை விருத்தி செய்தல் மூலம் செயற்பாடுகள் மற்றும் வழங்கல் சங்கிலி முகாமைத்துவம் துறையினை கற்பதனை இலக்காக கொண்டமைந்துள்ளது.

(இ) தகவல் தொழில்நுட்பம்

இப்பாடநெறி தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப ஆளணியினரில் திறனை வலுப்படுத்துவதற்கான வகையிலும், தேசிய தேவைகளுக்கேற்ப அவர்களை உருவாக்கும் விதத்திலும் வடிவமைக்கப்பட்டுள்ளது. இப்பாடநெறி தகவல் தொழில்நுட்ப பாடநெறிப் பரப்பினைக் கொண்டமைந்துள்ளது.

(ஈ) தகவல் அமைப்புக்கள்

இப்பாடநெறியானது தகவல் தொழில்நுட்ப வளங்களினை உயரிய முறையில் பயன்படுத்துவதையும், முதலீட்டின் முழுத் திறனையும் பயன்படுத்தி உச்சப் பயன்பாட்டைப் பெறுவதற்கு தகவல் தொழில்நுட்பத்தினை பயன்படுத்தும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது. உலகலாவிய ரீதியில் இன்று அனைத்துவகையான வர்த்தக துறைகளிலும் தகவல் தொழில்நுட்பமானது இன்றியமையாததாகியுள்ளதால், தகவல் அமைப்புக்களின் பாதிப்பானது வியாபாரத்தினையும் அதன் நம்பகத்தன்மையையும், நோக்கத்தினையும் பாதிப்படையச் செய்யும். எனவே இத்துறையில் உரிய பயிற்சி பெற்ற நிபுணர்களின் உருவாக்கமானது அத்தியவசியமானதும், உரிய நிறுவனத்தின் வளர்ச்சியைத் தீர்மானிப்பதும் ஆகும்.

பீ.எஸ்சி. சுற்றாடல் பாதுகாப்பு முகாமைத்துவ விஞ்ஞானமாணி மற்றும் விஞ்ஞானமாணி கௌரவப் பட்டப்படிப்பு கற்கைநெறி

களனிப் பல்கலைக்கழகத்தின் விஞ்ஞானப் பீடத்தினால் தற்போது முறையே மூன்று மற்றும் நான்கு வருடங்களுக்கான விஞ்ஞானமானி கௌரவப் பட்டப்படிப்பு கற்கைநெறியும் சுற்றாடல் பாதுகாப்பு மற்றும் முகாமைத்துவப் (ENCM) பாடநெறிநெறியினையும் வழங்கப்பட்டு வருகின்றன.

இப்பட்டக் கற்கைநெறியானது தேசிய மற்றும் உலகளாவிய ரீதியில் காணப்படும் சுற்றாடல் பாதுகாப்பு மற்றும் முகாமைத்துவ பிரச்சினைகள் மற்றும் தேவைகள் என்பவற்றில் கவனம் செலுத்துகின்றது. இதன் பாடத்திட்டமானது முகாமைத்துவம், இரசாயனவியல், விலங்கியல், தாவரவியல், உயிரியல் மற்றும் நுண்ணுயிரியல் ஆகிய பல்துறைகளின் சேர்க்கையாக அமைக்கப்பட்டுள்ளது. பொருளியல், சட்டம் ஆகியவை தொடர்பான பாடப்பரப்புக்களின் ஒருங்கிணைப்பைக் கொண்டுள்ளது. இப் பாடத்திட்டம் மூலம் தாவரம் மற்றும் விலங்குகளின் பன்முகத்தன்மை (Diversity of Plant and Animal), சூழலியல்(Ecology), வனவியல்(Forestry), நீரியல்(Hydrology), நீர் வள முகாமைத்துவம் (Water Resource Management), வன வாழ் உயிரின முகாமைத்துவம் (Wildlife Management), பாதுகாப்பு உயிரியல்(Conservation Biology), சுற்றாடல் பொருளியல்(Environmental Economics), மண் வள பாதுகாப்பு(Soil Conservation), காற்று தர முகாமைத்துவம்(Air Quality Management), திண்ம கழிவுகள், கழிவு நீர் மற்றும் அபாயகரமான கழிவு முகாமைத்துவம்(Solid Waste, Waste Water and Hazardous Waste Management), சுற்றாடல் கண்காணிப்பு(Environmental Monitoring), சுற்றாடல் சுகாதாரம்(Environmental Health), சுற்றாடல் தாக்க மதிப்பீடு நடைமுறைகள்(Environmental impact assessment Practices) மற்றும் தொலை உணர்வுக்கு பயன்பாடுகள்(GIS and remote sensing applications),சுற்று சூழல் கொள்கைகள் மற்றும் சட்டம் இயற்றல் மற்றும் சட்டமியற்றல்(environmental policies and legislation), காலநிலை மாற்றங்கள்(climatic changes), இயற்கை அனர்த்தங்கள்(Natural Disasters), பசுமை தொழில் நுட்ப நடைமுறைகள் (Green Technologies)ஆகிய விசேடமான துறைகளில் நிபுணத்துவம் பெற வழிவகுக்கப்படுகின்றது. இப்ப பட்ட கற்கை நெறியில் சகல மாணவர்களுக்கும் சுற்றாடல் பாதுகாப்பு மற்றும் முகாமைத்துவம் தொடர்பான சிறந்த தொழில் நுட்ப மற்றும் தொழில் துறை நிபுணத்துவம் வழங்கப்படுகின்றது. அத்தோடு சுற்றாடல் பாதுகாப்பு முகாமைத்துவம் சம்பந்தமான துறை சார்பான ஆராய்ச்சி திட்டங்களை மேற்கொள்ளவும் உரிய பயிற்சிகள் வழங்கப்படுகின்றன. விஞ்ஞானமாணி பட்டதாரி மாணவர்களால் குறுகிய கால குழு ஆராய்ச்சி திட்டங்கள் மேற்கொள்ளப்படுவதோடு, கௌரவ பட்டதாரி மாணவர்கள் ஒரு வருட காலத்துல பூர்த்தி செய்ய கூடிய விசேட ஆராய்ச்சி திட்டங்கள் மேற்கொள்ளபடுகின்றன.இதட்கு மேலதிகமாக சுற்றாடல் பாதுகாப்பு மற்றும் முகாமைத்துவம் சம்பந்தமான மிக உயர் தரமான தலைப்புகளுக்கும் இந்த கௌரவ பட்ட கற்கை நெறி மாணவர்கள் முன்வைக்கப்படுவர்.

மென்பொருள் பொறியியல் விஞ்ஞானமாணி சிறப்புப் பட்டப்படிப்பு கற்கைநெறி

சர்வதேச ஏற்புடைய ACM வழிகாட்டுதல்களுக்கு அமைவாக தயாரிக்கப்பட்டுள்ள இந் நான்கு வருடகால தொழில்சார் பட்டக் கற்கைநெறியின் மூலம் பட்டதாரி மாணவர்களுக்கு எதிர்காலத்தில் மென்பொருள் பொறியியலாளராக வெற்றிகரமான தொழிற்துறையில் பங்கு கொள்ள அவசியமான அறிவு, தகைமை மற்றும் சூட்சமங்களை விருத்தி செய்வதற்கு அடித்தளமிடுவதே நோக்கமாகும். இணையத்தள மைய, கையழைப்பு தொலைபேசி கணனிமயப்படுத்தல், கணனி விளையாட்டுக்கள் மற்றும் உயிரியக்கமூட்டல், சுகாதார தகவலியல், வியாபார அறிவுத் திறன் அமைப்பு மற்றும் தரவு விஞ்ஞானம் ஆகிய விசேட துறைகளில் நிபுணத்துவம் பெறக்கூடிய வகையில் கற்கைநெறி உருவாக்கப்பட்டுள்ளதால் மாணவர்கள் தாம் விரும்பிய துறையில் முன்னேரிச் செல்வதற்கான சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளது. ஆறு மாத காலங்கள் உரிய தொழிற் துறையில் நிறுவனப் பயிற்சியைப் பெறுவதற்குரிய சந்தர்ப்பமும் மாணவர்களுக்கு வழங்கப்படும். இக் கற்கைநெறியானது இலங்கை மென்பொருள் நிறுவனங்களின் பூரண பங்களிப்பின் கீழ் முன் வைக்கப்படுகின்றது.

மருத்துவ பீடம்

மருத்துவ சத்திரசிகிச்சைக் கற்கை (M.B.B.S)

மருத்துவ சத்திரசிகிச்சைக் கற்கையானது, ஒவ்வொரு கல்வியாண்டிலும் ஒவ்வொன்றும் பத்து வாரங்களைக் கொண்ட மூன்று தவணைகளையுடைய ஒன்றிணைக்கப்பட்ட உறுப்புத் தொகுதிகளை அடிப்படையாகக் கொண்ட ஐந்து வருடங்களைக் கொண்டது. ஒவ்வோர் கட்டத்தின் இறுதியில் அமைந்த மூன்று துறைசார் பரீட்சைகளைக் கொண்டது. முதலாம் இரண்டாம் வருடங்களின் போதான முதற் கட்டமானது, சாதாரண உடலமைப்பு மற்றும் உடற்தொழில் தொடர்பானது. மூன்றாம் நான்காம் வருடங்களின் போதான இரண்டாம் கட்டமானது நோய்க்கான மூல காரணங்கள், நோயியல், சிகிச்சைகள் மற்றும் நோய்தடுப்பும் நோய்கட்டுப்பாடும் தொடர்பானது. மூன்றாம் ஆண்டில் ஆரம்பமாகும் மருத்துவவியற் பயிற்சியானது பல்வேறுபட்ட சிறப்புத்துறைகளுடனான இணைப்புக் கற்கைகளைக் கொண்டது. நான்காம் ஆண்டுக் காலப்பகுதியில், மாணவர்கள் சிறு குழுக்களாக மேற்பார்வையின் கீழான ஆய்வினைக் கட்டாயமாக மேற்கொள்ள வேண்டும். முற்றிலும் வைத்தியசாலை சார்ந்த இறுதியாண்டின் போதனா மூன்றாம் கட்டமானது கொழும்பு வடக்கு போதனா வைத்தியசாலையின் பல்கலைக்கழக அலகுகளில் கற்கை நெறியைக் கொண்டது. மருத்துவ சத்திரசிகிச்சைமாணி இறுதியாண்டுப் பரீட்சையானது, மருத்துவம், பெண் நோயியலும் மகப்பேற்றியலும், குழந்தை மருத்துவம், மன நோயியல் மற்றும் சத்திர சிகிச்சையியல் ஆகிய ஐந்து துறைகளைக் கொண்டது.

கற்கை நெறியின் போதனா மொழி முற்றிலும் ஆங்கிலம் ஆகும். இறுதியாண்டு மருத்துவ சத்திர சிகிச்சைமானிப் பரீட்சையில் சித்தியடைந்த பின்னர் பயிலுனர் வைத்தியராக 12 மாதகால சேவையை நிறைவு செய்வது, இலங்கையில் மருத்துவராகப் பணியாற்றுவதற்கான முழுமையான பதிவினை இலங்கை மருத்துவச் சபையில் மேற்கொள்ள அவசியமாகும்.

பேச்சும் செவிமடுத்தல் விஞ்ஞானமும் விஞ்ஞானமாணி கௌரவப் பட்டம்

இப்பட்டப் படிப்பு நெறியானது பேச்சு மற்றும் செவிப்புலன் இயல் விஞ்ஞானங்களில் விஞ்ஞானமானி கௌரவப்பட்டத்தைப் பெறுவதற்கு வழி நடத்துகின்ற (பேச்சு மொழி சிகிச்சையில் அல்லது செவிப்புலன் இயலில் துறை வல்லுநராக்குகின்ற) இலங்கையில் காணப்படும் ஒரேயொரு கற்கை நெறியாகும். இக்கற்கை நெறியை வெற்றிகரமாக நிறைவு செய்தலானது, இலங்கையில் ஒரு பேச்சு மொழி சிகிச்சையாளராக அல்லது ஒரு செவிப்புலன் இயலாளராக பயிற்சி செய்வதற்குரிய தொழில்சார் தகுதியைச் சுட்டிக் காட்டுகின்றது.

இந்நெறியின் பாட விதானமானது கோட்பாட்டியலான வகுப்பறை சார் கற்றல், சுகாதாரம், கல்வி மற்றும் புனர்வாழ்வு துறைகளின் பல்வேறுபட்ட அமைப்புகளில் செய்முறை அனுபவம் ஆகிய இரண்டு பகுதிகளையும் உள்ளடக்கியதாகும். இக்கற்கை நெறியின் ஒட்டுமொத்த இலக்கானது, தொடர்பாடலில் சிரமங்கள் காணப்படுகின்ற நபர்களுக்கும் அவர்களின் குடும்பங்களுக்கும் தேவையான பலதரப்பட்ட புனர்வாழ்வு சேவைகளை வழங்குவதற்கும் தொடர்பாடல் சிரமங்கள் பற்றிய விழிப்புணர்வையும், அறிவையும் இலங்கையின் பரந்துபட்ட சமூகத்தில் அதிகரிப்பதற்கும் ஆய்வின் மூலமும் பயிற்சிக் காலத்தின் போது தமது சொந்த தொழில்சார் விருத்தியின் மூலமும் இத்துறையின் கல்விசார் விருத்திக்கு பங்களிப்பு செய்வதற்கும் ஏற்ற அத்தியவசியமான அறிவு, மனப்பாங்கு மற்றும் திறன்களைக்கொண்ட தகுதி வாய்ந்த பேச்சு மொழி சிகிச்சையாளர்களையும் செவிப்புலன் இயலாளர்களையும் பயிற்றுவிப்பதாகும்.

இப்பட்டப்படிப்பு பற்கை நெறியானது பாட அலகுகளை கட்டமைப்பாகக் கொண்டதும், குறைந்த பட்சம் 120 கிரெடிட்கள் (Credits) தேவைப்படுவதுமான நான்கு ஆண்டுகால கற்கை நெறியாகும். இந்நெறியின் இறுதி ஆண்டில் ஒரு கட்டாய ஆய்வு/ ஆராய்சி திட்டம் உள்ளடக்கப்பட்டுள்ளது. இம்முழு கற்கை நெறிக்குமான கற்பித்தல் ஊடகம் ஆங்கிலம் ஆகும்.

Faculty of Computing and Technology

பொறியியல் தொழிநுட்ப இளங்கலை கௌரவப் பட்டப்படிப்பு [Bachelor of Engineering Technology(Honours)]

இந்த பட்டப்படிப்பின் பயிற்சிக் காலம் 4 வருடங்கள் ஆகும். இந்த பட்டப்படிப்பினை வெற்றிகரமாக நிறைவு செய்யும் மாணவர்களுக்கு களனிப்பல்கலைக்கழகமானது பொறியியல் தொழினுட்ப கௌரவ இளங்கலை பட்டத்தினை வழங்கும்.

இந்த பொறியியல் தொழில்நுட்ப கௌரவ இளங்கலை பட்டப்படிப்பானது நடைமுறை விடயம் சார்ந்த விஞ்ஞானம் மற்றும்தொழில்நுட்ப துறைகளில் சிறந்த நடைமுறை அறிவை வழங்குவதுடன் பன்முகத்தன்மை வாய்ந்த தொழில் சந்தையின் தேவைகளைப்பூர்த்தி செய்யும் பட்டதாரிகளை உருவாக்கவுள்ளது. இந்த பட்டப்படிப்பின் முதல் இரு வருடங்களானது பொறியியல் தொழில்நுட்பவியல் சார்ந்த பொதுவான திறமைகளை விருத்தி செய்வதை இலக்காக கொண்டுள்ளதுடன் அடுத்த இரு வருடங்களானது தெரிவு செய்யப்பட்ட துறைகளில் விஷேட திறமையினை விருத்தி செய்யும் நோக்கினை இலக்காக கொண்டுள்ளது. தற்போது வழங்கப்படும் விசேட துறைகளாக கீழ்வருவன பட்டியலிடப்பட்டுள்ளது.

பொருள் மற்றும் செயல் முறை பொறியியல்
தன்னியக்கம் மற்றும் தொழில்துறை ரோபோட்டிக்ஸ்
சூழலியல் பொறியியல் தொழில்நுட்பம்

தன்னியக்கம் மற்றும் தொழில்துறை ரோபோட்டிக்ஸ் துறையில் சிறப்பு தேர்ச்சியினை மேற்கொள்ளும் மாணவர்கள் கட்டுப்பாட்டு அமைப்பு தொடர்பான கணனி அல்லது ரோபோ மற்றும் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பவியல் தொடர்பான வெவ்வேறு நடைமுறைகள் மற்றும் தொழில்சந்தைக்கு தேவையான இயந்திரங்கள் ஆகியவற்றை விருத்தி செய்யும் திறன்களை பெற்றுக் கொள்வர். பொருள் மற்றும் செயல் முறை பொறியியல் சிறப்பு தேர்ச்சியினை மேற்கொள்ளும் மாணவர்கள் வடிவமைப்பு நடைமுறைகள் மற்றும் கட்டமைப்பு ஆகிய செயற்பாடுகளின் மூலம் மூலப்பொருட்கள் மற்றும் பொருட்கள் ஆகியவற்றை எவ்வாறு பெறுமதிமிக்க உற்பத்திப் பொருளாக மாற்றுதல் தொடர்பான அறிவினைப் பெற்றுக்கொள்வர்.

இந்த பட்டப்படிப்பினை தெரிவு செய்யும் மாணவர்களுக்கு தங்களது நான்காவது வருடத்தில் தொழில்துறை சார் பயிற்சியினை ஆறு மாதமளவிற்கு தொழில் சந்தையில் பெற்றுக்கொள்ளக் கூடிய வாய்ப்பு வழங்கப்படும். இந்த பட்டப்படிப்பின் கற்பித்தல் மற்றும் மூலம் பரீட்சை நடவடிக்கைகள் அனைத்தும் முழுமையாக ஆங்கில மொழியில் மட்டும் வழங்கப்படும்.

தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப இளங்கலை கௌரவப் பட்டப்படிப்பு

இந்த பட்டபடிப்பின் பயிற்சிக் காலம் 4 வருடங்கள் ஆகும். இப் பட்டப்படிப்பினை வெற்றிகரமாக நிறைவு செய்யும் மாணவர்களுக்கு களனிப் பல்கலைக்கழகமானது தகவல் மற்றும் தொடர்பாடல் தொழிநுட்பத்தில் இளங்கலைப்பட்டத்தினை (ஹொன்ஸ்) வழங்கும்.

இந்த பட்டப்படிப்பின் மூலம் மாணவர்கள் மென்பொருள் தயாரிப்பாளர், இணைய நிர்வாகிகள், மற்றும் தகவல் தொடர்பாடல் தொழினுட்பவியல் தொழில் வல்லுனர்களாக தொழில் சந்தையில் செயற்படுவதற்கு தேவையான திறன்கள், அறிவு மற்றும் அணுகு முறைகள் ஆகியவற்றை வளர்த்துக் கொள்ள முடியும். இந்த பட்டப்படிப்பின் மூலம் மின்னியல் மற்றும் தகவல் தரவு தொடர்பு ஆகிய துறைகளில் சிறந்த அடிப்படை அறிவை பெறுவதுடன் இதற்கு துனையாக பயன்தகு ஆய்வுகூட நடைமுறை பயிற்சி நெறிகளும் வழங்கப்படுவதன் மூலம் தொழில் சந்தையின் தராதரத்திற்கு அமைவான மென்பொருள் மற்றும் கணனி வலையமைப்பு ஆகியவற்றை வடிவமைத்து விருத்தி செய்து அத்துடன் பேணும் அறிவினை வழங்கும். இந்த பட்டப்படிப்பில் கீழ் வரும் உப துறைகளான மெய்நிகராக்கல், கிளவுட் கம்பியூட்டிங், இணைய முகாமைத்துவம், வயர்லஸ் மற்றும் மொபைல் தகவல் தொடர்பு, கணனி பாதுகாப்பு, வலை நிலராக்கல், மொபைல் அப்லிகேசன் உருவாக்கல், கணனி விளையாட்டு மற்றும் அனிமேஷன் மற்றும் மெய் நிகர் உண்மை ஆகிய துறைகளில் மாணவர்கள் தங்களுடைய விஷேட தகுதியினை தங்களுடைய ஆர்வத்திற்கு ஏற்றவாறு தெரிவு செய்து கொள்ளக் கூடிய சந்தர்ப்பம் மற்றும் நெகிழ்வுத் தன்மை ஆகியன இந்த பட்டப்படிப்பின்

மூலம் வழங்கப்படவுள்ளது. இந்த பட்டப்படிப்பினை தெரிவு செய்யும் மாணவர்களுக்கு தங்களது நான்காவது வருடத்தில் தொழில்துறை சார் பயிற்சியினை ஆறு மாதமளவிற்கு தொழில் சந்தையில் பெற்றுக்கொள்ளக் கூடிய வாய்ப்பு வழங்கப்படும். இந்த பட்டப்படிப்பின் கற்பித்தல் மூலம் பரீட்சை நடவடிக்கைகள் அனைத்தும் முழுமையாக ஆங்கில மொழியில் மட்டும் வழங்கப்படும்.

கணனி விஞ்ஞானம் பீ.எஸ்.சி ஹொன்ஸ் பயிற்சி நெறி

இந்த பட்டப்படிப்பானது 4 வருட கற்கைநெறியாக வழங்கப்படுவதுடன் இதன் இறுதியில் விஞ்ஞானமானி (கணனி விஞ்ஞானம், கௌரவ தேர்ச்சி) என்ற பட்டம் களனி பல்கலைக்கழகத்தினால் வழங்கப்படவுள்ளது. இந்த பட்டப்படிப்பானது பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் கணனி தொடர்பான குழுவினால் வழங்கப்பட்ட பரிந்துரைகளுக்கு அமைவாக வடிவமைக்கப்பட்டுள்ளதுடன் மற்றும் கணனி இயந்திரங்கள் சங்கம் மற்றும் மின் மற்றும் மின்னனு பொறியியல் நிறுவனம் ஆகியவற்றின் வழிகாட்டல்களும் இப்பட்டப்படிப்பின் உருவாக்கத்தில் உள்வாங்கப்பட்டுள்ளது.

இந்த பட்டப்படிப்பின் மூலம் மாணவர்கள் மென்பொருள் சந்தை மற்றும் ஆய்வுகள் மூலம் கணனி விஞ்ஞானத்திற்கு தேவையான அறிவினை வழங்குவதற்கு தேவையான திறன்கள் அறிவு மற்றும் அனுகுமுறைகள் ஆகியவற்றை வளர்த்துக்கொள்ள முடியும்.கணனி விஞ்ஞான அனுகுமுறை தொடர்பான ஆழ்ந்த அறிவினை வழங்குவதுடன் ஆய்வுகூட பயிற்சிகள் மூலம் மென்பொருட்களை உருவாக்கல் மதிப்பீடு செய்தல் நடைமுறைப்படுத்தல் மற்றும் பேணுதல் தொடர்பான நடைமுறை அறிவினை செயல்முறை பயிற்சிகள் மூலம் மாணவர்கள் பெற்றுக்கொள்வர்.இந்த பட்டப்படிப்பின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள துறைகளானது விசேட திறமையினை பெற்றக்கொள்ள வழிவகுக்கும் தகவல் முறைமை, இயந்திர கற்றல், தகவல் பாதுகாப்பு, தொகுப்புகளின் கோட்பாடு, இணை கணிப்பீடு ,உயர் செயல் திறன் கணனி, டிஜிட்டல் ஆய்வுத்துறை, பொருள் வலை மற்றும் ஈ வியாபார தொழில்நுட்பம். கணனி விளயாட்டு மற்றும் அனிமேஷன் மற்றும் மெய்நிகர் உண்மை ஆகிய துறைகளில் ஏதாவது ஒரு துறையில் சிறப்பு தேர்சசியினை பெற்றுக்கொள்ளும் முகமாக பாடப்பரப்பு வடிவமைக்கப்பட்டுள்ளது.

இந்த பட்டப்படிப்பினை தெரிவு செய்யும் மாணவர்களுக்கு தங்களது நான்காவது வருடத்தில் தொழில்துறை சார் பயிற்சியினை 6 மாதமளவிற்கு தொழில் சந்தையில் பெற்றுக்கொள்ளக்கூடிய வாய்ப்பு வழங்கப்படும். இந்த பட்டப்படிப்பின் கற்பித்தல் மற்றும் பரீட்சை நடவடிக்கைகள் அனைத்தும் முழுமையாக ஆங்கில மொழியில் மட்டும் வழங்கப்படும். நான்காவது வருடத்தில் அனைத்து மாணவர்களும் தங்களுடைய விருப்பத்திற்கு அமைவான துறையில் ஆய்வுத்திட்டம் ஒன்றினை மேற்கொள்ளுதல் வேண்டும்.

மொறட்டுவைப் பல்கலைக்கழகம்		
கற்கைநெறி	**பாடச்சேர்க்கை (விதித்துரைக்கப்பட்டவிடத்து)**	**க./மொ**
பொறியியல்	-	E
பொறியியல் (EM)	-	E
பொறியயல் (TM)	-	E
தகவல் தொழில்நுட்பம்	-	E
கட்டடக்கலை	-	E
வடிவமைப்பு	-	E
கணிய அளவையியல்	-	E
பட்டினமும் நாடும் திட்டமிடல்	-	E
நவநாகரீக வடிவமைப்பும் உற்பத்தி அபிவிருத்தியும்	-	E
வசதிகள் முகாமைத்துவம்	-	E
போக்குவரத்தும் தேவைகள் விநியோக ஒழுங்கமைப்பு முகாமைத்துவமும்	-	E
தகவல் தொழில்நுட்பமும் முகாமைத்துவமும்	-	E
நிலத்தோற்றக் கட்டடக்கலை	-	E
வியாபார விஞ்ஞானம்	-	E

கட்டடக்கலைப் பீடம்

கட்டக்கலைப்பீடமானது இலங்கையில் கட்டடக்கலை, கணிய அளவையியல், வசதிகள் முகாமைத்துவம், வடிவமைப்பு திட்டமிடலும் போன்ற துறைகளில் பட்டப்படிப்பு மற்றும் பட்டப்பின்படிப்பு கற்கை நெறிகளை வழங்கிவரும் தனித்துவமான கற்கை நிறுவகமாக திகழ்கிறது. இப்பீடமானது கட்டடக்கலைத் திணைக்களம், கட்டடப் பொருளியல் திணைக்களம், பட்டினமும் நாடு திட்டமிடலும் திணைக்களம் மற்றும் ஒருங்கிணைந்த வடிவமைப்புத் திணைக்களம் போன்ற நான்கு பிரதான திணைக்களங்களை உள்ளடக்கியுள்ளது. மேலும் கட்டடக்கலைப்பீடத்தினால் கட்டடக்கலை, நிலவடிவமைப்புக்கலை, கணிய அளவையியல், பட்டினமும் நாடு திட்டமிடலும், வசதிகள் முகாமைத்துவம் மற்றும் வடிவமைப்பு போன்ற துறைகளில் இளமாணிப்பட்டம் அளிக்கப்படுகிறது.

கட்டடக்கலைத் திணைக்களமானது ஐந்து வருட முழுநேர கௌரவ கட்டடக்கலை இளமானி [B.Arch. (Hons)] பட்டக் கற்கைநெறி மற்றும் நான்கு வருட முழுநேர கௌரவ நிலவடிவமைப்பு இளமானி [B.L.A. (Hons)] பட்டக் கற்கைநெறி ஆகியவற்றை வழங்கி வருகிறது. கட்டடக்கலை இளமானி பட்டமானது, இலங்கை கட்டடக்கலையியலாளர் நிறுவகம் (SLIA) பிரித்தானிய கட்டடக்கலையியலாளர் நிறுவகம் (RIBA) மற்றும் கட்டடக்கலையியலாளர் பொதுநலவாய அமைப்பு (CAA) போன்றவற்றால் அங்கீகரிக்கப்பட்ட ஒன்றாகும்.

கட்டடப் பொருளியல் திணைக்களமானது நான்கு வருட முழுநேர கௌரவ விஞ்ஞான இளமானி கணிய அளவையியல் [B.Sc. (QS) Hons] பட்டக் கற்கைநெறி மற்றும் கௌரவ விஞ்ஞான இளமானி வசதிகள் முகாமைத்துவ [B.Sc. (FM) Hons] பட்டக் கற்கைநெறி ஆகியவற்றை வழங்கிவருகிறது.

கட்டடப் பொருளியல் திணைக்களமானது கௌரவ விஞ்ஞான இளமானி கணிய அளவையியல் [B.Sc. (QS) Hons] கற்கைநெறிக்கான அங்கீகாரத்தினை இலங்கை கணிய அளவையியலாளர் நிறுவகம் (IQSSL) அவுஸ்திரேலிய பட்டய அளவையியலாளர் நிறுவகம் (RICS), குடிசார் இயந்திரவியல் அளவையியலாளர் நிறுவகம் (CICES), மற்றும் பசுபிக் கணிய அளவையியலாளர் அமைப்பு (PAQS) போன்றவற்றிடமிருந்து 1986, 1997,2010 மற்றும் 2011 ம் ஆண்டுகளில் பெற்றுள்ளது. மேலும் கௌரவ விஞ்ஞான இளமானி வசதிகள் முகாமைத்துவ [B.Sc. FM) Hons) பட்டக் கற்கைநெறியும் அவுஸ்திரேலிய பட்டய அளவையியலாளர் நிறுவகத்தினால் அங்கீகரிக்கப்பட்ட ஒன்றாகும்.

பட்டினமும் நாடு திட்டமிடலும் திணைக்களமானது பௌதீக திட்டமிடல் கற்கைநெறியை வழங்குவதுடன் திட்டமிடல் துறைகளில் ஆராய்ச்சிகளையும் நடாத்திவருகிறது. திணைக்களமானது நான்கு வருட முழுநேர கௌரவ விஞ்ஞானமா இளமானி பட்டினமும் நாடு திட்டமிடலும் (B.Sc. (T&CP) Hons.) கற்கைநெறிப் பட்டத்தினை வழங்கிவருகிறது. மேலும் இக்கற்கைநெறியானது இலங்கை பட்டினத் திட்டமிடலாளர் நிறுவகத்தினால் (ITPSL) அங்கீகரிக்கப்பட்ட ஒன்றாகும்.

ஒருங்கிணைந்த வடிவமைப்புத் திணைக்களமானது நான்கு வருட முழுநேர கௌரவ இளமானி வடிவமைப்பு [B.Des. Hons] பட்டக் கற்கைநெறியை வழங்கிவருகிறது. இக் கற்கைநெறியானது நவநாகரிக வடிவமைப்பு, ஊடக மற்றும் தொடர்பாடல் வடிவமைப்பு, உற்பத்தி வடிவமைப்பு ஆகிய மூன்று பெரும் பகுதிகளை உள்ளடக்கியுள்ளது.

இரண்டாவது பாடநெறியானது அலங்கார வடிவமைப்பு மற்றும் உற்பத்திபொருள் உருவாக்க வடிவமைப்பு (Fashion Design & Product Development) இளமானிச் சிறப்புப் பட்டமாகும் (BDes). இப் பாடநெறியானது நான்கு வருடகால முழுநேரப் பாடநெறியாக நடாத்தப்படுகிறது. தொழிற் பயிற்சியானது மூன்றாவது வருடத்தில் நடைபெறுகிறது.

மூன்றாவது பாடநெறியானது போக்குவரத்து மற்றும் விநியோக முகாமைத்துவ அறிவியல் இளமானிச் சிறப்புப் பட்டமாகும் (BSc in Transport & Logistics Management). இப்பாடநெறியானது நான்கு வருடகால முழுநேரப் பாடநெறியாக எட்டு பருவங்களில் பாட அலகு (course unit) முறையைப் பின்பற்றி நடாத்தப்படுகிறது. தொழிற்பயிற்சியானது இப்பாடநெறயின் ஒருபகுதியாகும்.

பொறியியல் பீடம்

பொறியியல் பீடமானது மூன்று முழுநேர பாடநெறிகளை வழங்குகிறது. முதலாவது பொறியியல் துறையின் அறிவியல் இளமானிச் சிறப்புப் பட்டமாகும் (BSc Eng). இப் பாடநெறிக்கு மாணவர்கள் மூன்று பிரிவுகளில் அனுமதிக்கப்படுகிறார்கள்: Engineering (MPR), Engineering (EM) மற்றும் Engineering (TM). இப் பாடநெறியானது நான்கு வருடகால எட்டு செமெஸ்டர்களில் பாட அலகு (course unit) முறையைப் பின்பற்றி நடைபெறும். ஒவ்வொரு செமெஸ்டரும், பரீட்சைக் காலம் உட்பட, 20 வார காலமுடையவை. Engineering (MPR) மாணவர்கள் முதலாவது செமெஸ்டரின் பின்னர் தமது விருப்பத்தின்படியும் முதலாவது பருவப் பெறுபேறுகளின்படியும் எட்டு துறைகளுக்கு அனுப்பி வைக்கப்படுவார்கள். அவையாவன: (1) உயிரியல் மருத்துவப்

பொறியியல், (2) இரசாயனச் செயல்முறைப் பொறியியல், (3) குடிசார் பொறியியல், (4) கணனி அறிவியல் மற்றும் பொறியியல், (5) மின்சாரப் பொறியியல், (6) இலத்திரனியல் மற்றும் தொலைத் தொடர்புப் பொறியியல், (7) எந்திரவியல் பொறியியல், (8) பொருள் அறியியல் மற்றும் பொறியியல். Engineering (EM) மாணவர்கள் புவிவளப் பொறியியல் துறைப் பாடநெறியையும் Engineering (TM) மாணவர்கள் புடவை மற்றும் உடுதுணிப் பொறியியல் துறைப் பாடநெறியையும் பின்பற்றுவார்கள். பத்துத் துறைப் பாடநெறிகளிலும் ஆய்வுகூடவேலை, வடிவமைப்பு மற்றும் களவேலை உட்பட்ட பாடவேலையும் தொழிற்பயிற்சியும் உள்ளடக்கப்பட்டுள்ளன. B.Sc.Eng பாடநெறியானது உள்ளூர் மற்றும் வெளிநாட்டுத் தொழில்சார் நிறுவனங்களால் அங்கீகாரம் பெற்றது.

தகவல் தொழினுட்ப பீடம்

இப்பீடமானது தற்போது இரண்டு விஞ்ஞான இளமாணிப் பட்டப்படிப்புகளுக்கான கற்கை நெறிகளை நடாத்துகின்றது. அவை தகவல் தொழினுட்பத் (IT) துறையில் B.Sc. (Hons) சிறப்பு பட்டத்திற்கான ஒரு கற்கைநெறியும் தகவல் தொழில்னுட்பமும் முகாமைத்துவமும் (IT &mM) என்ற துறையிலான இன்னொரு B.Sc.(Hons) சிறப்பு பட்டத்திற்கான கற்கை நெறியும் ஆகும். தகவல் தொழினுட்பத் துறைக்கான மாணவர்களும் [B.Sc. (Hons) in IT], தகவல் தொழினுட்பமும் முகாமைத்துவமும் [B.Sc. 9Hons) in IT & M] என்ற துறைக்கான மாணவர்களும் இந்தக் கையேட்டுப் புத்தகத்தில் குறிப்பிடப்பட்டுள்ளபடி குறித்த பாடங்களின் சேர்மானங்களின் அடிப்படையில் உள்வாங்கப்படுகிறார்கள். ஒவ்வொரு இளமானிப் பட்டப்படிப்பிற்கும் கற்கை நெறிகளைப் பு'ர்த்தி செய்வதற்கான காலம் நான்கு கல்வியாண்டுகளாகும்.

மாணவர்களின் பன்முகப்படுத்தப்பட்ட கல்வித் தேவைகளை நிறைவு செய்வதற்காக இப்பீடமானது மூன்று பிரிவுகளைக் கொண்டுள்ளது. அவை தகவல் தொழினுட்பப் பிரிவு (IT), கணனிக் கணிதப் பிரிவு (CM) மற்றும் வேறுபட்ட பாடங்களுக்கிடையிலான கல்விப் பிரிவு (IDS) என்பவையாகும். தகவல் தொழினுட்பப் பிரிவு, இவ்விரண்டு இளமானிப் பட்டப்படிப்புகளுக்காக தகவல் தொழினுட்பத் துறையில் பல்வேறுபட்ட மையப்பாடநெறிகளை வழங்குகின்றது. கணனிக் கணிதப் பிரிவானது கணிதத்திலும் கணிதம் சார்ந்த பாடத்துறைகளிலும் முக்கியமான பாடநெறிகளை வழங்குகின்றது. வேறுபட்ட பாடங்களுக்கிடையிலான கல்விப் பிரிவானது தகவல் தொழினுட்பப் பிரிவினதோ கணனிக் கணிதப் பிரிவினதோ மேற்பார்வைக்கு உட்படாது இயங்குவதோடு, பிரதானமாக முகாமைத்துவமும் அது சார்ந்த பாடத்துறைகளிலுமான பாடநெறிகளை வழங்குகின்றது.

இவ்விரண்டு சிறப்பு இளமாணிப் பட்டங்களுக்குமான கற்பித்தல் மொழி ஆங்கிலமாகும்.

தகவல் தொழினுட்பத் துறையிலான சிறப்பு விஞ்ஞான இளமாணிப் பட்டப்படிப்பிற்கான நிகழ்ச்சி நிரல்

தகவல் தொழினுட்பத் துறையில் தேர்ச்சி பெற்றவர்களுக்கான கேள்வி அதிகரிப்பிற்கேற்ப அறிவும் திறமையும் திடமும் கொண்ட மதினுட்பம் மிக்க தகவல் தொழினுட்பப் பட்டதாரிகளை உருவாக்குவதற்காக இப்பட்டப்படிப்பிற்கான நிகழ்ச்சி நிரலானது வரையப்பட்டுள்ளது. இந்நிகழ்ச்சி நிரலில் நவீன தகவல் தொழினுட்ப நிறுவனங்களில் உள்ள சவால்களை எதிர்கொள்வதற்காக பட்டதாரிகளை உருவாக்கும் போது தகவல் தொழினுட்பத்தின் பரந்து விரிந்த தன்மை கருத்தில் கொள்ளப்பட்டுள்ளது. தகவல் தொழினுட்பத் துறையிலான சிறப்பு விஞ்ஞான இளமாணிப் பட்டப்படிப்பிற்கான நிகழ்ச்சி நிரலின் தற்போதைய பாடத்திட்டங்களும் விதப்புரைகளும் கணனித் தொழினுட்பத்தின் சகல துறைகளையும் முகாமைத்துவ நடைமுறைகளையும் தொழிலக நோக்கங்களையும் உள்ளடக்கியுள்ளன. தகவல் தொழினுட்பத் துறையிலான சிறப்பு விஞ்ஞான இளமாணிப் பட்டப்படிப்பு, க.பொ.த. உயர்தரப் பரீட்சையில் சித்தியெய்திய உயிரியல் விஞ்ஞானம் அல்லது பௌதிக விஞ்ஞானப் பிரிவு மாணவர்களுக்கானது (பௌதீகம் ஒரு பாடமாக உள்ளடங்கியிருக்க வேண்டும்) முதலிரண்டு கல்வியாண்டுகளுக்கான நிகழ்ச்சி நிரலில் பன்முகப்படுத்தப்பட்ட தகவல் தொழினுட்பத் துறையின் கட்டாயமான மையப்பாடநெறிகள் அடங்கியிருக்கும். மூன்றாம் கல்வியாண்டின் ஆரம்பத்திலிருந்து மாணவர்கள் தாமே தெரிவுசெய்யக்கூடிய பாடநெறிகள் மூலமாக சிறப்பு பாடவிதானங்களை நோக்கி முனைப்புப்படுத்தப்படுவார்கள். மூன்றாம் கல்வியாண்டின் இரண்டாம் அரையாண்டில் தொழிலகப் பயிற்சி உள்ளடங்கியிருக்கும். அது மாணவர்களுக்கு பலதரப்பட்ட வேலை அனுபவங்களையும் போட்டி மேலாண்மையையும் வழங்கவல்லது. இந்நிகழ்ச்சி நிரலானது படித்த கொள்கை சார்ந்த விடயங்களையும் நடைமுறை விடயங்களையும் இணைப்பதற்காக தொழிலகம் சார்ந்த வேலைத்திட்டங்களையும் உள்ளடங்கியதாயிருக்கும். கடைசிக் கல்வியாண்டில் ஆராய்ச்சிகளை மையப்படுத்திய மேற்கல்விப் பட்டப்படிப்புகளுக்காக உந்தப்பட்ட மாணவர்கள் விருப்பமாயின் தனிப்பட்ட ஆராய்ச்சி வேலைத்திட்டத்திலும் பங்குபெறலாம். கடைசிக் கல்வியாண்டின்போது முழுமை பொருந்திய கட்டாயமானதொரு குழு வேலைத்திட்டத்தில் சவாலான தகவல் தொழினுட்பம் சார்ந்த பிரச்சினையொன்றை தீர்ப்பதற்காக மாணவர்கள் தங்கள் அறிவையும் திறன்களையும் பயன்படுத்துவார்கள்.

தகவல் தொழில்னுட்பமும் முகாமைத்துவமும் என்ற துறையிலான சிறப்பு விஞ்ஞான இளமாணிப் பட்டப்படிப்பிற்கான நிகழ்ச்சி நிரல்

தகவல் தொழினுட்பத் துறைக்கு இயைபாக்கம் அடையக்கூடியதாகவும் முகாமைத்துவ கொள்கைகளைப் பிரயோகிப்பதில் பரீட்சயமாகவும் உள்ள தகவல் தொழினுட்பத் துறையில் தேர்ச்சி பெற்றவர்களுக்கான தேவை எப்போதும் அதிகரித்துச் செல்வதைக் கருத்திற்கொண்டு இப்பட்டப்படிப்பிற்கான நிகழ்ச்சி நிரலானது 2010ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்டது. பலதரப்பட்ட மாணவர்களின் தொழினுட்பக் கல்விக்கான கதவுகளைத் திறப்பதை இலக்காகக் கொண்டுள்ள இந்நிகழ்ச்சி நிரலானது க.பொ.த. உயர்தரப் பரீட்சையில் சித்தியெய்திய அனைத்துப் பிரிவு மாணவர்களுக்காகவும் திறந்துள்ளது. இப்பட்டப்படிப்பு நிகழ்ச்சி நிரலானது இளமாணிப் பட்டதாரிகளுக்கு தகவல் தொழினுட்பத்தின் முக்கிமான திறன்களோடு மேலதிகமான தரப்படுத்தப்பட்ட முகாமைத்துவ மேலாண்மையை வழங்குவதால் தகவல் தொழினுட்பத்துறையில் விரைவாக முகாமைத்துவ மட்டங்களுக்கு முன்னேற வழிசெய்கிறது. இந்நிகழ்ச்சி நிரலானது படித்த கொள்கை சார்ந்த விடயங்களையும் நடைமுறை விடயங்களையும் இணைப்பதற்காக, வியாபார மற்றும் முகாமைத்துவ கோட்பாடுகளை உள்ளடக்கிய வேலைத்திட்டங்களையும் உள்ளடக்கியுள்ளது. மூன்றாம் கல்வியாண்டின் இரண்டாம் அரையாண்டில் தொழிலகப் பயிற்சி உள்ளடங்கியிருக்கும். அது மாணவர்களுக்கு பலதரப்பட்ட வேலை அனுபவங்களையும் போட்டி மேலாண்மையையும் வழங்கவல்லது. கடைசிக் கல்வியாண்டில் ஆராய்ச்சிகளை மையப்படுத்திய மேற்கல்விப் பட்டப்படிப்புகளுக்காக உந்தப்பட்ட மாணவர்கள் விருப்பமாயின் தனிப்பட்ட ஆராய்சி வேலைத்திட்டத்திலும் பங்குபெறலாம். கடைசிக் கல்வியாண்டின்போது முழுமை பொருந்திய கட்டாயமானதொரு குழு வேலைத்திட்டத்திலும் பங்குபெறலாம். கடைசிக் கல்வியாண்டின்போது முழுமை பொருந்திய கட்டாயமானதொரு குழு வேலைத்திட்டத்தில் சவாலான தகவல் தொழினுட்பம் சார்ந்த பிரச்சினையொன்றை தீர்ப்பதற்காக மாணவர்கள் தங்கள் அறிவையும் திறன்களையும் பயன்படுத்துவார்கள்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

கற்கைநெறி	பாடச்சேர்க்கை (விதித்துரைக்கப்பட்டவிடத்து)	க./மொ
கலை	-	T
முகாமைத்துவம்	-	T/E
வர்த்தகம்	-	T/E
சட்டம்	-	E
மருத்துவம்	-	E
சித்த மருத்துவமும் அறுவைச்சிகிச்சையும்	-	T
விவசாயம்	-	E
உயி. விஞ்ஞானம் *	தயவுசெய்து கீழே பார்க்கவும்	T/E
பொறியியல்	-	E
பௌதிக விஞ்ஞானம் *	தயவுசெய்து கீழே பார்க்கவும்	T/E
கணனி விஞ்ஞானம்	-	T/E
தாதியியல்	-	E
மருந்தகவியல்	-	E
மருத்துவ ஆய்வுகூட விஞ்ஞானங்கள்	-	E
மொழி பெயர்ப்பு கற்கைகள்	-	E/T
பொறியியல் தொழில்நுட்பம்	-	E
உயிர் முறைமைகள் தொழில்நுட்பம்	-	E

*** விஞ்ஞான பீடம்**

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் விஞ்ஞான பீடத்தின் நூற்கல்வி நிகழ்ச்சித்திட்டங்கள் மட்டிசைப்படுத்தப்பட்ட கடன் மதிக்கப்பட்ட அரையாண்டு அடிப்படையிலான கற்கை நெறி முறைமையின் அடிப்படையிலேயே தொழிற்படுகின்றது. பட்டப்படிப்பு கற்கை நெறிகள் அலகு தரம் 1, தரம் 2, தரம் 3, தரம் 4 என்றவாறு 4 தரங்களாக நடாத்தப்படுகின்றது. கற்கை நெறி அலகுகளானது கீழ்க் குறிக்கப்படும் வகைகளிலிருந்து பெறப்படுகின்றது.

(அ) துணைக் கற்கைநெறிகள் (ஆ) மேம்படுத்தல் கற்கை நெறிகள்
(இ) பிரதான பாடத்துறைகள் (ஈ) குறைநிரப்பு பாடத் துறைகள்
(உ) விடய குறிப்பான துறைகள் (ஊ) பீடங்களுக்கிடையிலான கற்கை நெறிகள்

(அ) துணைக் கற்கை நெறிகள்: கீழ்வரும் துணைக் கற்கை நெறிகள் வழங்கப்படுகின்றன.

(அ) ஆங்கில மொழி I	மட்டம் I
(ஆ) சமூக ஒற்றுமை மற்றும் செயற்பாட்டு குடியுரிமை	மட்டம் I
(இ) ஆங்கில மொழி II	மட்டம் II
(ஈ) தொழில் வழிகாட்டி	மட்டம் III
(உ) முகாமைத்துவமும் தொழில்முயற்சி திறன்களும்	மட்டம் III
(ஊ) தொடர்பாடல் திறன்கள்	மட்டம் III

துணைக் கற்கை நெறி அலகுகள் தரச்சித்திகள் சாராத கற்கை நெறி அலகுகளாகும். எனினும் சகல துணை கற்கை நெறி அலகுகள் ஆய்வு செய்யப்பட்டு பட்டங்கள் வழங்குவதற்காக கரிசனைக்கு எடுக்கப்படுகின்றன.

(ஆ) மேம்படுத்தல் கற்கை நெறிகள்

(அ) பௌதீக விஞ்ஞான மாணவர்களுக்கு உயிரியல் மற்றும் உயிரியல் விஞ்ஞான மாணவர்களுக்கு கணிதம்	மட்டம் I (2 தரச்சித்திகள்)
(ஆ) கணனி அறிவு	மட்டம் I (2 தரச்சித்திகள்)
(இ) விஞ்ஞானமும் சமூகமும்	மட்டம் I (2 தரச்சித்திகள்)

(இ) பிரதான பாடத்துறைகள்

பீடமானது கீழ்வரும் பத்து பிரதான பாடப் துறைகளை வழங்குகின்றது.

- பிரயோக கணிதம்
- கணனி விஞ்ஞானம்
- புள்ளிவிபரவியல்
- மீன்பிடியியல் விஞ்ஞானம்
- கணிதம்
- விலங்கியல்
- தாவரவியல்
- பௌதிகவியல்
- இரசாயனவியல்
- தூயகணிதம்

குறிப்பு:

(அ) மட்டங்கள் 1ஜீ இலும் 2ஜீ இலும் பிரதான பாடங்களாக தூய கணிதத்தையும், பிரயோக கணிதத்தையும் எடுத்துள்ள மாணவர்களை கணிதத்தில் கணித தனித்த சிறப்பு பட்ட கற்கை நெறிக்க அ;னமதிக்கப்பட முடியும்.

(ஈ) பாட குறிப்பான துறைகள்

கல்வி மற்றும் கணனி விஞ்ஞாணம் (நேரடி) போன்ற குறிப்பான பாடத்துறையில் கற்கை நெறியை பீடம் வழங்குகின்றது. கலைப் பீடத்தின் கல்வித் துறையிலிருந்து பணியாளர்களின் உதவியுடன் விஞ்ஞான இளமாணி மாணவர்களுக்கு (கல்வியுடன்) கல்வியில் கற்கை நெறிகளை மட்டுமே பீடம் வழங்குகின்றது.

(உ) குறைநிரப்புப் பாடத் துறைகள்

கிடைக்கக்கூடிய வளங்களைப் பொறுத்து பீடமானது பெருமளவு குறைநிரப்புப் பாடத் துறைகளில் கற்கை நெறிகளை வழங்குவதுடன், வழங்கப்படும் கற்கை நெறிகள் வருடத்திற்கு வருடம் மாறுபடலாம். குறைநிரப்புப் பாடத் துறைகளில் கற்கை நெறி அலகுகள் மட்டங்கள் 2ஜீ இலும் 3ஜீ இலும் மட்டுமே வழங்கப்படுகின்றன.

குறைநிரப்புப் பாடத் துறைகள்

- அடிப்படைக் கணனி
- இலத்திரனியல்
- சுற்றாடல் விஞ்ஞானம்
- உயிரியல் கணிதமும், புள்ளிவிபரவியலும்
- உயிர்தொழில்நுட்பம்
- உணவு விஞ்ஞானமும் போசாக்கும்

(ஊ) பீடங்களுக்கிடையிலான கற்கை நெறிகள்

விஞ்ஞானப் பீட சபையின் முன் அங்கீகாரத்துடன், நேரசூசி அனுமதித்தால் இப் பல்கலைக்கழகத்துடன் இன்னொரு பீடத்தினால் வழங்கப்படும் கற்கை நெறி அலகுகளை தெரிவு செய்யலாம்.

மூலாதார மற்றும் தேர்ந்தெடுக்கப்பட்ட கற்கை நெறி அலகுகள்

ஒவ்வொரு பிரதான பாடமும் மூலாதார மற்றும் தேர்ந்தெடுக்கப்பட்ட கற்கை நெறி அலகுகளைக் கொண்டிருக்கின்றது. சகல மட்டம் 1 கற்கை நெறி அலகுகள் மூலாதாரமானவை.

வேறுபட்ட தரங்களில் கற்கை நெறி அலகுகளைக் தேர்ந்தெடுத்தலும், பதிவு செய்தலும்

முதலாம் வருட கற்கைக்கான மாணவர்கள் 3 பிரதான பாடங்களுக்கும், சம்பந்தப்பட்டஅவற்றுக்குரிய துணை கற்கை நெறி அலகுகளுக்கும் பதிவு செய்துகொள்ளலாம். பிரதான பாடப்பரப்பிலிருந்து அனுமதிக்கப்பட்ட பாடச்சேர்க்கைகள் கீழே தரப்பட்டுள்ளன. ஒவ்வொரு குறிப்பிட்ட பாடத்திற்கும் அல்லது பாடச் சேர்க்கைக்கும் அனுமதிக்கப்படக்கூடிய மாணவர்களின் எண்ணிக்கையானது வரையறுக்கப்பட்டுள்ளது. இந்த வகையில், இப்படிப்பட்ட பாடங்களுக்கு அல்லது பாடச்சேர்க்கைகளுக்கு மாணவர்கள் திறமை அடிப்படையிலும், க.பொ.த. (உ.த.) தரத்தின் பெறுபேற்றையும் அடிப்படையாகக் கொண்டு அனுமதிக்கப்படுவார்கள்.

இந்த நூற் கல்வி ஆண்டில் 2ஆம், 3ஆம், 4ஆம் வருட கற்கைக்கு மாணவர்கள் அவர்கள் விரும்பிய கற்கை நெறி அலகுக்கு கல்வியாண்டின் ஆரம்பத்தில் பதிவு செய்துகொள்ளலாம். மட்டமொன்றின் பதிவு செய்யப்பட்ட கற்கை நெறி அலகுகளின் திறமைச் சித்திகளின் மொத்த எண்ணிக்கை அம்மட்டத்திற்கு குறித்துரைக்கப்பட்டுள்ள எண்ணிக்கையை விட குறைவாகவோ அல்லது கூடுதலாகவோ இருக்கக் கூடாது.

விஞ்ஞான பீடச் சபையினால் நிர்ணயிக்கப்பட்ட கல்வி ஆலோசகர் மாணவர்களுக்கு கற்கைநெறி அலகுகளைத் தீர்க்கமாக தெரிவு செய்ய உதவி செய்வார்கள். பதிவு செய்துகொண்ட கற்கைநெறி அலகை பருவம் ஆரம்பித்து முதல் 2 வாரங்களுக்குள் மட்டும் மாணவரால் மீளப்பெறமுடியும். இது குறைந்த திறமைத் தேவையை குழப்பக்கூடாது. தகுந்த மற்றும் வைத்திய சான்றுகள் தவிர இந்த மீளப்பெறுகை கால அவகாசம் முடிந்தால் மாற்ற முடியாது.

குறிக்கப்பட்ட கற்கைநெறிக்கு ஆகக் குறைந்த மற்றும் ஆகக் கூடிய மாணவர்கள் சேர்த்துக்கொள்ளப்படுவார்கள். கிடைக்கக்கூடிய வளங்களைப் பொறுத்து திணைக்களமானது இந்த தொகையைத் தீர்மானிக்கும்.

நான்கு வருட பட்டப்படிப்பு நிகழ்ச்சித் திட்டங்களுக்கான தெரிவு

மூன்றாவது வருடத்தின் ஆரம்பத்தில் மாணவர்கள் ஹொனர்ஸ் பட்டப்படிப்பு (தனித்த மற்றும் இணைந்த) மற்றும் பி.எஸ்சி. (கல்வியுடன்) கற்கை நெறிகளுக்காக அனுமதிக்கப்படுகின்றார்கள். கிடைக்கக்கூடிய இடங்களையும், தரங்கள் 1ஜீ, 2ஜீ கற்கை நெறி அலகில் விண்ணப்பதாரியின் பெறுபேறையும் அடிப்படையாகக் கொண்டே அனுமதிகள் கிடைக்கின்றன. 2ஆம் வருட முடிவில் தாம் விரும்பும் அத்தகைய நிகழ்ச்சித்திட்டத்தினைப் பின்பற்ற மாணவர்கள் விண்ணப்பிக்க முடியும்.

தனித்த சிறப்பு பட்டப்படிப்பு நிகழ்ச்சித்திட்டமானது பின்வரும் சிறப்பு பட்டப்படிப்பில் பிரதான பாடங்களாக வழங்கப்படுகின்றன.

தாவரவியல், இரசாயனவியல், மீன்பிடியியல் விஞ்ஞானம், கணனி விஞ்ஞானம், கணிதம், பௌதிகவியல், புள்ளிவிபரவியல், விலங்கியல்

அனுமதிக்கப்பட்ட பாடச்சேர்க்கைகள் - 1ஆம் வருடம்

- தாவரவியல், விலங்கியல், இரசாயனவியல்
- தாவரவியல், விலங்கியல், மீன்பிடியியல் விஞ்ஞானம்
- தாவரவியல், இரசாயனவியல், மீன்பிடியியல் விஞ்ஞானம்
- இரசாயனவியல், விலங்கியல், மீன்பிடியியல் விஞ்ஞானம்
- தூய கணிதம், பிரயோக கணிதம், புள்ளிவிபரவியல்
- தூய கணிதம், பிரயோக கணிதம், கணனி விஞ்ஞானம்
- தூய கணிதம், பிரயோக கணிதம், பௌதிகவியல்
- தூய கணிதம், பிரயோக கணிதம், இரசாயனவியல்
- புள்ளிவிபரவியல், தூய கணிதம், இரசாயனவியல்
- புள்ளிவிபரவியல், தூய கணிதம், கணனி விஞ்.
- புள்ளிவிபரவியல், பிரயோக கணிதம், இரசாயனவியல்
- புள்ளிவிபரவியல், பிரயோக கணிதம், பௌதிகவியல்
- கணனி விஞ்ஞானம், தூய கணிதம், பௌதிகவியல்
- கணனி விஞ்., பிரயோக கணிதம், பௌதிகவியல்
- கணனி விஞ்., பிரயோக கணிதம், இரசாயனவியல்
- தூய கணிதம், பௌதிகவியல், புள்ளிவிபரவியல்
- இரசாயனவியல், கணனி விஞ்ஞானம், தூய கணிதம்
- இரசாயனவியல், கணனி விஞ்ஞானம், புள்ளிவிபரவியல்
- கணனி விஞ்ஞான (நேரடி) கற்கைநெறியானது குறிப்பிட்ட கற்கைநெறி அலகுகளைக் கொண்டுள்ளது.

பொறியியல் தொழில்நுட்பம் கௌரவ இளங்கலைமாணி நிகழ்ச்சித் திட்டம் [BET(Hons)]

யாழ் பல்கலைக்கழகத்தின் தொழினுட்பப் பீடத்தினால் வழங்கப்படும் இப் பொறியியல் தொழிநுட்பப் பாடநெறியானது பின்வரும் கௌரவ கற்கைநெறிகளை வழங்குகின்றது.

- மோட்டார் வாகனவியல்
- கட்டிட நிர்மாணவியல்
- இலத்திரனியல்

உறுகுணைப் பல்கலைக்கழகம்		
கற்கை நெறி	**பாடச்சேர்க்கை (விதித்துரைக்கப்பட்டவிடத்து)**	**க./மொ**
கலை	-	S
முகாமைத்துவம்	-	E
மருத்துவம்	-	E
விவசாய வள முகாமைத்துவமும் தொழில்நுட்பமும்	-	E
பொறியியல்	-	E
உயி. விஞ்ஞானம்	தாவரவியல், இரசாயனவியல், விலங்கியல்	E
உயி. விஞ்ஞானம்.	இரசாயனவியல், தாவரவியல், பௌதிகவியல்	E
உயி. விஞ்ஞானம்	இரசாயனவியல், பௌதிகவியல், விலங்கியல்	E
உயி. விஞ்ஞானம்	பௌதிகவியல், தாவரவியல், விலங்கியல்	E
பௌ. விஞ்ஞானம்	இரசாயனவியல், பௌதிகவியல், கணிதம்	E
பௌ. விஞ்ஞானம்	கணனி விஞ்ஞானம், பௌதிகவியல், கணிதம்	E
பௌ. விஞ்ஞானம்	இரசாயனவியல், பிரயோக கணிதம், கணிதம்	E
பௌ. விஞ்ஞானம்	பிரயோக கணிதம், கணிதம், பௌதிகவியல்	E
பௌ. விஞ்ஞானம்	இரசாயனவியல், கணிதம், கணனி விஞ்ஞானம்	E
பௌ. விஞ்ஞானம்	கணனி விஞ்ஞானம், கணிதம், பிரயோக கணிதம்	E
பௌ. விஞ்ஞானம்	கணிதம், கைத்தொழில் கணிதம், இரசாயனவியல்	E
பௌ. விஞ்ஞானம்.	கணிதம், கைத்தொழில் கணிதம், பௌதிகவியல்	E
கடற்றொழில் மற்றும் கடல்சார் விஞ்ஞானம்	-	E
தாதியியல்	-	E
மருத்துவ ஆய்வுகூட விஞ்ஞானங்கள்	-	E
மருந்தகவியல்	-	E
கணனி விஞ்ஞானம்	-	E
விவசாய வியாபார முகாமைத்துவம்	-	E
பசுமைத் தொழில்நுட்பம்	-	E
பொறியியல் தொழில்நுட்பம்	-	E
தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம்	-	E
கடல்சார் மற்றும் நன்னீர் விஞ்ஞானங்கள்	-	E
உயிர் முறைமைகள் தொழில்நுட்பம்	-	E

மானுடப் பண்பியல் மற்றும் சமூக விஞ்ஞானப் பீடம்

பட்டப்படிப்பு பயில்வோர்களின் அறிவைப் பூரணப்ப:த்துவதற்கு அடிப்படை கற்றை நெறிகளும் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன.

அடிப்படை கற்கை நெறிகளை தெரிவுசெய்வதற்காக முன்நிபந்தனைகள் இல்லை. தமது விருப்பத்திற்கேற்றப் பாடங்களைத் தெரிவுசெய்து கற்பதற்கான வாய்ப்பை வழங்குகின்றது. ஆங்கிலம், தகவல் தொழிநுட்பம் (IT) அடிப்படைக் கணிதம், மானுடப் பண்பியல் மற்றும் சமூக விஞ்ஞான ஆய்வுமுறையியல் என்ற பாடங்களில் ஆங்கிலமும் தகவல் தொழிநுட்பம் (IT) மற்றும் ஆங்கிலமும் கட்டாய பாடமாக்கப்பட்டுள்ளன.

மேலதிகமாக தமிழ், பிரெஞ்சு, ஜேர்மன், கொரியன், ஜப்பான் ஹிந்தி மொழிகளைக் கற்பதற்கான சான்றிதழ் பாடநெறிகள் உள்ளன.
மதிப்பீடு முறை
செமஸ்டர் முறையில் தேர்வுகள் நடாத்தப்பட்டு வருகின்றன. தொடர் மதிப்பீடுகளும் செமஸ்டர் இறுதியில் பரீட்சைகளும் நடைபெறவுள்ளன.

மதிப்பளவு அடிப்படையாகக் கொண்ட அரை ஆண்டு கற்கைநெறி அலகுகளுள்ள செமஸ்டர் முறை (Credits based course units semesters system) மானுட பண்பியல் மற்றும் சமூக விஞ்ஞானப் பீடத்தில் பயன்படுத்தப்படும்.

உயர்ந்த புத்தியுள்ள தொழில் திறன் கொண்ட ஆக்கபூர்வமான பட்டதாரிகளை உருவாக்குவது பீடத்தின் முக்கிய நோக்கமாகும். பொருளாதார மற்றும் சமூக அபிவிருத்திக்கான அவர்களின் பங்களிப்பு எதிர்பார்க்கப்படும். அத்தோடு சிறந்த நல்வாழ்வோடும் கூர்மையான அறிவுள்ளவர்களாகவும் சமூகத்தில் விளங்குவதும் எதிர்ப்பார்க்கப்படுகின்றன.

1. இளங்கலைமாணி (சாதாரண பட்டம்) மூன்று வருடங்கள்
2. இளங்கலைமாணி (சிறப்பு பட்டம்) நான்கு வருடங்கள்

இளங்கலைமாணி (சாதாரண பட்டம்) கற்கை நெறியின் கீழ் ஆங்கிலம், தொல்பொருளியல், வரலாறு, பௌத்த நாரீகம், பாளி, பௌத்த தத்துவம், அரசியல், பொருளியல், சிங்களம், புவியியல், சமூகவியல், சமூகப் புள்ளியியல், தகவல் தொழில்நுட்பவியல் ஆகியனவை கற்றுக்கொள்ளலாம். இந்த பாடநெறிக்கான விண்ணப்பிக்க விரும்புவோர் மூன்று விடயங்களைத் தெரிவுசெய்ய முடியும்.

ஆங்கில மொழியைத் தேர்ந்தெடுக்கும் மாணவர்கள் க.பொ.த. (சா/த) பரீட்சையில் ஆங்கில இலக்கியம் அல்லது க.பொ.த. (உ/த) பரீட்சையில் ஆங்கிலம் ஒரு பாடமாக செய்து சித்தி (C) பெற்றிருத்தல் வேண்டும்.

சமூக புள்ளியியலை ஒரு பாடமாகக் கற்றுக்கொள்ள விரும்புவோர்கள் க.பொ.த. (சா/த) பரீட்சையில் கணிதத்தில் ஆகக் குறைந்த பட்சம் திறமைச் சித்தி (C) பெற்றிருத்தல் வேண்டும்.

பாளி கற்கைநெறியைப் பயில்வதற்கு க.பொ.த. (உ/த) பரீட்சையில் பாளி மொழியை ஒரு பாடமாக செய்து சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.

தகவல் தொழில்நுட்பவியல் பாடநெறிக்கான மாணவர்கள் பீடத்தால் நடாத்தப்படும் திறனறி தேர்வு மூலம் தேர்ந்தெடுக்கப்படுவார்கள்.

மேலே குறிப்பிட்ட விடயங்களில் ஆங்கிலமும் தகவல் தொழில்நுட்பமும் தவிர ஏனைய கற்கை நெறிகளில் ஒன்று சிறப்புப் பட்டப் படிப்பாக தெரிவு செய்வதற்கான வாய்ப்புபள் வழங்கப்பட்டுள்ளன.

முதலாம் வருடத்தில் இரண்டு செமஸ்டர்களிலும் சிறந்த பெறுபேறுகளைப் பெற்றுக்கொண்ட மாணவர்களுக்கு சிறப்புப் பாடநெறிகளைக் கற்பதற்கான வாய்ப்புக்கள் வழங்கப்படும். மாணவர்கள் தாங்கள் விரும்பிய பாடநெறிகளை ஆங்கில மொழி மூலமாகவும் கற்றுக்கொள்ளக்கூடிய வாய்ப்பு உண்டு.

முகாமைத்துவம் மற்றும் நிதிப் பீடம்

கணக்கியல் மற்றும் நிதித்துறை, முகாமைத்துவத் துறை மற்றும் சிறுகைத் தொழிற் முகவர் துறை போன்ற மூன்று கற்கைத் துறைகளுக்கு மேலதிகமாக, கணணிப்பிரிவு மற்றும் e-கற்கைகள் போன்ற மையங்களை இப்பீடம் உள்ளடக்கியுள்ளது.

தற்பொழுது இப்பீடம் வணிக நிர்வாக இளமானி (BBA) கௌரவ பட்டங்களை நெறிப்படுத்தும் பல்வகைப் பாட நெறிகளை வழங்குகின்றது. பல்கலைக்கழகத்தின் தற்போதைய கல்விச் சீர்திருத்தத்தின் கீழ் 2001 ஆம் ஆண்டு செப்தெம்பர் மாதம் முதல் செயற்படும் வகையில் பட்டப் பாடச் செயற்திட்டங்கள், பாட அலகு அடிப்படையில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. தற்பொழுது இச் சீர்த்திருத்தத்தின் கீழ், பீடம், வணிக நிர்வாக இளமாணிப் பட்டப் பாடச் செயற்திட்டங்களை ஆங்கில மொழியில் வழங்குகின்றது.

முகாமைத்துவ மற்றும் நிதிப் பீடம், இலங்கையில் தர நிலை வரம்புறுகுக் தர நிலைகளுக்கு (Sri Lanka Qualification Framework) அமைய வடிவமைக்கப்பட்டு பீடத்திற்கு மாணவர்களைச் உட்சேர்த்துக்கொள்ளும் பொழுது, ஆரம்பத்தில் பல பொதுப் பாட நெறிகளின் ஊடாக முகாமைத்துவ மற்றும் நிதி சார்பான அம்சங்களில் மிகத் திடமான அடிப்படை அறிவினை வழங்குகின்றது. பின்னர் பின்வரும் பட்டக் கல்விச் செயற்திட்டங்களை வழங்குகின்றது.

பீ.பீ.ஏ. (கணக்கியல்) கௌரவ பட்டம் (SLQF 06)
பீ.பீ.ஏ. (முயற்சியாண்மை) கௌரவ பட்டம் (SLQF 06)
பீ.பீ.ஏ. (மனிதவள முகாமைத்துவம்) கௌரவ பட்டம் (SLQF 06)
பீ.பீ.ஏ. (சந்தைப்படுத்தல்) கௌரவ பட்டம் (SLQF 06)

ஒவ்வோர் மாணவரும் தெரிவு செய்யப்பட்ட விசேட பட்டப் பாடப் பிரிவில் 60 பாட மதிப்பீட்டு அலகுகளுக்கு மேலாக அல்லது 120 பாட மதிப்பீட்டு அலகுகளை பெறுதல் அவசியமாகும்.

விஞ்ஞான பீடம்

விஞ்ஞானமாணி (பொது/விசேட) பட்டம்

சகல கல்வியாண்டுகளும் ஒவ்வொன்றும் 15 கிழமைகளுக்கு உட்பட்ட இரண்டு பருவ ஆண்டுகளை உள்ளடக்கியுள்ளன. பாடநெறி அலகுகள், பயிற்சிக் கூற்று மதிப்பீட்டு முறைக்கு உட்படுத்தப்பட்டுள்ளன. பட்டப்பாடநெறியின் முதற் கட்டத்திலேயே மாணவர்கள் விரும்பியவாறு தங்களது பாடச் சேர்க்கைகளை தெரிவு செய்தல் வேண்டும். முதலாம் மற்றும் இரண்டாம் வருடங்களில் ஏற்கனவே குறிப்பிடப்பட்டுள்ள மூலப் பாட அலகுகளை தெரிவுசெய்வது கட்டாயப்படுத்தப்பட்டுள்ளது. மாணவர்கள் தங்கள் எதிர்கால அபிலாஷைகளுக்கு அமைவாக ஒவ்வொரு துறைகளும், வழங்கும் விருப்புத் தேர்வு பாடங்களுக்கு உள்ளடக்கிய பாட அலகுகளை தெரிவுசெய்வதற்கான வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது. விருப்பத் தெரிவுப் பாடநெறிகளில் பல, பௌதீக மற்றும் உயிரியல் விஞ்ஞான பாடதேர்வுகளுக்கும் பொதுவானவையாகும். பீடத்தினால் வழங்கப்படும் சில விருப்பப் பாட அலகுகள் கீழே தரப்பட்டுள்ளன.

மின்னணுவியல், நுண்தடுப்புகளும், பாவனைகளும், கணக்கிடல் பௌதிகவியல், வானியியல் மற்றும் விண்ணியல், முகாமைத்துவம், கணக்கீடு, சந்தை முகாமைத்துவம், ஆய்வு செயற்திட்டம், ஆய்வு முறைமையியல், பேச்சு முறையும் தொடர்பாடலும், உடற் தகுதி மற்றும் சுகாதார முகாமைத்துவம், அறிவியல் சார்ந்த எழுத்துக்கலை மற்றும் தொடர்பு, மரபியற் தொழில்நுட்பம், உயிரியற் தொழில்நுட்பம், உயர் தர சுற்றாடலியல், தோட்ட வேளாண்மை மற்றும் மலர்செடி வளர்ப்பு மற்றும் நிலவடிவமைப்பு, காடு வளர்ப்பு அறிவியல், உணவுத் தொழில்நுட்பம், செயல் முறை ப'ச்சியியல், நோய் தடுப்புவியல், நீரின் விருத்தியியல், ஒட்டுண்ணியியல், பறவையியல், உயிரியல் ஆய்வு ஒழுக்க விதி, பொருளியலுக்கான ஆரம்ப கணித முறைகள், நரம்பு வலையமைப்புக்குரிய கோட்பாடு மற்றும் முறைமை, கட்புல செயல்திட்டம், கணனி வன்கணியம் மற்றும் வலையமைப்பு, முறைமை மற்றும் வலையமைப்பு நிர்வாகம், கைத்தொழிலுக்கான இரசாயனம், சுற்றாடல் இரசாயனம்.

மேலதிகமாக கணனி விஞ்ஞானம் ஒரு பாடமாகத் தெரிவுசெய்யாத பௌதீக விஞ்ஞான மாணவர்களும், மற்றும் சகல உயிரியல் விஞ்ஞான மாணவர்களும் முதல் கல்வி ஆண்டில் கணனி கற்கை பாடநெறியை (CLC) கட்டாயமாக பின்பற்ற வேண்டியுள்ளதுடன், CLC இல் அனுபவம் உடையவர்கள் இரண்டாம் வருடத்தில் தகவல் தொழில்நுட்ப சான்றிதழ் பாட நெறியை தெரிவுசெய்ய உரிமைபெறுவர்.
முதலாம் மற்றும் இரண்டாம் வருட பரீட்சைகளில் திறம்பட தேறிய மாணவர்களுக்கு தாவரவியல், இரசாயனவியல், கணனி விஞ்ஞானம், கணிதம், பௌதீகவியல் மற்றும் விலங்கியல் விசேட பட்டப் பாட நெறிகளும் நடாத்தப்படுகின்றன. (மூன்றாம் மற்றும் நான்காம் வருடங்களில் விசேட பட்டப் பாடநெறிகள் வழங்கப்படுகின்றன). இப்பாட செயற் திட்டங்களின் நோக்கம் கல்விசார் மற்றும் ஆய்வுத் துறைகளில் தொழில் விருத்திகளை பெற்றுக்கொள்வதற்கான ஆலோசனைகளை வழங்குவதாகும்.

சகல மாணவர்களும் வழங்கப்பட்டுள்ள பாடநெறிகளை தொடர ஆங்கில மொழித் தேர்ச்சியினை பெற்றுக்கொள்ள வேண்டப்படுகின்றனர். பாடநெறி அலகுகள் பற்றிய மேலதிக விபரங்கள் மற்றும் வளங்கள், வசதிகள் பல்கலைக்கழக இணையத் தளத்தினூடாக பெற்றுக்கொள்ள முடியும். http://www.ruh.ac.lk

கணனி விஞ்ஞான இளமானி பட்டங்கள் (பொது/விசேட)

இதற்கான மாணவர்கள் விசேட தெரிவு வழியாக உட்புகுத்தப்படுகின்றனர். மாணவர்கள் கணனி விஞ்ஞான பட்டப் பாடநெறிக்கூடாக கணனி பற்றிய சகல அம்சங்களையும் உள்ளடக்கிய அறிவினைக் கற்றுக்கொள்ள வாய்ப்பு அளிக்கப்பட்டுள்ளது. முதல் மூன்றாம் ஆண்டுகளில் மிகச் சிறப்பான தேர்ச்சி பெற்ற மாணவர்கள் மேலதிகமாக ஒரு வருடத்திற்கு கணனி விஞ்ஞான (விசேட) பட்டப் பாடநெறியினை தொடர்வதற்கு தெரிவுசெய்யப்படுவர்.

மருத்துவ பீடம்

ருகுனுப் பல்கலைக்கழக மருத்துவ பீடமானது இலங்கையின் தென் பகுதியில் அமைந்துள்ள ஓரேயொரு மருத்துவ பீடமாகும். இது 1980 இல் நிறுவப்பட்டதிலிருந்து நீண்ட துர பயணத்தின் பின் இலங்கையிலுள்ள சிறந்த மருத்துவ பீடங்களில் ஒன்றாக பரிணாமித்துள்ளது. பட்டதாரிகளின் தரமானது நாட்டிலுள்ள வேறு எந்த மருத்துவ பீட பட்டதாரிகளிலும் குறைவானதல்ல.

இங்கு 15 துறைகள் உள்ளன. அவையாவன அவையாவன, உடற்கூற்றியல் துறை, உயிரியல் இரசாயனத் துறை, சமூக மருத்துவ துறை, சட்ட மருத்துவம் மற்றும் தடையப்பகுப்பாய்வியல் துறை, மருத்துவ துறை, நுண்ணுயிரியல் துறை, மகப்பேற்றியல் மற்றும் பெண்ணியல் மருத்துவ துறை, குழந்தையியல் மருத்துவ துறை, ஒட்டுண்ணியியல் துறை, நோய் பகுப்பாய்வியல் துறை, மருந்தியல் துறை, உடல் தொழிட்பாட்டியல் துறை, உள நோயியல் துறை, அறுவைச் சிகிச்சையியல் துறை, மயக்க மருந்தியல் துறை ஆகும். பீடத்தின் உட்கட்டுமானங்களாவன வரிவுரை மண்டபங்கள், பயிற்சிக் கூடங்கள், ஆய்வு கூடங்கள், மருத்துவ திறமை ஆய்வு கூடம், தொழில்நுட்ப ஆய்வு கூடம், நூலகம், உணவகம், உடற்பயிற்சிக்கூடம், விளையாட்டு மைதானம் மற்றும் விசாலமான கேட்போர் கூடம் என்பனவாகும். இங்கு மாணவர் உதவிச் சேவை நிலையமொன்று நாள் முழுவதும் இயங்குகின்றது. பீட வளாகத்தினுள் மாணவர் விடுதி 560 மாணவர்களுக்கு போதுமான வசதிகளைக் கொண்டுள்ளது.

இணைந்த சுகாதார விஞ்ஞான பீடம்

தாதியியல் மருத்துவ ஆய்வுகூட விஞ்ஞானம் மற்றும் மருந்தகவியல் ஆகிய துறைகளில் இளமானிப் பட்டப் படிப்பு பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களை வழங்குவதற்காக 2008 ஆம் ஆண்டில் ருகுனுப் பல்கலைக்கழக மருத்துவ பீடத்தின் கீழ் இணைந்த சுகாதார விஞ்ஞான பட்டப் படிப்பு நிகழ்ச்சித் திட்டம் (AHSDP) தாபிக்கப்பட்டது. அத்தகைய இளமானி பட்டப்படிப்புக்கான தேவையானது பல தசாப்தங்களாக நாட்டின் சுகாதாரத் துறையால் உணரப்பட்டது. இதுவே நவீன சுகாதார நலத்திட்டத்தின்போக்குகளைச் சமாளிக்கக்கூடிய திறமையுள்ள அதிகம் பயிற்றுவிக்கப்பட்ட தனிநபர்களுக்கான கேள்வியை அதிகரிக்கச் செய்துள்ளது.

இந்த கற்கைநெறிகளானவை, தேசிய மற்றும் சர்வதேச தொழிற் சந்தையில் தொழில் புரிவதற்குப் பொருத்தமான பட்டதாரிகளை உருவாக்குவதை நோக்காகக் கொண்டு தயாரிக்கப்பட்டுள்ளன.

ருகுணப் பல்கலைக்கழக இணைந்த சுகாதார விஞ்ஞான பீடமானது 2017 ஆம் ஆண்டு புரட்டாதி மாதம் நிறுவப்பட்டுள்ளது. இதுவே இலங்கையின் தென் மாகானத்தில் அமைந்துள்ள ஓரேயொரு இணைந்த சுகாதார விஞ்ஞான பீடமாகும். இணைந்த சுகாதார விஞ்ஞான பீடமானது தற்போது மூன்று பட்டப் படிப்பு கற்கைநெறிகளை வழங்கும் மூன்று துறைகளை உள்ளடக்கியுள்ளது. அவையாவன தாதியியல் இளம்விஞ்ஞானமானி(கௌரவ) பட்டம், மருத்துவ ஆய்வுகூட இளம்விஞ்ஞானமானி(கௌரவ) பட்டம், மருந்தகவியல் இளமானி(கௌரவ) பட்டம் என்பனவையாகும். மூன்று பட்டப்படிப்புகளும் ஆங்கில மொழி மூலம் நடத்தப்படுகின்றன. மேலும் ஒவ்வொரு பட்டப்படிப்பு கற்கைநெறிகளும் 120 மதிப்பெண்களை உள்ளடக்கியுள்ளது. இப் பாடத்திட்டமானது தனியாள் ஆய்வு செயற்திட்டங்கள் மற்றும் பொருத்தமான பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள் (மருத்துவமனை, மருத்துவ சிகிச்சை, சமூக மற்றும் கைத்தொழிற் துறை உள்ளிட்ட அடிப்படைக் கூறுகளுடன் இலங்கை தரக் கட்டமைப்பு (SLQF) வழிகாட்டுதலுக்கு இணங்கி நான்கு வருடங்களுக்கு வடிவமைக்கப்பட்டுள்ளது.

இணைந்த சுகாதார விஞ்ஞான பீடமானது மிகவும் அண்மித்த எதிர்காலத்தில் புதிய இளமானிப் பட்டப் படிப்பகள் மற்றும் சுகாதார விஞ்ஞானத்துடன் தொடர்பான முதுகலைமாணி பட்டப்படிப்புகளை தொடங்கத் திட்டமிடடிருக்கின்றது.

பொறியியற் பீடம்

பொறியியற் பீடமானது பொறியியல் இளமாணிப் பட்டத்தை (B.Sc.Eng) பெற்றுக்கொள்ளும் வகையில் முழுநேரப் பட்டப்படிப்புக்களை வழங்குகின்றது. ஆண்டுக்கு இரண்டு பருவங்களைக் கொண்ட நான்கு ஆண்டுகளுக்கு பட்டப்படிப்பு நடைபெறும். பட்டடப்படிப்புக்கள் தொடங்க முன்னதாக நடத்தப்படும் அபிவிருத்தி கற்கைநெறியில் கணினி, சமூக விழிப்புணர்வு, ஆங்கிலம் என்பன கற்பிக்கப்படும். எட்டு பருவங்களைக் கொண்ட பட்டப்படிப்பில் இரண்டு பருவங்கள் பொது கற்கைநெறியைக் கொண்டதாக அமைக்கப்பட்டுள்ளது. மூன்றாம் பருவம் தொடக்கம் முதல் இரண்டு பருவங்களிலுமுள்ள பாடங்களில் மாணவர்கள் காட்டும் திறமைகளையும் அவர்களது விருப்பையும் அடிப்படையாகக் கொண்டு மேற்கண்ட விசேட கற்கைநெறிகளில் ஒன்றுக்கு மாணவர்கள் தெரிவுசெய்யப்படுவர்.

1. குடிசார் மற்றும் சூழல் பொறியியல் துறை
2. மின் மற்றும் தகவல் பொறியியல் துறை
3. இயந்திரவியல் மற்றும் உற்பத்தி பொறியியல் துறை
4. கடற்சார் பொறியியல் மற்றும் கப்பல் கட்டுமானவியல்

மேற்கண்ட நான்கு விசேட கற்கைநெறிகள் பீடத்தின் 3 பட்டம் வழங்கும் துறைகளான குடிசார் மற்றும் சூழல் பொறியியல் துறை, மின் மற்றும் தகவல் பொறியியல் துறை, இயந்திரவியல் மற்றும் உற்பத்தி பொறியியல் துறை என்பவற்றால் நடாத்தப்படுகின்றன.

இப்பட்டப்படிபானது கணிதம், பொறியியல், விஞ்ஞானம் மற்றும் பொறியியல் வடிவமைப்பு போன்ற பாடங்களை மையமாக கொண்டு விளைவை அடிப்படையாகக் கொண்ட கற்கைநெறியாக (Outcome Based Education) வடிவமைக்கப்பட்டுள்ளது. கட்டாய மைய பொறியியல் வடிவமைப்பு பாடங்களுக்கு மேலதிகமாக பொது, மேலதிக தொழில்நுட்பவியல் பாடங்களும் தொழிலக பயிற்சியும் வழு சேர்க்கின்றன. தற்போது எமது பொறியியல் பீடத்தினால் வழங்கப்படும் பட்டப்படிப்புகள் மூன்றும் வாசிங்டன் ஒப்பந்தத்திற்கமைய இலங்கை பொறியியல் நிறுவனத்தினால் (IESL) தர மதிப்பீடு செய்யப்பட்டு நிபந்தனையற்ற முழுத் தரத்தை கொண்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது. வாசிங்டன் ஒப்பந்தமானது சர்வதேச பொறியியல் கற்கைநெறிகளை தரப்படுத்தும் ஒரு ஒப்பந்தமாகும். இதன் மூலம் வாசிங்டன் ஒப்பந்தத்தினை செய்து கொண்டுள்ள நாடுகளான(Washington Accord signatory countries) அவுஸ்திரேலியா, கனடா, தாய்வான், ஓங்கொங், அயர்லாந்து, யப்பான், தென்கொரியா, மலேசியா, நியுசிலாந்து, சிங்கப்பூர், அய்கிய இராச்சியம், அமேரிக்கா போன்ற நாடுகளில் இப்பட்டம் ஏற்றுக்கொள்ளப்படும்.

பொறியியல் பீடமானது கைத்தொழில் கலந்தாய்வுக் குழுவொன்றின் மூலமாக பொறியியல்சார் நிறுவனங்களுடன் நெருங்கிய தொடர்பை பேணிவருகிறது. பாரிய பொறியியல் நிறுவனத்தின் பொறியியலாளர்கள் இக் கைத்தொழில் கலந்தாய்வுக் குழுவில் அங்கம் வகிக்கின்றனர். இவர்கள் பொறியியல் பீடத்தின் பாடதிட்ட அபிவிருத்தியில் முக்கிய பங்களிப்பு செய்து வருகின்றனர். இதன் மூலம் பொறியியல் பீடத்தின் பாடத்திட்டங்கள் பொறியியல் கைத்தொழிலின் தேவைகளுக்கமைவானது என்பது உறுதி செய்யப்படுகின்றது.

மேற்கண்ட மூன்று துறைகளில் ஒன்றைத் தெரிவு செய்யும் மாணவர்களுக்கு தம் விசேட கற்கை துறைக்குள் வழங்கப்படும் வளர்ந்து வரும் தொழில்நுட்பங்களை மையப்படுத்தி வழங்கப்படும் தொழில்நுட்ப தேர்வுப்பாடங்ளை கற்பதன் மூலம் தமது தொழில் தேர்வுக்கேற்றாற் போல் மேலும் விசேட நிபுணத்துவத்தை அடைய வாய்ப்பேட்பட்டுள்ளது. இதன் மூலம் பின்வரும் விசேட நிபுணத்துவம் பெற்ற பொறியியாளராக வரும் வாய்ப்புள்ளது.

குடிசார் மற்றம் சூழல் பொறியியல் துறை	மின் மற்றும் தகவல் பொறியியல் துறை	இயந்திரவியல் மற்றும் உற்பத்தி பொறியியல் துறை	கடல்சார் பொறியியல் மற்றும் கப்பல் கட்டுமானவியல்
• கட்டட பொறியியலாளர் • கடல்சார் மற்றும் நீர் பொறியியலாளர் • சூழல் பொறியியலாளர் • புவி தொழினுட்ப பொறியியலாளர் • போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் பொறியியலாளர் • கட்டமைப்புசார் பொறியியலாளர்	• இலத்திரனியல் மற்றும் கருவிமயமாக்கல் பொறியியலாளர் • மின் வலு பொறியியலாளர் • தரவுவலைப் பொறியியலாளர் • தொலைத்தொடர்பு பொறியியலாளர் • மென்பொருள் பொறியியலாளர்	• இயந்திரவியல் பொறியியலாளர் • கட்டட சேவைகள்(MEP) பொறியியலாளர் • பதார்த்தப் பொறியியலாளர் • இயந்திர மின்நுட்ப பொறியியலாளர் • உற்பத்திப் பொறியியலாளர்	• கடற்சார் பொறியியலாளர் • கப்பல் கட்டுமானவியலாளர்

வாசிங்டன் ஒப்பந்தத்துக்கமைவாக மூன்று துறைகளால் வழங்கப்படும் மேலதிக தொழினுட்ப பாடங்களுக்கு மேலதிகமாக, துறையிடைத் திணைக்களம் மூலம் பொறியியல் கணிதம், முகாமைத்துவம், பொருளியல், அழகியல் மற்றும் பொறியியல் நன்நெறி போன்ற பரந்துபட்ட பாடங்கள் வழங்கப்படுகின்றன. இப் பட்டப்படிப்பின் பின்னர் மாணவர்கள் முதுமாணி, ஆய்வியல் நிறைஞர், முனைவர் பட்டப்படிப்புகளுக்கு இணைந்துக் கொள்ளும் வாய்ப்பும் வழங்கப்படுகின்றது.

தொழில்நுட்பவியல் பீடம்

தொழில்நுட்பவியல் பீடம் நான்கு துறைகளைக் கொண்டுள்ளது. அவையாவன :

பொறியியல் தொழில்நுட்பவியல் (DET), தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பவியல் (DICT), உயிர் முறை தொழில்நுட்பவியல், பல்துறை கற்கைகள் என்பனவாகும்.
பீடத்தினால் உயர் தர தொழில்நுட்பவியல் பிரிவு மாணவர்களுக்கு நான்காண்டு இளமாணிப் பட்டங்கள் இரண்டு வழங்கப்படுகின்றன. அவையாவன :

1. பொறியியல் தொழில்நுட்பவியல் கௌரவ இளமாணிப் பட்டம்
2. தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பவியல் கௌரவ இளமாணிப் பட்டம்
3. உயிர் முறைமைகள் தொழில்நுட்பவியல் கௌரவ இளமாணிப் பட்டம்

மேற்குறிப்பிட்ட அனைத்து இளமாணிப் பட்டப்படிப்புக்களும் ஒவ்வொன்றும் 15 வாரங்களைக் கொண்டு எட்டு செமஸ்டர்களைக் கொண்டதாக வடிவமைக்கப்பட்டுள்ளது. இங்கு குறைந்தபட்சம் 120 கிரெடிட் கொண்ட பாடங்களும் ஆறு மாத தொழிலக பயிற்சியும் உள்ளடக்கப்பட்டுள்ளன. அதே வேளை பல்துறை கற்கை துறையானது இம்மூன்று இளமாணிப் பட்டங்களிற்கும் தேவையான மேலதிக பாடங்களை வழங்குகின்றது. இம்மூன்று துறைகளும் ஆங்கில மொழியில் கற்பிக்கப்படும். பாட உள்ளடக்கங்கள் தொடர்பான மேலதிக விபரங்கள் பல்கலைக்கழக இணையதளத்தில் தரப்பட்டுள்ளன.

விவசாய பீடம்

ருகுனு பல்கலைக்கழக விவசாய பீடம் 1978ஆம் ஆண்டு அமைக்கப்பட்டதோடு, தற்போது இலங்கையின் தென் திசையின் விவசாய கல்வி மற்றும் ஆய்வுத் துறையின் மத்திய நிலையமாகவும் அமைந்துள்ளது. ஏழு கல்வித்துறைகளைக் கொண்ட இந்த பீடம் விஞ்ஞானம் தெழில்நுட்பம், முகாமைத்துவம், பொருளாதாரம், சூழல் சமூக மூல கோட்பாடுகளை, உபயோகித்து உணவு, மிருக உணவு, நார் மற்றும் எரிபொருள், (உயிரியல்) தொடர்பாக அதிகரிக்கப்படும் உலக தேவைகளை நிறைவேற்ற பங்களிப்பு செய்யக்கூடிய பலவிதத்திலான மற்றும் சவால்களுக்கு முகம் கொடுக்கக்கூடிய தொழிலாளர்களை உருவாக்குவது விவசாய விஞ்ஞானத் துறையினுள் மரபு சார்ந்த போகப் பயிர்ச் செய்கைகளையும் மற்றும் கால்நடை நிருவாகம் ஆகிய பிரதான விடய நெறிகளுக்கு அப்பால் பரந்து சென்ற நடைமுறை அறிவினால் கல்விமான்களை முன்னடையச் செய்வதுமாகும். இந்த தேவைகளை நிறைவேற்றிக் கொள்வதற்காக ருகுனு பல்கலைக்கழக விவசாய பீடம் கீழ் குறித்த கௌரவ பட்டதாரி பாடநெறிகள் மூன்றினை அறிமுகப்படுத்தியுள்ளது.

1.விவசாய வள முகாமைத்துவம் மற்றும் தொழில்நுட்பம் தொடர்பான விஞ்ஞான பட்டம் (BSc in Agricultural Resource Management Technology)
2.விவசாய வியாபார முகாமைத்துவம் தொடர்பான விஞ்ஞான பட்டம் (BSc in Agribusiness Management)
3.பசுன்நிர தொழில்நுட்பம் தொடர்பான விஞ்ஞான பட்டம் (BSc in Green Technology)

விவசாய விஞ்ஞானம், சூழல் மற்றும் வளங்கள் முகாமைத்துவ துறையில் இணைந்த எதிர்கால தலைவர்களுக்குத் தேவையான கல்வி அறிவுகள் உட்பட உரிய பயிற்சிகளை பெற்றுக்கொடுத்து சமூக ஒழுக்க நெறிகளால் அவர்களை வலிமைப்படுத்தி மற்றும் சமூகத்தினுள் சிறந்த அறிவுள்ள நோக்குகளைக் கொண்ட தொழில் துறையினர்களை உருவாக்குவது இந்த பட்டதாரி பாடநெறிகளின் பிரதான அபிலாசைகளாகும். பட்டப் பாடநெறிகள் மூன்றிலும் உள்ளடக்கப்பட்ட பாடவிதான மூலம் பட்டதாரிகளுக்கு வியாபார பெறுமதி வாய்ந்த அனுபவங்கள் மற்றும் எதிர்காலத்தில் விவசாயத் துறைக்கு உட்செல்லத் தேவையான அமைப்புகளையும் பெற்றுக் கொடுப்பதாகும். உரிய பிரிவுக்கான அறிவு மற்றும் பயிற்சிகளுடனான விசேட தொழில்துறையினர்கள் மூலம் நடாத்தப்படும் போதனைகள் மற்றும் விஞ்ஞான கூட அமர்வுகள் உட்பட தொழில் பயிற்சிகள், வெளிச் சுற்றுலாக்கள், போதனைகள் மற்றும் அதிதிகளினால் நடாத்தப்படும். கற்கைநெறிகள் மூலம் இந்தப் பயிற்சிகளை இடைவிடாமல் பெற்றுக்கொடுப்பதுண்டு.

1. விவசாய வள முகாமைத்துவம் மற்றும் தொழில்நுட்பம் தொடர்பான விஞ்ஞான பட்டம் (BSc in Agricultural Resource Management Technology)

இந்த விஞ்ஞான பட்ட பாடநெறியானது நான்கு வருட (8 கல்வித் தவணைகள்) விசேட நிபுணர் கௌரவ (SQLF 6 ஆம் தரம்) பட்டமொன்றாவதுடன் சிறந்த தகைமைகளையுடைய கல்வி சாரா பதவியினர் குழுவினர் மூலம் விடய நெறியொன்று பூர்த்தியாக்கப்படும். பாரம்பரிய மற்றும் வைத்திய விவசாய முறைகளுக்கு பதிலாக நவீன தொழில்நுட்ப மற்றும் முகாமைத்துவத்திற்குரிய அறிவு செயற்பாட்டு வேலைகள், உலகிற்கு பொருத்தமான அனுபவங்கள் மற்றும் வெளி ஆய்வுகளின் மூலம் எங்கள் பட்டதாரிகளுக்குக் கிடைக்கும். மனித வளத்தின் நல்வாழ்வுக்காக பிராந்திய, தேசிய மற்றும் சர்வதேச தேவைகளை வழங்குவதற்காக உணவு, நார் மற்றும் மீள்பிறப்பு வளு உற்பத்தியின் போது சூழல் வளு தொடர்பாக அவதானத்தைக் கொண்டு விவசாய வள முகாமைத்துவம் மற்றும் தொழில்நுட்பம் தொடர்பான விஞ்ஞான பட்டத்தினை மிகவும் கவனமாக உருவாக்கியுள்ளது. இன்றைய உலகின் தேவைகளுக்குப் பொருத்தமான விதத்தில் இந்த முழு பாடநெறியும் ஆங்கில மொழியில் கற்பிக்கப்படும். பயிராக்கவியல், விவசாய சூழல் விஞ்ஞானம், நீடு நிலையுடைய விவசாய கைத்தொழில் வளங்கள் முகாமைத்துவம், இறக்குமதி பயிர்கள், பயிரிடப்பட்ட பயிர்கள், வயல்கள் மற்றும் மரக்கரி உற்பத்தி தொழில்நுட்ப போக மாற்றங்கள், போக ஆய்வு, விசித்திர போகங்கள், நுண்ம மற்றும் பொது பொருளாதாரவியல் விவசாய வியாபார முகாமைத்துவம், மனித வளு முகாமைத்துவம், விவசாய விற்பனை, உணவு உயிர் இரசாயனவியல் மற்றும் போசாக்கு, உணவு பாதுகாப்பு தொழில்நுட்பம், உணவு உயிரினவியல் விஞ்ஞானம், பயிர் உடல் விஞ்ஞானம், மரபணு தொழில்நுட்பம் மற்றும் பயிர் இனப்பெருக்கம், பயிர் காப்புறுதி, நிரந்த குப்பை முகாமைத்துவம், விவசாய இயந்திரவியல், கால நிலை விஞ்ஞானம் மற்றும் கால நிலை மாற்ற முன்கூறல், பின் விளைச்சல் தொழில்நுட்பம், போக நீர் விநியோகம் மற்றும் நீர் முகாமைத்துவம் மற்றும் முன்வைத்தல் தொடர்பான திறமை உட்பட பாடநெறியொன்றை பாராட்டுதலுடனான செயல்முறையுடன் கற்பிக்கப்படும். அனைத்து விஞ்ஞானிகளும் அவர்களது இறுதி வருடத்தில் புகழ்மிக்க தொழில் நிறுவனம் மற்றும் கைத்தொழில் தொடர்பான ஆறு மாதகால ஆய்வுக் கருத்திட்டமொன்றினையும் புரணப்படுத்தல் கட்டாயமானதாகும். இவ்வாறு நவீன உலகிற்கு உருவெடு ஆய்வுக் கருத்திட்டமொன்றினையும் புரணப்படுத்தல் கட்டாயமானதாகும். இவ்வாறு நவீன உலகிற்கு உருவெடுக்கும் பட்டதாரிகள் சர்வதேச துறையில் மட்டுமன்றி தேசிய மட்டத்திலும் பிரகாசமான, வெற்றிகரமான தொழில் சந்தர்ப்பங்களுக்கு உரிமைகோரக் கூடியவர் என்பதை நம்பிக்கையுடன் குறிக்க முடியும்.

2. விவசாய வியாபார முகாமைத்துவம் தொடர்பான விஞ்ஞான பட்டம் (BSc in Agribusiness Management)

விஞ்ஞான பட்டதாரி விவசாய வியாபார முகாமைத்துவ பட்டப் படிப்பு பாட நெறியானது நான்கு வருடகால (8சம தவணைகள்) விசேட கௌரவ பட்டம் (SQLF6 ஆவது கட்டம் மற்றும் சம) பாடநெறிகளைக் கொண்டதுடன் தகுந்த தகைமைகளையுடைய புலமைவாய்ந்த பதவிசார் பதவியினர் குழுவின் கீழ் விரிந்து சென்ற விடயப்பிரிவுகள் பலவற்றையும் மற்றும் அதற்கான கோட்பாடு ரீதியான அறிவினையும் பூர்த்தியாக்கப்படுவதுண்டு. இதனைத்தவிர இந்த பட்டப்படிப்பு பாடநெறியின் மூலம் நடைமுறை வல்லமை மற்றும் இத்துறையின் ஆய்வுகள் ஊடாக பட்டதாரிகளுக்கு முனைத்தொழில் மற்றும் வியாபார முகாமைத்துவ பிரிவுகளில் கதவுகள் திறக்கப்பட்டுள்ளன. இதன் மூலமாக பட்டப்படிப்பினை எதிர்பார்க்கும் மாணவர்களுக்கு ஆரம்ப விவசாயக் கோட்பாடுகள், விவசாய உற்பத்தி அறிவு, வணிக ஆற்றல் மற்றும் வியாபார முகாமைத்துவ அறிவினைப் பெற்றுக்கொடுப்பதுண்டு. முழு பட்டப்படிப்பு பாடநெறிகளும் ஆங்கில மொழியில் நடத்தப்படுவதோடு, இந்தப் பாடநெறியில் உள்ளடங்கிய விடயங்களாக நுண் பொருளாதார விஞ்ஞானம், சர்வதேச பொருளாதார விஞ்ஞானம், விவசாய இயந்திரவியல் விவசாயத்தின் போது தகவல் மற்றும் தொலைத்தொடர்பு தொழில்நுட்பம் (ICT) மிருக உணவு போக உற்பத்தி பயன்பாட்டு புள்ளிவிபரங்கள், விவசாய அபிவிருத்தி மற்றும் குறிக்கோள் கல்வி நுகர்வோர் அமைப்பு, விவசாய ஆரம்பக் கல்வி, மணல் விளைச்சல் தொழில்நுட்பம், பயிர் உயிரியல், மற்றும் மரபுத் தொழில்நுட்பம், மணல் விஞ்ஞானம் விவசாய வியாபார முகாமைத்துவம், புத்தகம் வைத்தல் மற்றும் கணக்கியல், பழக்கன்று போக முகாமைத்துவம் உணவு மற்றும் போசனை விஞ்ஞானம், நுண்ணங்கி உயிரியல் மற்றும் உயிரியல் தொழில்நுட்பம், கால் நடைபோசாக்கு மற்றும் உணவு வளங்கள் தொலைத்தொடர்பு மற்றும் அறிவு விவரம், சர்வதேச வியாபாரம், தொழில் முனைத்துறை, விவசாய இறக்குமதி போக முகாமைத்துவம், உணவு பாதுகாப்பு, மற்றும் தயாரிப்பு தொழில்நுட்பம், புவி வள முகாமைத்துவம், விவசாய பரப்பு, நிருவாக முகாமைத்துவம், சூழல் பாதிப்புகல்வி, தொழிற்துறை வழிகாட்டி, மனித வள முகாமைத்துவம், விவசாய விற்பனை, இழைய வளர்ப்பு விஞ்ஞானம், பூந்தோட்ட அலங்கரிப்பு, இயற்கை வள முகாமைத்தவம், வருடத்தில் அனைத்து மாணவர்களும் இரண்டு மாதகால தொழிற் பயிற்சியையும் ஆறு மாதகால ஆய்வு கருத்திட்டத்திற்காக ஏற்றுக்கொள்ளப்பட்ட நிறுவனங்களுக்கு இணைக்கப்படுவதுண்டு. விவசாய வியாபார முகாமைத்துவ விஞ்ஞான பட்டதபரிகள் உள்நாட்டு வெளிநாட்டு எந்தவொரு நிறுவனத்தின் உயர்பதவியை ஏற்றுக்கொள்ளக்கூடிய தகுதியை பூரணப்படுத்தியதாகவும் அவர்களின் எதிர்கால தொழிற்துறை பாதை மிகவும் தெளிவானதாகவும், வெற்றிகரமானதாகவும் என்பது உண்மையானதாகும். புதிய ஆய்வுகளின் படி இதுவரை உருவாக்கப்பட்ட விவசாய வியாபார முகாமைத்துவ விஞ்ஞான பட்டதாரிகள் தற்பொழுதும் ஏற்றுக்கொள்ளப்பட்ட தேசிய மற்றும் வெளியுர் நிறுவனங்களில் உயர் தகுதிகள் வாய்ந்த தொழில் வாய்ப்புகளை பெற்றுக்கொள்ள தேர்ச்சி பெற்றுள்ளனர்.

3. விஞ்ஞான பட்டதாரி பசுன்நிற தொழில்நுட்ப பட்டப்பாட நெறி (BSc in Green Technology)

விஞ்ஞான பட்டதாரி பசுன்நிற தொழில்நுட்ப பட்டப்பாட நெறி நான்கு வருடகால (8 மாத தவணைகள்) விசேட கௌரவ பட்ட பாட நெறிகளாவதோடு (SQLF6 ஆவது கட்டம்) சிறந்த தகுதிவாய்ந்த பதவிசார் பதவியினர் குழுவின் கீழ் விரிவடைந்த விரிந்த விடயப்பிரிவுகள் பலவற்றினையும் மற்றும் அதற்கான கோட்பாட்டு ரீதியான அறிவினையும் பூர்த்தியாக்கப்படுவதுண்டு. இதனைத் தவிர இந்த பட்டப்படிப்பு பாடநெறியின் மூலம் நடைமுறை வல்லமை மற்றும் இத்துறையின் ஆய்வுகள் ஊடாக பட்டதாரிகளுக்கு நவீன பசுன்நிற தொழிலநுட்ப முறைமைகள் மற்றும் அதன் அபிவிருத்தி தொடர்பாக சிறந்த அறிவைப் பெற்றுக்கொடுப்பதுண்டு. பசுன்நிற தொழில்நுட்ப பட்டதாரியாக தற்போது ஏற்பட்டுள்ள மற்றும் எதிர்காலத்தில் ஏற்படவுள்ள அபிவிருத்தி செயற்பாட்டுக்கு கைகொடுப்பதை நோக்கமாகக் கொண்டு தேசிய மற்றும் வெளிநாட்டு விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப தொழிற் துறையினர்களின் அபிவிருத்தியை நோக்காக் கொண்டு குறைந்த சூழல் பாதிப்புக்கு ஆதரவு கொடுத்து நவீன தொழில்நுட்ப முறைமைகளை ஏற்படுத்தும் சிறப்பு தன்மை வாய்ந்தவர்களாகும். இந்த பட்டப்படிப்பு பாடநெறியானது ஆங்கில மொழியில் மாத்திரம் கற்க வேண்டியதோடு, இந்த கற்கைநெறியில் உள்ளடங்கிய விடயங்கள் சூழல் முகாமைத்துவம், மின்சக்தி பகுப்பாய்வு மற்றும் முகாமைத்துவம், மின்சக்தி பகுப்பாய்வு மற்றும் முகாமைத்துவ மீள்உயிர்வாய்த்தல், வளு சக்தி, திறமையான பூமி பாவனை மற்றும் போக உற்பத்தி, நிரந்தர கழிவு முகாமைத்துவம் மற்றும் மீள் உற்பத்தி, உற்பத்தி தர முகாமைத்துவம் உயிரியல் உற்பத்தி தொழில்நுட்பம், சூழல் முன்னேற்றம் காலநிலை பாதிப்பு சூழல் பொருளாதார விஞ்ஞானம் உற்பத்தி கல்வி உற்பத்தி உயிரியல் தொழில்நுட்பம் நனோ தொழில்நுட்பம், நீர் வள முகாமைத்துவம், கூர்மையான விவசாய தொழில்நுட்பம், சூழல் பொருத்தமான உள்ளாச கைத்தொழில், பசுந் கட்டிட நிர்மானம், இலக்ரோனிக் விஞ்ஞானம், மற்றும் ˙உதிரிப்பாகங்கள், பசுந் இரசாயனம் சூழல் குறிப்புகள், தகவல் முகாமைத்துவம், தகவல் தொலைத் தொடர்பு தொழில்நுட்பம் (ICT) புவியியல் தகவல்கள் தொகுதி மற்றும் தொலைவிலுள்ள உணர்வு (GIS and remote Sensing) இடர் மற்றும் தீர்வு நவீன தொழில்நுட்ப பார்வை மற்றும் ஆக்கப்பூர்வமான முன்வைத்தல், திறமை அபிவிருத்தி ஆகியன காட்ட முடியும். இன்னும் இறுதி வருடத்தில் அனைத்து மாணவர்களும் மூன்று மாத கால பயிற்சி நெறியையும் ஆறுமாதகால ஆய்வு கரத்திட்டத்திற்காக ஏற்றுக் கொள்ளப்பட்ட நிருவனமொன்றிற்கு சேர்க்கப்படும். பசுன்நிற தொழில்நுட்ப விஞ்ஞான பட்டதாரிகள் தற்பெழுதும் ஏற்றுக்கொள்ளப்பட்ட தேசிய மற்றும் வெளியுர் நிறுவனங்களில் உயர் தகுதிகள் வாய்ந்த தொழில்வாய்ப்புகளை பெற்றுக்கொள்ள தேர்ச்சிகள் பெற்றுள்ளதோடு அவர்களின் எதிர்காலம் தொழிற்துறை பிரகாசமான, வெற்றிகரமான தொழில் சந்தர்ப்பங்களுக்கு உரிமைகோரக்கூடியவர் என்பதை நம்பிக்கையுடன் குறிக்க முடியும். புதிய ஆய்வு அறிக்கைகளின் படி இதுவரை உருவாக்கப்பட்ட பசுன்நிற தொழில்நுட்ப பட்டதாரிகள் தற்பொழுதும் ஏற்றுக்கொள்ளப்பட்ட தேசிய மற்றும் வெளியுர் நிறுவனங்களில் உயர் தகுதிகள் வாய்ந்த தொழில் வாய்ப்புகளை பெற்றுக்கொள்ள தேர்ச்சி பெற்றுள்ளனர்.

கடற்தொழில் மற்றும் கடல்சார் விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்ப பீடம்

றுகுன பல்கலைக்கழகத்தின் கடற்தொழில் மற்றும் கடல்சார் விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பப்பீடம், கடற்தொழில் மற்றும் கடல்சார் விஞ்ஞானங்கள் மற்றும் நன்னீரியல் மற்றும் நீரியல் விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்ப பாடச் சேர்க்கைகளுக்கான பட்ட நிகழ்ச்சித் திட்டங்களை வழங்கும் இலங்கை அரச பல்கலைக்கழக முறைமைகளில் இயங்கும் ஓரேயொரு பீடமாகும்.

இப் பீடம், 15 கிழமைகள் அடிப்படையான அரையாண்டு கல்வி முறைமையின் கீழ் பாடநெறிகளைச் செயற்படுத்துவதுடன் பட்டக் கல்வி நிகழ்ச்சித் திட்டங்களின் செயற்பாடுகள், தர நிலைச் சராசரி (GPA) அடிப்படையின் கீழ் மதிப்பீடு செய்யப்படுகின்றன. தற்போது பீடம் இரண்டு, விஞ்ஞான இளமாணி கௌரவ பட்ட நிகழ்ச்சித் திட்டங்களை வழங்குகிறது.

1. கடற்தொழில் மற்றும் கடல்சார் விஞ்ஞானங்களுக்கான விஞ்ஞான இளமாணி கௌரவ பட்ட நிகழ்ச்சித் திட்டம்: இத் திட்டம், (அ) கடல்சார் விஞ்ஞானங்கள் மற்றும் (ஆ) நீரியல் வாழ் விருத்தி பற்றிய இரண்டு விசேட துறைகளை உள்ளக்கியுள்ளது.

11. கடல்சார் மற்றும் நன்னீரியல் விஞ்ஞானங்களுக்கான விஞ்ஞான இளமாணி கௌரவ பட்ட நிகழ்ச்சித் திட்டம்: இத்திட்டம்,

    (அ) சமுத்திரவியல் மற்றும் கடல்சார் கடற்சரிதவியல் (ஆ) நீரியல் விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பவியல் பற்றிய சார்பான இரண்டு விசேட துறைகளை உள்ளக்கியுள்ளது.

பட்ட கல்வி நிகழ்ச்சித் திட்டத்தின் 3 ஆம் கட்ட ஆரம்பத்தில் மாணவர்களுக்கு குறிப்பிட்ட பாட அலகுகளில் தங்களது செயற்பாடுகள் மற்றும் பதிவேடுகளின் அடிப்படையில் விசேடத்துவ துறையினைத் தெரிவு செய்ய முடியும். மேற்குறிப்பிட்ட பட்டங்களை பூர்த்தி செய்வதற்காக அபேட்சகர்கள், மூன்று மாத தொழிற் பயிற்சியில் ஈடுபடுவதுடன் இறுதியாண்டில், ஆய்வு அடிப்படையில் அமைந்த ஓர் ஆய்வுக் கட்டுரையைச் சமர்ப்பித்தல் மற்றும் 120 பாட அலகுகளை பூர்த்தி செய்தலும் அவசியமாகும்.

கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை (மட்டக்களப்பு)		
கற்கைநெறி	**பாடச்சேர்க்கை (விதித்துரைக்கப்பட்டவிடத்து)**	**க./மொ**
மருத்துவம்	-	E
விவசாயம்	-	E
உயி. விஞ்ஞானம்*	தாவரவியல், இரசாயனவியல், விலங்கியல், கணனி விஞ்.	E
பௌ. விஞ்ஞானம்*	பிர. கணி., பௌதிகவியல், தூய கணி., இரசாயனவியல், கணனி விஞ்ஞானம்	E
முகாமைத்துவம்	-	E
வணிகவியல்	-	E
கலை	அரபு, இஸ்லாமியக் கற்கைகள், அரசியல் விஞ்ஞானம், தத்துவவியல், புவியியல், நுண்கலை, சமூகவியல் மற்றும் மானிடவியல், ஆங்கிலம், தமிழ், சமய ஒப்பீடு, பொருளாதாரக் கல்வி, இந்து நாகரீகம், நாட்டியமும் அரங்கேற்றக் கலையும், வரலாறு, கிறிஸ்தவம்	T
தாதியியல் #	-	E
உயிர் முறைமைகள் தொழில்நுட்பம்	-	E

விஞ்ஞானம், விவசாயம், முகாமைத்துவக் கற்கை, கலையும் கலாசாரமும் ஆகிய பீடங்களிலிருந்து எடுத்த பாடச்சேர்க்கைகளை கிழக்குப் பல்கலைக்கழகம் அனுமதிக்கும்.

* உயிரியல் விஞ்ஞானத்திலும், பௌதிக விஞ்ஞானத்திலும் உள்ளோர் இடங்கள், ஊழியர் ஆகியன கிடைக்கும் வரையறைக்கு அமைய இப்பாடங்கள் எவற்றிலுமிருந்து பல்வேறு கற்கை நெறி அலகுகளை எடுக்கலாம்.

\# இலங்கையில் தரம்வாய்ந்த தாதியர் பணியாளரை உற்பத்தி செய்வதுடன் தாதியியல் கல்வியை மேம்படுத்துதல்.

கல்வி நிகழ்ச்சிகள்

அறிமுகம்

கிழக்குப் பல்கலைக்கழக விஞ்ஞான பீடம் ஐந்து திணைக்களங்களைக் கொண்டுள்ளது. அவையாவன: தாவரவியல் திணைக்களம், இரசாயனவியல் திணைக்களம், கணித மற்றும் கணணி விஞ்ஞான திணைக்களம், பௌதிகவியல் திணைக்களம், மற்றும் விலங்கியல் திணைக்களம் என்பனவாகும். விஞ்ஞான பீடத்தினால் நடாத்தப்படும் பாடநெறிகள் அரையாண்டு முறையை மையமாகக் கொண்டதும், மதிப்பீட்டு முறைகள், அலகுகளை (Credit) அடிப்படையாகக் கொண்ட தரப் புள்ளி சராசரி முறைமை (Grade Point Average) மூலம் கணிக்கப்படுகிறது. பாடநெறி அலகுகளை மையமாகக் கொண்ட விஞ்ஞானமானி பட்டங்கள் விஞ்ஞான பீடத்தினால் வழங்கப்படுகின்றது. இவற்றில் பொதுமானிப் பட்டப் பாடநெறி மூன்று வருடங்களைக் கொண்டதாகவும், விசேட கற்கைப் பாடநெறி நான்கு வருடங்களைக் கொண்டதாகவும் அமைந்துள்ளது. மேலும் ஒவ்வொரு கல்வியாண்டும் இரு அரையாண்டுகளைக் கொண்டுள்ளதோடு ஒவ்வொரு அரையாண்டும் அண்ணளவாக 15 வாரங்களையும் கொண்டுள்ளது. விஞ்ஞான பீடமானது பின்வரும் பிரதான பாடங்களை அவை சார்ந்த திணைக்களங்களினூடாக வழங்குகின்றது.

1. தாவரவியல
2. இரசாயனவியல
3. பௌதிகவியல்
4. விலங்கியல்
5. பிரயோக கணிதம்
6. தூயகணிதம்
7. கணனி விஞ்ஞானம்

மேலும் இப்பீடமானது, தமது பீடத்திலும் வேறு பீடங்களுக்கிடையிலும் பாடங்களை வழங்குகின்றது. இருப்பினும் மாணவர்கள் தமது முதலாம் வருட கற்கை ஆரம்பத்தின் போது மூன்று பாடங்கள் கொண்ட ஒரு தொகுதியினைப் பதிவு செய்யுமாறு வேண்டப்படுகிறார்கள். உயிரியல் விஞ்ஞான மாணவர்களாயின் கீழ்வரும் தொகுதியினை மாத்திரம் பின்பற்ற முடியும்.

தாவரவியல், இரசாயனவியல், விலங்கியல்

பௌதிக விஞ்ஞான மாணவர்களாயின் கீழ்வரும் தொகுதியில் ஏதாவது ஒரு தொகுதியினைத் தெரிவு செய்யமுடியும். இருப்பினும் துறைசார்ந்த விரிவுரையாளர்கள் அந்தந்த திணைக்களங்களில் இல்லாத பட்சத்தில் பாடத்தெரிவு முறை மட்டுப்படுத்தப்படும்.

Phy1: இரசாயனவியல், பிரயோக கணிதம், பௌதிகவியல்
Phy2: தூயகணிதம், பிரயோக கணிதம், இரசாயனவியல்,
Phy3: தூயகணிதம், பிரயோக கணிதம், கணனி விஞ்ஞானம்,
Phy4: தூயகணிதம், பிரயோக கணிதம், பௌதிகவியல்
Phy5: பிரயோக கணிதம், பௌதிகவியல், கணனி விஞ்ஞானம்,
Phy6: தூயகணிதம், கணனி விஞ்ஞானம், இரசாயனவியல்

கணனி விஞ்ஞான மாணவர்கள் கீழ்வரும் அடிப்படையில் தெரிவு செய்யப்படுவர்.

1. முதல் அரையாண்டில் முதல் இருவாரங்களின் பின்னர் நடாத்தப்படும் நுண்ணறிப் பரீட்சையின் அடைவுமட்ட அடிப்படையிலும்.
2. பெற்றுக்கொள்ளக் கூடிய இடவசதிக்கேற்பவும்.

தகவல் தொடர்பாடல் நிலையத்தின் (CICT) வசதிக்கேற்ப தெரிவு செய்யப்படும் மாணவர்களின் எண்ணிக்கை மட்டுப்படுத்தப்படும்.

தென் கிழக்குப் பல்கலைக்கழகம் (ஒலுவில்)		
கற்கைநெறி	**பாடச்சேர்க்கை (விதித்துரைக்கப்பட்டவிடத்து)**	**க./மொ**
கலை	பொருளியல், மெய்யியலும் உளவியல் சார் உளவளத்துணையும், சமூகவியல், வரலாறு, புள்ளி விபரவியல், தமிழ் மொழி, ஆங்கில மொழி, சிங்கள மொழி, இந்து நாகரீகம், புவியியல், புவித் தகவல் முறைமை, அரசியலும் சமாதானக் கற்கையும், பணியகவமைப்பும், பொதுக் கொள்கையும், மும்மொழிக் கற்கைகள், தகவல் தொடர்பாடல் தொழிநுட்பம், ஆங்கில மொழி கற்பித்தல்	T
முகாமைத்துவம் ☞	-	T/E
வணிகவியல்	-	T/E
முகாமைத்துவமும் தகவல் தொழில்நுட்பமும் (SEUSL) ♣	-	E
உயிரியல் விஞ்ஞானம் #	உயிரியல், இரசாயனவியல், பிரயோக புள்ளி விபரவியல், பௌதிகவியல், மண் விஞ்ஞானம், கணனி விஞ்., சக பொது கட்டாய மற்றும் விருப்ப பாடங்கள்*	E
பொறியியல்	-	E
பௌதிக விஞ்ஞானம் #	கணனி விஞ்ஞானம், கணிதவியல் I, கணிதவியல் II, பிரயோக புள்ளிவிபரவியல், இரசாயனவியல், பௌதிகவியல், மண் விஞ்ஞானம் சக பொது கட்டாய மற்றும் விருப்ப பாடங்கள்*	E
இஸ்லாமியக் கற்கைகள்	-	T/E
அரபு மொழி	-	A/T/ E
உயிர் முறைமைகள் தொழில்நுட்பம்	-	E
தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம்	-	E

☞ தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் முகாமைத்துவ வர்த்தக பீடமானது வியாபார நிருவாகமானி, வர்த்தகமானி, முகாமைத்துவ மற்றும் தகவல் தொழில்நுட்ப விஞ்ஞானமானி ஆகிய மூன்று பட்டப்படிப்புக்களை வழங்குகின்றது. நான்கு வருடங்களைக் கொண்ட விஷேட கற்கைநெறிகளான வியாபார நிருவாகமானி மற்றும் வர்த்தகமானி பட்டப்படிப்புக்கள் ஆங்கிலம் அல்லது தமிழ் மொழிமூலம் கற்பிக்கப்படுகின்றன. வியாபார நிருவாகமானியானது கணக்கீடு, நிதியியல், தகவல் முறைமைகள், சந்தைப்படுத்தல், மனிதவள முகாமைத்துவம் ஆகிய துறைகளில் விசேட கற்கைகளையும் கொண்டுள்ளது. மூன்றுவருட கால முகாமைத்துவ மற்றும் தகவல் தொழில்நுட்ப விஞ்ஞான பொதுமானிப் பட்டமானது ஆங்கில மொழிமூலம் மட்டும் வழங்கப்படுகின்றது.

* ஆங்கிலம், அடிப்படை உயிரியல், தகவல் தொழில்நுட்பம், அடிப்படைக் கணிதம், அடிப்படைச் சூழல் விஞ்ஞானம், அடிப்படை காலநிலையியல், பொருளாதாரத்தின் தத்துவங்கள், உயிரியல் நீதிநெறி, முகாமைத்துவத்தின் தத்துவங்கள், கருத்திட்டப் பகுப்பாய்வு மற்றும் ஆராய்ச்சி முறைமையியல் ஆகியனவே பொதுவான கட்டாயப் பாடநெறிகளாகும்.

பிரயோக விஞ்ஞானங்கள் பீடத்தின் பட்ட நிகழ்ச்சித் திட்டங்கள் அரையாண்டு கற்கை நெறி திறமை பெறுமான முறைமையில் நடாத்தப்படும். இங்கு ஒரு திறமை, 15 மணித்தியால விரிவுரைகள் அல்லது 45 முதல் 65 மணித்தியால ஆய்வுகூட வேலைகளைக் குறிக்கும். உயிரியல் விஞ்ஞானங்கள் மற்றும் பௌதிக விஞ்ஞானங்கள் - இரண்டு கற்கை துறைகள் மட்டுமே உள்ளன. பிரயோக விஞ்ஞான பீடமானது பிரயோக உயிரியலில் விசேட விஞ்ஞான மாணி பட்டத்தினையும் மற்றும் இரசாயனவியலில் விசேட விஞ்ஞான மாணி பட்டத்தினையும் வழங்குகிறது.

♣ முகாமைத்துவமும் தகவல் தொழில்நுட்பமும் (SEUSL)

1. தகவல் தொழில்நுட்பம், வியாபார முறைமைகள் மற்றும் மாதிரிப்படுத்தலும், பகுப்பாய்தலும் ஆகியவற்றில் அடிப்படைத் திறன்களை விருத்தி செய்தல். இது வியாபார மூலோபாயத்தினதும், வியாபார அபிவிருத்தியினதும் முகாமைத்துவ கருத்துருக்களினதும், மக்களையும், தாபனங்களையும் சந்தைப்படுத்தல் மற்றும் நிதி மற்றும் முகாமைத்துவம் மற்றும் நிருவாகம் ஆகியவற்றில் பின்னணியொன்றுடன் கருத்திட்டங்களினதும் செயற்பாடுகளினதும் சக்திமிக்க பிரயோகத்தை இயலச் செய்யும்.
2. முகாமைத்துவ அறிவை நெம்புகோல்படுத்துவதற்கு உதவுகின்ற தகவல் தொழில்நுட்பத் திறன்களை பயன்படுத்துதல். அவ்வாறாக உலகளாவிய சந்தை இடத்தில் வெற்றிகரமாக போட்டியிடுவதற்கு உள்ளூர் தாபனங்களை நகர்த்துதல்.
3. தெரிவு செய்யப்பட்ட தொழில்படுத்தல் துறைகளில் திறமையானதொரு கோட்பாட்டிலான பின்னணியுடன் முகாமையாளர்களை போட்டிக்குரியதாக்குகின்ற அதேவேளை கற்கைக்கு வகுப்பறையொன்றை உண்மையானதொரு ஆய்வுகூடமாகச் செய்வதற்கு செயல்முறை விடயங்களுடனும் குறித்தொதுக்குதல்களுடனும் அவர்களின் கற்கைகளை குறைநிரப்புதல்.
4. கற்பித்தலிலும், ஆராய்ச்சியிலும் மாணவர்களையும் பணியாளர்களையும் தீவிரமாக ஈடுபடுத்துவதற்கு ஊக்கமளிப்பதுடன், கைத்தொழிலுக்கு விஸ்தரிப்புச் சேவைகளை வழங்குதல்.
5. நாட்டுக்கு தகவல் தொழில்நுட்பத்திற்கான மனித வள அபிவிருத்தி நிலையமொன்றாக செயற்படுதல்.

தொழில்நுட்பவியல் பீடம்

தென்கிழக்கு பல்கலைக்கழகத்தின் தொழில்நுட்பவியல் பீடமானது தொழில்நுட்பவியல் பிரிவு மாணவர்களுக்கு பின்வரும் இருவகையான பட்டப்படிப்பினை வழங்குகிறது.

1. விவசாயத் தொழில்நுட்ப உயிர்த்தொகுதிகள் தொழில்நுட்பவியல் கௌரவ பட்டமானி
2. தகவல் தொடர்பாடல் மற்றும் தொழில்நுட்பவியல் கௌரவ பட்டமானி

ஆராய்ச்சி, விளைபொருள் அபிவிருத்தி, வணிகம், புத்தாக்கம் மற்றும் தொகுதி அபிவிருத்தி போன்ற கருத்திட்டங்கள், தொழில் துறை சார்ந்த பயிற்சி, கருத்தரங்கு, வெளிக்கள அமர்வுகள், ஆய்வுகூட வேளைகள் மற்றும் கற்பித்தல் என்பவற்றையும் இப்பாடத்திட்டம் கொண்டுள்ளது.

விரிவுரைகள் மற்றும் ஆய்வுகூட வகுப்புகள் என்பவற்றையே இப்பாடத்திட்டம் பிரதானமான கற்பித்தல் முறையாகக் கொண்டுள்ளது. மாணவர் மையமான கற்பித்தல் வலைத்தளத்தை அடிப்படையாகக் கொண்ட கற்றல் உபகரணங்களைக் கொண்டு வசதி செய்யப்படுவதுடன் தொடர் மதிப்பீடானது மெய்நிகர் கற்றல் தொகுதியினூடாக நிர்வகிக்கப்படுகின்றது.

மேலும், ஆய்வுகூட மற்றும் வெளிக்கள செயற்பாடுகள், அறிக்கை செய்தல், சுய கற்றல்(நூலகம் / கள அடிப்படையிலான வேலை, முன்னிலைப்படுத்துதல், கூட்டான முன்னிலைப்படுத்துதல்) பெரிய மற்றும் சிறிய குழுக்களான கலந்துரையாடல்கள், பயிற்சி முன்னிலைப்படுத்துதல் என்பன மாணவர் மையமான கற்கையை மேம்படுத்தும் பொருட்டு பாடத்தில் இணைக்கப்பட்டுள்ளது. பாடத்திட்டத்தின் நிறைவின் போது பட்டதாரிகள் விவசாயத் தொழில்நுட்பத்தின் திறன் மற்றும் அறிவு என்பவற்றுடன் திகழ்வதோடு சம்மந்தப்பட்ட விஞ்ஞானங்கள் மற்றும் ஏனைய துறைகளிலும் இணைக்கப்பட்ட பின்புலத்தை கொண்டவர்களாக காணப்படுவர். நவீன விவசாயத் துறையின் உட்பத்தி மற்றும் முகாமைத்துவ திறன்களையும் விவசாயத் தொழில்நுட்பத்தில் ஒருங்கிணைக்கக் கூடியவர்களாக இப்பட்டதாரிகள் காணப்படுவார்கள்.

தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பவியல் பட்டமானியில் கௌரவ தேர்ச்சி பெறுகின்ற பட்டதாரிகள் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பவியல் துறை மற்றும் அதனோடு இணைந்த பல்வகை துறைகளிலும் பிரயோகிக்கக்கூடியவாறு திறன்கள், தொழில்நுட்ப மற்றும் முகாமைத்துவ ஆற்றல் என்பவற்றை கலவையாகக் கொண்டு தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பவியலில் தேர்ச்சி பெற்ற பட்டதாரிகளாக இருப்பார்கள்.

தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பவியல் துறையில் ஏற்படுகின்ற துரித அபிவிருத்திக்கு முகங்கொடுக்கக்கூடிய ஆற்றலுடையவர்களாகவும் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பவியல் துறையில் விற்பன்னர்களாக விளங்குவதற்கும் இப்பட்டப்படிப்பானது மாணவர்களை உந்துகிறது.

இலங்கை ரஜரட்டை பல்கலைக்கழகம் (மிகிந்தலை)

கற்கைநெறி	பாடச்சேர்க்கை (விதித்துரைக்கப்பட்டவிடத்து)	க./மொ
மருத்துவம்	-	E
கலை	தகவல் முகாமைத்துவம், மரபுரிமை முகாமைத்துவம், மானிடவியல் சூழல் முகாமைத்துவம், சுற்றுலா, நீர் வள அபிவிருத்தியும் முகாமைத்துவமும்	S
முகாமைத்துவம் +	-	S/E
விவசாயம் #	-	E
பிர. விஞ். (உயி. விஞ்.) *	-	E
பிர. விஞ். (பௌ. விஞ்.) *	-	E
சுகாதார விருத்தி	-	E
தகவலும் தொடர்பாடல் தொழில்நுட்பமும்	-	E
சுற்றுலாவும் விருந்தோம்பல் முகாமைத்துவமும்	-	E
பொறியியல் தொழில்நுட்பம்	-	E
உயிர் முறைமைகள் தொழில்நுட்பம்	-	E
தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம்	-	E

சமூக விஞ்ஞான மற்றும் மானுடவியல் பீடம்

சமூக விஞ்ஞானங்கள் மற்றும் மானுடவியல் பீடமானது பின்வரும் ஆறு பட்டங்களை வழங்குகின்றது.

பட்டங்கள்	காலம்	மொழிமூலம்
1. கலைமாணி (பொது)	3 வருடங்கள்	சிங்களம்
2. கலைமாணி (விசேடம்) வரலாறு	4 வருடங்கள்	சிங்களம
3. கலைமாணி (விசேடம்) சிங்களம	4 வருடங்கள்	சிங்களம/ஆங்கிலம
4. கலைமாணி (விசேடம்) சூழல் முகாமைத்துவம்	4 வருடங்கள்	சிங்களம்/ஆங்கிலம்
5. கலைமாணி (விசேடம்) பொருளியல்	4 வருடங்கள்	சிங்களம்/ஆங்கிலம்
6. கலைமாணி (விசேடம்) தொல்லியல் மற்றும் மரபுரிமை முகாமைத்துவம்	4 வருடங்கள்	சிங்களம்/ஆங்கிலம்

சகல மாணவர்களும் முதல் அரையாண்டில் கட்டாயப் பொதுப் பாடங்களை கற்க வேண்டியதுடன் இரண்டாம் அரையாண்டில் ஐந்து கற்கைகள் பிரிவில் எவையேனும் ஒரு பிரிவை தெரிவு செய்தல் வேண்டும்.

பிரிவுகளின் பெயர்களும் பிரிவுகளின் குறியீடுகளும்

பிரிவின் குறியீடு	பிரிவுகளின் பெயர்
EWS	சூழல் மற்றும் சமூகங்கள்
EMS	பொருளியல் மற்றும் விஞ்ஞான முகாமைத்துவம்
HAH	வரலாறு தொல்லியல் மற்றும் மரபுரிமை
SSM	சிங்களம் மற்றும் சமூக தொடர்பாடல்
TEF	மொழிகள் மற்றும் சுற்றுலா

கலைமாணி (பொது) பட்ட நிகழ்ச்சி

அனைத்து மாணவர்களும் முதல் அரையாண்டில் கட்டாயப் பொதுப் பாடங்களை கற்க வேண்டியதுடன் இரண்டாம் அரையாண்டில் தெரிவு செய்த பிரிவின் பிரகாரம் கல்வியைத் தொடர வேண்டும். மூன்றாம் ஆண்டின் இரண்டாம் அரையாண்டில் தொழிற்பயிற்சியும் மற்றும் ஆராய்ச்சிகளையும் பூர்த்தி செய்ய வேண்டும்.

கலைமாணி (விசேடம்) பட்ட நிகழ்ச்சி

முதலாம் ஆண்டில் பெற்றுக்கொண்ட பரீட்சைப் பெறுபேறுகளின் அடிப்படையில் மாணவர்கள் கலைமானி விசேட பட்ட நிகழ்ச்சிக்குத் தெரிவு செய்யப்படுவார்கள். அத்துடன் இரண்டாம் ஆண்டிலிருந்து தெரிவு செய்யப்பட்ட விசேட பிரிவுகளின் பிரகாரம் கற்கைகளை தொடர வேண்டும். நான்காம் ஆண்டின் இரண்டாவது அரையாண்டில் மாணவர்கள் தங்கள் ஆராய்ச்சிகளை பூர்த்தி செய்ய வேண்டும்.

முகாமைத்துவப் பீடம்

முகாமைத்துவ கற்கை பீடம் பின்வரும் 06 பட்டப்படிப்புகளுக்கான கற்கை நெறிகளை வழங்கி வருகின்றது.

பீ.எஸ்சி. (கணக்கியலும் நிதியும்) விசேட பட்டம்
பீ.எஸ்சி. (வியாபார முகாமைத்துவம்) விசேட பட்டம்
பீ.எஸ்சி. (சுற்றுலாவும் விருந்தோம்பல் முகாமைத்துவமும்) விசேட பட்டம்
பீ.எஸ்சி. (வியாபார தகவல் தொழில்நுட்பம்) விசேட பட்டம்
பீ.எஸ்சி. (கௌரவ) சந்தைப்படுத்தல் முகாமைத்துவம்
பீ.எஸ்சி. (கௌரவ) மனிதவள முகாமைத்துவம்

விஞ்ஞானமானி (கணக்கியல் மற்றும் நிதி) விசேட பட்டம், விஞ்ஞானமானி (வியாபார முகாமைத்துவம்) விசேட பட்டம், விஞ்ஞானமானி (வியாபார தகவல் தொழில்நுட்பம்) விசேட பட்டம் ஆகிய 3 பட்டப் படிப்புகளுக்கான மாணவர்கள், அவர்கள் பெற்ற Z புள்ளி, மாவட்ட நிலை மற்றும் அவர்களது விருப்பம் ஆகியவற்றின் அடிப்படையிலும், விஞ்ஞானமானி (சுற்றுலா மற்றும் விருந்தோம்பல் முகாமைத்துவம்) விசேட பட்டப்படிப்புக்கான மாணவர்கள் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் நேரடித் தெரிவின் அடிப்படையிலும் உள்வாங்கப்படுவார்கள்.

விஞ்ஞானமானி (கணக்கியலும் நிதியும்) விசேட பட்டம், மற்றும் விஞ்ஞானமானி (வியாபார முகாமைத்துவம்) பட்டப் படிப்புகளுக்கான விரிவுரைகள் முதலாம் வருடத்தில் சிங்களம் மற்றும் ஆங்கில மொழிகளிலும் இரண்டாம் வருடம் தொடக்கம் ஆங்கில மொழியில் மாத்திரம் இடம்பெறும்.

விஞ்ஞானமானி (வியாபார தகவல் தொழில்நுட்பம்) விசேட பட்டம் விசேட பட்டம் மற்றும் விஞ்ஞானமானி (சுற்றுலா மற்றும் உபசரிப்பு முகாமைத்துவம்) விசேட பட்டப்படிப்புகளுக்கான விரிவுரைகள் ஆங்கில மொழியில் மாத்திரம் இடம்பெறும்.

விவசாயப் பீடம்

விவசாயத்துறையில் கௌரவ விஞ்ஞானமாணிப் பட்டம்

இப்பட்டப்படிப்பு ஆழமான பரவலான கோட்பாட்டு அறிவு மற்றும் பயிற்சிக்கூடாக, தேவைப்படும் அறிவும் தகைமையும் மனப்பாங்கும் உடைய பட்டதாரிகளை உருவாக்கும் நோக்குடன் விவசாயத்துறையின் தற்காலத் தேவைகளைப் பூர்த்தி செய்யும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது. இப்பட்டப்படிப்பில் பயிர் உற்பத்தியும் முகாமைத்துவத் தொழினுட்பமும், விலங்கு விஞ்ஞானமும் விலங்குப் பண்ணையியலும், மண் பற்றிய அறிவு, பண்ணை முறைமைகள் போன்ற விவசாயத்துறையின் பொதுவான முக்கிய விடயப்பரப்புகளும் ஆங்கிலமொழி, கணினி சம்பந்தமான பிரயோக அறிவு போன்றவையும் உள்ளடக்கப்பட்டுள்ளன. இப்பீடமானது விவசாயப்பொறியியல், சுற்றாடலும் மண் முகாமைத்துவமும், விவசாயப் பொருளியலும் விரிவாக்கமும், விவசாய முறைமைகளும் முகாமைத்துவமும், விலங்கு உற்பத்தியும் தொழினுட்பமும், உணவுக்கும் அறுவடையின் பின்னருக்குமான தொழினுட்பம், பயிர் விஞ்ஞானம், விவசாய உயிரியல் ஆகிய எட்டு வகையான துறைகளில் நான்காண்டுகள் காலப்பகுதி கொண்ட கௌரவப் பட்டப் படிப்பினை வழங்குகின்றது. அத்துடன் இப்பட்டப்படிப்பு கோட்பாட்டு அறிவின் செய்முறை நோக்கிலான வாய்ப்புக்களைப் பட்டதாரிகளுக்கு வழங்குவதற்காக சுயாதீனமான ஆய்வுக் கற்கையையும் செய்முறைக் கைத்தொழில் பயிற்சியையும் உள்ளடக்கியுள்ளது. இதன் பல்வகைத் தன்மையானது பட்டதாரிகளை அவர்கள் ஈடுபடும் எத்துறையிலும் முழுமையான ஆற்றலுடன் பிரகாசிக்கச் செய்யும்.

பிரயோக விஞ்ஞான பீடம்

* பிரயோக விஞ்ஞானங்கள் பீடத்தில் நெறி திறமை பெறுமானங்கள் முறைமையொன்று உள்ளது. ஒரு மாணவன் ஒவ்வொரு வருடமும் குறைந்தது 30 திறமைப் பெறுமானங்கள் கொண்ட நெறி அலகுகளைக் கற்றல் வேண்டும். பின்வரும் பாடங்களிலிருந்து பல பாடச்சேர்க்கைகள் முதலாம், இரண்டாம் வருடங்களில் உள்ளன: உயிரியல், தாவரவியல், விலங்கியல், இரசாயனவியல், பௌதிகவியல், கணனி விஞ்ஞானம், தூய கணிதம், பிரயோக கணிதம். மூன்றாம் வருடத்தில் அதிக தெரிவு நெகிழ்ச்சியைத் தரக்கூடிய பின்வரும் பிரயோக விஞ்ஞானத்துறைப் பாடச் சேர்க்கைகள் பல உள்ளன: பிரயோக உயிரியல், பிரயோகத் தாவரவியல், பிரயோக விலங்கியல், பிரயோகப் பௌதீகவியல், கணனி விஞ்ஞானம், கைத்தொழில் இரசாயனம், கைத்தொழில் கணிதம், நிதிக் கணிதம்.

சுகாதார விருத்தி விஞ்ஞானமானி பட்டநெறி

தென்கிழக்காசியா பிராந்தியம் முழுவதிலும் சுகாதார விருத்தி தொடர்பான ஒரே ஒரு விஞ்ஞானமானி (பொது மற்றும் சிறப்பு) பட்டப்படிப்பு நிகழ்ச்சித் திட்டத்தினை வழங்கும் பெருமை இலங்கை இரஜரட்ட பல்கலைக்கழகத்தில் பிரயோக விஞ்ஞான பீடத்தினை மட்டுமே சாரும். தனிநபரினதும், சமூகத்தினதும் நலனை முன்னேற்றுவதற்காக வினைத்திறனானதும்,

செலவு வினைதிறனை கொண்டதுமான வழிமுறையாக பல நாடுகளினால் ஏற்றுக்கொள்ளப்பட்டதும், சிறந்த சுகாதார வெளியீடுகளை அடைவதற்கு சமகாலத்தில் உலகம் முழுவதும் பயன்படுத்தப்படுகின்றதுமான ஒரு சமூகத்தினை மையப்படுத்திள செயன்முறையே சுகாதார விருத்தியாகும். இது சமூக அங்கத்தவர்களின் நடைமுறைகளிலும், மனப்பாங்குகளிலும் காணப்படுகின்ற அபிவிருத்தி சவால்களிற்கும், விரும்பத்தக்க மாற்றங்களிற்கும் இடையில் காணப்படுகின்ற இடைவெளியினை ஈடுசெய்வதாக அமைகின்றது.
சுகாதார விருத்தியில் தேசிய மற்றும் சர்வதேச ரீதியாக அங்கீகரிக்கப்படுகின்ற, போட்டித்தன்மை மிக்க தொழில் நிபுணர்களை உருவாக்குவதே இக்கற்கைநெறியின் நோக்கமாகும். சுகாதார விருத்தி தொடர்பாக தேசிய மற்றும் சர்வதேச ரீதியாக அங்கீகரிக்கப்படுகின்ற தொழிற் தகைமைகளை இப்பட்டதாரிகள் பெற்றுக்கொள்வதோடு, மக்களின் நலனை விருத்தி செய்வதில் ஒரு விளைதிறன் மிக்க பாத்திரத்தினை வகிப்பதற்கான திறன்களையும், சுகாதார விருத்திக்கு தேவையான அறிவினையும் பெற்றுக்கொள்வர்.

இப்பாடத்திட்டமானது கோட்பாடுகளும், செயன்முறை பயிற்சிகளும் இணைந்ததாக அமைந்துள்ளதோடு, செயன்முறை பயிற்சிகளின் பொழுது நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய சுகாதார விருத்தியுடன் சார்பான அடிப்படை அறிவினையும் பரந்த விளக்கத்தினையும் வழங்குவதாக கோட்பாட்டு உள்ளடக்கங்கள் வடிவமைக்கப்பட்டுள்ளது. இக்கற்கை நெறியானது ஒரு தனித்துவமானதும், அனைவராலும் அங்கீகரிக்கப்பட்டதுமான சமூக பங்குபற்றல் மூலத்தினை வழங்குவதோடு, சமூகத்தினை அடிப்படையாகக் கொண்ட சுகாதார விருத்தியினூடாக கூட்டு சமூக நடத்தையினை வழிநடாத்துகின்றது. உள்ளூர், பிராந்திய மற்றும் தேசிய பங்குதாரர்களுடன் கூட்டிணைவதின் மூலம், குடிமக்கள், சமூகம் மற்றும் தனிநபர்களினது நலனையும், சுகாதாரத்தினையும் அபிவிருத்தி செய்யக்கூடியதும், முன்னேற்றக்கூடியதுமான சுகாதார விருத்தி கண்டுபிடிப்புக்களை வடிவமைக்கவும், நடைமுறைப்படுத்தவும், பட்டதாரிகள் ஊக்குவிக்கப்படுகின்றனர். இப்பட்ட நிகழ்ச்சியின் முடிவில் சமூகம் பல்வேறு குழுக்கள் மற்றும் தனிநபர்களினது சுகாதார விருத்தி தேவைப்பாடுகளை மதிப்பீடு செய்யவும், பல்வேறு சுகாதார விருத்தி தந்திரோபாயங்களையும், நிகழ்ச்சித்திட்டங்களையும், கொள்கைகளையும், வடிவமைக்கவும், நடைமுறைப்படுத்தவும் அதன் தாக்கங்களை மதிப்பீடு செய்யவும் இயலுமானவர்களாக பட்டதாரிகள் காணப்படுவர். இதற்கு மேலதிகமாக, தேசிய மற்றும் சர்வதேச ரீதியாகவும் சுகாதார விருத்தியில் முக்கியத்துவப்படுத்தப்படுகின்ற பரப்புகளான சிறுவர் நல்வாழ்வு, மந்தபோசனை குறைத்தல், தொற்று நோய்களைத் தடுத்தல், போதைப்பொருள் பாவனையைக் குறைத்தல், தற்கொலை, வன்முறை முதலான பிரச்சினைகளை தடுத்தல் ஆகியனவற்றினை கையாளுவதில் மாணவர்கள் தம் போட்டித்தன்மையினை விருத்தி செய்துகொள்வர்.

தொழிநுட்ப பாடத்திற்கான கற்கைநெறிகள்

இலங்கை ரஜரட்டை பல்கலைக்கழகத்தினால் பின்வரும் மூன்று (03) பட்டக் கற்கைநெறிகள் வழங்கப்படுகின்றன.

1. தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப கௌரவ இளமாணிப் பட்டம் **[BICT(Hons)]**
2. உயிரியல் முறைமைத் தொழில்நுட்ப கௌரவ இளமாணிப் பட்டம் **[BBST(Hons)]**
3. பொறியியல் தொழில்நுட்ப கௌரவ இளமாணிப் பட்டம் **[BET(Hons)]**

இப்பாடநெறிகளிற்கான வழிகாட்டல்கள் மற்றும் பரீட்சைகள் என்பன ஆங்கிலமொழி மூலத்தில் நடைபெறும். மாணவர்கள் அனைவரும் தங்களுடைய இறுதிக் கல்வியாண்டில் கைத்தொழில் பயிற்சி நெறிக்கு உட்படுத்தப்படுவதோடு ஆய்வுச் செயற்திட்டம் ஒன்றினை சமர்ப்பிப்பதும் கட்டாயமானதாகும்.

1. தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப கௌரவ இளமாணிப் பட்டம் [BICT(Hons)]

இக்கற்கைநெறியானது உள்வாரி பட்ட மாணவர்களுக்காக **ACM/IEEE** சர்வதேச வழிகாட்டல்களுக்கு அமைவாக நடாத்தப்படுகின்றது.

2. உயிரியல் முறைமைத் தொழில்நுட்ப கௌரவ இளமாணிப் பட்டம் [BBST(Hons)]

இக்கற்கைநெறியானது உயிரியல் செயன்முறை மற்றும் உணவு விஞ்ஞானத் தொழில்நுட்பத்தினதும் இணைவாக காணப்படுவதுடன் கைத்தொழில் ஆய்வுகளையும் மற்றும் அபிவிருத்திகளையும் பரிமாற்றம் செய்வதாக காணப்படுகின்றது.

மாணவர்கள் இரண்டாவது வருட ஆரம்பத்திலிருந்து பின்வரும் இரு சிறப்புத் துறைகளில் ஏதேனும் ஒன்றில் கற்கைநெறியைத் தொடர்வதற்காக தெரிவுசெய்யப்படுவர்.

- உயிரியல் செயன்முறை தொழில்நுட்பம்
- உணவு மற்றும் விஞ்ஞானத் தொழில்நுட்பம்

3. பொறியியல் தொழில்நுட்ப கௌரவ இளமாணிப் பட்டம் [BET(Hons)]

மாணவர்கள் இரண்டாவது வருட ஆரம்பத்திலிருந்து பின்வரும் இரு சிறப்புத் துறைகளில் ஏதேனும் ஒன்றில் கற்கைநெறியைத் தொடர்வதற்காக தெரிவுசெய்யப்படுவர்.

- மின் மற்றும் இலத்திரனியல் தொழில்நுட்பம்
- பொருளறிவியல் தொழில்நுட்பம்

இச்சிறப்புத் துறையானது தற்பொழுது மட்பாண்ட தொழில் நுட்ப பாடநெறியை மாத்திரம் வழங்கிக்கொண்டிருக்கின்ற போதிலும் கைத்தொழில் பொருளறிவியல் சார்பான பாடப்பரப்பு வீச்சினை உள்வாங்கக்கூடியதாக மதிப்பேற்றப்படவுள்ளது.

- சூழலியல் தொழில்நுட்பம்

சூழலியல் தொழில்நுட்ப பாடநெறியானது நாட்டின் அபிவிருத்தி திட்டங்களிற்கு தேவைப்படுகின்ற சூழலியல் விஞ்ஞானத்தினை தெளிவாக விளக்குவதற்கு தேவைப்படுகின்ற விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பம் தொடர்பான பாடப்பரப்பினை கொண்டுள்ளது.

சபரகமுவ பல்கலைக்கழகம் இலங்கை (பெலிகுல் ஓய)		
கற்கைநெறி	**பாடச்சேர்க்கை (விதித்துரைக்கப்பட்டவிடத்து)**	**க./மொ**
மருத்துவம்	-	E
கலை (SAB) +	-	S/E
முகாமைத்துவம்	-	S/E*
விவசாயம்	-	E
உணவு விஞ்ஞானமும் தொழில்நுட்பமும்	-	E
பிரயோக விஞ்ஞானங்கள் (பௌ. விஞ்.)	-	E
பிரயோக விஞ்ஞானங்கள் (உயி. விஞ்.)	-	E
அளவையியல் விஞ்ஞானம்	-	E
விளையாட்டு விஞ்ஞானங்களும் முகாமைத்துவமும்	-	E
உடற்றொழில் கல்வி	-	E
கணக்கிடலும் தகவல் முறைமைகளும்	-	E
சுற்றுலாவும் விருந்தோம்பல் முகாமைத்துவமும்	-	E
மொழி பெயர்ப்பு கற்கைகள்	-	S/E
உணவு வணிக முகாமைத்துவம்	-	E
பொறியியல் தொழில்நுட்பம்	-	E
உயிர் முறைமைகள் தொழில்நுட்பம்	-	E

விவசாய விஞ்ஞானங்கள் பீடம்

விவசாய விஞ்ஞான பீடத்தால் விவசாய விஞ்ஞானமும் முகாமைத்துவமும் எனும் நான்கு வருடப் பாடநெறியின் நிறைவில் விஞ்ஞானமானிப் (B.Sc) பட்டம் வழங்கப்படுகின்றது. இப்பீடத்தில் பின்வரும் மூன்று திணைக்களங்கள் அடங்குகின்றன. விவசாய வர்த்தக முகாமைத்துத் திணைக்களம், ஏற்றுமதி விவசாயத் திணைக்களம், கால்நடை உற்பத்தித் திணைக்களம். இலக்கையில் உள்ள பல்கலைக்கழகங்கினுள் விவசாய வர்த்தகம் சார்பான சிறந்த கற்கையை வழங்கும் பிரிவாக விவசாய வர்த்தக முகாமைத்துவத் திணைக்களம் விளங்குகிறது. உணவு வர்த்தக முகாமைத்துவ விஞ்ஞானமானிப் பட்டம் தொடர்பான விவரங்கள் இக்கையேட்டின் வேறொரு இடத்தில் குறிப்பிடப்பட்டுள்ளன. விவசாய ஏற்றுமதித் திணைக்களத்தினால் பின்வரும் மூன்று கற்கை நெறிகள் வழங்கப்படுகின்றன : விவசாயச் சுற்றுச்சூழல் வள முகாமைத்துவம், பயிர் மேம்பாடு மற்றும் பயிர்ப் பாதுகாப்பு, பயிர் உற்பத்தித் தொழில்நுட்பம். கால்நடை உற்பத்தித் திணைக்களத்தினால் நீர்வாழ் உயிர்வள முகாமைத்துவம் மற்றும் விலங்கு உயிர் வள முகாமைத்துவம் எனும் கற்கை நெறிகள் வழங்கப்படுகின்றன.

விவசாய விஞ்ஞானப் பட்டத்திற்கான பாடநெறியில் அறிவு, திறன் மற்றும் புலமையை பெறுவதற்குக் குறைந்தது நான்கு வருட முழு நேர கற்கை அவசியாகும். நான்கு வருடத்தில் எட்டு தவணைகளில் இப்பாடநெறி இடம்பெறும். ஒரு வருடத்தில் இரு தவணைகள்ளு ஒரு தவணையில் 15 கிழமைகள். முதலிரு வருடங்களில் அடிப்படைப் பாடவிடயங்களையும் இறுதி இரு வருடங்களில் சிறப்புப் பாடங்களையும் கற்க வேண்டும். இந்த பட்டத்தை பெறுவதற்கு குறைந்தது 130 கிரெடிட்டுகளை (credits) பெறவேண்டும்.

சிறப்புக் கற்கைநெறி

சிறப்புக் கற்கைநெறி மாணவர்களுக்குப் பிடித்த துறையில் மேம்பட்ட கல்வியை பெறுவதற்கு வழிவகுக்கிறது. பின்வரும் சிறப்புக் கற்கைநெறிகளில் ஒன்றை மாணவர் தெரிவு செய்வதற்கான சந்தர்ப்பம் உண்டு: விவசாய வர்த்தக முகாமைத்துவம், விவசாயச் சுற்றுச்சூழல் வள முகாமைத்துவம், பயிர் மேம்பாடு மற்றும் பயிர்ப் பாதுகாப்பு, பயிர் உற்பத்தித் தொழில்நுட்பம், நீர்வாழ் உயிர் வள முகாமைத்துவம், விலங்கு உயிர் வள முகாமைத்துவம். இந்தக் கற்கை நெறிகளில் சிறந்த வேலை வாய்ப்புகள் இருக்கின்றன. இறுதித் தவணையில் பாடத்திட்டத்தின் தொழிற் பயிற்சி அம்சத்தைப் பூர்த்தி செய்வதற்காக மாணவர்கள் தொழில் வாய்ப்பு உள்ள இடங்களில் பயிற்சிக்காக அமர்த்தப்படுவர். முதல் இரு வருடங்களில் கட்டாயமாக அடிப்படைப் பாடங்களையும் இறுதி இரு வருடங்களில் மாணவர்கள் கட்டாயமான மற்றும் தமக்கு விருப்பமான பாடங்களையும் தெரிவு செய்யமுடியும்.

தொழிற் பயிற்சியும் ஆய்வேடும்

பாடத்திட்டத்தின் மிகச்சிறந்த அம்சமாக இறுதித் தவணை அமைந்துள்ளது. இதன்போது மாணவர்கள் நடைமுறைத் தொழில் அனுபவப் பயிற்சியுடன் அந்த இடத்திலுள்ள பிரச்சினைகளுக்குத் தீர்வாக ஆய்வேடு ஒன்றையும் எழுதி சமர்ப்பித்தல் வேண்டும்.

முதல் மூன்று வருடங்களில் கட்டாயமாக சிறந்த தேர்ச்சி மட்டத்தைப் பெற்றுக்கொள்வதற்கு ஆங்கிலம் மற்றும் தகவல் தொழிநுட்பம் என்னும் பாடங்கள் கற்பிக்கப்படும். இவை கல்விக்கும் மேற்படிப்புக்கும் உறுதுணை புரியும் வண்ணம் வடிவமைக்கப்பட்டுள்ளன.

B.Sc உணவு வணிக முகாமைத்துவம் :

இலங்கை சபரகமுவ பல்கலைக்கழகத்தின் விவசாய விஞ்ஞான பீடத்தின் விவசாய வணிக முகாமைத்துவ திணைக்களத்தால் 2016 இல் இருந்து வழங்கப்படும் ஒரு புதிய நான்கு வருட விசேட கற்கைநெறியாகும். இந்த கற்கைநெறி உணவுசார் துறை தொடர்பான ஒரு முழுமையான புரிந்துணர்வையும், உணவு வணிக முகாமைத்துவம் பற்றிய ஒரு விரிவான பயிற்சியையும் வழங்குகிறது. இத்துறை சார்ந்த உணவு தயாரிப்பு முதல் சந்தைப்படுத்தல் வரை அனைத்து பிரிவுகளிலும் சிறந்த பயிற்சியை வழங்கக்கூடிய வகையில் இப்பாடநெறி வடிவமைக்கப்பட்டுள்ளது.

B.Sc உணவு வணிக முகாமைத்துவ பாடத்திட்டத்தின் முக்கிய அம்சங்கள்

- உணவு வணிக முகாமைத்துவம் மற்றும் சந்தைப்படுத்தல் என ஒன்றோடொன்று இணைந்த இரு துறைகளில் சிறந்த பயிற்சி
- சர்வதேச தரத்திலான கற்பித்தல் மற்றும் ஆராய்ச்சி அனுபவமுள்ள விரிவுரையாலர்களினால் உணவு சங்கிலி தொடர்பான இயற்கை மற்றும சமூக விஞ்ஞான துறைகளில் தேர்ச்சி
- வணிக முகாமைத்துவ, சந்தைப்படுத்தல் சார் வல்லுனர்களுடனும் அத்தொழில் சார் துறையுடனுமான வலுவா இணைப்புகள். உணவுத்துறை சார் நிபுணர்களுடனான சிறந்த தொடர்புகள்

- உணவு சங்கிலிகளில் தொழில்கள் வருகைகள் மூலம் உலக அனுபவம் கிடைக்கும். மாணவர்கள் உண்மையான வணிக சூழ்நிலைகளுக்கு உணவு வணிகம், சந்தைப்படுத்தல் கொள்கைகளை பயன்பாடு வலியுறுத்தி தனிப்பட்ட மற்றும் குழு திட்ட பணிசெய்யும் பயிற்சி.
- பீடத்திலும் திணைக்களத்திலும் சிறந்த கல்வி கற்றலுக்கான சூழல்.

உணவு தொழில் வணிக மேலாண்மை மற்றும் சந்தைப்படுத்தல் செயல்பாடுகளை நான்கு பயிற்சி பெற்ற பட்டதாரிகள் கேள்வி உயர்ந்து வருகிறது. சாத்தியமான வேலைவாய்ப்பு உயவு துறையில் வணிக மேலாண்மை, சந்தைப்படுத்தல், சந்தை ஆராய்ச்சி, புதிய தயாரிப்பு வளர்ச்சி, விற்பனை, கொள்முதல், சில்லறை மேலாண்மை, சங்கிலி மேலாண்மை மதிப்பு, மனிதவள மேலாண்மை, கொள்கை பகுப்பாய்வு, மேலாண்மை ஆலோசனை, நிதி மற்றும் கணக்கியல் ஆகியவை அடங்கும்.

கணக்கிடலும் தகவல் முறைமைகளும் பிரிவு

ஆரம்பத்தில் புறம்பான கணக்கிடலும் தகவல் முறைமைகளும் பிரிவு ஆரம்பிக்கப்படும் வரை விவசாய விஞ்ஞானங்கள் பீடத்தின் கீழ் இது இருக்கும். நாட்டின் தேவைப்பாடுகளை நிறைவேற்றுவதற்காக கணக்கிடலிலும் தகவல் முறைமைகளிலும் பட்டதாரிகளை உற்பத்தி செய்யும்.

பிரயோக விஞ்ஞான பீடம்

பிரயோக விஞ்ஞான பீடங்கள் ஐந்து திணைக்களங்களைக் கொண்டுள்ளது.

1. இயற்கை வளங்கள் திணைக்களம்
2. பௌதீக விஞ்ஞானங்கள் திணைக்களம்
3. உணவு விஞ்ஞானங்களும் தொழில்நுட்பமும் திணைக்களம்
4. கணனியியலும் தகவல் முறைமையும் திணைக்களம்
5. விளையாட்டு விஞ்ஞானமும் உடற்றொழிலியல் கல்வியும் திணைக்களம்

இந்த பீடத்திலுள்ள இயற்கை வளங்கள் பிரிவு, பௌதீக விஞ்ஞானங்கள் பிரிவு மற்றும் உணவு விஞ்ஞானங்களும், தொழில்நுட்பமும் பிரிவுகள் ஏழு பட்டங்களை வழங்குகின்றன. மேலும் இயற்கை வளங்கள் பிரிவும், பௌதீக விஞ்ஞானங்கள் பிரிவும் மூன்று வருட படிப்பு அல்லது நான்கு வருட விசேட துறை பட்ட படிப்பு திட்டங்களையும் கொண்டுள்ளன. பயிலுனர்களின் விருப்பத்தின் அடிப்படையில் படிப்புக்களை மேற்கொள்ளலாம்.

மேலும் இந்த பீடமானது அண்மையில் பீ.எஸ்சி கணனியியலும் தகவல் முறைமையும் சிறப்புத் பட்டம், பீ.எஸ்சி உடற்றொழில் கல்வியில் சிறப்புத் பட்டம் மற்றும் பீ.எஸ்சி விளையாட்டு விஞ்ஞானமும் முகாமைத்துவத்தலில் சிறப்புத் பட்டம் ஆகிய மூன்று புதிய பட்ட நிகழ்ச்சி திட்டங்களை அறிமுகப்படுத்தியுள்ளது. பிரயோக விஞ்ஞானங்கள் பீடத்தினால் வழங்கப்படும் எல்லா பட்டத் திட்டங்களும் தனியே ஆங்கிலத்தில் கற்பிக்கப்படும். இந்த பீடம் எல்லா பட்ட திட்டங்களுக்கும், தவணை (15 கிழமைகள் ஒரு தவணை) மூலமான பாட புள்ளித் திட்டங்களை கொண்டுள்ளது.

பட்டத் திட்டங்கள்:

அ. உணவு விஞ்ஞானமும் தொழில்நுட்பத்தில் சிறப்புப் பட்டம்
ஆ. சுற்றாடல் விஞ்ஞானம் மற்றும் இயற்கை வள முகாமைத்துவத்தில் சிறப்புப் பட்டம்
இ. சுற்றாடல் விஞ்ஞானம் மற்றும் இயற்கை வள முகாமைத்துவத்தில் பொதுப் பட்டம்
ஈ. இரசாயனத் தொழில்நுட்பத்தில் சிறப்புப் பட்டம்
உ. கணனி விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பத்தில் சிறப்புப் பட்டம்
ஊ. பிரயோக பௌதிகத்தில் சிறப்புப் பட்டம்
எ. பௌதிக விஞ்ஞானத்தில் சிறப்புப் பட்டம்
ஏ. கணக்கிடலும் தகவல் முறைமையும் சிறப்புப் பட்டம்
ஒ. உடற்றொழில் கல்வியில் சிறப்புப் பட்டம்
ஓ. விளையாட்டு விஞ்ஞானங்களும் முகாமைத்துவமும் சிறப்புப் பட்டம்

(அ) பௌதீக விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்ப திணைக்களம்

பிரயோக விஞ்ஞானங்கள், பௌதீக விஞ்ஞான பிரிவின் கீழ் பீடமானது பௌதீக விஞ்ஞானம் மற்றும் தொழில் நுட்பத்தில் மூன்று வருட பட்ட நிகழ்ச்சி திட்டத்தையும், கணனி விஞ்ஞானமும் தொழில்நுட்பமும், இரசாயன தொழில்நுட்பம் மற்றும் பிரயோக பௌதீகவியல் ஆகியவற்றில் நான்கு வருட விசேட பட்ட நிகழ்ச்சி திட்டங்களையும் வழங்குகின்றது. நாட்டின் தற்போதைய தொழில் கிராக்கிக்கு ஈடு செய்வதற்காக இப் பட்ட நிகழ்ச்சித்திட்டங்கள் வடிவமைக்கப்பட்டுள்ளன. மேலும் கணனி இரசாயனவியல் மற்றும் பௌதீகவியல் துறைகள் யாவும் பிரயோகங்கள் மூலமான செயற்பாடுகளையும் கொண்டுள்ளன. முக்கியமாக இந்த படிப்பின் இறுதித் தவணையில் (நான்காம் வருடம் - இரண்டாம் தவணை) மாணவர்கள் கட்டாயமாக தொழில்பேட்டை சார் அல்லது தேடல் சார் பயிற்சியை 15 வாரங்களுக்கு மேற்கொள்ளல் வேண்டும். இந்த பயிற்சியின் முடிவில் தொகுப்பு அறிக்கை ஒன்றை சமர்ப்பிப்பது மட்டுமல்லாது வாய் மொழி மூலப்பரீட்சையையும் எதிர்நோக்கல் வேண்டும்.

இரசாயன தொழில்நுட்பம் : மின் இரசாயன தொழில்நுட்பம், பல்பகுதிய தொழில்நுட்பம், கைத்தொழில் இரசாயனவியல் மருத்துவ மற்றும் மருந்தாக்கவியல் இரசாயனவியல், இயற்கை உற்பத்தி இரசாயனவியல், பகுப்பாய்வு தொழில்நுட்பம், சூழல் இரசாயனவியல், உயிரியல் சேதன மூலக்கூறுகளின் இரசாயனவியல் மற்றும் உணவு இரசாயனவியல்.

கணனி விஞ்ஞானமும், தொழில்நுட்பமும் : நிகழ்ச்சிப்படுத்தல் தொழில்நுட்பங்கள், இணைய நிகழ்ச்சிப்படுத்தல், தரவுத் தளமுகாமைத்துவ முறைமை, மென்கணிய இயந்திரவியல், கணனி வரை படங்கள், பிரதிமை படிநிலைப்படுத்தல், நோக்கத்திலான முனைப்பிலான பகுப்பாய்வு, செயற்கையான புலனாய்வு, செயற்கையான நரம்பு சார்ந்த வலைப்பின்னல்கள், செயற்பாட்டு முறைமைகள்.

பிரயோக பௌதீகவியல் : இலத்திரனியல், சக்திச் சொட்டு பொறியியல், குறை கடத்தி பௌதீகவியல், மின்சாரம் மற்றும் காந்தவியல், ஆடலோட்ட தத்துவம் மற்றும் சுற்றுக்கள், பௌதீக ஒளியியல், நார்ப்பொருள் ஒளியியல் மற்றும் தொடர்பாடல், அணு மற்றும் கரு பௌதீகவியல்.

(ஆ) இயற்கைவளங்கள் திணைக்களம்

இந்த பிரிவானது இரண்டு பட்டப்படிப்புக்கான நிகழ்ச்சித் திட்டத்தை கொண்டுள்ளது. இலங்கையில் சூழலியல் விஞ்ஞானமும் இயற்கைவள முகாமைத்துவங்களும் என்ற பாடத்தில் முதற்பட்டத்தைப் பெற்றுக்கொடுக்கும் பிரிவாக விளங்குகின்றது. இந்த படிப்பை மாணவர்கள் மூன்று வருட பட்டப்படிப்பாகவும் அல்லது நான்கு வருட விசேட தரப்படிப்பாகவும் மேற்கொள்ளலாம். கணிதம், புள்ளிவிபரவியல், இரசாயனவியல், பௌதீகம், கணனி மற்றும் அடிப்படை முகாமைத்துவக் கொள்கைகள் ஆகிய பாடங்கள் முதல்வருட கட்டாய அடிப்படைப் பாடங்களாக உள்ளன. இதைத்தவிர பாடவிதானமானது சூழலியல் விஞ்ஞானம், இயற்கைவள பயன்பாடும் முகாமைத்துவமும், காடு வளர்த்தல், நில விஞ்ஞானம், நீரியல், உயிரினங்கள் பற்றிய ஆராய்ச்சியறிவு, இயற்கை வள பொருளியல், மண்ணியல் விஞ்ஞானம், மண்ணரிப்பும் பாதுகாப்பும், கழிவு முகாமைத்துவம், சூழலியல் தாக்க மதிப்பீடு, புவிசார் தகவல் முறைமை/தொலை உணர்தல் போன்ற பாடங்களை கொண்டுள்ளது.

மேலும் இந்த பாடங்கள் மூன்று பிரதான அலகுகளில் நெறிப்படுத்தப்பட்டுள்ளன. அவையாவன, சூழலியல் விஞ்ஞானம், பாரம்பரிய உயிரியல், நில விஞ்ஞானங்கள் ஆகும்.

விடுகை வருடத்தில் இந்த கற்கை நெறியில் ஆய்வு என்னும் பகுதியும் உள்ளடக்கப்பட்டுள்ளது. இதில் மாணவர்கள் கட்டாயமாக ஆய்வு செய்தல் அல்லது தொழில் நிறுவனம் சார்ந்த பயிற்சி ஒன்றை 15 வாரங்களுக்கு மேற்கொண்டு இறுதியில் தொகுப்பாகவும் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். மேலதிகமாக வாய்மொழிப்பரீட்சைக்கு தோன்றுவதன் மூலம் அதன் தரப்பெறுமானம் கணிக்கப்படும்.

(இ) உணவு விஞ்ஞானமும் தொழில்நுட்பமும் திணைக்களம்

இந்த பிரிவினால் வழங்கப்படும் உணவு விஞ்ஞானமும் தொழில்நுட்பமும் விசேட படிப்பானது பட்டதாரிகளை முகாமைத்துவ வாண்மை வாய்ந்த தலைமைத்துவம் மிக்க ஆளுமை மிக்கவர்களாக ஆக்குவதிலும், அவர்கள் அறிவை உணவு விஞ்ஞானத்துறையில் பரப்புவொராகவும், திட்டமிடல் முகாமைத்துவம் செய்தல், மேற்பார்வை செய்தல், ஆய்விலும் அபிவிருத்தியிலும் ஈடுபடல், சந்தைப்படுத்லில் ஈடுபடல் போன்ற தொழில்களில் விண்ணர்களாக இருப்பர்.

முதல் வருடத்தில், மாணவர்கள் அடிப்படைத் துணைப்பாடங்களாக இரசாயனவியல், பௌதீகவியல், கணிதம், புள்ளிவிபரவியல், முகாமைத்துவம், கணனி விஞ்ஞானம், உயிரியல் என்பவற்றை கற்றுக்கொள்ளல் வேண்டும். இரண்டாம், மூன்றாம் மற்றும் நான்காம் வருடங்களில் மாணவர்கள் உணவு இரசாயனம், உணவுப்பகுப்பாய்வியல், உணவு நுண்ணாய்வியல், உணவு பொறியியல், உணவு பரிமாற்றத் தொழில்நுட்பம், போசாக்கும் தர முகாமைத்துவமும் போன்ற பாடங்களை கற்றுக்கொள்வர்.

விடுகை வருடத்தில் இந்த கற்கை நெறியில் ஆய்வு என்னும் பகுதியும் உள்ளடக்கப்பட்டுள்ளது. இதில் மாணவர்கள் கட்டாயமாக ஆய்வு செய்தல் அல்லது தொழில் நிறுவனம் சார்ந்த பயிற்சி ஒன்றை 15 வாரங்களுக்கு மேற்கொண்டு இறுதியில் தொகுப்பறிக்கையும் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். மேலதிகமாக வாய்மொழிப் பரீட்சைக்கு தோன்றுவதன் மூலம் அதன் தரப்பெறுமானம் கணிக்கப்படும்.

(ஈ) கணனியியலும் தகவல் முறைமையும் திணைக்களம்

இந்தப் பிரிவின் கீழ் பீடமானது நான்கு வருட சிறப்பு பட்டப்படிப்பை வழங்கிவருகின்றது. மேலும் இந்த விசேட படிப்பானது பட்டதாரிகளை கணனி முகாமைத்துவ, மற்றும் தகவல் முறைமையில் மிக்க ஆளுமைமிக்கவர்களாக ஆக்குவதிலும் அவர்கள் அறிவை கணனி விஞ்ஞானத்துறையில் பரப்புவொராகவும் உருவாக்குவது மட்டுமல்லாது, கணனித்துறையில் சிறந்த ஆளுமை உள்ளவர்களாகவும் ஆக்கக்கூடிய அளவுக்கு சிறந்த பாடவிதானங்களைக் கொண்டுள்ளது. அது மட்டுமல்லாது இந்த பல்கலைக்கழகத்தில் அண்மையில் உருவாக்கப்பட்ட பிரிவும் இதுவெயாகும்.

விடுகை வருடத்தில் இந்த கற்கை நெறியில் ஆய்வு என்னும் பகுதியும் உள்ளடக்கப்பட்டுள்ளது. இதில் மாணவர்கள் கட்டாயமாக ஆய்வு செய்தல் அல்லது தொழில் நிறுவனம் சார்ந்த பயிற்சி ஒன்றை 15 வாரங்களுக்கு மேற்கொண்டு இறுதியில் தொகுப்பறிக்கையும் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். மேலதிகமாக வாய்மொழிப்பரீட்சைக்கு தோன்றுவதன் மூலம் அதன் தரப்பெறுமானம் கணிக்கப்படும்.

(உ) விளையாட்டு விஞ்ஞானமும் உடற்றொழில் கல்வியும் திணைக்களம்

விளையாட்டு விஞ்ஞானமும் முகாமைத்துவமும் பட்ட திட்டம்

இந்தப் பிரிவின் கீழ் பீடமானது நான்கு வருட சிறப்பு பட்டப்படிப்பை வழங்கி வருகின்றது. மேலும் இந்த விசேட படிப்பானது மாணவர்களை ஒரு சிறந்த விளையாட்டு வீரராக உருவாக்குவது மட்டுமில்லாது விளையாட்டு சம்பந்தமான அறிவுகளை வளர்க்கும் அளவுக்கு பாட விதானங்களை தன்னகத்தே கொண்டுள்ளது. விசேடமாக விளையாட்டும் சக்தியும், விளையாட்டு மருத்துவம், விளையாட்டு சட்டங்கள், விளையாட்டும் முகாமைத்துவமும் போன்ற பகுதிகளில் விசேட கவனம் செலுத்துமளவுக்கு பாட விதானங்கள் உருவாக்கப்பட்டுள்ளன.

விடுகை வருடத்தில் இந்த கற்கைநெறியில் ஆய்வு என்னும் பகுதியும் உள்ளடக்கப்பட்டுள்ளது. இதில் மாணவர்கள் கட்டாயமாக ஆய்வு செய்தல் அல்லது தொழில் நிறுவனம் சார்ந்த பயிற்சி ஒன்றை 15 வாரங்களுக்கு மேற்கொண்டு இறுதியில் தொகுப்பறிக்கையும் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். மேலதிகமாக வாய்மொழிபரீட்சைக்கு தோன்றுவதன் மூலம் அதன் தரப்பெறுமானம் கணிக்கப்படும்.

உடற்றொழில் பட்ட திட்டம்

இந்தப் பிரிவின் கீழ் பீடமானது நான்கு வருட சிறப்பு பட்டப்படிப்பை வழங்கி வருகின்றது. மேலும் இந்த விசேட படிப்பானது உடற்கல்வி துறையில் ஒரு சிறந்த வல்லுனரை உருவாக்குவது மமட்டுமல்லாது விளையாட்டு சம்பந்தமான அறிவுகளை வளர்க்கும் அளவுக்கு பாட விதானங்கள் தன்னகத்தே கொண்டுள்ளது. விசேடமாக உடற்கல்வியும் பாடசாலைகளும், பயிற்றுவிப்பு கலைகள், உடற்கல்வி மற்றும் முகாமைத்துவம் சார்ந்த பயிற்சிகளை கொண்டுள்ளது. விடுகை வருடத்தில் இந்த கற்கை நெறியில் ஆய்வு என்னும் பகுதியும் உள்ளடக்கப்பட்டுள்ளது. இதில் மாணவர்கள் கட்டாயமாக ஆய்வு செய்தல் அல்லது தொழில் நிறுவனம் சார்ந்த பயிற்சி ஒன்றை 15 வாரங்களுக்கு மேற்கொண்டு இறுதியில் தொகுப்பறிக்கையும் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். மேலதிகமாக வாய்மொழிபரீட்சைக்கு தோன்றுவதன் மூலம் அதன் தரப்பெறுமானம் கணிக்கப்படும்.

கேத்திரகணித பீடம்

தற்போதைய பீடமானது இரண்டு திணைக்களங்களை உள்ளடக்கியுள்ளது.
(அ) நில அளவையியல் மற்றும் புவி இயற்பியல் துறை
(ஆ) தொலையறிதல் மற்றும் பூகோளத் தகவல் முறைமைத் துறை

பட்டப்படிப்பு கற்கைநெறி

பீடத்தின் மூலம் வழங்கப்படும் நான்கு வருட பட்டப்படிப்பு கற்கை நெறியில் அளவையியல் விஞ்ஞானம்,புவி இயற்பியல், பொருத்தக் கோட்பாட்டு கொள்கை, பட வரைகலை விஞ்ஞானம், நிழற்படவியல், தொலையறிதல், பூகோள தகவல் முறைமை, நில மதிப்பீட்டு முறைமை, நிலவுக நீர் நிலை அளவையியல் மேலும் கணிதம், பௌதீகம், கணனிப் பிரயோகம், பொருளாதாரம், முகாமைத்துவம், சுற்றுச்சூழல் விஞ்ஞானம் ஆகிய பாடங்கள் உள்ளடக்கப்படும்.

பட்டப்படிப்பு கற்கை நெறியானது 8 பருவ காலங்களாக பிரிக்கப்பட்டுள்ளது. முதல் 5 பருவ காலங்களில் கற்பிக்கப்படும் கற்கை நெறி அனைத்தும் அனைத்து மாணவர்களுக்கும் பொதுவானவை. இந்த பருவ காலங்களின் போது நில அளவை தொடர்பான எல்லா எதிர்பார்ப்புகளும் மாணவர்களுக்கு கற்பிக்கப்படுகின்றது. 5 பருவ கால கல்வி நடவடிக்கைகளின் பின்னர் மாணவர்கள் நில அளவை தொடர்பான எல்லாப் பிரிவுகளிலும் சிறந்த அறிவை பெற்றுக் கொள்வர். அடுத்த 2 பருவங்களின் போது மாணவர்கள் 5 விசேட பாடப் பரப்புகளில் தமது கல்வி நடவடிக்கைகளை மேற்கொள்வர்.

1. நில அளவை மற்றும் புவி இயற்பியல்
2. நில முகாமைத்துவம்
3. நிலவுக நீர் நிலை அளவையியல்
4. தொலையறிதல்
5. பூகோள தகவல் முறைமை

கடைசிப் பருவ காலம் மாணவர்கள் தொழிற் தேர்ச்சி பெறுதற் பொருட்டு தொழில் துறை பயிற்சிகளை மேற்கொள்வதற்காக ஒதுக்கப்பட்டுள்ளது. இலங்கையில் இப் பட்டப்படிப்பு கற்கை நெறி இலங்கை நில அளவை குழுமத்தினால் அங்கீகரிக்கப்பட்டுள்ளதோடு சர்வதேச ரீதியாக ரோயல் பட்டய நில அளவையியலாளர்கள் குழுமத்தினால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. இ:த நிலவுக நீர் நிலை அளவியல், கடல் சார் படவரை கலைஞர்கள் தரம் B (IFG/IHO/ICA-CatB) போன்ற பிரிவுகளையும் உள்ளடக்கியுள்ளது. மேலும் இப் பீடமானது சர்வதேச நில அளவையியளாளர் ஒன்றியத்தின் ஒரு கல்விசார் அங்கத்துவம் பெற்றுள்ளமையும் குறிப்பிடத்தக்க ஒன்றாகும்.

முகாமைத்துவ கற்கைகள் பீடம்

முகாமைத்துவக் கற்கைகள் பீடமானது தனது செயற்பாடுகளை 1996ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் ஆரம்பித்தது. முதலாம் வருடத் தொடக்கத்திலேயே இச் செயற்பாடுகளுக்காக மாணவர்கள் இணைத்துக்கொள்ளப்பட்டார்கள். இதன் வழிகாட்டல்கள் ஆங்கில மொழிமூலம் வழங்கப்படுகின்றன. கணக்கியல் மற்றும் நிதித்துறை, வியாபார முகாமைத்துவத்துறை, சுற்றுலா முகாமைத்துவத்துறை, சந்தைப்படுத்தல் முகாமைத்துவத்துறை ஆகிய நான்கு திணைக்களங்களுக்குரிய கற்கை நெறிகளை வெற்றிகரமாக நிறைவுசெய்யும் பொழுது பின்வரும் பட்டங்கள் வழங்கப்படுகின்றன.

கணக்கியல் மற்றும் நிதித் திணைக்களம்	- விஞ்ஞானமாணி (B.Sc) நிதியியல் முகாமைத்துவம் (விசேடம்) - விஞ்ஞானமாணி (B.Sc) வங்கியியலும் காப்புறுதியும் (விசேடம்)
வியாபார முகாமைத்துவ திணைக்களம்	- விஞ்ஞானமாணி (B.Sc) வியாபார முகாமைத்துவம் (விசேடம்)
சந்தைப்படுத்தல் முகாமைத்துவ திணைக்களம்	- விஞ்ஞானமாணி சந்தைப்படுத்தல் முகாமைத்துவம் (விசேடம்)
சுற்றுலா முகாமைத்துவத் திணைக்களம்	- விஞ்ஞானமாணி (B.Sc) சுற்றுலா முகாமைத்துவம் (விசேடம்) - விஞ்ஞானமாணி (B.Sc) சுற்றாடல் இயைவாக்க வியாபார முகாமைத்துவம் (விசேடம்) - விஞ்ஞானமாணி (B.Sc) விருந்தோம்பல் முகாமைத்துவம் (விசேடம்)

பீடத்திற்குரிய எல்லாப் பட்டக் கற்கை நெறிகளும் வருடத்திற்கு இரண்டு பருவகாலங்களைக் கொண்ட எட்டுப் பருவகாலங்களில் முழு நேரக் கற்கை நெறிகளாக வடிவமைக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு பருவகாலமும் 15 கிழமைகளை உள்ளடக்கியுள்ளன. கடைசிப் பருவகாலத்தில் 4 மாதச் செய்முறைக் கற்கைநெறியுடன் பல கற்கைப் பிரிவுகளையோ அல்லது சுதந்திரமான ஆய்வுக் கற்கையையோ நிறைவு செய்யும்படி மாணவர்கள் வேண்டப்படுவர்.

ஒவ்வொரு பருவகால முடிவிலும் பரீட்சைகள் நடத்தப்படுகின்றன. பட்டப்படிப்பினை மேற்கொள்ளும் மாணவர்களுடைய திறமைகளை அளவிடுவதற்கு சராசரிப் புள்ளியிடல் (GPA) முறை பயன்படுத்தப்படுகின்றது. பட்டப்படிப்பினை மேற்கொள்ளும் மாணவர்கள் பீடத்தினால் அனுமதி வழங்கப்பட்ட ஒரு அமைப்பில் நான்கு மாதகாலச் செயன்முறைப் பயிற்சியையோ அல்லது தமது விசேட கற்கைத் துறையுடன் ஒத்த ஆய்வுக் கற்கைநெறியினையோ மேற்கொள்ள வேண்டுமென வேண்டப்படுவர்.

பீடத்தினால் வழங்கப்படும் பட்டக் கற்கை நெறிகள் தொடர்பான சுருக்க விபரம்

விஞ்ஞானமாணி (B.Sc) நிதியியல் முகாமைத்துவப் (சிறப்பு) பட்டக் கற்கைநெறி
இந்தப் பட்டக் கற்கைநெறியானது நிதியியல் தொடர்பான துறைகளில் தம்மை ஈடுபடுத்திக் கொள்ள நினைப்பவர்களுக்காக விசேடமாக வடிவமைக்கப்பட்டுள்ளது. பிரதான கணக்கியல் நிறுவனங்களால் மேற்கொள்ளப்படும் தொழில்சார் பரீட்சைகள் தொடர்பான கற்கைநெறிகளுக்குச் சமமானதாகவே அதிகமான கற்கைநெறிகள் இந்நிகழ்ச்சியின் கீழ் கற்பிக்கப்படுகின்றன. இந்தப் பட்டக்கற்கை நெறியினை ப'ர்த்திசெய்யும் மாணவர்களுக்கு தொழில்சார் கணக்கியல் நிறுவனங்கள் வழங்கும் சில பாடங்களிலிருந்து விலக்களிக்கப்பட்டுள்ளது.

விஞ்ஞானமாணி (B.Sc) வங்கியியலும், காப்புறுதியும் (சிறப்பு) பட்டக் கற்கை நெறி
வங்கியியலும் காப்புறுதியும் விசேட பட்டக் கற்கைநெறியானது இந்தத் துறை சார்ந்த அறிவு, ஆற்றல், திறமை நன்நடத்தை என்பவற்றை மாணவர்களுக்கு வழங்குவதனூடாக வினைத்திறன் மிக்க முகாமையாளர்களை தேசிய, சர்வதேசத் தரத்தில்

உருவாக்குமுகமாக வடிவமைக்கப்பட்டுள்ளது. மேலும் மாணவர்களுக்கு அதே துறையில் கோட்பாட்டு அறிவுடன் செயற்பாட்டறிவையும் வழங்குகின்றது. அது மட்டுமன்றி காத்திரமான கற்கைப் பிரிவுகளை வழங்குவதனூடாக மாணவர்களைச் சமுதாயத் தேவைக்கேற்பவும் தொழிற்றுறைகளில் நிலவும் சந்தைக் கேள்விகளுக்கு ஏற்பவும் தயார்படுத்துகின்றது.

விஞ்ஞானமாணி (B.Sc) வியாபார முகாமைத்துவக் (சிறப்பு) கற்கைநெறி
இந்தப் பட்டப் படிப்புக் கற்கைநெறியானது இத்துறை சார்ந்த மாணவர்களுக்கு முகாமைத்துவம், வியாபாரம், வர்த்தகம் போன்ற துறைகளில் சிறந்த ஆளமையைப் பெற்றுக்கொடுத்தல் மூலம் அத்துறை சார் தொழிற்றுறைகளுக்கு ஏற்றவாறு அவர்களைத் தயார்ப்படுத்துகின்றது. மேலும் மாணவர்களுக்கு அத்துறைசார் அறிவு, திறமை, ஆற்றல் என்பவற்றை வழங்குவதனூடாக தற்கால வர்த்தக உலகின் சவால்களை எதிர்கொள்ளக்கூடியவிதத்தில் அவர்களை உருவாக்குமுகமாக வடிவமைக்கப்பட்டுள்ளது.

விஞ்ஞானமாணி (B.Sc) சந்தைப்படுத்தல் முகாமைத்துவக் (சிறப்பு) கற்கைநெறிகள்
இத்துறையில் திறமையானதும் தொழில்வாய்ப்பினைப் பெற்றுக்கொள்ளக்கூடியதுமான பட்டதாரிகளை உருவாக்குவதன் மூலம் இத்துறையிலுள்ள சவால்களை எதிர்கொள்ளக்கூடிய விதத்தில் வடிவமைக்கப்பட்டுள்ளது. இத்துறையில் தேர்ச்சிபெறும் மாணவர்கள் உற்பத்தித்துறை, போக்குவரத்துத்துறை, தொடர்பாடற்றுறை, அரசசேவைத்துறை, காப்புறுதித்துறை, உடல்நலத்துறை, வங்கியும் அரசாங்க நிறுவனங்களும் போன்ற துறைகளில் தொழிலைப் பெற்றுக்கொள்ளக்கூடிய வாய்ப்பினைப் பெறுவர்.

விஞ்ஞானமாணி (B.Sc) சுற்றுலா முகாமைத்துவக் (சிறப்பு) கற்கைநெறி
இலங்கையில் இத்துறைதொடர்பாகவுள்ள ஒரே பட்டப்படிப்புக் கற்கைநெறி இதுவாகும். மாணவர்கள் இத்துறை தொடர்பான அறிவு, ஆற்றல், திறமை என்பவற்றைப் பெற்றுக்கொள்ளுவதனூடாக சுற்றுலாத்துறையில் முகாமையாளர்களாகத் தொழில்செய்வதற்கு ஏற்றவாறு வடிவமைக்கப்பட்டுள்ளது. இத்துறையில் விசேடமாகக் கற்கும் மாணவர்கள் இக் கற்கைநெறிக்காலத்தில் மேலதிகமாக மேலைத்தேய மொழியொன்றினையும் கற்க வேண்டும். இக் கற்கைநெறியினைப் பூர்த்திசெய்யும் மாணவர்கள் இலங்கை மற்றும் வெளிநாடுகளில் உள்ள சுற்றுலாத்துறை நிறுவனங்களில் சிரேஷ்ட முகாமையாளர் பதவிகளை நோக்கிய பதவிகளுக்குப் பொருத்தமானவர்களாக இருப்பார்கள்.

விஞ்ஞானமாணி (B.Sc) சுற்றாடல் இயைவாக்க வியாபார முகாமைத்துவக் (சிறப்பு) கற்கைநெறிகள்
இக்கற்கைநெறியானது வித்தியாசமான சுற்றாடற் பிரச்சினைகளுக்குத் தொழில்நுட்ப ரீதியானதும் நிலையானதுமாகிய தீர்வுகளை எட்டக்கூடிய முகாமைத்துவப் பட்டதாரிகளை உருவாக்குமுகமாக வடிவமைக்கப்பட்டுள்ளது. மேலும் இத்துறை தொடர்பான அறிவு, ஆற்றல், திறமை என்பவற்றினை வழங்குவதனூடாகத் தற்கால வர்த்தக உலகின் சவால்களைச் சமாளிக்கக்கூடிய மாணவர்களை உருவாக்குவதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது.

விஞ்ஞானமாணி (B.Sc) விருந்தோம்பல் முகாமைத்துவக் (சிறப்பு) கற்கைநெறிகள்
இத்துறைக்குத் தேவையான அறிவு, திறமை, ஆற்றல் என்பவற்றைக் கொண்ட ஆளணியை உருவாக்குமுகமாக இக்கற்கை நெறி வடிவமைக்கப்பட்டுள்ளது. மாணவர்களுக்கு இத்துறை மூலம் இத்துறைக்குரிய கோட்பாட்டு அறிவுடன் செயன்முறைப் பயிற்சியோடு கூடிய கற்பித்தற் சூழல் வழங்கப்படுகின்றது. இத் துறையிற் கற்கும் மாணவர்கள், இக் கற்கைநெறிக்காலத்தில் மேலதிக மேலைத்தேய மொழியொன்றை கற்கும் வாய்ப்பினையும் பெறுகின்றனர். இத்துறையில் ப'ரணத்துவம் அடைபவர்கள் உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் உள்ள இத்துறை தொடர்பான நிறுவனங்களில் சிரேஷ்ட முகாமையாளர் பதவிகளை நோக்கிய பதவிகளுக்குப் பொருத்தமானவர்களாக இருப்பார்கள்.

சமூக விஞ்ஞான மற்றும் மொழிகள் பீடம்
அறிமுகம்
சமூக விஞ்ஞான மொழிகள் பீடத் திணைக்களங்கள் ஐந்து (5) பின்வருமாறு:

01. சமூகவிஞ்ஞானத் திணைக்களம்
02. மொழிகள் திணைக்களம்
03. பொருளியல், புள்ளிவிபரவியல் திணைக்களம்
04. ஆங்கில மொழி கற்பித்தலுக்கான திணைக்களம்
05. புவியியல் மற்றும் சூழல் முகாமைத்துவத் திணைக்களம்

பட்டக் கற்கை நெறிகள்
சமூகவிஞ்ஞான மொழிகள் பீடத்தினால் பின்வரும் கற்கைநெறிகள் வழங்கப்படுகின்றன.

01. கலை பட்டம் (மூன்று வருடம்)
02. கலை (ஹொன்) பட்டம் (நான்கு வருடம்)
03. கலை (ஹொன்) பொருளியல்
04. கலை (ஹொன்) புள்ளிவிபரவியல்
05. கலை (ஹொன்) புவியியல்
06. கலை (ஹொன்) அரசியல் விஞ்ஞானம்
07. கலை (ஹொன்) சமூகவியல்
08. கலை (ஹொன்) சிங்களம்
09. கலை (ஹொன்) ஆங்கிலம்
10. கலை (ஹொன்) தமிழ்
11. கலை (ஹொன்) ஜப்பான் மொழி
12. கலை (ஹொன்) ஹிந்தி மொழி
13. கலை (ஹொன்) சீன மொழி
14. கலை (ஹொன்) ஜெர்மன் மொழி
15. கலை (ஹொன்) தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பம்
16. பீ.ஏ (ஹொன்) மொழிபெயர்ப்பு கற்கைகள்

பொருளியல், புள்ளிவிபரவியல், புவியியல், அரசியல் விஞ்ஞானம், சமூகவியல் ஆகிய கற்கைநெறிகள் சிங்கள, ஆங்கில மொழிகளில் கற்பிக்கப்படுவதோடு, தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப பாடநெறி வெகு விரைவில் ஆங்கில மொழியில் ஆரம்பிக்கப்படவுள்ளது. அனைத்து உள்நாட்டு, வெளிநாட்டு மொழிகளும் அந்தந்த மொழிகளில் கற்பிக்கப்படுகின்றன. மேலுள்ளவற்றுள் இரண்டு கற்கை நெறிகளைப் பிரதான (Major), துணை (Minor) கற்கைநெறிகளாகத் தெரிவுசெய்யமுடியும். அதேநேரம் கணனிக் கற்கைநெறி, இதழியற் கற்கைநெறி, இரண்டாம் மொழியாக ஆங்கிலம் கற்பித்தல் என்பன துணைக் கற்கைநெறிகளாக ஆங்கில மொழி மூலம் மட்டும் கற்பிக்கப்படுகின்றன.

மூன்று கல்வியாண்டுகளைக் கொண்ட கலை பட்டக் கற்கை நெறிகள் என்பன வருடத்திற்கு 15 கிழமைகளைக் கொண்ட இரண்டு பருவகாலங்களைக் கொண்டனவாக உள்ளன. மூன்று வருடப் பட்டக் கற்கைநெறிகளை மாணவர்கள் பூர்த்தி செய்யும் பொழுது 97 புள்ளிகளையும், நான்கு வருட விசேட கற்கைநெறிகளை பூர்த்திசெய்யும் வேளையில் 127 புள்ளிகளையும் பெற்றிருக்க வேண்டும். பட்டக் கற்கைநெறிக்கான விண்ணப்பதாரிகள் அனைவரினதும் திறமைகள் GPA முறையில் கணிப்பிடப்படும்.

பீடமானது கல்விசார் சிறப்பு (Special) கற்கைநெறிகள், அத்தியாவசிய (Compulsory) கற்கைநெறிகள் என இரண்டு அடிப்படைகளில் கற்கை நெறிகளை வழங்குகின்றது. மாணவர்கள் அவர்களின் முதலாம் கல்வியாண்டில் பெற்றுக்கொண்ட தகைமைகளின் அடிப்படையிலேயே நான்கு வருட விசேட (Special) கற்கைநெறிகளுக்காகத் தெரிவு செய்யப்படுகின்றனர். ஏனையவர்கள்

மூன்றாண்டு சாதாரண (General) பட்டக் கற்கைநெறியினைப் பெறுவர். பட்டக் கற்கை விண்ணப்பதாரிகள் ஆங்கிலம், தகவற்தொழில் நுட்பம் என்பவற்றைக் கட்டாயமாகப் பெறுவதுடன் மேலும் பல கட்டாயக் கற்கைநெறிகளையும் பட்டக் கற்கைநெறியைப் பூர்த்திசெய்வதற்காகப் பூர்த்தி செய்யவேண்டும்.

வயம்பப் பல்கலைக்கழகம் (குளியாப்பிட்டி)

கற்கைநெறி	பாடச்சேர்க்கை (விதித்துரைக்கப்பட்டவிடத்து)	க./மொ
மருத்துவம்	-	E
முகாமைத்துவம்	-	E
விவசாயம்	-	E
உணவு விஞ்ஞானமும் போசாக்கும்	-	E
பிரயோக விஞ்ஞானம் (பௌ. விஞ்.)	-	E
உணவு உற்பத்தியும் தொழில்நுட்ப முகாமைத்துவமும்	-	E
பொறியியல் தொழில்நுட்பம்	-	E
உயிர் முறைமைகள் தொழில்நுட்பம்	-	E

வைத்திய பீடம்
MBBS கற்கைநெறி

வயம்ப பல்கலைக்கழகத்தில் MBBS பட்டத்திற்கான கற்கை நெறியானது 5 வருட கற்கை நெறி ஆகும். அத்துடன் இது பாடங்களை அடிப்படையாக கொண்டது. இது 14 பிரதான பாடங்களை கொண்டது அவை Preclinical (3 subjects), Paraclinical (6) and Clinical (5) என வகைப்படுத்தப்பட்டுள்ளது. Preclinical and Paraclinical என்பன பாட அலகுகளாக கற்பிக்கப்படும். முதல் மூன்று அரை ஆண்டுகளும் Preclinical பாடங்களும் 4 -7 அரை ஆண்டுகள் வரை Paraclinical பாடங்களும் கற்பிக்கப்படும். Clinical பாடங்கள் 4 ஆம் அரை ஆண்டிலிருந்து 10 ஆம் அரை ஆண்டு வரை பரவலாகக் கற்பிக்கப்படும். அவை பாட அலகுகளாக கற்பிக்கப்பட மாட்டாது. கற்பித்தல் நடைபெறும் போதும் முடிந்த பின்னரும் இப் பாடங்கள் மதிப்பீடு செய்யப்படும். இரண்டாவது MBBS மற்றும் இறுதி MBBS என மூன்று தொகுக்கப்பட்ட பரீட்சைகள் நடைபெறும்.

மிகவும் திறமையான சமூக பொறுப்புணர்வு கொண்ட, ஆரோக்கிய பராமரிப்பு நிபுணர்களை உயர் தொழில் முறை தர நிலைகளுடன், பன்முகத்தன்மை, விமர்சன சிந்தனை மற்றும் படைப்பாற்றல் ஆகியவற்றை உள்ளடக்கிய கலாச்சார பண்புள்ள விற்பன்னர்களை உருவாக்குவதே எமது குறிக்கோள் ஆகும்.

அடிப்படை கோட்பாடுகளை கொண்ட இக் கற்கை நெறியின் எதிர்பார்க்கப்படும் வெளிப்பாடுகளாக (1) அதிக பட்ச சுகாதார பராமரிப்பு, முன்னேற்றம் மற்றும் சிறப்பம்சங்களை வழங்குவதற்கான உறுதி (2) சமூக மற்றும் பொது சுகாதாரதிற்கு உறுதியளித்தல் (3) திறமையான ஒத்துழைப்பு மற்றும் தொடர்பாடல் (4) நெறிமுறை மற்றும் நிபுணத்துவ நடத்தை (5) தலைமை மற்றும் குழு நிலை அர்ப்பணிப்பு மற்றும் (6) பன்முக தன்மைக்கான மரியாதை என்பவை அமையும்.

முதல் அரை ஆண்டிலிருந்து கற்பிக்கபடும் பாடங்களின் மருத்துவ ரீதியான சம்பந்தங்களை மாணவர்களுக்கு அறிமுகப்படுத்துவதே ஆடீடீளு இன் அடிப்படை அம்சமாகும். உண்மையான நோயாளிகள், நிழற்றப்படங்கள், ஒளிப்பதிவுகள் மற்றும் காகித ஆவணங்களை பாவிப்பதன் மூலம் இந்த இலக்கானது எட்டப்படும். நான்காவது அரை ஆண்டிலிருந்து வைத்தியசாலையில் வைத்திய பயிற்சி வழங்கப்படும். ஏறத்தாழ எல்லா கற்கைகள் மற்றும் பயிற்சிகள் யாவும் வைத்தியசாலையிலேயே நடைபெறும். இக்கல்வி திட்டத்தின் மேலதிக அம்சங்களாக பிரச்சனைகளை தீர்க்கும் திறன்களை வளர்த்தல், மருத்துவத்தினாய் பயில்வேதற்கான அடிப்படை விஞான பயன்பாடு, மாணவர் - மைய கற்றல் மற்றும் சுயமாக கற்றல், சிறு குழு நிலை கற்றல் மற்றும் பாடங்களின் கிடைமட்ட மற்றும் செங்குத்து மட்ட ஒருங்கிணைப்பு என்பவை காணப்படும். மாணவர்களின் பயிற்சிக்கான ஒரு பகுதியாக ஆய்வு திட்டத்தினை நிறைவு செய்யவேண்டியது கட்டாயமானது.

இக் கற்கை நெறிக்கான போதனை மற்றும் மதிப்பீடு என்பவற்றுக்கான மொழிமூலம் ஆங்கிலம் ஆகும். இறுதி MBBS பரீட்சையில் தேறுவதுடன் சிறந்த நடத்தையினை கொண்ட மாணவர்களால் உள்ளாக்கப் பயிட்சி மற்றும் இலங்கை வைத்தியச் சங்கத்தில் பதிவு செய்தல் ஆகியவற்றிற்கு பரிந்துரைக்கப்படுவார்.

வியாபாரக் கற்கைகள் மற்றும் நிதி பீடம்

- பீடத்தில், ஒரு நெறி - திறமை பெறுமான முறையொன்று தற்போது நடைமுறையிலுள்ளது. 4 ஆண்டு காலப் பகுதிக்கு மொத்த திறமை பெறுமானங்கள் 120 ஆகும். கற்கை நெறிகள் ஆங்கில மொழி மூலமாக நடாத்தப்படும். மாணவர்களின் சிறப்பு பட்ட நெறிக்கான கற்கை புலங்களாவன : வியாபார முகாமைத்துவம், கணக்கியலும் வியாபார நிதியும், வங்கியியலும் வியாபார நிதியும் மற்றும் காப்புறுதி மற்றும் நிதியியலில் கௌரவப் பட்ட நெறிக்கு தெரிவு அடிப்படையாக முக்கியமாக முதலிரு வருடங்களில் மாணவர்களுக்கு வழங்கப்பட்ட பாடநெறிகளின் செயல்திறமை அடிப்படையிலானது. (அரையாண்டு I, II)

விவசாயம் மற்றும் பெருந்தோட்ட முகாமைத்துவ பீடம் (மாகந்துர)

1. விவசாய இளமாணிப் பட்டம் (பி.எஸ்.சி. கௌரவ விவசாயம்) **[BScHons (Agriculture)]**

2. உயிர்த்தொகுதிகள் தொழில்நுட்பவியல் இளமாணிப் பட்டம் **[BBST(Hons)]**

ஆகிய இரு கற்கை நெறிகளும் விவசாய மற்றும் பெருந்தோட்ட முகாமைத்துவ பீடத்தினால் வழங்கப்படுகிறது.

இரு கற்கைநெறிகளும் ஆங்கில மொழிமூலம் கற்பிக்கப்படுவதுடன் கற்கைநெறி திறமைப் பெறுமான முறைமையும் நடைமுறையிலுள்ளது. ஆங்கில மொழி கற்பித்தல் மையத்தினாலும் தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப மையத்தினாலும் வழங்கப்படும் சகல வசதிகளும் கற்கை நெறி முழுவதும் மாணவர்களுக்கு வழங்கப்படும்.

1. விவசாய இளமாணிப் பட்டம் (பி.எஸ்.சி. விவசாயம்)

கற்கைநெறி திறமைப்பெறுமான முறைமையும் நடைமுறையிலுள்ளதுடன் நான்கு ஆண்டு காலப்பகுதிக்கு திறமைப் பெறுமானங்களின் மொத்த எண்ணிக்கை 120 ஆகும். முதல் இரண்டு ஆண்டுகளின் போது (4 பருவங்கள்) கற்பிக்கப்படும் நெறிகள் கட்டாயமானவை என்பதுடன் சகல மாணவர்களுக்கும் பொதுவானவை ஆகும். இவை கற்கை நெறியின் 4 திணைக்களங்களினாலும் ஆங்கில மொழி கற்பித்தல் பிரிவினாலும் வழங்கப்படுகின்றன. நிபுணத்துவம் பெறுவதற்கான திட்டங்கள் 3 வது வருடத்தின் 1வது பருவத்திலிருந்து ஆரம்பமாகும்.

கிட்டுகின்ற நிபுணத்துவம் பெறுவதற்கான துறைகள் வருமாறு:

1) பெருந்தோட்ட முகாமைத்துவ திணைக்களம்

(i) பெருந்தோட்ட வள முகாமைத்துவம்
(ii) பெருந்தோட்ட உற்பத்திப் பொருள் அபிவிருத்தி தொழில்நுட்பம்

2) பூங்கனியியலும் இயற்கை வனப்பூட்டல் தோட்ட வளர்ப்பு திணைக்களம்

(i) இயற்கை வனப்பூட்டல் தோட்ட வளர்ப்பு
(ii) அறுவடைக்குப் பின்னரான பூங்கனியியல்

3) விவசாய வணிக முகாமைத்துவ திணைக்களம்

(i) விவசாயப் பொருளியல் மற்றும் வணிகம்
(ii) விவசாய வணிகம் மற்றும் சந்தைப்படுத்தல்

4) உயிர்த்தொழிநுட்பவியல் திணைக்களம்
(i) உயிர் தொழிநுட்பவியல்

முதல் இரு வருடங்களில் மாணவர்கள் எடுத்த கற்கை நெறிகளில் வெளிக்காட்டிய திறமையின் அடிப்படையில் உரிய பாடத் திணைக்களத்தினால் சிறப்புப்பட்ட நெறிக்கு தெரிவு செய்யப்படுவார்கள். தெரிவுசெய்யப்படும் மாணவர்களின் எண்ணிக்கை தீர்மானிக்கப்படும் போது திணைக்களங்களில் காணப்படும் வளங்களும் கவனத்திற்கொள்ளப்படும்.
3வது வருடத்தின் 2வது பகுவத்தின் போதும் 4வது வருடத்தின் 1வது பருவத்திலும் ஆராய்ச்சிக் கருத்திட்டம் ஒன்றை நடாத்துவதற்கும் ஆராய்ச்சி கட்டுரை ஒன்றை எழுதுவதற்கும் 4வது ஆண்டின் 1வது பருவத்தின் இறுதியில் வழமையாக நடாத்தப்படும் வருடாந்த விவசாய ஆராய்ச்சிக் கருத்தரங்கில் அதை சமர்ப்பிப்பதற்கும் மாணவர்கள் கேட்டுக்கொள்ளப்படுவார்கள்.

இக்கருத்தரங்கில் மாணவர்களினால் சமர்ப்பிக்கப்படும் முழு ஆராய்ச்சிக் கட்டுரைகளையும் வெளியிடுவதற்கு அவசியமான நடவடிக்கைகளைப் பீடம் எடுக்கும். நிபுணத்துவம் பெறுவதற்கு தெரிவுசெய்யப்பட்ட துறையில் அனுபவத்தைப் பெறுவதற்காக அரசாங்க அல்லது தனியார் நிறுவனம் ஒன்றின் தமது கற்கைநெறியின் இறுதிப்பருவத்தின் போது பயிற்சி ஒன்றை மேற்கொள்ளுமாறு மாணவர்கள் கேட்டுக்கொள்ளப்படுவார்கள்.

2. உயிர்த்தொகுதிகள் தொழில்நுட்பவியல் கௌரவ இளமாணிப் பட்டம் [BBST(Hons)]

இப்புதிய கற்கைநெறியானது உயிரியல், பௌதீகவியல் மற்றும் பொறியியல் கொள்கைகளை உள்ளடக்கிய நவீன தொழில்நுட்பவியலைப் பயன்படுத்தி உயிரியல் தொகுதிகளை நிர்வகிப்பதற்கான அறிவு, ஆற்றல் மற்றும் அணுகுமுறைகளை மாணவர்களுக்கு வழங்குவதற்காக வடிவமைக்கப்பட்டது. இக்கற்கை நெறியானது மாணவர்களுக்கு முழுமையான கோட்பாட்டு அறிவையும் செயன்முறை அறிவையும் வழங்குவதுடன் நாட்டின் துரித பொருளியல் முன்னேற்றத்திற்கான உயிர்த்தொகுதிகள் மற்றும் சூழலியல் தொழில்நுட்ப ஆற்றல்களையும் வழங்குகிறது.

இந்நான்கு வருட கற்கைநெறியானது 124 திறமைப் பெறுமானங்களைக் கொண்டுள்ளது. நான்குவருட கற்கைநெறி காலப்பகுதியிலும் வழங்கப்படுகின்ற பாட றெிகள் அனைத்தும் கட்டாயமானதுடன் இறுதி சராசரி தரப்புள்ளி (FGPA) கணிப்பீட்டில் கருத்திற்கொள்ளப்படும். இக்கற்கை நெறியில் வழங்கப்படும் 16 திறமைப் பெறுமானங்களை உள்ளடக்கிய ஆராய்ச்சிக் கருத்திட்டமும், அரசாங்க அல்லது தனியார் நிறுவகனம் ஒன்றில் வழங்கப்படும் பயிற்சியும் மாணவர்களை விவசாயப் பொறியியல், அறுவடைக்குப் பின்னரான தொழில்நுட்பவியல், கழிவு முகாமைத்துவம், துல்லியமான விவசாயம் மற்றும் உணவுத் தொழில்நுட்பவியலில் நடுத்தர மற்றும் உயர் மதட்ட தொழில்நுட்ப முகாமைத்துவ நிலைகளை அடைவதற்கு வழிவகுக்கும்.

விவசாயம் மற்றும் பெருந்தோட்ட முகாமைத்துவ பீடம், நீர்கொழும்பு - குருணாகல் வீதியில் பன்னல நகரத்தில் இருந்து 4km தொலைவில் உள்ள மாகந்துரயில் அமைந்துள்ளது.

கால்நடை, மீன்பிடி போசாக்கு பீடம்

கால்நடை, மீன்பிடி போசாக்கு பீடமானது முறையே இரண்டு இளமானி பட்ட நிகழ்ச்சிகளை வழங்குகின்றன.
அவையாவன,

(அ) உணவு விஞ்ஞானமும் போசாக்கும்
(ஆ) உணவு உற்பத்தியும் தொழில்நுட்பவியல் முகாமைத்துவமும்

இது நான்கு வருட சிறப்பு பட்ட திட்டமாகும். மாணவர்கள் முதல் இரண்டு வருடங்களுக்கு பொதுவான உள்ளக திட்டமொன்றை பின்பற்றவும் மூன்றாம் மற்றும் நான்காம் வருட பட்டத் திட்டத்தின் போது பிரயோக போசாக்கு அல்லது உணவு விஞ்ஞானமும் தொழில்நுட்பமும் என்பவற்றில் சிறப்பெய்த முடியும்.

(அ) உணவு விஞ்ஞானமும் போசாக்கும்

உணவு தொழில்நுட்பவியல் மற்றும் மானிட போசாக்கு விஞ்ஞானத்தின் விதிகளை அடிகோலிட்டு வலுவான பின்னணியை வழங்குவது உணவு விஞ்ஞானம் மற்றும் போசாக்கு நிகழ்ச்சித் திட்டம். உ.வி.போ.நி.இனை வெற்றிகரமாக நிறைவு செய்த மாணவர்கள் அடைவது/செய்முறை மூலம் விளக்குவது: (அ) பரந்துபட்ட விஞ்ஞான அறிவு மற்றும் உணவு விஞ்ஞானம் மற்றும் போசாக்கு பற்றிய புரிதல். (ஆ) சமூக விஞ்ஞானங்கள், சந்தைப்படுத்தல் மற்றும் முகாமைத்துவ விடயங்கள் தொடர்புபட்ட தலைப்புகளின் அறிவு மற்றும் புரிதல். (இ) பிரச்சினைகளை தீர்க்கும் திறமை மற்றும் ஆய்வினை மேற்கொள்ளுதல் (ஈ) பாடம் - குறிப்பிட்ட தொழில்சார் அத்துடன் செயன்முறை திறமைகள் மற்றும்தொழில் முயற்சி அத்துடன் தனிப்பட்ட திறமைகள்

தரம் I இல் அளிக்கப்படும் பாடங்கள் உயிரசாயனவியல், மனித உடற்றொழிலியல் மற்றும் ஊட்டம், உணவு மற்றும் ஊட்டம், நுண்ணுயிரியல், சந்தைப்படுத்தல், உணவு பரிமாற்றம் மற்றும் பதப்படுத்தல், உணவு பகுப்பாய்வியல் மற்றும் தர உறுதிப்பாடு போன்ற பிரதான பரப்புகளை ஆங்கிலம், கணிதம், புள்ளிவிபரவியல் மற்றும் தகவல் தொழில்நுட்பம் போன்றவற்றை பின்பற்ற வேண்டும். பிரயோக போசாக்கு (பொது சுகாதாரம் மற்றும் இன போசாக்கு, ஊட்டமுறை மற்றும் நோய், உணவு விதிமுறை, விளையாட்டு மற்றும் உடற்பயிற்சி போசாக்கு) அல்லது உணவு விஞ்ஞானமும் தொழில்நுட்பமும் (உணவு இரசாயனவியல், உணவு நுண்ணாய்வியல், உயிர்தொழில் நுட்பவியல், பாலுணவு, மீன், இறைச்சி, உணவு தானியம், பழம் மற்றும் மரக்கறிகளில் உணவு பாதுகாப்பு மற்றும் உணவு தொழில்நுட்பவியல் பாடநெறிகள்). அனைத்து கற்கை நெறிகளும் ஒன்றில் ஆய்வுகூடம் அல்லது கள அடிப்படையிலான செயன்முறை நடவடிக்கைகளை கொண்டு விளங்கும். ஏழாம் பருவத்தில் மாணவர்கள் தனித்து செயல்படும் வகையில் ஆய்வு நிகழ்ச்சித் திட்டங்களை எடுத்துக் கொள்வர். தொடர்புபட்ட நிறுவகங்கள்/ கழகங்களில் மாணவர்கள் பத்து வாரத்திற்கான பயிற்சி நிகழ்ச்சித் திட்டத்தில் கலந்து கொள்வதற்கு வாய்ப்பு வழங்கப்படுகிறது.

உணவு தொழில்நுட்பவியலாளர், உணவு போசாக்காளர், உணவுபிரிவில் முகாமையாளர், உணவுமுறை வல்லுனர், உணவு வேதியியல் வல்லுநர், தர உறுதிப்பாட்டு அறிவியலாளர், கல்வியாளர் மற்றும் தொடர்புபட்ட களங்களில் பயிற்சியாளர் முதலிய தொழில்வாய்ப்புகளை தொடரும் மாணவர்களுக்கு அவசியமான தொழில்முன்னேற்றம் மற்றும் தொழில்சார் அபிவிருத்திகளை உணவு விஞ்ஞானம் மற்றும் போசாக்கு நிகழ்ச்சித்திட்டம் வழங்குகிறது. மேலும், உணவு விஞ்ஞானம் மற்றும் போசாக்கு ஆனது உயர்பட்ட நிகழ்ச்சித் திட்டத்தை தொடரும் மாணவர்களுக்கான திறமைகளை விருத்தி செய்கின்றது.

(ஆ) உணவு உற்பத்தியும் தொழில்நுட்பவியல் முகாமைத்துவமும்

இது நான்கு வருட சிறப்பு பட்ட திட்டமாகும். மாணவர்கள் முதல் இரண்டு வருடங்களுக்கு பொதுவான உள்ளக திட்டமொன்றை பின்பற்றவும் மூன்றாம் மற்றும் நான்காம் வருட பட்டத் திட்டத்தின் போது கால்நடையும் பறவையின விஞ்ஞானங்களும் அல்லது நீர்வாழ் ஐந்துகள் வளர்த்தல் என்பவற்றில் சிறப்பெய்த முடியும்.

தனித்தன்மை, கேள்வி நிறைந்ததுமான உணவு உற்பத்தி மற்றும் தொழில்நுட்ப முகாமைத்துவத்தின் பி.எஸ்சி நான்கு வருட சிறப்பு பட்டமாக அமைந்துள்ளதுடன் இது உள்ளூர் மற்றும் உலகளாவிய உணவு உற்பத்தி மற்றும் தொழில்நுட்ப முகாமைத்துவ பிரிவுகளில் தற்போது மற்றும் எதிர்கால சவால்களை சமாளிப்பதற்கு வடிவமைகக்பட்டுள்ளது. மாணவர் - கற்பித்தல் நிலையம், ஆய்வுகூடம் மற்றும் களப்பணி செயன்முறை, கைத்தொழில் வெளிப்பாடு மற்றும் ஆய்வு வழியாக உணவு உற்பத்தியுடன் தொடர்புபட்ட அனைத்து விஞ்ஞானங்களை இளமாணிப் பட்டதாரிகளுக்கு வழிகாட்டுவதாக இப்பட்டம் அமைகிறது. மூலாதார மற்றும் விருப்பத்திற்குரிய மொடிய'ல்ஸ், கைத்தொழிலில் இடமளிப்பு, பயிற்சிகளை நிறுவுதல் மற்றும் 6 மாத ஆராய்ச்சி, நூலறிவு மற்றும் செயன்முறை அறிவு என இரு தரப்பையும் சேர்த்து கவனமாக கலக்கப்பட்டுள்ளது. இங்கு உயர்தர வேலைவாய்ப்புக்களில் மாணவர்கள் இடம்பிடிப்பதற்காக அடிப்படையிலிருந்து பிரயோகத்திற்கான அகன்ற அறிவு மற்றும் புரிந்துகொள்ளல், திறமைகள் மற்றும் மனப்பான்மையை வழிநடத்துவதில் பல்நோக்கு தன்மை வாய்ந்த கற்கை நெறிகள் அமைகின்றன. தரம் I, இது 2 வருடங்களை உள்ளடக்கிய மூலாதார நிகழ்ச்சித் திட்டமாகும். இங்கு மாணவர்கள் உணவு உற்பத்தி பற்றிய தத்துவங்கள் மற்றும் அடிப்படை கருத்துக்களை வெளிப்படுத்துவதுடன் பிற திறமைகளான தகவல் தொழில்நுட்பம், புள்ளிவிபரவியல் மற்றும் கணிதம் ஆகியவற்றையும் அறிகின்றனர். இப்பட்ட நிகழ்ச்சித் திட்டம் தரம் I இனை வெற்றிகரமாக நிறைவு செய்யும் மாணவர்களின் விருப்பு மற்றும் செயல்திறனிற்கேற்ப நீர்வாழ் உயிரின வளர்ப்பு மற்றும் மீன்பிடி துறை அல்லது கால்நடை வளர்ப்பு மற்றும் பட்சி வளர்ப்பு விஞ்ஞானத் துறையில் சிறப்பு பெறுவதற்கு வாய்ப்புள்ளது. நான்கு வருட காலத்தில் பல்வித மொடியுல்கள் ஊடாக பிரயோக போசாக்கு துறை அத்துடன் உணவு விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பதுறை பங்களிப்பு ஆற்றியுள்ளன.

இந்த பட்டம் பாரம்பரிய உற்பத்தி முறைமை வெளிப்பாடு, நவீன தொழில்நுட்ப முன்னேற்றங்களை வழங்குதல், முழு ஒழுங்கு முறையிலான உற்பத்தி முகாமைத்துவம் மற்றும் நுகர்பொருள் மற்றும் வணிக முகாவமைத்துவம் கொண்டு விளங்கவும் அத்துடன் உற்பத்தியில் தலைமைத்துவம், மேற்பார்வை செய்தல், முகாமைத்துவவாளர், ஆய்வு மற்றும் உணவு உற்பத்தி பிரிவில் அபிவிருத்தி செய்தலும் சந்தைப்படுத்தல் பொறுப்பும் மிக்கவராவதற்கு அறிவு மற்றும் திறமைகளை வழங்கி அதன் மூலம் புதிய சந்ததியினரான இளமாணிப்பட்டதாரிகளை வெளிகொணர்வதே இதன் வெளிப்பாடாகும். இதற்கு மேலதிகமாக, பட்டம் முடிவு பெற்றதும் வேலை கிடைப்பதை உறுதிப்படுத்துவதற்கு முன்னணி ஸ்தாபன கைத்தொழில் சூழலில் பயிற்சி வழங்குவதன் வாயிலாக அவர்கள் சிறப்பாக உருப்பெற உதவுகிறது. ஆறுமாத ஆய்வானது திறனாய்வு மற்றும் சமயோசித அறிவு திறமையை கொண்டு பட்டபின் கற்கைகள் ஊடாக பெறும் தொழில்சார் அபிவிருத்தியை வழிநடத்த வடிவமைக்கப்பட்டது.

பிரயோக விஞ்ஞானங்கள் பீடம்

க.பொ.த.(உ/த) இல் இணைந்த கணிதம் அல்லது உயர்கணிதம் மற்றும் பௌதீகவியல் ஆகியவற்றைப் பயின்ற பௌதீகவியற் துறையைச் சேர்ந்த எல்லா மாணவர்களும் இலங்கை வயம்பப் பல்கலைக்கழகத்தின் பிரயோக விஞ்ஞான பீடத்திற்குத் தெரிவாகத் தகுதியுடையவராவர். கீழே விபரித்தபடி மூன்று விதமான பட்டம் படிப்புகள் இப்பீடத்தினால் வழங்கப்படுகின்றன. அவையாவன (a) ஆய்வுத்திட்டதுடன் கூடிய பாட ரீதியான நான்கு வருட விசேட பட்டம், (b) தொழில்நார் பயிற்சியுடன் கூடிய நான்கு வருட இணைந்த பிரதான பட்டம், மற்றும் (c) மூன்று வருடப் பொதுப் பட்டம். நான்கு வருடப் பட்டப் படிப்புகளுக்கான மாணவர்களின் அனுமதியானது, முதலிரு வருடங்களிலும் பெற்றுக்கொண்ட பெறுபேற்றின் அடிப்படையிலான பீட உள்ளகத் தேர்வுத்திட்டத்தில் தங்கியுள்ளது. ஆரம்பத்தில் மாணவர்களின் மாவட்ட அடிப்படையிலான விகிதாசாரித்திலும், அவர்கள் க.பொ.த. (உ/த) இல் பெற்றுக்கொண்ட z புள்ளிகளின் அடிப்படையிலும், கீழுள்ள ஏதேனுமொரு பாட இணைப்பினைப் பயில்வதற்கு ஒவ்வொரு மாணவனும் தேர்ந்தெடுக்கப்படுவான்.

இணைப்பு 1 : கணித்தலும் தகவற்தளமும், இலத்திரனியல் மற்றும் கணிதமும் புள்ளிவிபரவியலும்
இணைப்பு 2 : இலத்திரனியல், தொழில்சார் முகாமைத்துவம், மற்றும் கணிதமும் புள்ளிவிபரவியலும்
இணைப்பு 3 : கணித்தலும் தகவற்தனமும் தொழில்சார் முகாமைத்துவம் மற்றும் கணிதமும் புள்ளிவிபரவியலும்

இணைப்பு 2 க்குத் தெரிவாகும் மாணவர்கள் தமது பட்டக் கல்வியுடன், கணித்தலும் தகவற்தளமும் என்ற பாட அறிவினை வளர்ப்பதற்காக "தகவல் தொழில்நுட்ப டிப்ளோமா" பயிற்சி நெறியைப் பயில்வதற்கான சந்தர்ப்பம் அம்மாணவர்களுக்கு வழங்கப்படும்.

பாட இணைப்புக்குத் தெரிவு செய்யப்பட்ட பின்பு, எல்லா மாணவர்களும் அதனை முதலிரு கல்வியாண்டுகளும் தொடர வேண்டும். முதலிரு கல்வியாண்டுகளையும் பூர்த்தி செய்த பின்னர், பீடத்தினால் வரையறுக்கப்பட்ட தகுதியுடைய மாணவர்கள், கீழ் தரப்பட்டுள்ள நான்கு வருடப் பட்டப்படிப்புகளுள் ஏதேனும் ஒன்றுக்கு விண்ணப்பிக்கலாம்.

(a) 4 வருட பிரயோக இலத்திரனியலில் விசேட விஞ்ஞான மாணிப் பட்டம் (ஆங்கில மொழி மூலம்)
4 வருட தொழில்சார் முகாமைத்துவத்தில் விசேட விஞ்ஞான மாணிப் பட்டம் (ஆங்கில மொழி மூலம்)
4 வருட புள்ளிவிபரத்துடன் கூடிய கணிதத்தில் விசேட விஞ்ஞான மாணிப் பட்டம் (ஆங்கில மொழி மூலம்)

* எனக் குறிக்கப்பட்ட பட்டக் கல்வியானது திட்டமிடல் நிலையிலுள்ளது. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் அனுமதி கிடைத்தவுடன் இப்பட்டப் படிப்பானது எமது பீடத்தினால் கற்பிக்கப்படும். பட்டப் படிப்பிற்குப் பின்னர், மேற்படிப்பை மேற்கொள்ளவும், ஒரு குறிப்பிட்ட பாடத்தில் ஆய்வாளராகவோ அல்லது நிபுணராகவோ வரவும் விரும்பும் மாணவர்களுக்காகவே மேற்படி பட்டக்கல்வி வடிவமைக்கப்பட்டுள்ளது. ஒரு குறிப்பிட்ட பாடத்தில் உரிய தகுதியையும் சிறந்த பெறுபேற்றினையும் பெற்றுக்கொள்ளும் மாணவர்களே போட்டி முறையில் தெரிவுசெய்யப்படுவதால், மிகக் குறைந்த மாணவர்களே விசேட பட்டப் படிப்புக்குத் தெரிவு செய்யப்படுவர். எல்லா விசேட பட்டப்படிப்பிலும், நான்காம் வருடத்தில் அந்தந்தப் பாடப் பரப்பிற்குள் அமைந்த ஒரு விசேட ஆய்வுத்திட்டமானது உள்ளடக்கப்பட்டுள்ளது.

(b) 4 வருட விஞ்ஞான மாணி (இணைந்த பிரதான) பட்டம் (பிரதான பாடம் 1 இலும் பிரதான பாடம் 2† இலும்) [ஆங்கில மொழி மூலம்]

† பிரதான பாடம் 1, பிரதான பாடம் 2 ஆகிய பாட விதான இணைப்பு பின்வருவனவற்றில் ஒன்றாக அமையலாம்.

பிரதான பாடம் 1	பிரதான பாடம் 2
கணித்தலும் தகவற்தளமும்	இலத்திரனியல் / தொழில்சார் முகாமைத்துவம் / கணிதம், கணிதத் திட்டமிடல் மற்றும் புள்ளிவிபரவியல்
இலத்திரனியல்	கணித்தலும் தகவற்தளமும் / தொழில்சார் மகாமைத்துவம் / கணிதம், கணிதத் திட்டமிடல் மற்றும் புள்ளிவிபரவியல்
தொழில்சார் முகாமைத்துவம்	கணித்தலும் தகவற்தளமும் /இலத்திரனியல்/ கணிதம், கணிதத் திட்டமிடல் மற்றும் புள்ளிவிபரவியல்
கணிதம், கணிதத் திட்டமிடல்	கணித்தலும் தகவற்தளமும் /இலத்திரனியல் / தொழில்சார் முகாமைத்துவம்மற்றும் புள்ளிவிபரவியல்

பாட விதானங்களில், பிரதான பாடம் 1 ஆனது பிரதான பாடம் 2 ஐ விட மாணவர்களுக்கு அதிகளவான பாட அறிவினை வழங்குவதால், பிரதான பாடம் 1 க்காக ஒதுக்கப்படக்கூடிய மாணவர்களின் எண்ணிக்கையை விட அதிகளவான விண்ணப்பங்கள் பெறப்பட்டால், அந்தக் குறிப்பிட்ட பிரதான பாடம் 1 க்காக ஒதுக்கப்படும் மாணவர்களின் எண்ணிக்கை மட்டுப்படுத்தப்படும்.
எல்லா இணைந்த பிரதான பட்டக் கல்வியும் மூன்றாம் வருடத்திலிருந்து பிரதான பாடம் 1 மற்றும் பிரதான பாடம் 2 ஆகிய இரண்டு பாடங்களின் தொடர்ச்சியாகவும், நான்காம் வருடத்தில் ஒரு அரையாண்டானது பீடத்தின் உள்ளக கற்கை நெறிகளையும், கடைசி அரையாண்டானது, பீடத்திற்கு வெளியே ஏதாவது ஒரு அரசாங்க அல்லது தனியார் நிறுவனத்தில் ஆறு மாதக் கைதொழிற் பயிற்சியையும் கொண்டிருக்கும்.

பட்டம் பெற முன்னர், இரண்டு பாடங்களில் தமது அறிவையும் அநுபவத்தையும் அதிகரிக்க விரும்பும் மாணவர்களுக்கும் மற்றும் அங்கீகரிக்கப்பட்ட அரசாங்க அல்லது தனியார் நிறுவனத்தில் நிகழ்கால / நடைமுறைத் தொழில் / அலுவலகச் சூழலைச் சரியாக அறிந்துகொள்ள விரும்பும் மாணவர்களுக்குமாகவே, இந்த இணைந்த பிரதானப் பட்டக் கல்வியானது வடிவமைக்கப்பட்டுள்ளது.

இந்தப் பட்டக் கல்விக்காக மாணவர்களைத் தேர்ந்தெடுக்கும் முறையானது, விசேட பட்டக் கல்விக்காக மாணவர்களைத் தேர்ந்தெடுக்கும் முறையை விட இலகுவாக இருப்பதனால், பிரத்தியேகமாக, தனியால் துறையில் உடனடியாக தொழில் பார்க்கத் தகுதியானவராக விரும்பும் மாணவர்களுக்கு இந்த இணைந்த பிரதான பட்டக் கல்வியைத் தேர்ந்தெடுக்கும் சந்தர்ப்பம் கூடுதலாக உள்ளது.

(c) 3 வருட பொது விஞ்ஞான மாணிப் பட்டம்

ஆரம்பத்திலேயே 3 வருட பட்டத்தை விரும்பும் மாணவர்களும் 4 வருட பட்டத்துக்குத் தெரிவாகாத மாணவர்களும், ஆங்கில மொழிமூலம் கற்பிக்கப்படும் இந்தக் கற்கைநெறியைக் கற்றல் வேண்டும். ஆரம்பத்தில் வரிசைப்படுத்தப்பட்ட பாட இணைப்புகளிலிருந்து, மூன்று பிரதான பாடங்கள் இந்தப் பட்டக் கல்வியில் உள்ளடக்கப்பட்டிருக்கும்.

(a), (b) மற்றும் (c) இல் குறிப்பிடப்பட்ட எல்லாப் பட்டக் கற்கை நெறிகளும் ஆங்கிலத்தில் பயிற்றுவிக்கப்படுவதால், முதலிரு வருடங்களும், குறிக்கப்பட்ட பாட நெறிகளுடன் ஆங்கிலமும் கற்பிக்கப்படும். தமது ஆங்கில மொழிப்புலமையை மேல்

நிலைக்குக் கொண்டுவர விரும்பும் மாணவர்களுக்காக, மூன்றாம் வருடத்தில் "வியாபார ஆங்கிலக் கற்கைநெறி" மற்றும் "மேல்நிலை ஆங்கில புலமைக் கற்கைநெறி" என்பன கற்பிக்கப்படுகின்றன.

தொழில்நுட்பவியல் பீடம்

இலங்கை வயம்ப பாலகலைக்கழகத்தின் தொழில்நுட்ப பீடமானது நான்கு கல்வி சார் துறை பகுதிகளை உள்ளடக்கின்றது.

- எந்திரவியல் மற்றும் உற்பத்தித் தொழில்நுட்பவியல் துறை
- மின் தொழில்நுட்பவியல் துறை
- நிர்மானிப்புத் தொழில்நுட்பவியல் துறை
- நனோ விஞ்ஞானத் தொழில்நுட்பவியல் துறை

பொறியியல் தொழில்நுட்ப கௌரவ பட்டப்படிப்பு கற்கைநெறிகள்

பிரயோக விஞ்ஞான பீடமானது உயர்தர பொறியியல் தொழில்நுட்ப மாணவர்களை பின்வரும் நான்கு வருட கௌரவ பட்டப்படிப்பு கற்கைநெறிகளுக்கு அனுமதி வழங்குகிறது.

1. பொறியியல் தொழில்நுட்பவியல் கௌரவ இளமானிப்பட்டம்
2. நானோ விஞ்ஞான தொழில்நுட்பவியல் கௌரவ இளமானிப்பட்டம்

முதலாம் வருட கல்வியாண்டின் ஆரம்பத்தில் மாணவர்கள் அவர்களின் விருப்பத்தேர்வு மற்றும் Z புள்ளி அடிப்படையில் மேற்குறிப்பிட்ட பட்டப்படிப்புக்களுள் ஒன்றிற்கு தெரிவுசெய்யப்படுகின்றனர். இக்கற்கைநெறிகள் கிரெடிட் அடிப்படையிலான ஆங்கில மொழிமூல பாடநெறிகளாக நடாத்தப்பட்டு வருகின்றன.

பொறியியல் தொழில்நுட்பவியல் கௌரவ இளமானிப்பட்டம் [BET(Hons)]

இந்த நான்கு வருட கௌரவப் பட்டப்படிப்பானது தற்சமயம் பொறியியல் தொழில்நுட்பதுறைப் பகுதியினால் நடாத்தப்பட்டு வருகின்றது. இப் பட்டப்படிப்பின் முதலாம் வருடத்தில் பொறியியல் கணிதம், பொறியியல் பௌதீகவியல், கைத்தொழில் முகாமைத்துவம் மற்றும் தகவல் தொழில்நுட்பம் ஆகிய பாடங்கள் ஆகிய பாடநெறிகள் பொறியியல் தொழில்நுட்பசார் பாடநெறிகளுடன் நடாத்தப்பட்டு வருகின்றன. இரண்டாம் வருட மாணவர்கள் பின்வரும் தனித்துறை பிரிவுகளுள் ஒன்றை அவர்களின் விருப்பத்தேர்வு மற்றும் முதலாம் வருட செயல்திறன் ஆகியவற்றின் அடிப்படையில் தெரிவு செய்யதுகொள்ள முடியும்.

- கட்டுமானத் தொழில்நுட்பவியல்
- மின் தொழில்நுட்பவியல்
- எந்திரவியல் மற்றும் உற்பத்தித் தொழில்நுட்பவியல்

இப்பட்டப்படிப்பின் மூலம் மாணவர்கள் முற்றிலும் அவர்களின் செயல்முறைத் திறன்களை மேம்படுத்தும் நோக்கில் வாய்ப்புகளை பெற்றுக்கொள்ளக்கூடியதாகவுள்ளது. மேலும், இந்நான்கு வருட பட்டப்படிப்பு கற்கைநெறியானது உலகின் நிஜ தொழில்நுட்ப பிரச்சினைகளை நுணுகி ஆராய்ந்து தீர்வினை பெற்றிடும் நோக்கில் இருதிவருட ஆய்வுத்திட்ட செயற்பாடுகளை உள்ளடக்கியுள்ளது. மாணவர்கள் தமது நான்காம் வருடத்தின் இரண்டாம் பருவகாலத்தில் கைத்தொழில் பயிற்சிக்காக வெளியக நிறுவனங்களிற்கு நிஜ தொழில் சூழலின் அனுபவத்தினைப் பெற்றிடும் நோக்கில் செல்ல வேண்டியுமுள்ளது.

நனோ விஞ்ஞானத் தொழில்நுட்பவியல் கௌரவ இளமானிப்பட்டம்

நான்கு வருட நனோ விஞ்ஞானத் தொழில்நுட்பவியல் கௌரவ இளமானிப்பட்டப்படிப்பு கற்கைநெறியானது நனோ விஞ்ஞானத் தொழில்நுட்பவியல்துறைப் பகுதிப்பிரிவினால் நடாத்தப்பட்டு வருகின்றது. நனோ விஞ்ஞானத் தொழில்நுட்பக் கற்கையானது அதன் முக்கியமான பகுதிகளான இரசாயனவியல், பௌதீகவியல், மூலப்பொருள் விஞ்ஞானம், உயிரியல் தொழில்நுட்பம், நனோ மருத்துவம், சக்தி, போன்ற பிரிவுகளின் கோட்பாடு மற்றும் செய்முறைகளை உள்ளடக்கியவாறு விருத்தியாக்கப்பட்டுள்ளது. நனோ தொழில்நுட்ப பயன்பாடுகள் சார் கணனிப்பாவனையின் பாகங்களைக் கற்றிடும் நோக்கில் மாணவர்கள் கணனிவிஞ்ஞான பாடப்பரப்பின் குறிப்பிடத்தக்க கூறுகளை பெற்றுக்கொள்ளக்கூடியதாகவுள்ளது. மேலும், அவர்களுக்குத் தேவையான பௌதீகவியல், இரசாயனவியல் மற்றும் உயிரியல் பாடங்களின் அடிப்படைகளை முதலாம் வருட கல்வியாண்டில் வழங்கப்படக்கூடியதாகவுமுள்ளது. இரண்டாம் வருடத்திலிருந்து மாணவர்கள் நனோ தொழில்நுட்பத்தின் முக்கிய பரப்புக்களின் அடிப்படைக் கொள்கைகளை அறிந்துகொண்டு பயன்படுத்தும் நோக்கிலும், ஆய்வின் கொள்ளளவு மற்றும் தொழில்நுட்பதிறன்களை விளக்கமளிக்கும் நோக்கிலும், தேசிய தேவைகளுக்கு தீர்வுகளை பெற்றிடுவதற்காக அவர்களின் சுயகற்றல் நடவடிக்கைகளில் நோக்கிலும் கற்பிக்கப்படுகின்றனர். மேலும், இக் கற்கைநெறியானது மாணவர்களின் செயல்முறைத் திறன்களை மேம்படுத்தும்நோக்கில் இறுதிவருட ஆறுமாதகால கைத்தொழில் பயிற்சிநெறியையும் ஆய்வுத்திட்ட செயற்பாடுகளையும் உள்ளடக்கியுள்ளது.

கற்கைநெறி	பாடச்சேர்க்கை (விதித்துரைக்கப்பட்டவிடத்து)	க./மொ
விஞ்ஞானமும் தொழில்நுட்பமும்	-	E
கணனி விஞ்ஞானமும் தொழில்நுட்பமும்	-	E
தொழில்முயற்சியும் முகாமைத்துவமும்	-	E
விலங்கு விஞ்ஞானம்	-	E
ஏற்றுமதி விவசாயம்	-	E
தேயிலை தொழில்நுட்பமும் பெறுமதி சேர்ப்பும்	-	E
கைத்தொழில் தகவல் தொழில்நுட்பம்	-	E
கனிப்பொருள் வளங்களும் தொழில்நுட்பமும்	-	E
நீர்வாழ் வளங்கள் தொழில்நுட்பம்	-	E
பனை இனத்தாவரம் மற்றும் இறப்பர்பால் தொழில்நுட்பமும் பெறுமதி சேர்ப்பும்	-	E
விருந்தோம்பல், சுற்றுலா மற்றும் நிகழ்ச்சிகள் முகாமைத்துவம்	-	E
பொறியியல் தொழில்நுட்பம்	-	E
உயிர் முறைமைகள் தொழில்நுட்பம்	-	E

பீ.டெக். (B.Tech.) - விஞ்ஞானம் மற்றும் தொழிநுட்பக் கற்கை நெறி

பல்வேறு தொழில்துறைகளில் நிலவும் விஞ்ஞான தொழில்நுட்பவியல் தேவைகளைக் கருத்தில் கொண்டு அது சார்ந்த அறிவை மாணவர் மத்தியில் விருத்தி செய்வது, மாறிவரும் உலகிற்கு ஏற்ப உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுத் தேவைகளைக் கருத்திற் கொண்டு விஞ்ஞான தொழில் நுட்பவியல் கற்கைநெறியில் பல்பரிமாண ஆய்வுகளை ஊக்குவிப்பது, தேசிய வளங்களுக்குத் தொழில்நுட்ப ரீதியில் பெறுமதி சேர்க்கக்கூடிய விஞ்ஞான அறிவுடைய பட்டதாரிகளை உருவாக்கும் வகையில் இக்கற்கைநெறி வடிவமைக்கப்பட்டுள்ளது.

பீ.எஸ்சி. (B.Sc.) - கணனி விஞ்ஞான தொழிநுட்பக் கற்கைநெறி

சுயகற்கை மற்றும் ஆய்வு முலம் பெறும் அறிவுக்கூடாக உள்நாட்டு தொழில்துறைகளுக்கும் நாட்டின் பொருளாதார அபிவிருத்திக்கும் பெறுமதி சேர்க்கக்கூடிய வகையில் நவீன கணனித் தொழில்நுட்பவியல் அறிவுடைய பட்டதாரிகளை உருவாக்கும் வகையில் தொழில்துறைத் தேவைக்கேற்ப வடிவமைக்கப்பட்டுள்ளது.

பீ.பீ.எம். (B.B.M.) - தொழில்முயற்சியும் முகாமைத்துவமும் கற்கைநெறி

முகாமைத்துவப் பிரச்சினைகளைத் திடமாகத் தீர்க்கவும் பெறுமதி சேர்த்தலைத் திறம்படக் கையாளக்கூடிய ஒரு தொழில்முயற்சிக் கலாசாரத்தையுடைய பட்டதாரிகளை உருவாக்கும் வகையில் இக்கற்கைநெறி வடிவமைக்கப்பட்டுள்ளது. பீ.பீ.எம். கற்கைநெறி சகல தொழிலாண்மைக்கும் உரிய மிகச்சிறந்த அத்திபாரத்தை வழங்குவதுடன் தொழில்முயற்சியியல் திறனையும் முகாமைத்துவ அறிவையும் விருத்தி செய்யவுள்ளது.

பீ.ஏ.எஸ்சி. (B.A.Sc.) - விலங்கு விஞ்ஞான இளமாணிக் கற்கைநெறி

ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழகத்தின் தனிச்சிறப்புடைய இக்கற்கைநெறி விலங்கு வேளாண்மையில் (உதாரணம் கோழிப்பண்ணை, பன்றி வளர்ப்பு, ஆடு, மாடு, எருமை முதலிய கால்நடை வளர்ப்பு) திறன்படச் செயல்படக்கூடிய பட்டதாரிகளை உருவாக்கும் வகையில் இக்கற்கைநெறி வடிவமைக்கப்பட்டுள்ளது. இது கால்நடைத் துறையில் விலங்கு நலன் மற்றும் பெறுமதி சேர்க்கையில் பங்களிக்கக்கூடிய வகையில் முழுமையான அறிவைப் பெற்றுக் கொடுப்பதுடன், பெருவணிகம் மற்றும் குடிசைக் கைத்தொழில் நிலைகளில் கால்நடை உற்பத்திகளுக்குப் பெறுமதி சேர்த்தல் மூலம் விலங்கு வேளாண்மை உற்பத்தித் திறனை அதிகரிக்கச் செய்யக்கூடியவர்களை உருவாக்கும்.

பீ.எஸ்சி. (B.Sc.) - ஏற்றுமதி விவசாயக் கற்கைநெறி

ஏற்றுமதியைப் பிரதான நோக்கமாகக் கொண்டு விவசாய வளங்களுக்குப் பெறுமதி சேர்க்கக்கூடிய வகையில் விவசாய உற்பத்தி மற்றும் ஆராய்ச்சி மூலதத்துவங்களில் திறனும் விஞ்ஞான அறிவும் கொண்ட பட்டதாரிகளை உருவாக்குவதே இக்கற்கைநெறியின் நோக்கமாகும்.

பீ.எஸ்சி. (B.Sc.) - தேயிலை தொழிநுட்பமும் பெறுமதி சேர்ப்பும் கற்கைநெறி

ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழகத்தின் தனிச்சிறப்புடைய இக்கற்கைநெறி இலங்கையின் தேயிலை துறை பற்றிய உரிய மதிப்பீட்டிற்கு ஆழமான விஞ்ஞான அறிவும் திறனும் வழங்கும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது. கோட்பாட்டுக் கற்கைகள் மற்றும் களச் செயல்முறைப் பயிற்சிகளூடாக தொடர்புடைய பாடங்களில் நிபுணத்துவ அறிவை மாணவர்களுக்கு வழங்குவதுடன் புத்தாக்கம் மிக்க பெறுமதி சேர் தொழிநுட்பங்களினூடான இலங்கைத் தேயிலைத் துறையைச் சர்வதேசப் போட்டிச் சந்தைக்கு எற்ப விருத்தி செய்யக்கூடிய பட்டதாரிகளை உருவாக்குவதுமாகும்.

பீ.ஐ.ஐ.ரீ. (B.I.I.T.) - கைத்தொழில் தகவல் தொழிநுட்ப இளமாணிக் கற்கைநெறி

கைத்தொழில் வியாபாரத் தொழில்முறைக்குப் பெறுமதி சேர்க்கும் வகையில் நவீன கைத்தொழில் தகவல் தொழில்நுட்பம் தொடர்பாகக் கோட்பாடு மற்றும் செயல்முறைக் கற்கைகளுக்கூடாக விஞ்ஞான அறிவுடைய பட்டதாரிகளை உருவாக்கும் வகையில் தனிச்சிறப்புடன் இக்கற்கைநெறி வடிவமைக்கப்பட்டுள்ளது.

பி.எஸ்சி. (B.Sc.) - கனிப்பொருள் வளங்களும் தொழிநுட்பமும் கற்கைநெறி

ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழகத்தின் தனிச்சிறப்புடைய இக்கற்கைநெறி நாட்டின் கனிப்பொருள் மூலவளங்கள் குறித்த மதிப்பீட்டுக்கு ஆழமான விஞ்ஞானபூர்வ அடித்தளத்தைக் கொண்டுள்ள பட்டதாரிகளை உருவாக்கும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது. கனிப்பொருள் வளங்களின் பயன்பாடு மற்றும் இயற்கையாகவும் பொறியியல் மூலமும் மூலப்பொருட்களுக்குப் பெறுமதி சேர்க்கும் விஞ்ஞானமும் தொழில்நுட்பமும் பற்றி கள நுட்பவியலூடாகக் கோட்பாட்டுக் கற்கைகள் மற்றும் செயல்முறைப் பயிற்சிகளுக்கூடாக மாணவர்களுக்கு நிபுணத்துவ அறிவை வழங்குவது.

பி.எஸ்சி. (B.Sc.) - நீர்வாழ் வளங்கள் தொழிநுட்பக் கற்கைநெறி

ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழகத்தினால் மட்டும் வழங்கப்படும் தனிச்சிறப்புடைய இக்கற்கைநெறி இலங்கையில் நீர்வாழ் வளங்களின் அபிவிருத்திக்கு விஞ்ஞான மற்றும் தொழிநுட்ப அணுகுமுறைகளைப் பயன்படுத்தக்கூடிய ஆற்றல்மிகு முன்மாதிரிப் பட்டதாரிகளை உருவாக்குவதையும் பூகோள மற்றும் பிராந்தியங்களின் அவசிய தேவைகளுக்கு ஏற்பப் புதிய பெறுமதி சேர் உற்பத்திகளைச் செய்வதற்கு ஏற்ப அண்மைக்கால நவீன மற்றும் உயர்தர தொழிநுட்பங்களுக்கு அவர்களைப் பழக்கப்படுத்துவதையும் நோக்கமாக்க கொண்டதாகும்.

பி.எஸ்சி. (B.Sc.) - பனை இனத்தாவரம் மற்றும் இறப்பர் பால் தொழிநுட்பமும் பெறுமதி சேர்ப்பும் கற்கைநெறி

ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழகத்தின் தனிச்சிறப்புடைய இக்கற்கைநெறி இலங்கையின் பனையினத் தாவரம் மற்றும் இறப்பர்பால் துறை பற்றிய உரிய மதிப்பீட்டுக்கு உயர்தர விஞ்ஞான அறிவு வழங்கும் வகையிலும் தொழில்துறை விருத்திக்கு பயிற்சிகள் மூலம் புதிய வகைப் பெறுமதி சேர் தொழில்நுட்பங்களைத் திட்டமிடவும் நடைமுறைப்படுத்தவும் கூடிய திறன்மிகு புத்தாக்க தொழில்வாண்மையாளர்களை உருவாக்கும் வகையிலும் வடிவமைக்கப்பட்டுள்ளது. பனையினத் தாவரத்திலிருந்து உணவு மற்றும் பொருட்கள் உற்பத்தியையும், இறப்பர் பாலிலிருந்து பெறுமதி சேர் உற்பத்திப் பொருட்களையும் உள்ளூர் மற்றும் சர்வதேச சந்தையில் கேள்வி மிக்கவையாக உருவாக்கக்கூடிய அறிவையும் இது வழங்குகிறது.

பி.பீ.எம். (B.B.M.) - விருந்தோம்பல், சுற்றுலா மற்றும் நிகழ்ச்சிகள் முகாமைத்துவக் கற்கைநெறி

இக்கற்கைநெறி விருந்தோம்பல், சுற்றுலா மற்றும் நிகழ்ச்சிகள் முகாமைத்துவத் துறையில் முழுமையான அறிவுத்திறன் விருத்தியை வழங்குகிறது. புத்தாக்க உற்பத்திகள் மற்றும் சேவைகளின் அபிவிருத்தி வாயிலாக விருந்தோம்பல், சுற்றுலா மற்றும் நிகழ்ச்சிகள் முகாமைத்துவத் துறையில் முழுமையான உயர் வியாபாரப் பொருளாதாரப் பலனைத் தேடிப் பெற்றுக் கொடுக்கக்கூடிய பல்துறைத் திறன் மிக்கவர்களை உருவாக்குகிறது. நவீன உபாய அணுகுமுறைகளுக்கூடாக போட்டி மிக்க உலகில் உடனுழைக்கும் வேலையின் நன்மையினைப் பயன்படுத்த மாணவர்கள் தெளிவு பெறுவார்கள்.

கட்புல, அரங்கேற்றக்கலைகள் பல்கலைக்கழகம்

கற்கைநெறி	பாடச்சேர்க்கை (விதித்துரைக்கப்பட்டவிடத்து)	க./மொ
சங்கீதம்	-	S
நடனம்	-	S
நாடகமும் அரங்கமும்	-	S
கட்புலக் கலை	-	S

ஸ்ரீபாளி வளாகம்

கற்கைநெறி	பாடச்சேர்க்கை (விதித்துரைக்கப்பட்டவிடத்து)	க./மொ
அரங்கேற்றற் கலை	-	S
வெகுசன ஊடகம்	-	S

அரங்கேற்றல் கலைகளின் சிறப்பு பட்டம்

வழங்கப்பட்டுள்ள பாடவிதானத்தின் கீழ் செயல் நிறைவேற்றக் கலைகளின் சிறப்புப் பட்டப்படிப்பினை நிறைவு செய்வதற்கு மாணவர் ஒருவன் நான்கு வருட கல்விக் காலத்தின் பொழுது 43 கற்கை நெறிகளை உள்ளடக்கிய கல்வி நிகழ்ச்சித்திட்டம் ஒன்றினை பூர்த்தி செய்ய வேண்டும். பூர்த்தி செய்யப்பட வேண்டிய 43 கற்கை நெறிகள் ஆவன 26 பிரதான கற்கை நெறிகள், 6 அடிப்படை கற்கை நெறிகள் மற்றும் 11 தெரிவு கற்கை நெறிகளை உள்ளடக்கியதாகும். இக்கற்கை நெறி பாடவிதானத்தின் சுருக்க கட்டமைப்பு கீழே தரப்பட்டுள்ளது. பிரதான அலகு ஒவ்வொன்றும் 45 மணித்தியாலங்களைக் கொண்டிருக்கும்.

பிரதான கற்கை நெறிகள்

நிகழ்ச்சித்திட்டத்தில் **கட்டாயமானவை** என்ற வகையில் 26 கற்கை நெறிகள் உள்ளன. இந்தக் கற்கை நெறிகள் ஒரு தொகுதி செய்முறை நெறிகளை உள்ளடக்குகின்ற 7 கற்கை அலகுகளில் வழங்கப்படுகின்ற பாட நெறிகள் **நடனம், சங்கீதம், நாடகமும் அரங்கியலும்** என 3 பாடப்பரப்புக்களிலிருந்து தெரிவு செய்யப்பட்டவையாக இருக்கும். எனவே, பிரதான அலகு ஒன்று ஒவ்வொன்றும் 45 மணித்தியாலங்களை உள்ளடக்கிய மூன்று சம ஒழுங்கு நெறிகளைக் கொண்டதாக இருக்கும் என்பதுடன், மாணவர் ஒருவர் ஒரு தெரிவுசெய்யப்பட்ட செய்முறை பாடநெறியை 4 வருட காலப் பகுதியில் பின்பற்றுவார்.

அடிப்படை கற்கை நெறிகள் மற்றும் தெரிவுக் கற்கை நெறிகள்

செயல் நிறைவேற்ற கலைகளின் களத்தினை ஊடறுத்துச் செல்கின்ற ஒரு சில முக்கிய துறைகளை உள்ளடக்கும் முகமாக வடிவமைக்கப்பட்டுள்ள 6 அடிப்படை கற்கை நெறிகள் இதில் காணப்படுகின்றன. இவை சகல மாணவர்களுக்கும் கட்டாயக்

கற்கை நெறிகளாக வழங்கப்படும். 30 தெரிவுக் கற்கை நெறிகள் உள்ளன. சங்கீதம், நடனம், நாடகமும் அரங்கியலும், சினிமா, கலையும் வடிவமைப்பும் என்ற 5 பாடத்துறைகளுடன் தொடர்புபட்ட விடயங்களை இவை கொண்டிருக்கும். மாணவர்கள் அவர்களது குறிப்பிட்ட தேவைகளுக்கு அமைவாக வழங்கப்படுகின்ற 30 அலகுகளில் 11 அலகுகளை மாத்திரம் தெரிவு செய்வதற்கு கடமைப்பட்டுள்ளார்கள்.

குறிப்பு : குறைந்தது 5 மாணவர்கள் ஒரு கற்கை நெறிக்கு பதிவு செய்திருந்தால் மாத்திரமே அது தொழிற்படத் தொடங்கும். பிரதானம் மற்றும் தெரிவு கற்கை நெறிகளுக்கு இத்தேவை பிரயோகிக்கப்படும்.

வெகுசன ஊடகத்தில் பீ.ஏ (சிறப்பு)

அச்சு ஊடகத்துறை, வானொலி ஒலிபரப்பு ஊடகத் துறை, ஊடகத் துறையின் கோட்பாடும் வரலாறும் போன்ற சிறப்புக் கற்கை நெறிகளை உள்ளடக்கியதாக கொழும்புப் பல்கலைக்கழக ஸ்ரீபாளி வளாகத்தின் வெகுசன ஊடகத்துறை நான்கு வருட சிறப்புப்பட்டபடிப்பு நெறி ஒன்றினை வெகுசன ஊடகத்துறையில் வழங்கவுள்ளது.

இந்தப்பட்டப் படிப்பு நிகழ்ச்சித்திட்டதின் பிரதான நோக்கமாக இருப்பது வெகுசன ஊடகத்துறையின் எண்ணக்கருவியல் கோட்பாடு மற்றும் பயிற்சி அறிவு என்பனவற்றில் நிரம்பிய அறிவு கொண்ட பட்டதாரிகளை உருவாக்குதல் ஆகும்.

வெகுசன ஊடகத்துறையில் சிறப்புப்பட்டப் படிப்பு பின்வரும் கற்கை நெறிகளைக் கொண்டிருக்கும்.

1. பிரதான கற்கைநெறி
2. அடிப்படைக் கற்கைநெறிகள்
3. தெரிவுக் கற்கைநெறிகள்
4. சேவைசார் கற்கைநெறிகள்

வெகுசன ஊடகத்துறையினால் வழங்கப்படும் கற்கை நெறிகளின் எண்ணிக்கை 80 ஆகும். இவற்றில் ஆகக் குறைந்தது 43 கற்கை நெறிகளையாவது மாணவர் ஒருவர் சிறப்புப் பட்டப்படிப்பு தகைமை பெறுவதற்கு பாட நெறியாக செய்திருத்தல் வேண்டும். இந்தக் கற்கை நெறிகள் பின்வரும் பிரதான நெறிகளுடன் இணைக்கப்படும். அவை யாவன: அச்சு ஊடகக கற்கைகள், வானொலி ஒலிபரப்பு, ஊடகக் கற்கை, தொலைக்காட்சி ஊடகக் கற்கை, ஊடக சமூகவியல், ஊடக உளவியல்துறை, ஊடக மானுடவியல், தத்துவம், கலாசாரவியல், இலக்கியக் கற்கைகள், அரசியல் பொருளாதாரம், பதிப்பித்தல், தகவல் தொழில்நுட்பம்.

தேவைப்படுகின்ற பயிற்சி அறிவு எமது வளாகத்தில் உள்ள நவீன கலையகத்திலும், ஏனைய அரச தனியார் ஊடகத்துறை நிறுவனங்களில் உள்ள கலையகங்கள் மூலமும் வழங்கப்படும்.

வவுனியா வளாகம்

கற்கைநெறி	பாடச்சேர்க்கை (விதித்துரைக்கப்பட்டவிடத்து)	க./மொ
முகாமைத்துவக் கற்கைகள் (TV)	-	E
பிர. விஞ். (உயி. விஞ்ஞானம்)	சூழல் விஞ்ஞானம்	E
பிர. விஞ்ஞானம் (பௌ. விஞ்.)	பிர. கணிதமும் கணக்கிடுதலும்	E
தகவலும் தொடர்பாடல் தொழில்நுட்பமும்	-	E
செயற்திட்ட முகாமைத்துவம்	-	E

திருகோணமலை வளாகம்

கற்கைநெறி	பாடச்சேர்க்கை (விதித்துரைக்கப்பட்டவிடத்து)	க./மொ
முகாமைத்துவக் கற்கைகள் (TV)	முகாமைத்துவம், கணக்கியலும் நிதி முகாமைத்துவம், மனித வள முகாமைத்துவம், தகவல் முகாமைத்துவம், சந்தைப்படுத்தல் முகாமைத்துவம்	E
தொடர்பாடல் கற்கைகள்	தொடர்பாடல், மொழியியல், ஆங்கில மொழி	E
சித்த மருத்துவமும் அறுவை சிகிச்சையும் ##	-	E
பிரயோக விஞ்ஞானங்கள் (பௌதிகவியல்)	-	E
கணனி விஞ்ஞானம்	-	E

விஞ்ஞானரீதியான வழியில் முறைமையைத் தரமுயர்த்துவதற்கு சுதேசிய மருத்துவ வைத்தியர்களின் சிறந்த அறிவை உற்பத்தி செய்வதற்கு விஞ்ஞான ரீதியான ஆராய்ச்சி அணுகுமுறையுடன் கற்பித்தல்.

கொழும்புப் பல்கலைக்கழகத்தின் கணனிக் கல்லூரி

கற்கைநெறி	பாடச்சேர்க்கை (விதித்துரைக்கப்பட்டவிடத்து)	க./மொ
கணனி விஞ்ஞானம்	-	E
தகவல் முறைமைகள்	-	E

உள்நாட்டு மருத்துவ நிறுவகம், கொழும்பு பல்கலைக்கழகம்

கற்கைநெறி	பாடச்சேர்க்கை (விதித்துரைக்கப்பட்டவிடத்து)	க./மொ
ஆயுர்வேத மருத்துவமும் அறுவை சிகிச்சையும்	-	S
யுனானி மருத்துவமும் அறுவை சிகிச்சையும்	-	E

கம்பஹா விக்கிரமாராச்சி ஆயுர்வேத நிறுவகம், களனிப் பல்கலைக்கழகம்

கற்கைநெறி	பாடச்சேர்க்கை (விதித்துரைக்கப்பட்டவிடத்து)	க./மொ
ஆயுர்வேத மருத்துவமும் அறுவை சிகிச்சையும்	-	S

சுவாமி விபுலானந்தர் அழகியற் கற்கைகள் நிறுவகம்

கற்கைநெறி	பாடச்சேர்க்கை (விதித்துரைக்கப்பட்டவிடத்து)	க./மொ
சங்கீதம்	-	T
நடனம்	-	T
நாடகமும் அரங்கமும்	-	T
கட்புலமும் தொழில்நுட்பவியல் கலையும்	-	T

இராமநாதன் நுண்கலைக்கழகம்

கற்கைநெறி	பாடச்சேர்க்கை (விதித்துரைக்கப்பட்டவிடத்து)	க./மொ
சங்கீதம்	-	T
நடனம்	-	T
சித்திரமும் வடிவமைப்பும்	-	T

பகுதி 8

பொதுவாக கேட்கப்படும் கேள்விகள்

மாணவர்களினால் அடிக்கடி கேட்கப்படும் கேள்விகளுக்கான பதில்கள் இப்பிரிவில் உள்ளடங்கியுள்ளன. உதாரணமாக, பல்கலைக்கழக அனுமதிக்காக மாணவனின் மாவட்டத்தை தீர்மானிக்கும் முறை, உள்நிலை மாணவராக ஒரு பல்கலைக்கழகத்தில் பதிவுசெய்த பின்னர் அதற்குப்பின் வரும் வருடத்தில் க.பொ.த. (உ.த) பரீட்சைக்குத் தோற்றி பல்கலைக்கழக அனுமதிக்கு விண்ணப்பிக்க முடியுமா போன்ற கேள்விகளும் மற்றும் மேலும் பல அடிக்கடி கேட்கப்படும் வினாக்களும் இப்பிரிவில் உள்ளடங்குகின்றன.

இப்பிரிவை நீங்கள் கட்டாயம் வாசித்தல் வேண்டும். உங்களுடைய கேள்விகளுக்கு இப்பிரிவில் பதில் கிடைக்காவிட்டால் நீங்கள் எங்களை எழுத்து மூலமாகவோ அல்லது மின்னஞ்சல் மூலமாகவோ தொடர்புகொள்ளலாம். நாங்கள் அதற்கு பதிலளிப்போம். வருங்கால வெளியீடுகளில் இவ்வாறான கேள்விகளுக்குரிய பதில்களை உள்ளடக்குவோம்.

பகுதி 8

பொதுவாக கேட்கப்படும் கேள்விகள்

1. **நான் பல்கலைக்கழக அனுமதிக்கு எவ்வாறு விண்ணப்பிப்பது?**

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் உத்தியோகபூர்வ இணையதளத்தில் (www.ugc.ac.lk) காணப்படும் இலத்திரனியல் விண்ணப்பத்தை நிரப்பி சமர்ப்பிப்பதுடன் அவற்றின் அச்சுப்பிரதியை பத்திரிகை அறிவித்தல்களினூடாக அறிவிக்கப்பட்ட விண்ணப்பங்களைச் சமர்ப்பிப்பதற்கான இறுதித் திகதிக்கு முன் பதிவுத் தபாலில் சம்பந்தப்பட்ட ஏனைய ஆவணங்களுடன் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவிற்கு அனுப்பிவைக்கவும்.

முக்கியம்:
பல்கலைக்கழக அனுமதிக்கு இணையதளத்தினூடாக விண்ணப்பித்தல் கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

2. **யுனி கோட்** (Uni-Code) **என்றால் என்ன?**

யுனி கோட் ஓர் தனித்துவமான குறியீடாக (தனித்துவமான அடையாளம்) குறித்த பல்கலைக்கழகத்தின்/ வளாகத்தின்/ உயர் கல்வி நிறுவனங்களின் தனித்தனி வெவ்வேறு கற்கைநெறிகளை குறிக்கும்.

எல்லா யுனி கோட்களும் பக்கம் 127-131 இல் தரப்பட்டுள்ளன.

விண்ணப்பதாரிகள் பல்கலைக்கழக அனுமதிக்கான விண்ணப்பப்படிவத்தை இணையதளம் மூலம் பூர்த்தி செய்யும் போது யுனி கோட் (Uni-Code) இனை பயன்படுத்தி தமது விருப்பொழுங்கை குறிப்பிடுதல் வேண்டும்.

யுனி கோட் (Uni-Code) இனை பயன்படுத்தி விருப்பொழுங்கை சரியாக குறிப்பிடும் முறை இக் கைநூலின் பகுதி 3 இல் தரப்பட்டுள்ளது. ஆகவே யுனி கோட் விருப்பொழுங்கை குறிப்பிட/ மாற்ற முன்னர் அவ் பகுதியினை நன்கு வாசித்து விளங்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறீர்கள்.

3. **இணையதளத்தினூடாக விண்ணப்பபடிவத்தை பூரணப்படுத்த முன்னர் ஒழுங்குபடுத்தப்பட்ட யுனி கோட் இனை தயார்படுத்தியிருத்தல் ஏன் அவசியமானது?**

விருப்பொழுங்கில் குறிப்பிடப்பட்ட யுனி-கோட்களுக்கு (கற்கைநெறிகளுக்கு) மாத்திரமே பரிட்சாத்திகள் கருத்தில் கொள்ளப்படுவர். விருப்பொழுங்கில் குறிப்பிடப்படாத யுனி-கோட்களுக்கு (கற்கைநெறிகளுக்கு) அவர்கள் கருத்தில் கொள்ளப்படமாட்டர்.

இதற்கமைய Z புள்ளியினடிப்படையில் தேர்வாகத் தகுதியான யுனி கோட் குறித்த பரிட்சாத்தியின் விருப்பொழுங்கில் இல்லாதவிடத்து அவ் யுனி-கோட்டிற்கு அன்றி குறித்த பரிட்சாத்தியின் விருப்பொழுங்கில் குறிப்பிடப்பட்டுள்ள அடுத்த யுனி-கோட்டிற்கே அவர்கள் கருதப்படுவர். எனவே இணையதளத்தினூடாக விண்ணப்பபடிவத்தை பூரணப்படுத்த முன்னர் கவனமாக ஒழுங்குபடுத்தப்பட்ட யுனி கோட்களின் பட்டியலை தயார்படுத்தியிருத்தல் வேண்டும் என அறிவுறுத்தப்படுகிறீர்.

மேலும் உச்ச எண்ணிக்கையான யுனி கோட்களை விருப்பொழுங்கில் குறிப்பிடுவதன் மூலம் நீர் தகுதி பெறத்தக்க யுனி கோட்களை நீர் விருப்பொழுங்கில் குறிப்பிட தவறியமையால் குறித்த யுனி கோட்டிற்கு நீர் தெரிவாகாமல் போவதை தவிர்க்க முடியும்.

4. **பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவிற்கு பல்கலைக்கழக அனுமதிக்கான விண்ணப்பத்தைச் சமர்ப்பித்ததன் பின்னர் குறிப்பிட்ட விருப்பொழுங்கை மாற்ற முடியுமா?**

ஆம். இக்கைநூலின் அறிவுறுத்தல்களுக்கமைய விண்ணப்ப முடிவுத்திகதியிலிருந்து ஒரு மாத காலத்தினுள் கற்கைநெறி விருப்பொழுங்கை மாற்ற முடியும்.

இக்கைநூலில் தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கமைய விண்ணப்பதாரிகள் இணையதளம் மூலம் விருப்பொழுங்கை மாற்றி அதன் சரியாக பூரணப்படுத்தப்பட்டு ஒப்பமிடப்பட்ட பிரதியை பதிவுத் தபாலில் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவிற்கு அனுப்பி வைத்தல் வேண்டும்.

முக்கியமாக உங்களால் ஏற்கனவே அனுப்பிவைக்கப்பட்டுள்ள விண்ணப்பத்தில் காணப்படும் உங்கள் கையெழுத்தும் தற்போது நீங்கள் சமர்ப்பித்துள்ள கற்கைநெறி மற்றும் பல்கலைக்கழக விருப்பொழுங்கை **(Uni- code)** மாற்றல் விண்ணப்பத்தில் காணப்படும் கையெழுத்தும் ஒன்றாக இருத்தல் வேண்டும்.

கற்கைநெறி மற்றும் பல்கலைக்கழக விருப்பொழுங்கை **(Uni-code)** இச்சந்தர்ப்பத்தில் மாற்றம் செய்கின்றபோது, முன்பு சமர்ப்பித்த கற்கைநெறி மற்றும் பல்கலைக்கழக விருப்பொழுங்கு முற்றாக நிராகரிக்கப்படுவதுடன் நீங்கள் தற்பொழுது சமர்ப்பித்துள்ள கற்கைநெறி மற்றும் பல்கலைக்கழக விருப்பொழுங்கின் அடிப்படையில் பல்கலைக்கழக அனுமதிக்கு கருத்தில் கொள்ளப்படுவீர்கள்.

5. **இணையதளத்தினூடாக கற்கைநெறி மற்றும் பல்கலைக்கழகத்திற்கான விருப்பொழுங்கை மாற்றுவது எவ்வாறு?**

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் இணையதளத்தில் (www.ugc.ac.lk) உங்கள் பயனர் அடையாளம் மற்றும் கடவுச்சொல்லைப் பயன்படுத்தி உமது கணக்கினுள் உட்பிரவேசித்து விருப்பொழுங்கை மாற்றலாம். அத்துடன் அதை அச்சுப்பிரதி செய்து உங்கள் கையொப்பத்தோடு பதிவுத் தபாலில் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவிற்கு அனுப்பிவைக்கவும்.

6. **பல்கலைக்கழக அனுமதிக்கான எனது விண்ணப்படிவம் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவிற்கு கிடைத்ததா என்பதை நான் எவ்வாறு அறிந்துகொள்வது?**

உமது விண்ணப்பம் கிடைக்கப்பெற்றவுடன் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் மின்னஞ்சல் ஊடாகவும் குறுஞ்செய்தி ஊடாகவும் நீர் அறிவிக்கப்படுவீர்.

7. **கற்கைநெறிக்கான வெட்டுப்புள்ளிகளை வெளியிடுவதற்கு முன்னர் ஒரு மாணவர் எந்த கற்கைநெறி மற்றும் பல்கலைக்கழகத்திற்கு தெரிவு செய்யப்படுவார் என்பதை முன்கூட்டியே எதிர்வுகூற முடியுமா?**

இல்லை.

கற்கைநெறி மற்றும் பல்கலைக்கழகத்திற்கான வெட்டுப்புள்ளி மாணவர்களின் 'Z' புள்ளி விண்ணப்பதாரிகளின் விருப்பொழுங்கு மற்றும் பல்கலைக்கழகங்களில் காணப்படும் கற்கைநெறிக்கான வெற்றிடங்கள் என்பவற்றின் அடிப்படையில் அமையும்.

8. **தனிப்பட்ட பரீட்சார்த்தியாக விண்ணப்பிக்கும் பரீட்சார்த்திகள் பாடசாலை விடுகைப் பத்திரத்தின் மூலப் பிரதியை விண்ணப்பத்துடன் சமர்ப்பித்தல் கட்டாயமானதா?**

ஆம்.
பாடசாலை விடுகைப் பத்திரத்தின் மூலப் பிரதியை (Original) சமர்ப்பிக்காத விண்ணப்பதாரிகள் விண்ணப்பம் நிராகரிக்கப்படும்.

9. **பல்கலைக்கழகங்களில் கற்கைநெறிகளுக்கான வெவ்வேறு மாவட்டங்களின் வெட்டுப்புள்ளியினை ஒரு மாணவன் அறிந்துகொள்வது எவ்வாறு?**
   1. செய்தித்தாள்
   2. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் இணையதளம்
   3. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் மக்கள் தொடர்பு அலுவலகம்
   4. அரச தகவல் நிலையத்தின் (1919) குறுஞ்செய்தி (SMS) சேவையினூடாக

10. **நான் பல்கலைக்கழக அனுமதிக்குத் தெரிவுசெய்யப்பட்டுள்ளேனா என்பதை எவ்வாறு அறிந்துக்கொள்வது?**
பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு கடிதம் மூலமாக உங்களுக்கு அறிவிக்கும்.

11. **பரஸ்பர இடமாற்றம் (Mutual Transfer) அனுமதிக்கப்படுமா?**

இல்லை.

12. **எனது Z புள்ளி கடந்த வருட கல்வியாண்டில் ஒரு குறிப்பிட்ட பல்கலைக்கழகத்தின் கற்கைநெறிக்கான வெட்டு ப்புள்ளியை விடவும் குறைவாக இருக்கும் பொழுதும் அக்கற்கைநெறிக்கு நான் விண்ணப்பிக்க முடியுமா?**

முடியும்.

சென்ற ஆண்டிற்கான வெட்டுப்புள்ளிகளை கருத்திற்கொள்ளாமல் நீர் விரும்புகின்ற அனைத்து கற்கைநெறிகளுக்கும் விண்ணப்பிக்க வேண்டும். மாணவர்களின் செயற்றிறன் (Z புள்ளிகள்) மற்றும் பல்கலைக்கழகங்களில் கற்கை நெறிக்கான வெற்றிடங்கள் என்பனவற்றின் அடிப்படையில் ஒர் கற்கைநெறிக்கான வெட்டுப்புள்ளி வருடா வருடம் வேறுபடலாம்.

சில மாணவர்கள் தேவையான Z புள்ளிகளைப் பெற்றிருப்பினும் பல்கலைக்கழக அனுமதிக்கு விண்ணப்பிக்காது க.பொ.த. (உ/த) பரீட்சையில் இன்னுமொரு அமர்வினை மேற்கொள்ள விரும்புவர். இன்னும் சில மாணவர்கள் தெரிவு செய்யப்பட்டும் பதிவு செய்யாமல் விடுவர். அதனால் மாணவர்கள் அனுமதிக்கு விண்ணப்பிப்பின் கற்கைநெறிகளுக்குத் தெரிவு செய்யப்படக்கூடிய சந்தர்ப்பங்கள் நிறைய காணப்படுகின்றது. அதனால் நீங்கள் தகமை பெறுகின்ற கற்கைநெறிகளுக்கு முடிந்தளவு விண்ணப்பிக்கவும்.

13. **ஒரு கல்வியாண்டில் பல்கலைக்கழக கற்கைநெறிக்குப் பதிவுசெய்த பின்பு மீண்டும் க.பொ.த. (உ.த) பரீட்சைக்குத் தோற்றி மீண்டுமொரு முறை பல்கலைக்கழக அனுமதிக்கு விண்ணப்பிக்க முடியுமா?**

இல்லை.

அரச உயர்கல்வியைப் பெறுவதற்கு சகல மாணவர்களுக்கும் சம சந்தர்ப்பம் வழங்கப்படுகின்றது. அனைவருக்கும் நியாயமான முறையில் அரசாங்கத்தினால் நியமிக்கப்பட்ட இலவச கற்கை நெறிக்கு நுழைவதற்கான சந்தர்ப்பம் ஒரு தடவை மாத்திரமே வழங்கப்படுகின்றது.

ஏனெனில் தெரிவுசெய்யப்பட்ட கற்கைநெறியின் பதிவினை வாபஸ் பெறல் அல்லது பட்டப்பயில் நெறிக்கு பதிவுசெய்தும் அதனை பின்தொடராமல் விடுதல் என்பன குறித்த கல்வியாண்டில் இன்னொரு மாணவனுக்கான பல்கலைக்கழக வாய்ப்பினை இழக்கச் செய்கின்றது. அத்துடன் பதிவை வாபஸ்பெற்று அடுத்துவரும் ஆண்டின் பெறுபேறுகளின் அடிப்படையில் மற்றுமொரு கற்கைநெறிக்கு பதிவுசெய்துகொள்ள கோருவதன் மூலம் அவ்வாண்டில் பரீட்சைக்குத் தோற்றிய மாணவனுக்கான ஒரு வாய்ப்பினையும் தவிர்ப்பதற்கு முயற்சிசெய்கின்றீர்.

14. **ஒரு மாணவர் எப்போது பல்கலைக்கழகத்தில் / உயர் கல்வி நிறுவனத்தில் பதிவுசெய்த மாணவராக கருதப்படுவார்?**

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவிடமிருந்து பல்கலைக்கழக தெரிவுக்கான கடிதம் விண்ணப்பதாரிக்கு கிடைத்தவுடன் பதிவுக்கட்டணமான ரூபா. 50/- கொடுப்பனவை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் கணக்கிற்கு வங்கி மூலமாகவோ அல்லது இணையத் தளத்தினூடாகவோ வரவு வைத்து பதிவு செய்வதற்கான இறுதித்திகதியன்றோ அல்லது அதற்கு முன்பாகவோ பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் உத்தியோகபூர்வ இணையதளத்தில் தெரிவுசெய்யப்பட்ட கற்கைநெறிக்கும் பல்கலைக்கழகத்திற்கும் பதிவுசெய்வதன் மூலம் அவர் 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க திருத்தப்பட்ட பல்கலைக்கழக சட்டத்தின் கீழ் உருவாக்கப்பட்ட, பிரிவு 1.6. (8) இல் காணப்படும் பல்கலைக்கழகமொன்றில் பதிவு செய்த மாணவராக கருதப்படுவார்.

15. **விண்ணப்பதாரியின் அனுமதிக்கான மாவட்டத்தை தீர்மானிப்பதன் அடிப்படைகள் என்ன?**

க.பொ.த. (உ/த) பாடங்களைக் கற்ற மூன்று வருட காலத்தில் ஒரு ஆண்டுக்கு மேலாக நீர் கல்விகற்ற பாடசாலை அமைந்துள்ள மாவட்டத்தின் அடிப்படையில் தீர்மானிக்கப்படும்.

16. **அம்மூன்று வருடங்கள் எவ்வாறு கணக்கிடப்படும்?**

க.பொ.த. (உ/த) பரீட்சை நடைபெற்ற மாதத்திற்கு உடனடியான முந்திய மாதத்தின் கடைசி நாளன்று முடிவடையும் பின்னோக்கிய மூன்று வருட காலம் கணிக்கப்படும். உதாரணமாக - க.பொ.த. (உ/த) பரீட்சை ஆகஸ்ட் மாதம் நடைபெற்றிருப்பின் பின்னோக்கிய ஜூலை 31 ஆம் திகதியிலிருந்து பின்னோக்கி மூன்று வருடம் கணிக்கப்படும்.

17. **அம்மூன்றுவருடக் காலப்பகுதிக்குள் ஒன்றுக்கும் மேற்பட்ட பாடசாலைகளில் கல்வி கற்றிருப்பின்?**

அக்காலப்பகுதியில் விண்ணப்பதாரி ஆகக் கூடுதலான நாட்கள் (எவ்வாறாயினும் அக் காலப்பகுதி ஒரு வருடத்திற்கு கூடவாக இருத்தல் வேண்டும்) கல்விகற்ற பாடசாலை அமைந்துள்ள மாவட்டம் பல்கலைக்கழக அனுமதிக்கான மாவட்டமாக கருத்திற்கொள்ளப்படும்.

18. **எந்தவொரு பாடசாலைக்கும் செல்லாமலிருந்தால் அல்லது ஒரு வருடத்துக்கு குறைவான காலப்பகுதிக்கு பாடசாலைக்குச் சென்றிருப்பின்?**

உங்கள் நிரந்தர வதிவிடம் அமைந்துள்ள மாவட்டம் பல்கலைக்கழக அனுமதிக்கான மாவட்டமாக கருதப்படும். இதனை நிரூபிப்பதற்கு கைநூலின் பிரிவு 1.5 இல் குறிப்பிட்ட ஆவணங்களை சமர்ப்பித்தல் கட்டாயமானது.

19. **பிரயோக/உளச்சார்பு பரீட்சை சம்பந்தமான விபரங்கள் மற்றும் பரீட்சை நடைபெறும் திகதிகள் பற்றி ஏன் கைநூலில் குறிப்பிடப்படவில்லை?**

பிரயோக / உளச்சார்பு பரீட்சைகள் குறிப்பிட்ட பல்கலைக்கழகங்களினால் நடாத்தப்படுகின்றன. இப்பரீட்சைக்கான திகதி பல்வேறு காரணங்களினால் வருடா வருடம் மாறுபடலாம்.

ஒவ்வொரு பல்கலைக்கழகமும் பிரயோக / உளச்சார்பு பரீட்சைக்கு விண்ணப்பங்களைக் கோரி பத்திரிகை அறிவித்தலை பிரசுரிக்கின்றது. உளச்சார்பு பரீட்சையில் சித்தியடைய வேண்டிய கற்கைநெறிகளையும் அவை தொடர்பான பல்கலைக்கழங்களையும் கைநூல் பகுதி 5 விபரிக்கின்றது. உளச்சார்பு பரீட்சை பல்கலைக்கழகங்களினால் நடாத்தப்படுவதால் அவை தொடர்பான விபரங்களை மாணவர்கள் உரிய பல்கலைக்கழகங்களிலிருந்து பெற்றுக்கொள்ள முடியும். பல்கலைக்கழகங்களின் தொடர்பு இலக்கங்கள் இணைப்பு D இல் தரப்பட்டுள்ளது.

20. **உளச்சார்பு பரீட்சையில் சித்தியடைந்திருப்பினும் கற்கைநெறிக்குரிய வெட்டுப்புள்ளி குறைவாயின்?**

கற்கைநெறிக்கு தகுதிபெறுவதற்கு பிரயோக / உளச்சார்பு பரீட்சையில் சித்தி பெறுவதுடன் நீர் தேவையான Z புள்ளிகளையும் பெற்றிருத்தல் வேண்டும். போதிய Z புள்ளிகளை பெறாமல் பிரயோக / உளச்சார்பு பரீட்சையில் மாத்திரம் சித்திபெற்றிருப்பின் பல்கலைக்கழக அனுமதிக்கு தெரிவு செய்யப்படமாட்டீர்.

21. **பதிவுசெய்த பின் அனுமதியை பிற்போட முடியுமா?**

தெரிவுசெய்யப்பட்ட கற்கைநெறிக்கும் பல்கலைக்கழகத்திற்கும் பதிவுசெய்த பின்னரே மாணவர் அனுமதியைப் பின்போட அனுமதிக்கப்படுவர். அத்துடன் உண்மையான காரணங்களுக்காக மட்டுமே ஒத்திவைப்பு ஏற்றுக்கொள்ளப்படும். ஒரு முறை பதிவினை மேற்கொண்டால், கற்கைநெறியை ஒத்திவைப்பினும் மற்றுமொரு க.பொ.த.(உ/த) பரீட்சை பெறுபேறுகளின் அடிப்படையில் வேறொரு கற்கைநெறிக்கு விண்ணப்பிக்க முடியாது. பல்கலைக்கழகங்களில் அல்லது உயர் கல்வி நிறுவனங்களில் பதிவு செய்வதற்கான வாய்ப்பு ஒரு முறை மட்டுமே வழங்கப்படும். ஆகக்கூடிய ஒத்திவைப்பு காலம் ஒரு வருடமாகும்.

22. **ஏன் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு மாணவர்களைப் பதிவுசெய்து அதை வாபஸ் பெறுவதற்கு அனுமதியளிப்பதில்லை?**

பல்கலைக்கழக அனுமதிக்கான அடிப்படை விதிகள் சிக்கலானதாக இருப்பதாலும் சகல மாணவர்களுக்கும் நியாயமான சந்தர்ப்பத்தை வழங்குவதற்காகவும் ஆகும்.
அனுமதிக் கொள்கையானது 40% தீவளாவிய திறமை அடிப்படையிலும் 55% மாவட்ட மொத்த சனத்தொகை விகிதாசார அடிப்படையிலும் மற்றும் 5% கல்வியில் பின்தங்கிய மாவட்டத்திற்கு மாணவர்களை அனுமதிக்கின்ற கொள்கையை கொண்டுள்ளது. இலவச உயர் கல்விக்கு சகலருக்கும் சமமான வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

அத்துடன் விண்ணப்பிக்கும் 70000 விண்ணப்பதாரிகளில் 31000 விண்ணப்பதாரிகள் மட்டுமே 25 மாவட்டங்களிலிருந்தும் 102 பட்டப்பயில் நெறிகளுக்கு 40%, 55%, 5% களின் அடிப்படையில் தெரிவுசெய்யப்படுகின்றமையினால் ஒருவருக்கு ஒன்றுக்கும் மேற்பட்ட சந்தர்ப்பங்களை வழங்க முடியாது.

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு சகல மாணவர்களுக்கும் நியாயமான சந்தர்ப்பத்தினை வழங்குவதற்கான பொறுப்பினை கொண்டுள்ளது. அடுத்துவரும் க.பொ.த.(உ/த) பரீட்சைக்கு தோற்றி திறமாக செயற்பட முடியும் என நினைத்து பதிவுசெய்வதா வேண்டாமா என இரு மனமாக இருப்பின் நீங்கள் பதிவுசெய்ய வேண்டாம் என்பதே எமது உண்மையான அறிவுரையாகும்.

23. **தெரிவுசெய்யப்பட்ட மாணவர் பொது சாதாரண பரீட்சையில் 30% புள்ளிகளைப் பெற்றிருக்காவிடின் ?**

குறித்த கல்வியாண்டின் மாணவர் கற்கைநெறிக்கு தெரிவுசெய்யப்பட்டிருப்பினும் பொது சாதாரண பரீட்சையில் **30%** புள்ளிகளைப் பெற்றிருக்காவிடின் அவ்வாண்டில் பல்கலைக்கழக அனுமதிக்கு பதிவுசெய்வதற்கு தகுதியற்றவராவர்.

இருப்பினும் அதற்கு முந்தய பல்கலைக்கழக அனுமதிக்காக அனுமதிக்கப்பட்ட மூன்று அமர்வுகளுக்குள் அவர் பொது சாதாரண பரீட்சையில் **30%** புள்ளிகளைப் பெற்றிருப்பின் அனுமதிக்கு கருத்திற்கொள்ளப்படும்.

பொது சாதாரண பரீட்சையில் **30%** புள்ளிகளைப் பெறாத மாணவர்கள் அனுமதிக்கப்பட்ட மூன்று அமர்வுகளுக்குட்பட்டு அடுத்துவரும் அமர்வில் **30%** புள்ளிகளைப் பெற்றால் மட்டுமே ஏற்கனவே அவரின் Z புள்ளிகளுக்கமைவாக தெரிவுசெய்யப்பட்ட கற்கைநெறிக்கு எதிர்வரும் கல்வியாண்டில் பதிவு செய்ய அனுமதிக்கப்படுவர்.

24. **மாணவர்கள் கற்கைநெறியை மாற்றுவதற்கு எவ்வாறு மேன்முறையீடு செய்வது?**

அனுமதிக்கு விண்ணப்பிக்கும் போது கற்கைநெறி விருப்பொழுங்கில் விண்ணப்பிக்காத கற்கைநெறிகளுக்கும் குறைந்த விருப்பொழுங்கில் குறிப்பிட்ட கற்கைநெறிகளையும் கோரி விண்ணப்பதாரி மேன்முறையீடு செய்யலாம்.

சகல மேன்முறையீட்டு விண்ணப்பங்களும் தீவிர பரிசீலனைக்கு உட்படுத்தப்பட்டு அவை மற்றைய மாணவர்களை பாதிக்காத வகையில் கருத்திற்கொள்ளப்படும். (நிபந்தனைகளுக்கு உட்பட்டது)

மேன்முறையீடு செய்ய விரும்பும் மாணவர்கள் இக்கைநூலின் இறுதி பக்கங்களில் காணப்படும் மேன்முறையீட்டு விண்ணப்பத்தினை நிரப்பி குறித்த கட்டண பற்றுச்சீட்டுடன் வெட்டுப்புள்ளி வெளியிட்டு நான்கு கிழமைகளுக்குள் இக்கைநூலின் பிரிவு 4.4 இன் நிபந்தனைகளின்படி விண்ணப்பித்தல் வேண்டும்.

இணையதளத்தில் (www.ugc.ac.lk) காணப்படும் மேன்முறையீட்டுப் படிவத்தை இணையதளத்திலேயே நிரப்பி, பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவிற்கு அச்சுப்பிரதியை அனுப்பிவைப்பதன் மூலமும் மேன்முறையீடு செய்யலாம்.

25. **மேன்முறையீடொன்றை சமர்ப்பிப்பதற்கு ஏதேனும் பல்கலைக்கழகத்தின் ஓர் கற்கைநெறிக்கு பதிவு செய்து இருத்தல் அவசியமானதா?**

இல்லை. நீர் தெரிவுசெய்யப்பட்டுள்ள கற்கைநெறிக்கு பல்கலைக்கழகத்தில் பதிவு செய்யாத போதிலும் அல்லது எந்த ஒரு கற்கைநெறிக்கும் தெரிவுசெய்யப்படாத போதிலும் கூட நீர் மேன்முறையீடு செய்யலாம்.

26. **உயர் தெரிவிற்கு உயர்த்தப்படல் பிரகடனம் (**Promotion Declaration**) என்றால் என்ன?**

நீர் ஏற்கனவே தெரிவு செய்யப்பட்டுள்ள பல்கலைக்கழகத்தின் கற்கைநெறியொன்றிற்கு இணையதளம் மூலம் பதிவு செய்யும் போது மட்டுமே இவ் இரு சொல் பதங்களை நீர் காண்பீர்.

எனவே நீர் இணையதளம் மூலம் பதிவினை மேற்கொள்ளும் போதே இது அவசியப்படும்.

இது சாதாரனமாக, நீர் பதிவு செய்வதற்கான படிவத்தினை இணையதளத்தினுடாக நிரப்புகின்ற போது நாம் உம்மை வெற்றிடங்களை நிரப்புகின்ற போது கருத்தில் கொள்ள தேவையில்லை என நீர் கருதும் யுனி-கோட்களை தெரிவு செய்து பின்னர் யுனி-கோட்களின் பட்டியலில் இருந்து அகற்றி விடவும் என கூறுகிறது.

27. **உயர் தெரிவிற்கு உயர்த்தப்படல் பிரகடனம்** (Promotion Decleration) **செய்வது எவ்வாறு?**

தெரிவுசெய்யப்பட்டுள்ள பல்கலைக்கழகத்தின் கற்கைநெறியில் இணையதளம் மூலம் பதிவு செய்யும் போது உமது உயர் விருப்பொழுங்கிற்கு உயர்த்தப்படல் பிரகடனத்தினை மேற்கொள்ள முடியும். அறிவுறுத்தல்கள் கீழே தரப்பட்டுள்ளன.

1. இணையதளம் மூலம் பதிவினை மேற்கொள்ளும் போது இணையதள பதிவு முறைமையின் பிரதான பக்கத்தில் (Online Screen) அவ் நோக்கத்திற்காக வழங்கப்பட்டுள்ள உயர் தெரிவிற்கு உயர்த்தப்படல் தெரிவினை (Promotion Decleration) அழுத்துக.

2. இப்போது உமது விருப்பத் தேர்வுக்கமையஒழுங்குபடுத்தப்பட்ட யுனிகோட்கள் காட்சி ப்படுத்தப்படும்.

3. யுனி-கோட்களின் பட்டியலிலிருந்து நீர் தற்போது தெரிவு செய்யப்பட்டுள்ள யுனி-கோட் இனை தெரிவு செய்க.

4. தற்போது தெரிவுசெய்யப்பட்டுள்ள யுனி-கோட் இனை விட நீர் முன்னுரிமை வழங்கியுள்ள எனினும் எதிர்காலத்தில் வெற்றிட நிரப்பலின் கீழ் உம்மை கருத்தில் கொள்ள வேண்டாம் என கருதும் யுனி-கோட்களையும் கவனமாக தெரிவு செய்க (சம்மந்தப்பட்ட பெட்டிகளில் "✓" அடையாளமிடுக). எவ்வாறாயினும் நீர் தற்போது தெரிவான பல்கலைக்கழகத்தின் கற்கைநெறி (யுனி-கோட்) தவிர்ந்த ஏனைய உமது உயர் விருப்பொழுங்கிற்குரிய பல்கலைக்கழகம் மற்றும் கற்கைநெறி எவற்றிற்கும் உம்மை கருத்தில் கொள்ளவேண்டாம் என கருதின் தற்போது தெரிவான யுனி-கோட் தவிர்ந்த ஏனைய உயர் விருப்பொழுங்கிற்குரிய சகல யுனி-கோட்களையும் நீர் தெரிவு செய்தல் வேண்டும். நீர் அவ்வாறான யுனிகோட் களை அடையாளமிடும் பட்சத்தில், வெற்றிடங்களை நிரப்புகின்ற போது அவ் யுனிகோட் களுக்கு நீர் கருத்தில் கொள்ளப்படமாட்டீர்.

5. பின்னர் Submit Button னை அழுத்துவதன் மூலம் யுனி-கோட் பட்டியலிலிருந்து தேவையற்ற யுனி-கோட்களை அகற்றல் வேண்டும்.

(இணையதள பதிவு முறைமையின் இறுதியில் தோற்றுவிக்கப்படும் இணையதள பதிவுப் பத்திரத்தில் வெற்றிட நிரப்பலின் கீழ் உம்மை கருத்தில் கொள்ள தேவையில்லை என நீர் தெரிவு செய்த யுனி-கோட்களும் தோன்றும். இது நீர் உம்மை கருத்தில் கொள்ள வேண்டாம் என கருதும் யுனி-கோட்களை நினைவில் வைத்துக் கொள்ள உதவும்.

6. அகற்றுவதற்கு தெரிவு செய்த யுனி-கோட் பட்டியலை நீர் மீளமைக்க வேண்டுமாயின் படி 1-5 இனை பின்பற்றுக.

28. **நான் இணையதளம் மூலம் தற்போது தெரிவான பல்கலைக்கழகத்தின் கற்கைநெறிக்கு பதிவு செய்யும் போது நாம் உம்மை வெற்றிடங்களை நிரப்புகின்ற போது கருத்தில் கொள்ள தேவையில்லை என நீர் கருதும் யுனி-கோட்களை தெரிவு செய்து பட்டியலில் இருந்து அகற்றாவிடின் என்னவாகும்?**

எதிர்காலத்தில் வெற்றிட நிரப்பலின் கீழ் உம்மை கருத்தில் கொள்ள வேண்டாம் என கருதும் பல்கலை க்கழகங்களின் கற்கைநெறி (யுனி-கோட்கள்) களினை நீர் அகற்றவில்லை எனின், அனுமதிக்கான விண் ணப்பத்தில் நீர் குறிப்பிட்டுள்ள உயர் தெரிவிற்கமைய பல்கலைக்கழகத்தின் கற்கைநெறியொன்றிற்கு உ ம்மை கருத்தில் கொள்வதை தவிர எமக்கு வேறு தெரிவு இல்லை.

உயர்த்தப்படாது ஏற்கனவே தெரிவு செய்யப்பட்ட பல்கலைக்கழகத்தின் கற்கைநெறி (யுனி-கோட்கள்) இலேயே தொடந்தும் இருப்பதற்கும் நீர் கோராத பட்சத்தில் உம்மை உமது உயர் தெரிவிற்கமைய உயர்த்துவதை விட வேறு தெரிவு எமக்கில்லை. எனவே அனுமதிக்கான விண்ணப்பத்தில் நீர் குறிப்பிட்டுள்ள உயர் தெரிவிற்கமைய பல்கலைக்கழகத்தின் கற்கைநெறியொன்றிற்கு வெற்றிடங்களை நிரப்புகையில் உயர்த்தப்படும் போது **அதனை ஏற்று நீர் பதிவு செய்தல் வேண்டும்.**

ஆகவே, நீர் தெரிவு செய்யப்பட்ட பல்கலைக்கழகத்தின் கற்கைநெறிக்கு இணையதளத்தினுடாக பதிவு செய்யும் போது இதை எமக்கு அறிவிப்பது மிகவும் முக்கியமானதாகும்.

29. **எல்லா யுனி-கோட்களையும் அகற்றாது தற்போது தெரிவான யுனி-கோட் தவிர்ந்த சில யுனி-கோட்களை மட்டும் வெற்றிட நிறப்பலின் கீழ் கருத்தில் கொள்ளத் தேவையற்ற யுனி-கோட்களாக தெரிவு செய்ய முடியுமா?**

ஆம்.

முதலில் தேவையற்ற யுனி-கோட்களின் பெட்டிகளில் ✓ அடையாளத்தினை இட வேண்டும். பின்னர், Submit button அழுத்துவதன் மூலம் தேவையற்ற யுனி கோட்களை அகற்ற முடியும்.

30. **போதுமான Z-புள்ளிகளை பெற்றிருந்த போதிலும் பல்கலைக்கழக அனுமதிக்கான விண்ணப்பத்தில் குறிப்பிட்டிராத ஓர் பல்கலைக்கழகத்தின் கற்கைநெறி (யுனி-கோட்)ஒன்றிற்கு எனது மேன்முறையீடு கருத்தில் கொள்ளப்படுமா ?**

உமது மேன்முறையீடு கருத்தில் கொள்ளப்படும். எனினும், மேன்முறையீடு செய்யப்பட்ட யுனி-கோட்களுக்கு தெரிவு செய்யப்படல் **மிக அரிதானது** ஏனெனில் குறித்த அப் பல்கலைக்கழகத்தின் கற்கை நெறிக்கு வெற்றிடம் காணப்படின் மட்டுமே உமது கோரிக்கை பூர்த்தி செய்யப்படும். இது ஏனெனில் அவ் யுனி-கோட்களை கோரியிருந்த ஏனைய மாணவர்களுக்கு முன்னரே அவ் வாய்ப்பினை நாம் வழங்கியிருப்பதாலாகும்.

31. **எனது விண்ணப்பப்படிவத்தில் 5 வது விருப்பொழுங்கான பேராதனை பல்கலைக்கழத்தில் உயிரியல் விஞ்ஞானக் கற்கைநெறிக்கு நான் சாதாரன தெரிவின் கீழ் தெரிவு செய்யப்பட்டேன். எனினும் எனது 4வது 3வது விருப்பொழுங்குகளான ஸ்ரீ ஜயவர்த்தனபுர பல்கலைக்கழத்தில் உயிரியல் விஞ்ஞானம் அல்லது கொழும்பு பல்கலைக்கழத்தில் உயிரியல் விஞ்ஞானம் ஆகிய கற்கைநெறிகளிலேயே அதிக ஈடுபாடு கொண்டிருந்தமையால் பேராதனை பல்கலைக்கழத்தின் உயிரியல் விஞ்ஞான கற்கைநெறிக்கு பதிவு செய்வதில்லை என தீர்மானித்தேன். எனவே வெற்றிட நிரப்பலின் கீழ் நான் ஸ்ரீ ஜயவர்த்தனபுர பல்கலைக்கழத்தில் அல்லது கொழும்பு பல்கலைக்கழத்தில் உயிரியல் விஞ்ஞான கற்கைநெறிக்கு தெரிவாகுவதற்கான வாய்ப்பு ஏதும் உள்ளதா?**

எந்த வாய்ப்பும் இல்லை.

கல்வியாண்டு 2017/2018 முதல் நடைமுறைப்படுத்தியமைக்கு அமைய, தெரிவுசெய்யப்பட்ட கற்கைநெறிக்கு குறித்த பல்கலைக்கழகத்தில் நீர் பதிவு செய்யாது விட்டால், ஏனைய பல்கலைக்கழகங்களில் அதே கற்கைநெறியினை தொடர உமது விண்ணப்பத்தில் உயர் தெரிவாக குறிப்பிட்ட போதும் கருத்தில்கொள்ளப்பட மாட்டீர். எனினும், உமது விண்ணப்பத்தில் **அடுத்த விருப்பொழுங்கிலுள்ள** ஏனைய **கற்கைநெறி**களிற்கு கருத்தில் கொள்ளப்படுவீர்.

ஆகவே எதிர்கால வெற்றிட நிரப்பலின் கீழ் ஏற்கனவே தெரிவு செய்யப்பட்ட பல்கலைக்கழகத்தினை விட வேறு ஒரு பல்கலைக்கழகத்தில் அதே கற்கைநெறியினை தொடர எதிர்பார்த்திருப்பீராயின் முதலில் நீர் தற்போது தெரிவுசெய்யப்பட்டுள்ள பல்கலைக்கழகத்தின் அக் கற்கைநெறியிற்கு பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவில் பதிவு செய்ய வேண்டும்.

இல்லாவிட்டால், உமது விண்ணப்பத்தில் உயர் தெரிவு வழங்கப்பட்ட ஏனைய பல்கலைக்கழகங்களுக்கு அவ் கற்கைநெறியினை தொடர எதிர்காலத்தில் கருத்தில் கொள்ளப்படமாட்டாது.

32. **சாதாரன தெரிவின் கீழ் 5வது விருப்பொழுங்காக குறிப்பிட்டவாறு உயிரியல் விஞ்ஞான கற்கைநெறிக்கு பேராதனை பல்கலைக்கழத்தில் மேலே பரிந்துரைக்கப்பட்டவாறு நான் பதிவு செய்தேன் பின்னர் வெற்றிட நிரப்பலின் கீழ் எனது 4வது விருப்பொழுங்கான ஸ்ரீ ஜயவர்த்தனபுர பல்கலைக்கழத்தில் உயிரியல் விஞ்ஞானத்திற்கு தெரிவாகியிருந்த போதிலும் எனது 3வது விருப்பொழுங்கான கொழும்பு பல்கலைக்கழத்திலேயே கற்க எதிர்பார்த்திருந்தமையால் வெற்றிட நிரப்பலின் கீழ் தெரிவான உயிரியல் விஞ்ஞான கற்கைநெறிக்கு ஸ்ரீ ஜயவர்த்தனபுர பல்கலைக்கழத்தில் பதிவு செய்வதில்லை என தீர்மானித்தேன். எனவே, கொழும்பு பல்கலைக்கழத்தில் உயிரியல் விஞ்ஞான கற்கைநெறிக்கு தெரிவாகுவதற்கான வாய்ப்பு ஏதும் உள்ளதா?**

எந்த வாய்ப்பும் இல்லை.

பேராதனைப் பல்கலைக்கழத்தில் உயிரியல் விஞ்ஞான கற்கைநெறிக்கு பதிவு செய்த போதிலும் நீர் வெற்றிட நிரப்பலின் கீழ் தெரிவான உமது 4வது விருப்பொழுங்கான ஸ்ரீ ஜயவர்த்தனபுர பல்கலைக்கழத்தில் உயிரியல் விஞ்ஞான கற்கைநெறிக்கு பதிவு செய்யாது விட்டால் உமது விண்ணப்படிவம் நீர் எதிர்கால வெற்றிட நிரப்பலின் கீழ் தெரிவாக எதிர்பாத்து இருக்கும் உமது 3வது விருப்பொழுங்கான கொழும்பு பல்கலைக்கழத்திற்கு கருத்தில் கொள்ளப்படமாட்டாது.

ஆகவே எதிர்கால வெற்றிட நிரப்பலின் கீழ் கொழும்பு பல்கலைக்கழத்தில் உயிரியல் விஞ்ஞான கற்கைநெறிக்கு கருத்தில் கொள்ள எதிர்பாத்து இருப்பின் முதலில் நீர் வெற்றிட நிரப்பலின் கீழ் தெரிவான ஸ்ரீ ஜயவர்த்தனபுர பல்கலைக்கழத்தில் உயிரியல் விஞ்ஞான கற்கைநெறிக்கு பதிவு செய்தல் வேண்டும். இல்லாவிட்டால், உமது விண்ணப்பபடிவம் உயிரியல் விஞ்ஞான கற்கைநெறிக்கு கருத்தில் கொள்ளப்படமாட்டாது.

33. **விசேட பட்ட கற்கை நெறிகள் மற்றும் கௌரவ பட்ட கற்கை நெறிகள் இடையில் ஏதேனும் வேறுபாடு உள்ளதா?**

இல்லை அவ்வாறான வேறுபாடுகள் இல்லை.

Sri Lanka Qualification Framework (SLQF) ற்கு அமைய கற்கைநெறிகளுக்கு பெயரிடுவதற்கான வழிமுறைகளுக்கு அமைய புதிதாக அறிமுகப்படுத்தப்பட்ட *கற்கைநெறிகள் விசேட அன்றி கௌரவ என பெயரிடப்பட்டுள்ளது.* எனவே அது கற்கைநெறிகளின் உள்ளடக்கம் மற்றும் தரம் போன்றவற்றை பாதிக்காது.

34. **நான் தற்போது தெரிவுசெய்யப்பட்டுள்ள பல்கலைக்கழகத்தின் கற்கைநெறிக்கு பதிவு செய்யாதுவிடின் எதிர்காலத்தில் வெற்றிடங்களை நிறப்புகின்ற போது கருத்தில் கொள்ளப்படுவேனா?**

பகுதி 3 இல் உப பகுதி 3.2 இன் "முக்கியம்" பகுதியில் குறிப்பிட்டுள்ளதற்கமைய, நீர் தற்போது தெரிவாகியுள்ள பல்கலைக்கழகத்தின் கற்கைநெறியிற்கு ப.மா.ஆ. இணையதளத்தில் பதிவினை மேற்கொள்ளவில்லை எனின், எதிர்கால வெற்றிட நிரப்பல்களின் கீழ் அதே கற்கைநெறியினை வேறு எந்த பல்கலைக்கழகத்திலும் மேற்கொள்ள உம்மை கருத்தில் கொள்ளப்பட மாட்டாது.

எவ்வாறாயினும் நீர் தற்போது தெரிவுசெய்யப்பட்டு பதிவினை மேற்கொள்ளாத கற்கைநெறி தவிர்ந்த ஏனைய உயர்தெரிவு வழங்கியுள்ள கற்கைநெறிகளுக்கு எதிர்கால வெற்றிட நிரப்பல்களின் கீழ் உமது விண்ணப்பப்படிவம் கருத்தில்கொள்ளப்படும்.

பகுதி 9

கற்கை நெறிகளுக்கான கிராக்கியின் தன்மையினை விளங்கிக் கொள்வதற்காக சென்ற வருடத்திற்கான வெட்டுப்புள்ளியினை ஒரு வழிகாட்டியாக மாணவர்கள் பயன்படுத்துதல்.

இப்பிரிவு பல்கலைக்கழக கற்கைநெறிக்கான கிராக்கியின் தன்மையினை விளங்கிக்கொள்வதற்காக ஒரு வழிகாட்டியாக மாத்திரம் முன்னய வருட 2017/2018 ஆம் கல்வியாண்டிற்கான பல்கலைக்கழக அனுமதிக்கான வெட்டுப்புள்ளிகள் இப்பிரிவில் தரப்பட்டுள்ளது.

தீர்மானங்களை மேற்கொள்ளும்போது தயவுசெய்து இதில் மட்டும் தங்கியிருக்க வேண்டாம். வெட்டுப்புள்ளிகள் வருடந்தோறும் வேறுபடலாம்.

பல்கலைக்கழக அனுமதி - கல்வியாண்டு 2017/2018

[2017 ஆகஸ்ட் க.பொ.த. (உ/த.) பரீட்சையை அடிப்படையாகக் கொண்டது]

ஒவ்வொரு மாவட்டத்திலிருந்தும் பல்கலைக்கழகங்களின் பல்வேறு கற்கை நெறிகளுக்கு தெரிவாவதற்கு தேவையான ஆகக் குறைந்த 'Z' - புள்ளிகள்

கற்கை நெறிகள் / மாவட்டம்	மருத்துவம் (கொழும்புப் பல்கலைக்கழகம்)	மருத்துவம் (பேராதனைப் பல்கலைக்கழகம்)	மருத்துவம் (ஸ்ரீ ஜயவர்த்தனபுரப் பல்கலைக்கழகம்)	மருத்துவம் (களனிப் பல்கலைக்கழகம்)	மருத்துவம் (யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்)	மருத்துவம் (உ-ருகுணைப் பல்கலைக்கழகம்)	மருத்துவம் (கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை)	மருத்துவம் (இலங்கை ரஜரட்ட பல்கலைக்கழகம்)	மருத்துவம் (இலங்கை சபரகமுவப் பல்கலைக்கழகம்)	மருத்துவம் (இலங்கை வயம்பப் பல்கலைக்கழகம்)	பல் அறுவைச் சிகிச்சை (பேராதனைப் பல்கலைக்கழகம்)	விலங்கு மருத்துவ விஞ்ஞானம் (பேராதனைப் பல்கலைக்கழகம்)	மூலக்கூற்று உயிரியலும் உயிரிரசாயனவியலும் (கொழும்புப் பல்கலைக்கழகம்)	விவசாய தொழில்நுட்பமும் முகாமைத்துவமும் (பேராதனைப் பல்கலைக்கழகம்)	விவசாயம் (யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்)	விவசாயம் (கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை)	விவசாயம் (இலங்கை ரஜரட்ட பல்கலைக்கழகம்)	விவசாயம் (இலங்கை சபரகமுவப் பல்கலைக்கழகம்)	விவசாயம் (இலங்கை வயம்பப் பல்கலைக்கழகம்)	உணவு விஞ்ஞானமும் போசாக்கும் (இலங்கை வயம்பப் பல்கலைக்கழகம்)	உணவு விஞ்ஞானமும் தொழில்நுட்பமும் (பேராதனைப் பல்கலைக்கழகம்)	உணவு விஞ்ஞானமும் தொழில்நுட்பமும் (ஸ்ரீ ஜயவர்த்தனபுரப் பல்கலைக்கழகம்)	உணவு விஞ்ஞானமும் தொழில்நுட்பமும் (இலங்கை சபரகமுவப் பல்கலைக்கழகம்)	உயிரியல் விஞ்ஞானம் (கொழும்புப் பல்கலைக்கழகம்)
கொழும்பு	2.1808	2.0784	2.0014	1.9385	1.9087	1.9107	துஅஇ	துஅஇ	துஅஇ	1.9173	1.8757	1.7849	1.8276	1.5309	1.0948	1.1198	1.0775	1.1381	1.0762	1.5195	1.7087	1.6943	துஅஇ	1.6391
கம்பஹா	2.1886	2.0709	2.0099	1.9394	1.7542	1.9049	1.7793	1.8341	1.7676	1.7493	1.7300	1.7009	1.7176	1.4917	0.9690	0.9810	0.9876	1.1439	1.0559	1.4769	துஅஇ	1.6741	1.5937	1.6430
களுத்தறை	2.1858	2.0871	2.0012	1.9414	1.8275	1.9114	துஅஇ	1.8351	1.8257	துஅஇ	1.8238	1.7851	1.8084	1.5503	1.1471	1.1412	1.1035	1.1314	1.0945	1.5188	1.7068	1.6787	துஅஇ	1.6481
மாத்தளை	2.1827	2.0844	2.0092	1.9385	1.8150	1.9078	துஅஇ	1.8326	துஅஇ	1.8035	1.7775	1.7754	1.7531	1.5350	1.1235	1.2470	1.0211	துஅஇ	1.2018	1.5308	துஅஇ	துஅஇ	1.4790	1.6431
கண்டி	2.2899	2.0660	2.0032	1.9434	1.8110	1.9058	1.8180	1.8326	1.8392	1.8238	1.8043	1.7695	1.7871	1.5322	1.0755	1.1612	1.0735	1.1452	1.0859	1.4984	1.7118	1.6884	1.5223	1.6401
நுவரெலியா	துஅஇ	2.2428	2.0024	1.9675	1.7299	1.9202	1.5860	1.8584	1.5485	1.5398	1.5367	1.4775	1.5291	1.4306	0.9624	துஅஇ	0.9879	துஅஇ	துஅஇ	1.3872	துஅஇ	துஅஇ	1.3072	துஅஇ
காலி	2.2013	2.0641	2.0043	1.9580	துஅஇ	1.9019	1.8950	1.8796	1.8932	1.8798	1.8710	1.7907	1.8335	1.5551	1.0670	1.0669	1.0677	1.1324	1.0783	1.5457	1.7154	1.6951	துஅஇ	1.6413
மாத்தறை	2.2262	2.0642	2.0012	1.9928	துஅஇ	1.9048	துஅஇ	1.8507	1.8460	துஅஇ	1.8429	1.7763	1.8206	1.5533	1.1430	1.2645	1.1189	1.1322	1.1131	1.5051	1.7038	1.6952	துஅஇ	1.7032
ஹம்பாந்தோட்டை	2.2030	2.1009	2.0515	துஅஇ	1.8506	1.9105	துஅஇ	1.8427	துஅஇ	துஅஇ	1.8350	1.7656	1.7937	1.5397	1.3658	துஅஇ	1.0821	1.1336	1.0794	1.5119	1.7107	துஅஇ	1.6731	1.8140
யாழ்ப்பாணம்	2.2177	2.0660	2.0091	துஅஇ	1.8399	துஅஇ	துஅஇ	துஅஇ	துஅஇ	துஅஇ	1.8160	1.7687	1.8032	1.5703	1.0269	1.0366	துஅஇ	1.1370	1.2337	1.5254	துஅஇ	1.6775	1.6527	துஅஇ
கிளிநொச்சி	2.2399	2.1347	2.0533	துஅஇ	1.8362	துஅஇ	1.5813	துஅஇ	துஅஇ	துஅஇ	1.5496	1.5427	1.2804	1.1381	1.1780	0.6979	துஅஇ	துஅஇ	துஅஇ	1.1113	துஅஇ	துஅஇ	0.9585	துஅஇ
மன்னார்	2.3392	துஅஇ	துஅஇ	துஅஇ	1.7686	துஅஇ	1.6247	துஅஇ	1.6466	1.5958	1.5802	1.4375	1.5168	1.4183	1.0375	துஅஇ	துஅஇ	துஅஇ	துஅஇ	1.3797	துஅஇ	துஅஇ	1.2889	துஅஇ
முல்லைத்தீவு	துஅஇ	துஅஇ	துஅஇ	1.9453	1.7679	துஅஇ	1.5802	துஅஇ	துஅஇ	துஅஇ	1.5714	1.5348	1.4317	1.3854	0.9672	துஅஇ	துஅஇ	துஅஇ	துஅஇ	1.3349	துஅஇ	துஅஇ	1.3302	துஅஇ
வவுனியா	2.1994	2.0904	2.0052	1.9577	1.7841	துஅஇ	துஅஇ	துஅஇ	துஅஇ	துஅஇ	1.7630	1.6818	1.7077	1.5217	0.9712	0.8130	0.9947	துஅஇ	துஅஇ	1.3671	துஅஇ	துஅஇ	1.5405	1.7243
திருகோணமலை	2.2505	2.0729	2.0033	துஅஇ	1.7378	1.9581	1.6585	துஅஇ	துஅஇ	துஅஇ	1.6576	1.6131	1.5765	1.3195	0.9634	0.9522	1.0206	துஅஇ	துஅஇ	1.5543	துஅஇ	துஅஇ	1.3804	துஅஇ
மட்டக்களப்பு	2.2483	2.1017	2.0167	1.9715	1.7436	துஅஇ	1.6497	1.8400	துஅஇ	துஅஇ	1.6450	1.6381	1.6420	1.3804	0.9525	0.8610	1.3505	துஅஇ	1.2309	1.4643	துஅஇ	துஅஇ	1.3698	துஅஇ
அம்பாறை	2.2245	2.0754	2.0093	துஅஇ	1.7311	1.9028	1.6797	1.8661	1.7347	துஅஇ	1.6508	1.6173	1.6478	1.4230	1.0103	1.0616	1.0329	1.1524	1.0832	1.4578	துஅஇ	துஅஇ	1.3921	துஅஇ
புத்தளம்	2.1973	2.0602	துஅஇ	1.9444	1.7299	1.9019	1.7087	1.8381	1.6683	1.6787	1.6449	1.6218	1.6441	1.4927	0.9557	0.8648	1.0049	1.1738	1.0618	1.4266	துஅஇ	துஅஇ	1.4433	துஅஇ
குருநாகல்	2.1829	2.0602	2.0150	1.9395	1.7629	1.9069	1.8245	1.8497	1.7648	1.7832	1.7570	1.7300	1.7511	1.5638	1.0939	1.5252	1.0952	1.1306	1.0784	1.4704	1.7108	1.6761	1.6212	1.6547
அநுராதபுரம்	துஅஇ	2.1510	2.0176	1.9443	1.7299	1.9028	1.6652	1.8343	1.6653	1.6538	1.6423	1.6054	1.6362	1.5203	0.9654	துஅஇ	0.9888	1.1399	1.0524	1.3727	துஅஇ	துஅஇ	1.4462	துஅஇ
பொலன்னறுவை	துஅஇ	துஅஇ	துஅஇ	1.9570	1.8257	1.9202	1.5880	1.8480	1.4906	1.4916	1.4781	1.4636	1.4769	1.3332	1.0175	0.7048	1.0409	துஅஇ	துஅஇ	1.3015	துஅஇ	துஅஇ	1.2627	துஅஇ
பதுளை	2.1896	2.0814	2.0043	1.9437	1.7397	1.9059	துஅஇ	1.8458	1.7615	துஅஇ	1.7301	1.7205	1.7049	1.4896	0.9661	0.8166	0.9945	1.1787	துஅஇ	1.4443	துஅஇ	1.6817	1.4374	1.6956
மொனறாகலை	துஅஇ	2.1006	2.0304	துஅஇ	துஅஇ	துஅஇ	1.6188	1.8403	1.5252	1.5194	1.4982	1.4906	1.4424	1.3841	0.9678	0.8117	1.0319	துஅஇ	1.0580	1.2917	துஅஇ	துஅஇ	1.3050	துஅஇ
கேகாலை	2.2128	2.0631	2.0254	1.9493	1.7388	1.9059	1.7165	1.8344	1.7261	1.7126	1.6770	1.6528	1.6979	1.5546	1.1679	துஅஇ	1.0938	1.1390	1.0696	1.4522	துஅஇ	துஅஇ	1.5923	1.6499
இரத்தினபுரி	2.2435	2.0726	2.0062	1.9405	1.8064	1.9020	1.7686	1.8332	1.7514	துஅஇ	1.7406	1.7088	1.7368	1.5338	துஅஇ	1.0097	1.0167	1.1410	1.0696	1.4874	துஅஇ	1.6856	1.5670	1.6500

* தெரிவு 100% தீவளாவிய திறமை அடிப்படையில் # சம்மந்தப்பட்ட பாடத்துடன் தொடர்பான செயன்முறை/உளச்சார்பு பரீட்சைகள் நடாத்தப்படும் கற்கை நெறிகள்

த.அ.இ.(N.Q.C) - தகைமை பெற்ற அபேட்சகர் இல்லாமை. இது பின்வரும் காரணங்களினாலும் ஏற்படலாம்.

1. குறிப்பிட்ட கற்கை நெறியிற்கான மாவட்ட ஒதுக்கீடு அவ் குறித்த மாவட்ட மாணவர்களினாலேயே ஏற்கனவே நிரப்பப்பட்டிருத்தல்.
2. ஓர் பல்கலைக்கழகத்தால் குறித்த கற்கை நெறிக்கு ஒதுக்கப்பட்ட இடங்கள் உயர் Z - புள்ளிகளை உடைய ஏனைய மாவட்ட மாணவர்களால் ஏற்கனவே நிரப்பப்பட்டிருத்தல்.
3. குறித்த கற்கை நெறிக்குப் போதுமான ஆகக் குறைந்த பல்கலைக்கழக அனுமதிக்கான தகைமைகளை பூர்த்தி செய்த அபேட்சகர்கள் அவ் மாவட்டத்தில் இல்லாமை.

குறிப்பு:
குறித்த சில கற்கை நெறிகள் மும் மொழிகளிலும் நடாத்தப்படுவதில்லை. இதன் காரணமாக சில மாணவர்கள் அனுமதிக்கு தகைமை பெறும் குறைந்த பட்ச Z - புள்ளியை பெற்றிருப்பினும் சில பல்கலைக்கழகங்களின் அவ்வாறான கற்கை நெறிகளுக்கு தெரிவாவதில்லை.

பல்கலைக்கழக அனுமதி - கல்வியாண்டு 2017/2018

[2017 ஆகஸ்ட் க.பொ.த. (உ/த.) பரீட்சையை அடிப்படையாகக் கொண்டது]

ஒவ்வொரு மாவட்டத்திலிருந்தும் பல்கலைக்கழகங்களின் பல்வேறு கற்கை நெறிகளுக்கு தெரிவாவதற்கு தேவையான ஆகக் குறைந்த 'Z' - புள்ளிகள்

கற்கை நெறிகள் / மாவட்டம்	உயிரியல் விஞ்ஞானம் (பேராதனைப் பல்கலைக்கழகம்)	உயிரியல் விஞ்ஞானம் (ஸ்ரீ ஜயவர்த்தனபுரப் பல்கலைக்கழகம்)	உயிரியல் விஞ்ஞானம் (களனிப் பல்கலைக்கழகம்)	உயிரியல் விஞ்ஞானம் (யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்)	உயிரியல் விஞ்ஞானம் (உறுகுணைப் பல்கலைக்கழகம்)	உயிரியல் விஞ்ஞானம் (கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை)	உயிரியல் விஞ்ஞானம் (இலங்கைத் தென் கிழக்குப் பல்கலைக்கழகம்)	பிரயோக விஞ்ஞானங்கள் (உயிரியல் விஞ்ஞானம்) (இலங்கை ரஜரட்ட பல்கலைக்கழகம்)	பிரயோக விஞ்ஞானங்கள் (உயிரியல் விஞ்ஞானம்) (இலங்கை சபரகமுவப் பல்கலைக்கழகம்)	பிரயோக விஞ்ஞானங்கள் (உயிரியல் விஞ்ஞானம்) (யாழ் பல்கலைக்கழக வவுனியா வளாகம்)	பொறியியல் (பேராதனைப் பல்கலைக்கழகம்)	பொறியியல் (ஸ்ரீ ஜயவர்த்தனபுரப் பல்கலைக்கழகம்)	பொறியியல் (யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்)	பொறியியல் (உறுகுணைப் பல்கலைக்கழகம்)	பொறியியல் (மொறட்டுவைப் பல்கலைக்கழகம்)	பொறியியல் (இலங்கைத் தென் கிழக்குப் பல்கலைக்கழகம்)	பொறியியல் (EM) (மொறட்டுவைப் பல்கலைக்கழகம்)	பொறியியல் (TM) (மொறட்டுவைப் பல்கலைக்கழகம்)	கணிய அளவையியல் (மொறட்டுவைப் பல்கலைக்கழகம்)	கணனி விஞ்ஞானம் (களனிப் பல்கலைக்கழகம்)	கணனி விஞ்ஞானம் (யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்)	கணனி விஞ்ஞானம் (உறுகுணைப் பல்கலைக்கழகம்)	கணனி விஞ்ஞானம் (கொழும்புப் பல்கலைக்கழக கணனிக் கல்லூரி)	கணனி விஞ்ஞானம் (கிழக்குப் பல்கலைக்கழக திருகோணமலை வளாகம்)
கொழும்பு	1.5340	1.4617	1.4181	1.3985	1.3988	துஅஇ	துஅஇ	1.2107	1.2512	துஅஇ	1.7548	1.7327	துஅஇ	துஅஇ	1.8698	துஅஇ	1.7051	1.7295	1.6513	1.5244	துஅஇ	1.5208	1.5665	துஅஇ
கம்பஹா	1.5319	1.4624	1.4191	1.1748	1.3699	1.1149	1.1228	1.0988	1.2606	0.9865	1.7581	1.6104	துஅஇ	1.6099	1.8717	துஅஇ	1.5961	1.6898	1.5854	1.5229	1.1673	1.4588	1.5701	1.0734
களுத்தறை	1.5416	1.4732	1.4184	1.2190	1.3699	1.2252	1.2440	1.2060	1.2673	துஅஇ	1.7586	1.6407	துஅஇ	1.6430	1.8697	துஅஇ	1.6399	1.6374	1.6075	1.5237	துஅஇ	1.4958	1.5688	துஅஇ
மாத்தளை	1.5292	1.4646	1.4191	1.2848	1.3871	துஅஇ	துஅஇ	1.1304	துஅஇ	துஅஇ	1.7625	1.6746	துஅஇ	1.6141	1.8809	துஅஇ	1.6118	1.6047	1.5896	1.5298	1.3415	1.4600	துஅஇ	1.4477
கண்டி	1.5293	1.4617	1.4212	1.3756	1.3727	துஅஇ	துஅஇ	1.2096	1.2494	துஅஇ	1.7608	1.6298	துஅஇ	1.6377	1.8738	துஅஇ	1.6211	1.6247	1.6037	1.5263	1.1737	1.4581	1.5771	1.1473
நுவரெலியா	துஅஇ	1.4654	துஅஇ	1.1962	1.3863	1.0502	0.8901	1.1071	துஅஇ	0.8782	1.7681	துஅஇ	1.2766	1.5908	1.8754	1.2343	1.2389	1.5010	1.1917	துஅஇ	துஅஇ	துஅஇ	துஅஇ	0.6947
காலி	1.5284	1.4683	1.4181	1.3543	1.3678	1.3176	துஅஇ	1.2010	1.2503	துஅஇ	1.7556	1.7627	துஅஇ	1.7667	1.8720	துஅஇ	1.6972	1.7354	1.6477	1.5209	துஅஇ	1.5107	1.5722	துஅஇ
மாத்தறை	1.5386	1.4646	1.4220	துஅஇ	1.3706	துஅஇ	துஅஇ	1.1766	1.2595	துஅஇ	1.7769	துஅஇ	துஅஇ	துஅஇ	1.8782	துஅஇ	1.7051	1.7294	1.6325	1.5296	துஅஇ	1.5592	1.5668	துஅஇ
ஹம்பாந்தோட்டை	1.5329	1.4671	1.4197	1.2916	1.3727	1.0994	துஅஇ	1.1073	1.2637	துஅஇ	1.7554	1.7261	துஅஇ	1.7241	1.8743	துஅஇ	1.6936	1.7119	1.6491	1.5402	துஅஇ	1.4659	1.5673	துஅஇ
யாழ்ப்பாணம்	1.5609	1.4769	துஅஇ	1.1797	துஅஇ	1.0752	துஅஇ	துஅஇ	துஅஇ	0.9798	1.7566	1.7141	1.7487	துஅஇ	1.8753	துஅஇ	1.6821	1.6478	1.6511	துஅஇ	1.5333	1.4991	1.5749	துஅஇ
கிளிநொச்சி	துஅஇ	துஅஇ	துஅஇ	துஅஇ	துஅஇ	துஅஇ	0.4660	துஅஇ	துஅஇ	0.6692	துஅஇ	துஅஇ	1.4595	1.5865	2.1063	துஅஇ	1.4017	1.3988	1.2861	துஅஇ	துஅஇ	துஅஇ	துஅஇ	1.0011
மன்னார்	துஅஇ	துஅஇ	துஅஇ	1.3630	துஅஇ	துஅஇ	0.8680	துஅஇ	துஅஇ	0.9895	துஅஇ	துஅஇ	1.3228	1.5771	2.1055	துஅஇ	1.2325	1.2522	1.2679	துஅஇ	துஅஇ	துஅஇ	துஅஇ	0.9972
முல்லைத்தீவு	துஅஇ	துஅஇ	துஅஇ	துஅஇ	துஅஇ	துஅஇ	0.6551	துஅஇ	துஅஇ	0.9189	துஅஇ	துஅஇ	1.3035	துஅஇ	2.3647	1.0388	0.9923	0.9083	0.9442	துஅஇ	துஅஇ	துஅஇ	துஅஇ	0.8825
வவுனியா	துஅஇ	துஅஇ	துஅஇ	துஅஇ	துஅஇ	துஅஇ	0.6478	துஅஇ	துஅஇ	0.6293	1.8370	1.6259	1.4171	1.6539	1.9373	துஅஇ	1.2772	1.1938	1.2380	துஅஇ	துஅஇ	துஅஇ	துஅஇ	0.9550
திருகோணமலை	1.5290	துஅஇ	துஅஇ	1.2849	துஅஇ	1.1071	0.6905	துஅஇ	துஅஇ	0.7598	1.7718	1.6347	1.3100	1.6540	1.9673	1.2240	1.2244	1.3434	1.1946	துஅஇ	துஅஇ	துஅஇ	துஅஇ	0.7979
மட்டக்களப்பு	துஅஇ	1.4800	துஅஇ	துஅஇ	1.3773	1.0834	0.8630	துஅஇ	துஅஇ	0.8707	1.8676	1.7036	1.4161	1.5961	1.9212	1.4400	1.4151	1.3975	1.3912	துஅஇ	1.1815	துஅஇ	துஅஇ	1.1528
அம்பாறை	துஅஇ	1.4878	துஅஇ	1.1912	1.4539	1.0640	1.0125	1.1719	1.2541	0.9623	1.7678	1.6086	1.3946	1.6059	1.9781	1.3222	1.4110	1.4947	1.3077	துஅஇ	1.2027	துஅஇ	துஅஇ	1.0580
புத்தளம்	1.5629	1.5011	1.4210	1.1814	1.3883	1.1034	1.1528	1.0993	1.3007	1.0165	1.7849	1.6067	1.2915	1.5779	1.9009	1.3762	1.2606	1.6067	1.2588	1.5209	துஅஇ	துஅஇ	துஅஇ	0.8947
குருநாகல்	1.5332	1.4626	1.4190	1.3132	1.3730	1.2974	1.2830	1.1839	1.2594	1.1959	1.7552	1.6890	துஅஇ	1.6920	1.8704	துஅஇ	1.6674	1.6734	1.6314	1.5369	1.3136	1.4596	1.5677	1.3281
அநுராதபுரம்	1.6422	1.4694	1.4210	1.1679	1.3767	1.0571	0.9594	1.1424	துஅஇ	0.9442	1.7638	துஅஇ	1.2811	1.5841	1.8902	1.2657	1.3912	1.4014	1.2632	துஅஇ	1.1728	துஅஇ	1.6046	0.9550
பொலன்னறுவை	துஅஇ	துஅஇ	துஅஇ	1.2927	துஅஇ	1.0726	0.7348	1.1052	துஅஇ	0.6873	துஅஇ	1.7078	1.2975	1.6679	2.1520	0.9895	0.9459	1.5191	0.8896	துஅஇ	துஅஇ	துஅஇ	துஅஇ	0.6888
பதுளை	1.5284	1.5167	1.4200	1.1875	1.3689	1.0755	0.9893	1.1025	துஅஇ	0.9380	1.7781	துஅஇ	1.4965	1.5779	1.8812	1.4809	1.5554	1.5656	1.4623	துஅஇ	1.2228	துஅஇ	1.5800	1.2388
மொனறாகலை	துஅஇ	துஅஇ	1.4279	1.1952	1.3832	1.0726	0.8245	1.1041	துஅஇ	0.9537	1.7575	1.6543	1.3131	1.6230	1.8736	1.2160	1.5720	1.5296	1.3596	துஅஇ	துஅஇ	துஅஇ	துஅஇ	0.9550
கேகாலை	1.5362	1.4684	1.4182	1.2009	1.3759	1.2076	1.2000	1.1363	1.2617	துஅஇ	1.7666	1.6253	1.5464	1.5839	1.8816	1.5449	1.5551	1.7153	1.5407	1.5327	1.2708	1.4775	துஅஇ	1.3866
இரத்தினபுரி	1.5301	1.4617	1.4231	1.2079	1.3939	1.1597	1.1643	1.1121	1.3263	1.0436	1.7584	1.7703	1.4198	1.5836	1.8778	1.4162	1.5434	1.5626	1.5326	துஅஇ	1.1799	1.5087	1.5742	1.0045

* தெரிவு 100% தீவளாவிய திறமை அடிப்படையில் # சம்மந்தப்பட்ட பாடத்துடன் தொடர்பான செயன்முறை/உளச்சார்பு பரீட்சைகள் நடாத்தப்படும் கற்கை நெறிகள்

த.அ.இ.(N.Q.C) - தகைமை பெற்ற அபேட்சகர் இல்லாமை. இது பின்வரும் காரணங்களினாலும் ஏற்படலாம்.

1. குறிப்பிட்ட கற்கை நெறியிற்கான மாவட்ட ஒதுக்கீடு அவ் குறித்த மாவட்ட மாணவர்களினாலேயே ஏற்கனவே நிரப்பப்பட்டிருத்தல்.
2. ஓர் பல்கலைக்கழகத்தால் குறித்த கற்கை நெறிக்கு ஒதுக்கப்பட்ட இடங்கள் உயர் Z - புள்ளிகளை உடைய ஏனைய மாவட்ட மாணவர்களால் ஏற்கனவே நிரப்பப்பட்டிருத்தல்.
3. குறித்த கற்கை நெறிக்குப் போதுமான ஆகக் குறைந்த பல்கலைக்கழக அனுமதிக்கான தகைமைகளை பூர்த்தி செய்த அபேட்சகர்கள் அவ் மாவட்டத்தில் இல்லாமை.

குறிப்பு:
குறித்த சில கற்கை நெறிகள் மும் மொழிகளிலும் நடாத்தப்படுவதில்லை. இதன் காரணமாக சில மாணவர்கள் அனுமதிக்கு தகைமை பெறும் குறைந்த பட்ச Z - புள்ளியை பெற்றிருப்பினும் சில பல்கலைக்கழகங்களின் அவ்வாறான கற்கை நெறிகளுக்கு தெரிவாவதில்லை.

பல்கலைக்கழக அனுமதி - கல்வியாண்டு 2017/2018

[2017 ஆகஸ்ட் க.பொ.த. (உ/த.) பரீட்சையை அடிப்படையாகக் கொண்டது]

ஒவ்வொரு மாவட்டத்திலிருந்தும் பல்கலைக்கழகங்களின் பல்வேறு கற்கை நெறிகளுக்கு தெரிவாவதற்கு தேவையான ஆகக் குறைந்த 'Z' - புள்ளிகள்

கற்கை நெறிகள் / மாவட்டம்	பௌதிக விஞ்ஞானம் (கொழும்புப் பல்கலைக்கழகம்)	பௌதிக விஞ்ஞானம் (பேராதனைப் பல்கலைக்கழகம்)	பௌதிக விஞ்ஞானம் (ஸ்ரீ ஜயவர்த்தனபுரப் பல்கலைக்கழகம்)	பௌதிக விஞ்ஞானம் (களனிப் பல்கலைக்கழகம்)	பௌதிக விஞ்ஞானம் (யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்)	பௌதிக விஞ்ஞானம் (உறுகுணைப் பல்கலைக்கழகம்)	பௌதிக விஞ்ஞானம் (கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை)	பௌதிக விஞ்ஞானம் (இலங்கைத் தென் கிழக்குப் பல்கலைக்கழகம்)	அளவையியல் விஞ்ஞானம் (இலங்கை சபரகமுவப் பல்கலைக்கழகம்)	பிரயோக விஞ்ஞானங்கள் (பௌதிக விஞ்ஞானம்) (இலங்கை ரஜரட்ட பல்கலைக்கழகம்)	பிரயோக விஞ்ஞானங்கள் (பௌதிக விஞ்ஞானம்) (இலங்கை சபரகமுவப் பல்கலைக்கழகம்)	பிரயோக விஞ்ஞானங்கள் (பௌதிக விஞ்ஞானம்) (இலங்கை வயம்பப் பல்கலைக்கழகம்)	பிரயோக விஞ்ஞானங்கள் (பௌதிக விஞ்ஞானம்) (யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் வவுனியா வளாகம்)	பிரயோக விஞ்ஞானங்கள் (பௌதிக விஞ்ஞானம்) (கிழக்குப் பல்கலைக்கழகம். இலங்கை - திருகோணமலை)	முகாமைத்துவம் (கொழும்புப் பல்கலைக்கழகம்)	முகாமைத்துவம் (பேராதனைப் பல்கலைக்கழகம்)	முகாமைத்துவம் (ஸ்ரீ ஜயவர்த்தனபுரப் பல்கலைக்கழகம்)	முகாமைத்துவம் (களனிப் பல்கலைக்கழகம்)	முகாமைத்துவம் (யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்)	முகாமைத்துவம் (உறுகுணைப் பல்கலைக்கழகம்)	முகாமைத்துவம் (கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை)	முகாமைத்துவம் (இலங்கைத் தென் கிழக்குப் பல்கலைக்கழகம்)	முகாமைத்துவம் (இலங்கை ரஜரட்ட பல்கலைக்கழகம்)	முகாமைத்துவம் (இலங்கை சபரகமுவப் பல்கலைக்கழகம்)	முகாமைத்துவம் (இலங்கை வயம்பப் பல்கலைக்கழகம்)
கொழும்பு	1.4159	1.3358	1.2593	1.1808	1.1290	1.1260	துஅஇ	துஅஇ	1.3454	0.9864	1.0920	0.9866	1.0546	1.0199	1.7156	1.5675	1.7838	1.6263	1.4430	1.4730	துஅஇ	துஅஇ	1.4377	1.4192	1.4282
கம்பஹா	1.4159	1.3352	1.2618	1.1849	0.8671	1.1155	0.8558	0.8814	1.4154	0.9760	1.1101	0.9677	0.8466	0.8517	1.7151	1.5705	1.7838	1.6274	துஅஇ	1.4782	துஅஇ	துஅஇ	1.4016	1.4191	1.4252
களுத்தறை	1.4179	1.3427	1.2604	1.1798	0.9692	1.1168	0.9739	0.9436	1.4543	0.9723	1.0974	0.9935	துஅஇ	துஅஇ	1.7161	1.5829	1.7862	1.6263	துஅஇ	1.4730	துஅஇ	துஅஇ	1.4154	1.4191	1.4263
மாத்தளை	1.4607	1.4142	1.2953	1.2156	0.8122	1.1302	0.8495	1.0488	1.5001	0.9732	துஅஇ	துஅஇ	0.7212	0.8864	1.7254	1.7074	1.7836	1.6334	1.2606	1.5429	1.2782	1.2672	1.3543	1.4193	1.4249
கண்டி	1.4160	1.3353	1.2610	1.1844	0.9890	1.1159	1.0026	1.0310	1.3829	0.9700	1.0940	0.9815	துஅஇ	துஅஇ	1.7177	1.5655	1.7906	1.6324	1.3751	1.4737	துஅஇ	1.3747	1.3591	1.4197	1.4271
நுவரெலியா	துஅஇ	துஅஇ	துஅஇ	1.1802	0.7374	துஅஇ	0.5561	0.5520	1.1361	துஅஇ	துஅஇ	துஅஇ	துஅஇ	0.3734	1.7331	1.5653	1.7825	1.6267	1.2790	1.4838	1.2790	1.2991	1.3533	1.4238	1.4250
காலி	1.4176	1.3387	1.2657	1.1813	1.1328	1.1245	1.1102	1.0878	1.4981	0.9884	1.0940	0.9901	துஅஇ	துஅஇ	1.7155	1.6185	1.7929	1.6301	துஅஇ	1.4801	1.4182	1.3649	1.3483	1.4191	1.4299
மாத்தறை	1.4178	1.3381	1.2631	1.1798	துஅஇ	1.1364	துஅஇ	துஅஇ	1.4769	1.0092	1.0940	1.0050	துஅஇ	துஅஇ	1.7194	1.5658	1.7825	1.6263	துஅஇ	1.4900	துஅஇ	துஅஇ	துஅஇ	1.5549	துஅஇ
ஹம்பாந்தோட்டை	1.4175	1.3443	1.2596	1.1806	1.0593	1.1164	0.9754	0.9733	1.4834	1.0195	1.1115	1.0072	துஅஇ	துஅஇ	1.7220	1.5726	1.7868	1.6308	1.3238	1.4729	1.3049	1.3036	1.3519	1.4200	1.4645
யாழ்ப்பாணம்	1.4226	1.3473	1.2610	1.2543	1.0337	துஅஇ	1.0357	துஅஇ	1.4801	0.9881	1.1982	0.9861	1.0198	துஅஇ	1.7368	1.5939	1.7868	1.6605	1.2361	துஅஇ	துஅஇ	துஅஇ	துஅஇ	துஅஇ	துஅஇ
கிளிநொச்சி	துஅஇ	துஅஇ	துஅஇ	துஅஇ	0.8367	துஅஇ	0.6681	துஅஇ	1.3620	துஅஇ	துஅஇ	துஅஇ	துஅஇ	0.4810	1.7561	1.5914	1.8056	துஅஇ	1.1185	துஅஇ	துஅஇ	துஅஇ	துஅஇ	துஅஇ	துஅஇ
மன்னார்	துஅஇ	துஅஇ	துஅஇ	துஅஇ	0.8036	துஅஇ	0.5686	0.1849	0.9789	துஅஇ	துஅஇ	துஅஇ	துஅஇ	0.1026	1.7562	1.6632	1.8805	துஅஇ	1.2145	துஅஇ	1.2455	துஅஇ	துஅஇ	துஅஇ	துஅஇ
முல்லைத்தீவு	துஅஇ	துஅஇ	துஅஇ	துஅஇ	0.7710	துஅஇ	0.5182	0.4599	0.8866	துஅஇ	துஅஇ	துஅஇ	0.6918	0.4488	1.7432	1.5728	1.9230	துஅஇ	1.3689	துஅஇ	துஅஇ	துஅஇ	1.3678	துஅஇ	துஅஇ
வவுனியா	துஅஇ	துஅஇ	துஅஇ	துஅஇ	0.7424	துஅஇ	0.5293	0.5471	1.1404	துஅஇ	துஅஇ	துஅஇ	துஅஇ	0.4779	1.7566	1.5866	1.7836	துஅஇ	1.2210	1.5818	துஅஇ	துஅஇ	1.3699	துஅஇ	துஅஇ
திருகோணமலை	துஅஇ	துஅஇ	துஅஇ	துஅஇ	0.7524	1.1154	0.5421	0.3847	1.1701	0.9782	துஅஇ	1.0106	0.6758	0.4758	1.7238	1.6037	1.8262	1.6524	1.1666	துஅஇ	1.1746	1.2425	1.3622	துஅஇ	1.4285
மட்டக்களப்பு	துஅஇ	துஅஇ	துஅஇ	1.2539	0.7402	துஅஇ	0.5428	0.6026	1.3809	0.9780	துஅஇ	துஅஇ	0.6739	0.5717	1.7235	1.5846	1.9049	1.6297	1.1311	துஅஇ	1.1196	1.2422	1.4873	துஅஇ	துஅஇ
அம்பாறை	துஅஇ	துஅஇ	1.2972	1.2394	0.7281	1.1239	0.7121	0.7683	1.2864	1.0180	1.1223	1.0261	0.8481	0.9034	1.7312	1.5754	1.7989	1.6529	1.2219	1.4896	1.2258	1.2413	1.3558	1.4210	1.4316
புத்தளம்	துஅஇ	துஅஇ	1.2955	1.1822	0.7146	1.1524	0.6808	0.6768	1.1993	துஅஇ	துஅஇ	0.9738	0.6485	0.6016	1.7148	1.5683	1.7838	1.6348	1.3018	துஅஇ	1.3292	1.3093	1.3527	துஅஇ	1.4286
குருநாகல்	1.4188	1.3361	1.2691	1.1787	1.0124	1.1184	1.0183	1.0435	1.4916	0.9795	1.1213	0.9780	துஅஇ	துஅஇ	1.7214	1.5683	1.7833	1.6270	1.3757	1.4777	1.4119	துஅஇ	1.3743	1.4189	1.4267
அநுராதபுரம்	துஅஇ	துஅஇ	துஅஇ	துஅஇ	0.7132	1.1364	0.6650	0.6957	1.1766	துஅஇ	துஅஇ	துஅஇ	0.6553	0.5671	1.7436	1.5726	1.8007	1.6288	1.2521	1.5758	1.2851	1.2570	1.3483	1.4305	1.4397
பொலன்னறுவை	துஅஇ	துஅஇ	துஅஇ	துஅஇ	0.7512	துஅஇ	0.5070	0.3354	0.8822	துஅஇ	துஅஇ	துஅஇ	0.6465	0.2624	1.7191	1.5952	1.7900	1.6293	1.2027	துஅஇ	1.2152	1.2583	1.3535	1.4616	1.4532
பதுளை	1.4238	1.3354	1.2661	1.1838	0.8640	1.1155	0.8669	0.8517	1.4285	0.9693	1.0998	1.0217	0.7649	0.7513	1.7380	1.5802	1.7869	1.6263	1.3341	1.4728	துஅஇ	1.3347	1.3530	1.4205	துஅஇ
மொனறாகலை	துஅஇ	துஅஇ	துஅஇ	துஅஇ	0.7287	1.1599	0.6487	0.7442	1.1900	0.9921	துஅஇ	1.0288	துஅஇ	0.6306	1.7188	1.6130	1.7833	1.6360	துஅஇ	1.4741	துஅஇ	1.3599	1.3504	1.4205	1.4402
கேகாலை	1.4486	1.3453	1.2603	1.1927	0.8954	1.1160	0.9040	1.0221	1.3865	1.0052	துஅஇ	0.9873	0.8362	0.8588	1.7150	1.5819	1.7933	1.6286	துஅஇ	1.4968	துஅஇ	1.3841	1.3571	1.4191	1.4261
இரத்தினபுரி	1.4344	1.3438	1.2593	1.1870	0.7935	1.1253	0.7547	0.7507	1.4042	0.9931	1.1054	0.9628	0.6956	0.7044	1.7222	1.5847	1.7874	1.6290	1.3594	1.4779	1.2985	1.3031	1.3483	1.4190	1.4321

* தெரிவு 100% தீவளாவிய திறமை அடிப்படையில் # சம்மந்தப்பட்ட பாடத்துடன் தொடர்பான செயன்முறை/உளச்சார்பு பரீட்சைகள் நடாத்தப்படும் கற்கை நெறிகள்

த.அ.இ.(N.Q.C) - தகைமை பெற்ற அபேட்சகர் இல்லாமை. இது பின்வரும் காரணங்களினாலும் ஏற்படலாம்.

1. குறிப்பிட்ட கற்கை நெறியிற்கான மாவட்ட ஒதுக்கீடு அவ் குறித்த மாவட்ட மாணவர்களினாலேயே ஏற்கனவே நிரப்பப்பட்டிருத்தல்.
